A PEARL PUBLICATION

Re. 1.00

PT-16

அழிவற்ற காதல்

இர்விங் ஸ்டோன்



T02687
R001G01

முன்னுரை

அமெரிக்க ஐனநாயகம் வரிசையில் திலகம் போல விளங்கும் ஆப்ரஹாம் லிங்கன், டாடு வமிசத்தைச் சேர்ந்த மேரியை மணந்து இல்லறம் நடத்திய கதையை உணர்ச்சி வேகத்துடனும், ஆழ்ந்த அநுதாபத்துடனும் விவரிக்கிறது இந்நூல். சரித்திரப் பிரசித்தி பெற்றவர்களின் உண்மை வரலாறு என்ற காரணத்தினால் கற்பனைக்கு இடமில்லை. கற்பனைக் காதலுக்கும் உண்மைக் காதலுக்கும் வித்தியாசம் உண்டு. உண்மைக்குப் புறம்பான சம்பவங்களைப் புனைந்தால் குற்றத்திற்கு இடமுண்டாகும்; நூலின் சிறப்பு குன்றும்; குறை பாடுகளை எடுத்துக் கூறவேண்டி வரும்.

ஆப்ரஹாம் லிங்கனைப் பற்றிச் சுமார் ஐயாயிரம் புத்தகங்கள் அமெரிக்காவில் வெளிவந்திருக்கின்றன. சஞ்சிகைகள் பல; கட்டுரைகள் பல; கடிதங்கள் பல; வரலாறுகள் பல; வெளிவராமல் தனிப்பட்டவர்கள் வசம் இருப்பவை இன்னும் எவ்வளவோ. இவற்றை எல்லாம் துருவிப் பார்த்து ஆப்ரஹாம் லிங்கனும் மேரி லிங்கனும் நடத்திய மண வாழ்க்கைக்கு மட்டும் தேவையான நிகழ்ச்சிகளையும் வரலாறுகளையும் பொறுக்கியெடுத்து ஒரு காதற் கதையைச் சித்தரிப்பது எளிய காரியம் அன்று. இந்த மகத்தான சாதனையை இப்புத்தகத்தின் மூல ஆசிரியர் இர்விங் ஸ்டோன் சாதித்திருக்கிறார்.

''பட்டை தீட்டாத வைரம்'' என்று ஆப்ரஹாம் லிங்கனைக் கண்ட உடனே தீர்மானித்ததோடு, அவன் அமெரிக்க ஜனநாயகப் பதவிக்கு ஏற்றவனே என்று கருதிய ஒரு பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பெண்ணை அசாதாரணமான பெண் என்றே சொல்லவேண்டும். மேரி டாட் அசாதாரணமான பெண்தான். உயர்ந்த தன்மானத்தாலும், கௌரவ உணர்ச்சியாலும் அவளுடைய மண வாழ்க்கையில் கசப்பான கட்டங்கள் தோன்றத்தான் செய்தன. எனினும் அழிவற்ற காதல் ஓர் அற்புத சிருஷ்டி.

இதைத் தமிழாக்கியவர் தமிழ் எழுத்தாளர் உலகத்தில் முன் வரிசையிலுள்ள ''மாயாவி'' என்பவர். எளிய நடையில் கதையின் ஓட்டம் தடைபடாது அமைந்திருக்கிறது மொழிபெயர்ப்பு. தமிழன்பர்கள் படித்து மகிழ்வார்களாக.

—பதிப்பாசிரியர்

அட்டவணை

அத்தியாயம்		பக்கம்
	முன்னுரை	3
1.	விளையும் பயிர் முளையிலே ...	5
2.	காதல் அரும்பிற்று ...	66
3.	உள்ளமும் உடலும் ...	150
4.	ஆப்ரஹாமின் முறை ...	239

அத்தியாயம்-1

"வினையும் பயிர் முனையிலே"

1

மேரி, அலங்கரித்துக் கொள்ளும் மேஜைமீது சாய்ந்து கொண்டு, சுவரிலிருந்த நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். 'எத்தனை நேரந்தான் ஒருத்தி தன் முகத்தைத் தானே பார்த்துக்கொண்டும், அதே சமயம் அப்படிப் பார்த்துக்கொண்டிருப்பதை உணராமலும் இருக்க முடியும்' என்று அவள் எண்ணினாள். இருந்தாலும், தன்னை அங்கம் அங்கமாகப் பரிசீலித்துப் பார்த்துக்கொள்ளும் ஆவல் அவளை விடவில்லை. அவளுடைய மூக்கு மாத்திரந்தான் முன் போல் சிறிதாகவும், நேராகவும் இருந்தது. இதர அங்கங்கள் அனைத்தும் அவளுடைய மனவளர்ச்சிக்கு ஏற்றவாறு மாறுதலடைந்து கொண்டிருந்தன. தனது மேல் உதடு மெல்லியதாகவும், கிட்டத்தட்ட ஒழுங்காகவும் இருக்க, கீழ் உதடு தடிப்பாகவும், உணர்ச்சி மிக்கதாகவும் மாறிவிட்டதாக அவளுக்குத் தோன்றிற்று. அகன்ற புருவத்திற்கு மேலே, சீவி விட்டுக்கொண்டிருந்த கேசத்தின் முன்பாகம், பொன் நிறத்துடன் அழகாகத் தோற்றமளித்தது. ஆனால், அலை அலையாகச் சுருண்டு, தோள்களில் புரண்டுகொண்டிருந்த அளகத்தின் இதர பாகம் செம்பட்டை நிறமாகக் காட்சி தந்தது. அவளுடைய கண்கள் பெரியவை; அகன்றவை; கருநீல நிறம். அவை தெளிவாகவும், எதையும் ஊடுருவி நோக்கக்கூடியவை போலவும் தோற்றமளித்தன. ஆனால், எப்பொழுதுமே அவை இத்தனைத் தெளிவுடன் இருந்ததில்லை. அன்றிரவு அவள் மகிழ்ச்சியோடு இருந்ததுதான் இதற்குக் காரணம். அந்தச் கண்களுக்குப் பின்னால், சிலசமயம் பதுங்கியிருக்கும் விசனத்தின் ரேகை அன்று துளிக்கூடத் தென்படவில்லை.

தன்னை வேறு யாரோ உன்னிப்பாகக் கவனிப்பது போ

உணர்வு தட்டவே, கண்ணுடியின் வலது கோடியில் பார்வையைச் செலுத்தினுள் மேரி. அருகில், தனது பதினேந்து வயசுத் தங்கை **ஆன்** நின்றுகொண்டு, தன்னைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்ததைக் கண்டாள்.

ஆன், தனக்கே உரித்தான பெருங்குரலில் சொன்னுள்: ''வயசுப் பையன்களை லட்சியம் செய்யாத ஒரு பெண்ணுக்கு, அம்மா சொல்வதுபோல், இத்தனை அலங்காரங்கள் எல்லாம் எதற்கு?''

மேரி குனிந்து, தான் அணிந்துகொண்டிருந்த நீல நிறப் பட்டுக் கவுனைப் பார்த்துக் கொண்டாள். அதை அவள், தன் விருப்பத்துக்கேற்றபடி தைக்கச் செய்திருந்தாள். அதன் தோள் பக்கம் தணிவாகவும், குட்டையான கைப்பாகம் ஊசி முனைபோல் கூர்மையாகவும் தைக்கப்பட்டிருந்தன. மேரியின் முகம் அழகானது என்று யாரும் கூறமாட்டார்கள். ஆனுல், அவளுடைய தோள்களும், கைகளும் மிக நேர்த்தியானவை. அம்மாதிரி, துளிக்கூட எலும்பு தெரியாத, மழுமழுவென்று சதைப்பற்றுடன் விளங்கும் தோள்களும், கைகளும், அந்த லெக்ஸிங்டன் நகரத்தில் வேறு எந்தப் பெண்ணுக்கும் கிடையாது என்று அவ்வூரில் எல்லோரும் ஒப்புக் கொள்ளுவார்கள்.

மேரி மீண்டும் கண்ணுடியை நோக்கினுள். தங்கை ஆன், உள்ளங்கைகளைக் குவித்து வைத்துக்கொண்டு, தன்னைப்போல் கவர்ச்சிகரமாகத் தோற்றமளிக்கப் பாடுபட்டுக்கொண்டிருந்ததை அவள் கண்டாள்.

''அவசரப்படாதே ஆன். பருவம், விரைவில் உன்னையும் என்னைப்போல் மலரச் செய்துவிடும்'' என்று அவள் புன்னகையுடன் கூறினுள்.

''அது சரி; நீ இன்றைய விருந்தையாவது பயன்படுத்திக் கொள் மேரி. 'இந்தத் தடவை நீ ஸாண்டியைக் கவர்ந்து உன்னை மணக்க அவன் கோரும்படிச் செய்யவில்லையென்ருல், அப்புறம் எப்பொழுதுமே முடியாது, என்று அம்மாகூடச் சொல்லுகிருள்'' என்ருள் ஆன்.

ரோஷங்கொண்ட மேரி, சுழன்று திரும்பினுள்.

''அம்மா ஒன்றும் அப்படிச் சொல்லியிருக்கமாட்டாள்'' என்ருள் அவள்.

மேரியின் குரல் எப்பொழுதும் அடக்கமாகவே இருக்கும்; ஆனுல் இதைச் சொன்னபோது அது உயர்ந்து ஒலித்தது. அவளுடைய கன்னங்கள் சிவந்தன. ''இன்றைய [illegible]ந்து எனக்குக் கல்யாணத்தைக் கொண்டுவருமென நினைப்[illegible]க அவள் சொல்லியிருக்கலாம்'' என்று அமைதியுடன் [illegible]ர்ந்து கூறினுள் அவள்.

''இரண்டும் ஒன்றுதானே? இல்லையா?'' என்றாள் ஆன்.

''உன்வரையில் ஒன்றுதான்'' என்று கூறிவிட்டு, மேரி, அறையின் பின் ஜன்னலுக்கு நடந்து சென்றாள்.

ஜன்னலுக்கு வெளியே, வீட்டின் பின்புறத் தோட்டமும், கோச்சு வண்டி நிறுத்தும் இடமும், தூரத்தில் குன்றைத் தொட்டுக்கொண்டு ஓடிய சிற்றோடைவரைப் பரந்து கிடந்த புல்தரையும் தோற்றமளித்தன. இன்னும் மேற்கே, மாலைச் சூரியனின் பொன்னிறக் கதிர்கள் ஒளி வீசிக்கொண்டிருந்தன. எல்க்ஹார்ன் கிரீக்கின் அருகே நகரத்துக்குப் பிரிந்துசென்ற சாலையில், வயல்கள் மெல்லிய கருநீல நிறம் காட்டிக் கொண்டிருந்தன. இதனால்தான் அந்தப் பிரதேசத்துக்கே 'புளூகிராஸ்' என்ற பெயர் ஏற்பட்டிருந்தது.

மேரியின் சிந்தனை ஒரு விநாடி, தன் மாற்றாந்தாய் பெட்ஸி ஹம்ப்ரிஸிடம் தாவிற்று. அவளை 'அம்மா' என்று அழைக்க இன்னுங்கூடத் தான் தயங்குவதை அவள் நினைத்துக்கொண்டாள். பிறகு அவள் தன் சகோதரிகளைப் பற்றி நினைத்தாள். ஒரே தாயின் வயிற்றில் பிறந்தவர்களாயினும், தங்கள் நால்வரிடையில் எவ்வளவு குண வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை அவள் ஆராய்ந்தாள். தங்களுள் மூத்தவளான எலிஸபெத்தை அவள் நினைத்துக் கொண்டாள். எலிஸபெத்துக்குக் கல்யாணமாகி விட்டது. அவள் இப்பொழுது இல்லினாய்ஸ் மாகாணத்தில், ஸ்பிரிங்ஃபீல்டு என்ற ஊரில் வசித்துக்கொண்டிருக்கிறாள். எலிஸபெத், அம்மாவின் பிரதிபிம்பந்தான். அம்மாவைப் போலவே அன்பு நிறைந்த உள்ளம்; எப்பொழுதும் சிரித்த முகம்; மாறாத இனிய சுபாவம். அம்மா இறந்தபோது எலிஸபெத்துக்குப் பனிரெண்டு வயதுகூட ஆகவில்லை. இருந்தாலும், தம்பி தங்கைகளுக்கு அவள் தாயாக இருந்து, அன்பு சொரிந்ததை மேரி நினைத்துக்கொண்டாள். எலிஸபெத்துக்கு அடுத்தவள் ஃபிரான்ஸெஸ். அவளும் இப்பொழுது எலிஸபெத்துடன் ஸ்பிரிங்ஃபீல்டில்தான் வசித்துக் கொண்டிருக்கிறாள். ஆனால், ஃபிரான்ஸெஸ் எவரிடமும் கலகலப்பாகப் பேசமாட்டாள்; பழகவும் மாட்டாள். அடுத்தது அவள் தான். அவள் ஒரு வாய் அரட்டை. மனசில் ஒன்றுமே நிற்காது. கடைசியாக, இதோ இருக்கும் ஆன். இவளுக்கு, மற்றவர்களுடைய பேச்சுக்களுக்கு விகற்பமான அர்த்தம் கண்டு பிடிப்பதும், ஒருவருக்கொருவர் மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதுந்தான் வேலை.

மேரி தனது சகோதரிகளைப் பற்றி நினைத்தவாறு, ஜன்னலருகில் நின்றுகொண்டிருந்தபோது வெளியே யாரோ வரும் காலடி ஓசை கேட்டுத் திரும்பினாள். மேமி ஸாலி கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தாள். மேமி ஸாலிக்

குப் பருமனை, அழகோ, அமைப்போ இல்லாத உடற்கட்டு. கேசத்தை நெற்றியிலிருந்து நேரே பின்னல் சீவிக் கட்டிக் கொண்டிருந்தாள் அவள். கீழ் வரிசை நிறையப் பற்கள். ஆனால், மேல் வரிசையில் ஒரு பல்கூடக் கிடையாது. அவள், மேரியையும், அவள் சகோதரிகளையும் மட்டுமல்ல, அவர்கள் தாயையும் தூக்கி வளர்த்தவள். நீக்ரோ அடிமையான அவளை, மேரியின் பாட்டி பார்க்கர், மேரியின் அம்மா எலிஸா பார்க்கர் டாடுக்குத் திருமணப் பரிசாகக் கொடுத்திருந்தாள். அறைக்குள்ளே வந்த மேமி ஸாலி, மேரியின் புதிய கவுனைப் பார்த்துவிட்டு, அதை மெச்சுவதுபோல் தலையை ஆட்டினாள். அந்தக் கவுன், இடுப்புப் பக்கம் ஒடுங்கியும், கீழும் மேலும் விரிந்தும் மிகக் கவர்ச்சிகரமாகத் தைக்கப்பட்டிருந்ததையும் அவள் கவனித்துப் பார்த்தாள். ''நேர்த்தியாக இருக்கிறது; இருந்தாலும் பகட்டாக இல்லை'' என்றாள் மேமி ஸாலி.

''என் புதிய கவுன் உனக்குப் பிடித்திருக்கிறது என்று கேட்க சந்தோஷம் மேமி ஸாலி! அப்பா எனக்காக நியூ ஆர்லியன்ஸிலிருந்து வாங்கிவந்த முத்து மாலையையும் அணிந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்'' என்றாள் மேரி.

''குழந்தாய், உன் அன்புக்குகந்தவர் கீழே வந்திருக்கிறார், அதைச் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன். அவர் மாத்திரம் வயது முதிர்ந்தவராக இல்லாதிருந்தால், இன்றைய அலங்காரத்துக்கு உன் மீது காதலே கொண்டு விடுவார்'' என்று வேடிக்கையாகக் கூறினாள் மேமி ஸாலி.

மேரி இதைக் கேட்டு நகைத்தாள். எட்டு வருஷங்களுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம் அப்பொழுது அவள் மனத்திரையில் நிழலாடிற்று. அன்று அவளுக்குப் பனிரெண்டு வயது. அவளுடைய அப்பா அவளுக்கு ஒரு வெள்ளை மட்டக்குதிரை வாங்கிக் கொடுத்திருந்தார். ஒருநாள் மேரி அதில் ஏறிக்கொண்டு தாங்கள் வசித்து வந்த ''மெயின்'' தெருவிலிருந்து ஒன்றரை மைல் தூரத்திலிருந்த ஆஷ்லாண்டில் ஹென்ரி கிளே என்பவரைப் பார்க்கப்போனாள்.

ஹென்ரி கிளே சில முக்கியமான அரசியல் பிரமுகர்களுடன் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். விருந்துக்குப் பிறகு அவர், காங்கிரஸில் (அமெரிக்க சட்டசபையில்) கலந்துகொள்ள வாஷிங்டன் போகவேண்டியிருந்தது. இருந்தாலும், மேரி வந்திருப்பதை அறிந்ததும் அவர் வாசலுக்கு ஓடிவந்தார்.

''மிஸ்டர் கிளே! என் புதிய குதிரையைப் பார்த்தீர்களா? அப்பா சென்ற வாரம் வாங்கித்தந்தார்'' என்று மேரி அவரிடம் கூறினாள்.

''சவாரி செய்யும் ஆளைப்போல், குதிரையும் ஜோராகத்

தான் இருக்கிறது'' என்று கூறிக்கொண்டே, கிளே அவளைக் குதிரையிலிருந்து கீழே இறக்கிவிட்டார். பிறகு, ''நீ சரியான நேரத்துக்குத்தான் வந்திருக்கிறாய் மேரி; வா, சாப்பிடலாம்'' என்று அவளை உள்ளே கூட்டிச்சென்றார்.

கிளேக்கும், ஜான் ஜே. கிரிட்டெண்டன் என்பவருக்கும் இடையே, மேரி சாப்பிட அமர்ந்தாள். கிரிட்டெண்டன், கெண்டக்கி மாகாணத்துப் பிரதிநிதித்துவ சபையின் சபாநாயகர். கம்பீரமான தோற்றம் உடையவர். கருஞ்சாம்பல் நிறக்கண்கள்; வளைந்த மூக்கு; நேர்த்தியான தலை. சாப்பிட்டுக் கொண்டே அவர்களுடைய சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்தாள் மேரி. ஜனாதிபதி ஆண்ட்ரூ ஜாக்ஸனின் அதிகார ஆக்ரமிப்பு; ஸுப்ரீம் கோர்ட்டையே அவர் சட்டை செய்யாமல் நடந்து கொள்ளுவது, எடுத்ததற்கெல்லாம் முட்டுக்கட்டை போட்டு வருவதால், சட்டசபை பலம் குன்றிக் கொண்டிருப்பது போன்ற பல அரசியல் விஷயங்களைப் பற்றி அவர்கள் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தார்கள். அன்று விவாதிக்கப்பட்ட விஷயங்களைப் பற்றி மேரி நன்கு அறிந்திருந்தாள். கிளே போன்ற அரசியல் நண்பர்களைத் தன் தந்தை விருந்துக்கு அழைத்து, இம்மாதிரி விவாதங்களில் ஈடுபட்டிருக்கும்போது அவள் உடனிருந்து கவனித்திருந்தாள்.

நடந்து கொண்டிருந்த விவாதம் ஓரிடத்தில் ஓய்ந்து நின்றபோது மேரி சொன்னாள்: ''மிஸ்டர் கிளே! அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி நீங்கள்தானென்று அப்பா சொல்லுகிறாரே! அப்படியானால் வாஷிங்டன் நகரின் 'வொய்ட் ஹவு'ஸ்ஸில் வசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டுமென்று சொல்லுங்கள்!''

கிளே சிரித்தவாறு, ''நல்லது! நான் எப்பொழுதாவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், மேரி டாடுதான் என் முதல் விருந்தாளியாக இருப்பாள்'' என்றார்.

அவருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டவள் போல் தலையை அசைத்தாள் மேரி.

பிறகு அவள் சொன்னாள்; ''ஜனாதிபதித் தேர்தலுக்கு நிற்கும்படி அப்பாவிடம் எவ்வளவோ மன்றாடினேன், மிஸ்டர் கிளே! ஆனால் நீங்கள்தான் அப்பதவிக்கு வரவேண்டுமென்று அவர் கூறி விட்டார். அப்பா ஒரு விசித்திரப் பிறவி. அவருக்கு ஜனாதிபதியாகும் ஆவலே இல்லையென்று தான் எனக்குத் தோன்றுகிறது.''

சாப்பிட்டுக் கொண்டிருந்த விருந்தினர்கள் அனைவரும் இதைக் கேட்டு 'கொல்'லென்று நகைத்தனர். ஆனால் கிளே மாத்திரம் சிரிக்கவில்லை. அவர் முகத்தைப் பார்த்துக்

கொண்டே அவள் தொடர்ந்து சென்னாள்: ''நீங்கள் மாத்திரம் அதுவரை கல்யாணம் செய்து கொள்ளாதிருந்தால் நான் உங்களுக்காகக் காத்துக்கொண்டிருப்பேன், மிஸ்டர் கிளே!''

இவற்றை யெல்லாம் நிஜத்துப் பார்த்தவாறு, சிறு முத்துக்களாலான மாலையை அணிந்துகொண்டிருந்த மேரி, பிறகு மெத்தென்று கம்பளம் விரிக்கப்பட்டிருந்த மாடிப் படிகள் வழியே கீழே இறங்கிச் சென்றாள். பின்னர் சுக்காங் கற்கள் பாவியிருந்த நடைபாதை வழியே மாளிகைக்கு வெளியேயிருந்த தோட்டத்துக்கு நடந்து, ஓர் அத்திமரத்தடியில் வந்து நின்றுகொண்டாள். தோட்டத்திலிருந்த மண்டபம் ஒன்றில், மேரியின் தந்தையும் இன்னும் சிலரும் கூடிப் பேசிக் கொண்டிருந்தனர். ஹென்ரி கிளேதான் அக் கூட்டத்துக்கு நடுநாயகமாக விளங்கினார். அவரோடு, ஸெனட் சபையில் கெண்டக்கி உறுப்பினரான மிஸ்டர் கிரிட்டெண்டனும், லெக்ஸிங்டனிலிருந்து காங்கிரஸுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த இளவயதுடைய ரிச்சர்டு மெனிபீயும் இருந்தனர். மேரியின் தந்தை ராபர்ட் டாடுக்கு நாற்பத்தெட்டு வயதாகிறது. கவர்ச்சிகரமான தோற்றமுடையவர்தான். ஆனால் அவருக்குக் கழுத்தே கிடையாதோ என்று சந்தேகிக்கும்படி, தலையானது தோளோடு ஒட்டிக்கொண்டிருக்கும். ராபர்ட் டாடு தமது நீண்ட கரிய சிகையைக் காதுகளை மறைக்கும்படி சீவி விட்டுக்கொண்டிருந்தார். அழகான நீலநிறக் கோட்டும், வெள்ளை லினன் நிஜாரும், சட்டைக்கு மேலே காலரும் அணிந்துகொண்டிருந்தார். எப்பொழுதாவது சில சமயம், மின்னல் போல் கோபம் வந்து மறையும் என்பதைத் தவிர மற்றப்படி அவர் நிதானமானவர் தான். 'புளூகிராஸ் பிரதேசத்திலேயே, நேர்த்தியாக உடை உடுத்துபவர்' என்று பெயர் பெற்றவர் அவர். அவருக்குத் துணிமணிகளிலும், நகைகளிலும் விசேஷ விருப்பம். அப்பாவைப் போன்ற குணமும், சுவைகளும் கொண்டவள்தான் மேரி. இருந்தாலும் அவர்களிடையே, இந்த ஒற்றுமைகளை மிஞ்சிய ஒட்டுறவு இருந்தது.

அத்தி மரத்தடியில் மகள் நிற்பதைப் பார்த்ததும், அவர் அவளை அழைத்தார்.

''வா மேரி; வந்து நண்பர்களுக்கு வணக்கம் கூறு.''

மேரி அவர்கள் அமர்ந்திருந்த மண்டபத்துக்கு வேகமாக நடந்து சென்றாள். கிளே அவளை அன்போடு அணைத்துக்கொண்டு இரு கன்னங்களிலும் முத்தமிட்டார்.

''மிஸ் மேரி, உன்னைச் சந்தித்தது மகிழ்ச்சியளிக்கிறது; நான் வாஷிங்டனிலிருந்து இங்கு வரும் ஒவ்வொரு தடவையும் உன்னைப் பார்க்கும்போதெல்லாம் முன்னிலும்

மனேகரமாக நீ காட்சியளிக்கிறாய். நல்லது, நீ இன்னும் எனக்காகக் காத்துக்கொண்டுதான் இருக்கிறாயா?'' என்று அவர் தமாஷாகக் கேட்டார்.

''ஆமாம்; ... ..காத்துக்கொண்டிருக்கிறேன்.. ....நீங்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் நாளுக்காக நான் இன்னும் காத்துக்கொண்டுதான் இருக்கிறேன்'' என்று அவள் குறும்பாகப் பதில் கூறினாள்.

அங்குக் கூடியிருந்தவர்களோடு அவளும் உட்கார்ந்து கொண்டாள். அவர்கள் எல்லோரும் அவள் தந்தைக்கும் அவளுக்கும் நெருங்கிய நண்பர்கள். லெக்ஸிங்டனில் அவர்களுடைய வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கமாக விளங்கியவர்கள். கிளே பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் மேரி. அவருடைய குரலுக்கு மலையையும் துளைத்துச்செல்லும் சக்தி இருந்தது. இருந்தாலும் அவளுக்கு அது இனிமையாகவே ஒலித்தது; உணர்ச்சியூட்டிற்று. அவருடைய செம்பட்டை மயிர் தலையின் இருபுறமும் கலைந்து விழுவதையும், அந்த நீண்ட, ஒழுங்கற்ற முகத்தையும், மிகப் பெரிய வாயையும், குழிந்த தாடையையும், கூர்மையான சாம்பல் நிறக் கண்களையும், நெட்டையும் ஒல்லியுமான உடலையும் உற்று நோக்கிய அவள், தோற்றத்தில் அவர், அவருடைய அரசியல் எதிரியான ஆண்ட்ரூ ஜாக்ஸனைப்போலவே இருப்பதை உணர்ந்தாள்.

ஹென்ரி கிளேக்கு 'ஒயிட் ஹவுஸ்' லில் இடம் கிடைக்க விடாமல், ஆண்ட்ரூ ஜாக்ஸன் ஜனாதிபதி பீடத்தில் இன்னும் இருந்து கொண்டிருப்பது அநீதி என்ற கருத்து அவளுக்கு உண்டு. ரிச்சர்டு மெனிபீ, அவளருகில் இருந்த ஒரு பெஞ்சில் வந்து உட்கார்ந்துகொண்டார். அவர்கள் சென்ற இரண்டு வருஷங்களாகச் சந்திக்கவேயில்லை. மேரிக்கு ஏற்பட்டிருந்த ஓர் ஏமாற்றமே இதற்குக் காரணம். அவர்கள் கடைசியாகச் சந்தித்தது ஹாரட்ஸ்பர்கில் நடந்த 'விக்' கட்சியினரின் மகாநாட்டில். அந்த மகாநாட்டில் அவளுடைய தந்தையின் பெயர், லெப்டினெண்ட் கவர்னர் பதவிக்குப் பிரேரிக்கப்பட்டது. ஆனால் மெனிபீ தலையிட்டு, டாடின் பெயரை ரத்துசெய்யச் செய்துவிட்டார். இதனால் மேரிக்கு அவர் மீது அளவற்ற கோபம்.

அவளருகில் வந்து அமர்ந்து கொண்ட மெனிபீ, ''மேரி! நீ இன்னும் என்னை மன்னிக்கவில்லையா? அன்று உன் தந்தையின் கோரிக்கைக்கிணங்கியே நான் அப்படிச் செய்ய வேண்டியதாயிற்று என்பது உனக்குத் தெரியாதா?'' என்றார்.

''அவருடைய பேச்சை நீங்கள் கேட்டிருக்கக் கூடாது'' என்றாள் அவள்.

அவளுடைய குரலில் கோபத்தின் சாயல் இருந்தது. அதைக் கவனித்த தந்தை அவளை அணைத்துக் கொண்டு, வாஞ்சை ததும்பும் குரலில் சொன்னார்:

''உன்னால் என் போக்கைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை; இல்லையா மேரி?''

ஆம்; சிலசமயம் அவளுக்குத் தந்தையைப் புரிந்து கொள்ளுவது சிரமமாகத்தான் இருந்தது. லெக்ஸிங்டனை ஸ்தாபித்த ஆறு பேர்களில் ஒருவருடைய மகன் டாடு. டிரான்ஸில்வேனியா சர்வகலாசாலையில் லத்தீன், கிரேக்க மொழிகளும், தர்க்க சாஸ்திரம், சரித்திரம் முதலியவைகளும் நன்கு கற்று 'ஆனர்ஸ்' பட்டம் பெற்றார். இருபதாவது வயதில் அவர், வக்கீலாகத் தொழில் நடத்த 'ஸனத்' பெற்று விட்டார். லெக்ஸிங்டனில் பிரசித்தி பெற்ற வக்கீல்களில் ஒருவராக அவர் விளங்குவார் என்று எல்லோரும் கருதிய போதிலும், அவர் அத்தொழிலை மேற்கொள்ளவே இல்லை. மாறுக, அவர் நகரத்தில் ஒரு மளிகைக்கடையை ஆரம்பித்தார். கம்பளி, மற்றும் சணல் பைகளைத் தயாரிக்கும் ஆலை ஒன்றை நிறுவினார்; பாங்க் ஆப் கெண்டக்கியின் லெக்ஸிங்டன் கிளைக்குத் தலைவராளார். இப்படியெல்லாம் செய்து கைத்தொழில் துறையில் ஈடுபட்டுப் புதுப் புதுத் தொழில்களுக்குப் பணம் திரட்ட முயன்றாரேயன்றி, கிளேயைப் போலவோ, கிரிட்டெண்டனைப் போலவோ தமது அறிவாற்றலை வெளிப்படுத்தும் துறையில் ஈடுபடவில்லையே யென்று மேரிக்கு வருத்தந்தான்.

அவர்கள் வீட்டு பட்லர் நெல்ஸன், 'ஜூலெப்' பானம் தயாரிப்பதற்கான பொருள்களை ஒரு வெள்ளித்தட்டில் வைத்து எடுத்துக்கொண்டு அங்கே வந்தான். பானத்தைத் தயாரிக்கும் வேலையில் அவன் ஈடுப்பட்டிருந்தபோது டாடும், அவரது நண்பர்களும் மீண்டும் விவாதத்தில் ஈடுபட்டனர். அடுத்து வரும் 'விக்' கட்சி மகாநாட்டைப் பற்றியும், அம் மகாநாட்டில், டேனியல் வெப்ஸ்டர், ஜெனரல் வின்ஃபீல்டு ஸ்காட், வில்லியம் ஹென்ரி ஹாரிஸன் ஆகியோரின் பெயர்கள் விடுத்த ஜனாதிபதிப் பதவிக்குப் பிரேரிக்கப்படலாம் என்பது பற்றியும் சர்ச்சை செய்துகொண்டிருந்தனர். மேரியின் கண்கள் பட்லர் நெல்ஸன் பானம் தயாரிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், அவளுடைய மனம் அவர்களுடைய விவாதத்தில்தான் ஈடுபட்டிருந்தது.

ஜனாதிபதிப் பதவிக்கு அவர்கள் கூறிய மூவர் பெயர்களும் பிரேரிக்கப்படாமல், ஹென்ரி கிளேயே தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று அவள் தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள். 'விக்' கட்சியின் ஜீவநாடி, அதன் அறிவு,

அதன் சக்தியே அவரல்லவா என்றும் அவள் எண்ணிக் கொண்டாள்.

நெல்ஸன் இதற்குள் ஜூலெப் பானத்தைத் தயாரித்து எல்லோருக்கும் வழங்கினான். கிளே அதில் ஒருவாய் குடித்து விட்டு, "ஜூலெப் பானம் தயாரிப்பதில் நெல்ஸனின் திறமையே அலாதிதான். நாம் 'ஓயிட் ஹவுஸ்'ஸில் குடியேறும்போது அவனையும் கூட அழைத்துச்செல்லவேண்டியது தான்" என்றார்.

"நாம்" என்ற வார்த்தையைக் கிளே உபயோகித்தது மேரியை உற்சாகப்படுத்தியது. அப்படியென்றால், அவளுடைய அப்பா ராபர்ட் டாடுக்கு நிர்வாகத்தில் ஒரு முக்கியமான பதவி அளிக்கப்படும் என்றுதானே அர்த்தம்? அப்பாவுக்கு ஏற்ற தொழில் அரசியல்தான். அவர் கென்டக்கி பிரதிநிதித்துவ சபையில் இருபத்தோரு வருஷகாலம் வேலை பார்த்திருக்கிறார். லெக்ஸிங்டனில் அவருடைய வீடுதான் 'விக்' கட்சியின் தலைமைக் காரியாலயம் போல் இயங்கிக் கொண்டிருக்கிறது. இருந்தபோதிலும், அவர், திரைமறைவிலிருந்து வேலை செய்து கொண்டிருப்பதைத்தான் விரும்பினாரேயன்றி, எந்தப் பதவியையும் விரும்பவோ, பெறவோ முயலவில்லை.

இனி ஹென்ரி கிளே அவருடைய போக்கை மாற்றி விடுவார்; நாங்கள் எல்லோரும் வாஷிங்டனுக்குப் போவோம்; நேர்த்தியான மாளிகையில் வசிப்போம்; பெரிய பெரிய மனிதர்களோடு பழகுவோம் என்றெல்லாம் மேரி நினைத்துக் கொண்டாள்.

2

வீடு ஒரே பிரகாசமாக இருந்தது. முன் பக்கத்து ஹாலிலும், அதற்கு அடுத்த அறையிலும், கதவு-ஜன்னல்களுக்கு இட்டிருந்த சித்திரத் திரைகள் அனைத்தும் அகற்றப்பட்டிருந்தன. சர விளக்குகள் ஜகஜ்ஜோதியாக ஒளிவீசிக்கொண்டிருந்தன. இரண்டு அறைகளிலும், ஸோபாக்கள் சுவர் ஓரமாய்க் கணப்புக்கு அருகில் வரிசையாகப் போடப்பட்டிருந்தன.

மேரி, வீட்டின் 'போர்டிகோ'விலிருந்து முன்வாசலுக்கு கொண்டுவிடும் நான்கு கற்படிகளையும் கடந்து, விசாலமான வாசல் வழியே உள்ளே சென்றாள். அவளுக்கும், அவளு

டைய மாற்றுந்தாய்க்கும் இடையே, உள்ளூற மனக்கசப்பு இருந்த போதிலும், பெட்லி ஹம்ப்ரிஸ் டாடிடம் மேரிக்கு ஓர் ஆழ்ந்த மதிப்பு உண்டு. 'ஏழு தலைமுறைகளாவது பண் பட்டபின்னரே ஒருத்தி நாகரிகமுள்ள வீட்டு எஜமானியாக முடியும்' என்று பெட்லி அடிக்கடி சொல்லுவாள். அப்படி ஏழு தலைமுறைகள் கற்றுத்தேர்ந்த ஒருத்திதான் தன் மாற்றுந்தாய் என்பதை மேரி ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது. இந்த வீட்டையும் இதன் தோட்டத்தையும் ஒரு பண்புள்ள எஜமானிதான் கவனிக்கிறாள் என்பதே அதற்குச் சான்று. இப்பொழுது அவர்கள் வசித்து வந்த இந்த வீடு, முன்பு வில்லியம் பால் மாட்டீர் என்பவரின் பொது ஜன விடுதியாக இருந்தது. அவர் ''திவால்'' ஆகி இவ்வீடு ஏலத்துக்கு வந்தபோது, மேரியின் தந்தை இதை வாங்கினார். விசாலமான அந்தச் செங்கல் கட்டடத்தை ஓர் அழகிய மாளிகையாக்கிய பெருமை பெட்லியைத்தான் சேரவேண்டும்.

மேரிக்கு எட்டு வயதான போது அவள் தந்தை மறுமணம் செய்து கொண்டார். இப்பொழுது அவளுக்கு இருபது வயது. இடையே இருந்த பனிரெண்டு வருடங்களில் மேரி எத்தனையோ தடவைகள் சிந்தித்துப் பார்த்திருக்கிறாள்—'பாட்டி பார்க்கர் மாத்திரம் எங்களுடைய குழந்தை உள்ளங்களை மாற்றுந்தாய்க்கு எதிராகத் திருப்பி விட்டிராவிட்டால், நாங்கள் ஒருவருக்கொருவர் பாசத்தோடு இருந்திருப்போம் அல்லவா?' என்று. பல வருஷங்களாக பெட்லி தனது மூத்தாள் குழந்தைகள் எவராலும் விரும்பப் படாதவளாகவே வாழ்ந்துவருகிறாள். ஆகையால் நாங்கள் மணம் செய்து கொண்டு இந்த வீட்டை விட்டுப் போகும் நாளை அவள் எதிர்பார்த்துக் கொண்டு தானே இருப்பாள்? இன்றிரவு பெட்லி கீழ்த்தளத்துக்கு இறங்கி வரமாட்டாள். அவள் ஆறுவது குழந்தையைப் பிரசவித்து இன்னமும் உடல் நலமாக வில்லை. ஆனல் அவள் கீழே இறங்கி வந்து இன்றைய விருந்தில் கலந்து கொள்ளாததற்கு அதுவே காரணமாக இருக்க முடியாது. விருந்துக்கு மேரியே யஜமானியாக இருந்து முழுச் சுதந்திரத்தையும் அநுபவித்து மகிழட்டும் என்பதுதான் அவள் மாடியிலேயே இருக்கத் தீர்மானித்ததற்குக் காரணமாக இருக்கவேண்டும்.

விருந்துக்காக வரவழைக்கப்பட்டிருந்த சங்கீத கோஷ்டியினர் பின் அறையில் தங்கள் வாத்தியக் கருவிகளைச் சுருதி கூட்டிக் கொண்டிருந்தனர். கர்னல் கிரஹாமின் வாத்தியக் குழுவைச் சேர்ந்த நியூபன், ஹென்ரி, ஜார்ஜ் என்ற பிரசித்தி பெற்ற மூன்று வாத்தியக்காரர்களும் தங்கள் வயலினையும், 'கிடார்'ரையும் தயார்ப் படுத்திக்கொண்டிருந்தனர். அவள் அங்கு சென்று அவர்களுக்கு வரவேற்புக் கூறிவிட்டு, விருந்தில்

நடக்கும் நடனங்களுக்கு என்னென்ன பாட்டுகள் வாசிக்க வேண்டும் என்பதை விவரித்தாள்.

''கிரான் ஹோட்டலில் நடக்கும் பிரம்மாண்டமான நடனத்திற்கு வந்திருப்பதுபோல் விருந்தினர்களுக்குத் தோன்றும்படியாக உங்கள் வாத்திய இசையைத் துவக்கவேண்டும்'' என்றாள் அவள்.

''எல்லாம் ஜமாய்த்து விடுகிறோம் மிஸ் டாடு'' என்று அவர்கள் கூறினார்கள்.

முன் வாசலில் குதிரைக் குளம்பொலியும் தொடர்ந்து ஸாண்டி மக்டொனல்டின் குரலும் அவளுக்குக் கேட்டன.

மக்டொனல்டு நடுத்தர உயரமானவன்; கண்களும், தலை ரோமமும் மணல் நிறமாக இருந்தன. அவனுடைய நிறமும் மணல் நிறந்தான். அவன் முகத்தில் ஏராளமான மச்சங்கள்; சில கன்னத்திலும், உதடுகளிலுங்கூடக் காணப்பட்டன. அவனுடைய நிறத்தை ஒட்டியும், அவனுடைய முன்னோர்கள் ஸ்காட்லாந்தைச் சேர்ந்தவர்களாதலாலும் அவனுக்கு ஸாண்டி என்ற பெயர் ஏற்பட்டது. அவன் கல்வி கற்ற டிரான்ஸில்வேனியா சர்வகலாசாலையிலுள்ள ரிஜிஸ்தரில் மாத்திரமே அவனுடைய உண்மைப் பெயரான தாமஸ் என்பதைக் காணலாம். மற்றப்படி எல்லோருக்கும் அவன் ஸாண்டிதான்.

''குட் மார்னிங் ஸாண்டி! நீ பிரமாதமாய் தோற்றமளிக்கிறாய்?'' என்று மேரி அவனை வரவேற்றாள்.

''உன்னுடைய பார்ட்டிக்கென்று பிரத்தியேகமாகத் தைத்தேன் மேரி. பிறகு இதை என்னுடைய மிஸ்ஸிஸிப்பி பிரயாணத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறேன். என்னைப் பார்த்து எல்லாப் பயல்களும் பொறுமைப் படட்டும்'' என்றான் ஸாண்டி.

அப்பொழுது பத்து மணி ஆகிவிட்டது. மெயின் தெரு வழியாக டாடின் மாளிகைக்குள்ளே கோச்சு வண்டிகள் வர ஆரம்பித்தன. முதலாவதாக வந்தவள் மேரியின் தோழி மார்கரெட் விக்ளிப். அவள் நீலநிறக் கவுனையும், தன் தாயாரின் வைரக் கம்மல்களையும் அணிந்திருந்தாள். மார்கரெட்டுடன் அவளுடைய காதலன் வில்லியம் பிரஸ்டனும் வந்தான். வில்லியம் சமீபத்தில் லூயி வில்லில் வக்கீல் தொழில் தொடங்கியிருந்தான். அடுத்தாற்போல் இஸபெல்லா போட்லி வந்தாள். அவள் வெண்மையான பட்டாடைகள் அணிந்திருந்தாள். இஸபெல்லாவும் மேரியும் தங்கள் பதினான்காவது வயதிலிருந்து பதினெட்டாவது வயது வரையில் மாடம் மெண்டல் என்பவளின் பள்ளியில் சேர்ந்து படித்தவர்கள்; ஒரே அறையில் வசித்தவர்கள். இஸபெல்

லாவுடன், ஷாக் பாரி என்ற ஃபிரெஞ்சு மாணவனும் வந்திருந்தான். அடுத்ததாக வந்தவள் காதரீன் டிராட்டர் என்ற மேரியின் மற்றொரு பள்ளித்தோழி. காதரீன் அப்பொழுதுதான் நியூ ஆர்லியன்ஸிலிருந்து திரும்பியிருந்தாள். அவள் தன் சிகையை "கிரியோல்' பெண்களைப் போல் தலையுச்சியில் குவித்துக்கொண்டை போட்டுக்கொண்டு, காட்டு ரோஜா நிறத்தில் கீழ்ப்பாகம் பரந்த கவுன் அணிந்துகொண்டு வந்திருந்தாள். மேரியின் நெருங்கிய உறவினளான மார்கரெட் ஸ்டூவர்ட், தாமஸ் கிரிட்டெண்டன் என்ற தன் தோழனுடன் வந்தாள். டாடின் குடும்ப வைத்தியர் டாக்டர் எலிஷா வார்ஃபீல்டின் மூன்றுவது மகள், ராபர்ட் விக்ளிப் என்பவனுடன் வந்தாள். விருந்துக்கு வந்திருந்த வாலிபர்களில் பெரும்பாலோர் டிராஸ்விலேவனியா சர்வகலாசாலை மாணவர்கள்தாம்.

வீடு முழுவதும் ஒரே சிரிப்பும், கும்மாளமும் எதிரொலித்தன. மேரி மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிருந்தாள். இம்மாதிரி விருந்தளித்து நண்பர்களை வரவேற்பதில் அவளுக்கு எப்பொழுதுமே உற்சாகம் உண்டு. நெருங்கிய நண்பர்கள் சூழ இருந்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சி அவள் கண்களில் ஒளிர்ந்தது. அவளுடைய அழகான தோள்களும், மார்பகமும் எல்லோர் கவனத்தையும் கவர்ந்திருந்தன. விருந்தினர்களை வரவேற்பதில் அவளுக்குத் தனிச் சாமர்த்தியம் உண்டு. உற்சாகமாகக் கைகுலுக்குவது; மென்மையாகக் கன்னத்தில் முத்தமிடுவது; அவர்களுக்குப் பிடித்த எதையாவது பற்றி விசாரிப்பது; அவர்களுடைய ஆடை அலங்காரத்தைப் புகழ்ந்து சில வார்த்தைகள் கூறுவது முதலிய வரவேற்புச் சம்பிரதாயங்கள் அவளுக்கு அத்துபடியானவைதாம்.

அவர்கள் அனைவரும் முன் ஹாலில் வட்டமாக நின்று கொண்டிருந்தனர். டாம் கிரிட்டெண்டன் அன்றைய "அப்ஸர்வர்'' பத்திரிகையில், தான் படித்த செய்தி ஒன்றைச் சொல்லிக் கொண்டிருந்தான். கல்யாணத்துக்காக மணப்பெண்ணுடன் போய்க்கொண்டிருந்த ஒரு நபரைப் பற்றிய செய்தி அது. அவன் மணப்பெண்ணிடம் சொன்னான்:

"என் மன நிலையைப்பற்றி உன்க்கு விவரமாகச் சொல்லவில்லை; முக்கியமாக மூன்று விஷயங்களை நான் வற்புறுத்த விரும்புகிறேன். நான் தனியாகத்தான் தூங்குவேன்; நான் தனியாகத்தான் சாப்பிடுவேன்; காரண காரியமில்லாமல் உன்னைக் கடிந்து கொள்ளவும் செய்வேன்.''

இவற்றை யெல்லாம் ஒப்புக் கொள்வதாக அறிவித்து விட்டு மணப்பெண் சொன்னாள்: "நீங்கள் தனியாக உறங்

கலாம்; ஆனல் நான் மாட்டேன்; நீங்கள் தனியே சாப்பிடு வதாக இருந்தால், நான் உங்களுக்கு முன்பே சாப்பிட்டு விடுவேன்; என்னைக் காரண காரியமில்லாமல் கடிந்து கொள் வதாக இருந்தாலும் அதற்கு நிறைய வாய்ப்பளிக்கும் வகை யில் நடந்துகொள்வேன்.''

விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தவர்களில் கடைசி ஜோடி பத்தேகாலுக்கு வந்தனர். மேரி சமிக்ஞை காட்ட வாத்தியக்காரர்கள் இசையை முழக்கினர். முதலில் விருந் துக்கு வந்திருந்தவர் அனைவரும் ஜோடி ஜோடியாகக் கை கோத்துக்கொண்டு அணிவகுத்து நடந்தனர். மேரி, ஸாண் டியின் கையைப் பிடித்தவாறு இந்த அணிவகுப்பின் முகப்பில் சென்ருள். பிறகு நடனம் ஆரம்பமாயிற்று. மேரி விருந் துக்கு வந்திருந்த ஒவ்வொரு வாலிபனுடனும் சலிக்காமல் நடனமாடினுள்.

சரியாக நடு ராத்திரிக்கு நடனம், பிடிலின் இசை எல்லாம் ஒருவாறு முடிந்த பின்னர், பட்லர் நெல்ஸன் விருந்து அறையின் கதவுகளைத் திறந்துவைத்தான். அங்கே நீண்ட மேஜை ஒன்று போடப்பட்டிருந்தது. மேஜையின் இருபுற மும் வரிசையாக நாற்காலிகள். சுமார் ஒரு டஜன் மெழுகு வத்திகள் அந்த அறையில் ஒளிபரப்பிக் கொண்டிருந்தன. மேஜை மீது அழகிய துணி ஒன்று விரிக்கப்பட்டு அதன் மீது பலவகை உணவுப் பொருள்கள் வைக்கப் பட்டிருந்தன. விருந்து ஆரம்பமாயிற்று. நெல்ஸன் 'ஷாம்பேன்' மதுவைக் கண்ணுடி டம்ளர்களில் நிரப்பி எல்லோருக்கும் விநியோகித் தான்.

முதல் பசி ஆறியதும், விருந்தில் கலந்துகொண்டவர்கள் சம்பாஷணையில் ஈடுபட்டனர். அவர்களுடைய பேச்சு, மறுநாள் டிரான்ஸில்வேனியா சர்வகலாசாலையின் பட்ட மளிப்பு விழாவைப்பற்றித் திரும்பியது. தாங்கள் கலந்து கொண்ட விவாத அரங்கங்களைப் பற்றியும், தாங்கள் சென்ற குதிரைப் பந்தயங்களைப் பற்றியும், பார்த்த நாடகங்களைப் பற்றியும், முக்கியமாக ஷேக்ஸ்பியரின் ''வெனிஸ் வர்த்தகன்'' வாஷிங்டன் இர்விங்கின் ''பிசாசு மணமகன்,'' இன்னும் ''ஊமை அழகி,'' போன்ற நாடகங்களைப் பற்றியும் பெண் கள் பேசினுர்கள். ஆண் பிள்ளைகள், தங்களுடைய படிப் பைப்பற்றியும், வருங்காலத்தில் தாங்கள் எதிர்பார்க்கக் கூடியதைப் பற்றியும் சம்பாஷித்தனர்.

மேரியின் உற்சாகம் குறைந்தது; அவளுடைய முகத்தில் சிந்தனை ரேகை படர்ந்தது. அவள் கண்களில் மிளிர்ந்த பிரகாசம் குன்றிற்று. நாளை அவளுந்தான் பட்டம் பெறப் போகிருள். ஆனல் பட்டம் பெறப்போகும் மாணவ மாண

வியரின் ஊர்வலம் இராது; மாரிஸன் மாதா கோவிலில் நடக்கும் கூட்டமும் இராது; அங்கு உறவினர்களும் நண்பர்களும் ஆவல் ததும்பும் முகத்துடன் நின்று கொண்டிருக்க மாட்டார்கள்; பேராசிரியர்கள் பிரசங்கங்கள் புரிய மாட்டார்கள்; பிரமுகர்கள் எவரும், தன் பெயரைப் பொன் னெழுத்தில் தாங்கிய பத்திரத்தைத் தரமாட்டார்கள். இருந் தாலும் அவளுக்கும் நாளைக்குக் கல்வி பூர்த்தியாகி விடத் தான் போகிறது. இங்கு உட்கார்ந்திருக்கும் இளைஞர்களுக் கும், யுவதிகளுக்கும் ஈடாக அவள் படிக்கவில்லை யென்று யாரும் சொல்லமுடியாது.

ஆம். ஒருவரும் சொல்ல முடியாதுதான். ஏனெனில், அது யாருக்கும் தெரியாது.

மாடம் மெண்டலின் பள்ளியை விட்ட பிறகு, கடந்த இரண்டு வருஷங்களாக அவள், டிரான்ஸில்வேனியா கலா சாலைப் பாடங்களைத் தனியாகப் படித்து வந்தாள் என்பது, மேரிக்கு அப்பாடங்களைப் போதித்த அவளுடைய உபாத்தி யாயரான டாக்டர் ஜான் வார்டு ஒருவருக்குத்தான் தெரியும்.

அவள் தன்னைச் சுற்றி உட்கார்ந்திருந்த மாணவ மாணவி களை நோக்கினாள். மேரி, அவர்களது புத்தகங்களிலும், படிப்பிலும் காட்டிய அக்கறை அவர்களைப் பெருமிதம் அடை யச் செய்திருந்தது. ஆயினும் சிலர் ''உனக்கு இந்தக் கவலை யெல்லாம் இனி எதற்கு? தர்க்க சாஸ்திரமும், சரித்திரமும் உன் போன்ற அழகியின் நேரத்தை எதற்காக வீணாக்க வேண்டும்?'' என்று கேட்டதுண்டு. அப்பொழுதெல்லாம் அவள் என்னென்னவோ சொல்லி அவர்களை ஏமாற்றியிருக் கிறாள்; இனிக் கவலையில்லை. அது எல்லாம் முடிந்துவிட்டது.

அவளருகில் அமர்ந்திருந்த ஸாண்டி, ''ஏன் இந்த மௌனம், மேரி?'' என்று கேட்டான்.

''ஒன்றுமில்லை; என்னவோ நினைத்துக் கொண்டிருந் தேன்'' என்றாள் அவள்.

அவன் அவள் காதருகில் குனிந்து, ''ஒரு நிமிஷம் வெளியே வருகிறாயா? நான் உன்னிடம் சிறிது பேச வேண்டும்'' என்றான்.

3

அவர்கள் வெளித் தோட்டத்தில் தோளோடு தோள் இடிக்க நின்றுகொண்டிருந்தார்கள். ஸாண்டி, மிஸ்ஸிஸிப்பியி லுள்ள தங்களுடைய ''ரிவர் வியூ'' என்ற பூர்வீக மாளிகை

யைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். அவன் தந்தை சென்ற ''ஈஸ்டர்'' பண்டிகையின் போது இறந்துவிட்டார். அவன் அவருக்கு ஒரே மகன். பெரிய எஸ்டேட்டு ஒன்று அவர்களுக்கு இருந்தது. அதன் நிர்வாகப் பொறுப்பை அவன் விரைவில் ஏற்றுக்கொள்ள இருந்தான்.

''பிரம்மாண்டமான 'ஓக்' மரங்கள் சூழ்ந்த மாளிகை அது, மேரி. மூன்று பக்கங்களிலும் விசாலமான தாழ்வாரங்கள். அறைகள் அனைத்தும் பதினெட்டு அடி உயரமும், கதவத்தனைப் பெரிதான கண்ணாடி ஜன்னல்களும் உடையவை. அவற்றைப் புதுப்பிக்கவேண்டும். இன்னும் மாளிகையில் நீ விரும்பும் மாற்றுதல்கள் எவ்வளவோ செய்யவேண்டும். இதற்கெல்லாம் ஏராளமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அம்மா இதில் எல்லாம் தலையிடவே மாட்டாள். உன் இஷ்டத்துக்கு விட்டு விடுவாள்.....'' என்றான் அவன்.

அவளுக்குச் சிறிது மயக்கம் ஏற்பட்டது. 'தன்னை மணந்து கொள்ளும்படி ஸாண்டி கூறுகிறான், ஒரு பிரம்மாண்டமான மாளிகையை அலங்கரிக்கும்படி என்னைக் கேட்டுக் கொள்ளுவதன் மூலம்' என்று அவள் எண்ணிக் கொண்டாள்.

''விவசாய விஷயத்தை வீட்டு எஜமானர் கவனித்துக் கொள்ளுவார். மற்ற விஷயங்களையெல்லாம் எஜமானி அம்மாள்தான் கவனித்துக் கொள்ள வேண்டும். எல்லோருடைய சந்தோஷமும் அவளையே சார்ந்திருக்கிறது. குடும்பத்தாரின் சந்தோஷம் மட்டுமல்ல; இருநூறு அடிமைகளின் சந்தோஷங்கூட. வீட்டுச்சாவிகள் அனைத்தும் அவளிடம் தான் இருக்கும்; நீக்ரோக் குழந்தைகளை அவள்தான் வேலைகளில் பழக்க வேண்டும். வீட்டுத் தோட்டங்களை மேற்பார்வையிட வேண்டும். சமையற்காரர்கள், வேலைக்காரிகள் எல்லோரும் அவள் ஏவலின் கீழ்த்தான் இருப்பார்கள். பொறுப்புமிக்க வாழ்க்கை; ஆனால் அதற்கெல்லாம் உனக்குத் திறமையுண்டு.''

அவன் மேரியின் தோள்களைப் பிடித்துத் திருப்பினான். அவர்களுடைய நீண்ட கால நட்பில் இதுவரைக் காட்டியிராத ஒருவித ஆர்வம் அவனிடம் காணப்பட்டது.

''மேரி! நாளைக்கு பட்டமளிப்பு விழா முடிந்த உடனே நாம் மணம் செய்து கொண்டு விடுவோம். நான் ஏற்கனவே மிஸியர் கிரானிடம் பேசி விட்டேன். தமது ஹோட்டலில் திருமண விருந்துக்கும், நடனத்துக்கும், லெக்ஸிங்டன் நகரே கண்டு பிரமிக்கும்படி ஏற்பாடு செய்துவிடுவதாக அவர் கூறியிருக்கிறார். நம்முடைய நண்பர்கள் எல்லோரையும் விருந்துக்கு அழைப்போம்.....''

மேரி, அவன் கன்னத்தோடு தன் கன்னத்தை ஒட்டிக் கொண்டாள். தன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்திருப் பதைக் கண்டு அவள் வியப்படைந்தாள். ஸாண்டியும் அவள் கண்ணீரைக் கண்டுவிட்டான்.

''இது ஆனந்தக்கண்ணீர் என்று நம்புகிறேன் மேரி'' என்றான் அவன்.

அவள் பின் வாங்கி, தன் கன்னத்தில் வழிந்திருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். பிறகு அவன் தோள் களுக்கு மேலே பார்வையைச் செலுத்தி ஜகஜ்ஜோதியாக ஒளிவீசிக்கொண்டிருந்த தங்கள் மாளிகையை நோக்கினாள்.

''ஸாண்டி! இந்தக்கண்ணீர் நன்றியுணர்ச்சியால் ஏற் பட்டது. ஏனென்றால் கல்யாணத்தைப் பற்றி என்னிடம் முதன் முதலாக பேசியவன் நீதான்.''

''முதலாவதாகவா? ஏன் மேரி? இந்த **புளூ கிராஸ்** பிரதேசத்திலேயே மிகக் கவர்ச்சியோடு விளங்குபவளாயிற்றே நீ?''

''ஏன்?'' என்று அவளும் தன்னையே கேட்டுக்கொண் டாள். அவள், வாலிபர்களுடன் தீவிரமாகப் பழகி வராத தாலா? அல்லது அவர்கள் தான் அவளுடன் தீவிரமாகப் பழகவில்லையா? டாடின் குடும்பத்தைச் சேர்ந்த அவள் அந்த **புளூ கிராஸ்** பிரதேசம் எங்கும் போயிருக்கிறாள்; எல்லோ ராலும் வரவேற்கப்பட்டிருக்கிறாள். கடந்த ஐந்து வருடங்க ளாக அவள் கலந்து கொள்ளாத விருந்துகளோ, உல்லாசப் பிரயாணங்களோ, நடனங்களோ கிடையாது. டிரான்ஸில் வேனியா சர்வகலாசாலை மாணவர்கள், பேராசிரியர்கள் எல் லோருடனும் அவள் கலந்து பழகியிருக்கிறாள். வாலிபர்க ளோடு உல்லாசமாகப் பொழுது போக்கியிருக்கிறாள். **மாடம் மெண்டலின்** பள்ளியில் தன்னுடன் படித்து வந்த மாண விகள் காதல் கொள்வதையும், கல்யாணம் செய்துகொள் வதையும் கண்டிருக்கிறாள். இருந்தாலும் அவள் மனத்தில் சலனம் ஏற்பட்டதில்லை. ஏன்? அவையெல்லாம் அவளைக் கவரவில்லையா? அல்லது மண வாழ்க்கைக்கு அவள் தயாராக வில்லையா?

டெஸ்மண்ட் பிளெமிங்குடன் ஏற்பட்ட அநுபவம் அவள் நினைவில் மிதந்தது. டெஸ்மண்டுக்கு இருபத்தாறு வயசுதான் ஆகியிருந்தது. அதற்குள் அவன் குதிரை வளர்ப் புப் பண்ணை ஒன்றை நிறுவிப் புகழ்பெற்று விட்டான். இரு நூறு ஏக்கரா மேய்ச்சல் நிலம் அவனுக்குச் சொந்தமாக இருந் தது. அதில் அவன் அழகிய லாயங்களைக் கட்டி குதிரைகளை வளர்த்து விற்றுவந்தான். அவனை அவள் ஒரு 'பால்' நடனத் தின்போது சந்தித்தாள். அதற்குச் சில நாட்களுக்கு முன்பு

அவள் ஏதோ சில தின்பண்டங்கள் வாங்குவதற்காக மிஸியர் கிரானின் ஹோட்டலுக்குச் சென்றிருந்தபோது டெஸ் மண்ட் அவளை மாடிக்கு அழைத்துச் சென்று அந்த 'பால்' நடனத்துக்காகச் செய்யப்பட்டிருந்த அலங்காரங்களைக் காட்டினான். நடனத்துக்காக மூன்று அறைகளின் சுவர் களிலும் பூத்துக் குலுங்கும் ஆரஞ்சு மரத்தின் சித்திரங்கள் தீட்டப்பட்டிருப்பதைக் கண்டு அவள் பிரமித்தாள். ஓர் ஆரஞ்சு மரச்சோலையின் நடுவே நிற்பது போன்ற தோற் றந்தான் மேரிக்கு அப்பொழுது ஏற்பட்டது.

அவள் உடனே ஓரியர் அண்டு பெர்க்ளி என்ற பிர பல ஜவுளிக் கடைக்குச் சென்று ஆரஞ்சு நிற ஸாட்டினில் கவுனுக்குத் துணி எடுத்தாள். வீட்டுக்கு வந்து தங்கள் வீட்டுத் தையற்காரிக்கு ஆள் அனுப்பினாள். ஆம்; 'பால்' நடனம் நடக்கும் இடத்தின் அலங்காரத்துக்கு ஏற்றபடி தன்னை அலங்கரித்துக்கொண்டு போகவேண்டுமென்று அவள் தீர்மானித்துவிட்டாள்.

தடபுடலாக மேரியின் கவுன் தைக்கப்பட்டு விட்டது. அதை அணிந்துகொண்டு அவள் ''பால்'' நடனத்துக்குப் போனபோது, அவளைப் பார்த்து வியக்காதவர்களே இல்லை. சூழ்நிலைக்கு ஏற்றவாறு அவள் அணிந்திருந்த அந்த உடை அன்று எத்தனை வாலிபர்களை அவளோடு நடனமாட வரச் செய்துவிட்டது!

டெஸ்மண்ட் பிளெமிங் மேரியைப் பார்த்துக் கிறங்கி விட்டான். அங்கு வந்திருந்த வாலிபர்களில் அவன்தான் மிக அழகானவன். சுருள் சுருளான கேசமும், வார்த் தெடுத்தது போன்ற உருவமும், உடலோடு ஒட்டிய உடை களும், அவனை வசீகரமாகத் தோற்றமளிக்கச் செய்தன. அவன் மேரியோடு பல தடவைகள் நடனமாடினான். பிறகு அவள் கையைப் பிடித்துக்கொண்டு வெளியேயிருந்த பால் கனிக்கு அழைத்துச்சென்றான்.

மேரிக்கு வெளிறிய நிறமுடைய வாலிபர்களைப் பிடிக் காது. கறுத்த கேசமும், கருமையான, ஆழங்காண முடி யாத கண்களும் உடைய வாலிபர்களைத்தான் அவளுக்குப் பிடிக்கும். இருந்தாலும் அன்று தாங்கள் இருவரும் அத்தனை நெருங்கிப் பழகியதைக் கண்டபோது, தங்கள் இருவரிடமும் ஒருவரை ஒருவர் கவரும்படி ஏதோ இருக்கவேண்டும் என்று அவள் நினைத்தாள். இது நடந்து சில நாட்களான பின்னர், அவனும் அவளும், மற்றொரு விருந்தில் சந்தித்துக் கொண் டனர். அந்த விருந்தில் தனது புதிய குதிரையைப்பற்றி, அவளிடம் பிரமாதமாக அளந்தான் டெஸ்மண்டு பிளெமிங். மேரி அவன் பேச்சில் குறுக்கிட்டுச் சொன்னாள்:

''குதிரையைப் பற்றி எனக்கு தலையும் தெரியாது; வாலும் தெரியாது. என்னிடம் இதையெல்லாம் சொல்லி என்ன பயன்?''

மேரியின் பேச்சு அவனுக்கு ரோசமூட்டி விட்டது. ''ஆமாம்; குதிரைகளைப் பற்றி நான் அநுபவத்திலிருந்து சொன்னால் உனக்குப் பிடிக்காது; புத்தகத்திலிருந்தால், இத்தகைய விவரங்களை விழுந்து விழுந்து படிப்பாய்'' என்றான் அவன்.

''ஆமாம்; ரேஸில் 'கிரே ஈகிள்' ஜெயிக்குமா? 'வாக்னர்' ஜெயிக்குமா? என்று புத்தகங்களைத் துழாவுவது நீயா? நானா?''

அவன் சட்டென்று தன் கோட்டுப் பையில் பாதி வெளியே தெரியும்படியாக வைத்துக்கொண்டிருந்த ரேஸ் புத்தகத்தைப் பார்த்துவிட்டுச் சிரித்தான். பிறகு சொன்னான்: ''நல்லது, நான் குதிரைப் பைத்தியம் பிடித்தவனாக இருந்தால், நீ வீட்டுப் பைத்தியம் பிடித்தவளாக இருக்கிறாய்? ஆக நாம் இருவரும் பைத்தியங்கள்தானே!''

பேச்சில் தான் சிக்கிக் கொண்டுவிட்டது மேரிக்குத் தெரிந்தது. இருந்தாலும் அவள் விட்டுக் கொடுத்து விடவில்லை.

''கட்டடக்கலை மிகப் பெரிய கலைகளில் ஒன்று; அது தெரியுமா, உனக்கு?'' என்று அவள் கேட்டாள்.

''ஏன் மேரி டாடு? குதிரை வளர்ப்புக் கலை மாத்திரம் குறைச்சல் என்ற நினைவோ உனக்கு? எந்தத் தச்சரும் சில மாதங்களிலேயே ஒரு வீட்டைக் கட்டிவிட முடியும்; ஆனால் உயர்ந்த ஜாதிக் குதிரை இனம் ஒன்றை விருத்தி செய்ய வருஷக் கணக்காகும்.'' இப்படிக் கூறியவாறு அவன் அவளை இழுத்துக் கொண்டு நடனமாட ஆரம்பித்தான். நடன மாடிக் கொண்டே சொன்னான்: ''ஆமாம்; எனக்கு அது தோன்றவேயில்லையே! உன்னிடம் அந்த நிபுணத்துவம் ஏற்படவும் சில தலைமுறைகளாவது ஆகித்தானே இருக்க வேண்டும்?''

''சரிதான் போ? என்னையும் உன் குதிரை இனத்திலேயே சேர்த்துவிட்டாயா?'' என்று கூறி நகைத்தாள் மேரி.

அடுத்த வாரத்தில் அவள் ஒவ்வொரு நாளும் டெஸ் மண்டைச் சந்தித்தாள்— அருகிலுள்ள எஸ்டேட்டுகளில் நடந்த திறந்த வெளி நடனங்களில் அவர்கள் கலந்துகொண்டார்கள். அங்கே அறுவடை செய்யப்படும் விதத்தைப் பார்வையிட்டார்கள். குதிரைகளில் சவாரி செய்தவாறு 'புளூ கிராஸ்' பிரதேசத்தைச் சுற்றிவந்தார்கள். சரசமாகச் சில சமயம் ஆலிங்கனம் செய்துகொண்டார்கள். ஒரு மரத் தடியில் இளைப்பாறிக்கொண்டிருந்தபோது ஒரே ஒரு தடவை

முத்தமிட்டுக்கொள்ளவும் செய்தார்கள். அன்று மாலையில் டெஸ்மண்ட், ''மேரி, என் பெற்றோர் ஊரில் இல்லை. நாஷ்வில்லிலிருந்து ஞாயிற்றுக்கிழமை சில முக்கியமான குதிரை வியாபாரிகள் வர இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு விருந்து அளிக்கவேண்டும். நீ வந்து உதவி செய்வாயா?'' என்று கேட்டான்.

''கட்டாயம் வருகிறேன் டெஸ். வருகிற மனிதர்கள் யார் யார், அவர்களுடைய குணாதிசயங்கள் என்ன என்பவைகளைப் பற்றி ஒரு சிறு குறிப்புக் கொடுத்தாயானால், விருந்தினர்களைத் தக்கபடி உபசரிக்க சவுகரியமாக இருக்கும்'' என்றாள் அவள்.

ஞாயிற்றுக்கிழமையன்று அவள், குதிரை வியாபாரிகளைப் பல நாட்கள் பழகியவள் போல் பேரிட்டு அழைத்து வரவேற்றாள்; அவர்களுடைய பண்ணைகளைப் பற்றியும், குதிரை லாயங்களைப் பற்றியும் கருத்தோடு விசாரித்தாள். விருந்து சாப்பிடுவதற்கு அவள் அவர்களை உட்கார்த்திய விதமே ஒரு தனி அமைப்புடன் இருந்தது. வியாபாரிகளில் சள-சள வென்று பேசக்கூடியவருக்கு அருகில், யார் என்ன பேசினாலும் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருக்கும் **ஸுஸன் பிளாக் மான்** என்பவளை உட்கார்த்தியிருந்தாள். அதிகமாகப் பேசாமல் அமைதியை விரும்பும் வியாபாரிக்கு அருகில், ஆளறிந்து பேசும் பேர்ன் ஹார்ட்லியை அமரச் செய்திருந்தாள். இதையெல்லாம் கவனித்த டெஸ்மண்ட் நன்றி ததும்ப அவளைப் பார்த்தான்.

விருந்து முடிந்து குதிரை வியாபாரிகளும் டெஸ்மண்டும், பழங்களை சாப்பிட்டுக் கொண்டே குதிரைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். மேரிக்கு அவர்கள் பேச்சில் எதுவும் புரியவில்லை யென்றாலும் அவளும் அவர்களுடன் உட்கார்ந்து, அப்பேச்சுகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

கடைசியில் இரவு வெகு நேரத்துக்குப் பிறகு வியாபாரிகள் அவளிடமும் டெஸ்மண்டிடமும் விடைபெற்றுச் சென்றனர். டெஸ்மண்ட், மேரியின் தோள் மீது கையை வைத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தான். மேரிக்கு அது தன் வீடு போலவும், வந்திருந்தவர்கள் தன் விருந்தாளிகள் போலவும், அருகில் நின்றுகொண்டிருந்தவர் தனது கணவர் போலவும் தோற்றம் ஏற்பட்டது. அவ்வளவு தூரம் அன்றைய விருந்தில் அவளுக்குத் திருப்தியும், மன நிறைவும் ஏற்பட்டிருந்தன.

விருந்தினர்கள் சென்ற பிறகு மேரி புறப்பட்டாள். அவளுடைய கோச்சு வண்டி வாசலில் வந்து நின்றது. டெஸ்மண்ட் அவளை அணைத்துக்கொண்டு உதடுகளில் முத்தமிட்டான்.

''மேரி டாடு! நாளைக்கு அந்த வியாபாரிகள் என்னிட முள்ள குதிரைகளில் சரி பாதியையாவது விலைக்கு வாங்கிக் கொள்ள வில்லை யென்றால், அது உன் பிழையே அல்ல'' என்றான் அவன் நன்றி தோன்ற.

அவன் கைகள் அவளை இன்னும் நன்றாக இழுத்து அணைத்துக் கொண்டன. மேரிக்கு மாத்திரம் அப்பொழுது கல்யாண ஆசை தட்டியிருந்தால், அவளும் அவனை அணைத்துக் கொண்டிருந்தால் போதும்.

ஆனால் அவளுடைய பிரச்னைகளுக்கும் கனவுகளுக்கும் ஏற்றவனா இந்த டெஸ்மண்ட்? குழந்தைப் பிராயத்திலிருந்தே தனக்கேற்ற கணவன் எப்படியிருக்க வேண்டும் என்பதை அவள் நிச்சயித்து வைத்திருந்தாள். மனிதரின் வெளி அழகு அவளை ஒரு போதும் கவர்ந்ததில்லை. அவளைக் கவர்ந்தவர்கள் உன்னதமான உள்ளம் படைத்தவர்கள்; நாகரிக உலகத்தின் அந்தரங்கங்களை அறிந்த மனிதர்கள். ஆம்; ஹென்ரி கிளேயின் அரசியல் எதிரியான ஆண்டுரூ ஜாக்ஸன் போன்றவர்களிடந்தான் அவள் உள்ளம் ஈடு பட்டது. ஆனால் அவள் விரும்பியது, அவரைப் போன்ற கிழவர்களையல்ல; வாலிபர்களை; வாழ்வின் தொடக்கத்தில் இருப்பவர்களை; கொந்தளிப்பு நிறைந்த இந்தப் பரந்த உலகத் திற்குச் சேவைசெய்ய ஆர்வம் கொண்ட இளைஞர்களைத்தான் அவள் வழிபட்டு வந்தாள்.

இமைக்கும் நேரந்தான் மேரி, டெஸ்மண்டின் அணைப் பில் இருந்தாள். பிறகு அவன் கைகளிலிருந்து நழுவி, வண் டியை நோக்கி நடந்தாள். இரவின் குளிர்ந்த காற்று அவ ளுடைய தடுமாறிய உள்ளத்தை நிலைப்படுத்தியது. இனி இம்மாதிரி வலைகளில் விழுந்து தத்தளிக்கக் கூடாது என்று அவள் தீர்மானித்துக்கொண்டாள்.

கடந்த கால நினைவுகளில் மூழ்கிவிட்ட உள்ளத்தை மேரி, ஸாண்டியிடம் திருப்பினாள்.

''இதுவரை வேறு எவரும் என்னிடம் கல்யாணப் பேச்சை ஏன் எடுக்கவில்லை என்பது எனக்குத் தெரியாது. ஸாண்டி. ஒருக்கால் எனக்கு இன்றுவரை எவரிடமும் காதல் ஏற்படாததுதான் அதற்குக் காரணமாக இருந்தாலும் இருக்கலாம்'' என்றாள் மேரி.

''ஆனால் நீ என்னுடன் மிகவும் நெருங்கிப் பழகிவந் திருக்கிறாயே, மேரி? என்றான் ஸாண்டி.

''மற்றவர்களை விட உன்னை எனக்குப் பிடித்திருப்பது உண்மைதான். ஆனால் அதற்காக நான் உன்னிடம் நெருங் கிப் பழகவில்லை.''

''இதோ பார் மேரி; உன்னிடமுள்ள குறைகள்

எனக்குத் தெரியும். பளிச்சுப் பளிச்சென்று உனக்குக் கோபம் வரும் என்பது உண்மைதான். உன்னுடைய வேடிக்கைப் பேச்சு என்னைச் சில சமயம் வேதனைப்படுத்தியிருக்கிறது என்பதையும் நான் மறுக்கவில்லை. ஆனால் நீ ஒருபோதும் என்னை ஏமாற்றக் கூடியவளல்ல என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்."

"ஸாண்டி! **டிரான்ஸில்வேனியா** சர்வகலாசாலையில் பெண்களுக்கு இடமளிக்கும் வழக்கமில்லை என்று அவர்கள் கூறிவிட்டது எனக்கு ரோஷத்தையும், கோபத்தையும் உண்டாக்கிற்று. அதற்காகவே அங்கே படிக்க வேண்டிய கல்வியை நான் வெளியேயிருந்து படித்துப் பூர்த்தி செய்தேன். உன்னை நான் அடிக்கடி சந்தித்து வந்ததன் ரகசியம் இதுதான் என்பதை நீ அறிந்திருந்தால் என்மீது இத்தனை அக்கறை காட்டியிருக்கமாட்டாய்."

"எனக்கு அது முன்பே தெரியும் மேரி!"

அவள் நம்பிக்கையற்றவளாக அவனை வெறித்துப் பார்த்தாள். பிறகு, "உனக்கு அது தெரிந்திருக்கவே முடியாது. எப்படி முடியும்? நான் அதை யாரிடமும் கூறியதே இல்லையே! இன்னும் கொஞ்சம் போனால், இந்த ஊரில் உள்ளவர்கள் எல்லோருக்குமே இது தெரியுமென்று நீ சொல்லுவாய்போலிருக்கிறதே!" என்றாள்.

"அப்படியல்ல மேரி; எனக்கு சூசகமாகப் பட்டு விட்டது; இல்லாவிட்டால் நான் உனக்கு அத்தனை உதவி செய்திருப்பேனா?"

அவளுடைய முகம் தளர்ந்து போயிற்று; தோள்கள் தொய்வுற்றன.

"அட கடவுளே! நான் மிகவும் கெட்டிக்காரியாக நடந்துகொண்டுவிட்டதாக அல்லவா எண்ணிக்கொண்டிருந்தேன்?" என்றாள் அவள்.

ஸாண்டி, இதை ஒரு பெரிய விஷயமாகவே மதிக்கவில்லை. அவன் அவளுடைய முகத்தைத் தன் இரு கைகளிலும் தாங்கிக்கொண்டு, "மேரி! நீ எப்பொழுதுமே உல்லாசத்தை விரும்புபவள்; உல்லாசம் இல்லாத இடத்தில் அதை எப்படியாவது வரவழைத்து விடுகிறாய். எனக்கு உன்னுடைய அந்தப் போக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. ஏனென்றால், நான் சிறிது உல்லாசம் குறைந்தவன். என்னிடம் அதை யாராவது கிளப்பிவிட வேண்டியிருக்கிறது."

"நான் விரும்புவதும் அதுதான், ஸாண்டி. என்னிடங் கூட உல்லாசத்தை வேறு யாராவது தான் கிளப்பி விட வேண்டும்!" என்று அவள் எண்ணிக்கொண்டாள்.

''உனக்கு லெக்ஸிங்டனை விட்டுவரவேண்டுமே என்று தோன்றினால் அது உன் குற்றமாகாது. அது, குன்றுகள் சூழ்ந்த இந்த அழகிய பிரதேசத்தின் குற்றந்தான்'' என்று ஸாண்டி சிறிது விசனத்துடன் தொடர்ந்து கூறினான்.

ஆனால், விட்டுப் பிரிய மனசுவராத அளவுக்கு அவளை லெக்ஸிங்டன் நகரம் கவர்ந்து இருந்ததா? ''மேற்கத்திய ஏதென்ஸ்'' என்ற புகழை அது பெற்றிருந்ததில் அவள் பெருமையே அடைந்திருந்தாள். அதன் சிறந்த சர்வ கலாசாலை, நூல் நிலையம், பள்ளிக்கூடங்கள், புத்தகக் கடைகள், விவாத சபைகள், நாடக அரங்குகள், சங்கீத சபைகள் இவையெல்லாம் அவளைக் கவர்ந்துதானிருந்தன. தவிர, அந்த நகரம், மாகாணத்தின் சமூக வளர்ச்சிக்கும், நாகரிக வளர்ச்சிக்கும் கேந்திரமாக விளங்கிவந்தது காரணமாக, முக்கியமான அரசியல் வட்டாரமாகவும் விளங்கி வந்தது. இதுவும் அவளுக்குப் பெருமை அளித்திருந்தது. அதன் வீதிகள் எல்லாம் சுக்காங்கற்கள் பாவப்பட்டிருந்தன. இரு சாரியிலும் மரங்கள் நிழல் தந்து கொண்டிருந்தன. எப்பொழுதும் அந்த வீதிகளில் கோச்சுவண்டிகளும், இதர வண்டிகளும் நெரிபடும். சுத்தம் என்றால் அவ்வளவு சுத்தமாக இருக்கும். வீடுகள் பெரிதாகவும், சுற்றிலும் மரங்கள், பூந்தோட்டங்கள் கொண்டதாகவும் இருக்கும். நியூயார்க், போஸ்டன், பிலடெல்பியா போன்ற நகரங்களிலிருந்து வருகிறவர்கள் கூட லெக்ஸிங்டன் அமைப்பு, தோற்றம், சவுகரியம் இவற்றில் தங்கள் நகரங்களுக்கு இணையாக விளங்குகிறதென்று கூறியிருக்கிறார்கள். ''பிறந்த இடத்தில் வேரூன்றி விட்டாலும், நான் என் வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் வேறு இடத்தைத்தானே நாடவேண்டும்? என்ன விசித்திரம்!'' என்று மேரி நினைத்துக்கொண்டாள்.

அவர்கள் இருவரும் இவ்வாறு மௌனமாக நின்று கொண்டிருந்தபோது, வீதியில் சங்கிலிகள் குலுங்கும் சப்தமும், லேசான முனகலும் கேட்டன. வெளியே அடிமைகளின் கும்பல் ஒன்று போய்க்கொண்டிருந்தது. அவர்கள் ஜோடி ஜோடியாகக் கைவிலங்கு பூட்டப்பட்டிருந்தனர். எல்லோரையும் இணைத்துக்கொண்டு ஒரு சங்கிலி முதல் மனிதனிலிருந்து கடைசி மனிதன்வரைச் சென்றது. பெண் அடிமைகளின் கைகளும் அவ்வாறுதான் விலங்கிடப்பட்டிருந்தன. அவர்களில் சிலர் தூங்கும் குழந்தைகளைத் தோளில் சுமந்துகொண்டிருந்தனர், அந்த அடிமைகள் பல மைல் தூரம் நடந்து வந்திருக்கவேண்டும் என்பதை அவர்கள் நடையில் பிரதிபலித்த சோர்வு காட்டிற்று. இனி அவர்கள் லெக்ஸிங்டனிலுள்ள அடிமைகளுக்கான சிறையில் அடைத்துவைக்கப்படுவார்கள். ''மெயின்'' தெருவிலுள்ள இந்த வீட்டுக்குக் குடிவந்தது

தொட்டு, கடந்த ஆறு வருஷங்களாக அவள் தினசரி கண்டு வந்த பயங்கரக் காட்சி இது. இரக்க சித்தம்கொண்ட மேரி, தப்பி ஓடிவரும் அடிமைகளுக்கு உணவும், புகலும் அளித்து வந்தாள். இது அவள் பெற்றோருக்குத் தெரியவே தெரியாது. அவளுடைய தந்தைக்கு இது தெரிந்திருந்தால், நிச்சயமாக தடை செய்தே இருப்பார். ஆகையால் அவளும் மேமி ஸாலியும் இதை ரகசியமாகவே நடத்திவந்தனர்.

அவள் ஸாண்டியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்: ''இல்லை ஸாண்டி; என்னை லெக்ஸிங்டனிலிருந்து கிளப்பக்கூடிய சக்தி ஒன்று உண்டானால் நான் கிளம்பித் தானே ஆகவேண்டும்?''

''நான் அந்த சக்தியில்லையா மேரி?'' என்று ஏமாற்றத்துடன் கேட்டான் ஸாண்டி.

மேரி அவன் காதருகில் குனிந்து உள்ளம் தடுமாறுமெதுவான குரலில் சொன்னாள்:

''நாம் நெருங்கிய நண்பர்கள்தாம், ஸாண்டி! ஆனால், நட்புக்கு அப்பாற்பட்டதல்லவா காதல்?''

4

காலை எட்டு மணிக்கு மேரி தூக்கம் கலைந்து விழித்தாள். படுக்கையிலிருந்து துள்ளி எழுந்து அறை ஜன்னல்களின் திரைச் சீலைகளை இரு பக்கங்களிலும் ஒதுக்கினாள். வெளியே வானம் மப்பு மந்தாரமின்றித் தெளிவாக இருந்தது. மேரி, முகத்தையும் கைகளையும் கழுவிக்கொண்டு வந்து தலையைச் சீவி விட்டுக்கொண்டபின் ஆடை மாற்றிக்கொள்ளும்பொழுது தன் உடலை ஒரு தடவை எதிரே இருந்த மேஜைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டாள். டாடு குடும்பத்தில் எல்லோருக்கும் ஒரு குறிப்பிட்ட வயசுக்குப் பிறகு உடல் பருக்க ஆரம்பித்துவிடும். தன்னுடைய கொடி போன்ற உடல் பருத்துவிடாதிருப்பதற்காக மேரி, மிஸியர் கிரான் கடை கேக்குகளையும், சாலி மேமி தயாரிக்கும் இனிப்புப் பட்சணங்களையும் அடிக்கடி ஒதுக்கிவந்தாள். சிறிது குனிந்து அவள் தன் முகத்தையும் கண்ணாடியில் பார்த்துக்கொண்டாள். புளூகிராஸிலுள்ள வாலிபர்கள், இதயத்தைப்போன்ற வடிவமுடைய முகந்தான் கவர்ச்சிகரமானது என்று சொல்லுவார்கள். மேரியின் முகம் அம்மாதிரி வடிவமுடையதல்ல. ஆனால் அம்முகத்தின் அழகிய செந்நிறமும், பெரிய நீலநிறக்கண்களும்

நீண்ட பட்டு போன்ற கண்ணிமை ரோமங்களும் அவளுக்கு ஒரு தனி அழகு கொடுக்கத்தான் செய்தன.

மேரி தனது நாடாப் பெட்டியிலிருந்து தங்க நிற நாடா ஒன்றை எடுத்து நெற்றியில் புரளும் ரோமக்கத்தையை இழுத்துக் கட்டிக்கொண்டாள்.

அந்த அறை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பு அவள் **ஸ்பிரிங்ஃபீல்டிலிருந்த** தன் சகோதரி எலிஸபெத்துடன் சில நாட்கள் இருந்துவிட்டுத் திரும்பிய போது இந்த அறையை அவளுக்காக ஒதுக்கி 'உன் விருப்பத்திற்கேற்றபடி அறையை அலங்கரித்துக் கொள்' என்று கூறிவிட்டார் மேரியின் தந்தை. மேரி அதைப் பிரமாதமாக அலங்கரித்தாள். அதையே படுக்கை அறையாகவும், இதர உபயோகங்களுக்கான அறையாகவும் அவள் பயன்படுத்திவந்தாள். அறையின் அலங்காரத்தைப் பார்த்து விட்டு, மேரியின் மாற்றுந்தாய் பெட்டி ''அறைக்கு இத்தனை அலங்காரம் அதிகந்தான்'' என்று கூறியிருந்தாள். மேரியும், அவள் தந்தையும் இதை ஒப்புக்கொண்டாலும், அறை என்னவோ அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது.

மேரி முன்கூடத்து ஜன்னல் வழியே வெளியே தெருவைப் பார்த்தாள். வீதியின் எதிர் சாரியில் மாக்ஸ்வெல் என்பவரின் வீட்டுக்கு முன்னால் டாக்டர் வார்ஃபீல்டின் சிறிய கோச்சு வண்டி நின்றுகொண்டிருந்தது. 'மாக்ஸ்வெல்லின் மனைவிக்கு உடல் நலமில்லையோ, என்னவோ?' என்று அவள் எண்ணிக்கொண்டாள். அதோடு அவளுடைய மனசு சட்டென்று சில வருடங்கள் பின்னோக்கிச் சென்றது. அப்பொழுது அவளுக்கு ஏழு வயதுகூட ஆகவில்லை. ஒருநாள் அவள் தன் தந்தையுடன் பௌலோ பூங்காவில் நடந்த ஒரு விருந்துக்குப் போயிருந்தாள். விருந்துக்கு முன்பு, ஹென்ரி கிளேயின் பிரசங்கம் ஒன்று நடந்தது. அவருடைய பேச்சில் ஒரு வார்த்தை கூட அவ்வயசில் அவளுக்குப் புரியவில்லை. ஆயினும் அவருடைய குரலும், அவர் பேசிய தோரணையும் அவளுக்குப் பிடித்திருந்தன. விருந்து ஆரம்பிக்கு முன்பே அவர்கள் வீடுதிரும்ப வேண்டியதாயிற்று. தங்கள் வீட்டு வாசலில் டாக்டர் வார்ஃபீல்டு, டாக்டர் டட்லீ இருவரின் ஒற்றைக் குதிரைக் கோச்சுவண்டிகள் நின்றுகொண்டிருப்பதை அவள் கண்டாள். தன் தாய்க்கு அப்பொழுது பிரசவகாலம் என்பது மேரிக்குத் தெரியும். ஆனால், மேமி ஸாலியல்லவா அம்மாவுக்குப் பிரசவம் பார்ப்பது வழக்கம்.

அன்றிரவு அவள் தனது பாட்டியின் வீட்டில் படுத்துக் கொள்ள அழைத்துச்செல்லப்பட்டாள். மறுநாள் காலையில்

மேரி விழித்துக்கொண்டதும் வீட்டில் அழுகுரல் கேட்டது. அவள் ஜன்னலுக்கு ஓடி வெளியே பார்த்தாள். பின்கட்டில், துணிகள் உலர்த்தும் கொடியில், தலையணை உறைகள் போடப் பட்டிருந்தன. அப்படியென்றால் வீட்டில் யாரோ இறந்து போயிருப்பதாக அர்த்தம். ஒருவேளை அம்மாவுக்குப் பிறந்த குழந்தை தான் இறந்திருக்கவேண்டும்; தனக்கு இரண்டு வயசாக இருந்தபோது, ராபர்ட் என்று ஒரு தம்பி பிறந்து சில நாட்களில் இறந்துபோனதுபோல், இக்குழந்தையும் இறந்திருக்கும் என்று அவள் நினைத்துக்கொண்டாள். சிறிது நேரத்துக்குப் பிறகு அவள் தன் வீட்டுக்குப் போனபோது, அத்தை மேரியா, பட்லரிடம், ''நெல்ஸன் சீக்கிரம் வண்டி யைப் பூட்டிக்கொண்டு போய், இழவுக் கார்டுகளை எல்லோ ருக்கும் கொடுத்து விட்டு வா'' என்று கூறிக்கொண்டிருந் ததைக் கேட்டாள்.

இழவுக் கார்டு என்றால் என்ன என்பது மேரிக்கு விளங்க வில்லை. அவள் முன்ஹாலில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த கார்டுகளில் ஒன்றை எடுத்துப் பார்த்தாள். கறுப்புச்சுற்றுக் கோடு போடப்பட்டிருந்த அந்தக் கார்டில்—

''என் மனைவி எலிஸா காலமாகி விட்ட செய்தியைத் துயரத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்று மாலை நான்கு மணிக்குச் சவ ஊர்வலம், ''ஷார்ட்'' தெரு விலுள்ள என் வீட்டிலிருந்து புறப்படும். தாங்களும், தங்கள் குடும்பத்தினரும் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

ராபர்ட் எஸ். டாடு

ஜூலை 6, 1825''

என்று எழுதப்பட்டிருந்ததை மேரி படித்தாள்.

அன்றிலிருந்து, குறிப்பாக அவளது தந்தை மறுமணம் செய்துகொண்டதிலிருந்து, வீட்டில் எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன?

மேரியின் சிந்தனை கலைந்தது. டாக்டர், ஸ்ரீமதி மாக்ஸ்வெல்லின் வீட்டிலிருந்து வெளியே வந்தார். அதோடு தங்கள் வீட்டு பட்லர் நெல்ஸனும் ஒரு தள்ளு வண்டியில், கறிகாய், மாமிசம், பழங்கள் முதலியவைகளுடன் வீதியில் வந்துகொண்டிருந்ததை அவள் கண்டாள். மேரி இரண்டு எட்டில் ஹாலைக் கடந்து, குழந்தைகள் படுத்துறங்கும்

அறைக்குச் சென்று, தூங்கிக்கொண்டிருந்த தன் தங்கை எமிலியை எழுப்பினாள். எமிலிக்கு இரண்டரை வயசு ஆகிறது. அந்தக் குடும்பத்திலேயே மிக அழகானவள் அவள். தனது மாற்றாந்தாயின் குழந்தைகளிடையே எமிலியைத் தான் மேரிக்கு மிகவும் பிடித்திருந்தது. அவளும் மேரியுடன் ஒட்டுறவு கொண்டே பழகினாள். மேரி, எமிலியின் முகம், கை கால்களைக் கழுவிவிட்டு அவளுடைய செந்நிறத் தலையை அழகுபடுத்தினாள். பிறகு அவளைத் தோளில் தூக்கிக் கொண்டு மாடியிலிருந்து இறங்கி, சாப்பிடும் அறைக்குச் சென்றாள்.

அவள் தந்தை அதற்குள் அலுவலகத்துக்குப் போய் விட்டார். சிறிய தாயார் பெட்ஸி இன்னும் மாடியிலிருந்து இறங்கி வரவில்லை. சாப்பாட்டு அறையில் அவளுடைய தம்பி - தங்கைகள் காலைச் சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். சிறிய தாயாரின் குழந்தைகளில் மார்கரெட்தான் மூத்தவள்; அவளுக்குப் பத்துவயசாகிறது. அடுத்தாற்போல் ஸாமுவேல்; அவனுக்கு ஒன்பது வயசு. ஸாமுவேலுக்கு அடுத்தவன் டேவிட்; அவன் ஏழு வயசானவன். டேவிட்டுக்கு இளையவள் மார்த்தா; அவளுக்கு ஆறு வயசு. ஆன், காலைச் சிற்றுண்டி நேரத்துக்கு எழுந்து வருவதே வழக்கமில்லை. மேரியின் அம்மாவை விழுங்கிக் கொண்டுபிறந்தானே, அந்த உடன் பிறந்த சகோதரன் ஜார்ஜுக்கு இப்பொழுது பதினெட்டு வயதாகிறது. அவனுடைய போக்கே அலாதி. அவனுக்குச் சிறிது தத்துவாய் உண்டு; அதனால்தானோ, என்னவோ, அவன் யாரிடமும் கலகலப்பாகப் பழகமாட்டான். மற்றவர்களோடு சேர்ந்து சாப்பிடாமல், சமையலறையில் எங்காவது ஒரு மூலையில் தனியாக உட்கார்ந்து சாப்பிட்டு விட்டுப் போய்விடுவான்.

குழந்தைகள் மேரியை மிகுந்த குதூகலத்தோடு வரவேற்றனர். முன்னாள் அவள் நடத்திய விருந்தைப் பற்றியும், அதற்காக அவள் செய்துகொண்டிருந்த அலங்காரங்களைப் பற்றியும், குழந்தைகளுக்கே உரித்தான குறும்புத் தனத்துடன் பேசிக் களித்தனர்.

மேரி, காலை உணவை அருந்திக் கொண்டே அக் குழந்தைகளின் வேடிக்கைப் பேச்சிலும் பங்கெடுத்துக் கொண்டாள். அவளுக்கும் அவளுடைய மாற்றாந் தாய்க்கும் என்னதான் பிடிக்காமல் இருந்தாலும், தன் சொந்தத் தம்பி-தங்கைகளை விட, இக்குழந்தைகளிடந்தான் மேரிக்கு வாஞ்சை அதிகம். அவளுடைய சொந்தச் சகோதர-சகோதரியரில் எலிஸபெத்திடம் மாத்திரந்தான் அவளுக்கு அதிக ஒட்டுறவு உண்டு. தன் சகோதரர்களுடன்

ஒட்டுறவோடு பழக வேண்டும் என்ற ஆவல் அவளுக்கு இருந்தபோதிலும், அவர்கள் அதற்கு இடமளிக்கவில்லை. லெவி எப்பொழுதும் குடித்துக்கொண்டு அலைந்து கொண்டிருந்தான். ஜார்ஜோ ஆளைக் கண்டதும், தீக்கோழியைப் போல் எங்கேயாவது தலையை மறைத்துக் கொண்டு விடுவான். ஆகையால் அவள் தனது சகோதர பாசத்தை மாற்றுந்தாயின் குழந்தைகளான ஸாமுவேலிடமும், டேவிட்டிடமும் செலுத்தி வந்தாள். குதிரைச் சவாரி செய்துகொண்டு அவர்களை உலாவ அழைத்துச் செல்லுவாள்; இரவு நேரத்தில் அவர்களுக்குக் கதைகளைப் படித்துக்காட்டுவாள்.

சாப்பிட்டுக்கொண்டிருந்த மேரியின் செவிகளில் அவளது மாற்றுந்தாயின் மெல்லிய காலடி ஓசை கேட்டது. ''இது காலை உணவு அருந்த வரும் ஒருத்தியின் காலடி ஓசையல்ல; நேற்று என்ன நடந்தது என்பதை விசாரிக்க வருபவளின் காலடிச் சப்தம்'' என்று மேரி தனக்குள்ளே கூறிக்கொண்டாள்.

பெட்ஸி டாடு சாப்பாட்டுக்கு அறைக்குள்ளே வந்தாள். அவள் ஊதா நிற வெல்வட் கவுனை அணிந்து கொண்டிருந்தாள். தன் மாற்றுந்தாயின் சரியான வயசு என்ன என்பதை மேரியால் நிர்ணயிக்க முடிந்ததேயில்லை. அவளுக்குச் சுமாராக முப்பத்தெட்டு வயசு இருக்கவேண்டும் என்பது மேரியின் அபிப்பிராயம். பெட்ஸி, சிகையை நடுவில் வகிடு எடுத்து முன் பக்கமாகச் சீவி, இரு புறங்களிலும் அலை—அலையாக இருக்கும்படி முடித்துக் கொண்டிருந்தாள். அவள் அழகானவள் என்று மேரி கருதியதே கிடையாது. அவளுடைய மூக்கு மிகவும் நீளமாக, எலும்பு துருத்திக் கொண்டிருக்கும். மெல்லிய, துடிக்கும் வாய். இருந்தாலும், விவேகத்தைக் காட்டும் அவளுடைய முகம் கவர்ச்சிகரமாகவே இருக்கும். நேர்மையான சுபாவமுடைய பெட்ஸி, தனக்கு ஆறு குழந்தைகள் இருந்தபோதிலும், தனது மூத்தாளின் ஆறு குழந்தைகளுக்கும் தன் கடமையைச் செய்யக் கொஞ்சமும் தவறியது கிடையாது.

பெட்ஸி ஹம்ப்ரிஸ் கல்வியறிவு மிக்கவள். அரசியல் விஷயங்களை நன்கு அறிந்தவள். அவளுடைய தந்தையின் சகோதர்களுள் இருவர் அமெரிக்க சட்டசபையில் அங்கத்தினர்கள். மேரியின் பிறந்த நாளுக்கு, அவள் சிறந்த கவிதைப் புத்தகங்களைத்தான் பரிசளிப்பாள். கிறிஸ்துமஸ்ஸின்போது, வெகு கஷ்டப்பட்டு, இரண்டு-மூன்று மாதங்களுக்கு முன்பே லண்டனுக்கும் பாரிஸுக்கும் கடிதமெழுதி, பிரயாணக் கட்டுரைப் புத்தகங்களை வரவழைத்துக் கொடுப்பாள். ராபர்ட் பர்ன்ஸ் எழுதிய ''இனிய கவிதைத்திரட்டு'', ஸர் வால்டர் ஸ்காட் எழுதிய ''ஸ்காட்

லண்டின் சரித்திரம்,'' மற்றும் இங்கிலாந்து, அயர்லாந்து, ஃபிரான்ஸ் பற்றிய புத்தகங்கள், மாடம் பிஸெவினேயின் '' கடிதங்கள் '', டிரெஸ்டன் எழுதிய '' வசதியான பிரயாணக் கூலி '' இம்மாதிரி அவள் பரிசளித்திருந்த சிறந்த புத்தகங்கள் எவ்வளவோ, மேரியின் புத்தக அலமாரியை நிறைத்திருந்தன.

பெட்ஸி அறைக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக '' ஸாண்டியை நீ நிராகரித்து விட்டாயாமே ?'' என்று மேரியிடம் கேட்டாள்.

'' ஆமாம் அம்மா'' என்றாள் மேரி.

'' எனக்கு இது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது மேரி; ஸாண்டி எவ்வளவு உயர்ந்த குடும்பத்துப் பிள்ளை, தெரியுமா''

'' அதற்காக என் மனசு விரும்பாத ஒருவரை மணந்து கொள்ள முடியுமா? ''

'' இல்லை; நீ வேண்டுமென்றே உன் மனசிலிருந்து காதலை விரட்டிக்கொண்டிருக்கிறாய். ''

'' அதெப்படி முடியும் அம்மா? ''

'' பின் நீ இன்னும் பள்ளிகூடத்துப் பெண்ணைகவே இருப்பாயா என்ன? உன்னை ஒரு தேவ புருஷன் மணம் செய்து கொண்டு போவான் என்று நினைத்துக்கொண்டிருக்கிறாயா?''

'' எனக்கு அம்மாதிரி முட்டாள்தனமான எண்ணம் ஒன்றும் இல்லை. இப்பொழுதே கல்யாணத்துக்கு என்ன அவசரம் என்றிருக்கிறேன்; இருக்கக்கூடாதா?''

ஸ்ரீமதி டாடுக்கு சட்டென்று கோபம் வந்தது. ஆனால் அவள் தன்னை அடக்கிக்கொண்டாள்.

'' கெட்டிக்காரத்தனமான கேள்விதான். ஆமாம்; நீ ஏன் அவசரப்படவேண்டும்? இது உன் வீடு; உன்னை இங்கிருந்து விரட்ட யாரால் முடியும்?'' என்றாள் அவள்.

மேரிக்குத் தனது மாற்றாந்தாயிடம் இரக்கம் உண்டாயிற்று. கடந்த ஆறு வருஷங்களாக பெட்ஸி இக்குடும்பத்தில் ஒருத்தியாக, மேரியின் தாய் உறங்கிய படுக்கையில் உறங்கி வந்திருக்கிறாள். ஆனால் அது அவளுக்கு சுகபோக வாழ்க்கையாகவா இருந்தது? அதிலும் வெஸ்ட் ஷார்ட் தெருவில் பாட்டி பார்க்கரின் வீட்டுக்கு அடுத்த வீட்டில் வசிக்க நேர்ந்த அந்த வருஷங்கள் பெட்ஸியின் வாழ்விலேயே மிக மோசமானவையாக இருந்திருக்க வேண்டும். ஆம்; தன் மகளின் போக பாக்கியங்களை இவள் அநுபவிக்கிறாளே என்ற பொறுமையால், பாட்டி பெட்ஸியைப் படுத்திய பாடு கொஞ்ச நஞ்சமா? கடைசியில் பெட்ஸி எப்படியோ தன்

கணவரைத் தூண்டி இவ்வீட்டை வாங்கச்செய்தாள். இதை வாங்குவதற்கும், புதுப்பிப்பதற்கும், ராபர்ட் டாடு தமது மூத்த மனைவியின் நிலங்களில் சிலவற்றை விற்கவேண்டியிருந்தது. மேரி தன் மாற்றுந்தாயின் நிலைக்கு இரங்கியவளாக, அவளுடைய கையைப் பற்றிக்கொண்டாள். அதே சமயம் ஸ்ரீமதி டாடு மேஜை மீது கிடந்த ''அப்ஸர்வர்'' பத்திரிகையை எடுத்து, அதில் வெளியாகியிருந்த ஒரு விளம்பரத்தை உரக்கப் படித்தாள்.

''இதனால் லெக்னிங்டன் மகாஜனங்களுக்குத் தாழ்மையுடன் தெரிவிப்பது என்ன வென்றால், மேரிலாண்டைச் சேர்ந்த **பால்டிமோர்** வாசியான ஸ்ரீமதி டி பார்தோல்ட்ஸ் என்ற நான், வரும் மே மாதம் முதல் திங்கட்கிழமையன்று, முன்பு, பூஜ்ய ஜே. வார்டு நடத்திவந்த பள்ளிக்கூடத்தில், பெண்களுக்கான கல்விச்சாலை ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளேன். . . .''

இதைப் படித்து விட்டு பெட்ஸி சொன்னாள்: ''டாக்டர் வார்டு, தமது பள்ளியை மூடிவிட்டார்போலிருக்கிறதே? எனக்கு ரொம்ப சந்தோஷம் மேரி! உன் வழியிலிருந்த கடைசித்தடை நீங்கிவிட்டது!''.

''நீ என்ன சொல்லுகிறாய் அம்மா?'' என்று மேரி கேட்டாள்.

''ஆமாம் மேரி; உன் உள்ளம் வாலிபர்களிடம் ஈடுபடாமல் செய்துகொண்டிருக்கவில்லையா அவர்?''

''ஆனால் எனக்கு இருபது வயதுதானே ஆகிறது அம்மா?'' என்றாள் மேரி. அவள் குரல் உயர்ந்து ஒலித்தது. அதை அடக்க முயன்றுகொண்டே அவள் தொடர்ந்து சொன்னாள்: ''என்றாவது ஒரு நாள் என் மனதிலும் காதல் பிறக்கத்தான் பிறக்கும். அந்த நாளை நான் ஆவலோடு வரவேற்பேன்!''

5

மேரி, மஞ்சள் நிற ஆர்கண்டி கவுனை அணிந்து கொண்டாள். பிறகு அலமாரியிலிருந்து லினன் கையுறைகளை எடுத்து மாட்டிக்கொண்டாள். மஞ்சள் நிற ரிப்பன் கட்டிய தொப்பியையும் வைத்துக்கொண்டு, மாணவிக்குரிய தோரணையில் வீட்டை விட்டுக் கிளம்பினாள். வர்ணங்கள், வார்னிஷ்கள், வாசனைத் திரவியங்கள் முதலியன வியாபாரம்

செய்யும் பி. ஜி. ஸ்மித்தின் கடையைத் தாண்டி நடந்தாள். எதிரே காபி, சர்க்கரை முதலியன விற்கும் மக்ளியர் அண்டு ஓ கானல் என்ற கடை இருந்தது. சூ அண்டு கம்பெனி வாசலில் அவள் சிறிது நின்று அங்குத் தொங்க விடப்பட்டிருந்த புது மாதிரியான துணிகளைப் பார்வையிட்டாள்.

பிறகு 'மெயின்' தெருவைத் தாண்டி, 'நார்த்மில்' தெருவுக்குப் போகும் குன்றுபோல் ஏற்றமான ரஸ்தா வழியே நடக்கலானாள்.

டாக்டர் வார்டின் கல்விக் கழகம், மார்க்கெட் தெருவும் இரண்டாம் நம்பர் தெருவும் கூடும் முனையில், ஒரு பெரிய கட்டடத்தில் இருந்தது. மேரி அக்கட்டடத்துக்குள்ளே நுழைந்து மத்திய ஹால் வழியே நடந்தாள். ஹாலில் ஒருவர்கூடக் காணப்படவில்லை. அதன் இரு புறங்களிலும் வரிசையாக வகுப்பு அறைகள் இருந்தன. தனது எட்டாவது வயதிலிருந்து பதினைந்தாவது வயதில் பள்ளிப்படிப்பை முடிக்கும் வரை, மேரி அந்த அறைகளில் கழித்திருக்கிறாள். லெக்ஸிங்டனிலுள்ள, பெண்கள் ஸெமினரி, 'க்ரீன் ஹில்ஸ் போர்டிங் ஸ்கூல்' போன்ற பிரசித்தி பெற்ற பெண் பள்ளிக்கூடங்கள், ''மாணவிகளின் உள்ளத்தில் சீரிய கருத்துக்களும், சிறந்த உணர்ச்சிகளும், நல்ல சுபாவங்களும் படிய எல்லாவித முயற்சிகளும் செய்யப்படும்'' என்று விளம்பரப் படுத்திவந்தன. ஆனால் டாக்டர் வார்டின் கல்விக் கழகத்திலோ இளவயதுடைய ஆண்-பெண்களை ஒன்றாக உட்கார்த்திக் கல்விபோதிப்பது பரீட்சிக்கப்பட்டு வந்தது. இதை லெக்ஸிங்டனிலுள்ள அநேகம் பெற்றோர் விரும்பவில்லை. ஆனால் ராபர்ட் டாடு, அப்படிப் படிப்பதால் மேரிக்கு இயல்பான கல்வி அறிவு விருத்தி அடையும் என்று, அவளை டாக்டர் வார்டின் கல்விக் கழகத்தில் சேர்த்திருந்தார்.

பள்ளிக்கூடம் உள்ள நாட்களில் மேரி காலையில் ஐந்து மணிக்கே எழுந்திருப்பாள். முழுகுவத்தி வெளிச்சத்தில் அலங்கரித்துக்கொள்ளுவாள். பிறகு காலை உணவுக்கு முந்தைய வகுப்புக்காக, பனி உறைந்துள்ள தெருக்கள் வழியே பள்ளிக்கு நடந்து செல்லுவாள். முதல் வருஷத்துப் படிப்பு முடிந்ததும், பல பெற்றோர்கள் ''டாக்டர் வார்டின் இந்தப் பரீட்சார்த்தக் கல்விமுறை, மாணவிகளைப் பெண்களுக்குரிய இயல்புகளை இழக்கச் செய்துவிடும்'' என்று தங்கள் பெண்களை அப்பள்ளிக்கு அனுப்பாமல் நிறுத்திக்கொண்டு விட்டனர்.

லெக்ஸிங்டனில், இம்மாதிரிப் பெண்களும் ஆண்களும் சேர்ந்து படிப்பது கண்ணியக்குறைவான செயலென்று கருதப்

பட்டு வந்தது. ஒரு பெண் கண்ணியக்குறைவானவள் என்று ஒரு தடவை பெயரெடுத்து விட்டால், அவளுக்குக் கல்யாணம். குடும்பம் போன்றவை கிட்டுவது மிகவும் கஷ்டம்.

டாக்டர் வார்டு, மேரியின் உபயோகத்துக்காக, கல்விக் கழகக் கட்டடத்தில் ஒரு சிறிய அறை கொடுத்திருந்தார். அந்த அறை மாடியில் இருந்தது. மேரி நேரே மாடிக்குச் சென்று, தன் அறையின் ஜன்னலைத் திறந்து போட்டாள். வசந்த காலத்து இதமான காற்று அறைக்குள்ளே புகுந்தது. அறையில் ஒரு மேஜையும், ஒரு நாற்காலியும், சுழலும் புத்தக ஸ்டாண்டு ஒன்றும் இருந்தன. புத்தக ஸ்டாண்டைச் சுழற்றி விட்டுக் கொண்டே மேரி, தான் அங்கு படித்த பழைய நாட்களை நினைத்துப் பார்த்துக்கொண்டாள். அப்பொழுது ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மாணவியாக வந்து விட வேண்டு மென்று அவள் பாடுபட்டுப் படித்தாள். ஆனல் ஒவ்வொரு வருஷமும் வேறு யாராவது ஒரு பையன் முதல்வனாக வந்துவிடுவான். சிலசமயம் அவள் வகுப்பில் மூன்றாவது அல்லது நான்காவதாக இருக்கும்படிக் கூட ஆகிவிடும். அந்தப் பழைய நாட்களை அவள் உற்சாகத்தோடு நினைத்துப் பார்த்துக்கொண்டதற்குக் காரணம், அப்பொழுது அவள் போட்டி போட்டுக்கொண்டு படித்தது மாத்திரமல்ல; அவளுடைய வளரும் அறிவுக்கு மேம்பட்ட பெரிய பெரிய விஷயங்களை டாக்டர் வார்டு அவள் உள்ளத்தில் புகுத்தியதுமேயாகும்.

மேரி வார்டின் பள்ளியில் படிப்பை முடித்துவிட்டாள். அந்த வருஷந்தான், அவள் தந்தை மெயின் தெருவில், அவர்கள் இப்பொழுது வசித்துவரும் வீட்டை வாங்கினர். அதே வருஷத்தில்தான் மேரியின் மூத்த சகோதரி எலிஸபெத், நினியன் டபிள்யூ. எட்வர்ட்ஸ் என்பவனை மணந்து கொண்டாள். நினியன் எட்வர்ட்ஸ் இல்லினாய்ஸ் மாகாணத்தின் முதல் பிரதேசக் கவர்னராக இருந்தவரின் மகன். கல்யாணம் ஆன சமயத்தில் அவன் டிரான்ஸில்வேனியாவில் சட்ட மாணவனாக இருந்தான். எலிஸபெத்தைப் பிரிவது மேரிக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கும் என்பதை ராபர்ட்டாடு அறிவார். அப்பிரிவு அவள் உள்ளத்தைப் பாதித்து விடக்கூடாது என்பதற்காக அவர் அவளை உடனடியாக, மாடம் விக்டோரி ஷார்லொட் லெக்ளேர் மெண்டல் என்ற அம்மாள் நடத்திவந்த பிரத்தியேக போர்டிங் பள்ளியில் சேர்த்துவிட்டார். ஹென்ரி கிளேயின் ஆஷ்லாண்ட் மாளிகைக்கு எதிரில் இருந்தது இந்தப் போர்டிங் பள்ளி. நெல்ஸன், மேரியின் பெட்டி படுக்கை முதலியவற்றுடன் அவளைக் கோச்சுவண்டியில் கூட்டிவந்து, இந்தப் பள்ளிக் கூடத்தில் விட்டுவிட்டுப் போனன்.

மிஸியர் அகஸ்டஸ் வால்டெமோர் மெண்டலும், அவரது மனைவியும் ஃபிரெஞ்சுப் புரட்சியின்போது ஃபிரான்ஸைவிட்டு அகதிகளாக வெளியேறியவர்கள். மிஸியர் மெண்டல் ஃபிரெஞ்சு மன்னர் பதினாறுவது லூயியிடம் சரித்திரம் எழுது பவராகப் பணியாற்றியவர். ''தங்களுடைய கவனத்தில் விடப் படும் பெண்கள், நாகரிகத்திலும், நடத்தையிலும் சிறந்தவர் களாக விளங்க எல்லா முயற்சிகளும் செய்யப்படும்'' என்று மெண்டல் தம்பதிகள் தங்கள் பள்ளியைப் பற்றிப் பிரமாத மாக விளம்பரம் செய்துவந்தபோதிலும், மேரிக்கு அங்கே ஃபிரெஞ்சு மொழி, இலக்கியம், ஆங்கில இலக்கியம், வியாசம் முதலியனவும் போதிக்கப்பட்டன. தவிர ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் பியானோ வாசிக்கக் கற்பிக்கப்பட்டது; ஒரு மணி நேரம் நாடக நடிப்புக் கற்பிக்கப்பட்டது. இவ் விரண்டிலும் மேரியை மிகவும் வல்லமை மிக்கவளாக ஆக்கி வந்தனர் மெண்டல் தம்பதிகள். இரவு நேரத்தில் போர் டிங் பள்ளிக்கு வெளியார் எவரையும் அநுமதிப்பது கிடையாது. அப்பொழுது மாடம் மெண்டல் பியானோ வாசிக்க, மிஸியர் மெண்டல் வயலின் இசைக்க, மாணவி களுக்கு மணிக்கணக்கில் பல்வேறு நவீன நடனங்கள் கற்பிக்கப்பட்டு வந்தன.

டாக்டர் வார்டின் பள்ளியில் மேரி பட்ட சிரமமெல்லாம் மெண்டலின் பள்ளியில் சிறந்த பயனை அளித்தது. முதல் வருஷத்தில், வகுப்பில் முதல் மாணவியாகத் தேறினாள் அவள். அடுத்த மூன்று வருஷங்களில், மெண்டலின் பள்ளி யில் நடிக்கப்பட்ட நாடகங்களிலெல்லாம் மேரிக்குத்தான் பிரதான பெண் பாத்திர வேடம் அளிக்கப்பட்டது. மெண்டலின் பள்ளியில் அடிக்கடி மாணவர்கள், அவர்கள் குடும்பத்தினர், மற்றும் நண்பர்கள் கண்டு களிப்பதற்காக, மோலியர், கார்னில், ரஸின் போன்ற பிரபல நாடகாசிரியர் களின் நாடகங்கள் நடிக்கப்படும். அவற்றிலெல்லாம் மிகச் சிறப்பாக நடித்துப் புகழ்பெற்றாள் மேரி.

பத்தொன்பது வயது நிரம்புமுன்பே அவள் மெண்டல் பள்ளிப் படிப்பையும் முடித்துவிட்டாள்; படிப்பிலும், இதரப் பள்ளி நடவடிக்கைகளிலும் சிறந்த மாணவி யெனப் பரிசுகளும் பெற்றாள். ராபர்ட் டாடுக்கு இது மிகவும் சந்தோஷத்தை அளித்தது. அவர் அவளுக்குவிலை உயர்ந்த ஆடை அணிகளை வாங்கிக்கொடுத்ததோடு **ஸ்பிரிங்ஃபீல்டில்** இருக்கும் அவளுடைய சகோதரி எலிஸபெத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வருவதற்குப் பிரயாணத்துக்கும் ஏற்பாடு செய்தார்.

அந்த வருஷ இறுதியில்தான், அவள் டாக்டர் வார்டிடம் சென்று, அவருடைய கல்விக் கழகக் கட்டட மாடியில்,

டிரான்ஸில்வேனியா சர்வகலாசாலைக்கு நேர் எதிரே இருக்கும் அறைகளில் ஒன்றைத் தன் உபயோகத்துக்குத் தரவேண்டும் என்றும், தான் அங்கே, டிரான்ஸில்வேனியா சர்வகலா சாலைப் பாடங்களைப் படிக்க விரும்புவதாகவும் கூறி, அந்த அறையை வாங்கிக்கொண்டாள்.

மாடிப்படிகளில் யாரோ மெதுவாக ஏறிவரும் ஓசை கேட்டது. மேரி திரும்பிப் பார்த்தாள். டாக்டர் வார்டு சந்தோஷத்தோடு உள்ளே வந்து, மேரியின் கைகளைக் குலுக்கிப் பாராட்டினார். அவர் கருநீல ஸூட் அணிந்து கொண்டிருந்தார். டாக்டர் வார்டு எப்பொழுதும் கருநீல ஸூட்டையே அணிவார். ஆடையில் தான் மாறுதல் கிடை யாதே ஒழிய, அவருடைய அறிவுச்சுடர், தினசரி புத்தொளி வீசிப் பிரகாசிக்கும். மாணவர்களின் அறிவை வளர்க்கப் புதுப் புதுக் கருத்துக்களைக் கையாண்டு அவர்களின் உற்சாகத் தைப் பெருக்கிவந்தார் அவர்.

டாக்டர் ஜான் வார்டு, கன்னெக்டிகட்டில் பிறந்தவர். வட கரோலினாவில் மத குருவாகப் பணியாற்றி வந்தபோது அவருடைய உடல் நலம் குன்றிற்று. உடலைத் தேற்றிக் கொள்ளுவதற்காக வார்டு லெக்ஸிங்டனுக்கு வந்தார். டாக்டர் வார்டைப் பார்க்கும்போதெல்லாம் மேரிக்குத் தன் மூதாதையர்களுள் ஒருவரான பூஜ்ய ஜான் டாடு என்பவரின் நினைவு வரும். ஜான் டாடைப்பற்றி அவள் நிறையக் கேள்விப்பட்டிருந்தாள். அவரும் வார்டைப் போல் ஒரு மதகுருதான். அவர் வர்ஜீனியாவில் ஒரு பள்ளிக் கூடத்தை ஏற்படுத்தினார். அதன் புகழ் நாடெங்கும் பரவி, வெகுதூரத்திலிருந்து கூட மாணவர்கள் அங்கே கல்வி கற்க வந்தனர். மேரியின் பாட்டனாரும், அவருடைய மூன்று சகோதரர்களும். அதே பள்ளியில் படித்துத் தேறியவர்கள் தாம். இந்த ஜான் டாடுதான் வர்ஜீனியா சட்டசபையில் போராடி, டிரான்ஸில்வேனியா ஸெமினரியை (கல்விச் சாலையை) ஸ்தாபிக்க வகை செய்தவர். அதோடு அவர் தம் மிடமிருந்த அரிய புத்தகங்கள் பலவற்றை குதிரைகள் மீது ஏற்றி அல்லீகெனிஸ் மலைத்தொடரைத் தாண்டி, இந்தக் கல்விச் சாலையின் நூல்நிலையத்திற்காக அனுப்பிவைத்தார்.

மாரிஸன் மாதா கோவிலிலிருந்து இசையொலி மிதந்து வந்தது. மேரியும், டாக்டர் வார்டும் ஜன்னல் அருகில் நின்று அதைக் கேட்டுக்கொண்டிருந்தனர். கீழே, மாண வர்கள், பட்டமளிப்பு விழாவை யொட்டி நடக்கவிருக்கும் அணிவகுப்புக்கான உடைகளை உடுத்துக்கொண்டு, விரைந்து வந்துகொண்டிருந்ததை மேரி பார்த்தாள். அவளுடைய கண்களில் தேங்கி நின்ற விசனத்தைக் கவனித்த டாக்டர்

வார்டு சொன்னார்: ''எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறது மேரி! உன் பெயரைத் தாங்கிய பட்டப்பத்திரத்தை அளிக்க முடியாதநிலையில் நான் இருக்கிறேனே? நீ மாத்திரம் ஆணாகப் பிறந்திருந்தால்.....''

கீழே தெரிந்த காட்சியைப் பார்க்க விரும்பாதவள் போல், அவள் தன் கைகளை விரித்துக் கண்களுக்கு முன் பிடித்துக் கொண்டாள். பிறகு சொன்னாள்: ''நான் ஸ்பிரிங் ஃபீல்டில் என் சகோதரியுடனேயே தங்கியிருந்திருக்க வேண்டும். லெக்ஸிங்டனுக்குத் திரும்பிவந்தது என் தவறு. இப்படி நாடுகடத்தப்பட்டவளைப் போன்ற நிலையில் இருப்பதற்காகவா நான் இங்கே வந்தேன்? ஆம், டாக்டர் வார்டு! நான் என் சொந்த ஊரிலேயே அயலூர்க்காரியாக அல்லவா கருதப்படுகிறேன். நான் பாடுபட்டுப் படித்த படிப்பெல்லாம் என்னைப் பெண்மையை இழக்கச்செய்துவிட்டது என்று மக்கள் பேசிக்கொள்ளவில்லையா?''

கீழே, லெக்ஸிங்டன் பாதுகாப்புப் படையினர் பகட்டான ராணுவ உடுப்பு அணிந்து, பட்டமளிப்பு விழாவுக்குப் பின்னர் நடக்கவிருந்த அணிவகுப்புக்காகத் தயாராகிக் கொண்டிருந்தனர். 1812-இல் நடந்த யுத்தத்தில் போரிடத் தனது தந்தை ஐந்தாவது கெண்டக்கிபடைப் பிரிவில் சேர்ந்து சென்றபோது, இதேமாதிரி ராணுவ உடைகளைத் தான் அணிந்துகொண்டிருந்தாரென்று மேரி கேள்விப்பட்டிருந்தாள். அது இப்பொழுது அவள் நினைவில் மிதந்தது.

டாக்டர் வார்டுஅமைதியாகப் பேச ஆரம்பித்தார்: '' இன்றுடன் என் கல்விக் கழகம் இறுதியாக மூடப்படுகிறது, மேரி. அதோடு உன் படிப்பும் முற்றுப் பெறுகிறது. ஆம்; வருங்காலத்தைப் பற்றிய திட்டம் எதுவும் இல்லாமல் முற்றுப்பெறுகிறது.'' அவர் நிமிஷ நேரம் தமது மெலிந்த கைவிரல்களைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு பேச்சைத் தொடர்ந்தார்: '' எனக்கு இதுதான் முடிவு; ஆனால் மேரி, உனக்கு இது ஆரம்பம். நீ விட்டுவிடக்கூடாது.''

'' விட்டுவிடக் கூடாதா? எதை?'' அவரை விடத் தான் அதிகக் குழப்பமடைந்திருந்ததைத் தன் குரலில் கண்டு வியப்படைந்தாள் மேரி. இருந்தாலும் சொன்னாள்: '' ஒரு பெண்ணின் வாழ்க்கை எப்பொழுது உருப்பெறுகிறது? அவள் எப்படித் தன் வாழ்க்கையைத் தொடங்குவது? நான் ஒரு வக்கீலாகவோ, டாக்டராகவோ, கட்டடச் சிற்பியாகவோ வாழ்க்கையைத் தொடங்க முடியுமா, டாக்டர் வார்டு?''

'' நமது விருப்பத்துக் கேற்றவாறு வாழ்க்கை அமைந்து விடுவதில்லை மேரி! நான் பாதிரியாகிப் புகழ்பெற விரும்பினேன். ஆனால் என் உடல் நிலை அந்த ஆசையில் மண்

ணடித்துவிட்டது. ஆகவே உன் போன்ற குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பதன் மூலம் நான் என் வாழ்வை நிரப்பிக் கொண்டேன்.''

''ஆகவே, விதியின் தீர்மானத்தின் முன் நமது தீர்மானங்கள் எல்லாம் விலேமதிப்பற்றவை என்று நீங்கள் கூறுகிறீர்களா?''

''ஆமாம் மேரி! ஒருக்கால், கணவர் மூலமோ, மக்கள் மூலமோ நீ உன் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆகையால் அதற்கான சந்தர்ப்பங்கள் வாய்க்கும்போது, அவற்றை உதறித் தள்ளிவிடாதே. சரி, நீ போ மேரி; நேரமாகிவிட்டது. தலைவர் மார்ஷெல் தமது முடிவுரையை ஆரம்பித்துவிடப்போகிறார். வருங்கால வாழ்வைப்பற்றி நீ ஒரு முடிவுக்கு வரப் பல நாட்களாகலாம். ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம் மேரி. உன் வாழ்வு வளம் பெற்று விளங்கும். உன் முயற்சிகளுக்கெல்லாம் அது பயனளிக்கும்.''

''வந்தனம் டாக்டர் வார்டு! உங்களுடைய பொன் மொழிகளால் எனக்கு மிக உயர்ந்த பட்டத்தை இன்று வழங்கிவிட்டீர்கள்.''

6

பட்டமளிப்பு விழா முடிந்த பிறகு மேரி தனது தோழர்களைப் பாராட்டிவிட்டு, வீட்டிற்குப் புறப்பட்டாள். அன்றைய காலை நிகழ்ச்சிகள் அவளை உணர்ச்சி மிக்கவளாக ஆக்கியிருந்ததால், வழக்கமாகச் செல்லும் வழியை மறந்து வேறொரு வழியில் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். மாதா கோவிலுக்கும் 'வெஸ்ட் ஷார்ட்' தெருவுக்கும் இடையே இருக்கும் மார்க்கெட் தெருவுக்கு வந்தபோதுதான் தான் வழி மாறி வந்துவிட்டதை அவள் உணர்ந்தாள். மார்க்கெட் தெருவில் ஒரே ஜனக்கும்பலாக இருந்தது. வண்டிகள் வரிசை வரிசையாக நிறுத்தப் பட்டிருந்தன. மாதத்துக்கு ஒரு தடவை லெக்ஸிங்டன் கோர்ட்டில், வெளியூர் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அன்று அந்த விசாரணை நாள். முப்பது மைல் வட்டாரத்தில் உள்ள எல்லா ஊர்களிலிருந்தும் மக்கள் அங்கே வந்து குழுமியிருந்ததால்தான், மார்க்கெட் தெருவில் அன்று அவ்வளவு கூட்டம்.

மார்க்கெட் தெருவைத் தாண்டி மேரி 'சீப் ஸைடு'த் தெருவுக்கு வந்தாள். சீப் ஸைடுத் தெருவில், படுக்கைகள்,

பழைய ஸ்டவ்கள், பழைய கலப்பைகள், கோடரிகள், குதிரைச் சேணங்கள், கண்ணாடிப் பாத்திரங்கள், தகரச் சாமான்கள், பிரம்பு நாற்காலிகள் முதலியவை விற்கும் கடைகள் இருந்தன. பெண்கள், வெல்லம், கரும்புச் சாறு, முதலியவற்றை ஒரு பக்கம் விற்றுக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு அருகில், ''சர்வ ரோக நிவாரணி'' விற்பவர்கள் பெருங்குரலில் போவோர் வருவோரைக் கூவி அழைத்து வியாபாரம் செய்துகொண்டிருந்தனர்.

நடைபாதை வழியே செல்ல முடியாதபடி இந்த வியாபாரிகளின் கும்பல் இருந்ததால் மேரி, கோர்ட்டுக் கட்டடத்தின் முன்னுள், வேலி பிடிக்கப்பட்டிருந்த பாதை வழியாகப் போகலாமென்று அங்கு சென்றாள். ஆனால் அங்கே கூட்டம் இன்னும் மோசமாக இருந்தது. அங்கே பசுக்களையும், குதிரைகளையும் நிறுத்தி ஏலம் போட்டுக்கொண்டிருந்தார்கள். வேறு வழியின்றி அவள் இந்தக் கும்பலுக்குள்ளே புகுந்து நடந்து மெல்ல 'மெயின்' தெருவின் கோடியை அடைந்து, வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தபோது, அவள் கண்களில் அக்காட்சி தென்பட்டது.

அவள் அப்படியே ஒரே ஓட்டமாக ஓடிவிடத்தான் எண்ணினாள். ஆனால் கால்கள் அவளை அந்த இடத்தை நோக்கியே இழுத்துச்சென்றன. அது ஒரு சதுக்கம். ஸ்திரீகள் குதிரைமீது ஏறுவதற்கும், குதிரையை விட்டுக் கீழே இறங்குவதற்கும், அச்சதுக்கத்தின் தென் மேற்கு மூலையில் ஒரு மேடை, முன்காலத்தில் கட்டிவிடப்பட்டிருந்தது. ஆனால் மேரிக்கு நினைவு தெரிந்த நாள் முதலாக அந்த மேடை நீக்ரோ அடிமைகளை விலைகூறும் மேடையாகத்தான் பயன்படுத்தப்பட்டு வந்தது.

அவளுடைய கண்கள் முதலில், அடிமைகளை ஏலம் கூறும் ஆளிடம் சென்றன. அவன் நீண்ட கோட்டு, உள் கோட்டு, மாட்டுத் தோலாலான பூட்ஸ், வெள்ளைநிறத் தொப்பி முதலியன அணிந்து அந்த மேடைமீது நின்றுகொண்டிருந்தான். மேடைக்கு அருகில், தெருவில் பல அடிமைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். முன்னாள் இரவு தங்கள் வீட்டு வாசல் வழியே சென்ற அடிமைகளை அவர்கள் என்பதை மேரி கண்டுகொண்டாள். அவர்கள் கெண்டக்கியைச் சேர்ந்த நீக்ரோக்களாக இருக்கலாமென்று அவள் நினைத்தாள். ஆறு வருஷங்களுக்கு முன்பு அவளுடைய தந்தை, ஹென்ரி கிளே, அவருடைய சிறிய தந்தையின் மகனான காஸியஸ் கிளே, அவர்களது நண்பர்கள் பிரக்கின்ரிட்ஜ் மற்றும் கிரிட்டெண்டன் குடும்பத்தினர் முதலியோரின் முயற்சியால் சட்ட சபையில் ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டது.

அதன்படி அந்த மாகாணத்துக்குள்ளே, வெளி மாகாணங் களிலிருந்து அடிமைகளைக் கொண்டு வந்து விலைகூறுவது தடைசெய்யப்பட்டிருந்தது. அந்த மசோதா நிறைவேற் றப்பட்ட பின்பு, நீக்ரோ அடிமை வியாபாரம் எவ்வளவோ குறைந்து விட்டது. இருந்தாலும் மாகாணத்துக்குள்ளே அடிமை வியாபாரம் தடைசெய்யப்படவில்லை யாதலால், இப்படிச் சிறிது சிறிது நடந்துகொண்டுதான் இருந்தது. மேடைக்கு முன்னால் நகரத்தின் பிரபல அடிமை வியாபாரி களில் சிலர் நின்றுகொண்டு ஏலம் கூறப்பட இருந்த ஓர் இளம் நீக்ரோப் பெண்ணைப் பரிசிலனை செய்துகொண்டிருந் தனர்.

''சீமான்களே வாருங்கள்! இந்த இளமையான 'குட்டி'க்கு நீங்கள் என்ன விலை கூறுகிறீர்கள்? இவளுடைய உடலும் உள்ளமும் சீரானவை என்பதற்கு உறுதியளிக்கி றேன். இவள் நன்றாகச் சமையல் செய்வாள்; துணி துவைப் பாள்; இஸ்திரி போடுவாள். பாருங்கள் சீமான்களே! நன்ற கப் பார்த்து நல்ல விலை கூறுங்கள்'' என்று ஏலம் போடு பவன் கூறிக்கொண்டிருந்தான்.

யாரோ ஒருவர் மிகக் குறைந்த விலை ஒன்றை அளிப்ப தாகக் கூறினார். அதை ஏற்றுக்கொள்ளாத ஏலம் போடு பவன், ''சீமான்களே! இது போன்ற இளம் 'சரக்கு' அடிக்கடி ஏலத்துக்கு வராது. இவளுடைய அங்க வாளிப் புகளைப் பாருங்கள்'' என்று கூறிக்கொண்டு அவளுடைய ஆடையை இடுப்புவரை அவிழ்த்துக் காட்டினான்.

மேரியின் தலை தாழ்ந்தது. டாக்டர் வார்டின் பள்ளி யில் சேர்ந்த அன்று நடந்த ஒரு சம்பவம் அவளது நினைவுக்கு வந்தது. அன்று மாலையில் அவள் தனது பள்ளிக்கூடப் புத்தகங்களைச் சுமந்தவாறு வகுப்பு முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். கசையடி கொடுக்கும் கம்பத்தை நெருங் கியபோது அங்கு ஒரே கும்பலாக இருப்பதை அவள் கண் டாள். மேரி கூட்டத்தினுள்ளே புகுந்து முன்னே சென்று பார்த்தாள். அங்கு அவள் கண்ட பயங்கரக் காட்சி இன்றள வும் அவளது கண்களை விட்டு அகலவில்லை. பத்தடி உயர முள்ள ஒரு நீக்ரோ அடிமை அந்தக் கசையடிக் கம்பத்தோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தான். அவன் முதுகு கசையடியி னால் ரத்த விளாறாகியிருந்தது. அவனுக்குரிய முப்பத் தொன்பது கசையடித் தண்டனையை 'ஷெரிப்' நிறைவேற்றிய பிறகு அந்த மனிதனை அவிழ்த்து விட்டுவிட்டு, அடுத்ததாக ஓர் இளம் நீக்ரோ மங்கையைக் கம்பத்தோடு சேர்த்துக் கட்டி, அவளுடைய ஆடைகளை இடுப்புவரைக் களைந்தார். அவளுடைய மார்பகத்தில் ஏற்கனவே சூடு போடப்பட்டுப் புண்ணாகியிருந்தது. அதோடு அவளுக்கும் கசையடித் தண்

டனே நிறைவேற்றப்பட்டபோது, மேரி பயத்தால் வீறிட்டுக் கொண்டு வீட்டை நோக்கி ஓடினாள். வீட்டுக்கு வந்து படுக்கையில் படுத்துக்கொண்ட பிறகும் அவளுடைய உடல் பீதியினால் குலுங்கிக்கொண்டிருந்தது. வீட்டிலுள்ளோர் கவலையடைந்தனர். டாக்டர் வார்ஃபீல்டு உடனே வரவழைக்கப்பட்டார். ஆனால் அவளுடைய தந்தை வீடு திரும்பி அவளை அணைத்துக்கொண்டு ஆறுதல் கூறி என்ன நடந்தது என்று விசாரித்த பிறகுதான் மேரியினால் தான் கண்ட பயங்கரக் காட்சியை விவரிக்க முடிந்தது. ராபர்ட் டாடு பேச வாய் வராமல், மௌனமாக அமர்ந்திருந்தார்.

''அப்பா! ஏன் அப்பா இந்த அநியாயம் புரிகிறார்கள்? நம்முடைய லெக்ஸிங்டனில் ஏன் மனிதர்களில் ஒரு சாரார் மற்றொரு சாராருக்கு இந்த அநீதி இழைக்கிறார்கள்?'' என்று மேரி கதறினாள்.

''ஏனென்றால், அவர்கள் மனிதர்களாகக் கருதப்படவில்லை; அதுதான் காரணம். சொத்துச் சொம்புகளை விற்பது போல் அவர்கள் விற்கப்படுகிறார்கள்; அதனால் தான் மேரி, குதிரைகளுக்கும், கோவேறு கழுதைகளுக்கும் சூடுபோடுவது போல் அவர்களுக்குச் சூடுகூடப் போடலாம்.''

''இதையெல்லாம் நீங்கள் நிறுத்தமுடியாதா, அப்பா?''

''நாங்கள் அதற்கு முயற்சி செய்துகொண்டுதானிருக்கிறோம் குழந்தாய். நம்முடைய சமூகத்தைப் பற்றிக் கொண்டுள்ள இந்த மாசை அகற்ற நாங்கள் தினந்தோறும் பாடுபட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். அமெரிக்கக் குடியேற்ற சங்கம், விடுதலை பெற்ற நீக்ரோ அடிமைகளை ஆஃப்பிரிக்காவுக்குத் திருப்பி அனுப்ப நிதி சேகரித்துக் கொண்டிருக்கிறது.''

''ஆனால் அப்பா, விடுதலை பெற்றவர்களுக்கு உதவி எதற்கு? இம்மாதிரிக் கசையடி பட்டுக்கொண்டிருப்பவர்களையல்லவா நீங்கள் விடுதலை செய்து ஆஃப்பிரிக்காவுக்குத் திருப்பி அனுப்ப முயற்சி செய்யவேண்டும்?''

டாடு அவளை அணைத்துக்கொண்டிருந்த கைகளை எடுத்தார். அவர் தோற்றத்தில் நிராசை பிரதிபலித்தது. பதிலளித்தபோது அவருடைய குரல் கம்மிற்று. அவர் சொன்னார்: ''மேரி! இந்த அடிமைகள் ஏராளமான பணம் கொடுத்துவாங்கப் பட்டவர்கள். அவர்களை விடுவிக்க வேண்டுமென்றால் அவர்களுடைய எஜமானர்களுக்குப் பணம் கொடுக்கவேண்டும். அதற்கு லட்சக் கணக்கான டாலர்கள் வேண்டும். அவ்வளவு பணத்துக்கு நாங்கள் எங்கே போவது குழந்தாய்?'' டாடு, படுக்கையிலிருந்து எழுந்து அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டே, ''எந்த ஒரு தனி மனிதனாலும் இந்த அடிமைகள் பிரச்னைக்கு விமோசனம் காணமுடியாது மேரி'' என்றார்.

''இந்த அநியாயங்களை எதிர்த்து நில்லுங்கள் என்று நாம் அந்த அடிமைகளுக்குப் போதனை செய்தால் என்ன?''

''அப்படி யெல்லாம் செய்யக் கூடாது மேரி! அவர்க ளுடைய எஜமானர்கள் தங்களுக்கு எதிராக அடிமைகளைக் கிளப்பிவிட்டதாக நம்மைக் குறைகூறுவார்கள். குழந் தாய்! இந்தமாதிரிப் பயங்கர சிட்சைகள் அடிக்கடி நடப்ப தில்லை. ஆகையால் நீ இதையெல்லாம் மறந்து விட வேண்டும். நாட்டின் இதர பாகங்களை விட நமது கெண் டக்கி மாகாணத்தில் அடிமைகள் எவ்வளவோ நன்முக நடத்தப் படுகிறார்கள் என்பதை நீ நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். இப்பொழுதுதெல்லாம் யாரும், தக்க காரணமின்றி அவர்களை அதிகமாக அடிப்பதோ அவர்களுக்கு சூடு போடுவதோ இல்லை. தனது அடிமைகளைக் கொடூர மாக நடத்துகிறவன், இம்மாகாணத்தில், அடிமை வியாபாரி களுக்கு ஒப்பானவனுகவே கருதப்படுகிறான்'' என்றார் அவள் தந்தை.

கடந்த காலச் சிந்தனையிலிருந்த மேரியின் மனசு நிகழ் காலத்துக்கு வந்தது. அந்த இளம் நீக்ரோப் பெண் நானூறு டாலருக்கு விற்கப்பட்டாள். இப்பொழுது ஏலம் போடு பவன் அவளுடைய தாயாருக்கு விலை கூறும்படி கூறிக் கொண்டிருந்தான். அவளை **நாச்செஸ்ஸுக்கு** அனுப்பு வதற்காக ஒருவர் ஐநூறு டாலருக்கு வாங்கிக்கொண்டார். அந்தப் பெண்ணின் தந்தையை மிஸ்ஸிஸிப்பி வியாபாரி ஒருவர் வாங்கிக்கொண்டார். கடைசியாக அவர்களுடைய எட்டு வயது மகன் ஏலம் கூறப்பட்டு இருநூறு டாலருக்கு விற்கப்பட்டான்.

அக் குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும் பிரிக்கப்பட்டு வெவ்வேறு அடிமைச் சிறைச்சாலைகளுக்கு இழுத்துச் செல்லப் பட்டபோது, அவர்கள் கதறிய கதறல் மேரியின் நெஞ்சை உருகச் செய்தது. அவள் வீட்டுக்குச் செல்லத் திரும்பினுள். ஆனுல் அவளுடைய கையை யாரோ ஒருவன் பின்னலிருந்து பிடித்துக்கொண்டு, அவள் காதருகில் குனிந்து கடுமையான குரலில் சொன்னுன்: ''அதற்குள் புறப்படாதே மேரி, இருந்து முழுவதையும் பார்த்துவிட்டுப் போ. பிறகு இந்தக் கொடு மையைத் தடுப்பதற்கு ஏதேனும் செய்யாமல் உன்னல் ஒரு நாளைக்கூடத் தள்ள முடியாது.''

மேரியை நிறுத்தி இப்படிப் பேசியவன் அவளுடைய குடும்பத்துக்கு நெருங்கிய நண்பனை காஸியஸ் கிளே.

''காஷ்! உன்னை இங்கே கண்டது எனக்கு எவ்வளவோ ஆறுதலாக இருக்கிறது. நான் கிட்டத்தட்டமூர்ச்சையடைந்து விழ இருந்தேன்'' என்றுள் மேரி.

அவனுடைய சக்தி தனக்கும் தாவி விட்டதுபோல்

தோன்றிற்று மேரிக்கு. தனது கையை அவன் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்ததால் தாவிய உடற் பலம்தானு அது, அல்லது அடிமைப் பழக்கத்தை எதிர்த்துப் போரிடத் துணிவுவாய்ந்த ஒருவர் துணை நின்றதால் ஏற்பட்ட மனோ பலமா என்பது அவளுக்கே தெரியாது.

மாடிஸன் மாவட்டத்தில் பிறந்தவன் காஸியஸ் கிளே. டிரான்ஸில்வேனியாவில் அவன் தங்கியிருந்த அறை, ஒரு சமயம் தீக்கு இரையாகிவிட்டது. அப்பொழுது அவன் சில காலம் டாடு குடும்பத்தாரோடு வசித்து வந்தான். அச்சமயம் காஸியஸ்ஸுக்கு இருபது வயது; மேரிக்குப் பதினேழு வயதுதான் ஆகியிருந்தது. இருந்தாலும் அவன் அவளை வயதில் சிறியவளாகக் கருதி நடத்தியதே கிடையாது. அவன் கவர்ச்சிகரமான தோற்றமுடையவன் என்பது மேரியின் அபிப்பிராயம். அவனுடைய திடகாத்திரமான உடலும், முகவிலாசம் காட்டிய அசைக்க முடியாத உறுதியும், வீரம் நிறைந்த கண்களும், சற்றே முன்னுல் சாய்ந்திருந்த தாடையும், நேரான அழகிய மூக்கும், செம்பட்டை நிறச் சிகையும் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தன. ஒரு வருஷ காலம் டாடு குடும்பத்தினருடன் வசித்த பிறகு அவன் யேலுக்குச் சென்று கல்வி கற்று லெக்ஸிங்டனுக்குத் திரும்பி வந்தான். இங்கு வந்து சட்டக் கல்லூரியில் சேர்ந்து படித்த பிறகு அரசியலில் ஈடுபட்டான். ஏற்கனவே அவன் சட்டசபை அங்கத்தினனுக இரண்டு வருஷங்கள் இருந்திருக்கிறுன். இப் பொழுது அடிமைப் பழக்கத்தை எதிர்த்துக் கட்டுரைகள் எழுதுவதும், பிரசங்கங்கள் புரிவதுமாக இருந்து வந்தான். பார்க்கப் பசுப்போலும் பாய்ந்தால் புலிபோலும் இருப்பான் அவன். மேரியிடம் பழகும்போது அவன் மிகச் சாந்தமாகவே காணப்படுவான். ஆனுல் அவன் கோபம் கொண்டு தீக்கங்குகளாக வார்த்தைகள் உமிழ்வதையும் அவள் கண்டிருக்கிறுள். யேலிலிருந்து திரும்பி வந்த பிறகு, மேரி ஜேன் வார்ஃபீல்டு என் பவளை அவன் மணந்து கொண்டான். வளரும் குழந்தை தன்னை விட வயது முதிர்ந்தோரிடம் கொள்ளும் நேச பாவந்தான் மேரிக்கு அவனிடம் ஏற்பட்டிருந்தது. இருந்தாலும், அவள் மாத்திரம் அப்பொழுது மணம் செய்து கொள்ளும் ஆசை கொண்டிருந்தால் அவனைத்தான் மணந்து கொண்டிருப்பாள்.

இறுதியில் அந்த நீக்ரோக்கள் அங்கிருந்து அகற்றப் பட்டனர். மேரியும், காஸியஸ்ஸும் கூட்டத்தை விட்டு வெளியேறி வந்தனர்.

''மேரி நீ மிகவும் அருவருப்பு அடைந்திருக்கிறுய்; அதை மறக்கடிக்க, மிஸியர் கிரானின் கடைக்குப் போய் ஐஸ் கிரீம் சாப்பிட்டுவிட்டுப் போகலாம் வா'' என்று அழைத்தான் காஸியஸ்.

அவர்கள், ரிச்சின் புத்தகம், மற்றும் காகிதக்கடை, ஜேம்ஸ் மார்ச்சின் தட்டுமுட்டுச் சாமான்கள் கடை முதலிய வற்றைத் தாண்டி, மெயின் தெருவும், மில் தெருவும் கூடும் முனையிலிருக்கும் தாமஸ் ஹக்கின்ஸின் மளிகைக் கடையையும் கடந்து, மில் தெருவும், ஷார்ட் தெருவும் சந்திக்கும் இடத் திலிருந்த மாதுரின் கிரானின் இரண்டு மாடிக் கட்டடத்தை அடைந்தனர். அக்கட்டடத்தின் கீழ்த் தளத்தில்தான் கெண் டக்கியில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்த மிஸியர் கிரானின் மிட்டாய்க் கடை இருந்தது.

அந்தக் கடையின் கண்ணுடிக் கதவைத் திறந்துகொண்டு காஸியஸ்ஸும் மேரியும் உள்ளே நுழைந்தபோது, வாடிக் கைக்காரர்களின் வருகையை அறிவிக்கும் சிறிய மணி ஒன்று கல-கலவென்று ஒலித்தது. கவுண்டரில், பலவகை ரொட்டிகள், கேக்குகள் முதலியன அழகாக அடுக்கிவைக் கப்பட்டிருந்தன. மாதுரின் கிரானே மேரிக்குப் பழக்க முண்டு. அவள் மெண்டலின் பள்ளியில் சேர்ந்து ஃபிரெஞ்சு மொழி கற்கத் தொடங்கிய நாளிலிருந்து அடிக்கடி அவ ருடைய கடைக்கு வந்துபோவதுண்டு. மணியின் ஒலியைக் கேட்டதும் அவர் கடையின் பின்புறமிருந்த ரொட்டிக் கிடங்கிலிருந்து வந்தார். மாதுரின் கிரான் ஐந்தடி உயரம் இருந்தார். அவருடைய தலை வழுக்கை விழுந்திருந்தது. டிரான்ஸில்வேனியா மாணவர்களின் கூற்றுப்படி ஐந்தடிச் சுற்றும் இருந்தார். மேரியையும், காஸியஸ்ஸையும் கண்டதும் அவர் அவர்களை ஃபிரெஞ்சு மொழியில் வரவேற்றார்.

''மிஸியர் கிரான்! எங்களுக்கு இரண்டு ஐஸ்கிரீம் கொடுக்கிறீர்களா?'' என்று மேரி கேட்டாள்.

அந்த ஃபிரெஞ்சுக்காரர் உள்ளே சென்றதும், மேரி, காஸியஸ்ஸிடம் சொன்னாள்:

''பாட்டி ஹம்ப்ரீஸ் தனது உயிலில் தன்னிடமுள்ள அடிமைகள் எல்லோரையும் விடுதலை செய்யவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தாள். அப்பா அம்மா கூட அப்படித்தான் செய்யப்போகிறார்கள். ஆனல் காஷ், நம்முடைய வீட்டு வேலைகளைச் செய்யும் அடிமைகளை இப்பொழுது 'போ' என்றல் எங்கே போவார்கள், பாவம்! நெல்ஸன், சானி போன்ற சிலர், வயோதிகப் பிராயத்தை எட்டிவிட்டார்கள். அவர்கள் இனி எங்கே சென்று, எப்படி வாழ்வார்கள்? அப்பா ஒரு தடவை கூட எங்கள் வீட்டு நீக்ரோ அடிமைகளைத் தண்டித்தது கிடையாது. சிலர் மிகவும் மோச மாகக் கூட நடந்துகொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, குழந்தைகளைப் பராமரிக்கும் எங்கள் வீட்டு நீக்ரோ வேலைக் காரி ஒரு தடவை நன்றாகக் குடித்து விட்டு, எமிலியைத்

தூக்கிக் கொண்டு எங்கேயோ கொண்டுபோய் தொலைத்து விட்டு வந்து விட்டாள். அப்பொழுது கூட அப்பா அவளை வெறுமே திட்டத்தான் செய்தார்.''

மிஸியர் கிரான் ஐஸ்கிரீம் கொண்டுவந்து மேஜை மீது வைத்தார். மேரி அதைப் பார்த்துக் கொண்டே, ''காஷ்! சற்று முன்பு அந்தப் பேதை அடிமைகள் பட்ட அவதியைப் பார்த்து வருந்திய நாம் இப்பொழுது இங்கே உட்கார்ந்து இப்படி ஐஸ்கிரீமைச் சாப்பிட்டுக் கொண்டு உற்சாகமாக இருப்பது கொஞ்சங்கூட அழகாக இல்லை; இல்லையா?'' என்று கேட்டாள்.

''நாம் ஐஸ்கிரீம் சாப்பிடுவதால் அவாகளுக்கு எவ விதக் கெடுதலும் ஏற்பட்டுவிடப் போவதில்லை மேரி. ஆனால், அவர்களுக்குக் கெடுதலை ஏற்படுத்துவது எதுவென்றால் 'நாங்கள் அடிமைகளை அடிப்பதில்லை; துன்புறுத்துவதில்லை' என்று அடிமை முறைக்கே சப்பைக் கட்டு கட்டினாயே அதுதான்.''

''காஷ்.....சப்பைக்கட்டா.....நான்.....'' மேரி தடுமாறினாள்.

''நீ என்னவோ தீமையே செய்யாதவள்போல், 'எங்கள் வீட்டில் மொத்தம் ஆறே ஆறு அடிமைகள்தாம் இருக்கிறார்கள்; அவர்கள் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலவே பழகுகிறார்கள்' என்று பேசினாயே? அவர்கள் நினைத்தபோது உங்கள் வீட்டு வேலை வேண்டாமென்று உதறிவிட்டுப் போக முடியுமா, மேரி? உலகில் அடியோடு ஒழிக்கப்பட வேண்டிய தீமைகளில் அடிமைப்படுத்துதலும் ஒன்று. அடிமைகளை எவ்வளவு நன்றாக நடத்தினாலும், அவர்கள் அடிமைகள்தானே?''

''நீ ரொம்பத் தீவிரவாதியாக இருக்கிறாய, காஷ்.''

மேரியின் இந்த விமரிசனம் காஷுக்குக் குத்தலாகப் படவில்லை. அவன் சொன்னான்: ''ஆமாம் மேரி; இம்மாதிரி விஷயங்களுக்குத் தீவிரவாதிகளும் சிலர் இருக்கத்தான் வேண்டும். படிப்படியான நடவடிக்கை மிகவும் மெதுவானது; நாளைக்கு என்று ஒத்திப் போடுவது மிகவும் தாமதமானது.''

காஷ் சொல்லுவது சரிதானென்று மேரிக்குத் தோன்றிற்று. பிற மாகாணங்களிலிருந்து அடிமைகளைக் கொண்டு வந்து விற்பனை செய்யக்கூடாது என்ற மசோதா நிறைவேற்றப்பட்ட பிறகு, கென்டக்கி மாகாணத்தில் அடிமைத் தொழில் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிடும் என்றுதான் தோன்றிற்று. இங்கே பெரிய எஸ்டேட்டுகளோ, பருத்தி அல்லது நெல் விளைவிக்கும் பெரிய பண்ணைகளோ

இல்லை. ஆகையால் இம்மாகாணத்தில் அடிமைகளுக்கு அதிகக் கிராக்கி கிடையாது; எனவே இங்கு விரைவில் அடிமைத் தொழில் நசித்துவிடும் என்றுதான் அநேகமாக எல்லோரும் நினைத்திருந்தார்கள். ஒரு சில அடிமைகள் விடுவிக்கப்பட்டு லைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார்கள். பிரஸ்பிட்டேரியன் மத குருக்கள் அடிமைகளுக்குக் கல்வி போதிக்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்தார்கள். மேரியின் தந்தையும், அடிமைகளை வைத்துக்கொண்டிருக்கும் வேறு பலரும் சேர்ந்து, மேற்கொண்டு அடிமைத்தொழில் தழைக்காதிருக்க இயக்கம் ஒன்றைத் தொடங்கினார்கள். இருந்தாலும் அது அறவே நீங்கிவிட்டதா?

காஸியஸ் கிளே, அவள் தலைநிமிர்ந்து தன்னைப் பார்ப்பதற்காகக் காத்திருந்தான். அவள் தலை நிமிர்ந்ததும் அவன் விசனத்தோடு மெதுவான குரலில் சொன்னான்:

''இன்று அந்த அதிர்ஷ்டவீனர்களான அடிமைகளை வாங்கி விற்றார்களே, அந்த நெஞ்சிரக்கமற்ற வியாபாரிகளைப் போல், உன் தந்தையும் ஒரு நாள் அடிமைகளை விற்க வேண்டிய நிலைக்கு விரட்டப்படலாம் மேரி!''

மேரி வீட்டுக்குத் திரும்பியபோது அங்கே ஒரே அமளியாக இருந்தது. அவளுடைய சகோதரி ஃபிரான்ஸெஸ்ஸிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. தான், ஸ்பிரிங்ஃபீல்டில் மருந்துக்கடை நடத்திவரும் வில்லியம் வாலெஸ் என்ற டாக்டரை மணந்து கொண்டு விட்டதாக அக்கடிதத்தில் அவள் அறிவித்திருந்தாள். ராபர்ட் டாடுக்குத் தமது இரண்டாவது மகளின் திருமணம் ஒருவாறாக நடந்தேறி விட்டது சந்தோஷத்தை அளித்தபோதிலும், முன்னறிவிப்பு இல்லாமல் அவள் கல்யாணம் செய்துகொண்டுவிட்டது அவருக்குக் கோபத்தை உண்டாக்கியிருந்தது. அவர் குடும்பப்பற்று மிக்கவர். ஆகையால், ஃபிரான்ஸெஸ் இப்படி நடந்துகொண்டது, அவருடைய மனதைப் புண்படுத்தி விட்டது. முகம் சிவக்க அவர் சொன்னார்: ''வில்லியம் வாலெஸ் நல்ல வரனுகத்தான் இருக்கவேண்டும். அவனுடைய மருந்துக் கடை வாடிக்கைக்காரர்கள் அவனே டாக்டராகத் தொழில் நடத்தச் சொல்லுவதாகக் கூட ஃபிரான்ஸெஸ் எழுதியிருக்கிறாள். ஆனால் என் மகள் எனக்கு ஓர் அழைப்புக் கூட அனுப்பாமலா தனது திருமணத்தை முடித்துக் கொள்ளவேண்டும்?''

''ஆனால் அப்பா, இங்கேயிருந்து ஸ்பிரிங்ஃபீல்டுக்குப் போய்வர மூன்று வாரங்கள் பிடிக்கும்; உங்களுக்கு அதற்கு எங்கே பொழுது கிடைக்கப்போகிறது என்று ஃபிரான்ஸெஸ் நினைத்திருக்கலாம்'' என மேரி தந்தையைச் சமாதானப்படுத்தும் தோரணையில் பேசினாள்.

''என் மகளின் கல்யாணத்துக்குப் போகக் கூடவா எனக்குப் பொழுது கிட்டாது?'' என்று அவர் கத்தினார். ஸ்பிரிங்ஃபீல்டிலிருக்கும் ஃபிரான்ஸெஸ்ஸுக்குத் தமது குரல் கேட்கவேண்டுமென்று விரும்புவதுபோலிருந்தது அவர் இரைந்த இரைச்சல். ''என் மூத்த மனைவியின் குழந்தைகள் எல்லோரும் ஒப்புக்கு என்னிடம் ஒரு வார்த்தை கூடக் கேட்காமலே, தங்கள் கல்யாணங்கள், தங்கள் காரியங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றிக்கொள்ளப்போகிறார்களா?''

மேரி மீண்டும் தந்தையைச் சமாதானப்படுத்த முயன்றாள். ''ஸ்பிரிங்ஃபீல்டில் இப்படித்தான் அப்பா, எல்லோரும் திடீர் திடீரென்று கல்யாணம் செய்துகொண்டு விடுகிறார்கள். அதை ஒரு சாதாரண நிகழ்ச்சியாகவே அங்கு கருதுகிறார்கள். ஆணும் பெண்ணும், நெடு நாட்கள் கல்யாணத்தைப் பற்றிய சிந்தனையே யின்றிப் பழகிக் கொண்டிருக்கிறார்கள்; பிறகு திடீரென்று தீர்மானித்து உடனே கல்யாணம் செய்துகொண்டு விடுகிறார்கள். நான் எலிஸபெத்தைப் பார்க்கப் போயிருந்தபோது ஒரு சம்பவம் நடந்தது. கல்யாணத்துக்காக மாதா கோவிலுக்குப் போய்க் கொண்டிருந்த வழியில்தான், இரண்டு ஜோடிகள் திருமண லைஸென்ஸை வாங்கிக்கொண்டனர்.''

''அவசரம்! காட்டுமிரண்டித்தனம்!'' என்று வெடித்தார் ராபர்ட்டாடு. பிறகு தமது வேகத்தை அடக்கிக் கொண்டு சாந்தமாகக் கூறினார்: ''சரிதான்; அங்கேயுள்ள வழக்கம் அப்படியென்றால் அவள் என்ன செய்வாள்? ஆனால் அவர்கள் ஏன் 'டாவேர்'னில் (மதுக்கடையில்), அதை எடுத்துக்கொண்டு வசிக்கவேண்டும்? மண வாழ்வை மதுக் கடையிலா தொடங்குவது?''

''இல்லை அப்பா! இங்கே உள்ளது போல் 'டாவேர்ன்' என்பது மதுக்கடையில்லை அப்பா ஸ்பிரிங்ஃபீல்டில். அங்கே 'டாவேர்ன்' என்பது ஹோட்டல் என்று பொருள்படும். அதிலும் ஃபிரான்ஸெஸ் தங்கியிருக்கும் 'குளோப்' அந்த ஊரின் சிறந்த ஹோட்டல்; சமூக நடவடிக்கைகளுக்குக் கேந்திரம் போன்றது'' என்றாள் மேரி.

''ம்.....அடுத்தாற்போல் எங்களை விட்டுப் போக இருப்பது நீ போலிருக்கிறது. கல்யாணம் செய்து கொள்ளும் வரை, ஃபிரான்ஸெஸ்ஸை எலிஸபெத் தன்னுடன் வைத்துக்கொண்டு விட்டாள். இப்பொழுது அவள் போய்விட்டாள்; இனி உனக்குக் கடிதம் எழுதி அழைத்து வைத்துக் கொண்டு விடுவாள்.''

இப்பொழுது மேரியின் முகம் சிவந்தது. ''எனக்கு அவளிடமிருந்து அழைப்பும் வரவில்லை. தவிர நான் இப்

பொழுது கல்யாணம் செய்துகொள்ளத் துடித்துக்கொண் டிருக்கவும் இல்லே.''

சட்டென்று, உணர்ச்சி வசப்பட்டு இப்படிக் கத்தி விட்டது அவளுக்கே தன்மீது கோபம் ஏற்படச் செய்தது. ராபர்ட் டாடு அவளே அழைத்து ஸோபாவில் அருகில் உட் கார்த்திக்கொண்டு அவளுடைய கைகளேத் தமது கைகளில் எடுத்துக்கொண்டார். கர்வம் குலேந்த பார்வையை அவர் மீது செலுத்திய அவள், அவருடைய கண்களில் கண்ணீர் ததும்பியிருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

ராபர்ட் டாடு சொன்னர்: ''வருத்தப்பட்டுக்கொள் ளாதே கண்ணே, உன்னேயும், ஆனேயும், உங்களுடைய இரு சகோதரர்களேயும் நான் எவ்வளவு தூரம் நேசிக்கிறேன். எனக்கென்னவோ நாம் ஒருவரை ஒருவர் விட்டு அகன்று சென்றுகொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. ஆனின் போக்கோ ஒரு பெரும் புதிராக இருக்கிறது. உன்னிடமா வது அவள் தன் எண்ணங்களே வெளியிடுகிருளா? லெவி, தான் ஹோட்டலில் போய் வசிக்கப்போவதாகச் சொல்லுகிருன். ஜார்ஜோ, அந்தப் பதினலு வயதுப் பையனின் உள்ளத்தில் என்ன புயல் தான் வீசுகிறதோ? அவன் எப்பொழுதாவது என் முகத்தை நிமிர்ந்து பார்ப்பதுண்டா?''

மேரி பதில் சொல்ல விரும்பவில்லே. ஆனல் பதிலுக் காகத் தந்தை தன் முகத்தையே உற்று நோக்கிக்கொண் டிருப்பதைக் கண்டதும் அவள் சொன்னுள்: ''ஜார்ஜ் கைக் குழந்தையாக இருந்தபோது, எல்லோரும், அவன் பிறந்து அம்மாவை உருட்டிவிட்டான் என்று சொன்னுர்கள். ஒருக் கால் உங்கள் உள்ளத்தின் அடித்தளத்திலும் அந்த நினேவு இருக்கிறதோ, என்னவோ? ஜார்ஜ் இதையெல்லாம் உணர்ந் திருக்கவேண்டுமென்று நான் நினேக்கிறேன்.''

திடுக்கிட்ட ராபர்ட் டாடு, பதில் பேசத் தம்மைத் தயார் செய்துகொள்ள வேண்டியிருந்தது. அவருடைய பார்வை தாழ்ந்து விட்டது. குரல் வீழ்ந்து விட்டது. ''மேரி! நீ இங்கே கஷ்டப்பட்டுக் கொண்டா வாழ்கிருய்? நீயும் ஓடிப்போய், யாரோ ஒருவனே மணந்துகொண்டுவிட்டேன் என்று எனக்குக் கடிதம் அனுப்பிவிடுவாயோ?''

''இல்லேயப்பா! இங்கே எனக்கு என்ன கஷ்டம்?''

''சந்தோஷம் மேரி, உன் சித்தி உன்னே எவ்வளவு நேசிக் கிருள், தெரியுமா? உன்னே வளர்த்து ஆளாக்கிவிட, அவள் எவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டிருக்கிருள், தெரியுமா?''

அவளுடைய ஆமோதிப்பை எதிர்பார்ப்பது போல் ராபர்ட் டாடு உட்கார்ந்திருந்தார்.

மேரி மிக நளினமாகத் தந்தைக்குப் பதிலளித்தாள்:

''என்னுடைய அதிர்ஷ்டந்தான் அப்பா, அம்மாவின் போக்கும் என் போக்கும் பல விஷயங்களில் ஒத்திருப்பது. ஆகையால் நாங்கள் இடையிடையே சில சில்லறை விஷயங்களில் மனஸ்தாபப் பட்டுக்கொண்டாலும், அது பெரிய காரியமே அல்ல. நம்முடைய வீட்டுக்கு ஓர் அம்மா தேவையாக இருந்தாள்; உங்களுக்கும் அன்பு செலுத்த ஒரு மனைவி தேவையாக இருந்தாள்.....''

அவர் அன்புடன் அவளை முத்தமிட்டுக்கொண்டு, ''நீ எப்பொழுதுமே கெட்டிக்காரி கண்ணே!'' என்றார்.

''நம் வீட்டில் இன்னும் பல கெட்டிக்காரக் குழந்தைகள் வளர்ந்துவருகிறார்கள், அப்பா!''

அவருடைய முகத்தில் மகிழ்ச்சி விளையாடிற்று. அவர் சொன்னார்: ''அடுத்த வாரம் நாம் குடும்பத்தோடு பீனஸ் விஸ்டாவுக்குப் போகப்போகிறோம் மேரி; நீ இந்தக் குளிர் காலத்தில் ரொம்பப் பாடுபட்டுப் படித்தாய். இப்பொழுது கிராமத்துக்கு வந்து சிறிது ஓய்வு எடுத்துக்கொள்.''

மேரி ஜன்னல் வழியே வெளித் தோட்டத்தைப் பார்த்தாள். பீனஸ் விஸ்டாவுக்குக் குடும்பம் முழுவதும் போவதென்றால் அங்கே ஒரே நெருக்கடியாக இருக்கும். விருந்தினர்கள் வந்து போனவண்ணம் இருப்பார்கள். ஒரு நிமிஷங்கூடத் தனிமையில் நிம்மதியாக இருக்கமுடியாது.

இவ்வாறு நினைத்துக்கொண்ட அவள், தந்தையிடம் திரும்பி, ''கோடையில் நான் லெக்ஸிங்டனிலேயே தங்கி இருக்க விரும்புகிறேன் அப்பா! இங்கே ஜார்ஜைப் பார்த்துக் கொள்ளவும், வீட்டைக் கவனித்துக்கொள்ளவும் யாராவது ஒருவர் இருக்கவேண்டாமா? தவிர, நான் சில முக்கியமான விஷயங்களைப் பற்றிச் சிந்தித்து முடிவு செய்ய வேண்டியிருக்கிறது'' என்றாள்.

7

ஜூன் மாதக் கடைசி. **புளூ கிராஸ்** பிரதேசத்தில் வெப்பம் மிகுதியாக இருந்தது. மழையின்மையால் பயிர்கள் வாடி வதங்கிக்கொண்டிருந்தன. லெக்ஸிங்டன் மக்கள் வெப்பத்தைத் தாங்க முடியாமல், கிராப் ஆர்ச்சர்டு, கிரஹாம் ஸ்பிரிங்ஸ் போன்ற இடங்களிலுள்ள தங்கள் கிராம வீடுகளை நோக்கிப் போகத் தலைப்பட்டனர்.

மேரி வீட்டில் பெரும்பாலும் தனியாகவே இருந்து

வந்தாள். ஜார்ஜ் மாத்திரம் பகல் நேரத்தில் சில மணி நேரம் அவளோடு பொழுது போக்குவான். சகோதர பாசத்துக்கு ஏங்கித் தவித்த அவளது உள்ளம் ஜார்ஜோடு கழித்த அந்தப் பொழுதால் பெரிதும் நிம்மதியுற்றது.

காலையில் அலங்கரித்துக்கொள்ளும் மேஜைமுன் அமர்ந்து தலைசீவிக்கொண்டிருக்கும்போதோ, அல்லது இரவு படுக்கப் போகு முன்போ, அவளுடைய உள்ளத்தை ஒருவிதச் சூனியம் கவ்விக்கொள்ளும். அச் சமயங்களில் கண்களைச் சுற்றி ஒரு கருவட்டம் தோன்றும்.

அப்போது அவள் கண்களுக்குத் தன் அழகெல்லாம் குன்றிவிட்டதுபோலிருக்கும். ஆம்; வருங்காலத்தைப்பற்றி எவ்வித முடிவுக்கும் வரமுடியாமல் திணறிக் கொண்டிருப் பவர்களுக்கு இம்மாதிரி யெல்லாம் தோன்றுவது இயற்கை தானே? அவள் தனது வருங்காலத்தைப் பற்றி சாவகாச மாகச் சிந்திக்கலாமென்று நினைத்திருந்தாள். அப்படித் தீர் மானித்துக்கொண்டு எவ்வளவோ நாட்களாகிவிட்டன. ஆனால் இன்றுவரை அவளால் ஏதாவது சாதிக்க முடிந்ததா? ஏதாவது தீர்மானந்தான் செய்ய முடிந்ததா?

தனிமையால் சலிப்படைந்த மேரி, தனது தோழிகளுக்குச் சீட்டு அனுப்பி வரவழைத்து, தங்களுடைய மாளிகைப் பூங்காவை ஒட்டியிருந்த எல்க்ஹார்ன் கிரீக் என்ற இடத்தில் ஓர் உல்லாச விருந்துக்கு ஏற்பாடு செய்தாள்.

அன்றைய விருந்தின் கோலாகலம் அவள் உள்ளத்தின் சூனியத்தை விரட்டிவிட்டது.

விருந்து நடந்த மறுநாள் காலையில், பாட்டி பார்க்கர், மேரியைப் பார்க்க விரும்புவதாகச் செய்தி வந்தது. மேரி உடனே அலங்கரித்துக் கொண்டு பாட்டியின் வீட்டுக்குச் சென்றாள்.

பார்க்கரின் வீடு வெஸ்ட் ஷார்ட் தெருவில், முன்பு மேரியின் பெற்றோர் வசித்து வந்த வீட்டுக்கு அடுத்தாற் போல் இருந்தது. லெக்ஸிங்டனிலேயே பெரிய வீடு அதுதான்; பழைமையானதுங்கூட. பழம் பாணியில் கட்டப்பட்டது. படுக்கை அறை இருக்கும் தளத்துக்கு உயரே கோபுரம் போல் இரண்டு ஸ்தூபிகள் கட்டப்பட்டிருக்கும். முன் காலத்தில், கப்பல் தலைவர்களின் மனைவியர், அம்மாதிரி ஸ்தூபிகளைத் தங்கள் வீடுகளில் அமைத்து, கடலியாத்திரை சென்றிருக்கும் கணவர் வரும் வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பார்களாம். பார்க்கர் அதேமாதிரி தன் வீட்டு ஸ்தூபியில் அமர்ந்து தொடுவானத்தைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருப்பாள். ஒரு சமயம் மேரி அவளிடம், ''நீ எந்தக் கப்பலை எதிர்பார்த்து இங்கே காத்திருக்கிறாய்

பாட்டி? நம்முடைய எல்க்ஹார்ன் கிரீக்கில் ஒரு சாதாரணப் படகுகூடச் சரியாக மிதந்து வரமுடியாதே!'' என்று வேடிக்கையாகக் கேட்டாள்.

''நான் இங்கேயிருந்து நகரத்தைப் பார்த்துக்கொண் டிருக்கிறேன் மேரி! அங்கு நடப்பவை அனைத்தையும் நான் இங்கிருந்தே காண முடியும்'' என்றாள் பார்க்கர். பாட்டி சொன்னது பொய்யல்ல என்பதை டாடு குடும்பத்தினர் ஒவ்வொருவரும் அறிவார்கள். ஆம்; அந்த உயரமான ஸ்தூபியிலிருந்து நகரத்தின் ஒவ்வொரு பாகத்தையும் நன்கு காண முடியும். 'ஸாண்டியை நான் நிராகரித்து விட்ட விவரம் பாட்டிக்குத் தெரிந்திருக்கும். கோடைக்காலத்தை நான் தனியே கழித்துக்கொண்டு மேலே என்ன செய்வது என்று சிந்தித்துக்கொண்டிருப்பதாயும் அவள் கூறுவாள், என்று பார்க்கரின் வீட்டுக்குள்ளே நுழைந்தபோது மேரி நினைத்துக்கொண்டாள். 'ஆனால் இதையெல்லாம் அவள் தன் வீட்டு ஸ்தூபியிலிருந்து கண்டிருக்க முடியாது; ஏனென்றால் அவள் மேஜர் ராபர்ட் பார்க்கரின் மனைவியாக, **பென்ஸில்வேனியாவிலிருந்து** வந்திறங்கியபோது லெக்ஸிங்டன் சிறு கிராமமாகத்தான் இருந்தது. ஆனால் இப்பொழுது அது ஒரு நகரமாக வளர்ந்துவிட்டது' என்றும் அவள் வேடிக்கை யாக எண்ணிக்கொண்டாள்.

பதினைறு அடி உயரமுள்ள பிரம்மாண்டமான கூடத்தின் வழியே மேரி உள்ளே நடந்தாள். அந்தக் கூடத்தின் பதினைந்து அடி உயர ஜன்னல்களையும், அதிக ஆடம்பரமாக சலவைக் கற்கள் பாவப்பட்டிருந்த கணப்புகளையும், சுவர் விளிம்புகளில் செய்யப்பட்டிருந்த சித்திர வேலைப்பாடுகளையும் பார்த்த அவள் தனக்குள்ளே நகைத்தவாறு, 'பாட்டிக்குப் பணம் இருக்கிறது; திறமை இருக்கிறது; ஆசை இருக்கிறது; ஆனால் அவளிடம் அழகு உணர்ச்சிதான் இல்லை' என்று நினைத்துக்கொண்டாள்.

அவள் மரப்படிகள் வழியே மேலே ஏறி, இரண்டாவது ஸ்தூபியை அடைந்தாள். பாட்டி பார்க்கர் அங்கே நின்று, வழக்கம்போல் ஜன்னல் வழியே வெளியே பார்த்துக்கொண் டிருந்தாள். மேரி சப்தம் செய்யாமல் பாட்டியின் பரந்த முதுகையும், அவள் தனது சிகையை இழையச் சீவி, தலையின் மீது குவித்துக் கட்டிக்கொண்டிருந்த அமைப்பையும் கண் கொட்டாது பார்த்துக்கொண்டு சிறிது நேரம் நின்றாள். பார்க்கருக்கு எழுபது வயதாகி விட்டது. அவள் தனது மூப்பதாவது வயதிலேயே கணவரை இழந்துவிட்டாள். மொத்தம் பதினேழு வருடங்கள்தான் இல்லற வாழ்க்கை நடத்தி இருந்தாள். இருந்தபோதிலும், அவள் இன்றளவும் மறுமண ஆசை கொண்டதேயில்லை.

'' நல்ல பெண்களுக்கு ஒரே ஒருவரிடந்தான் காதல்

பிறக்கும்'' என்று அவள் கூறுவாள். மனைவியை இழந்த புருஷர்களும் மறுமணம் செய்துகொள்ளலாகாது என்பது அவள் கருத்து. அதனால்தான் ராபர்ட் டாடு மறுமணம் செய்துகொண்டதில் அவளுக்கு அத்தனைக் கோபம்.

மேரி தனக்குப் பின்னால் வந்து நிற்பதைப் பார்க்கர் அறிந்து கொண்டாள். இருந்தாலும், அவள் தலையைத் திருப்பாமலே ''அந்த மிஸ்ஸிலிப்பிப் பையனை நீ நிராகரித்துவிட்டாயாமே?'' என்று கேட்டாள்.

''ஆமாம் பாட்டி! அவரை என் மனது விரும்பவில்லை'' என்றாள் மேரி.

பார்க்கர் தலையைத் திருப்பி, ''அவன் உனக்கு ஏற்ற துணைவனாக இருந்திருப்பான்; அவனை நிராகரித்ததன் மூலம், உன் வாழ்வில் ஒரு குறையை ஏற்படுத்திக்கொண்டு விட்டாய்'' என்றாள்.

மேரி அங்கேயிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டே, ''நீ சொல்லுவது உண்மைதான் பாட்டி; நான் இன்னும் தனியாகத்தான் நிற்கிறேன். அதைப்பற்றிச் சிறிதளவு பயங்கூட இப்பொழுது எனக்குத் தோன்றுகிறது'' என்றாள்.

''ஆனால் உனக்கு ஏன் கல்யாண ஆசையே தோன்றவில்லை, குழந்தாய்? கவர்ச்சியுடன் விளங்குகிறாய்; உணர்ச்சியுடன் இருக்கிறாய்.....'' அவளுடைய குரல் சிறிது கடுமையாயிற்று. தொடர்ந்து சொன்னாள்: ''அந்த பெட்ஸி ஹம்ப்ரிஸ், ஃபிரான்ஸெஸ்ஸை லெக்ஸிங்டனிலிருந்து துரத்தியதுபோல் உன்னையும் துரத்த வழி செய்துகொண்டு விடாதே, கண்ணே!''

''இது என்ன பேச்சு பாட்டி? அவள் யாரையும் ஊரைவிட்டுத் துரத்தவில்லை.''

மேரி கூறியதைப் பார்க்கரின் செவிகள் ஏற்றுக்கொள்ளவே இல்லை. அவள் தன் போக்கில் மேலும் பேசினாள்: ''இதோ இந்த ஜன்னல் வழியே வெளியே பார் மேரி. வயல்கள் சூரியனின் ஒளி பட்டு மிளிர்வதைக் கவனி. இங்குள்ள ஒவ்வொரு பயிரையும், ஒவ்வொரு பிராணியையும், ஒவ்வொரு குன்றையும், ஒவ்வொரு நீரோடையையும் நான் அறிவேன். கெண்டக்கி ஒரு சொர்க்க பூமி, மேரி. இந்த உல்லாசம் நிறைந்த **புளூ கிராஸ்** பிரதேசத்தில் உனக்கு ஒரு துணைவன் இல்லாமலா போய்விட்டான்?''

''இருக்கலாம் பாட்டி, ஆனால், அத்தகையோர் தாங்கள் இருப்பதை பத்திரிகையில் விளம்பரப்படுத்திக் கொண்டா இருக்கிறார்கள்? தவிர, நான் எதிர்பார்ப்பது . . . .'' மேரி எழுந்து, கண்களில் ஒளி வீசப் பாட்டியைப் பார்த்துக்

கொண்டே தொடர்ந்தாள்; ''என்னைச் சரிசமமாக நடத்தக் கூடிய ஒருவரே எனக்கு வேண்டும், பாட்டி. என்னை உண்மையிலேயே ஒரு பக்கபலமாகக் கருதக்கூடிய ஒருவரையே என் மனம் நாடுகிறது. ஒரு பெண்ணிடம் அழகு, குணம் இவ்விரண்டுக்கும் மேம்பட்ட ஒன்றை எதிர்பார்க்கும் ஒருவரையே நான் தேடிக்கொண்டிருக்கிறேன். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, முதல்தரமான அறிவு, ஊக்கம், ஆவல் மற்றும் துணிவுடைய ஒருவரையே நான் ஏற்றுக் கொள்ளுவேன்.''

பாட்டி பார்க்கர் இடது கண்ணைச் சிமிட்டுவது போல் பாதி மூடிக்கொண்டு சொன்னாள்: ''ஆனல் மேரி, நீ இன்றைய வாலிபர்களை மிகத் தீவிரமாக எடைபோடுகிறாய். அவர்களுக்கு, மனைவியிடமிருந்து எது எதை எப்படிப் பெற வேண்டும் என்பது தெரியவில்லைதான். அதற்காக நீ யாரை வேண்டுமானலும் மணந்துகொண்டு விடு என்று நான் சொல்லவில்லை. இருக்கிறவர்களில் நல்லவனைத் தேர்ந்தெடுத்து மணந்துகொள். 'மனைவியே தனக்கு எல்லாம்' என்று அவன் கருதும்படி நடந்துகொள். பிறகு அவனை உன் பிடிக்குள் சிக்க வைத்துக்கொண்டு, அவனுக்கே தெரியாமல், அவனுடைய கொள்கைகளை நீ மெதுவாக மாற்றிவிட வேண்டும்.''

பாட்டி இப்பொழுது இடது கண்ணை நன்றாகத் திறந்து கொண்டு, வலது கண்ணைச் சிமிட்டுவது போல் பாதி மூடிக் கொண்டாள். பிறகு சொன்னாள்: ''நீ ஒரு லட்சிய மனைவியாக விளங்க விரும்புகிறாய் அல்லவா? அதற்குச் சரியான வழியை நான் சொல்லித்தருகிறேன். அதற்குத் தேவையான சாதுரியமும், நிச்சயமும் உன்னிடம் இருப்பதை, உன் கணவனை மெதுவாக அறியச் செய். மிக மிக மெதுவாக, அவனுடைய கிரகிப்புத் தன்மைக்குத் தக்கபடி இதை நீ செய்யவேண்டும். கல்யாணம் ஆகி ஐந்து பத்து வருடங்கள் ஆவதற்குள்ளாகவே, நீ விரும்பிய விதத்தில் மண வாழ்வு அமைந்து விட்டதைக் காண்பாய். காலாந்த காலமாக, கெட்டிக்கார மனைவியர் கடைப்பிடித்து வரும் வழி இதுதான்.''

''நீயும் இப்படித்தான் தாத்தாவைக் கைக்குள் போட்டுக்கொண்டாயா, பாட்டி?''

''சந்தேகமில்லாமல். நான் அவரைக் கல்யாணம் செய்துகொண்ட போது அவர் என் லட்சியக் கணவராக இருக்கவில்லை. ஆனல் படிப்படியாக, அவருடைய போக்குக்குப் பணிந்தவனைப்போல் நடந்துகொண்டே, நான் அவரை எனக்கு ஏற்றவராக்கிக்கொண்டுவிட்டேன். உலகத்தி

லேயே மிகப் பெரிய ஒட்டப் பந்தயம், மேரி, திருமணம் என்பது. ஆகையால் அதில் பங்கெடுத்துக்கொள்ளும் பெண்ணுக்கு அளவற்ற திறமையும், பொறுமையும் வேண்டும். உன்னுடைய புத்தகப் படிப்பையும், அறிவாளிப் பிதற்றல்களையும் குப்பையில் கொண்டு கொட்டு. அருமையான கண்கள் உனக்கு இருக்கின்றன, குழந்தாய்! அவற்றுக்கு அறிவொளியூட்டு. கெண்டக்கிக்காரர்களைக் கிறங்க வைக்கும் அங்க அமைப்புகளைப் பெற்றிருக்கிறாய்; அதை வெளிக்காட்டு. உன்னுடைய வனப்பையும், உன்னுடைய ஆர்வத்தையும், இயற்கையான உனது உல்லாசத்தையும் கொண்டு வலை வீசு. உனக்கு யாரைப் பிடிக்கிறதோ அவனை மணந்துகொள்; நிமிஷத்தில் அவன் உன் அடிமையாகி, உனது காலடியில் விழுந்துகிடப்பான்.''

அன்று மேரி பாட்டியிடம் விடைபெற்றுக்கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருக்கையில், 'ஆகவே நான் கல்யாணம் செய்துகொள்ளாமல் இருப்பது பாட்டிக்குக் கூட அல்லவா கவலையளித்திருக்கிறது!' என்று எண்ணிக்கொண்டாள்.

வீட்டை அடைந்ததும், மேமி ஸாலி அப்பொழுதுதான் தபாலில் வந்திருந்த கடிதம் ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தாள். அது எலிஸபெத், மேரிக்கு அனுப்பியிருந்த கடிதம். கடிதத்தின் ஆரம்பத்தில், ஃபிரான்ஸெஸ் கல்யாணத்தின்போது அணிந்துகொண்டிருந்த வெள்ளை ஸாட்டின் கவுனைப்பற்றியும், ஐந்து அடுக்குகளை உடைய திருமணக் 'கேக்' கைப் பற்றியும் விவரமாகக் குறிப்பிட்டிருந்தாள்: இறுதியாக எழுதியிருந்த வரிகளைப் படித்தபோது மேரியை வியப்பு வந்து மூடிற்று.

''ஃபிரான்ஸெஸ்ஸுக்குக் கல்யாணமாகி, அவள் கணவனோடு குளோப் ஹோட்டலுக்குப் போய்விட்டாள். இப்பொழுது அவளுடைய இடம் என் வீட்டில் காலியாக இருக்கிறது, கண்ணே மேரி.''

''காலியாக இருக்கிறது!'' என்ன விநோதமான வார்த்தை—அதை நிரப்ப யாரையோ அழைப்பதுபோல்?

இரண்டு வருஷங்களுக்கு முன்பு, தான் அங்கு கழித்த உல்லாசமான நாட்களுக்கு மேரியின் மனசு தாவிற்று. ஸ்பிரிங்ஃபீல்டு ஒரு சிறு கிராமம். அவ்வூரின் ஜனத்தொகை சுமாராக ஆயிரத்து ஐந்நூறு கூட இருக்காது. நிர்மானுஷ்யமான புல்வெளிப் பிரதேசம் அது. அங்கும் இங்குமாகத் தெருக்கள் இருக்கும். ஊரைச் சுற்றித் தானிய வயல்கள். நீல நிற வானத்தில் வெப்பக் காற்றை சுவாசித்துக் கொண்டே காகங்கள் கூட்டம் கூட்டமாகப் பறந்துகொண்டிருக்கும். தெருக்களுக்கு நல்ல ரஸ்தா கிடையாது.

கடை வீதிகள் இருந்த இடத்துக்கும், ஜனங்கள் வசித்து வந்த இடத்துக்கும் இடையே ஒரு நல்ல நடைபாதை கூடக் கிடையாது. ஸாங்கமன் என்ற நதிதான் அவ்வூருக்கு அருகிலிருந்த நீர்நிலை. அந்த நதிக்கும் ஊருக்கும் ஆறு மைல் தூரம். தன் வீட்டுத் தோட்டத்தை ஒட்டியிருந்த சிற்றோடையில் இன்பமாகப் பொழுதுபோக்கிக் களித்திருந்த மேரிக்கு, இங்கே எட்டும் தூரத்தில் ஒரு நீர்நிலை கூட இல்லாதது என்னவோ போலிருந்தது. கிராமத்தில் இருந்த புல்வெளிச் சதுக்கம் எல்வளவோ மனோகரமாகத்தான் இருந்தது. அந்தச் சதுக்கத்தைச் சுற்றிப் பல்வேறு கடை, கண்ணிகள் இருந்தன. ஆனால் லெக்ஸிங்டனிலும் புளூ கிராஸிலும் இருந்து பழக்கப்பட்ட மேரிக்கு இந்த ஸ்பிரிங் ஃபீல்டும், ஸாங்கமன் ஜில்லாவும் சிறிதும் பிடிக்கவே இல்லை.

இருந்தாலும் அங்கே தங்கியிருந்த நாட்களை அவள் நன்கு அநுபவிக்கத்தான் அநுபவித்தாள். ஸ்பிரிங்ஃபீல்டில் குடியேறி இருந்தவர்களில் பெரும்பாலோர் முன்பு லெக்ஸிங்டன் வாசிகளாக இருந்தவர்கள்தாம். ஆகையால் அவர்கள் அந்த ஊர்ச் செய்திகளை அறிய மிக்க ஆவலோடு இருந்தனர். மேரியின் இரண்டு சகோதரிகளும், மூத்த சகோதரியின் கணவரும் தவிர, உறவினர் சிலரும் அங்கே இருந்தனர். அவளுடைய பெரியப்பாவான ஜான் டாடு என்பவர் அங்கே டாக்டராக இருந்தார். மற்றும் பெரியப்பாவின் பிள்ளைகளான ஜான் டாடு ஸ்டூவர்ட், ஜான் ஜே. ஹார்டின், ஸ்டீபன் டி. லோகன் என்ற மூவரும் அங்கே வக்கீல் தொழில் நடத்தி வந்தார்கள். எலிஸபெத்தின் கணவன், **நினியன் எட்வர்ட்ஸ்**, இல்லினாய்ஸ் கவர்னரின் மகன்; ஆதலால் அவனுக்கு ஏராளமான சொத்து இருந்தது.

எட்வர்ட்ஸ் தம்பதிகளின் மாளிகைதான் ஸ்பிரிங்ஃபீல்டிலேயே மிகப் பெரிதானது; அழகானது. தவிர, அது அந்த ஊரின் சமூக வாழ்வுக்குக் கேந்திரமாகவும் விளங்கிவந்தது. அங்கு வந்து சில நாட்கள் ஆவதற்குள்ளாகவே மேரி அவ்வூரின் அழகற்ற தோற்றத்தையும், வசதிக் குறைவுகளையும் மறந்துவிட்டு, எல்லோருடனும் கலந்து பழகி, குதூகலமாக இருக்கத் தலைப்பட்டுவிட்டாள்.

அநேகமாக ஒவ்வொரு நாளும், ஒரு விருந்து, அல்லது ஒரு 'பால்' நடனம், அவளைக் கௌரவிக்க நடத்தப்பட்டு வந்தது. இந்த ஒதுக்குப் புறமான கிராமத்தில் கூட சிறந்த உடை உடுத்தும் பெண்டிரையும், அருமை அருமையான கோச்சு வண்டிகளையும், மற்றும் அறிவாளிகளின் சூழ்நிலை நிலவுவதையும் கண்டு அவள் மிகவும் வியப்படைந்தாள். **ஸ்பிரிங்ஃபீல்டு** வாலிபர் சங்கத்தில், அடல்பி அல்லது யூனியன் தத்துவ ஞான சங்கங்களில் நடப்பதுபோல் விவாதக் கூட்டங்கள்

நடப்பது அவளுக்கு இன்னும் ஆச்சரியமாக இருந்தது. அவ்வூரில் இரண்டு தினசரிப் பத்திரிகைகள் கூடப் பிரசுரமாகிக்கொண்டிருந்தன. ''ஸாங்கமன் ஜர்னல்,'' ''இல்லினாய்ஸ் ரிப்பப்ளிக்கன்'' என்ற அந்த இரண்டு பத்திரிகைகளும், லெக்ஸிங்டன் பத்திரிகைகளை விடக் காரசாரமாக, அன்றாட அரசியல் விஷயங்களைப்பற்றித் தலையங்கங்களும், அறிக்கைகளும் தந்துகொண்டிருந்தன. ஸ்பிரிங்ஃபீல்டின் அரசியல் சூழ்நிலைதான் அவளை மிகவும் கவர்ந்தது. அவ்வூர் மக்கள் அரசியலில் மூழ்கிக்கிடந்தார்கள். அங்கு பெரும்பான்மையானோர் 'விக்' கட்சியின் ஆதரவாளர்கள் தாம்; இருந்தாலும் போதிய அளவு 'ஜனநாயகக்' கட்சிக்காரர்களும் இருந்தனர். அவர்கள் வாக்கு வன்மையிலும், செயலாக்கத்திலும் சிறந்து விளங்கினார்கள். மேரி அங்கு வருவதற்கு நான்கு மாதங்களுக்கு முன்பு இல்லினாய்ஸ் மாகாண சட்டசபை, அம்மாகாணத்தின் தலைநகரை வாண்டாலியாவிலிருந்து **ஸ்பிரிங்ஃபீல்டுக்கு** மாற்றவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. 1837 இறுதியில் அவள் அவ்வூரை விட்டுக் கிளம்பியபோது மிகப்பெரிய அரசாங்க மாளிகை ஒன்றை நிர்மாணிப்பதற்கான வேலைகள் தடபுடலாக நடந்துகொண்டிருந்தன.

அந்த அரசாங்க மாளிகையைப் பற்றிய செய்தி எதையோ 'அப்ஸர்வர்' பத்திரிகையில் பார்த்த நினைவு அவளுக்கு வந்தது. அவள் உடனே தன் தந்தையின் படிப்பு அறைக்குச் சென்றாள். அங்கே பல்வேறு செய்திப் பத்திரிகைகள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. **பால்டிமோரிலிருந்து** வரும் ''நைல்ஸ் ரெஜிஸ்டர்'' என்ற தினசரிதான் அங்கு மிகவும் பிரபலமானது. ஆகையால் அதன் அடுக்குதான் எல்லாவற்றிலும் பெரிதாக இருந்தது. அவள் ''அப்ஸர்வர்'' பத்திரிகை அடுக்கைத் துழாவி, குறிப்பிட்ட செய்தி வந்திருந்த பத்திரிகையை எடுத்துக்கொண்டு தன் தந்தையின் மேஜையின் முன் உட்கார்ந்து படிக்கலானாள்.

> ''**ஸ்பிரிங்ஃபீல்டில்** புதிதாகக் கட்டப்பட்டு வரும் இல்லினாய்ஸ் அரசாங்க மாளிகைக்கு 1,20,500 டாலர் செலவாகும். மூன்று ஏக்ரா நிலத்தில் கட்டப்படும் இந்த மாளிகை 132 அடி நீளமும், 89 அடி அகலமும், 44 அடி உயரமும் இருக்கும்.''

மேரியின் சகோதரி எலிஸபெத்தின் கணவர் நினியன் டபிள்யு. எட்வர்ட்ஸும், வக்கீல் தொழில் நடத்தி வரும் அவளுடைய பெரியப்பா பிள்ளை ஜான் ஜே. ஹார்டினும், இல்லினாய்ஸ் சட்ட சபை அங்கத்தினர்கள். அவர்கள் அவளை, டானியல் வெப்ஸ்டரின் பிரசங்கத்தைக் கேட்க

அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அரசியல் விருந்து ஒன்றுக்குக்கூடக் கூட்டிச்சென்றிருக்கிறார்கள்.

இத்தகைய பிரசங்கங்களுக்கும், விருந்துகளுக்கும் அமெரிக்காவின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வாலிபர்கள் வருகிறார்கள். அவர்கள் அரசியல் விஷயங்களே அலசு அலசென்று அலசுகிறார்கள். அரசியல் உலகில் பெயர் பெற்று வாழவேண்டும் என்பதே அவர்களின் ஆவல். அதற்காகவே, இல்லினாய்ஸுக்கு வந்திருப்பதாகத் தயங்காமல் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஏனென்றால் '' இல்லினாய் ஸின் அரசியல் உலகம் புதிதானது; இளமையானது. இங்கே அதிகமான போட்டா போட்டிகளும் இல்லை '' என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

அந்த வாலிபர் குழாம் தன்னை எத்தனை தூரம் கவர்ந்தது என்பதை அவள் இன்பத்தோடு நினைத்துப் பார்த்துக்கொண்டாள். வெர்மாண்டைச் சேர்ந்த ஸ்டீஃபன் டக்ளஸ்ஸை அவள் நினைத்தாள். அவனுக்கு இருபத்து நான்கு வயதுதான் ஆகிறது. இருந்தாலும் அவனுடைய எண்ணங்களில் ஒளி சிதறும்; பேச்சுக்களில் கனல் பறக்கும். அவன் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவன். அப்புறம் ஸ்டீபன் டக்ளஸ்ஸைத் தீவிரமாகப் பின்பற்றும் இருவர் அவள் நினைவில் வந்தனர். அயர்லாந்தில் பிறந்த ஜேம்ஸ் ஷீல்ட்ஸ்: ஜேம்ஸ் ஒரு பிரசித்தி பெற்ற போர்வீரன். தாராள மனசுடையவன்; சமரசப் போக்கும் உண்டு. இருந்தாலும் மண்டைக் கனமும், அதிகமான பகட்டும் உடையவன். அடுத்ததாக லிமன் டிரம்புல். அவன் பெல்வில்லில் வக்கீலாக இருந்தான்; சாதுவானவன்; கவுரவமானவன்; அழகானவன். பிறகு ஜோஷுவா ஸ்பீடு. இவன் விக் கட்சியைச் சேர்ந்தவன். ஸ்பிரிங்ஃபீல்டிலேயே மிக அழகிய வாலிபனென்று இவனைச் சொல்லலாம். ஸ்பீடு பிரபலமான கடை ஒன்றின் பங்காளி. ஆனால் நிலையற்ற மனமுடையவன். காதலிப்பதும், காதலே உதறுவதும் அவனுக்குத் தண்ணீர் பட்ட பாடு என்பது பிரசித்தம். இன்னும் மற்றொரு 'விக்' கட்சிக்காரனை, ஜேம்ஸ் மாத்தெனீ. தன் தந்தையைப் போன்றவன் மாத்தெனீ என்பது மேரியின் அபிப்பிராயம். ஏனென்றால், அவரைப் போல் இவனும் ஏதாவது ஒரு ஸ்தாபனத்துக்குள்ளே நுழைந்து கொண்டு அமைதியாகப் பணியாற்றிக்கொண்டிருப்பதையே விரும்புகிறவன்.

ஆம்; அவர்கள் எல்லோரும் உற்சாக மிக்க வாலிபர்கள். அவர்களுடன் கழித்த ஒவ்வொரு மணி நேரத்தையும் மேரி மிகவும் ரசித்தாள். ஆண்-பெண்களிடையே, கொள்கை பற்றிய வித்தியாசந்தான் இருக்கலாம்; வேறு வித வித்தியாசங்கள் எதுவும் இருக்கக்கூடாது என்று கருது

பவர்கள் அவர்கள். உண்மையில், அந்நகரில் அவ்வித வேற்றுமைகள் இன்னும் முளைக்கவில்லை. ஆகையால் அவர்கள், மேரியுடன் எவ்விதத் தயக்கமும் இன்றிச் சமத்துவம் கொடுத்துப் பழகி வந்தார்கள். தவிர, அவளுடைய குடும்பத்தினர் அனைவரும் விக் கட்சி ஆதரவாளர்களாதலாலும், அக்கட்சியின் பிரபலத் தலைவரான ஹென்ரி கிளேயுடன் அவள் நெருங்கிப் பழகிவந்தவளாதலாலும், தங்கள் கோஷ்டியில் அவளைச் சேர்த்துக்கொண்டதில் அவர்கள் பெருமையே அடைந்தார்கள்.

ஸ்பிரிங்ஃபீல்டில் தங்கியிருந்த மூன்று மாதங்களும் மேரிக்கு ஒரே குதூகலமாகத்தான் கழிந்தன. இருந்தாலும் அவள் உள்ளத்தில் காதலின் சலனம் சிறிது கூட ஏற்படவில்லை. அவளுடன் பழகிவந்த வாலிபர்கள் வாழ்வில் ஒரு தகுதியை அடைவதற்காகப் பாடுபட்டுக்கொண்டிருந்ததால், அவர்களுக்கு மனைவி, மக்கள், குடும்பம் போன்ற சிந்தனையே ஏற்படவில்லை. தவிர அவளும், தனக்கு ஒரு கணவனைத் தேடிக் கொள்ளுவதற்காக ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வரவில்லை. எலிஸபெத்தும் சரி, அந்த எண்ணத்தோடு அப்பொழுது அவளை ஸ்பிரிங்ஃபீல்டுக்கு அழைத்திருக்கவில்லை. அந்த எண்ணத்தோடு அவள் தன்னை அழைத்திருக்க மாட்டாள் என்பது மேரிக்கு நிச்சயமாகத் தெரியும். மூத்த மகளுக்குக் கல்யாணம் முடியுமுன்பு இளைய மகளின் கல்யாணத்தை நடத்த எந்தத் தாயுமே விரும்பமாட்டாள். எலிஸபெத் இவர்களுக்குக் கிட்டத்தட்ட தாய் போன்றவள் தானே? அப்பொழுது மேரிக்கு மூத்தவளான ஃபிரான்ஸெஸ்ஸுக்குக் கல்யாணம் ஆகவில்லை; ஆகையால் அதற்கு முன்பு மேரி மணவினையில் ஈடுபட்டுவிட வேண்டு மென்ற விருப்பத்துடன் அவளை வரவழைத்திருப்பாளா எலிஸபெத்?

மூன்று மாதங்களை உல்லாசமாகக் கழித்து விட்டு, மேரி தன் நண்பர்களிடம் விடை பெற்றுக்கொண்டு லெக்ஸிங்டனுக்கு வந்து சேர்ந்தாள்.

ஆனால் இப்பொழுது ஃபிரான்ஸெஸ்ஸுக்குக் கல்யாணமாகிவிட்டது. மேரிக்கு அழைப்பு வந்திருக்கிறது.

8

ராபர்ட் டாடும், குடும்பத்தினரும் திட்டமிட்டிருந்ததற்கு முன்னதாகவே செப்டம்பர் மாத ஆரம்பத்திலேயே பீஞ விஸ்டாவிலிருந்து திரும்பி வந்துவிட்டனர். ராபர்ட்

டாடு தலைவராக இருந்த பாங்கில் ஒரு தகராறு ஏற்பட்டு விட்டதே இதற்குக் காரணம். தன் தந்தை இத்தனை தொல்லையடைந்திருந்ததை மேரி இதுவரைக் கண்டதேயில்லை. அவருடைய உடலின் நிறமே கவலையால் மாறிப் போயிருந்தது. ஸ்டீவன்ஸ் என்பவருக்கு, ராபர்ட் டாடின் அநுமதியின் பேரில், கெண்டக்கி பாங்கின் லெக்ஸிங்டன் கிளை ஒரு பெருந்தொகை கடன் கொடுத்திருந்தது. ஸ்டீவன்ஸுக்கு ஒரு பெரிய எஸ்டேட்டு இருந்தது. தவிர, அவர் பிரசித்தமான சணல் உற்பத்தியாளர். இருந்தபோதிலும் அவர் திடீரென மரணமடைந்ததால், அவருடைய பொருளாதார விஷயங்கள் ஊழலாகி, பாங்கியின் பணத்துக்கு ஆபத்து வந்துவிடும்போலிருந்தது. பாங்கியின் தலைவர் என்ற முறையில் ராபர்ட் டாடின் தலைமீதுதான், பணத்தை வசூலிக்கவேண்டிய பெரும் பொறுப்பு சுமந்திருந்தது.

அன்று மேரி வெஸ்டர்ன் எம்போரியத்தில் சில புதுத் துணிமணிகள் வாங்கச் சென்றிருந்தபோது காஸியஸ் கிளே ஒரு கைப்பிரம்பு வாங்குவதற்காக அங்கே வந்தான். அவன் வாஞ்சையோடு மேரியின் கையைக் குலுக்கிவிட்டு, ''உன் தகப்பனார், பாங்கு விஷயமாக ஒரு சங்கடத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டு மிகவும் வருந்துகிறேன் மேரி. இருந்தாலும் அதற்காக அவர் இத்தனை மனச்சஞ்சலம் அடையவேண்டியதில்லை'' என்றான்.

''காஷ்! நீ வீட்டுக்கு வந்து அவருக்கு ஆறுதல் சொல்லேன்'' என்றாள் மேரி.

''நான் வரமுடியாது மேரி; இப்பொழுது நான் உன் தகப்பனார் மீது மிகவும் கோபமாக இருக்கிறேன்.''

''கோபமா? எதற்கு காஷ்?''

''ஸ்டீவன்ஸின் கடனை வசூல் செய்வதற்காக அவருடைய அடிமைகளை ஏலத்தில் விற்றுவிடும்படி உன் தந்தை உத்தரவிட்டிருக்கிறார், மேரி. குடும்பமாக இருப்பவர்களைப் பிரிக்கக்கூடாதென்றோ, அந்த நீக்ரோக்களைத் தொலை தூரத்திலிருந்து வருபவர்களுக்கு விற்கக்கூடாதென்றோ, எவ்வித நிபந்தனையும் விதிக்காமலே அவர்களை விற்றுவிடக் கட்டளையிட்டிருக்கிறார்.''

மேரி அமைதியுடன் அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டு நின்றாள். முடித்ததும் அவள் சொன்னாள்: ''நான் விசனிக்கிறேன் காஷ். இது உன் மனதை எவ்வளவு புண்படுத்தியிருக்கும் என்பது எனக்குத் தெரியும்.''

வாங்க வந்த சாமான்களைக்கூட வாங்காமல் அவள் வீட்டுக்கு விரைந்து சென்றாள்.

ஆனால் வீட்டில் அப்பா இல்லை. மேரி தன் அறைக்குச்

சென்றுவிட்டாள். மாலை ஆறு மணிக்கு ராபர்ட் டாடு வீடு திரும்பினார். அவர் உடலும் உள்ளமும் சோர்வுற்றவ ராகக் காணப்பட்டார்.

மேரி அவரிடம் சென்று, ''அப்பா! நான் இன்று காஷைச் சந்தித்தேன். நீங்கள், ஸ்டீவன்ஸின் அடிமைகளை ஏலத்தில் விற்கப்போவதாக அவன் சொன்னான். உண்மை தானா அப்பா அது?'' என்று கேட்டாள்.

''ஆம் மேரி; நாம் அப்படிச் செய்துதான் ஆக வேண்டியிருக்கிறது.''

''ஆனால் நீங்கள் இம்மாதிரிச் செய்வதை எதிர்த்து வந்தீர்களே அப்பா! அது மனிதத் தன்மையல்ல என்று கூறினீர்களே அப்பா!''

ராபர்ட் டாடு தமது கைகளைப் பிசைந்துகொண்டார். ''நம்முடைய நஷ்டங்களைக் குறைத்துக்கொள்ள அது ஒன்றுதான் வழியாக இருக்கிறது கண்ணே. அடிமைகளை விற்பதன் மூலம் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு பணத்தை நாம் பெற முயலத்தான் வேண்டும்.''

''குடும்பத்தினரைப் பிரித்து விற்கக்கூடாது; அவர் களைத் தூரதேச வியாபாரிகளுக்கு விற்கக்கூடாது என்றுவது நீங்கள் வற்புறுத்தலாகாதா அப்பா?''

''அப்படியெல்லாம் வற்புறுத்தினால், அவர்களுக்கு ஒன்றுக்குப் பாதி விலைதான் கிடைக்கும் மேரி. ஸ்டீவன்ஸ் இப்படித் திடீரென்று செத்துப்போவார் என்று யார்தான் எதிர்பார்த்திருக்க முடியும்? என் பணம் மாத்திரம் போவ தாக இருந்தால், நீ சொல்லுகிறபடி செய்துவிடுவேன். ஆனால் இதில் பிறர் பணமல்லவா அதிகமாகச் சிக்கிக்கொண்டிருக் கிறது? பாங்கின் இதரப் பங்காளிகளும், பணம் போட் டிருப்பவர்களும் அல்லவா நஷ்டமடைய வேண்டியிருக் கிறது?''

அவர் முகத்தைக் கைகளில் தாங்கிக்கொண்டு வருத்தத் துடன் உட்கார்ந்து விட்டார். மேரி அருகில் வந்து அமர்ந்து, அன்போடு அவர்மீது கைவைத்துக் கொண்டே, ''இதைத் தவிர வேறு வழியேதும் இல்லையா, அப்பா?'' என்று கேட்டாள்.

அவர் அவளை நிமிர்ந்து பார்த்து, விசனத்துடன் தலை யசைத்தார். ''இல்லை மேரி; நான் சரியானபடி சிக்கிக் கொண்டிருக்கிறேன். ஸ்டீவன்ஸின் அடிமைகளை, அவ ருடைய குதிரைகளையும் இதர சாமான்களையும் விற்பது போல், எப்படி அதிகமான பணம் ஈட்ட முடியுமோ அப்படி விற்றுத்தான் ஆகவேண்டும். நான் பாங்கின் தலைவராக இருக்குமட்டும், அதன் நடைமுறை நடவடிக்கைகளை நிறைவேற்றியே ஆகவேண்டும்.''

''தலைவர் பதவி வகித்ததற்கு இது மிகப் பெரிய தண்டனை இல்லையா அப்பா?''

டாடு அவளைக் கூர்மையாக நோக்கினார். ''நீ, குழந்தைமாதிரிப் பேசுகிறாய், மேரி. உனக்கு உலக அனுபவம் இன்னும் நிறைய ஏற்படவேண்டும். கென்டக்கியில் அடிமைப் பழக்கத்தை நானா புகுத்தினேன்? மாறாக அதை ஒழிக்க நான் பாடுபட்டு வந்தது உனக்குத் தெரியாதா? ஸ்டீவன்ஸை நானா கொன்றேன் மேரி? மாறாக ஏராளமாக பாங்கிப் பணத்தையல்லவா அவருக்குக் கடன் கொடுத்தேன்? ஆகவே, எனக்கும், லட்சியவாதியான என் மகளுக்கும் பிடித்திருந்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி, என் பொறுப்புகளை நான் உதறிவிட முடியாது.''

இப்படித் தந்தையும் மகளும் உணர்ச்சி வசப்பட்டு விவாதம் புரிந்துகொண்டிருந்தபடியால், அங்கே பெட்ஸி வந்து நின்று, தங்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்ததைக் கவனிக்கவில்லை. இப்பொழுது அவள், கண்களில் கோபக் கனல் பரக்க மேரியின் மீது பாய்ந்தாள். ''உன் அப்பாவின் செய்கையைக் கண்டிக்கும்படி அத்தனை ஆணவமா உனக்கு? எந்த உரிமையோடு நீ இங்கே அமர்ந்து உன் தீர்ப்புகளை வழங்கிக்கொண்டிருக்கிறாய்? இம்மாதிரித் 'தகப்பன் சாமி' யாக நடந்துகொள்ளும்படி உனக்கு என்ன வந்துவிட்டது இப்பொழுது?''

''பெட்ஸி! தயவு செய்து சப்தம் போடாதே பெட்ஸி!'' என்று டாடு கெஞ்சினார்

ஆனால் அவள் நிறுத்தவில்லை. ''உங்களுக்குத் தெரியாது. நீங்கள் இதில் தலையிடாதீர்கள். இந்தப் பெண் உங்கள் வாழ்க்கையை இன்னும் துன்பமாக்க நான் அனுமதிக்கப் போவதில்லை.'' இவ்வாறு கூறிக்கொண்டே அவள் மேரியை அவர் அருகிலிருந்து இழுத்து நிறுத்தினாள். ''உனக்கு வெட்கமாக இல்லை? அவர் துன்பத்தை இன்னும் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிறாயே, உனக்கு அறிவு இல்லை? உன்னுடைய நாசமாய்ப்போகிற பள்ளிப் படிப்புப் போதனைகள் யாருக்கு வேண்டும்? அவருக்கு இருக்கிற கவலைகள் போதாவா? நீ என்ன, இந்த வீட்டின் தலைவியா? நீதான் வீட்டு வேலைகளைக் கவனிக்கிறாயா? அதன் பொறுப்புகளைச் சுமக்கிறாயா? இல்லை, உனக்குப் பிடிக்காதது ஏதாவது நடந்தால், உடனே அதில் தலையிட்டு இம்மாதிரிப் பெரிய மனுஷித் தன்மை காட்டத்தான் உன்னால் முடியும். நாங்கள் இதையெல்லாம் எதிர்பார்த்தோமா? 'வா - வா' என்று அழைத்தோமா? ஸ்டீவன் செத்ததோ, இத்தனை கஷ்ட

மும் நஷ்டமும் ஏற்பட்டதோ, எங்கள் தவறு ? இல்லை; இல்லவே இல்லை ; இருந்த போதிலும் மேலே என்ன செய்யவேண்டு மென்பதைப்பற்றி நாங்கள் விவாதிக்க வில்லை ; சண்டை போட்டுக்கொள்ளவுமில்லை. இதை எப்படிச் சமாளிப்பது என்றுதான் கவலைப்பட்டுக்கொண் டிருக்கிறோம். அதற்காக ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டுதான் இருக்கிறோம். இதெல்லாம் உனக்குத் தெரியவேண்டாமா. தெரிந்துகொள்ளவேண்டிய வயசும் ஆகவில்லையா உனக்கு!''

பொங்கி வந்த கோபத்தை யெல்லாம் இவ்வாறு வார்த்தைகளாகச் சிதறிவிட்டு, பெட்ஸி சோர்ந்துவிட்டாள். ராபர்ட் டாடு அருகில் சென்று அவளை அன்புடன் அணைத்துக் கொண்டு, ''பெட்ஸி, உன் உடல் இருக்கிற நிலையில், நீ இப்படியெல்லாம் பதற்றமடையக் கூடாது'' என்றூர் வாஞ்சையோடு.

மேரி திடுக்கிட்டாள். பெட்ஸி மீண்டும் கருத்தரித் திருக்கிறாள்! கடைசிக் குழந்தை அலெக்ஸாண்டருக்கு இன்னும் ஆறு மாதம்கூட ஆகவில்லை! யாரும் அவளுக்கு இதை இதுவரைச் சொல்லவில்லை. ஆம்; எதற்குச் சொல்லவேண்டும்? அவளுக்கும் இவ்விஷயத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

அவள் எழுந்து பெட்ஸியின் அருகில் சென்றாள். ''நீ சொல்லுவது சரிதான் அம்மா! அப்பா இந்த சந்தர்ப்பத்துக்கு எது நல்லதோ அதைத்தான் செய்திருக்கிறார். இப்பொழுது அது எனக்குத் தெரிந்துவிட்டது'' என்றாள். அவள் குரல் கம்மியிருந்தது; அதில் ஒருவிதப் பணிவும் தொனித்தது.

''அவர் நல்லதைத்தான் செய்வார்; இன்றல்ல, என்றும்'' என்று பெட்ஸி அழுத்தம் திருத்தமாக உரைத்தாள்.

மாற்றாந்தாயின் கண்களில் இன்னும் கோபம் கொதிப்பதைக் கண்டதும் மேரி நினைத்துக்கொண்டாள்: 'கணவன் மீது இத்தனை அன்பு ஒருத்திக்கு இருப்பது ஆச் சரியந்தான்! அவருடைய நன்மை-தீமைகளைத் தனதாகக் கருதி, கருவுற்றுப் பலவீனமான நிலையில் இருக்கும் போதுகூட, ஒரு பெண் புலியைப்போல், அவருக்காக உலகையே எதிர்த்து நிற்கத் துணிந்திருக்கும் இவளுடைய மேன்மை தான் எத்தனை மகத்தானது!' அவள் தனது சிற்றன்னையின் நெற்றியில் முத்தமிட்டாள். பிறகு சொன் னாள்: '' நான் தவறு செய்துவிட்டேன் அம்மா! இனி இம்மாதிரி நடந்துகொள்ளமாட்டேன்.''

* * * *

நெல்ஸன், மேரியின் பிரயாணப் பைகளையும் பெட்டி

களையும், கோச்சு வண்டியில் எடுத்துவைத்தான். அவள் தனது மாற்றுந்தாயின் குழந்தைகளிடம் பிரியா விடை பெற்றுக் கொண்டாள். எமிலி அழுதே விட்டாள். மார்கரெட்டுக்கும் மார்த்தாவுக்கும் கூட மேரி தங்களைப் பிரிந்து போவதில் வருத்தந்தான். ஸாமுவேலும் டேவிட்டும், 'லெக்ஸிங்டனை விட **ஸ்பிரிங்ஃபீல்டு** எவ்விதத்தில் உயர்ந்தது? எதற்காக நீ அங்கே போக வேண்டும்?' என்று விவாதித்தார்கள். தோட்டத்தில் ஒரு மரத்தடியில் ஒதுங்கி நின்றுகொண்டிருந்த ஜார்ஜ் கடைசி நிமிஷத்தில் ஓடிவந்து வண்டியில் ஏறிக்கொண்டு, அவளுடைய தோளில் முகத்தைப் புதைத்துக்கொண்டான்.

மேரியின் தந்தையும் விசனமாகவே இருந்தார். இரண்டு பெட்டிகள் நிறைய இருந்த புத்தகங்கள் உள்பட, தனது சாமான்கள் அனைத்தையுமே அவள் எடுத்துக்கொண்டு போவதைப் பார்த்த அவர், 'சரி; இனி இவளுக்கு ஸ்பிரிங்ஃபீல்டு பிடிக்காமல் போனால் கூட, லெக்ஸிங்டனுக்குத் திரும்பி வரமாட்டாள்' என்பதைப் புரிந்துகொண்டார்.

நெல்ஸன் குதிரையைத் தட்டிக்கொடுத்தான். மேமி ஸாலி போன்ற இதர வேலைக்காரிகள் வீட்டு வாசலில் நின்று அவளுக்கு விடையளிக்க, வண்டி புறப்பட்டது.

ஸ்பிரிங் தெருவை அடைந்ததும், வண்டி தெற்குப் புறமாகத் திரும்பி, மில் தெருவையும், வாட்டர் தெருவையும் கடந்து, லெக்ஸிங்டன்—ஓஹியோ ரெயில்வேயின் புதிய ஸ்டேஷனை நோக்கி ஓடிற்று. ஸ்டேஷனில், ரெயில், என்ஜின் கோக்கப்பட்டுத் தயாராக நின்றுகொண்டிருந்தது. மேல் மூடி இல்லாத பெட்டி ஒன்றில் பத்துப் பனிரெண்டு பிரயாணிகள் அமர்ந்திருந்தனர். அவர்கள் ரெயிலேற வரும் இதரப் பிரயாணிகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஜார்ஜும், நெல்ஸனும், மேரியின் பைகளையும், பெட்டிகளையும் சாமான்கள் பெட்டியில் ஏற்றினர். பிராங்ஃபோர்ட் ஸ்டேஷனில் அவள் இறங்கி, கோச்சு வண்டியில் ஐம்பத்திரண்டு மைல் தூரம் பிரயாணம் செய்து, **லூயிவில்**லுக்குப் போகவேண்டும். அங்கு ஓஹியோ நதியில் செல்லும் படகைப் பிடித்து கெய்ரோ போய்ச் சேர வேண்டும். கெய்ரோவில் ஓஹியோ நதி **மிஸ்ஸிஸிப்பி** நதியில் கலக்கிறது. அங்கே அவள் பெரிய நீராவிப் படகுக்கு மாறவேண்டும். அது வடக்கு முகமாக ஸெயிண்ட்லூயி சென்று, அங்கிருந்து ஆல்டனுக்குப் போகும். ஆல்டனில் அவள் மீண்டும் கோச்சு வண்டிப் பிரயாணத்தைத் தொடங்கவேண்டும். ரஸ்தா நன்றாக இருந்தால், கோச்சு வண்டி இரண்டு நாட்களில் அவளை ஸ்பிரிங்ஃபீல்டில் கொண்டு சேர்த்துவிடும். வழியில் எவ்வித இடையூறும்

இல்லாவிட்டால், இந்த எண்ணூறு மைல் பிரயாணத்துக்கு உத்தேசமாக எட்டு அல்லது ஒன்பது நாட்கள் பிடிக்கும்.

ரெயில் புறப்பட இருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் அது வாட்டர் தெருவைத் தாண்டி மேற்கு நோக்கிச் செல்ல ஆரம்பித்துவிடும். அப்புறம் அவள் லெக்ஸிங்டனைக் காண முடியாது. மேரி ரெயில் வண்டியில் உட்கார்ந்தவாறு ஆசை தீர, தான் பிறந்து வளர்ந்த ஊரைப் பார்த்துக்கொண்டாள். அவள் கண்களில் அவளை அறியாமலேயே கண்ணீர் சுரந்தது.

என்ஜின் ஊதிக்கொண்டு புறப்பட்டது. அதன் ஊதல் அவளுக்குத் தன் தங்கை ஆனின் கீச்சுக் குரலையும், புறப்படும் போது அவள் கூறிய வார்த்தைகளையும் நினைவூட்டிற்று.

''அதிக நாள் ஆக்கி விடாதே மேரி! அடுத்தாற்போல் எலிஸபெத்தின் வீட்டுக்கு வரவேண்டியவள் நான் என்பதை மறந்து விடாதே! சீக்கிரமே எனக்கு இடம் காலிசெய்து கொடுத்து விடு!''

அத்தியாயம்-2

"காதல் அரும்பிற்று"

1

வெள்ளிக் குழலில் பொருத்தப் பட்டிருந்த மெழுகு வத்தியின் முனையைக் கொளுத்தி வடபுறமாக இருந்த ஹாலின் ஜன்னலில் வைத்த போது மேரி புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டாள். ஸ்பிரிங்ஃபீல்டில் உள்ள வாலிபர் களுக்கு, அவள் வீட்டிலிருப்பதை அறிவிக்கும் அடையாளம் அது. லெக்ஸிங்டன்காரர்கள் இந்தப் பழக்கத்தை அறிந் தால் சிரிப்பார்கள். நினியன் எட்வர்ட்ஸும், அவன் மனைவி எலிஸபெத்தும், 'தேநீர் விருந்துகள்', 'பால்' நடனங்கள் நடத்தும் ஹால் அது. நாற்பது அடி நீளம் இருந்தது. நினியனின் பூர்வீக சொத்துக்களான பல அலங்காரப் பொருள்களும், குடும்பத்தினரின் பெரிய வர்ணப் படங்களும், அந்த ஹாலுக்கு ஒரு தனி அழகைக் கொடுத் தன. இன்னும், எலிஸபெத்தின் குடும்பப் பாங்கான சுவையின் சின்னமாகப் பல தட்டு முட்டு சாமான்களும் அங்கு இருந்தன. நினியன், அந்த ஹாலின் ஜன்னல்களை மிக உயரமாக, பாலிஷ் போடப்பட்ட மரச் சட்டங்களுடன் அமைக்கச் செய்திருந்தான். பிரம்மாண்டமான சர விளக்கு கள் ஹாலின் உயரே தொங்கின. பெல்வில்லிலிருந்த மாளிகையில், தன் தந்தை விருந்தினரை உபசரிக்கும் அறையில் விரித்திருந்த விலையுயர்ந்த சித்திரக் கம்பளத்தை அவன் இங்கே கொண்டுவந்து இந்த ஹாலில் விரித்திருந்தான். இவ்வாறு அந்த ஹால் குடும்பப் பண்பும், நாகரிகப் பாங்கும் கலந்து விளங்கிற்று.

மெழுகுவத்தியைக் கொளுத்தி வைத்துவிட்டு வந்த மேரி, தன் ஆடைகளை உதறிவிட்டுக் கொண்டு அங்கு வைக் கப்பட்டிருந்த கற்கண்டு, பாதாம் கொட்டை போன்ற

பொருள்களைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தபோது, அவளுடைய சகோதரி எலிஸபெத் ஹாலுக்கு வந்தாள். அவள் கையில் கோபுரம் போன்ற அமைப்பில் ஐந்து அடுக்குகளை உடைய பெரிய 'கேக்' ஒன்று இருந்தது. அவள் நடந்து வருவதைப் பார்த்தபோது மேரிக்குத் தன் தாயே நடந்து வருவது போன்ற பிரமை உண்டாயிற்று. எலிஸபெத் மேரியைவிடச் சிறிதளவுதான் உயரம். ஆனால் அவளுக்கு அகன்ற தோள்கள். ஒடுங்கிய முகம். அவள் தன் சிகையை நடு வகிடு எடுத்து இரு புறமும் காதை மறைக்கும் வண்ணம் பின்புறமாகச் சீவி முடித்துக்கொண்டிருந்தாள்.

எலிஸபெத்துக்கும் மேரிக்கும் ஐந்து வயதுதான் வித்தியாசம். இருந்தாலும் அவளுடைய சிகை வகிடுப் பக்கமாக லேசாக நரைக்க ஆரம்பித்திருந்தது. வீட்டுக்கு மூத்தவள் என்பதாலும், அப்பொழுது கருவுற்று இருந்ததாலும், ஒரு தலைமுறைக்கு முந்திப் பிறந்தவள்போல் எலிஸபெத் மேரியின் கண்களுக்குத் தென்பட்டாள்.

அப்பொழுது எலிஸபெத்தும் நினியனும் மிகவும் ஏமாற்ற மடைந்திருந்த விஷயம் மேரிக்குத் தெரியும். இல்லினாய்ஸ் மாகாணத்தில், முதல் முதலாக நடந்த 'விக்' கட்சி மகாநாடு, அடுத்த மாகாணத் தலைவர் தேர்தலுக்கு நிற்க ஐந்து பிரமுகர்களைத் தேர்ந்தெடுத்தது. அந்த ஐவருள் ஒருவனாக நினியன் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இது அத்தம்பதிகளுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்திருந்தது.

''நினியன்தான் இல்லினாய்ஸின் அடுத்த கவர்னராக இருக்கவேண்டும்'' என்று மேரி தன் சகோதரியிடம் கூறினாள்.

''அது யார் என் பெயரை அவ்வளவு பெரிய பதவிக்குப் பிரேரிப்பது?'' என்று கேட்டுக் கொண்டே நினியன் எட்வர்ட்ஸ் அச்சமயம் ஹாலுக்குள்ளே வந்தான். நினியனுக்கு முப்பது வயசு தான் ஆகிறது. அதற்குள் அவன் அந்த மாகாணத்தின் 'அட்டார்னி ஜெனரல்' பதவியைக் கொஞ்சகாலம் வகித்துவிட்டான். இப்பொழுது அரசாங்கச் சட்டசபைக்கு இரண்டாவது தடவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சேவை செய்துவந்தான். அவனுடைய தந்தை, நிலங்களாகவும், கடைகளாகவும், பண்ணைகளாகவும், கட்டடங்களாகவும், ஏராளமான சொத்துக்களை விட்டுச் சென்றிருந்தார். அதோடு அவருக்கு இல்லினாய்ஸ் மாகாணத்தில் இருந்த அதே அளவு செல்வாக்கு அவனுக்கும் இருந்தது. நினியன் ஆறு அடி உயரம் இருப்பான். அடர்த்தியான புருவம்; எடுப்பான மூக்கும், தாடையும் உடையவன். 1809-இல் அவனுடைய தகப்பனாரை அப்பொழுது அமெரிக்

காவின் ஜனதிபதியாக இருந்த மாடிஸன், இல்லினாய்ஸ் என்ற புதிய மாகாணத்தின் கவர்னராக நியமித்தார்.

வனந்திரப் பிரதேசமாக இருந்த இந்த மாகாணத்தில் ஒரு பிரம்மாண்டமான மாளிகையைக் கட்டி, அழகு அழகான தட்டுமுட்டுச் சாமான்களால் அம்மாளிகையை அலங்கரித்து, இந்தப் பிரதேசத்தில் முதல் முதலாகக் கலாசாரத்தையும், சம்பிரதாயத்தையும் நடைமுறையில் புகுத்திய பெருமை அவரையே சேரவேண்டும்.

ஹாலுக்குள்ளே நுழைந்த நினியன், இரு கைகளையும் மேரியின் முன் நீட்டிக்கொண்டு, ''இல்லினாய்ஸ் கவர்னராகிவிட்ட நான், முதல் வேலையாக, உன்னை எனது அரசாங்க மாளிகையில் வரவேற்கிறேன் மேரி. அதோடு இந்த இரண்டாவது எட்வர்ட்ஸின் ஆட்சிக்காலம் நீடிக்கும் மட்டும் நீ என் முழு அன்புக்குப் பாத்திரமான விருந்தாளியாகவே இருப்பாய் என்பதாகவும் உறுதி கூறுகிறேன்'' என்று சொன்னான்.

அவன் வேடிக்கையாகவே இப்படிக் கூறினான் என்றாலும் மேரியிடம் அவனுக்கு மிகுந்த அபிமானம் உண்டு. ''அவன் அகங்காரமுடையவன்; மற்றவர்களைவிடத் தான் உயர்ந்தவன் என்ற தற்பெருமை அவனுக்கு உண்டு'' என்றெல்லாம் அவ்வூரார் பேசிக்கொள்ளுவது மேரிக்குத் தெரியும். சட்ட சபையில் அவன், ''ஜனநாயகத்தைத் தீவிரமாக வெறுக்கும் அகந்தைக்காரன்'' என்று பெயர் பெற்றுள்ளவன் என்பதையும் அவள் அறிவாள். ஆனால் அவள் ஒருபோதும் அவனிடம் தனித்து நிற்கும் தன்மையைக் கண்டதில்லை. இல்லினாய்ஸ் மாகாணவாசிகளில் பெரும்பாலோர், அடிமைத் தொழில் பிரபலமாயுள்ள அமெரிக்காவின் தெற்குப்பிரதேசத்திலிருந்து வந்து குடியேறியிருந்தவர்கள்தாம். ஆயினும், நினியன், இந்த மாகாணத்தில் அடிமைத்தொழில் வளராதிருப்பதற்கு அரும்பாடு பட்டான். எட்வர்ட்ஸ் தம்பதிகள், தங்கள் வீட்டில் நான்கு நீக்ரோ வேலைக்காரர்களை மாதச் சம்பளத்தில்தான் அமர்த்திக்கொண்டிருந்தனர். நீக்ரோக்களுக்குக் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து ஆசைகாட்டி, அவர்களை வாழ்நாள் முழுவதும் உழைக்கும்படி வற்புறுத்தும் கொடிய பழக்கத்தையும் நினியன் வன்மையாகக் கண்டித்துவந்தான்.

நினியன் ஜன்னலில் விளக்குவைக்கப்பட்டிருப்பதைப் பார்த்துவிட்டு, ''சரி; சமிக்ஞை கொடுத்துவிட்டாயா மேரி? இனி ஸ்பிரிங்ஃபீல்டு வாலிபர்களெல்லாம் நம் வீட்டை மொய்த்துக் கொள்ளத்தான் போகிறார்கள்'' என்றான்.

''ஸ்டீஃபன் டக்ளஸ் வருவானா?'' என்று மேரி கேட்டாள்.

''அவனுக்கு இங்கே வரத் துணிவு ஏற்படுமா, என்ன? அவன்தான் ஜான் ஸ்டூவர்ட்டுடன் சண்டை போட்டுக் கொண்டுவிட்டானே?'' என்று நினியன் கடுகடுப்புடன் கூறினான்.

''இல்லை நினியன்; ஜான்கூடத்தான் அன்று அவனுடன் சண்டை போட்டான். பிறருடைய சண்டைகளில் நாம் ஏன் தலையிட்டுக்கொள்ள வேண்டும்? உண்மையில், ஸ்டீவ், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவனைனலும், விரைவில் இம்மாகாணத்தில் ஒரு பெரிய மனிதனாக விளங்கப்போகிறான் பாருங்கள். ஆகையால் அவன் நமது நண்பனாக இருக்க வேண்டுமென்றே நான் விரும்புகிறேன்'' என்று தனது கணவனிடம் கூறிய எலிஸபெத், மேரியிடம் திரும்பி, ''நிச்சயமாக அவன் வருவான், கண்ணே. அடிக்கடி அவன் உன்னைப்பற்றி விசாரிப்பது கூட உண்டு'' என்றாள்.

அவள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே ஹாலின் கதவைத் திறந்து கொண்டு ஸ்டீஃபன் டக்ளஸ் உள்ளே வந்தான். ஸ்டீஃபன் குள்ளமானவன்; தலை மாத்திரம் பெரிதாக இருக்கும். ரோமம் கபில நிறமாகச் சுருண்டு சுருண்டு, காதுகளை மூடிக்கொண்டு பிடரி வரைத் தொங்கும்.

எலிஸபெத் எழுந்து சென்று அவனை வரவேற்றாள். பிறகு அவன் மேரியின் இரு கைகளையும் கெட்டியாகப் பற்றிக் கொண்டு, ''நீ இங்கே திரும்பி வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது மேரி! இத்தடவை இங்கேயே தங்கிவிடப் போகிறாய் என்றுகூடக் கேள்விப்பட்டேன்'' என்றான்.

''அப்படித்தான் நினைக்கிறேன் ஸ்டீவ். வா, உட்கார். உட்கார்ந்து, நான் சென்ற தடவை இங்கே வந்துபோன பிறகு நீ என்ன என்ன செய்துகொண்டிருந்தாய் என்பதை விவரமாகச் சொல். எனக்குத் தெரிந்ததெல்லாம், நீ நிலதஸ்தாவேஜு ஆபீஸில் ரிஜிஸ்திரார் பதவி வகித்தாயென்பதும், ''காங்கிரஸ்'' ஸில் அங்கம் வகிக்க முயன்றாய் என்பதும்தான். அதோடு எங்கள் பெரியப்பா பிள்ளை ஜான் ஸ்டூவர்ட்டுக்கும் உனக்கும் சண்டை ஏற்பட்டதென்றும் கேள்விப்பட்டேன்'' என்றாள் மேரி.

அவர்கள் அருகருகே உட்கார்ந்து இப்படிப் பேசிக்கொண்டிருந்தார்கள். நினியனும், எலிஸபெத்தும், ஹாலை அடுத்திருந்த அறைக்குப் போய்விட்டார்கள். ஸ்டீஃபன் டக்ளஸ், வெர்மாண்ட் மாகாணத்தைச் சேர்ந்த பிராண்டன் என்ற ஊரில் பிறந்தவன். அவனுடைய தந்தை டாக்டராக இருந்தார். ஆனால் ஸ்டீஃபன் பிறந்து சில மாதங்கள் ஆவதற்குள்ளாகவே அவர் காலமாகிவிட்டார். மரச்சாமான்கள் செய்யும் ஒரு கம்பெனியில் வேலை செய்துகொண்டே ஸ்டீஃபன்,

நியூயார்க்கின் கானன்டைகுவா பல்கலைக் கழகத்தில் படித்து வந்தான். பிறகு அவன் சட்டப்படிப்பு முடித்துப் பட்டமும் பெற்றான். பத்தொன்பதாவது வயதிலேயே அவன் சொந்த ஊரை விட்டுக் கிளம்பிவிட்டான். ஏதோ ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராகப் பணியாற்றினான். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு வக்கீல் தொழில் நடத்த 'ஸனத்' பெற்றான். சுமார் ஐந்தரை அடி உயரம் இருந்தபோதிலும், அவனுடைய எடை நூறு பவுண்டுகூட இராது. ஆனால் அவன் கவர்ச்சிகரமான குரலும், சுபாவமும் உடையவன். விரைவில் அவன் இல்லினாய்ஸ் மாகாணத்தில் 'அட்டர்னி' பதவி வகித்துச் சட்டசபை அங்கத்தினனாகவும் ஆகிவிட்டான்.

டக்ளஸ் அடக்கமாகச் சிரித்தான். தன் தந்தையைப் போல் அவனும் குட்டையான கழுத்துடையவன் என்பதை மேரி அப்பொழுது கவனித்தாள். அவனுடைய சிறிய காதுகளையும், துடிக்கும் மூக்கு, மற்றும் வாயையும், சதுர வடிவத் தாடையையும் உற்று நோக்கினாள்.

டக்ளஸ் சொன்னான்: ''பழைய மார்க்கெட் கட்டடத்தின் முன், நானும் உன் பெரியப்பா பிள்ளை ஜானும் வாக்குவாதம் செய்துகொண்டிருந்தோம். அவனுக்குப் பிடிக்காத விஷயம் எதையோ நான் பேசிவிட்டேன். உடனே அவன் என் தலைரோமத்தைப் பிடித்து, மார்க்கெட்டுக் கட்டடத்தைச் சுற்றி இழுத்துச் சென்றான். அவனுடைய கட்டைவிரலைப் பலமாகக் கடித்துத் தான் நான் என்னை விடுவித்துக்கொள்ள வேண்டியதாகிவிட்டது. பிறகு நாங்கள் ஹெர்ண்டனின் '' மளிகைக் கடை '' க்குள்ளே போய், மயக்கமடையும் வரை மீண்டும் சண்டை போட்டுக்கொண்டோம். அதில் ஒரே ஒரு விஷயந்தான் எனக்கு ரொம்ப விசனமளித்தது. எங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த கூட்டத்துக்கு விஸ்கி வாங்கிக்கொடுக்க ஸ்டீவர்ட் என்னை முந்திக்கொண்டு விட்டான்.''

அவ்வூரில் '' மளிகைக் கடை '' என்றால், '' மதுபானக் கடை '' என்று அர்த்தம் என்பது மேரிக்கு அப்பொழுது தான் நினைவுக்கு வந்தது. அவ்வூர் அரசியல் சண்டையின் போக்கை எண்ணி அவள் நகைத்தவாறே தலையசைத்தாள். பிறகு சொன்னாள்: ''யார் காங்கிரஸில் அங்கம் வகிக்க லாயக்கானவன் என்பதைத் தீர்மானிக்க நல்ல வழி கண்டுபிடித்தீர்கள்? எனக்கு மிகவும் வெட்கமாக இருக்கிறது ஸ்டீவ்.''

''இதில் என்ன சந்தேகம்? அதற்கு லாயக்கானவன் நான் தான் மேரி. இல்லினாய்ஸ் மாகாணத்து வாக்காளர்களும் அப்படித்தான் தீர்மானித்தார்கள். முப்பத்தாறாயிரம் வோட்டுகளில் முப்பத்தாறு வோட்டுக்கள்தானே அதிகமாக எடுத்து அவன் ஜெயித்தான்? அதுவும் எப்படி? கள்ளத்தனம்

செய்து! கால்வாய் தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ள ஐரிஷ் வமிசத்தார் எனக்கு அளித்திருந்த வோட்டுக்களை அவர்கள் நிராகரித்துவிட்டார்கள். அதனால்தான் நான் காங்கிரஸ் அங்கத்தினனாக வேண்டியது போய், வெறும் ராஜ்ய சட்டசபை அங்கத்தினன் ஆக வேண்டியதாயிற்று. இதற்கெல்லாம் நான் சாட்சியங்கள் தயாரித்துக்கொண்டிருக்கிறேன். சும்மா விடப்போவதில்லை. வாஷிங்டன் வரைப் போய் ஒரு கை பார்த்துவிடத்தான் போகிறேன். ஜான் ஸ்டூவர்ட் அமெரிக்கக் காங்கிரஸின் அங்கத்தினனாகப் போய் உட்காரு முன்பே அவனை அங்கிருந்து விரட்டி விட்டு, நான் அமர்ந்துகொள்ளப்போகிறேன், பார். மன்னித்துக் கொள் மேரி; ஸ்பிரிங்ஃபீல்டிலுள்ள உன் உறவினரில் பலர் 'விக்' கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருந்தபோதிலும், நான் ஓர் உண்மையை உனக்குச் சொல்லித்தான் ஆகவேண்டும். விக் கட்சியைச் சேர்ந்தவர்களுள் ஒரே ஒருவன்தான் இவ் வூரில் மிக்க நேர்மையும் திறமையும் உடையவன். அவன் தான் ஆப். லிங்கன்.''

இந்தப் பெயரை மேரி முன்பே கேட்டிருந்தாள். 1837-இல் அவள் ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வருவதற்கு இரண்டொரு மாதங்களுக்கு முன்பு, அவளுடைய பெரியப்பா பிள்ளை ஜான் ஸ்டூவர்ட் தனது வக்கீல் தொழிலுக்கு ஆப்ரஹாம் லிங்கன் என்பவனைக் கூட்டாளியாகச் சேர்த்துக்கொண்டிருந்தான் என்பதை அவள் அறிவாள். ஆனால் அவள் அவனைச் சந்தித்ததில்லை. இன்னும் அவன் ஸ்டூவர்ட்டின் கூட்டாளி தானா என்பதும் அவளுக்குத் தெரியாது.

மேரி சொன்னாள்: ''ஸ்டீவ்! நான் என் பெரியப்பா பிள்ளைக்குப் பரிந்து பேச வரவில்லை. ஆனால் வாஷிங்டன் போன்ற ஒரு பெரிய நகரத்துக்கு, இம்மாதிரி ஒரு தேர்தல் ஏமாற்றக் கேசை எடுத்துச் செல்வது உன்னுடைய மதிப்புக்கு இழுக்கு அல்லவா? இதெல்லாம் தோல்வியடைந்தவனின் ஆத்திரம் என்று அங்குள்ளவர்கள் நகைக்கமாட்டார்களா? மேலும், முப்பத்தாறு வோட்டு வித்தியாசத்தில் நீ தோல்வியடைந்திருப்பதை ஒரு தோல்வி என்று சொல்லிவிட முடியுமா? முதல் முயற்சியில் வெற்றிக்கு இத்தனை கிட்டே வந்துவிட்டது ஒன்றே, இந்த மாகாணத்தின் ஜனநாயகக் கட்சியில் உன்னை முக்கியமானவன் ஆக்கிவிடவில்லையா?''

ஸ்டீஃபனுக்கு உச்சி குளிர்ந்து விட்டது. ''சரி மேரி! நான் வாஷிங்டனுக்கு இந்த வழக்கைக் கொண்டுபோகும் எண்ணத்தைக் கைவிட்டு விடுகிறேன். எதற்காக ஏராளமான பணத்தையும் பொழுதையும் விரயமாக்க வேண்டும்?''

மீண்டும் அவன் முகம் கோபத்தால் சிவந்தது. அவன் சொன்னான்: ''ஆனால் மேரி, இத்தேர்தலில் வெற்றி பெறு

வதற்கு நான் இரண்டு வருஷங்களாகப் பட்ட சிரமத்தை நினைக்கும்போது என் நெஞ்சு கொதிக்கிறது. ஒவ்வொரு வாக்காளரையும் எப்படி எப்படியெல்லாம் கைக்குள் போட்டு வைத்துக்கொண்டிருந்தேன், தெரியுமா? அவர்களோடு கூடிக் குலாவினேன்; பிராத்தனை செய்தேன்; அவர்கள் சிரித்த போது சிரித்தேன்; அவர்களோடு வேட்டையாடச் சென்றேன்; வேலை வெட்டிகள் செய்தேன்; உண்டேன் உறங்கினேன். இவ்வளவெல்லாம் செய்திருந்ததால்தான், அவர்கள் வோட்டு எனக்குத்தான் விழுந்திருக்கவேண்டும் என்று திடமாக நம்புகிறேன். நான் பட்ட சிரமத்தையெல்லாம் பாழாக்கிவிட்டார்கள், அந்தப் பாவிகள். என் வாழ்க்கையையே நாசமாக்கிவிட்டார்கள்.''

''வருத்தப்படாதே ஸ்டீவ்! வாழ்வில் நீ முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறாய். காலம் வரும்; காத்திரு. ஒரு நாள் நீயும் 'ஓயிட் ஹவுஸ்'ஸில் இடம் பெறுமளவா இருந்து விடப்போகிறாய்?''

மேரி தன்னைக் கிண்டல் செய்கிறாளென்ற எண்ணத்தோடு அவன் அவளைப் பார்த்தான். ஆனால் அவள் அந்தரங்க சுத்தியோடுதான் இதைக் கூறினாள் என்பதை அவளுடைய முகம் காட்டிற்று. அவனது மனசு தெளிந்தது. அவளுடைய காதருகில் குனிந்து, ''மேரி டாடு! உன்னைப்போல் புத்திக் கூர்மையுள்ளவளை நான் இதுவரைக் கண்டதேயில்லை. நீ ஸ்பிரிங்ஃபீல்டில் நிரந்தரமாகத் தங்கியிருக்கப் போவது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது'' என்றான்.

2

மறு நாள் மாலையில் மேரி தனது படுக்கை அறையில் உடை மாற்றிக்கொண்டிருந்தாள். அங்கிருந்து பார்த்தால் லிவரிங்கின் வீடு நன்றாகத் தெரியும். இடையே ஓர் அக்ரோட்டு மரத் தோட்டந்தான் இருந்தது. மேரிக்காக ஒதுக்கப்பட்டிருந்த இந்தப் படுக்கை அறை, லெக்ஸிங்டன் வீட்டில் அவள் உபயோகித்துவந்த படுக்கை அறைக்கு முற்றிலும் மாறுக இருந்தது. அங்கே அவள் எவ்வளவுக்கு எவ்வளவு அறையை அலங்கரித்து வைத்திருந்தாளோ, அவ்வளவுக்கு அவ்வளவு இந்த அறை அலங்காரம் எதுவும் இன்றி சாதாரணமாக இருந்தது. எலிஸபெத் லெக்ஸிங்டனில் இருந்த போது தனது படுக்கை அறையை எப்படி வைத்துக்கொண்டிருந்தாளோ, அதேமாதிரி இந்த அறை இருப்பதை நினைத்து

மேரி தனக்குத் தானே சிரித்துக்கொண்டாள். அங்கே இருந்த வெள்ளி அலங்காரப் பெட்டியும், புத்தக அலமாரியும் தாம், அது இப்பொழுது மேரியின் அறை, அவளுடைய வீடு என்பதற்குச் சான்றுக விளங்கின.

மேரி, வெளியே பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தபோது ஒற்றைக் குதிரை பூட்டிய கோச்சு வண்டி ஒன்று லிவரிங்கின் வீட்டை நோக்கி விரைந்து சென்றதைக் கண்டாள். அதை ஜேம்ஸ் காங்க்ளிங் ஓட்டிச் சென்றான். இருபத்து மூன்று வயதான ஜேம்ஸ் காங்க்ளிங் ஒரு வக்கீல். அவன் மெர்ஸி லிவரிங்கை, அன்று நடக்கவிருந்த கூட்டத்திற்கு அழைத்துப்போவதற்காக அவளுடைய வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். ஜேம்ஸை, மெர்ஸி மிகவும் கவர்ந்திருந்தாள் என்பதை முன்னுள் நடந்த ஒரு கூட்டத்தில் அவர்களைப் பார்த்தபோது மேரி தெரிந்துகொண்டிருந்தாள். மெர்ஸி, ஜார்ஜ் டவுனில் ஜட்ஜாக இருந்த ஒருவரின் புதல்வி; பால்டிமோர் நாகரிகத்தில் வளர்ந்தவள். இப்பொழுது ஸ்பிரீங்ஃபீல்டில் வசித்துவந்த தன் சகோதரனையும் அவன் மனைவியையும் பார்ப்பதற்காக வந்திருந்தாள்.

''சீக்கிரம் ஆகட்டும் மேரி; கூட்டத்துக்குத் தாமதமாகி விடப்போகிறது'' என்று அறைக்கு வெளியேயிருந்து நினியன் குரல் கொடுத்தான். மேரி, தனது அலங்காரத்தை வேகமாகச் செய்துகொண்டே, ''ஸ்பிரீங்ஃபீல்டு வாசிகள் எல்லோரையும் அரசியல் பைத்தியம் எவ்வளவு பலமாகப் பிடித்துக்கொண்டிருக்கிறது!'' என்று எண்ணிக்கொண்டாள். ஆம்; மாகாணத் தலைநகரை வாண்டாலியாவிலிருந்து ஸ்பிரிங்ஃபீல்டுக்கு மாற்றியது தொட்டு மக்களுக்கு அரசியல் பைத்தியம் இன்னும் அதிகமாகவே முற்றிவிட்டது. பாருங்களேன். 1840-இல் தான் அடுத்த ஜனதிபதித் தேர்தல். அதற்கு இன்னும் ஒரு வருஷம் இருக்கிறது. அதற்குள் இங்கே அந்தத் தேர்தலுக்காக எத்தனைத் தடபுடல்! பிரார்த்தனைக் கூட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஞாயிற்றுக்கிழமை தவிர, இதர நாட்களில் எங்கே போனாலும் ஒரே தேர்தல் கூட்டங்கள்தாம்; ஒரே விவாதங்கள்தாம்; ஒரே பிரசங்கமாரிதான்.

மேரி கீழே இறங்கிச் சென்றபோது கூடத்துக்குப் போகும் வழியிலிருந்த நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தை ஒரு தடவை பார்த்துக்கொண்டாள். பிரகாசமான கண்களையும், செம்மை படர்ந்த கன்னங்களையும் பார்த்தபோது தன் அழகில் தானே பெருமிதம் அடைந்தாள் அவள். அவளுடைய தாயின் கழுத்து திண்மையானது. அதே கழுத்து தனக்கும் வாய்த்திருந்ததில் அவளுக்கு மிகுந்த திருப்தி. ஏனென்றால் அவளுடைய தலையும் முகமும் சற்றுப் பெரிதானவை. ஆகை

யால் அவற்றைத் தாங்கக்கூடிய வலிவுள்ள கழுத்தும் அவசியந்தானே! அவள் ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்து சிலநாட்கள் கூட ஆகவில்லை; இருந்தாலும், ஊரை விட்டுக் கிளம்பியபோது இருந்த குழப்பமான மனநிலையும், வருங்கால லட்சியத்தைப் பற்றிய கவலையும் அதற்குள் அவளைவிட்டுப் பறந்துவிட்டன. அதுபோலவே அவளுடைய கன்னங்களின் மங்கிய நிறமும் மாறிவிட்டது. ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்தது தொட்டு ஒவ்வொரு நாளும் அவளுக்கு இன்பமயமாகக் காலம் கழிந்து வந்தது. அதிலும் முன்னுள் மாலையில் தான் அநுபவித்த ஆனந்தத்தைப் போல், இதுவரை வேறெங்கும் அநுபவித்திருந்ததாக அவளுக்கு நினைவில்லை. சுமார் முப்பது வாலிபர்களும் யுவதிகளும் அவளைச் சூழ்ந்திருக்க, ஒரே சமயத்தில் ஆறேழு அரசியல் பிரச்னைகள் காரசாரமாக அலசப்பட, அவள் இவற்றுக் கெல்லாம் நடுநாயகமாக அல்லவா விளங்கினாள்?

மேரி முன் வாசலுக்கு வந்தபோது, எலிஸபெத்தும் நினியனும் வண்டியில் ஏறி அமர்ந்து தனக்காகக் காத்திருப் பதைக் கண்டாள். அந்த அழகிய கோச்சு வண்டியும் நினியனுக்குக் கிடைத்த குடும்ப சொத்துக்களுள் ஒன்றுதான். எலிஸபெத் ஆடைகளை ஒடுக்கிக்கொண்டு தன் அருகில் மேரிக்கு இடமளித்தாள். நினியன் குதிரைகளுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு அவர்களுக்கு எதிரே அமர்ந்திருந்தான்.

அவர்கள் இரண்டாவது வீதி வழியாக வடக்கு நோக்கிச் சென்றார்கள். அந்த இடம் ஒரே ஓக் மரச் சோலையாக இருந்தது. நகரத்தின் இந்தத் தெற்குப் பகுதி மிக அழகானது. கண்ணுக்கெட்டிய வரையில் திறந்த புல்வெளிகள். அவற்றில் பல்வேறு மலர்கள் பூத்துச் சொரிந்திருந்தன. இந்தப் பச்சைப் பசேலென்ற புல் வெளிகளில், ஆங்காங்கு ஒவ்வொரு மரமும், பண்ணை வீடுகளும், உழப்பட்ட பூமிகளும் காட்சி தந்தன. இந்தத் திறந்த புல்வெளிகள் அனைத்தும் நினியனுக்குச் சொந்தமானவை.

அவர்களுடைய கோச்சு வண்டி மரப்பாலம் ஒன்றைக் கடந்து, புதிதாக மரத்தால் கட்டப்பட்டிருந்த மாதாகோவில் வாசல் வழியே சென்றது. அப்பொழுது நினியன் கிண்டலாக "இந்த மாதாகோவிலைக் கட்ட எலிஸபெத் எவ்வளவு கைங்கரியம் பண்ணியிருக்கிறாள் தெரியுமா மேரி" என்றான்.

வண்டி ஆதம்ஸ் தெரு வழியே கிழக்கு நோக்கிச் சென்று ஒரு சதுக்கத்துக்கு வந்தது. அங்கே பழைய ஜில்லாக் காரியாலயக் கட்டடம் இடித்துத் தள்ளப்பட்டு, அதன் இடத்தில் புதிய மாகாண அரசாங்க மாளிகையின் கட்டுமான வேலை நடந்து கொண்டிருந்தது. கீழ்த்தளம் பூர்த்தியாகி விட்டது. மேல் தள வேலைகள் நடந்து கொண்டிருந்தன. கட்டடத்தைச் சுற்றித் தொழிலாளர் பட்டறைகளுக்கான

குடிசைகளும், கற்குவியல்களும் காணப்பட்டன. முன்பு சதுக்கக்கதைச் சுற்றி மரக் குடிசைகள் பல இருந்தன. இப் பொழுது அங்கே செங்கல் கட்டடங்கள் கட்டப்பட்டிருந்தன. நகரத்தில் எங்கு பார்த்தாலும், புதிது புதிதாக கட்டடங்கள் கிளம்பிக் கொண்டிருந்தன. மாகாண அரசாங்க அதிகாரிகள் பலரும், சிப்பந்திகளும் புதிதாகக் குடியேறியிருந்ததால், அவர்கள் வசிப்பதற்கான வீடுகள், மற்றும் ஹோட்டல்கள், கடைகளுக்கான கட்டடங்கள், ஆபீஸ் கட்டடங்கள் முதலியன கட்டப்பட்டு வந்தன.

கோச்சு வண்டி 'ஹாப்மன் ரோ' வில், நாலாம் நம்பர் கட்டடத்தின் முன் வந்து நின்றது. ஹாப்மன் ரோ, பல்வேறு சரக்குக் கிடங்குகள் இருந்த வீதி. அந்தக் கிடங்குகளுள் ஒன்றில் தான் ஸாங்கமன் ஜில்லாவின் சஞ்சாரக் கோர்ட் தற்காலிகமாக இடம் பெற்றிருந்தது. அங்கே தான் அன்றைய அரசியல் கூட்டம் நடைபெற இருந்தது. சிறிய இடந்தான் அது. சுவர் முட்டப் பல பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. மேரி முதலியோர் அங்கே நுழைந்த போது சுமார் இருநூறு பேர்கள் கூடியிருந்தார்கள். முன்னுள், தான் சந்தித்த ஸ்டீவ் டக்ளஸ், ஜேம்ஸ் மாத்தனீ, ஜட்ஜ் ஸாமுவேல் டிரீட், ஐரிஷ்காரனான ஜேம்ஸ் ஷூல்ட்ஸ், கடைக்காரனான ஜோஷுவா ஸ்பீடு, இன்னும் ஜான் மாக்ளெர்னண்ட், தனது பெரியப்பா பிள்ளைகளான ஜான் ஸ்டுவர்ட், ஸ்டீபன் லோகன், ஜான் ஜே. ஹார்டின் முதலியோர் அங்கு வந்திருப்பதை மேரி கண்டாள். இவர்கள் தவிர, அவளுடைய பெரியப்பா டாக்டர் ஜான் டாடும், அவருடைய பெண்களான லிஸ்லியும், ஃபிரான்ஸெஸும் கூட ஒரு மூலையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.

காற்றுப் போகவர வழியில்லாததால், அறையில் ஒரே இறுக்கமாக இருந்தது. ஸ்டீஃபன் டக்ளஸ் அவர்களைச் சைகை காட்டி அழைத்தான். அவன் தனது பெஞ்சில் அவர்களுக்காக இடம் பிடித்து வைத்திருந்தான்.

முதலில் பேசியவர் எட்வர்டு பேக்கர் என்பவர். அவர் ஒரே ஆவேசத்தோடு பேசினார். நினியன் எட்வர்ட்ஸ் போன்ற விக் கட்சியினர் அடிக்கடி கைதட்டி ஆர்ப்பரித்தனர். டக்ளஸ், வீல்ட்ஸ் போன்ற ஜனநாயக கட்சிக்காரர்கள் முகத்தை 'உர்' ரென்று வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தனர்.

பேக்கர் பேசிக்கொண்டிருந்தார்; ''எங்கு எங்கெல்லாம் நில தஸ்தாவேஜு ஆபீஸ் இருக்கிறதோ, அங்கெல்லாம், அதன் ஊழல்களை மூடி மறைக்க ஒரு ஜனநாயகக் கட்சிப் பத்திரிகையும் இருக்கும்'' என்று அவர் கூறினார்.

இதைக் கேட்டதும் ஸ்டீஃபன் டக்ளஸ் துள்ளி எழுந்தான். அவன் ஒரு நில தஸ்தாவேஜு அதிகாரியாக இருந்தவன், இல்லையா? ஆனால் ஸ்டீஃபனை முந்திக்கொண்டு விட்டான் மற்றொரு ஜனநாயக கட்சிக்காரனான ஜான் பி. வெபர். அவன் 'ரெஜிஸ்டர்' என்ற ஜனநாயகக் கட்சிப் பத்திரிகையின் ஆசிரியருக்குத் தம்பி.

வெபர், பேக்கரைச் சுட்டி காட்டிக் கொண்டு, ''அவனைக் கீழே இழுத்துத் தள்ளுங்கள்!'' என்று கத்தினான்.

அவனைத் தொடர்ந்து அங்கே கூடியிருந்த ஜனநாயகக் கட்சியினர் அனைவரும், ''இழுத்துத் தள்ளுங்கள்! இழுத்துத் தள்ளுங்கள்!'' என்று கூவினர். டக்ளஸும், வேறு சில ஜனநாயகக் கட்சிக்காரர்களும் பிரசங்கியை நோக்கிப் பாய ஆரம்பித்தனர்.

விக் கட்சிக்காரர்களும் கூக்குரல் இட்டுக் கொண்டு தங்கள் பிரசங்கியைப் பாதுகாக்க விரைந்தனர்.

இந்த அமளிகளுக்கு இடையே, மேரியின் மூச்சே நின்று விடும்படியான காட்சி ஒன்று தென்பட்டது. பிரசங்கியின் தலைக்கு மேலே குதிர் வாசல் ஒன்று இருந்தது. அதன் வழியே நீண்ட கால்கள் இரண்டு வெளிவந்தன. பிறகு, கால்களைக் காட்டிலும் நீளமான உடலையும், கைகளையும், மங்கல் நிறமுள்ள மெலிந்த முகத்தையும், நல்ல கரிய கேசத்தையும் கொண்ட நெட்டை உருவம் ஒன்று கீழே குதித்தது.

அந்த ஆள் அங்கே தோன்றியதும், பிரசங்கியை இழுத்துத் தள்ள மேடை மீது ஏறியவர்கள் அனைவரும், அப்படியே அசைவற்று நின்று விட்டதை மேரி கண்டாள். ஒரு விநாடி மௌனத்துக்குப் பிறகு மேலேயிருந்து குதித்த மனிதன் பேச ஆரம்பித்தான்.

''நிறுத்துங்கள், இது பேச்சுச் சுதந்திரம் உள்ள நாடு என்பதை உங்களுக்கு நினைவு கூறுகிறேன். ஆகையால் பேக்கருக்கு என்ன வேண்டுமானாலும் பேச உரிமையுண்டு. அதற்காக அவரை இங்கிருந்து அப்புறப்படுத்த முயன்றீர்களானால் முதலில் என்னை இங்கிருந்து அப்புறப் படுத்தி விட்டுத்தான் அதைச் செய்ய வேண்டும்.''

அவன் குரலில் கோபமோ, பயமுறுத்தலோ இல்லை, அதிகாரந்தான் தொனித்தது. மேரி, அருகில் இருந்த மனிதர்களை உற்று நோக்கினாள். அவளுக்குத் தோன்றியது போலவே அவர்களுக்கும், அந்த நெட்டையனை அங்கிருந்து அப்புறப்படுத்துவது முடியாத காரியம் என்றே தோன்றியிருக்க வேண்டும். ஒருவராவது வாயைத் திறக்கவில்லை. இறுதியில் ஸ்டீஃபன் டக்ளஸ்தான், ''நல்லது நண்பர்களே, உட்கார்ந்து கொள்ளுங்கள். பேக்கர் பேசட்டும்'' என்றான்.

பேக்கர் பிரசங்கத்தைத் தொடர்ந்தான். அந்த மெலிந்த, நெட்டை மனிதன் மேடையின் விளிம்பில், தாடை முழங்காலில் இடிக்குமாறு குத்திட்டு உட்கார்ந்து கொண்டான். அவனுடைய குழி விழுந்த கன்னங்களையும், பிரகாசமான கண்களையும், மேரி தெவிட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

'யார் இவர்?'' என்று அவள் நினியனிடம் ரகசியமாகக் கேட்டாள்.

''உன் பெரியப்பா பிள்ளை ஸ்டீவர்ட்டின் வக்கீல் தொழில் கூட்டாளி. அவர்களுடைய ஆபீஸ் இக்கட்டடத்தின் மாடியில் தான் இருக்கிறது. அதை, கோர்ட் நடக்கும் காலத்தில் ஜூரிகள் அறையாகப் பயன்படுத்திக் கொள்ள வாடகைக்குக் கொடுத்துவிடுவார்கள், அவர்கள்'' என்றான் நினியன்.

''ஆமாம்; குதிர் வாசல் போல் அந்தத் துவாரம் எதற்காக?''

''அதுவா? கோர்ட் நடவடிக்கைகளையும், இது போன்ற கூட்ட நடவடிக்கைகளையும் மேலே இருந்தவாறே கவனித்துத் தெரிந்து கொள்ள லிங்கனுக்கு ஆசை.''

''அவர் உன் நண்பரா?''

''நண்பன் என்று சொல்லும்படியாக ஒன்றும் இல்லை, நாங்கள் அரசியல் நண்பர்கள் என்பதைத் தவிர.''

''நம் வீட்டுக்கு இவர் வந்து நான் பார்த்ததே இல்லையே?''

''அவன் அவ்வளவாக சமூக நடவடிக்கைகளில் கலந்து கொள்ள மாட்டான்.''

''நீங்கள் எப்பொழுதாவது அவரை அழைத்திருக்கிறீர்களா?''

''அவன் எங்கள் கோஷ்டியைச் சேர்ந்தவனல்ல. லிங்கன் தமாஷ் பேர்வழி தான்; ஆனால் டாடு குடும்பத்தினர் விரும்பும் ஆள் அல்ல.''

3

தனது நெருங்கிய சிநேகிதி மார்கரெட் விக்கிளிப்புடன் ஒரு சமயம் சண்டை போட்டுக் கொண்டதை மேரி நினைத்துக் கொண்டாள். அவர்கள் இருவருக்கும் பதினான்கு வயதாக இருந்தபோது பௌலர் பூங்காவுக்குப் போயிருந்தார்கள். அப்பொழுது அங்கே ஜனதிபதி ஜாக்ஸன் வந்தார். மேரி

நெடு நேரம் அவரைக் கூர்ந்து நோக்கிவிட்டு,'' ''நான் ஜெனரல் ஜாக்ஸனைப் பாராட்டுபவள் அல்ல. இருந்தாலும் நான் கேள்விப்பட்ட அளவு அவர் அவலட்சணமாக இல்லை'' என்றாள் தன் தோழியிடம்.

விக்ளிப் குடும்பத்தினர் தீவிர ஜனநாயக வாதிகள். ஆகையால் மார்கரெட்டுக்கு, மேரி இப்படிப் பேசியது கோபத்தை உண்டு பண்ணி விட்டது. அவள் சொன்னாள்: ''ஜெனரல் ஜாக்ஸன் அவலட்சண மானவர் என்று நீ சொல்லுவதாக இருந்தால், மிஸ்டர் கிளே மாத்திரம் என்ன, ரொம்ப அழகானவரோ?''

''இந்த நகரத்தில் என் அப்பாவுக்கு அடுத்தாற்போல் அழகானவர் என்று சொல்ல வேண்டுமானால் ஹென்ரி கிளேயைத்தான் சொல்ல வேண்டும்'' என்றாள் மேரி.

''ஹென்ரி கிளேயையும், உன் அப்பாவையும் ஒன்றுசேர்த்துப் பார்த்தாலும், நீண்ட முகமுடைய எங்கள் ஆண்டிரூ ஜாக்ஸன் அழகுதான்'' என்று பதிலுக்குக் கூறினாள் மார்கரெட்.

கடைசியில், அவர்கள், இனி அரசியல் விஷயமாக விவாதம் செய்வதில்லை என்ற முடிவுடன் அன்றையச் சண்டையைச் சமரசம் செய்து கொண்டனர். இந்த சம்பவத்தை நினைத்துக்கொண்ட மேரி, மார்கரெட் இப்பொழுது இங்கே இல்லையே என்று வருந்தினாள். அவள் மாத்திரம் இருந்திருந்தால் ''மிஸ்டர் ஜாக்ஸனைகட்டும்; அல்லது மிஸ்டர் கிளேதானைகட்டும் நீண்ட முகம் உடையவர்களல்ல; இதோ இந்த லிங்கன் தான் உலகத்திலேயே நீண்ட முகமுடையவர் என்பதை விவாதத்துக்கு இடமின்றி ஒப்புக் கொண்டிருப்பாள்'' என்று நினைத்தாள் அவள்.

அன்றைக் கூட்டம் முடிந்த பிறகு, மேரியின் பெரியப்பா பிள்ளை ஜான் ஜே. ஹார்டின், அவளைத் தன் சகோதரன் ஜான் ஸ்டூவர்ட்டின் வீட்டில் நடந்த விருந்துக்கு அழைத்துச் சென்றான். மேரி, ஹார்டினை, ''ஜான் ஜே'' என்று அன்பாக அழைப்பாள். அவனும் வக்கீல் தொழிலில் தான் ஈடுபட்டிருந்தான். தவிர அவன் விக் கட்சியால்மாகாண சட்டசபைக்கு அங்கத்தினனாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தான். 'இல்லினாய்ஸ் சட்டசபை முழுவதையுமே நம் உறவினர்கள் தான் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது' என்று மேரி சில சமயம் நினைத்து, அதற்காகப் பெருமை அடைந்து கொள்ளுவாள்.

ஸ்டூவர்ட்டின் வீடு, மூன்பு காடாக இருந்த ஓரிடத்தில் கட்டப்பட்டிருந்தது. அன்றைய விருந்தை முன்னிட்டு அவ்வீட்டின் ஒவ்வோர் அறையிலும், தீபங்கள் ஜாஜ்வல்யமாக

எரிந்துகொண்டிருந்தன. அந்த விருந்துக்கு உறவினர்கள் மட்டுமல்ல, கெண்டக்கியிலிருந்து இல்லினாய்ஸுக்கு வந்து குடியேறியிருந்த குடும்ப நண்பர்களும் வந்திருந்தனர். விருந்து முடிந்து விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குப் புறப்படுவதற்கு முன்புதான் மேரி ஒரு விஷயத்தைக் கவனித்தாள். ''ஜான் ஸ்டூவர்ட்டின் கூட்டு வக்கீலான லிங்கன் ஏன் இந்த விருந்துக்கு வரவில்லை? ஒருவேளை அவரை இவர்கள் அழைக்கவில்லையோ?''

ஸ்டூவர்ட் பரந்த தோள்களும், நேசபாவம் ததும்பும் முகமும் உடையவன். அவன் கெண்டக்கி மாகாணத்தில், டான்வில்லில் உள்ள ஸெண்டர் கல்லூரியில் படித்துப் பட்டதாரியானவன். பிறகு அவன் இரண்டு வருஷங்கள் சட்டப் பயிற்சி பெற்று, 1828-இல் ஸ்பிரிங்ஃபீல்டில் தொழில் தொடங்கினான். சென்ற பத்து வருஷங்களில் அவன் தொழிலில் மிகவும் பிரபலமடைந்து, இப்பொழுது சிறந்த வக்கீல்களில் ஒருவனாக விளங்கினான். தவிர, மாகாண சட்டசபையில் அவன் விக் கட்சியின் தலைவனாகவும் இருந்தான். இப்பொழுது அமெரிக்கக் காங்கிரஸுக்கு அங்கத்தினனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மறு நாள் வாஷிங்டனுக்குப் புறப்பட இருந்தான். அதை யொட்டித்தான் அன்றைய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விருந்து முடியும் தருணம், ஜான் ஸ்டூவர்ட் மேரியின் அருகில் நின்று கொண்டிருந்தான். அப்பொழுது அவள், ''ஆமாம் நீ வாஷிங்டனுக்குப் போயிருக்கும் சமயத்தில் உன் வழக்குகளை யார் கவனித்துக்கொள்ளுவார்கள்?'' என்று கேட்டாள்.

''லிங்கன் இருக்கிறானே; அவனுக்கு நான் நடத்திவரும் வழக்குகளின் விவரங்கள் எல்லாம் தெரியும்; என்னுடைய கட்சிக்காரர்களையும் அவன் அறிவான். அவனைப் பார்த்தால் வக்கீலைப் போலவே தோன்றுது. ஆனால் ஜட்ஜுகளையும், ஜூரிகளையும் கவருவதில் அவன் வல்லவன்'' என்றான் ஸ்டூவர்ட்.

''அப்படியா? எனக்குத் தெரியாது. நான்தான் அவரைக் கோர்ட்டில் பார்த்தது இல்லையே; உண்மையைச் சொல்லப்போனால், நான் அவரைச் சந்தித்ததுகூட இல்லை.''

''என்ன? நீ லிங்கனைச் சந்தித்ததே இல்லையா? ஆச்சரியமாயிருக்கிறதே!'' என்று கூறிவந்த ஸ்டூவர்ட் பிறகு, ''ஆமாம்; அவன்தான் பெண்களைக் கண்டுவிட்டால் காத தூரம் ஓடுபவனாயிற்றே! இன்றைய விருந்துக்குக் கூட நான் அவனை அழைத்துத்தான் இருந்தேன். ஆனால் அவன் ஜோஷ்வா ஸ்பீடின் கடையில் உட்கார்ந்து அரசியல் விவாதம் செய்துகொண்டிருக்கிறானே, என்னவோ?''

''ஜான்! போயும் போயும் அந்தமாதிரி ஆளைத்தானா நீ உன் கூட்டாளியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்?''

ஸ்டீவர்ட் அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டு வெளித்தாழ்வாரத்துக்கு அழைத்துச் சென்றான். அங்கே இருட்டாக இருந்தது; குளிராக இருந்தாலும் விருந்தினரின் கூச்சல் இல்லாமல் அமைதியுடன் விளங்கிற்று. ஜான் ஸ்டீவர்ட் தனது உள்ளத்தையே திறந்து காட்டினான் மேரியிடம். அவன் சொன்னான்: ''1832-இல் நடந்த யுத்தத்தின்போதுதான் நான் லிங்கனை முதன் முதலாகச் சந்தித்தேன். அவன் ஒரு அவலட்சணமான வாலிபனாக, இளகிய நெஞ்சம் உடையவனாக, எப்பொழுதும் விசனத்தையே பிரதிபலிக்கும், ஓர் அசல் பட்டிக்காட்டானாகத் தோற்றமளித்தான். ஆனால் வாய் திறந்து பேசியபோது, அவனுடைய இயற்கையான அறிவுத்திறமையை நான் கண்டுகொண்டேன். அவனுடைய நியூ ஸேலம் நண்பர்கள் அடங்கிய படைப் பகுதிக்கு லிங்கன் காப்டனாக இருந்தான். கிளாரிஸ் குரோவ் என்ற இடத்தில் போக்கிரிகள் சிலர் அப்படையினரிடம் வாலாட்ட வந்தபோது, லிங்கன் அவர்களை தலைவனை 'வெளு-வெளு' என்று வெளுத்துக் கட்டிவிட்டானும். அதற்காக லிங்கனையே தங்கள் படைத் தலைவனாக அவர்கள் தேர்ந்தெடுத்திருந்தார்கள். அந்தப் போரில் நாங்கள் ஒரு சிவப்பு இந்தியனையாவது காணவுமில்லை; போரிடவுமில்லை. இருந்தாலும் நாங்கள் என்னவோ, பெரிய ராணுவத்தார் போலவே நடந்துகொண்டோம். அப்பொழுது நடந்த ஒருவேடிக்கையான சம்பவம் எனக்கு நினைவு வருகிறது. ஒரு சமயம் லிங்கன் தனது படையை அணிவகுத்து நடத்திச் சென்றபோது வழியில் ஒரு வேலி குறுக்கிட்டது. அணிவகுப்பைக் கலைக்காமல் தனது படையை மேலே எப்படி நடத்திச்செல்வது என்பது லிங்கனுக்குத் தெரியவில்லை. உடனே அவன் சாதுரியமாக ஒரு வேலை செய்தான். ''ஹால்ட்! '' (நில்லுங்கள்) என்று கூவினான். ''நமது படை இங்கே அணிவகுப்பைக் கலைத்து இந்த வேலிக்கு அப்பால் சென்றதும் மீண்டும் அணிவகுத்து நிற்கும்'' என்று கட்டளை பிறப்பித்தான்.

மேரி சிரித்துக்கொண்டே ''தேவலையே? பெரிய சட்ட உபாயம் போலல்லவா இருக்கிறது?'' என்றாள்.

''இல்லை, இல்லை; அப்பொழுது அவனுக்கு வக்கீல் தொழில் என்றால் என்னவென்றே தெரியாது அவன் நியூ ஸேலத்தில் ஒரு கடையில் குமாஸ்தாவாக இருந்தவன். ஆனால் அவனுக்குப் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் மிகுதியாக இருந்தது. அவன் ராணுவத்தில் சேருவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு, பக்கத்து வீட்டிலிருந்த ஒரு குடியானவனிடம் கிர்க்காம் எழுதிய இலக்கண நூல் ஒன்று இருப்பது தெரிய

வந்ததாம். உடனே அதை அவனிடமிருந்து வாங்கி மாதக் கணக்காக உருப்போட்டு வந்தானும். இலக்கண சாஸ்திரத் தைக் கரைத்துக் குடித்த அவனுக்கு, வேறு சாஸ்திரங்களையும். ஒரு கை பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டதாம். 'அம்மாதிரி சட்டத்தையும் கரைத்துக் குடிக்க விருப்ப முண்டா?'' என்று நான் அவனைக் கேட்டேன். என்னுடைய கேள்வி அவனைத் திடுக்கிடச் செய்துவிட்டது. சட்டத்தில் தேர்ச்சி பெறுவதற்குத் தேவையான கல்வியறிவு தனக்கு இல்லையென்றும், தனது பதினைந்தாவது வயது வரை, ஒரு பென்சிலையோ, நோட்டுப் புத்தகத்தையோ தொட்டது கூட கிடையாதென்றும் அவன் சொன்னான். என்னை ஸ்பிரிங் ஃபீல்டில் வந்து பார்; சட்ட புத்தகங்கள் சிலவற்றைத் தரு கிறேன். படித்துப் பார்த்தாயானால், கிர்க்காமின் இலக் கணத்தைவிடக் கஷ்டமானதில்லை என்பதைக் காண்பாய்'' என்று நான் கூறினேன். அடுத்த வசந்த காலத்திலிருந்து, அவன் இருபது மைல் நடந்தே வந்து என்னிடமிருந்து சட்டப் புத்தகங்களை வாங்கிக்கொண்டு போக ஆரம்பித்தான்; ராணுவ வேலையை விட்டபோது அவனுக்குச் சிறிது பணம் கிடைத்திருந்தது. அதைக்கொண்டு நியூ ஸேலத்தில் அவன் ஒரு சிறிய கடையை ஆரம்பித்திருந்தான். கடையில் வியா பாரமே கிடையாது. ஆகையால் அவனுக்குப் படிப்பதற்கு நிறையப் பொழுது கிடைத்தது. அவன் சட்டப் புத்தகங் களைப் படித்து வந்த வேகம் என்னை வியப்பில் ஆழ்த்திற்று. என்னிடமிருந்து புத்தகங்களை வாங்கிக் கொண்டு நியூ ஸேலத்தை நோக்கி நடக்கும்போதே, அவன் ஏதாவது ஒரு புத்தகத்தில் முப்பது நாற்பது பக்கங்களை மனப் பாடம் செய்து விடுவான்.''

''உனக்கு எப்பொழுதுமே பிறருக்கு உதவும் குணம் உண்டு, ஜான். அதனால் தான் நீ இப்படியெல்லாம் லிங்க னுக்கு உதவியிருக்கிறாய்; இல்லையா?'' என்று மேரி கேட் டாள்.

இந்தப் பாராட்டு மொழியால் களிப்படைந்த ஸ்டூவர்ட் ''அவன் ஒரு விநோதமான பிறவி மேரி; நிமிஷத்தில் ஒருவர் உள்ளத்தில் இடம் பெற்று விடுவான். 'சரி; கரைகடந்த துயரத்தில் ஆழ்ந்திருக்கிறான்; நேரே காட்டுக்குப் போய் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு விடுவான்' என்று நினைக் கும் போது, குபீரென்று சிரித்துக் கொண்டு வேடிக்கையாகப் பேச ஆரம்பித்து, நம்மையும் சிரிப்பில் ஆழ்த்தி விடுவான்'' என்றான்.

ஸ்டூவர்ட் கண நேரம் மௌனமாக இருந்தான். லிங் கனைப் பற்றிய பழைய நினைவுகள் அவன் மனத்திரையில்

ஓடின. மேரி குளிருக்கு அடக்கமாக, கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டாள்.

ஸ்டீவர்ட் தொடர்ந்தான்: ''லிங்கன் ரொம்ப துரதிர்ஷ்ட சாலி மேரி. அவனுக்கு மாத்திரம் அப்பொழுது தபால் ஆபீசில் ஒரு சிறிய வேலை கிடைத்திராவிட்டால், பிழைப் புக்கே வழியிருந்திருக்காது என்றுல் பார்த்துக் கொள்ளேன். ஆனல் அந்தப் பக்கத்து ஜனங்களுக்கு அவன் மேல் ஒரு பிரியம். அவர்கள் 1834-இல் அவனை மாகாண சட்டசபை அங்கத்தினனுகத் தேர்ந்தெடுத்தார்கள். வாண்டாலியாவி லுள்ள என் அறையில் தான் அப்பொழுது அவன் தங்கி யிருந்தான். ஒரே அறையில் இருவர் சேர்ந்து வசிக்கும் போது, ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து கொள்ள நிறைய வசதி ஏற்படுகிறதில்லையா? நான் அவனை என் நண்பர்களுக் கெல்லாம் அறிமுகம் செய்து வைத்தேன்; பல கமிட்டிகளில் அவனை நுழைத்து விட்டேன். அரசியலைப் பற்றி எல்லா வற்றையும் அவனுக்குப் போதித்தேன். அவன் மாதிரி எதையும் வேகமாகக் கிரகித்துக் கொண்டு விடும் ஒருவரை நான் இதுவரை பார்த்ததேயில்லை, மேரி. என் ஆபீஸில் இருந்த சட்டப் புத்தகங்களையும், மற்றும் ஸ்பிரிங்ஃபீல்டில் யார் யாரிடமெல்லாம் சட்டப் புத்தகம் உண்டோ, அவற் றையும் கரைத்துக் குடித்து விட்டு, அவன் 'ஸனத்' பெற்றுன். அப்பொழுது எனது கூட்டு வக்கீலாக இருந்து வந்தவர் விலகிக் கொண்டார். உடனே நான் லிங்கனை என்னுடன் சேர்த்துக் கொண்டேன்.''

ஸ்டீவர்ட் இந்த விவரங்களைக் கூறி வந்தபோது, மேரி அவன் முகத்தையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண் டிருந்தாள். பிறகு அவள் கேட்டாள்: ''லிங்கனைப்பற்றி பல விஷயங்களை எனக்குச் சொல்லி விட்டாய் ஜான்; ஆனல் உனக்கு ஏன் அவர்மீது இத்தனைப் பிரியம் என்பதைச் சொல்லில்லையே?''

மேரியின் கேள்வி அவனைத் திகைப்படையச் செய்தது. அவன் சிறிது நேரம் அவள் முகத்தையே நோக்கிக் கொண்டி ருந்து விட்டுப் பிறகு சொன்னன்: ''அதபாதலத்திலிருந்து முன்னேறி வருகிற ஒரு திக்கற்றவனைக் கண்டு நீ எப்படி வியக்காமல் இருக்க முடியும் மேரி? அழகற்ற, காதல் என்றுல் என்ன என்பதே தெரியாத ஒருவனிடம் உனக்கு அனுதாபம் ஏற்படாமல் இருக்க முடியுமா மேரி? அவனுடைய திக்கற்ற தன்மைதான் அவன் துயருக்குக் காரணமாக இருக்க வேண் டும். மனிதர்களைச் சிரிக்க வைத்துக் கவர்ந்து கொள்ளும் அவனுடைய நகைச்சுவைக்கும் அது தான் காரணமாக இருக்கவேண்டும்.''

''உண்மைதான்; லெக்ஸிங்டனில் சுற்றத்தாரும் நண்

பரும் சூழ இருந்தபோதே, நான் வாழ் நாளெல்லாம் தனியாக வாழப் போவதுபோல் தோன்றிற்றே? பாவம்! லிங்கனுக்கு அப்படி இராதா?'' என்று மேரி நினைத்துக் கொண்டாள்.

அன்றிரவு மேரி படுக்கையில் படுத்துக் கொண்ட பிறகும் அவள் மனக்கண்முன், மாடியிலிருந்து மேடை வரை நீண்டு தொங்கிய லிங்கனின் கால்களே நின்று கொண்டிருந்தன.

4

மறு நாள் காலையில் மேரி, தனது சகோதரி ஃபிரான்ஸெஸ் தங்கியிருந்த குளோப்டேவர்னுக்கு(ஹோட்டலுக்கு)ச் சென்றாள். ஃபிரான்ஸெஸ் முன்னைவிட வெகு அழகாக இருந்தாள். அவள் உடலில் ஒரு புது மெருகு ஏறி இருந்தது; கண்களிலே ஒரு புதுச் சோபை காணப்பட்டது. அவர்களுடைய படுக்கை அறை சாதாரணமாகவே இருந்தாலும், வசதியாக இருந்தது. ஒரு பெரிய அலமாரி, ஸோபா ஒன்று, கணப்பு முதலியன இருந்தன. அறை ஓர் ஓரத்தில், கிழக்கிலும் வடக்கிலும் ஜன்னல்கள் உடையதாக இருந்தது.

''உனக்கும் இதே அறையை ஏற்பாடு செய்து விடுவோமா மேரி? ஏனென்றால் வாழ்க்கையைத் தொடங்க இது அருமையான இடம்'' என்றாள் ஃபிரான்ஸெஸ்.

மேரி, கருவுற்றிருக்கும் தன் சகோதரியை நோக்கினாள். அதே சமயம் தனது பெரியப்பா பிள்ளை ஜான் ஸ்டூவர்ட் கூட இதே அறையில் தான் மணவாழ்வைத் தொடங்கினான் என்பதையும் நினைத்துப் பார்த்துக் கொண்டாள்.

''ஆமாம்; நம் குடும்பத்திற்கே இப்பொழுது இந்த அறை 'ஆவி வந்த'தாகி விட்டதே! என் பெயரையும் பட்டியலில் போட்டுவை. ஆனால் நான் இங்கே குடியேறும் நாளைத் தான் இப்பொழுது நிர்ணயிக்க முடியாது'' என்றாள் அவள்.

ஃபிரான்ஸெஸ் வாஞ்சையோடு சகோதரியை அணைத்துக் கொண்டாள்.

பிறகு சகோதரிகள் இருவரும் ஹோட்டலிலிருந்து எஸ். எம். டின்ஸ்லே என்பவரின் கடைக்குச் சென்றார்கள். வரப்போகும் குளிர்கால உடைக்காக மேரி அங்கு சில துணிகளை வாங்கினாள். ஃபிரான்ஸெஸ் ஒரு ஜோடி கையுறைகளை வாங்கிக் கொண்டாள். பின்னர் அவர்கள் எதிரே இருந்த சதுக்கத்தின் வழியே நடந்தனர். அங்கே அரசாங்க மாளி

கையின் கட்டுமான வேலைக்காகக் கல்தச்சர்கள் சுக்காங் கற்களைச் செதுக்கிக் கொண்டிருந்தார்கள். மற்றொரு மூலையில் அரசியல் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. கர்னல் டிக் டெய்லர் என்ற பிரபல பிரசங்கி பேசிக் கொண்டிருந்தார். மேரியும் ஃபிரான்ஸெஸ்ஸும் அங்கு நின்று பிரசங்கத்தைக் கவனித்தனர். டெய்லர் விக் கட்சிக் காரர்களைக் குறை கூறிக் கொண்டிருந்தார். அவர்கள் கர்வம் கொண்ட பிரபுக்கள் என்றும், பிற்போக்கான கொள்கைகளை உடையவர்களென்றும், செல்வத்தைக் குவிப்பதிலும், தங்கள் சலுகைகளைப் பாதுகாத்துக் கொள்ளுவதிலுமே நாட்ட முடையவர்களென்றும், ஆஞல் தம்மைப் போன்ற ஜனநாயகக் கட்சிக் காரர்களோ ஏழைகள், மக்களின் க்ஷேமமே தங்கள் க்ஷேம மென்று கருதும் சாதாரண மக்கள் என்றும் அவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

டெய்லர் இப்படிப் பேசி முடித்ததும், ஒரு மனிதன் மேடைமீது ஏறி மெதுவாக டெய்லரின் பின்புறமாக வந்து, சட்டென்று அவருடைய கோட்டைப் பிடித்து இழுத்துத் திறந்து காட்டினன். உள்ளே அவர் விலையுயர்ந்த ஸில்க் சட்டை அணிந்து கொண்டிருந்தார். தங்கத்தில் செய்த ஒரு கடிகாரச் சங்கிலியும், தங்க மெடல்களும், இன்னும் பல ஆபரணங்களும் அவரிடம் காணப்பட்டன. இதை யெல்லாம் பார்த்ததும் அங்கு கூடியிருந்தவர்கள் 'கொல்' லென்று நகைத்துவிட்டனர். மேரியும் அந்த நகைப்பில் கலந்து கொண்டாள். டெய்லரின் வண்டவாளத்தை வெளிப்படுத்திய ஆனை மேரி அடையாளம் கண்டு கொண்டாள். முன்பு ஒரு நாள் இது போன்ற ஓர் அரசியல் கூட்டத்தில் மாடியிலிருந்து மேடை மீது குதித்துப் பிரசங்கியைக் காப்பாற்றிய அதே ஆள்தான். அவன் இப்பொழுது கூட்டத்தினரை அமைதியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டு பேச ஆரம்பித்தான்.

''நண்பர்களே! நான் ஏழை ஆப்ரஹாம் லிங்கன். நம் நாட்டிலுள்ள 'விக்' கட்சியினர் எல்லோரும், அருமையான கோச்சு வண்டிகளில் சவாரி செய்பவர்களென்றும், விலையுயர்ந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் அணிபவர்களென்றும் கர்னல் டெய்லர் குற்றம் சாட்டினர். நானும் விக் கட்சியைச் சேர்ந்தவன்தான். ஆஞல் பரம ஏழை. எனக்குக் கிடைத்து வந்த எட்டு டாலர் சம்பளத்தைக்கொண்டுதான் வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது. அப்பொழுது என்னிடம் ஒரே ஒரு நிஜார்தான் இருந்தது. அதுவும் தோலில் தைக்கப்பட்டருந்த நிஜார்; தண்ணீரும் வெயிலும் பட்டு அது சுருங்கிக் கொண்டே வந்தது. நான் நாளுக்கு நாள் நெட்டையாகிக் கொண்டே வர, அது எனக்குக்குட்டையாகிக் கொண்டே வந்தது. கடைசியில் அது மிகவும் சுருங்கி

என் முழங்காலை இறுக்கிப் பிடித்த அடையாளத்தை நீங்கள் இன்னும் காணலாம். இப்படிப்பட்ட தரித்திர வாழ்க்கைக்குப் பிரபுக்கள் வாழ்க்கை என்று பெயராஞல், நண்பர்களே மன்னித்துக் கொள்ளுங்கள், நான் குற்றவாளிதான்.''

லிங்கனின் இந்தப் பிரசங்கத்தைக் கேட்டதும் கூடியிருந்தவர்கள் கைதட்டி ஆர்ப்பரித்து விட்டு கலைந்து விட்டனர். அவர்கள் கலைந்து செல்வதைப் பார்த்துக் கொண்டே நின்ருன் லிங்கன். இப்பொழுது கூட்டம் இல்லாததால், மேரி மேடை மீது நின்று கொண்டிருந்த லிங்கனை நன்ருகப் பார்க்க முடிந்தது. அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நேருக்கு நேர் பார்த்துக் கொள்ளவில்லையெனினும், ஒருவர் மற்றவர் இருப்பதை உணர்ந்து கொள்ளாமலில்லை.

பிறகு மேரி ஃபிரான்ஸெஸ்ஸிடம் திரும்பி, ''நான் ஒரு நாள் மிஸ்டர் லிங்கனைச் சந்திக்க வேண்டும்'' என்ருள்.

* * *

நினியன் எட்வர்ட்ஸின் வீடு, அந்தப் பக்கத்திலேயே உயரமான பகுதியாய் விளங்கிய ''அரிஸ்டாக்ரஸி குன்று'' என்ற இடத்தில் இருந்தது. ஒவ்வொரு மாலையும் மேரியைச் சந்திப்பதற்காக, அவளுடைய ஸ்பிரிங்ஃபீல்டு தோழிகளான மெர்ஸி லிவரிங்கும், ஜூலியா ஜேனும் மற்றும் 1827-இல் ஸ்பிரிங்ஃபீல்டில் குடியேறி, டாக்டராகத் தொழில் நடத்தி வந்த அவளுடைய பெரியப்பா ஜான் டாடின் பெண்களான லிஸ்ஸி, ஃபிரான்ஸெஸ் டாடு ஆகிய இருவரும் அக்குன்றுக்கு வருவார்கள். தன் தோழிகள் எல்லோரிலும், மெர்ஸியைத் தான் மேரிக்கு ரொம்பப் பிடித்திருந்தது. ஏனென்ருல் அவளைப் போல் மெர்ஸியும் தனது கல்யாணத்தைப் பற்றி ஆற அமர ஆலோசிப்பவளாக இருந்தாள். அவள் கவர்ச்சி மிக்க குணமுள்ளவளாஞலும், எந்த வாலிபன் மீதும் அவ்வளவு எளிதாகக் காதல் கொண்டு விடவில்லை.

ஒரே ஒரு விஷயத்தில்தான் அவர்கள் மாறுபட்ட கருத்து உடையவர்களாக இருந்தார்கள்; அதுதான் அரசியல். ஒரு நாள் அவர்கள் குன்றிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கையில் மெர்ஸி சொன்ஞள்: ''ஜேம்ஸ் காங்க்ளிங் என்னை அரசியல் கூட்டங்களுக்கு இழுத்துச் சென்று விடுகிருன். எனக்கு அங்கே ஒன்றும் புரிவதும் இல்லை; பிடிக்கவும் இல்லை. பெண்களாகிய நமது குறுகிய அறிவுக்குப் புரிபடாத விஷயம் அரசியல் என்பது என் கருத்து.''

''அப்படி இந்த ஸ்பிரிங்ஃபீல்டில் சொல்லாதே மெர்ஸ். அந்த மாதிரிப் பைத்தியக்கார நினைவுகளெல்லாம் எங்கள் புளூகிராஸில் தான் என்றல்லவா நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்'' என்ருள் மேரி.

'அரசியலைப் பற்றி நாம் ஒன்றுமே தெரிந்து கொள்ள வேண்டாம் என்று நான் சொல்ல வில்லை மேரி. ஆனால் ஆண் பிள்ளைகள் ஈடுபட வேண்டிய அரசியலில் பெண்களாகிய நாம் தலையிடுவதால், நமக்கு வீண் குழப்பங்கள் ஏற்படுவதோடு, பயனற்ற காரியத்தில் தான் நம்மை நாம் ஈடுபடுத்திக் கொண்டவர்கள் ஆகிறோம்.''

''என்ன? பயனற்ற காரியத்திலா?''

''ஆம் மேரி; உணவு தயாரிப்பதும், உடைகள் தைப்பதும் நமக்கே உரித்தான வேலைகள். அந்த உரிமைகளை நாம் புறக்கணித்து, நமது அழகையும், அன்பையும் இழந்து விட்டோம் என்றால்.....''

''அதாவது நாம் பெண்மையையே இழந்து விடுவோம் என்கிறாய்; அப்படித்தானே?''

''இல்லை மேரி; நான் அப்படிச் சொல்லவில்லை. வருத்தப்பட்டுக் கொள்ளாதே.''

மேரி நெடுநேரம் பதில் பேசவே இல்லை. பாதிக் குன்று இறங்கி விட்ட பிறகு அவள் சொன்னாள்: ''இது வருத்தம் இல்லை மெர்ஸ்; பயம். ஸ்பிரிங்ஃபீல்டில் எனக்குப் பிடிக்காத விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. கோர்ட் ஹவுஸ் சதுக்கத்திலுள்ள நாற்றமடிக்கும் 'சிக்கன் ரோ', கழிவுப் பொருள்களுடன் தெருவெல்லாம் ஓடும் சாக்கடை, ஜனங்கள் கழிவுப் பொருள்களைக் கண்ட இடத்திலெல்லாம் வீசி எறிவது, பன்றிகள் தெருக்களில் செத்து நாறிக் கொண்டு கிடப்பது, இவற்றையெல்லாம் எங்கள் லெக்ஸிங்டனில் ஒரு விநாடி கூடப் பார்த்துச் சகிக்க மாட்டோம். இருந்தாலும் ஸ்பிரிங்ஃபீல்டு ஓர் அற்புதமான ஊர் என்றே நான் கருதுகிறேன். ஏன் தெரியுமா? இவ்வூர் ஓர் அரசியல் கேந்திரமாக விளங்குவதுதான் அதற்குக் காரணம். அன்றொரு நாள் நாம் 'அமெரிக்கன் ஹவுஸ்' நாடகக் கொட்டகையில் 'தெரஸா' நாடகம் பார்த்தோமே, அதை விட இங்கு நடக்கும் அரசியல் கூட்டங்கள் எனக்கு அதிகச் சுவையூட்டுகின்றன. ஏன்? அன்று மிஸ்டர் லிங்கன், ஒரு பெரிய கலகம் விளைய இருந்ததைத் தடுத்து நிறுத்தினாரே, அதை நான் எவ்வளவு ரசித்தேன் தெரியுமா?''

ஒரு நாள் காலையில் ஸ்பிரிங்ஃபீல்டில் மழை பிடித்துக் கொண்டது. அது பதினைந்து நாட்கள் இடைவிடாமல் கொட்டித் தீர்த்தது. மேரி வீட்டுக்குள்ளேயே அடைத்துக் கிடக்க வேண்டியதாயிற்று. ஏனென்றால் தெருவெல்லாம் ஒரே கருஞ்சேறாகி விட்டிருந்ததோடு, இவர்கள் வீடு இருந்த இடத்திலிருந்து வெளியே எங்கே போக வேண்டுமானாலும் சீரான நடைபாதை ஒன்று கூட இல்லை. நினியன்,

பெர்ஸாலின் கடையிலிருந்து மேரியா எட்ஜ்வொர்த்தின் நாவல்களையும், கௌப்பர், இர்விங் ஆகியோரின் நூல்களையும் வீட்டில் வாங்கிப் போட்டிருந்தான். அவற்றைப் படிப்பதிலும் எட்வர்ட்ஸின் குழந்தை ஜூலியாவுக்கு உடைகள் தைப்பதிலும் பொழுதைப் போக்கி வந்தாள், மேரி.

அப்படியும் அவளுக்கு வீட்டில் அடைபட்டுக் கிடந்ததும் மிகுந்த அலுப்பை அளித்தது. ஆகவே ஒரு நாள் மெர்ஸிக்கு ஒரு சீட்டு எழுதிக் கொடுத்து அனுப்பினாள்.

''அன்புள்ள மெர்ஸ்,

''எங்கள் வீட்டில் ஒரு மூட்டை நிறையக் கூழாங் கற்கள் இருக்கின்றன. அந்த மூட்டையோடு வெளியே போய், வழியிலுள்ள பள்ளங்களை நிரப்பி, அவற்றின் மேல் நடந்து, சேற்றில் மாட்டிக் கொள்ளாமல் ஊருக்குள்ளே போய் வரலாம் என்று நினைக்கிறேன். இந்த அருஞ்செயலில் பங்கு கொள்ள நீயும் வருகிறாயா?''

இந்தச் சீட்டு கிடைத்ததும் மெர்ஸி பறந்தோடி வந்தாள். மேரியும் அலங்கரித்துக் கொண்டு கிளம்பினாள். குன்றிலிருந்து கீழே இறங்கும் பாதை அவ்வளவு மோசமாக இருக்கவில்லை. ஏனென்றால் மழை நீர் அந்தப் பாதைக்கு வராமல், வேறு ஒரு பக்கமாக ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் அவர்கள் கீழே இறங்கி சமதளத்துக்கு வந்ததும், அங்கே ஒரே சேற்றுக் காடாக இருந்தது. மேரியின் ஒரு மூட்டைக் கூழாங் கற்கள் கொஞ்சம் தூரம் குழிகளை நிரப்பக்கூடப் போதுமானதாக இல்லை.

அவர்கள் இருவரும் முழங்கால் வரைச் சேறு பூசியிருக்க, வாட்ஸன் என்பவரின் மிட்டாய்க் கடைக்கு வந்து சேர்ந்தனர். ஆளுக்கு ஓர் ஐஸ் கீரீமும், சுடச்சுட கேக்குப் வாங்கிச் சாப்பிட்டு விட்டு, வீட்டை நோக்கிக் கிளம்பினர். அப்பொழுது சாமான்கள் ஏற்றிச் செல்லும் கட்டை வண்டி ஒன்று அவ்வழியே வந்தது.

''மெர்ஸ்! மெர்ஸ்! அதோ பார் எல்லிஸ் ஹார்ட்டின் கட்டை வண்டி வந்து கொண்டிருக்கிறது. வா, நாம் அதில் ஏறி வீட்டுக்குப் போய் விடலாம்'' என்றாள் மேரி.

''சீ! இது என்ன பேச்சு மேரி? நாம் கட்டை வண்டியில் ஏறிச் செல்வதா? ஊரே கூடி நின்று நகைக்கப் போகிறது!'' என்றாள் மெர்ஸி.

''நகைத்தால் நகைக்கட்டுமே. அதன் பிறகாவது அவர்கள் நல்ல நடைபாதை போடுவார்களா, இல்லையா?'' என்று கூறிய மேரி, வண்டிக்காரர் ஹார்ட்டை நிறுத்தி, ''எங்களை வீடுவரை ஏற்றிச் செல்வீர்களா?'' என்று கேட்டாள்.

இதைக் கேட்டதும் ஹார்ட், ஆச்சரியத்தோடு தமது செந்நிறத் தாடியைத் தடவி விட்டுக் கொண்டார். பிறகு ''வீட்டுக்கா? உங்களோயா? இது கட்டை வண்டி அல்லவா மிஸ் டாடு? எனக்கென்ன? நான் ஏற்றிக் கொண்டு போகத் தயார். வருவதாயிருந்தால் வாருங்கள்'' என்றார்.

மேரி உடனே வண்டியில் தொற்றிக் கொண்டு விட்டாள். ஆனால் மெர்ஸி ஏறவில்லை. ''என்னால் முடியாது மேரி. என் அண்ணா பார்த்தால் திட்டுவான்; நீ போ; போய்க் கொள்'' என்று அவள் கூறிவிட்டாள்.

ஹார்ட், மேரியை ஏற்றிக் கொண்டு, தமது வண்டியை எட்வர்ட்ஸின் வீட்டை நோக்கி ஓட்டினார். தெருக்களிலும், வீடுகளிலும், கடை கண்ணிகளிலும் ஆண் முகங்கள் வாய் திறந்தபடி மேரியின் கட்டை வண்டி பிரயாணத்தைப் பார்த்துப் பிரமித்து நின்றன. வேறு வாகனம் எதுவும் கிடைக்காதபோது ஒரு பெண் கிடைத்த வண்டி ஒன்றில் பிரயாணம் செய்வதில் இவ்வளவு ஆச்சரியப்பட என்ன இருக்கிறது என்பது மேரிக்குத் தெரியவில்லை.

அன்று மாலையில் எட்வர்ட்ஸின் வீட்டை ஸ்பிரிங்ஃபீல்டு வாலிபர் குழாம் அனைத்தும் படையெடுத்து விட்டது, மேரியைக் கிண்டல் செய்வதற்காக. ஸ்டீபன் டக்ளஸ்தான் முதல் முதலில் வந்தான். நெப்போலியனைப் போல் கோட்டுக்குள் கைகளைச் சொருகிக்கொண்டு அவன் பாட ஆரம்பித்தான்.

''திங்களன்று நான் தெருவில் போனேன்,
அங்கெல்லாம் ஒரே சேறும் சகதியும்,
மங்கை ஒருத்தி அந்த சேற்றில்
சிங்காரமாகக் கட்டை வண்டியில் வந்தாள்.
''இன்பப் பெண்ணே இது என்ன? என்க,
அன்புடன் அவளும் அடியேனிடமே,
என் செய்ய நண்பா? வீடு செல்ல கோச்சில்லாமையால்
தென்புடன் அமர்ந்தேன் கட்டை வண்டியி
லென்றாள்''

டக்ளஸ் பாடி முடித்தானோ இல்லையோ மேடைக்குத் தாவி வரும் நடிகனைப் போல் ஜேம்ஸ் ஷீல்ட்ஸ் அங்கே தாவி வந்து,

''பலகணி திறந்தது; பலர்தலை தெரிந்தது,
நிலமடவன்னத்தின் ஊர் வலமது காண,
ஜிலு-ஜிலு வெனவே தொப்பிச் சிறகுகள் பறக்க
கல கல வென வந்தாள் கட்டை வண்டியிலே,
''இறுதியில் வந்தது எட்வர்ட்ஸ் மாளிகை,
குதிரையை நிறுத்தினன் கூலி வண்டி ஹார்ட்,
சடுதியில் அவளோ வாரி எடுத்தே அவன்
சகதியில் உருட்டினன் சாக்கு மூட்டை போலே.''

''ஏய்! ஏய்! என்னை அவன் உருட்டினனா? இல்லை; இல்லை; நான் தான் வண்டியிலிருந்து குதித்து இறங்கி வந்தேன்; ஆமாம்; இதெல்லாம் யாருடைய கற்பனை?'' என்றாள் மேரி சிரித்துக் கொண்டே.

மேரிக்கு வேறு யாரும் பதில் சொல்லு முன்பே அப் பொழுதுதான் அந்த அறைக் குள்ளே நுழைந்த டாக்டர் எலியாஸ் மெரிமன் பாட ஆரம்பித்தான்:

''படிப்பினை ஒன்றினைப் பகருவேன் பாவாய்
அற்பமென் றெண்ணு தகனைக் கேட்பாய்''

அவன் பாடுவதைச் சட்டென்று நிறுத்தி, ''உண்மை யாகத் தான் சொல்லுகிறேன் மேரி, இது என்னுடைய எளிய கற்பனை தான். இந்தப் பயல்களைப் போல் நான் பாடம் படித்து ஒப்புவிக்க வில்லை'' என்று கூறி விட்டுத் தொடர்ந் தான்:

''சேற்றில் சிக்கித் தவிப்பா யாகில்,
கட்டை வண்டியை நாடு; கை கொடுக்கும்.''

இதைக் கேட்டதும் அந்த வீடே அதிரும்படியான கர கோஷமும், சிரிப்பும் எதிரொலித்தன. நினியன் எட்வர்ட்ஸ் அப்பொழுது அங்கே வந்தான். ''ஐயையோ! எட்வர்ட் ஸுக்கு என் செயல் அவமானத்தை உண்டாக்கிவிட்டதோ?'' என்று கலங்கினாள் மேரி.

ஆனால் நினியன் அலுத்துக் கொண்டு அங்கே வரவில்லை; அவன் அன்புடன் மேரியின் கன்னத்தில் முத்தமிட்டு, ''பேஷ், மிஸ் டாடு. இன்று நீ நகரத்தின் பாராட்டுக்கே உரியவளாகி விட்டாய் போலிருக்கிறதே? ஆம், இன்று நீ எங்கள் கண் களையும் திறந்து விட்டிருக்கிறாய். விரைவில் நாங்கள் நகர டிரஸ்டிகளுக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பி மன்ரோ தெருவி லிருந்து சதுக்கம் வரை ஒரு நடைபாதை அமைக்கச் செய் கிறோம். விஷயம் என்னவென்றால் நகர டிரஸ்டிகளில் ஒரு வனே தனது பூட்ஸில் படிந்துவிட்ட சேற்றைக் கழுவிக் கொண்டு அதோ வெளியே இருக்கிறான். ஜோஷ் ஸ்பீடும் அவனுடன் வந்திருக்கிறான். அவனை உள்ளே அழைத்து வரலாமா என்று ஜோஷுவா கேட்கிறான்'' என்றான்.

சில விநாடிகளுக்குப்பிறகு ஜோஷுவா ஸ்பீடு, ஜான் ஸ்டீவர்ட்டின் வக்கீல் கூட்டாளியுடன் அந்த அறைக் குள்ளே வந்தான். லிங்கன் தனக்கு அறிமுகம் செய்து வைக்கப் பட்டதையோ, அறிமுகத்தைத் தான் ஏற்றுக் கொண்டதையோ மேரி உணரவே இல்லை.

அவள் உணர்ந்ததெல்லாம் தன் கை அவருடைய கைக் குள் இருந்தது என்பதும், அது நெறிக்கப்படவோ, நெருக் கப்படவோ இல்லை எனினும் தன்னைச் சிறை செய்து விட்டது

போன்று பற்றிக் கொண்டிருந்தது என்பதும்தான். பிறகு அவள் முகத்தை நிமிர்த்தாள். முதல் தடவையாக அவளுடைய கண்களும், ஆப்ரஹாம் லிங்கனின் கண்களும் சந்தித்துக் கொண்டன; ஒன்றை ஒன்று விழுங்கி விடுவது போல் பார்த்துக்கொண்டன.

5

மற்ற எல்லோரும் போய்விட்டார்கள். லிங்கன் மாத்திரம் பின்தங்கினான். 'அவருக்கு இங்கிருந்து போக மனம் வரவில்லை; அதனால் தான் போகவில்லை' என்று எண்ணிக் கொண்டாள் மேரி. வீட்டில் எலிஸபெத்தும் நினியனும் இல்லை. அவர்கள் ஏதோ ஒரு விருந்துக்குப் போயிருந்தார்கள். மேரியைக் கூட லிவிங்குடும்பத்தினர் சாப்பிட வரும்படி அழைத்திருந்தனர். ஆனால் அவள் வர இயலாதென்று சீட்டுக் கொடுத்து அனுப்பி விட்டாள். அவனும் அவளும் தனியாகத் தான் இருந்தனர். ஆனால் இருவருக்கும் பேச வாய் வரவில்லை. அவளாவது தட்டுத் தடுமாறி இரண்டொரு வார்த்தைகள் கூறினாள். ஆனால் லிங்கன் அதுகூடப் பேச வில்லை. அவள் பலதடவை அவனுக்குத் தேநீர் தயாரித்துக் கொண்டு வருவதாகக் கூறினாள். ஆனால் அவன் வேண்டாமென்று கூறி விட்டான். மணி ஏழாகி விட்டது. லிங்கனுக்கு நிச்சயமாகப் பசி எடுத்திருக்கும் என்று நினைத்தாள் மேரி.

''வேலைக்காரர்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள். ஆயினும் சமையலறையில் உணவுக்குத் தேவையானவை எல்லாம் இருக்கின்றன. அங்கே வாருங்கள். நாம் பேசிக் கொண்டே உணவைத் தயாரித்து எடுத்து வரலாம்'' என்றாள் அவள்.

லிங்கன் துள்ளி எழுந்தான். '' இல்லை; இல்லை; எனக்கு ஒன்றும் வேண்டாம். எனக்குப் பசியே இல்லை'' என்றான்.

ஆனால் மேரி அவன் பேச்சைச் சட்டை செய்யாமல் சமையலறைக்கு நடந்தாள். லிங்கனும் அவளைப் பின் தொடர்ந்தான். சமையலறையில் சிறிய மெழுகுவத்தி ஒன்று மங்கலான வெளிச்சம் தந்து கொண்டிருந்தது. அவள் அதை எடுத்து லிங்கனின் கைகளில் கொடுத்து, மேலே தொங்கிக்கொண்டிருந்த பெரிய விளக்கை ஏற்றச் செய்து விட்டு, உணவைத் தயாரிப்பதில் ஈடுபட்டாள். அவள் ஓடியாடி வேலை செய்வதை லிங்கன் கண் கொட்டாமல் பார்த்துக்

கொண்டிருந்தான். அவளுக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று சுற்றிலும் நோக்கினான்.

மேரி மெல்ல அவனிடம் பேச்சுக் கொடுத்தாள்: ''நான் இரண்டு வருடங்களுக்கு முன்பு இங்கே வந்திருந்தேன். அப்பொழுது நீங்களும் இங்கேதான் இருந்தீர்களாம். ஆனால் ஏன் அப்பொழுது நீங்கள் என் கண்களில் தட்டுப் படவே இல்லை?'' என்று அவள் கேட்டாள்.

''எனக்கு நாலு மனிதர்களோடு கலந்து பழகத் தெரியாது. அதனால் எனக்கு நண்பர்களே இல்லை யென்று அர்த்தமில்லை. என்னுடைய ஸ்பிரிங்ஃபீல்டு வாழ்க்கை மிக மந்தமானது. என் வாழ்விலேயே வேற்றெங்கும் நான் இத்தனை தனிமையை உணர்ந்ததில்லை. அதிலும் இவ்வூருக்கு வந்த புதிதில், 'பெண்களுக் கெல்லாம் நான் ஏளனமானவனாக இருந்தேன். ஆகவே அவர்கள் என்னை விரும்பி அழைக்கவும் இல்லை; நான் அவர்கள் அழைப்பை எதிர்பார்க்கவும் இல்லை.''

''இல்லை மிஸ்டர் லிங்கன். நீங்கள் சொல்வதை நான் நம்பவில்லை. என் பெரியப்பா பிள்ளை ஜான் ஸ்டுவர்ட்டின் கூட்டாளி என்ற முறையில் உங்களை டாடு குடும்பத்தினராவது விரும்பி அழைத்துத்தான் இருக்கவேண்டும்.''

அவன் நன்றி தோன்ற அவளை நோக்கினான். இருந்தாலும் அவன் உள்ளத்தில் இது வெறும் புகழ்ச்சியாக இருக்குமோ என்ற சந்தேகமும் தோன்றுமல் இல்லை. அவன் சொன்னான்: ''மிஸ் டாடு! அப்பொழுதெல்லாம் நான் மாதா கோவிலுக்குக் கூடப் போனதில்லை, ஏனென்றால் அங்கு எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது எனக்குத் தெரியாதென்பதை நான் உணர்ந்திருந்தேன்.''

அவனுடைய குரலில் வெட்கமோ வருத்தமோ இல்லை. அது சாதாரணமாகத்தான் இருந்தது. இருந்தாலும் மேரிக்கு அவன் மீது கோபமே ஏற்பட்டது. அவள் அடுப்படியிலிருந்து திரும்பி, கடிந்துகொள்ளுவதுபோல் அவனை நோக்கினாள். பிறகு சொன்னாள்: ''மிஸ்டர் லிங்கன்! அது உங்கள் அறியாமையையே காட்டுகிறது. 'மாதா கோவிலில்கூட எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது எனக்குத் தெரியாது: அதனால் நான் அங்கே போனதில்லை' என்கிறீர்களே? அப்படி புதிதாக என்ன இருக்கிறது அங்கே? உள்ளே நுழைய வேண்டியது; மற்றவர்களோடு மண்டியிட்டு உட்கார்ந்து கொள்ள வேண்டியது; எல்லோரும் பாடும் போது நீங்களும் பாட வேண்டியது; மதப் பிரசங்கம் நடக்கும் போது அதைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியது; தலையைக் குனிந்து பிரார்த்தனை செய்ய வேண்டியது: இவ்வளவுதானே? இது கூடத் தெரியாதவரா நீங்கள்? அதே மாதிரித்தான் முன்பே இந்த

வீட்டுக்கு ஸ்டீவ் டக்ளஸுடனே அல்லது என் பெரியப்பா பிள்ளைகளுடனே வந்து எங்களுடன் பேசிப் பழகியிருந்தீர்களானால், இன்று நாம் இப்படி அந்நியர் போல் என்ன பேசுவதென்பது தெரியாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டியதில்லை அல்லவா?''

இதைக் கேட்டதும் லிங்கனின் உள்ளத்திலிருந்து ஓர் புன்சிரிப்பு மலர்ந்தது. அது முதலில் அவன் கண்களில் வெளிப்பட்டு, பிறகு உதடுகளுக்குப் பரவிற்று. 'ஏன் எல்லோரும் இவரை அழகற்றவர் என்று கூறுகிறார்கள்? உண்மையில் இவர் அப்படி ஒன்றும் மோசமாக இல்லையே' என்று எண்ணிக் கொண்டாள் மேரி.

லிங்கன் சொன்னான்: ''ஒரு தடவை நான் ஒரு கிராமத்தில் மாதாகோவிலுக்குப் போயிருந்தேன். அங்கே பாதிரி ஒருவர் பிரசங்கம் செய்தார். 'நானே இயேசுநாதர், நானே அவர் பிரதிநிதி' என்று கூறிவிட்டு அவர் பிரசங்கத்தை ஆரம்பித்தார். பிரசங்கம் நடந்து கொண்டிருக்கையில் பல்லி ஒன்று அவருடைய கால்சராயில் ஏறிற்று. பாதிரி தமது காலை உதறிப் பார்த்தார்; ஆனால் பல்லி கீழே விழாது தோடு கொஞ்சம் கொஞ்சமாக மேலே ஏறி வரவும் ஆரம்பித்தது. பிரசங்கத்தை நிறுத்தாமலே அவர் தமது கால் சராயின் பொத்தான்களை அவிழ்த்து அதை உதறி எறிந்தார். ஆனால் அதற்குள் பல்லியார் அவருடைய சட்டையில் ஏறிக் கொண்டு விட்டார்.

இத்தனை சங்கடத்துக் கிடையிலும் பிரசங்கத்தை நிறுத்த மனம் வராமல், பாதிரியார் சட்டையையும் கழற்றி எறிந்து பல்லியை விரட்ட முயன்றார். ஆனால் அப்பொழுது பிரசங்கத்துக்கு வந்திருந்த கிழவி ஒருத்தி எழுந்து 'நீங்கள் இயேசுநாதரின் பிரதிநிதி என்றால், நான் இனி பைபிளையே கையினால் தொடமாட்டேன்'', என்று கத்தினாள்,

லிங்கன் இந்தக் கதையைச் சொல்ல ஆரம்பித்தபோது அவனுடைய கால்கள் தரையில் நிலைகுத்தி நின்றன. கதை வளர வளர அவனுடைய வலது கால் கொஞ்சம் கொஞ்சமாக மேலே உயர்ந்தது. கதை முடிந்ததும், அவன் கால்மேல் கால் போட்டுக் கொண்டு பின்னால் சாய்ந்தவாறு பெரிதாகச் சிரிக்கலானான்.

'இவர் தமது தனிமையுணர்ச்சியைப் போக்கிக் கொண்டு மக்களுடன் நெருங்கிப் பழகும் பொருட்டு இம்மாதிரிக் கதை களைச் சொல்வதாக ஜான் ஸ்டீவர்ட் சொல்லியிருக்கிறான். ஆனால், அவன் சொன்னது சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. இது இவருடைய இயல்பான பழக்கமாகத்தான் இருக்கவேண்டும்' என்று எண்ணிக் கொண்டாள் மேரி.

அவள் அவனிடம் உணவுத் தட்டுக்களைக் கொடுத்து விட்டு, சாப்பாட்டு அறைக்குச் சென்று மேஜை மீது ஒரு துணியை விரித்தாள். அவர்கள் உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கியதும், அவள் கேட்டாள்: '' மிஸ்டர் லிங்கன்! நீங்கள் ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்து பல வருஷங்களாகி விட்டனவே? முன்பு இருந்ததை விட இப்பொழுது இந்த ஊர் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?''

லிங்கன் சொன்னான்: ''ஒருநாள் ஒருவர் இந்த மாகாணத்தின் அரசாங்கக் காரியதரிசியிடம் சென்று, தாம் ஓர் பிரசங்கத் தொடர் நிகழ்த்தப் போவதாகவும், அதற்கு அரசாங்க மாளிகையில் ஓர் அறையை உபயோகித்துக் கொள்ள அநுமதி அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். 'நீங்கள் என்ன பொருள்பற்றிப் பிரசங்கம் செய்யப் போகிறீர்கள்?' என்று காரியதரிசி கேட்டார். 'கர்த்தர் இந்த உலகத்துக்குத் திரும்பி வந்த வைபவத்தைப் பற்றி' என்றார் அந்த மனிதர். இதைக் கேட்டதும் காரியதரிசி வெறுப்புடன் தலையைசைத்துக் கொண்டு, 'அதெல்லாம் இந்த ஊருக்குத் தேவையில்லை ஐயா! கர்த்தர் மாத்திரம் ஸ்பிரிங்ஃபீல்டுக்கு ஒரு தடவை வந்து போயிருந்தாரென்றால் திரும்பி வரத் துணிந்தே இருக்க மாட்டார்' என்றார்.''

மேரி ஒரு கணம் திடுக்கிட்டாள். 'இந்த மனிதருக்கு வார்த்தைகளால் பதில் சொல்லத் தெரியவே தெரியாதோ? கதைகளால்தான் சொல்லத் தெரியுமோ?' என்று அவள் நினைத்துக் கொண்டாள். பிறகு அவனுடன் சேர்ந்து அவளும் சிரிக்கலானாள்.

''மிஸ்டர் லிங்கன்! நீங்கள் ஒரு தனி ரகந்தான். உங்கள் மாதிரி ஒருவரை நான் இதுவரைச் சந்தித்ததே இல்லை'' என்றாள் அவள்.

உணவைச் சாப்பிடத் தொடங்கியிருந்த லிங்கன், கையிலிருந்த குத்து முள்ளைக் கீழே வைத்து விட்டு, ''முன்பே பலர் இதை கொஞ்சம் நளினமாகச் சொல்லியிருக்கிறார்கள்'' என்றான்.

அவள் கைகள் அவன் கைகளைக் கோத்துக் கொண்டன. ''உங்கள் போக்கு எனக்குப் பிடித்திருக்கிறது. அது நட்பின் ஆரம்பத்துக்கு அடையாளமில்லையா?''

''சிறந்த அடையாளம்; என்னைப் பிடித்திருக்கக் கூடிய பெண்கள் மிகவும் குறைவு.''

''அது சரி: உங்களுக்குப் பிடித்த பெண்கள் அநேகர் இருக்கின்றனரா?''

''இரண்டு மூன்று பேர்கள் இருக்கலாம். நான் கிராமத்தில் வசித்துக் கொண்டிருந்தபோது, ஒரு சமயம் எங்கள்

வீட்டுக்கு அருகில் ஒரு வண்டி ஒடிந்து விழுந்துவிட்டது; அந்த வண்டியில் ஒரு பெரியவர், ஒரு ஸ்திரீ, மற்றும் இரண்டு இளம் பெண்கள் பிரயாணம் செய்து வந்தனர். ஒடிந்த வண்டியைச் சீர் செய்து கொண்டிருந்தபோது, அவர்கள் எங்கள் வீட்டில் சமையல் செய்து சாப்பிடுவதற்காக வந்தனர். அந்த ஸ்திரீயிடம் பல புத்தகங்கள் இருந்தன. அவற்றிலிருந்த கதைகளை அவள் எங்களுக்குப் படித்துக் காட்டினாள். நான் அதுவரைக் கேட்டே இராத அருமையான கதைகள் அவை. அந்தப் பெண்களுள் ஒருத்தியை எனக்கு ரொம்பவும் பிடித்து விட்டது. அவர்கள் போய் விட்ட பிறகும் நான் அந்தப் பெண்ணைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு வெளியே உட்கார்ந்து குளிர் காய்ந்து கொண்டிருந்த போது என் மனத்தில் ஒரு கற்பனை விரிந்தது. நான் என் தந்தையின் குதிரை மீதேறி அவர்களைப் பின் தொடர்ந்து போகிறேன். அவர்கள் என்னைப் பார்த்து வியப்படைகிறார்கள். நான் அப்பெண்ணைத் தனியே சந்தித்துப் பேசி என்னுடன் ஓடி வரச் செய்து விடுகிறேன். அன்றிரவு என் தந்தையின் குதிரையில் ஏறி, நாங்கள் இருவரும் மெல்ல நழுவி விடுகிறோம். புல்வெளிகளின் ஊடே பல மைல்கள் பிரயாணம் செய்த பிறகு ஒரு முகாம் தென்படுகிறது. கிட்டே நெருங்கிப் பார்த்தால் நாங்கள் எங்கேயிருந்து ஓடி வந்தோமோ அந்த இடத்துக்கே திரும்பி வந்திருப்பதைக் காண்கிறோம். மறு நாள் இரவு மீண்டும் நாங்கள் ஓடிப் போகிறோம். ஆனால் முன்னாள் நடந்தது போல் புறப்பட்ட இடத்துக்கே திரும்பி வந்து சேருகிறோம். அதன் பிறகு இம்மாதிரி ஓடிப் போவது தவறு என்று புரிந்து கொள்ளுகிறோம். இந்த சம்பவத்திலிருந்துதான் என் உள்ளத்தில் காதல் உதயமாயிற்று என்று நினைக்கிறேன். அது சரி; உன் மனத்தில் காதல் எப்படி எப்பொழுது உதயமாயிற்று மேரி டாடு?''

அவள் மௌனமாக அவனைக் கூர்ந்து நோக்கினாள். அதே சமயம், 'என் மனத்தில் காதல் இன்னும் உதயமாகவே இல்லை' என்று நினைத்துக் கொண்டாள்.

* * *

மழை ஓய்ந்த பிறகு ஸ்பிரிங்ஃபீல்டில் கடுங்குளிர் வீச ஆரம்பித்தது. பரந்த புல்வெளிப் பிரதேசம் அனைத்தையும், உறைபனி மூடியிருந்தது. எல்லோரும் கோச்சு வண்டிகளில் சக்கரங்களைக் கழற்றிவிட்டுச் சறுக்கல் பலகைகளை மாட்டி விட்டனர். ஸ்பிரிங்ஃபீல்டு வாலிபர்களும் யுவதிகளும் பால் போல் நிலவு காயும் இரவுகளில் குதிரை சவாரி செய்து கொண்டு கிராமத்தின் சுற்றுப்புறத்தைச் சுற்றி வந்தனர். அப்படிச் சுற்றி வரும்போது அவர்கள் அநேகமாக எட்

வர்ட்ஸின் வீட்டுக்கு வந்து, மதுபானம் அருந்திவிட்டோ, சிறிது நேரம் ஏதாவது விளையாடிவிட்டோ, அரசியல் விவாதங்கள் புரிந்து விட்டோ, அல்லது நடனமாடிவிட்டோ போவது வழக்கம்.

ஒரு நாள் இரவு கடைசி விருந்தினரை அனுப்பிவிட்டு, மேரி தனது சகோதரிக்கு சாக்லெட் பானத்தை எடுத்துக் கொண்டு வந்தாள். அன்று அவள் மிகவும் உற்சாகத்தோடு இருந்தாள். ''எனக்கு, நான் எந்த உலகத்தில் இருக்கிறேன் என்பதே தெரியவில்லை லிஸ்! ஸ்பிரிங்ஃபீல்டில் நடக்கும் ஒவ்வொன்றும் என் மனதைக் கவருபவையாக இருக்கின்றன. லெக்ஸிங்டனில் நான் இத்தனை உற்சாகத்தோடு இருந்ததே இல்லை. இங்கே எல்லோரையும் எனக்குப் பிடித்திருக்கிறது; எல்லோருக்கும் என்னைப் பிடித்திருக்கிறது. அடுத்த வாரத்தில் பத்துப் பனிரெண்டு 'பார்ட்டி'களுக்கு வருமாறு எனக்கு அழைப்பு வந்திருக்கிறது. இதற்கெல்லாம் உன் அன்புதான் காரணம் லிஸ்! இம்மாதிரி நண்பர்கள் அழைத்து இரவு பகல் என்றில்லாமல் கூத்தடித்துக் கொண்டிருப்பதற்கு இடமளித்திருக்கிறாய் அல்லவா?''

எலிஸபெத் குறுக்கிட்டுச் சொன்னாள்: ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை கண்ணே! எங்கள் நிழலும் உணவும் மட்டும் இத்தனை வாலிபர்களையும் யுவதிகளையும் இங்கே கவர்ந்திழுக்கவில்லை. அதற்கு நீதான் முக்கிய காரணம். நீயும் களிப்போடு இருக்கிறாய்; அவர்களுக்கும் களிப்பூட்டுகிறாய், ஆம்; நீதான் முன்னேக்கு இப்பொழுது எத்தனை அழகுடன் விளங்குகிறாய்!''

''நான் இப்பொழுது அழகாகத்தான் இருக்கிறேன், ஆம் லிஸ்; என் கண்களைச் சுற்றியிருந்த கருவட்டம் அடியோடு போய்விட்டது, பார். மாடம் மெண்டலின் பள்ளியை விட்ட பிறகு என் உடல் இப்பொழுதுதான் கொடிபோன்ற அமைப்பைப் பெற்றிருக்கிறது.'' அவள் எலிஸபெத்தின் அறையிலிருந்த நிலைக்கண்ணாடியை நோக்கித் துள்ளி ஓடினாள். ''என் மூக்குத்தான் இப்பொழுது எவ்வளவு கவர்ச்சியோடு விளங்குகிறது. நான் ஏன் அதை லெக்ஸிங்டனில் இருந்தபோது கவனிக்கவே இல்லை.'' அவளுடைய கண்களின் பாவங்கூட இப்பொழுது மென்மையும் கனிவும் பெற்றிருந்தது. கைகள்தாம் எத்தனை அமைப்பாகவும் வெண்மையாகவும் விளங்கின. அந்த அழகிய கைகளைப் பாராட்டாதவர்களே இல்லை. ஆகையால் அவள் இப்பொழுது அவற்றை லலிதமாகப் பயன்படுத்தித் தன் கவர்ச்சியை அதிகப்படுத்திக்கொள்ள ஆரம்பித்திருந்தாள்.

இப்பொழுதும் அவள் அக் கைகளைத் தன் சகோதரியின் முன் நீட்டிக்கொண்டு, மகிழ்ச்சி பொங்கச் சொன்னாள்:

''இவ்வாறு, இவ்வளவு சுதந்திரத்தோடு நம் வீட்டில் நான் இருந்திருக்க முடியுமா லிஸ்? நான் இப்பொழுதெல்லாம் நிதானம் இழப்பது கூட இல்லை. என்னிடம் ஒரு சகிப்புத் தன்மை ஏற்பட்டு விட்டது. உண்மையாகச் சொல்கிறேன் லிஸ்; ரெயிலிலும், படகுகளிலும், கட்டை வண்டிகளிலும் ஒரு வாரம் பிரயாணம் செய்து, நான் லெக்ஹிங்டனிலிருந்து ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வரவில்லை; குழந்தைப் பிராயத்திலிருந்து மங்கைப் பிராயத்துக்கு வந்து விட்டதாகத்தான் தோன்று கிறது.''

எலிஸபெத் சிரித்துக் கொண்டே, ''வீட்டில் அடக்கி ஒடுக்கும் சக்திகள் இருந்தன; குழந்தை பிராயத்திலிருந்தே மனதில் ஊறிப்போன ஒரு பயமும் இருந்தது. ஆகையால் நீ இங்கே வந்தபோது நான் ஒன்றுக்கும் உதவாத காய் என்ற நினைவுடன் வந்தாய்.''

''இப்பொழுது நான் கனிந்துவிட்டேனுக்கும்?''

''நிச்சயமாக.''

மேரி தன் சகோதரியின் படுக்கையிலிருந்து எழுந்து ஜன்னலுக்குச் சென்று வெளியே தெரிந்த உறைபனி மூடிய வயல்களைப் பார்த்தாள்.

எலிஸபெத் சிறிது குறும்பாக நகைத்துக் கொண்டே, "உனக்கு யாரை மிகவும் பிடித்திருக்கிறது மேரி? அந்த அமெரிக்கனையா? ஐரிஷ்காரனையா? அழகிய கடைக்கார வாலிபனையா? ஆனால் நிச்சயமாக அந்தப் பட்டை தீட்டப்படாத வைரத்தை மாத்திரம் நீ விரும்பியிருக்க மாட்டாய் என்பது எனக்குத் தெரியும்'' என்றாள்.

அக்காவை வலிப்பதுபோல் மேரி தன் உதட்டைச் சற்றே கோணிக் கொண்டாள். பிறகு சொன்னாள்; ''நீ அமெரிக்கன் என்று குறிப்பட்ட ஸ்டீவ் டக்ளஸ் எப்பொழுதும் ஹென்ரி கிளேக்கு எதிரியாக விவாதம் செய்து கொண்டே இருப்பான். ஐரிஷ்காரனை ஜிம்மி ஷீல்ட்ஸ்தான் இப்பொழுது பெரிய அதிஷ்டக்காரன் ஆகிவிட்டானே? ஜான் ஸ்பீடோ, அவன் காதலில் எத்தனை வேகத்தோடு ஈடுபடுகிறானே, அதே வேகத் தோடு அதிலிருந்து நழுவியும் போய்விடக்கூடியவன். அந்தப் பட்டை தீட்டப் படாத வைரத்தின் விஷயத்தை, பட்டை தீட்டிய பின்பு அது எவ்வளவு குற்றம் குறையற்றதாக இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் தீர்மானிக்க வேண்டும். அதுவும் பட்டை தீட்டும் வேலை ஆயுட் காலம் முழுவதுமே நீடிக்கலாம்.''

எலிஸபெத், ஒரு தாயின் வாஞ்சையுடன் சொன்னாள்: ''ஆனால் வைரத்தை முழுவதும் பட்டை தீட்டிப் பார்த் தாலன்றி, அது நல்லதா இல்லையா என்பதைச் சொல்ல

முடியாதே மேரி. பட்டை தீட்டிப் பார்த்த பின் அது மட்டமான வைரம் என்பது தெரிந்தால், அப்புறம் என்ன செய்ய முடியும்?''

''ஆனல் லிஸ், காதல் என்ற அளவுகோலால் அந்த வைரத்தின் தன்மையை அறிந்து விட முடியாதா? நான் லிங்கனைப் பற்றிக் குறிப்பிடவில்லை; ஏனென்றால், அவரைப் பற்றி எனக்குத் தற்சமயம் அதிகம் தெரியாது. இருந்தாலும், ஒருத்தி ஒருவனைக் காதலிக்கும்போது எல்லாம் நல்லதாகவே முடியும் என்று பல விஷயங்களில் நம்பிக்கை வைக்கத்தானே வேண்டியிருக்கிறது?''

6

லெக்ஸிங்டனிலிருந்து மேரியின் தந்தை அனுப்பியிருந்த கடிதம் ஒன்று மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணிவிட்டது. இழவு சமயத்தில் கூடியிருப்பது போன்று டாடு குடும்பத்தினர் அனைவரும் எட்வர்ட்ஸின் வீட்டில் கூடியிருந்தனர். நடந்தது இதுதான்: விக் கட்சி மகாநாட்டில், அக்கட்சியின் ஒப்பற்ற தலைவரான ஹென்ரி கிளேயின் பெயர் அடுத்த ஜனதிபதித் தேர்தலுக்குப் பிரேரிக்கப்படாமல், ஜெனரல் வில்லியம் எச். ஹாரிஸன் என்பவரின் பெயர் பிரேரிக்கப்பட்டு விட்டது. ஹென்ரி கிளேயின் பெயரே பிரேரிக்கப்படும் என்ற நம்பிக்கையில் ஆஷ்லாண்டில் அதைக் கொண்டாட ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடாகியிருந்தது. மேரியின் தந்தை, மாற்றுந்தாய் உட்பட நூற்றுக்கணக்கான விக் கட்சியினர் அந்த விருந்துக்காகக் கூடியிருந்தனர். அப்பொழுதான் ஏமாற்றமளிக்கும் அந்தச் செய்தி வந்தது. ராபர்ட் டாடு எழுதியிருந்தார்:

''தமது தோல்வியை அறிவித்துக் கொண்டு வந்த அந்தக் கடிதத்தைப் படித்ததும் கிளேயின் கண்களைக் கண்ணீர் நிறைத்தது. 'என் நண்பர்கள் மிக மிக மோசமானவர்கள். அரசியல் சரித்திரத்திலேயே என்னைப் போன்ற அதிர்ஷ்டவீனன் வேறு எவரும் இருக்க முடியாது. தோல்வி நிச்சயம் என்பது கண்கூடாக இருந்த போதல்லாம் அவர்கள் என்னைத் தேர்தலுக்கு நிற்கும்படி விரட்டிவந்திருக்கிறார்கள். இப்பொழுதோ, நானுக இருந்தாலும், அல்லது வேறு யாராக இருந்தாலும், வரும் தேர்தலில் விக் கட்சியினரே வெற்றி பெறுவார்கள் என்ற நிலை வந்திருக்கையில், என் பெயரைக் கூடப் பிரேரிக்காமல் மோசம் செய்திருக்கிறார்கள்' என்று கதறி விட்டார்.''

ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்ததுதொட்டு, 'மிஸ்டர் கிளே ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், நம் தந்தை யுடன் நாமும் வாஷிங்டன் நகருக்குப் போவோம்' என்ற நினைவு மேரியின் மனத்திலிருந்து அடியோடு நீங்கி விட்டிருந்தது. இருந்தாலுங்கூட கிளே தமது கட்சிக்காரர்களாலேயே இப்படி மோசம் செய்யப்பட்டிருந்தது அவளுக்கு மிகுந்த ஏமாற்றத்தைத்தான் அளித்தது. பிரபல ராணுவத் தலைவர் என்ற ஒரே தகுதிக்காக ஹாரிஸனைத் தலைவர் தேர்தலுக்கு நிறுத்தத் தீர்மானித்து, ஹென்ரி கிளேயை ஒதுக்கிவிட்ட விக் கட்சியினரின் செயல் மிகவும் அநீதி என்றே அவள் கருதினாள்.

டிசம்பர் பதினைந்தாம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று எலிஸபெத் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். அதற்கு மறுநாள் இரவு முன்னேரத்தில், இல்லினாய்ஸ் மாகாணத்துப் புதிய சட்டசபையின் ஆரம்பத்தைக் கொண்டாட, அமெரிக்கன் ஹவுஸில் ஒரு பெரிய விருந்து நடந்தது. அந்த விருந்துக்கு மேரியை அழைத்துச் செல்லுமாறு எலிஸபெத் நினியனைக் கேட்டுக்கொண்டாள்.

நினியனும், மேரியும் மாலை ஏழு மணி சுமாருக்கு அந்த விருந்துக்குக் கிளம்பினர். மேரி தன்னைப் பிரமாதமாக அலங்கரித்துக்கொண்டிருந்தாள்.

அமெரிக்கன் ஹவுஸ் புதிதாகக் கட்டப்பட்டு வந்த அரசாங்க மாளிகையின் அருகில் இருந்தது. ஸ்பிரிங்ஃபீல்டிலேயே தனியாருக்குச் சொந்தமான பெரிய கட்டடம் அதுதான். சுமார் இருநூறு விருந்தினர்கள் தங்க அங்கே வசதி உண்டு. கட்டடத்தின் வெளித்தோற்றம் சாதாரணமாகத்தான் இருந்தது. ஆனால் உள்ளே விரிவான முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஸ்திரீகள் புழங்கும் ஹால் அன்று அவர்கள் உடைமாற்றிக் கொள்ளுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. விருந்துக்கு வந்த பெண்மணிகளில் அநேகர் கையில் துணியினால் மூடிய எதையோ கொண்டு வந்தார்கள். ஹாலின் வாசலில் நின்று கொண்டிருந்த மேரி, அது என்னவாக இருக்கும் என்று வியப்புற்றாள். அப்படி அவள் வியப்புற்றுக் கொண்டிருக்கும் போதே, துணிப் பொட்டலங்கள் சிலவற்றிலிருந்து குழந்தைகள் கால்களை உதைத்துக் கொண்டு, அழ ஆரம்பித்தன. உடனே தாய்மார்கள், குழந்தைகளை எடுத்துப் பால் கொடுக்க ஆரம்பித்தனர். மார்பகம் தெரியுமாறு அவர்கள் கவுனைத் தைத்துக் கொண்டிருந்தது இப்பொழுது சவுகரியமாகப் போய் விட்டது என்று மேரி நினைத்தாள்.

சாப்பாட்டு அறையில் ''பால்'' நடனத்துக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. வயலின், கிட்டார்

போன்ற இசைக் கருவிகளுடன் ஸ்பிரிங்ஃபீல்டின் புதிய வாத்திய கோஷ்டியினர் அங்கு ஒரு மேடைமீது அமர்ந்திருந்தனர். அறையெங்கும் சர விளக்குகள் கண்ணைப் பறிக்கும் வண்ணம் ஒளி பரப்பிக் கொண்டிருந்தன. அறையின் தளம் நடனமாடுவதற்கு ஏற்றபடி நன்றாக 'பாலிஷ்' செய்யப் பட்டிருந்தது. ஸ்பிரிங்ஃபீல்டு மக்கள் அனைவருமே அந்த விருந்துக்கு வந்திருந்தனர். தவிர, சட்டசபை அங்கத்தினர்களின் உறவினர்களான அழகிய இளம் பெண்கள் பலர் இந்த விருந்துக்கென்றே வெளியூர்களிலிருந்து வந்திருந்தனர்.

நடனம் ஆரம்பமாயிற்று. முதலில் மேரி நினியனுடன் சிறிது நேரம் நடனமாடினாள். பிறகு ஸ்டீபன் டக்ளஸ், ஜேம்ஸ் ஷீல்ட்ஸ், ஜேம்ஸ் மாத்தனீ, ஸாமுவேல் டிரீட் முதலியோருடன் அவள் நடனமாடினாள். கடைசியாக ஜோஷ்வா ஸ்பீடு அவளுடன் நடனமாட வந்தான். அவன் பாதி நடனமாடிக் கொண்டிருக்கும் போதே, இன்னொரு வாலிபனை அவளுக்குச் சுட்டிக் காட்டினான். அவனை ஸ்பிரிங்ஃபீல்டுத் தெருக்களில் மேரி அடிக்கடி பார்த்திருந்தாள்.

''மேரி! இவன்தான் பில்லி ஹெர்ண்டன்'' என்று அந்த வாலிபனை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்த ஸ்பீடு, தொடர்ந்து, ''அவன் உன்னுடன் நடனமாட மிகவும் விரும்புகிறான் மேரி'' என்றான்.

மேரிக்கு இப்பொழுது அவன் யார் என்பது விளங்கி விட்டது. ஆர்ச்சர் ஜி. ஹெர்ண்டன் என்ற ஒரு ஹோட்டல்காரரின் மகன் அவன். தந்தையுடன் சண்டை போட்டுக்கொண்டு இப்பொழுது ஜோஷுவா ஸ்பீடின் கடையில் குமாஸ்தாவாகப் பணியாற்றி வந்தான்.

''உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன் மிஸ் டாடு. இசை முழங்கப் போகிறது. உங்களுடன் நடனமாடும் வாய்ப்பை நான் பெறலாமா?'' என்று கேட்டான் பில்லி.

மேரி அவனோடு நடனமாடினாள். அவளுடைய லாகவமும், நளினமும் அவனை மிகவும் கவர்ந்தன. நடனம் முடிந்ததும் அவன் மிகுந்த வியப்போடு, ''மிஸ் டாடு! என்பாராட்டுக்கள். உங்கள் நடனம் மிகப் பிரமாதம். ஓர் சர்ப்பத்தைப் போல் அல்லவா நெளிந்து, குழைந்து ஆடுகிறீர்கள்?'' என்றான்.

மேரி சொன்னாள் : ''மிஸ்டர் ஹெர்ண்டன்! என் நடனத்தை சர்ப்பத்துடன் ஒப்பிட்டது அவ்வளவு பொருத்தமான உவமையில்லை என்று கருதுகிறேன்.''

அவள் அவன் கையிலிருந்து தன் கையை விடுவித்துக் கொண்டே, 'சுத்த மோசம் இவன். இம்மாதிரி ஆட்க

ளிடம் இனி அகப்பட்டுக் கொள்ளவே கூடாது' என்று நினைத்துக்கொண்டாள்.

வெறுப்புத் தாண்டவமாடும் இந்த முகத்துடன், தன் நண்பர்களுடன் கலக்க விரும்பாமல், அவள் அறையின் கோடிக்கு நடந்து சென்றாள். கலீரென்ற சிரிப்பொலி கேட்டு மேரி திரும்பினாள். அங்கே ஒரு மேஜையைச் சுற்றி அமர்ந்திருந்த வாலிபர்களின் இடையே ஆப்ரஹாம் லிங்கன் இருந்ததை அவள் கண்டாள். அந்த நடனத்துக்கு ஏற்பாடு செய்தவர்களுள் லிங்கனும் ஒருவன் என்பது அவளுக்குத் தெரியும். ஆகையால் அங்கே எங்கேயாவது அவன் தென்படக்கூடும் என்று அவள் எதிர்பார்த்துத்தான் இருந்தாள். லிங்கன் தன் நண்பர்களுக்குப் பிரமாதமான அபிநயங்களுடன் ஏதோ கதை சொல்லிக் கொண்டிருந்தான். அவன் கதையை முடித்ததும் மற்றவர்களோ முந்திக்கொண்டு அவளே சிரித்துவிட்டாள். மேரியின் சிரிப்பொலியைக் கேட்டானோ, இல்லையோ, லிங்கன் தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தான். பிறகு தன் நண்பர்களிடையேயிருந்து எழுந்து அவளை நோக்கி வந்தான்.

''மிஸ் டாடு! நான் உங்களோடு நடனமாடி உங்களுடைய பொறுமையைச் சோதிக்கப் போகிறேன்'' என்றான் அவன்.

கோஷ்டி வாத்தியக்காரர்கள் அடுத்த பாட்டைத் தொடங்கும் வரை அவர்கள் மௌனமாக நின்றார்கள். அச்சமயம் மேரியின் மனசில் பல விசித்திரக் கற்பனைகள் விரிந்தன. ஒரு பழுதடைந்த ஆலை, புயலிடையே சிக்கித் தவிக்கும் ஒரு கப்பல், காற்றிலே அசைந்தாடிக் கொண்டிருக்கும் ஒரு கொடிமரம், இவற்றுடன் தான் நடனமாடிக் கொண்டிருப்பதுபோல் அவள் கற்பனை செய்து கொண்டாள். ஆனால் அவனுடன் நடனமாடியது அப்படியென்றும் மோசமாக இருக்க வில்லை. தப்படி வைத்துச் சில சமயம் அவள் கால்களில் இடறிக் கொண்டாலும் லிங்கனின் நடனம் அவளுக்கு வெறுப்பளிக்க வில்லை.

இசை நின்றதும் அவள் சிரித்துக் கொண்டே, ''மிஸ்டர் லிங்கன்! உங்கள் இச்சை பூர்த்தியாகிவிட்டதா?'' என்று கேட்டாள்.

அவன் அவள் பேச்சைப் புரிந்துகொள்ளாமல் ஒரு விநாடி விழித்தான். பிறகு விழுந்துவிழுந்து சிரிக்கலானான்.

''சரியான கேள்விதான் மிஸ் டாடு. ஒரு சமயம் ஒரு பையனை அவன் உபாத்தியாயர், 'நீ வார்த்தைகளை ஏன் சரியாக எழுத்துக் கூட்டுவதில்லை?' என்று கேட்டாராம். அதற்கு அந்தப் பையன், 'உங்கள் பள்ளிக்கூடத்தில் எழுத்துக்

கூட்டும் விதமே ஒரு புதுமாதிரியாக இருக்கிறது ஸார்' என்ரூனும். உங்கள் கேள்வி எனக்கு இந்தக் கதையை நினைவூட்டுகிறது. மிஸ் டாடு! இந்தச் சம்பவத்தை நான் என் கதைக் களஞ்சியத்தில் சேர்த்துக் கொள்ளலாமா?''

'எத்தனை விவேகமானவர் இவர்? என் கேள்வி அவரை மட்டம் தட்டுவதுபோல் இருந்தாலும், எவ்வளவு சாமர்த்தியமாக நிலைமையைச் சமாளித்து விட்டார்!' என்று எண்ணிக் கொண்டாள் மேரி. குன்றிய மனத்துடன் லிங்கனின் நெடிய உருவத்தை நிமிர்ந்து பார்த்தாள் அவள். பிறகு ''மிஸ்டர் லிங்கன்! இந்தச் சம்பவத்தை நீங்கள் தாராளமாக உபயோகித்துக் கொள்ளலாம்'' என்ரூள்.

7

பட்டை தீட்டப்படாத வைரம் என்று தன் சகோதரியால் குறிப்பிடப்பட்ட லிங்கன், நாளுக்கு நாள் ஒளி மங்கிக் கொண்டு வருவதை மேரி கண்டாள். ஏனென்ரூல் அவனுடைய முயற்சிகளைப் பத்திரிகைகளே கேலி செய்ய ஆரம்பித்திருந்தன. 'ரெஜிஸ்டர்' என்ற பத்திரிகையில் லிங்கனைப் பற்றி வெளிவந்திருந்த தலையங்கத்தைப் படித்தபோதுதான் மேரிக்கு இவ்வாறு தோன்றிற்று. 'ரெஜிஸ்டர்' எதிர்க் கட்சிப் பத்திரிகைதான். இருந்தாலும் அந்தப் பத்திரிகை இதுவரை எந்த 'விக்' கட்சிக்காரர்களிடமும் இவ்வளவு கோபம் அடைந்ததில்லை. ''ஜனாதிபதி தேர்தல் பற்றிய விவாதத்தில், ஸ்டீஃபன் டக்ளஸுடன் எதிர்வாதம் செய்தபோது, சில ஆணித்தரமான ஆதாரங்களை லிங்கன் எடுத்துக் காட்டியதென்னவோ உண்மைதான்'' என்று குறிப்பிட்டுவிட்டு, அந்தத் தலையங்கம் மேலும் கூறிற்று : ''மிஸ்டர் லிங்கன் கோமாளி போல் நடந்து கொள்ள முயலுகிரூர். அது அவருக்குச் சிறிதும் பொருத்தமாக இல்லை. சில சமயம் அவர் பேச்சும் இத்தகைய கோமாளித்தனமாகவே ஆகிவிடுகிறது. இதன் மூலம் அவர் தமது 'விக்' கட்சிக்காரர்களைச் சிரிக்கவைக்கலாம். ஆனால் இம்மாதிரிக் கோமாளித்தன்மையுடைய மனிதரின் பேச்சு எவர் மனசிலும் உரைக்காது. ஆகையால், இந்தக் குறை முற்றிப் போவதற்குள்ளாகவே அதைத் திருத்திக் கொள்ளுமாறு நாம் மிஸ்டர் லிங்கனுக்குச் சற்றுக் கடுமையாகவே புத்திமதி கூறுகிறோம்.''

''கோமாளித் தனமும், பிறரை நகைக்க வைப்பதும் ஒன்றேதானு? அப்படியானால், அன்று கர்னல் ரிச்சண்டு

டெய்லரின் கோட்டைப் பிரித்து அவர் உள்ளே அணிந்திருந்த விலையுயர்ந்த ஆடைகளையும் அணிகளையும் மக்களுக்குக் காட்டிக் கொடுத்து அவர்களைச் சிரிக்க வைத்தது கோமாளித்தனமா ? அல்லது, ''ஆடம்பரத்தை மட்டம் தட்டக் கூடியது நகைப்பு'' என்பதை நன்கு உணர்ந்த ஒருவரின் செயலா ? ஸ்டீஃபன் டக்ளஸ் எங்கே ? ஆப்ரஹாம் லிங்கன் எங்கே ? இருவருக்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமல்லவா இருக்கிறது? இருவரும் தங்கள் தங்கள் கட்சி இளைஞர்களிடையே திறமை மிக்க தலைவர்கள்தான். டக்ளஸ் நல்ல பேச்சாளன் தான் என்றாலும் அவன் பிரசங்கம் காரியவாதமாக இருக்குமே தவிர, அதில் மருந்துக்குக்கூட நகைச்சுவையைக் காண முடியாது. ஆனால் லிங்கனோ, தனது பிரசங்கங்களை மிக எளிதாக, ஒரு நாடோடிக் கதை மாதிரி, ஒரே ஒரு வார்த்தையில் புரியும்படி செய்கிறார்'' என்றெல்லாம் எண்ணிக் கொண்டாள் மேரி. நினியன் எட்வர்ட்ஸ், 'ரெஜிஸ்டரின்' தாக்குதலுக்குத் தக்க பதில் கொடுக்கவேண்டுமென்று லிங்கனிடம் கூறியபோது அவன் அளித்த பதில் அவளுக்கு அச்சமயம் நினைவுக்கு வந்தது.

லிங்கன் சொன்னார் : ''இது என்ன பிரமாத விஷயம்! நானே கவனித்துக் கொள்ளுகிறேன்.''

'இவருடைய பிரசங்கத்தை அடுத்த தடவை கேட்டு, கோமாளித்தனமாகத்தான் பேசுகிறாரா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று மேரி தீர்மானித்துக்கொண்டாள்.

டிசம்பர் இருபதாம் தேதியன்று விக் கட்சியினரும், ஜனநாயகக் கட்சியினரும் வாராந்தர விவாதக் கூட்டம் ஒன்றை ஆரம்பித்தார்கள். ஸ்பிரிங்ஃபீல்டில் கடும் குளிர் வீசிற்று. அந்திப் பொழுதாகும் முன்பே ஊரை இருள் சூழ்ந்து கொண்டது. மேரியின் பெரியப்பா பிள்ளைகளில் மூத்தவனான ஸ்டீஃபன் டி. லோகன் ஒருநாள் மேரியை இக் கூட்டத்துக்கு அழைத்துப் போகத் தனது கோச்சு வண்டியில் வந்தான். ஸ்டீஃபன் டி. லோகனுக்கு சுமார் நாற்பது வயசிருக்கும். ஆள் எலும்பும் தோலுமாக இருப்பான். சுருண்ட செம்பட்டை ரோமம். ஒடுங்கிய முகம், குறுகிய உதடுகள், கர-கரத்த குரல். வழக்கம்போல் அவன் கசங்கிய உடைகளையே அணிந்து கொண்டிருந்தான்.

கூட்டத்துக்குப் போக விசேஷமாக அலங்காரம் செய்து கொண்டு வந்திருந்த மேரி, 'எப்படித்தான் டாடு குடும்பத்தில் பிறந்த இந்த லோகனுக்கு நல்ல உடைகளை உடுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆசையே இல்லாமல் இருக்

கிறதோ?' என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டாள். 'தொழிலில் புலியாக இருக்கிறான்; பணத்தைப் பண மென்று பாராமல் கொட்டி, கண்ணைக் கவரும் மாளிகை ஒன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறான். ஆனால் உடைகளில் மாத்திரம் அவனுக்கு ஏன் சுவையில்லையோ?' என்றும் அவள் நினைத்துக் கொண்டாள். இரண்டாவது பிரஸ் பிட்டீரியன் மாதாகோவிலின் முன் வண்டி நின்றது. புதிய அரசியல் மாளிகை கட்டி முடிக்கப்படும் வரை மக்கள் சபையினர் இந்த மாதா கோவிலைத் தங்கள் கூட்டங் களுக்குப் பயன்படுத்தி வந்தனர். கூட்டம் நடக்கும் ஹாலின் இருபுறமும் கணப்புகள் எரிந்து கொண்டிருந்தன. தரையில் மரத்தூள் பரப்பப் பட்டிருந்தது. மேரியும் லோகனும் வந்தபோது கீழ்த்தளம் முழுவதும் நிரம்பி விட்டது. அவர்கள் மேலேயிருந்த காலரிக்குச் சென்று, பிரசங்கிகளின் மேடைக்கு நேர் மேலே காலியாக இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டனர். அந்த ஹால் முந்நூறு பேர் கொள்ளக் கூடியது. ஆனால் அதில் ஐந்நூறுக்கும் அதிகமான மக்கள் குமைந்து கொண்டிருந்தனர். விவாதம் ஆரம்பமாயிற்று. லோகன் அடுத்த வாரம் 'விக்' கட்சியின் சார்பில் பேச இருந்தான்.

''பார்த்தாயா மேரி; நல்ல ஆட்டத்துக்குத்தான் கூட்டம் கூடுகிறது. இன்று வாட்ஸனின் புதிய ஹாலில் மக்கென்லி - ஜெஃபர்ஸன் கோஷ்டி காலி நாற்காலிகளுக் குத்தான் ஆட்டமாடவேண்டும்'' என்றான் லோகன். அவன் குரல் தன் தந்தையின் குரலைப்போலவே இருப்பதை மேரி அச்சமயம் கவனித்தாள்.

ஆனால், அந்த வார முடிவில் விக் கட்சியின் இந்த விவாதக் கூட்டத்துக்கும் கூட்டம் குறைந்து கொண்டே வந்தது. லிங்கன் பேச இருந்த அன்று முப்பது பேர்கள் கூட வந்திருக்கவில்லை. அன்று டிசம்பர் 26-ஆம் தேதி. எல் லோரும் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடிக் களைத்துப் போயிருந்தனர் என்பது என்னவோ உண்மைதான். இருந் தாலும் கூட்டம் மிகக் குறைவு என்று கருதினாள் மேரி. அன்றைக் கூட்டத்துக்குப் போக துணை யாரும் இல்லாத தால், லிங்கனின் பிரசங்கத்தைக் கேட்கவே முடியாது போய் விடுமோ என்று நினைத்தாள், அவள். ஆனால், '' ஸாங்கமோ ஜர்னல்'' பத்திரிகையின் ஆசிரியரான ஸிமியன் ஃபிரான்ஸிஸ்ஸும் அவருடைய மனைவியும் மாலையில் தங்கள் வீட்டுக்கு வந்து தேநீர் அருந்தி விட்டு, அப்படியே லிங்கனின் பிரசங்கத்துக்குப் போவதாக அறிந்ததும், அவள் ஃபிரான் ஸிஸ் தம்பதிகளிடம், தானும் அவர்களோடு கூட்டத்துக்கு வரலாமா என்று கேட்டாள்.

ஸ்ரீமதி ஃபிரான்ஸிஸ் மேரியை அளவெடுப்பதுபோல் ஒரு பார்வை பார்த்து விட்டு, ''லிங்கனின் பேச்சைக் கேட்கத்தானே? தாராளமாக வாயேன்'' என்றாள்.

அவர்கள் மேரியைத் தங்களுக்கு இடையே அமர்த்திக் கொண்டனர். லிமியன் ஃபிரான்ஸிஸ் பருமனான உடலமைப்புடையவர். அவருக்குச் சுமார் நாற்பத்துமூன்று வயது இருக்கலாம். நல்ல சுபாவம் படைத்தவர். அவர் மனைவியும் கிட்டத்தட்ட அவரைப்போலவே பருத்த சரீரமுள்ளவள்தான். அவளுக்குப் பத்திரிகைத் தொழிலில் குறிப்பாகத் தன் இனமான பெண்களைப் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதில் ஒரு தனி சாமர்த்தியம் உண்டு. இருந்தாலும் ''ஜர்ன''லில் அவள் சேகரிக்கும் செய்திகளைப் பிரசுரிக்க முடியாமல் இருந்தது. ஏனென்றால் ஒரு பெண்ணின் பெயர் பத்திரிகையில், இரண்டே இரண்டு சந்தர்ப்பங்களில்தான் அடிபடலாம் என்று ஒரு நியதி அக்காலத்தில் வழக்கத்தில் இருந்தது. அதாவது அவளுடைய கல்யாணத்தின் போதும், சாவின் போதும்! இருந்தாலும் ஸ்ரீமதி ஃபிரான்ஸிஸ் அந்த ஜில்லாவிலுள்ள பெண்களைப் பற்றிச் சேகரித்துக்கொள்ளும் தகவல்கள் வீண் போய்விட வில்லை. அந்தத் தகவல்களின் பயனாக சுமார் இருபது கல்யாணங்களை அவள் முடித்துவைத்திருக்கிறாள். ஸ்ரீமதி ஃபிரான்ஸிஸ்ஸுக்குக் குழந்தை-குட்டிகள் கிடையா. தான் இணைத்துவைக்கும் தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் தன் குழந்தைகளே என்று அவள் பெருமைப்பட்டுக் கொள்ளுவாள்.

''ராத்திரி சாப்பாட்டுக்கு நீ எங்கள் வீட்டுக்கு வர வேண்டும், குழந்தாய்; லிங்கனும் வருகிறான்'' என்று அவள் மேரியிடம் கூறினாள்.

''இல்லை; இல்லை; அதெல்லாம் எதற்கு.....'' என்று தடுமாறினாள் மேரி.

''பரவாயில்லை. இன்று இரவு முன்னேரத்தை நாம் உல்லாசமாகக் கழிக்கலாம். லிங்கனின் பிரசங்கத்தை 'ஜர்னலி'ல் வெளியிட எழுதிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த வேலைக்குக்கூட நீ உதவலாம்.''

மேரி பிரசங்க மேடையை நோக்கினாள். பேசுவதற்கு வேறு யாரும் முன் வராததால், லிங்கன் எழுந்திருந்து, எழுதிவந்திருந்த பிரசங்கத்தைப் பையிலிருந்து எடுத்துப் படிக்க ஆரம்பித்தான்.

''சகோதர நகரவாசிகளே? சில நாட்களாகத் தொடர்ந்து நடந்து வந்த இந்த விவாதக் கூட்டத்தை இன்னும் நீடிக்க எனக்கு மனசேயில்லை. அதற்கு முக்கிய

காரணம் இதுதான் : இதற்கு முந்தைய கூட்டங்களுக்கு இதை விடக் கூடுதலான மக்கள் வந்திருந்தார்கள்.

''பிரசங்கங்களுக்குக் கூட்டம் சேருவது பிரசங்கியைப் பொறுத்த தென்றுல் இன்று நான் பேச இருப்பதைப் பலர் விரும்பவில்லை என்றே ஆகிறது. இங்கே கூடியிருக்கிற ஒரு சிலரும், என் பேச்சைக் கேட்க வரவில்லை ; என் பேச்சைக் கேட்க ஒருவருமேயில்லாமல் நான் அவமானமடையும் படி ஆகக்கூடாதென்றே வந்துள்ளார்கள் என்பதை நான் அறிவேன். இந்த நிலையானது என்னுடைய உணர்ச்சிகளைக் குன்றச் செய்கிறது. அதை இன்று என்னுல் ஈடு செய்ய முடியாது.''

''சே ! சே ! என்ன இப்படி அழுதுகொண்டே பிரசங்கத்தை ஆரம்பித்திருக்கிறுன் லிங்கன். வேண்டாத போதெல்லாம் கோமாளித்தனமாகப் பேசி எல்லோரையும் சிரிக்க வைப்பான். இப்பொழுதும் அப்படிச் சிரிக்கச் சிரிக்க ஆரம்பித்திருக்கக் கூடாதா !'' என்று ஸிமியன் ஃபிரான்ஸிஸ் வருத்தத்துடன் கூறினர்.

மேரி லிங்கனைப் பார்த்தாள். அவன் விறைப்பாக, உணர்ச்சியே இல்லாதவன்போல் நிற்பதைக் கண்டு, ''ரெஜிஸ்டர் பத்திரிகையில் தம்மைப்பற்றி வெளியாகியிருந்த தலையங்கத்தைக் கண்டு லிங்கன் பயந்து விட்டார் போலிருக்கிறது. நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன். இன்று அவர் நிகழ்த்தப்போகும் பிரசங்கத்தில் நகைச்சுவை என்பதே இராது'' என்றுள் அவள்.

மேரியின் ஊகம் கிட்டத்தட்டச் சரியாகத்தான் இருந்தது. அன்று அவன் பேச எடுத்துக் கொண்ட விஷயம் ஹாஸ்யப் பேச்சுக்கே இடமளிக்காததாக இருந்தது. ஜனுதிபதி ஆண்ட்ரூ ஜாக்ஸன். தேசிய பாங்கின் நியமன உத்தரவை முன்பு புதுப்பிக்க மறுத்து விட்டார். இப்பொழுது ஜனநாகக் கட்சியைச் சேர்ந்த ஜனுதிபதி வான் பூரெனும் அதைப் புதுப்பிக்காமல் பதிலுக்கு உப-கஜானு ஒன்றை நிறுவியிருப்பதைக் கண்டித்தும், விக் கட்சியினர் தேசிய பாங்கு நியமன உத்தரவைப் புதுப்பிக்க வேண்டுமென்று வற்புறுத்துவதன் காரணங்களை அலசியும் பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டான், லிங்கன்.

ஆரம்பத்தில் லிங்கனின் குரல் கர்ண கடூரமாக ஒலிப்பதாக மேரி உணர்ந்தாள். தவிர அவன் சில வார்த்தைகளை விசித்திரமாக உச்சரிப்பதும் அவளுக்குச் சிரிப்பூட்டிற்று. ஆனல் நேரம் செல்லச் செல்ல லிங்கனின் விவாதப் பேச்சில் வேகம் ஏறிற்று. அவன் மிகச் சாமர்த்தியமாக எழுதிவந்திருந்த தனது பிரசங்கத்தை ஒருவித லயத்தோடு படிக்க ஆரம்

பித்தபோது மேரி அதில் முழுக்க முழுக்க ஈடுபட்டு விட்டதோடு மாத்திரமல்ல; லிங்கனின் குரல் தன் நெஞ்சைத் துளைத்துக் கொண்டு செல்லவில்லை, அது தன் நெஞ்சிலே உறைந்து விட்டது என்பதையும் உணர்ந்தாள்.

பிரசங்கம் முடிந்தது. லிங்கன், மேரி, லிமியன் ஃபிரான்லிஸ், அவர் மனைவி ஆகிய நால்வரும் கிளம்பினர். ஃபிரான்லிஸ் தம்பதிகளின் கோச்சு வண்டி மிகவும் சிறிது. அதில் நால்வரும் செல்ல வேண்டியிருந்ததால் மேரி லிங்கனின் மேல் இடித்துக் கொண்டுதான் உட்கார வேண்டியிருந்தது. ஆனால் தன்னருகில் ஓர் இளம் பெண் உட்கார்ந்திருந்ததை லிங்கன் உணர்ந்ததாகவே தெரியவில்லை. அவன் முழந்தாளைக் கட்டிக் கொண்டு, பார்வையைக் கீழ் நோக்கிச் செலுத்தியவாறு அமர்ந்திருந்தான். இம்மாதிரி விசனம் ததும்ப உட்கார்ந்திருக்கும் அவன் அருகில் அமர்ந்து செல்ல மேரிக்குப் பிடிக்கவே இல்லை. அவள் மாத்திரம் வண்டியிலிருந்து இறங்க முடிந்திருந்தால், பேசாமல் இறங்கி நடந்தே சென்றிருப்பாள்.

ஃபிரான்ஸிஸ் தம்பதிகளின் வீடு, அரசாங்க மாளிகைக்கு வடகிழக்கில் இருந்தது. அவர்களுடைய ''ஜர்னல்'' பத்திரிகைக் காரியாலயமும் வீடும் அருகருகேதான் இருந்தன: ஆனால் வீடும் கிட்டத்தட்ட பத்திரிகாலயம் போலவே தோற்றமளித்தது.

வீட்டின் நடு ஹாலில், பிற பத்திரிகைகளிலிருந்து கத்தரித்து எடுக்கப்பட்ட துண்டுக் காகிதங்கள் இறைந்து கிடந்தன. அந்தக் காகிதங்களில் வெளியாகியிருந்த விஷயங்கள், ''ஜர்னல்'' பத்திரிகையில் மீண்டும் வெளியிடுவதற்கானவை. எழுத்துக்கள் கோக்கப்பட்ட பலகைகள் பல காணப்பட்டன. சரிபார்க்கப்படாத 'காலி புரூஃப்' காகிதங்கள் ஒரு பக்கம் அடுக்கு அடுக்காக இருந்தன.

சாப்பாட்டு அறையில் மேஜை மீது உணவுத் தட்டுக்கள் வைக்கப்பட்டிருந்தன. அத்தனையும் சுவையான உணவு. ஆனால் லிங்கன் அவற்றைத் தொடவேயில்லை. ''எனக்குச் சாப்பாட்டிலே நாட்டம் செல்லவில்லை. இன்றைப் பிரசங்கம் என் பசியைக் கொன்றுவிட்டது'' என்றான் அவன் எவருடைய முகத்தையும் ஏறிட்டுப்பாராமலே.

மேரி அவன் பேச்சுப் புரியாமல் விழிப்பதைப் பார்த்த லிமியன் ஃபிரான்ஸிஸ் ''லிங்கனுக்கு மனப்பிராந்தி நிறைய உண்டு; வேறொன்றும் இல்லை'' என்று விளக்கினான்.

லிங்கனின் மனக்கிலேசத்தை மேரி உணர முடிந்தது: இது அவளுக்கு முதல் தடவை. ஆனால் ஃபிரான்ஸிஸ் தம்பதிகளுக்கு இது ஒன்றும் புதுமையல்ல. அவர்கள் அவனை

1834-இலிருந்து அறிவார்கள். அப்பொழுது அவன் நியூ ஸேலத்தில் ''ஜர்னல்'' பத்திரிகையின் விற்பனையாளனாக இருந்தான். அவர்களுக்கு அவனிடம் மகனுக்கு ஒப்பான வாஞ்சை உண்டு.

''ஆம்! நீ என்னவோ பிரமாதப்படுத்துகிறாயே? உன் பிரசங்கம் காரணமாக விக் கட்சியின் சார்பில் ஜனதிபதித் தேர்தலுக்கு நிற்கப் போகிறவர் தோற்றுப் போய்விடப் போகிறார் என்ற எண்ணமா?'' என்று ஸ்ரீமதி ஃபிரான்ஸிஸ் வேடிக்கையாகக் கேட்டாள்.

லிங்கனின் சோர்ந்த முகத்தில் சிறிது ஒளி தோன்றிற்று. அவன் லேசாக முறுவலித்தான்.

''உங்கள் அபிப்பிராயத்துக்கு மாறுகப் பேசுவதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். ஜெனரல் ஹாரிஸனின் பெயரை ஜனதிபதித் தேர்தலுக்குப் பிரேரித்த பிறகு விக் கட்சியின் நிலைமையை விளக்கிச் செய்யப்பட்ட பிரசங்கங்களில் உங்களுடைய இன்றைப் பிரசங்கந்தான் மிகத் தெளிவாக இருந்தது என்பது என் கருத்து, மிஸ்டர் லிங்கன். தவிர, நீங்கள் கூட்டத்தினருக்குக் கட்சியின் நிலையை விளக்க நன்கு முயற்சி செய்தீர்கள். இதற்கு அதிகமாக ஒருவரிடம் என்னதான் எதிர்பார்க்க முடியும்?'' என்றாள் மேரி.

இதுவரை, தன் எதிரே ஒரு பெண் அமர்ந்திருந்ததைக் கூட அறியாதவன் போலிருந்த லிங்கன், மேரியின் பேச்சைக் கேட்டதும் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். முகத்தில் குறுநகையுடன் அவன் சொன்னான்: ''உங்கள் கேள்விக்கு விடையளிக்க நான் ஒரு சம்பவத்தைச் சொல்ல வேண்டும் மிஸ் டாடு. ஒரு தடவை நான் காட்டு வழியே நடந்து சென்று கொண்டிருந்தபோது ஒரு பெண்மணி குதிரை சவாரி செய்தவாறு என் எதிரே வந்தாள். அவளுக்கு வழிவிட்டு, நான் விலகி நின்றபோது, அவளும் நின்று என்னை உற்று நோக்கிவிட்டு, 'உன்னைப் போல் அவலட்சணமான ஒருவனை நான் இதுவரைப் பார்த்ததேயில்லை' என்றாள். 'நீங்கள் சொல்வது சரிதான் அம்மா; ஆனால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்?' என்று நான் கேட்டேன். 'உன்னால் வேறொன்றும் செய்ய முடியாது. ஆனால் நீ இந்த அவலட்சண உருவத்தை வெளியே காட்டாமல் வீட்டுக்குள்ளேயே இருக்கலாமே' என்றாள் அவள்.''

இப்படிக் கூறிவிட்டு லிங்கன் பெரிதாகச் சிரித்தான். ஃபிரான்ஸிஸ் தம்பதிகளும் அச்சிரிப்பில் கலந்து கொண்டனர். ஆனால் மேரி சிரிக்கவில்லை. 'எதற்காக இவர் தம்மைப் பற்றிய இத்தகைய கொடூரமான கதைகளை யெல்லாம்

சொல்லுகிறீர் ?' என்று அவள் விசனத்தோடு நினைத்துக் கொண்டாள்.

சட்டென்று தன்னை யாரோ கவனிப்பதை உணர்ந்தாள் அவள். தலையைத் திருப்பிப் பார்த்தபோது ஸ்ரீமதி ஃபிரான்ஸிஸ், விங்கனையும் தன்னையும் ஒரு மாதிரி நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

அவள் சட்டென்று எழுந்து, '' மிஸ்டர் ஃபிரான்ஸிஸ் ! நேரமாகி விட்டது. என்னை வீட்டில் கொண்டு விட்டு விடுகிறீர்களா ?'' என்றாள்.

8

கிறிஸ்துமஸ்ஸை முன்னிட்டு மேரிக்கு ஒரு கணிசமான தொகையை அனுப்பியிருந்தார் ராபர்ட் டாடு. அவர் எழுதியிருந்த கடிதத்தில் பல விஷயங்களிடையே ஒரு புதிய செய்தியும் இருந்தது. தமது மூத்த மனைவியின் உயிலின் படி இண்டியானாவில் எண்பது ஏக்கர் நல்ல விளை நிலம் மேரிக்கு எழுதி வைக்கப்பட்டிருப்பதாகவும், கல்யாணம் செய்து கொண்டதும் அந்த நிலம் அவளுக்கு கிடைக்கு மென்றும் குறிப்பிட்டிருந்தார் டாடு. ' போகட்டும் ; அந்த மட்டும் நான் வெறுங்கையுடன் வாழ்வில் ஈடுபடப் போவதில்லை ' என்ற திருப்தி மேரிக்கு இருந்த போதிலும், தனக்கு இப்பொழுதொன்றும் கல்யாணத்துக்கு அவசர மில்லை என்ற மனப்பாங்குடன் இருந்ததால், தந்தை அனுப்பி யிருந்த பணத்தில் பெரும் பகுதியை உயர்ந்த ரக உடை களைத் தைத்துக் கொள்ளுவதிலேயே செலவிட்டு விட்டாள்.

தந்தையின் கடிதத்துடன் தன் சிற்றன்னையின் சிறு கடிதம் ஒன்றும், குழந்தை எமிலி கிறுக்கி அனுப்பியிருந்த சில வரிகளும் இருந்தன. படுக்கை அறையில் தனியே அமர்ந்து அக்கடிதங்களைப் படித்த மேரிக்கு வீட்டாசை பலமாக எழுந்தது. முக்கியமாகக் குழந்தைகளைப் பற்றிய நினைவு அவளைக் கவ்விக்கொண்டது. இந்தத் தடவை தான் அவள் லெக்ஸிங்டனுக்கு வெளியே வந்து கிறிஸ்துமஸ் பண்டி கையைக் கொண்டாடப் போகிறாள். கிறிஸ்துமஸ்ஸுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பேயிருந்து ஆரம்பித்து புத் தாண்டு தினம் வரை நீடிக்கும் லெக்ஸிங்டன் நகரின் கோலா கலங்களை அவள் நினைத்துக்கொண்டாள்.

ஆனால், இந்த வீட்டு நினைவை மறுநாள் ஆனிடமிருந்து வந்த ஒரு கடிதம் விரட்டி விட்டது. '' உன்னுடைய

முயற்சிகள் எம்மட்டில் இருக்கின்றன ? எப்பொழுது நீ எனக்கு எலிஸபெத் வீட்டில் இடம் காலி செய்து கொடுக்கப் போகிறாய் ?'' என்று எழுதியிருந்தாள் ஆன்.

ஸ்பிரிங்ஃபீல்டில் புத்தாண்டு தினம் ரொம்ப விசேஷமாகக் கொண்டாடப்படும் என்று மேரி அறிந்து கொண்டாள். தெரிந்த மனிதர்கள் வீடுகளுக்கெல்லாம் போக வேண்டுமென்றும், அவர்கள் வீட்டில் இல்லாவிட்டால், கதவில் தொங்கவிடப் பட்டிருக்கும் கூடையில், தங்கள் பெயரடித்த சீட்டைப் போட்டுவிட்டு வரவேண்டுமென்றும் அவள் கேள்விப்பட்டாள். எலிஸபெத் பிரசவித்து அதிக நாள் ஆகவில்லை ; ஆதலால் அவள் விருந்தினரை வரவேற்க முடியாதென்ற எண்ணத்துடன் நினியன் இத்தடவை புத்தாண்டுப் பண்டிகையைக் கொண்டாட வேண்டாமென்று தீர்மானித்தான். ஆனால் எலிஸபெத் தனக்குப் பதிலாக மேரி விருந்தினர்களை வரவேற்பாளென்று கூறி அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தாள். '' மேரி ! சமையற்காரனிடம் சொல்லி சிறந்த உணவுப் பதார்த்தங்களைத் தயாரிக்கச் செய். விடியுமுன்பே நீ அலங்காரம் செய்து கொண்டு தயாராகி விடவேண்டும். நாங்கள் இங்கே குடித்தனம் ஆரம்பித்த வருஷத்துப் பண்டிகையின்போது, படுக்கையிலிருந்து எழுந்திருக்குமுன்பே ஒரு பிரும்மசாரி புத்தாண்டு வாழ்த்துக் கூற வந்துவிட்டான்'' என்றாள் அவள்.

எலிஸபெத் கூறியதுபோல் இவ்வருஷமும் ஒரு பிரும்மசாரிதான் முதன் முதலாக வந்தான். ஆனால் மேரி அதற்குள் தயாராக இருந்தாள். புத்தாண்டு வாழ்த்துக் கூற வருபவர்களுக்கு ஆரஞ்சுப் பழங்களை வழங்குவது சிறந்த விருந்தாகக் கருதப்பட்டு வந்தது. ஆகையால் மேரி ஹாலில் மேஜையின் மீது ஆரஞ்சுப் பழங்கள் அடங்கிய பல பாத்திரங்களை வரிசையாக வைத்திருந்தாள். நடுப்பகல் ஒரு மணிக்குள் சுமார் நூறுபேர் வாழ்த்துக் கூற வந்து போய் விட்டனர். பிறகு ஃபிரான்ஸெஸ்ஸும் அவளுடைய கணவன் டாக்டர் வாலெஸ்ஸும் நினியனுக்கு ஒத்தாசை செய்ய வந்து விட்டனர். மேரி தெரிந்த மனிதர்கள் வீட்டுக்கு வாழ்த்துக் கூறப் புறப்பட்டாள். ஸ்பிரிங்ஃபீல்டுத் தெருக்களில், கோச்சு வண்டிகள் நெறிபட்டன. இரண்டு மணி ஆதவற்குள் மேரி பத்துப் பனிரெண்டு வீடுகளுக்குப் போய்விட்டாள். ஆனால் ஒரு வீட்டிலாவது ஓர் ஆளாவது இருக்க வேண்டுமே ? எல்லோரும் மேரியைப் போலவே தங்களுக்குத் தெரிந்த மனிதர்களுக்கு வாழ்த்துக் கூறப் போய்விட்டிருந்தனர்.

எட்வர்ட்ஸ் வீட்டுக்கு வாழ்த்துக் கூறக் கடைசியாக வந்தவர் திரும்பிச் சென்ற போது இரவு பத்து மணி ஆகி

விட்டது. மேரி மாடிக்குச் செல்லப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்பொழுது கதவை யாரோ மெதுவாகத் தட்டும் ஓசை கேட்டு அவள் தன் கையிலிருந்த விளக்கை மேஜை மீது வைத்து விட்டுக் கதவைத் திறந்தாள்.

அங்கே, தனது தொப்பியை எடுத்து மார்பில் அழுத்திப் பிடித்துக் கொண்டு வெட்கம் தோய்ந்த முகத்துடன் ஆப்ரஹாம் லிங்கன் நின்று கொண்டிருந்தான்.

'' வாருங்கள், வாருங்கள்; நீங்கள் தான் கடைசி போலிருக்கிறது. உள்ளே வாருங்கள் மிஸ்டர் லிங்கன் '' என்று மேரி அவனைக் கனிவோடு வரவேற்றாள்.

'' வந்தனம் அம்மா. உங்கள் வீட்டுக்குக் கடைசி நபராக வந்திருந்த போதிலும் இதுதான் நான் இன்று செல்லும் முதல் வீடு. எல்லோரும் வந்து போன பிறகு போனால், உங்களோடு சிறிது நேரம் நிம்மதியாகப் பேசிக் கொண்டிருக்கலாமென்று காத்திருந்தேன்'' என்றான் லிங்கன்.

மேரியின் புருவங்கள் லேசாக உயர்ந்தன. ஆனால் அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவனை ஹாலுக்கு அழைத்துச் சென்று கணப்புக்கு எதிரே இரு நாற்காலிகளை இழுத்துப் போட்டாள். ஒன்றில் அவனை அமரச் செய்து தானும் அமர்ந்து கொண்டாள்.

'' என்ன சாப்பிடுகிறீர்கள் மிஸ்டர் லிங்கன்? ' ஏக் நாக் ' (முட்டையும் பாலும் சேர்ந்த ஒரு பானம்) கொண்டு வரட்டுமா ? இல்லாவிட்டால் காபியா ?''

'' வந்தனம் அம்மா ; ஒன்றும் வேண்டாம்.''

அவர்கள் பேசிக்கொண்டே உட்கார்ந்திருந்தனர். தாங்கள் இருவரும் கெண்டக்கி மாகாணத்தில் நூறே நூறு மைல் தூரத்துக்குள்ளே பிறந்தவர்கள் என்பதையும், இருவரும் கிட்டத்தட்ட சமவயதில் தாயை இழந்தவர்கள் என்பதையும் அறிந்து வியப்புற்றனர். லிங்கனுக்கு ஏழு வயசாக இருக்கும் போதே அவனுடைய குடும்பம் இண்டியானாவுக்குச் சென்று குடியேறி விட்டதால் அவனுக்குக் கெண்டக்கியைப் பற்றி அதிகமாக எதுவும் நினைவில்லை. ஆகையால் மேரி அவனுக்கு லெக்ஸிங்டனைப் பற்றியும், ஆஷ்லாண்டைப் பற்றியும், ஹென்ரி கிளேயைப் பற்றியும் கூறினாள். பிறகு அவர்கள் ஹாரிஸ்பர்க் மகாநாட்டில், கிளேக்கு ஏற்பட்ட தோல்வியைப் பற்றிப் பேசி வருந்தினார்கள்.

அவள், தான் கல்வி கற்ற டாக்டர் வார்டு, மற்றும் மெண்டல் கல்வி ஸ்தாபனங்களைப் பற்றிச் சுருக்கமாகக் கூறினாள். பிறகு '' மிஸ்டர் லிங்கன்! இனி உங்களுடைய இளமை வாழ்வைப் பற்றியும், படிப்பைப்பற்றியும் சொல்லுங்கள் '' என்று கேட்டாள்.

''என்னுடைய இளமை வாழ்வா? அதை ஒரே வாக்கியத்தில் கூறிவிடலாம். அது ஏழை மக்களின் சுருக்கமான எளிய வாழ்வு.''

''இது கிரே எழுதிய இரங்கற்பாவில் வரும் வாக்கியந்தானே?''

''ஆமாம்'' என்று கூறிவிட்டுச் சிரித்தான் லிங்கன். ''நான் பல ஆரம்பப் பள்ளிகளில் படித்தேன். ஆனால் ஒன்றிலும் நிலைத்து நிற்கவில்லை. படிக்க வேண்டும் என்ற ஆவலை அப்பள்ளிக்கூடங்கள் என்னிடம் ஏற்படுத்தவே இல்லை. சிறிது வயசான போது எனக்குச் சாதாரணமாக எழுதவும், படிக்கவும், ஓரளவு கணக்குப் போடவும் மாத்திரமே தெரிந்திருந்தன. அவ்வளவு தான் என் பள்ளிவாழ்க்கை. அதன் பிறகு நான் எந்தப் பள்ளிக்கூடத்திலும் சேர்ந்து படிக்கவேயில்லை.''

''ஆனால் நீங்கள் அன்று உப-கஜானாவைப்பற்றி எழுதி வந்து படித்த பிரசங்கம் அபாரமாக இருந்ததே? நிச்சயமாகச் சொல்லுகிறேன்: என்னுடைய பதிமூன்று வருஷத்துப் பள்ளி வாழ்க்கை அளித்த கல்விக்குச் சற்றும் குறைந்ததல்ல, உங்களுடைய கல்வி அறிவு. அது எப்படி ஏற்பட்டது உங்களுக்கு?''

''அப்பொழுது பைபிளைத் தவிர வேறு ஒரு புத்தகமும் என்னிடம் கிடையாது. ஆனால் என் அண்டை வீட்டுக்காரர் ஒருவரிடம் 'பன்யன்' எழுதிய 'யாத்திரிகரின் முன்னேற்றம்' என்ற புத்தகமும், அருகில் கடை வைத்திருந்த ஒருவரிடம் ராபர்ட் பேர்ன்ஸின் புத்தகம் ஒன்றும் இருந்தன. அவற்றை நான் வாங்கிப் படித்தேன். படிப்பதற்கு வேறு புத்தகங்களே இல்லாதபோது இருக்கிற இரண்டொன்றைத்தானே திருப்பித் திருப்பிப் படித்தாக வேண்டியிருக்கிறது?

அப்புறம் எங்கள் ஊரிலிருந்து சில மைல்களுக்கு அப்பால் கிராஃபோர்டு என்று ஒரு குடியானவர் இருந்தார். அவர், 'வீம்' எழுதிய 'வாஷிங்டனின் சரித்திரம்' என்ற புத்தகத்தை எனக்கு இரவல் தந்து உதவினார். அதை நான் இரவோடு இரவாகப் படித்தேன். ஒருநாள் அதை மரக்கட்டைகளுக்கு இடையே வைத்திருந்தேன். மழை பெய்து புத்தகத்தை நனைத்து விட்டது. புத்தகத்தின் விலையை ஈடு செய்வதற்காக கிராஃபோர்டின் வயலில் நான் மூன்று நாட்கள் வேலை செய்யவேண்டியதாயிற்று. ஆனால் நான் அதற்காக வருந்தவில்லை; ஏனென்றால் அதன் பிறகு அப்புத்தகம் எனக்குச் சொந்தமாகி விடுகிறதில்லையா? ஒவ்வொரு வருஷமும் யாரிடமாவது தூண்டித் துருவி ஏதாவது ஒரு புத்தகத்தை வாங்கி வந்து படிப்பேன். இப்படி 'ஈஸாப்பின் நீதிக்கதைகள்',

'ராபின்ஸன் குருஸோ', 'ஹென்ரி கிளேயின் வாழ்க்கைச் சரித்திரம்' முதலிய பல புத்தகங்களைப் படித்தேன். எனக்குப் பதினைந்து வயசாக இருந்தபோது ஒவ்வொரு நாள் இரவும் நான் ஒன்றரை மைல் தூரம் நடந்து சென்று, ஒரு கடையில் செய்திப் பத்திரிகைகள் படித்து உலக நிகழ்ச்சிகளைப்பற்றி அறிந்துகொண்டேன். என்னுடைய மாற்றாந்தாய் என் படிப்புக்கு ஊக்கமூட்டி வந்தாள். ஆனால் என் அப்பா அப்படியில்லை. அவருக்கு கையெழுத்துத்தான் போடத் தெரியுமேயன்றி எழுதப் படிக்கத் தெரியாது. அது அவர் தவறல்ல. அவருக்கு ஆறு வயசாக இருந்தபோது என் தாத்தாவை ஒரு சிவப்பு இந்தியன் சுட்டுக்கொன்று விட்டான். ஆகையால் குழந்தைப் பிராயத்தில் கூட அவர் பள்ளிக்கூடம் போக வழியில்லாது போய்விட்டது.''

லிங்கன் பேச்சை நிறுத்திவிட்டு கணப்புக்கு எதிரே குனிந்து சிறிது நேரம் ஆலோசனையில் ஆழ்ந்திருந்தான். பிறகு மீண்டும் பேச ஆரம்பித்தான்.

''என் அப்பாவுக்குப் படிப்பு இல்லாததால் அவர் படிப்பைக் கண்டு பயந்தார்; பிறர் படிப்பதையும் விரும்பவில்லை. 'நீ இன்னும் படித்துப் படித்து முட்டாளாகிக் கொண்டுதான் வருகிறாய் போலிருக்கிறது. நான் உன்னை தடுக்கப் பார்க்கிறேன். ஆனால் நீ அந்த முட்டாள் எண்ணத்தை விடமாட்டேன் என்கிறாய். என்னைப்பாரடா; நான் படிக்காதவன் தான். ஆனால் படித்தவனைவிட நன்றாக வாழ்கிறேன்' என்று என்னிடம் கூறுவார். ஆனால் அவர் நன்றாக வாழவே இல்லை. எதிலுமே அவர் முன்னேறவில்லை. அவர் தச்சு வேலையில் சிறந்தவர். அழகான அலமாரிகள் செய்வதில் புகழ் பெற்றவர். எலிஸபெத் டவுனில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்திருக்க முடியும். ஆனால் அவர் எங்குமே நிலைத்து நிற்கமாட்டார். அவர் சோம்பேறியோ, முட்டாளோ அல்ல; சென்ற இடங்களிலெல்லாம் நிலபுலன்களும் குதிரைகளும் அவருக்குக் கிட்டிக் கொண்டிருந்தன. ஆனால் அவர் துரதிருஷ்டசாலி. அதோடு அவருக்கு எதையும் சரியாக நிர்ணயிக்கத் தெரியாது. கெண்டக்கியிலுள்ள நாப் கிரீக், இண்டியானாவிலுள்ள பீஜியன் கிரீக், இந்த இல்லினாய்ஸ் மாகாணத்தில் ஸாங்கமன் நதியை ஒட்டிய மாக்கன் ஜில்லா, இப்படி ஒவ்வொரு இடமாக நாங்கள் குடியேறி, புதுப் புதுப் பண்ணைகளில் உழைத்து வந்தோம். ஆனால் ஒன்று நிலம் வரண்டதாக இருக்கும்; அல்லது சீதோஷ்ணநிலை ஒத்து வராததாக இருக்கும்; இல்லாவிட்டால் அவர் பண்ணை முதலாளிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் ஏதாவது குற்றம் குறை இருந்துவிடும்; இப்படியாக அவருடைய உழைப்பெல்லாம் வீணாகிக் கொண்டு வந்தது. ஒவ்வொரு தடவையும் எங்களுடைய வீட்டுச்

சாமான்களை வண்டியில் ஏற்றிக்கொண்டு நாங்கள் ஒரு புது இடத்தைத் தேடிப்போவோம். ஆனால் அவருக்கு என் மாற்றாந்தாய் ஸாராவிடம் அளவற்ற காதல். அவள்தான், ஒழிந்த வேளையில் படிக்க எனக்கு வசதி அளித்து வந்தாள்.''

கடைசி வாக்கியத்தைக் கூறியபோது லிங்கனின் குரல் மாறி ஒலித்ததை மேரி கவனித்தாள். தன் மனசுக்குள்ளே தனது தாயையும் மாற்றாந்தாயையும் ஒப்பிட்டுப் பார்த்து உள்ளம் நைந்தது போலிருந்தது அந்தக்குரல் வித்தியாசம்.

''அப்படியானால் அவர் உங்கள் தாயை நேசிக்கவே இல்லையா?'' என்று அவள் கேட்டாள்.

''என்னுடைய மாற்றாந்தாய் அவரை நிராகரித்துவிட்டு இன்னொருவரை மணந்துகொண்ட பிறகுதான் அவர் என் தாயுடன் மீண்டும் சேர்ந்து வாழ ஆரம்பித்தார். ஆனால் இந்த வாழ்வும் அதிக காலம் நீடிக்காது என்பதை என் தாய் முன்னதாக அறிந்து இருக்கவேண்டும். அதனால்தான் புனர் வாழ்வு கிட்டியும் அவள் தோல்வியடைந்தவள் போலவே காணப்பட்டாள். கடைசியில் அவள் இறந்து போனாள். என் மாற்றாந்தாய் இன்னொருவரை மணந்துகொண்டாளே, அவரும் செத்துப்போய்விட்டார். அப்புறம் என் தந்தை எலிஸபெத் டவுனுக்குப்போய் அவளை மீண்டும் அழைத்து வந்தார். நாங்கள் ஒரு மரக்குடிசையில் கந்தல்களை உடுத்துக் கொண்டு பசியும் பட்டினியுமாக வாழ்வதை அவள் கண்டாள். என்னுடைய பனிரெண்டு வயதுச் சகோதரி எவ்வளவோ கெட்டிக்காரத்தனமாகக் குடும்ப வேலைகளைக் கவனித்துக் கொண்டுதான் வந்தாள். ஆனாலும் அவள் வயதில் சிறியவள் தானே! மாற்றாந்தாய் வந்த பிறகுதான் எங்கள் வீடு மறுபடியும் வீடாயிற்று.''

லிங்கன் தலையை நிமிர்த்து மேரியை நோக்கினான். உள்ளத்தின் ஒளி அந்த முகத்தில் பிரகாசிப்பதை அவள் கண்டாள்.

''அவள் தாயின் அன்புடன் எங்களைப் பராமரித்தாள். அந்த அன்புக்காக நாங்கள் ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தோம்.''

''நாம் எல்லோரும் அதற்கு ஏங்கத் தானே செய்கிறோம்'' என்றாள் மேரி.

அவர்கள் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்கள். எனினும் அவர்களுடைய உள்ளங்கள் வார்த்தையாடிக் கொண்டிருந்தன. ஒரு விநாடிக்குப் பிறகு அவள் மெல்லக் கேட்டாள்: ''உங்கள் சகோதரி இப்பொழுது எங்கே இருக்கிறாள்?''

''இறந்துவிட்டாள்; என் தாயைப் போலவே. இருவரும் செத்திருக்க வேண்டாம்.'' முகத்தில் விசனம் பரவ லிங்கன் தொடர்ந்தான்:

''என் தந்தை கெண்டக்கியிலிருந்து குடும்பத்தைக் கிளப்பி இண்டியானு வன்பிரதேசத்தில் குடியேறியபோது அவரால் ஒரு ஓலைக் குடிசையைத்தான் கட்டிக்கொள்ள முடிந்தது. அந்த வருஷம் குளிர் காலத்தில் நாங்கள் மிகவும் அவதிப்பட்டோம். என் தாயாரைத்தான் அக் குளிர் வெகு வாகப் பாதித்தது. அடுத்த வருஷம் குளிர் காலத்துக்கு முன்பே அப்பா ஒரு மரக்குடிசை கட்டிவிட்டார். ஆனால், அதிலும் மண் தளந்தான்; காரைத்தளம் இல்லை. என் தாய்க்கு இதையெல்லாம் தாங்கிக்கொள்ளும் உடல் வலிவு இல்லாது போய் விட்டது.''

லிங்கன் நீண்டநேரம் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு தொடர்ந்தான்: ''பத்தொன்பதாவது வயசில் ஆரன் கிரிக்ஸ்பி என்பவரை என் சகோதரி மணந்து கொண்டாள். அந்தப்பாவி, அவள் பிரசவித்திருந்த போது கவனிக்காமல் விட்டு, அவளைக் கொன்றுவிட்டான். ஆம்; காதல், கல்யாணம் இவையெல்லாம் அடிக்கடி இத்தகைய நாதியற்ற சாவில் தானே கொண்டு விட்டுவிடுகின்றன!''

மேரி இரக்க உணர்ச்சியுடன் லிங்கனின் கைகளைப் பற்றிக் கொள்ளப் போனாள். ஆனால் அவன் நெருப்பைத் தொட்டுவிட்டது போல் கையைப் பின்னால் இழுத்துக் கொண்டான்.

''காதலும், கல்யாணமும் எல்லோருக்கும் காலனைக் கொண்டு வந்து விடுவதில்லை மிஸ்டர் லிங்கன். இந்த உலகத்தில் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டு, ஒருவருக்கொருவர் நல்லதையே செய்து கொள்ளுபவர்கள் தாம் அதிகம்'' என்றாள் அவள்.

அவன் கண்களில் விசனம் தேங்க அவளை நோக்கினான். பிறகு, ''நான் உன்னை 'மோலி' என்று அழைக்கலாமா?'' என்று கேட்டான்.

''மோலி! அதாவது எனக்கு ஒரு செல்லப்பெயர் வைக்கப் போகிறீர்களா?'' என்று அவள் வியப்போடு கேட்டாள்.

''ஆமாம்?''

''என்னை யாரும் இதுவரை, செல்லப்பெயரிட்டு அழைத்ததில்லை. நீங்கள் மாத்திரம் ஏன் அப்படி அழைக்க விரும்புகிறீர்கள்?''

அவன் நிம்மதி அற்றவனாக நாற்காலியில் நெளிந்தான். பிறகு அவள் முகத்தைப் பாராமலேயே, ''மேரி என்ற பெயருடைய வேறொரு பெண் நியூ ஸேலத்தில் எனக்கு அறிமுகமானாள். எங்கள் நட்பு அத்தனை சுவாரசியமாக அமையவில்லை. அதுமுதல் மேரி என்ற பெயரைக் கேட்கும் போதெல்லாம் என் மனசு நோகிறது.''

'' ஓ! அப்படியா? அப்படியானால் என்னைத் தாராளமாக மோலி என்றே கூப்பிடுங்கள். ''

'' வந்தனம் மோலி. இப்பொழுது நான் காபி சாப்பிடுகிறேன். கொண்டுவா அதை. ''

அவள் தலையைச் சாய்த்து அவனை வியப்புடன் நோக்கிக் கொண்டே சமையல் அறைக்கு நடந்தாள். '' இப்பொழுது மோலி! அப்புறம்? '' என்று எண்ணிற்று அவள் உள்ளம்.

9

எட்வர்ட்ஸ் தம்பதிகளின் வீடு விளக்கொளியில் பிரகாசமாக விளங்கிற்று. கீழேயிருந்த ஹாலில் சுமார் நூற்றைம்பது விருந்தினர்கள் கூடியிருந்தனர். எலிஸபெத்தின் பிரசவத்திற்குப் பிறகு அவர்கள் வீட்டில் நடக்கும் முதல் வைபவம் இது. நான்கு மாதங்களுக்கு முன்பு நினியனின் இளைய சகோதரன் பெஞ்ஜமின் எட்வர்ட்ஸுக்கும், ஹெலன் என்பவளுக்கும் திருமணம் நடந்தது. அவர்கள் இப்பொழுது நியூஹேவனிலிருந்து, ஸ்பிரிங்ஃபீல்டில் குடியேற வந்திருந்தார்கள். அதையொட்டியே அன்றைய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நினியன் தனது முதல் ஆண் குழந்தை பிறந்ததும் எலிஸபெத்துக்கு ஒரு விலையுர்ந்த பியானோவைப் பரிசளித்திருந்தான். அந்தப் பியானோவில் மேரியும், ஸ்டீஃபன் டக்ளஸ்ஸும் இசை எழுப்பிக் கொண்டிருந்தனர்.

பியானோவின் முன், ஸ்டீஃபனுக்கு அருகில் சில சமயம் அவன் தோளோடு தோள் இடிக்க அமர்ந்திருந்த மேரி, அவனுடைய அபார அறிவுத்திறனையும், தளராத உறுதியையும், பேராவல்களையும் நினைத்துப் பார்த்துக்கொண்டாள். இல்லினாய்ஸில் ஜனநாயகக் கட்சியைத் தனித்து நின்றே முற்றிலும் புது முறையில் அமைத்துப் பலப்படுத்தி விட்டான் ஸ்டீஃபன். ஜனாதிபதி மார்ட்டின் வான்பூரேனையே மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கச் செய்ய இப்பொழுது தன் கட்சியைத் தயார் செய்து கொண்டிருந்தான். முந்தின நாள் இரவு நினியன் தன் தம்பியிடம் ஸ்பிரிங்ஃபீல்டிலுள்ள வக்கீல்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் கூறிய வார்த்தைகள் மேரிக்கு நினைவு வந்தன.

நினியன் சொன்னான்: '' இல்லினாய்ஸில் மோசமான வழக்குகளையும் வெற்றிகரமாக நடத்தித்தரக்கூடிய வக்கீல் ஸ்டீஃபன் டக்ளஸ். அதே வழக்குகளுக்குத் தோல்வியைத் தேடித்தரும் வக்கீல் ஆப்ரஹாம் லிங்கன். ''

தன் அருகில் பெரிய தலை, அடர்ந்த ரோமம், தடித்த உடல், குழந்தைக்கால்கள் இவற்றுடன் அமர்ந்து, தன் காதருகில் மெதுவாகப்பாடிக்கொண்டும், கண்களால் கவர்ந்து கொண்டும் இருந்த வாலிபன், பிரசித்தி பெற்ற வக்கீலாகவே இருக்கலாம். இவன் அவளிடம் மயங்கியும் இருக்கலாம். அவளுக்கும் இவனுடைய மேதையும், இவன் மனசிலே வீசும் சண்டமாருதங்கள் போன்ற எண்ணங்களும் தெரியும். அவளுக்கு இவனைப் பிடித்திருந்தது; இவனைப் போற்றினாள்; இவனால் உல்லாசம் பெற்றாள்; ஆனால் அவள் இவனைக் காதலித்தாளா?.

மேரி ஹாலை அடுத்திருந்த அறையை நோக்கினாள். அங்கே பத்துப் பதினைந்து இளைஞர்கள் பாடிக்கொண்டும், சிரித்துப் பேசிக்கொண்டும் உற்சாகமாக இருந்தனர். அவர்கள் அனைவருக்கும், வாழ்க்கை வளத்துடன் ஆரம்பமாகியிருந்தது. அவளுக்கு அவர்கள் எல்லோரையும் பிடித்திருந்தது. அவ்வாறே அவர்களுக்கும் தன்னைப் பிடித்துத்தான் இருக்க வேண்டும் என்பதை அவள் அறிவாள். அவர்களுள் யாராவது ஒருவனை உயர்ந்தவன் என்றோ, மற்றவர்களைத் தாழ்ந்தவர்களென்றோ அவள் கருதியிருக்கவில்லை. அவர்களில் யார் விருந்துக்கு அழைத்தாலும் அவள் போனாள். அது போல் அவர்களையும் வீட்டுக்கு அழைத்து விருந்து அளித்தாள். இம்மாதிரி 'விட்டோம் தொட்டோம்' என்று பழகி வருவது, தன் மீது யாருக்காவது காதல் ஏற்படுவதைத் தடுத்து விடும் என்பது அவளுக்குத் தெரியாததல்ல. ஆனால் அவள்தான், தானாக ஒருவரைக் காதலிக்கும் வரை, மற்ற எவரும் தன்னைக் காதலிப்பதை விரும்பவில்லையே! ஸ்பிரிங்ஃபீல்டில் அநேகம் பெண்களுக்கு இதே மாதிரி மனப்பான்மையே நிலவுவதை அவள் கண்டாள். அவர்கள் காதலிக்கப்பட வேண்டும் என்று போட்டியிடவில்லை. அதற்கு ஆசைப்படவோ, கவலைப்படவோ இல்லை. அல்லது கல்யாண நினைவில் ஆழ்ந்துகிடக்கவும் இல்லை. அவர்கள் இளமைப் பருவத்தினர்கள்; ஆரோக்கியமானவர்கள்; கவர்ச்சியானவர்கள்; வாழ்வை நன்றாக அநுபவித்து வந்தவர்கள். அவர்களைப்போலவே அவளும் இருந்து வந்தாள்.

ஸ்டீபன் டக்ளஸ் பாட்டை முடித்துவிட்டுத் துள்ளி எழுந்துகொண்டே, "எனக்குத் தாகம் நாவை வறட்டுகிறது மேரி; வா, ஏதாவது குடித்துவிட்டு வரலாம்" என்று அழைத்தான்.

அவர்கள் கூட்டத்துக்குள்ளே நுழைந்து சென்றபோது ஜாக்ஸன்வில்லில் அட்டர்னியாக இருந்த ஒருவர் டக்ளஸ்ஸின் கையைப் பிடித்து நிறுத்தி, "ஸ்டீவ்! என்னப்பா புத்தாண்டு தினத்துக்குப் பிறகு உன்னைக்காணவே இல்லையே? இந்த

வருஷம் உன் பாடு யோகந்தான் அப்பா. நாங்கள் எடுத்த காரியத்தை சாதித்து வான் பூரெனேயே மீண்டும் ஜனதிபதி யாக்கி விடுவோம். அப்புறம் என்ன? ஸ்டீவைப் பார்க்க வேண்டுமானால் அமெரிக்க சட்டசபைக்குத்தான் வர வேண்டும்'' என்றான்.

டக்ளஸ்ஸுக்கு சந்தோஷத்தால் உள்ளம் பூரித்தது. தன் முகங்கூட ஆனந்தத்தால் சிவந்து விட்டதை உணர்ந்தாள் மேரி. அமெரிக்க சட்ட சபையில் ஹென்ரி கிளே, ஜான் கால்ஹௌன், டானியல் வெப்ஸ்டர் இவர்களுக்கு இணையாக ஸ்டீஃபன் டக்ளஸ்ஸும் உட்காரப் போகிறான்! அட்டார்னியி டம் பேசி விட்டு அப்பால் வந்ததும் '' இதெல்லாம் உண்மை தானா ஸ்டீவ்? '' என்று அவள் அவனைக் கேட்டாள்.

' ஆம் மேரி; இல்லினாய்ஸ் சட்டசபையில் ஜனநாயகக் கட்சி பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெற்றுவிட்டால், அக்கட்சிதானே அமெரிக்க சட்டசபைக்குத் தங்கள் மாகாணத்தின் பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும்? இப்பொழுது நானே அக்கட்சிக்குத் தலைமை தாங்கி வருவதால் பெரும்பாலும் என்னையே அவர்கள் தேர்ந்தெடுக்கக் கூடும். ''

'' ஆனால் ஸ்டீவ்; உனக்கு இன்னும் முப்பது வயதுகூட நிரம்பவில்லையே? நீ இவ்வளவு பெரிய பதவியை வகிக்கத் தயாராகி இருக்கிறாயா?.''

'' தயாராவதா? நான் அங்கே நுழைந்து பார்த்தால் அன்றி எப்படி நிச்சயமாகச் சொல்லமுடியும்? எப்படியிருந்தாலும் இளைஞர்களும் முன்னுக்கு வரவேண்டியவர்கள் தானே? ஜனநாயகக் கட்சி இல்லினாயிஸ் சட்டசபையில் பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெறவில்லையென்றால், அமெரிக்க சட்டசபைக்கு இம்மாகாணத்திலிருந்து யார் போகக்கூடும் தெரியுமா? ''

'' தெரியாது; யார்? ''

'' இங்கே வராத உன் நண்பன் ஆப்ரஹாம் லிங்கன்.''

'' ஆப்ரஹாம் லிங்கனா? '' மேரி கத்தியே விட்டாள்.

'' இதை நான் நம்பவே மாட்டேன் ஸ்டீவ். ''

'' எங்கள் இருவரில் நானே அதிகம் தகுதியுடையவன் என்று நீ கருதியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது மேரி.''

'' இல்லை ஸ்டீவ்; உனக்கு ரொம்ப இளம்பிராயமாயிற்றே என்று தான் நான் ஆச்சரியப்படுகிறேன். இருந்தாலும் நீ மாத்திரம் அமெரிக்க சட்டசபையில் இடம் பெற்றுவிட வேண்டுமென்று தீர்மானித்தாயானால் கட்டாயம் பெற்றே தீருவாய் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ''

'' உண்மையைச் சொல்லப்போனால், நான் தேர்ந்தெடுக்

கப்படுவேன் என்ற எண்ணம் என் மனசில் முதல் முதலாக ஏற்பட்டதிலிருந்து ஒரு வார காலம் எனக்குச் சரியான தூக்கம் கூட வரவில்லை.''

மேரி ஊற்றிக்கொடுத்த பானத்தைப் பருகிவிட்டு அவன் வாசகசாலை அறையில் அமர்ந்திருந்த நினியன் முதலியோருடன் கலந்து கொள்ளப் போய்விட்டான். அவன் போனதும் மேரிக்கு அவன் உபயோகித்த 'இங்கே வராத உன் நண்பன்' என்ற சொற்றொடர் நினைவுக்கு வந்தது.

'உண்மைதான்; லிங்கனை அங்கு காணவில்லை; ஏன்? அவரை அழைக்கவில்லையா? அல்லது அவர்தான் அசிரத்தையால் வரவில்லையா?'

இப்படி நினைத்துக் கொண்டிருந்த போது அருகில் யாரோ வந்து நிற்பது போல் உணர்ந்தாள் மேரி.

''தேடவேண்டாம் மேரி; அவன் இங்கே இல்லை'' என்ற எலிஸபெத்தின் குரலைக் கேட்டதும் மேரி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

''உனக்கு புண்ணியமுண்டு லிஸ்; தயவு செய்து என் மனசுக்குள்ளே புகுந்து பார்க்காதே'' என்றாள் மேரி.

''சரி; பார்க்கவில்லை; ஆனால் நீ உன் உணர்ச்சிகளை முகத்தில் பிரதிபலிக்காமல் இருக்கச்செய்துகொள், முதலில். லிங்கனை நாங்கள் அழைக்கவில்லை. ஏனென்றால் அவன் சமூக வாழ்க்கையில் கலந்து கொள்பவனல்ல; அவன் ஒரு வீடு வாசலற்ற திண்ணைத் தூங்கி! ஜோஷ் ஸ்பீடின் கடையில் படுக்கை; பட்லர் குடும்பத்தாருடன் இலவசச் சாப்பாடு என்று காலந்தள்ளுபவன்.''

''ஆனால் நீங்கள் வீடு-வாசலற்ற இதர வாலிபர்களை அழைத்திருக்கிறீர்களே லிஸ்? லீமன் டிரம்புல் அரசாங்க மாளிகையில் கமிட்டிக் கூட்டம் கூடும் அறையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பவன்தானே? தன்னுடைய கடையிலேயே இருப்பும் படுக்கையும் வைத்துக் கொண்டிருக்கும் ஜோஷை நீங்கள் அழைத்திருக்கவில்லையா?''

''நம்மை அடிக்கடி அழைத்து விருந்து அளிக்க அவர்களுக்கு வீடில்லை என்பது உண்மைதான். இருந்தாலும் அவர்கள் நிச்சயமாகச் சமூக வாழ்வில் ஈடுபட்டவர்கள்தான். வீடில்லாவிட்டால், நண்பர்களை ஹோட்டல்களுக்கு அழைத்தாவது உபசரிக்கிறார்கள். தவிர லீமன் அமெரிக்காவில் பிரசித்தி பெற்ற டிரம்புல் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஜோஷுவா ஸ்பீடு கெண்டக்கியில் ஓர் உயர்ந்த குடும்பத்துப் பிள்ளை. அப்படிப் பார்க்கப் போனால், மிஸ்டர் லிங்கன் சமூகத்தில் இருக்கிற இடமே தெரியாது.''

''இப்படியெல்லாம் அவரை ஒதுக்குகிறீர்களே? பாவம்!

அவர் மனசு புண்படாதா? நாலுக இருந்தால் உங்களே யெல்லாம் அற்பத்தனம் படைத்தவர்களென்று தான் கருதுவேன்.''

''உனக்கு லிங்களேப் பற்றி ஒன்றும் தெரியாது, கண்ணே. தன்னே இந்தக் கூட்டத்தில் சேர்க்காமல் இருப்பதே பெரும் பாக்கியம் என்று கருதுபவன் அவன். அவனே அதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறுன். ஸ்பிரிங்ஃபீல்டு சமூகத்தில் கலந்து கொள்ள அவனுக்குத் துளியும் விருப்பம் கிடையாது. அப்படி விருப்பம் இல்லாதவனே நாம் எதற்காக அழைக்க வேண்டும்?''

எலிஸபெத் போனதும், 'உண்மை தானே இவள் சொல்லுவது' என்று நினேத்துக் கொண்டாள் மேரி. ''என்னுல் அவரைப் புரிந்துகொள்ளவே முடியவில்லேயே? பிறர் கண்களிலேயே படாமல் ஒளிந்து திரியும் மனப் போக்குடைய ஒரு மனிதரை எப்படித்தான் புரிந்து கொள்ள முடியும்?'' என்றும் அவள் எண்ணிக்கொண்டாள்.

* * *

மறு நாள், மிஸ்ஸெளரி மாகாணத்திலுள்ள கொலம்பியாவிலிருந்து மேரியின் பெரியப்பா ஜட்ஜ் டேவிட் டாடும், அவருடைய அழகுமிக்க பதினெட்டு வயது மகள் ஆனும் ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்தனர். அவர்கள் மேரியின் மற்றொரு பெரியப்பா டாக்டர் ஜான் டாடின் வீட்டுக்கு வந்திருந்தனர். மேரிக்குத் தனது இரண்டு பெரியப்பாக்களேயும் ஒருங்கே பார்க்க மிகவும் சந்தோஷமாக இருந்தது. டாக்டர் ஜான் டாடுதான் எல்லோரிலும் மூத்தவர். அவருக்கு ஐம்பத்திரண்டு வயசாகிறது. தலே அநேகமாக வழுக்கையாகி விட்டது. இருந்த ஒன்றிரண்டு ரோமக்கத்தைகளே, காதை மறைக்கும்படியாகப் பின்புறமாகச் சீவி விட்டுக் கொண்டிருப்பார் அவர். தடித்த உடல்; டாடு குடும்பத்துக்கே இயற்கையான குட்டைக் கழுத்து. அவர் டிரான்ஸில்வேனியா சர்வகலாசாலேயிலும், பென்ஸில்வேனியா சர்வகலாசாலேயிலும் பட்டம் பெற்றுர்.

அவருக்கு அடுத்தவர் ஜட்ஜ் டேவிட் டாடு. அவருக்கு திடகாத்திரமான உடல்; கருங்கண்கள்; கருமையான கேசம். வெகு காலத்துக்கு முன்பே அவர் கெண்டக்கியிலிருந்து மிஸ்ஸெளரிக்குப் போய் விட்டார். அங்கே நல்ல பண்ணே நிலங்களே வாங்கினுர். வியாபாரியாகத் தொழில் நடத்தினுர். பிறகு சட்டம் கற்றுர். பதினுறு வருஷகாலம் ஜட்ஜ் பதவியும் வகித்து விட்டார். அவருக்கு மிஸ்ஸெளரி என்றுல் உயிர். அவருடைய உற்சாகத்திற்கெல்லாம் உறைவிடம் அது.

''நீ பெரிய தவறு செய்து விட்டாய் மேரி; நேரே மிஸ்ஸெளரிக்கு வராமல், இந்த ஸ்பிரிங்ஃபீல்டுக்கு எதற்காக

வந்து சேர்ந்தாய் ? உலகத்திலுள்ள நல்லதெல்லாம் எங்கள் மிஸ்ஸைளரியில்தான் இருக்கின்றன. நிலமானுலும் சரி ; இளைஞர்களானுலும் சரி. ஏன் மேரி; நீ இங்கே யாரிடமும் பிணைபட்டு விட வில்லையே ?'' என்று அவர் கேட்டார்.

'' இல்லை பெரியப்பா ; நான் இன்னும் ஒற்றைக் கட்டைதான் '' என்ருள் மேரி.

'' ரொம்ப நல்லதாகப் போயிற்று. உன் போன்ற இளம் பெண்கள் தான் எங்கள் மிஸ்ஸைளரிக்கு வேண்டும். நான் இங்கே வந்ததற்கு அதுவும் ஒரு காரணமாகும். டாடு குடும்பத்தினரால் மிஸ்ஸைளரியை நிரப்பி விட வேண்டும் என்பது என் திட்டம். நீ எங்களுடன் வந்து விடு மேரி. உன்னைக் கண்டதுமே காதல் கொண்டு விடுவார்கள் எங்கள் ஊர் இளைஞர்கள். அந்த மாதிரிப் பையன்களை நீ இங்கே தலை கீழாக நின்ருலும் காண முடியாது ; ஆமாம் ; நான் பந்தயம் வேண்டுமானுலும் கட்டுகிறேன்.''

'' வாஸ்தவந்தான் பெரியப்பா, இங்கே ஒருவராவது என்னைக் கவர்ந்து இழுத்துக் கொள்ள வில்லையே !''

''மிஸ்ஸைளரியில் நாங்கள் எதையும் நினைத்த மாத்திரத்தில் முடித்து விடுவோம். சொல் மேரி. உனக்கு யார் வேண்டும் ? வக்கீலா ? டாக்டரா ? விவசாயியா ? வியாபாரியா ? ஜட்ஜா ? இன்னும் அங்கே ஒரு பல் வைத்தியர் கூட இருக்கிருர் மேரி. பல் வைத்தியரை உனக்கு பிடிக்குமா என்பதைச் சிந்தித்துப் பார். நிச்சயமாக எங்களுடன் புறப்பட்டு விடு மேரி.''

''கட்டாயமாக.''

10

பிப்ரவரி மாசத்தில் ஒரு நாள் பிற்பகலில் மேரி ஆரு வது தெரு வழியே நடந்து கொண்டிருந்தாள். அப்பொழுது ஸ்ரீமதி ஸிமியன்ஃபிரான்ஸிஸ் தன் கணவருக்கு உணவு எடுத்துப் போவதை அவள் கண்டாள். ஸ்ரீமதி பிரான்ஸிஸ், மேரியைப் பார்த்ததும், '' வா, மேரி ; லிம்முக்குச் சாப்பாடு கொண்டு போகிறேன்.. நீயும் கூட வா '' என்று அழைத்தாள்.

மேரி, சேறு உறைந்த ஆருவது தெருவில் ஸ்ரீமதி ஃபிரான்ஸிஸ்ஸுடன் நடக்கலானுள். ஸ்ரீமதி ஃபிரான்ஸிஸ்ஸின் முகம் சப்பையாக இருக்கும். மூக்கு, வாய், கண், காது எல்லாம் அந்த முகத்தில் இருப்பதே தெரியாது. குளிர்

காலத்திலும் சரி, கோடை காலத்திலும் சரி, கொஞ்சங் கூடச் சலிப்பின்றி தன் கணவருக்கு உணவு கொண்டு போய்க் கொடுத்துக் கொண்டிருக்கும் அவளை ஸ்பிரிங்ஃபீல்டில் தெரியாதவர்களே கிடையாது.

அவர்கள் ஸிமியன் ஃபிரான்ஸிஸ்ஸின் பத்திரிகாலயத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கையில் மேரி கேட்டாள்: ''ஏன் அம்மா, உங்கள் வீட்டையும், பத்திரிகாலயத்தையும் அருகருகே வைத்துக் கொள்ளக் கூடாதோ? அது உங்கள் அலைச்சலைக் குறைக்குமே!''

''ஆமாம்; ஒவ்வொரு நாளும் குறைந்தது இருபது தடவை அங்கும் இங்கும் அலைகிறேன். ஸிம் இன்று காலை ஆறு மணிக்கு, காலை உணவு கூடச் சாப்பிடாமல் புறப்பட்டுச் சென்றார். இரவு வீடு திரும்புவதற்கு பத்து மணியாவது ஆகும். ஆனால் இப்படி வீடும், பத்திரிகாலயமும் தூரத்தில் இருப்பது ஒரு வகையில் நல்லது தான். இல்லாவிட்டால் வீட்டிலும் அவருக்கு ஓய்வு ஒழிச்சலே இல்லாது போய்விடும்.''

''ஸாங்கமோ ஜர்னல் ஆபீஸின் கதவைத் திறந்து கொண்டு, ஸ்ரீமதி ஃபிரான்ஸிஸ்ஸும் மேரியும் உள்ளே சென்றனர்: ஸிமியன் ஃபிரான்ஸிஸ் அங்கே மும்முரமாக அச்சுக் கோக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார். கதவு திறக்கப் படும் சப்தம் கேட்டு அவர் முகத்தை திருப்பிப் பார்த்தார். அப்பொழுதும் அவருடைய விரல்கள் அச்சுக் கோக்கும் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தன. அவர் அடிக்கடி நெற்றி ரோமத்தை ஒதுக்கிக் கொண்டே இருந்தார் போலும்; நெற்றியெல்லாம் ஒரே மைக் கரையாக இருந்தது.

''அடடே! சாப்பாட்டு நேரம் ஆகிவிட்டதா?'' என்று மனைவியிடம் கூறிக்கொண்டே அவர் ''வா மேரி; வந்து வசதியாக உட்கார்ந்து கொள்'' என்று மேரியை வரவேற்றார்.

'உட்காருவதா? எங்கே?' என்று கேட்க நினைத்தாள் மேரி. ஏனென்றால் அங்கே நிற்பதற்குக் கூட இடம் இல்லை. அந்தப் பெரிய அறையைக் காகிதங்களும், அச்செழுத்துப் பெட்டிகளும், மையும், அச்சு யந்திரமும் நிறைத்துக் கொண்டிருந்தன. அறையின் பின் கோடியில் ஒரு மேஜை இருந்தது. ஆனால் உட்காரத்தான் நாற்காலி இல்லை.

ஸிமியன் ஃபிரான்ஸிஸ் கனெக்டிகட்டில் பிறந்தவர்; நியூ ஹேவனில் அச்சுத் தொழிலில் பயிற்சி பெற்றார். பிறகு நீயூ லண்டனிலும், பபலோவிலும் வாரப் பத்திரிகை

களைப் பிரசுரித்துக் கொண்டிருந்தார். 1831-இல் அவர் ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்தார். ஆரம்பத்தில் இங்கு அவருடைய பத்திரிகைக்கு அதிக ஆதரவு இருக்க வில்லை. ஏனென்றால், தெற்கே யிருந்து வந்து குடியேறி யிருந்தவர்களில் பலர் அவர் பத்திரிகையையும் அவரையும் சந்தேகக் கண்களோடு பார்த்தார்கள். ஆனால் இப்பொழுது அவருடைய ''ஸாங்கமோ ஜர்னல்'' தான் விக் கட்சியின் அதிகார பூர்வமான பத்திரிகையாக விளங்கி வந்தது. ஆயினும், அந்த நான்கு பக்க வாரப் பத்திரிகையின் வரும்படி மாத்திரம் அவர் வயிற்றை நிரப்பப் போதுமானதாக இல்லை. ஆகையால் அவர் வெளியார்களின் அச்சு வேலைகளையும் செய்து கொடுத்து வந்தார்.

''இந்த ஆபீஸில், நான் தான் ஆசிரியன், அச்சுக் கோப்பவன், வேலைக்காரன் எல்லாம். என்னுடைய தலையங்கத்தை நான் எழுதி அச்சுக் கோப்பதே இல்லை. இப்படி நின்று கொண்டே மனதில் தோன்றும் எண்ணங்களை எழுத்தாகக் கோத்துக்கொண்டே வருவேன்'' என்றார் லிங்கன்.

ஸ்ரீமதி ஃபிரான்ஸிஸ் குறுக்கிட்டு, ''ஆப், இவருக்கு முடிந்தவரை உதவி செய்வதுண்டு மேரி'' என்றாள்.

ஸ்பிரிங்ஃபீல்டில், லிங்கனை, 'ஆப்' என்ற முதற் பெயருடன் அன்பாக அழைப்பவர்கள் ஃபிரான்ஸிஸ் தம்பதி தான்.

''ஆமாம்; ஆப் எனக்கு மிகவும் உதவியாக இருக்கிறான். அவன் என் பத்திரிகையின் பக்கங்களை நிரப்ப, கட்டுரைகளும், கடிதங்களும் எழுதித் தருகிறான்.'' என்று ஒப்புக் கொண்டார் லிங்கன்.

''விக் கட்சி மட்டும் மாகாண சட்ட சபையில் பெரும் பான்மையான ஸ்தானங்களைப் பெற்றால், மத்தியச் சட்ட சபைக்கு இந்த மாகாணத்தின் பிரதிநிதியாக அவர் தான் தேர்ந்தெடுக்கப்படுவார் என்கிறார்களே; அது உண்மையா?'' என்று கேட்டாள் மேரி. கேட்டு விட்டு உளறி விட்டோமோ என்று கூச்சப் பட்டுக் கொண்டாள். ஆனால் லிங்கன் அதைக் கவனித்ததாகவே தெரியவில்லை. அவர் சொன்னார்: ''எல்லா வகையிலும் எங்கள் கட்சியில் அவன் தான் தலை சிறந்து விளங்குகிறான்.''

ஆனால் மேரி இதை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. ஏனென்றால் அவள், தன் சகோதரியின் கணவன் நினியன் எட்வர்ட்ஸ்தான் இல்லினாய்ஸ் விக் கட்சிக்காரர்களிடையே சிறந்து விளங்குவதாகக் கருதுபவள். அவள் தனது கனத்த கம்பளி மேல் கோட்டைக் கழற்றி வைத்தாள். உள்ளே

அணிந்து கொண்டிருந்த பச்சை நிறக் கவுன் கீழே சிந்தியிருந்த மையில் பட்டுக் கறையாகி விடாமல் தூக்கிப் பிடித்துக் கொண்டு முன் வாசல் ஜன்னலை நோக்கி நடந்து கொண்டே, ''எதனால் நீங்கள் லிங்கனே உயர்ந்தவர் என்று கருதுகிறீர்கள்? அவருடைய போக்கே எனக்குப் புதிராக இருக்கிறது. உண்மையில் அவர் எப்படிப்பட்டவர்?'' என்று கேட்டாள்.

ஸிமியனும் அவருடைய மனைவி எலிஸா ஃபிரான்ஸிஸ்ஸும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பிறகு எலிஸா கூறினாள்: ''1837 ஏப்ரல் மாதத்தில் ஒரு இரவில் குதிரை மீது ஏறி, ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்தான் ஆப். அவனுடைய சொத்து என்று சொல்லக்கூடியவை எல்லாம் அந்தக் குதிரையின் சேணப் பைக்குள்ளேயே அடங்கி விட்டன. படுத்துக் கொள்ள ஓர் இடம் பிடிக்கக் கூட அவனிடம் பணம் இல்லை. ஜோஷ் ஸ்பீடு தன் கடையில் இடமளிப்பதாகக் கூறியதும் ஆப் சொன்னானும்: 'நீ கேட்கிற வாடகை மிகக் குறைவானதுதான். ஆனால் அதைக் கொடுக்கக் கூட என்னிடம் இப்பொழுது பணம் கிடையாது. வரும் கிறிஸ்துமஸ்வரை பொறுத்துக் கொள். நான் ஆரம்பிக்கப் போகும் வக்கீல் தொழில் வெற்றிகரமாக நடந்தால் உன் வாடகைப் பணத்தைத் தந்து விடுவேன். ஆனால் அது வெற்றிகரமாக நடக்காவிட்டால் பிறகு நான் பணம் தரவே முடியாமல் போனாலும் போய் விடலாம்.' ஜோஷ் ஸ்பீடுக்கு, அவனுடைய துயரம் தோய்ந்த முகத்தைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்ததாம். ஆகையால் அவன் தன் அறையிலேயே ஆபுக்குப் படுக்க இடம் கொடுத்து வைத்துக் கொண்டிருக்கிறான்.''

''ஆமாம்; அவர் மிஸ்டர் பட்லரின் வீட்டில் பணம் கொடுக்காமல் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார் என்கிறார்களே; அது உண்மைதானா?'' என்று மேரி கேட்டாள்.

ஃபிரான்ஸிஸ் தம்பதிக்கு மேரி இப்படிக் கேட்டது வருத்தத்தை அளித்தது. இம்மாதிரிக் கேள்விகளை ஒருவர் கேட்கலாமா? ஆயினும் ஸிமியன் சாமர்த்தியமாக அவளுக்குப் பதில் கொடுத்தார்; ''மேரி, எல்லைப் பிராயத்தியத்திலிருக்கும் இந்த ஊரின் நிலைமை உனக்குத் தெரியாது. உங்களுடைய லெக்ஸிங்டனைப் போல் இங்கே நாங்கள் இன்னும் நிலை பெற்றுவிட வில்லை. ஆகையால் இவ்வூருக்கு வருகிற இளைஞர்களுக்கு உணவு முதலிய எல்லா வசதிகளையும் இலவசமாக செய்து தருகிறோம். இது இங்குள்ள வழக்கம். ஆப், பட்லர் வீட்டில் சாப்பிடுவதற்கு ஏன் பணம் கொடுக்க வில்லை யென்றால், பட்லர் தம்பதி தாங்கள் பணம் எதுவும் வாங்கிக் கொள்ள மாட்டோம் என்று

ஆரம்பத்திலேயே அவனிடம் கூறி விட்டார்கள். அவர்கள் அவனுடைய நண்பர்கள். நண்பன் ஒருவன் உன் வீட்டில் வந்து சாப்பிட்டால் நீ அதற்கு பணம் வாங்கிக் கொள் வாயா, மேரி? தவிர, ஆபின் வக்கீல் தொழில் வருவாய் பூராவும், காய்கறிகளாகவும், மளிகைச் சாமான்களாகவும், கோழி முதலிய பிராணிகளாகவுமே வருகின்றன. அவற்றை யெல்லாம் பட்லர் வீட்டுக்குத் தானே அவன் கொடுத்துக் கொண்டிருக்கிறான்?''

ஸிமியன் முடித்ததும், எலிஸா தொடர்ந்தாள்: ''உனக்குத் தெரியுமா மேரி? கட்சிக்காரரின் வழக்கு நியாயமானதென்று பட்டாலன்றி ஆப் எந்த வழக்கையும் ஏற்றுக்கொள்வது கிடையாது. அன்று ஒரு நாள் அவனிடம் ஒரு கட்சிக்காரன் வந்து தனது வழக்கு விவரத்தைக் கூறினான். அதைக் கேட்டதும் ஆப், 'சட்டப்படி உன் வழக்கு நல்லது தான்; ஆனால் அது நீதிக்குப் புறம்பானது. வேறு வக்கீல் யாரையாவது பார்த்துக் கொள். நீதிக்குப் புறம்பான வழக்குகளை நான் ஏற்றுக்கொள்வதில்லை' என்று கூறி அனுப்பி விட்டான். இன்னொரு சமயம் ஒரு மனிதன் ஆபிடம் ''என் வழக்கை நடத்த உங்கள் 'ஃபீஸ்' என்ன, மிஸ்டர் லிங்கன்?'' என்று கேட்டான். அதற்கு ஆப், 'எனக்கு ஃபீஸ் பத்து டாலர் தர வேண்டும். ஆனால் வழக்கை உங்களுக்குள்ளே ''ராசி'' செய்து கொண்டால் ஒன்றுமே செலவாகாதே!' என்றான். அப்புறம் என்ன? அவர்கள் 'ராசி'யாகப் போய் விட்டார்கள். ஆபுக்கு ஒரு வழக்குப் போயிற்று?''

இதை யெல்லாம் கேட்டதும் மேரி நினைத்துக்கொண் டாள்: ''அவர், பணம் என்பதே நடமாடாத ஓர் உல கத்தில் தாம் வாழ்ந்து வருவதாக நினைத்துக் கொண்டிருக் கிறார். அது நடக்காது என்பதை அப்பா அவருக்கு உணர்த்தி விடுவார்.''

ஸிமியன் ஃபிரான்ஸிஸ் மீண்டும் அச்சுக் கோக்கப் போனார், இரண்டொரு எழுத்துக்களைக் கோத்ததும் அவர் அதை அப்படியே வைத்து விட்டு, பேச்சை மீண்டும் ஆரம்பிக்க வந்தார்.

''நியூ ஸேலத்தில் ஆப் நடத்தி வந்த இரண்டு கடை களும் நஷ்டத்திலும், கடனிலும் மூழ்கி மூடப்பட்டன. அந்தக் கடைகளில் அவனுடைய கூட்டாளியாக இருந்த பெர்ரி என்பவன் கடன்களைத் தீர்க்கும் கவலையே இன்றி குடிகார னாகி விட்டான். கடைசியில் ஆப் முழுக் கடனை ஆயிரத்து நூறு டாலரையும் தானே கொடுத்துத் தீர்க்க வந்தான். அதைத் தனது 'தேசியக் கடன்' என்கிறான் அவன்!

இன்னும் அவன் அக்கடனைக் கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்துத் தீர்த்துக் கொண்டே வருகிறான். பெர்ரியின் கடனை அவன் தீர்க்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஒன்று மில்லை; இருந்தாலும், ஆப் தன் கூட்டாளியின் பொறுப்பையும் தானே ஏற்றுக்கொண்டான்.''

''இது பாராட்டப்பட வேண்டிய செய்கை தான். என் அப்பா கூட லெக்லிங்டனில் இம்மாதிரித்தான் தன் தொழில் பங்காளிகளின் பொறுப்புகளையும் கட்டிச் சுமக்க வேண்டியதாயிற்று'' என்றாள் மேரி.

''ஆபைப் பற்றி நானே, எலிஸாவோ புதிதாக எதுவும் சொல்வதற்கில்லை. இருந்தாலும் அந்த இளைஞனிடம் ஏதோ ஒரு புதுமை இருக்கத் தான் இருக்கிறது. அவனுடைய அறிவு புது மாதிரியில் ஜொலிக்கிறது. அதனால் தான் வாழ்க்கையில் அவன் மிகவும் உயர்ந்து விளங்குவான் என்று நாங்கள் நம்புகிறோம்.''

அவர்கள் இப்படிக் பேசிக் கொண்டிருக்கையில் கதவு தட்டப்பட்டது. லிங்கன் உள்ளே வந்தான்.

அவன் அவர்களை நோக்கிப் புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டே திறந்த கதவை மூடிக்கொண்டிருந்த போது, எலிஸா மேரியிடம் திரும்பி, ''இப்பொழுது தெரிந்து கொண்டாயா மேரி, ஆப்ரஹாம் எப்படிப்பட்டவன் என்பதை?'' என்று கேட்டாள்.

11

சட்டசபை அடுத்த கூட்டம் வரை ஒத்திப் போடப் பட்டது. உடனே ஸ்பிரிங்ஃபீல்டு ஊரே கிட்டத்தட்டக் காலியாகி விட்டது. அவளுடைய உறவினர், மற்றும் நண்பர் குழாத்தைச் சேர்ந்த ஆண்கள் எல்லோரும் வரப்போகும் தேர்தல் வேலையில் தீவிரமாக ஈடுபட்டு விட்டனர். லிங்கனும், ஸிமியன் ஃபிரான்ஸிஸ்ஸும் ''தி ஓல்டு ஸோல்ஜர்'' என்ற பெயருடன் ஒரு தேர்தல் பிரசாரப் பத்திரிகையைத் தொடங்கி, ஜனநாயகக் கட்சியைத் தாக்கி எழுத ஆரம்பித்தனர். இரண்டு வாரங்களுக்குப் பிறகு, ஸ்டீஃபன் ஏ. டக்ளஸ்ஸும், ''ரெஜிஸ்தர்'' பத்திரிகைக்காரர் களும் சேர்ந்து, ''ஓல்டு ஹிக்கரி'' என்ற பெயரில் ஒரு வாரப் பத்திரிகையை ஆரம்பித்து, விக் கட்சியின் குற்றச் சாட்டுகளுக்குப் பதில் விடுத்தனர். அவர்கள் அப்படிச் செய்தது சரியென்றே மேரி கருதினாள். ஆனால், ஒரு நாள் லிங்கனை சதுக்கத்தில் சந்தித்து, ஸ்டீஃபன் எழுதியிருந்த

தலையங்கத்தைப் பற்றி அபிப்பிராயம் கேட்டபோது, அவன் ஒரு கோணல் சிரிப்புச் சிரித்துவிட்டுச் சொன்னான் : '' டக்ளஸ் விஷயமாக பேசுவதே யில்லை என்று நாங்கள் ஒரு கொள்கை வைத்துக் கொண்டிருக்கிறோம். இம்மாதிரிச் சிறிய விஷயத்தை லட்சியம் செய்யாமல் நடந்துகொள்ளுவது நல்ல வழியில்லையா ?''

'' மிஸ்டர் லிங்கன் ! நீங்கள் இப்படிப் பேசுவது அழகா யில்லை. எந்த மனிதனின் குணாதிசயங்களையும், அவனுடைய உடல் வளர்ச்சியைக் கொண்டு தீர்மானிக்கக் கூடாது. அவன் டக்ளஸ்ஸைப் போல் குள்ளமானவனாக இருந்தாலும் சரி.....''

'' அல்லது என்னைப் போல் நெட்டையாக இருந்தாலும் சரி ; அப்படித்தானே ?.''

''உங்களைக் கடவுள் நெட்டையாகப் படைத்திருக்கிறார்; டக்ளஸ்ஸைக் குட்டையாகப் படைத்திருக்கிறார். அதற்கு என்ன ? மிஸ்டர் லிங்கன் ! நீங்கள் இதுவரை இம்மாதிரி ஒரு மனிதனைப் பற்றி இழிவாகப் பேசி நான் கேட்டதே யில்லையே ? இன்று ஏன் இப்படிப் பேசுகிறீர்கள் ?''

லிங்கனின் முகம் வாடிற்று. அவன் மெதுவான குரலில் கேட்டான் : '' என்னை யாராவது இப்படி இழிவாகப் பேசினால், நீ அவர்களைக் கடிந்து கொள்ளுவாயா மோலி ?''

'' நிச்சயமாக.''

'' வந்தனம் மோலி. இனி நான் டக்ளஸ்ஸைப் பற்றி இழிவாகப் பேசவே மாட்டேன். உண்மையில் அவன் எங்களைப் பார்த்து, பிரசாரத்துக்காக ஒரு வாரப் பத்திரிகையைத் தொடங்கியதும் சரிதான். ஏனென்றால், அவனுடைய அரசியல் ஸ்தாபனத் திட்டத்தை நான் ஏற்கனவே ' காப்பி ' யடித்திருக்கிறேன்.''

மார்ச் மாத ஆரம்பத்தில் ஸாங்கமன் சஞ்சாரக் கோர்ட், வழக்கு விசாரணைகளுக்காக இரண்டு வாரங்களுக்குத் திறக்கப்பட்டது. இல்லினாய்ஸ் மாகாணத்து வக்கீல்களில் பலர், தங்கள் கட்சிக்காரர்கள், சாட்சிகள், கூட்டு வக்கீல்கள் முதலியோருடன் ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்தனர். மேரி ஒரே ஒரு தடவைதான் கோர்ட் நடவடிக்கைகளை நேரில் பார்த்திருந்தாள். அது லெக்ஸிங்டனில் அடிமை ஒருவனை அடித்ததாகத் தொடரப்பட்டிருந்த வழக்கு. அவ்வழக்கில் அவளுடைய தந்தை ஜூரிகளில் ஒருவராக இருந்தார். அந்தத் தடவைக்குப் பிறகு அவள் கோர்ட்டுப் பக்கம் கூட போனதில்லை. போக அநுமதிக்கப்பட்ட தில்லை.

ஆனல் ஸ்பிரிங்ஃபீல்டில் கோர்ட்டு நடவடிக்கைகளைக் கவனிக்கப் பெண்கள் போவது சாதாரணமாகவே கருதப் பட்டு வந்தது. நினியன் எட்வர்ட்ஸ் நடத்த வேண்டி யிருந்த வழக்கு ஒன்றுமே இருக்க வில்லை. ' ஏன் அப்படி ?' என்று அவள் கேட்டபோது, '' வருகிற வழக்குகளெல் லாம் பயனற்றவையாக இருக்கின்றன. குறைந்த வரு வாய் அளிக்கும் வழக்குகளே நான் ஏற்றுக்கொள்ள விரும்ப வில்லை '' என்று அவன் கூறி விட்டான்.

கோர்ட்டுக்கான புதிய கட்டடம் இன்னும் தயாராக வில்லை. ஆகவே முன்பு நடந்த கிடங்குக் கட்டடத்திலேயே இத்தடவையும் கோர்ட்டு நடந்தது. இதன் உயரே தான் ஆப்ரஹாம் லிங்கனின் ஆபீஸ் இருந்தது. இதே இடத்தில் தான் முதல் முதலாக மேரி அவனைக் கண்டது. கோர்ட் கூடும் இடத்தில் வக்கீல்கள் பலர் நின்று கொண்டிருந்தனர். ஜட்ஜ் சாமுவேல் டிரீட் அருமை யான கறுப்பு ஸூட் அணிந்து கொண்டு வந்திருந்தார். பெண்களைக் கண்டு வெட்கப்படும் அவர், ஜட்ஜாக வீற் றிருந்தபோது அதற்கேற்ற தோரணையுடன் காணப்பட் டார். ஸ்டீஃபன் டக்ளஸ் தான் முதலில் ஆஜராஞன். சில நிமிஷங்களில் அவன் இரண்டு வழக்குகளைத் தனது கட்சிக்காரர்களுக்கு சாதகமாக ஜெயித்து விட்டான். அவ னைத் தொடர்ந்து எட்வர்ட் பேக்கர், ஸ்டீஃபன் லோகன், ஜேம்ஸ் காங்க்லிங் ஆகிய மூவரும் சில வழக்குகளைக் கொண்டு வந்து வெற்றி பெற்றனர். இடைவேளைக்குச் சிறிது நேரம் முன்னல் லிங்கனின் கேஸ் ஒன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மேரி தன் நாற்காலியி லிருந்து குனிந்து லிங்கனின் கட்சிக்காரன் எப்படிப் பட்ட வன் என்பதை நோக்கினுள். லிங்கன் தனது கட்சிக்காரரைக் கூண்டில் ஏற்றி, அவர் தமது தொழிலில் பங்காளியாக இருந்த பிரதிவாதிக்குப் பணம் கடன் கொடுத்ததற்கும், அதைப் பிரதிவாதி திருப்பித் தரவில்லை என்பதற்கும் வாக்கு மூலங்கள் வாங்கினுன். பிறகு பிரதிவாதி கூண்டில் ஏற்றப் பட்டார். அவருடைய வக்கீல், '' வாதியிடம் நீங்கள் வாங்கியிருந்த கடன் தொகையைத் திருப்பிக் கொடுத்து விட்டீர்களா ?'' என்று கேட்டார். '' ஆமாம் '' என்ருர் பிரதிவாதி. '' பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டதற்கு அத்தாட்சி ஏதாவது இருக்கிறதா ?'' '' இருக்கிறது '' என்று பிரதிவாதி கூறிவிட்டு, வாதியின் கையெழுத்திட்ட ரசீதை எடுத்துக் காட்டினுர். இதைக் கண்டதும் லிங்கன் தமது கட்சிக்காரருக்கு எதிரே போய் நின்று, '' இந்த ரசீது பிரதிவாதியிடம் இருப்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

'' தெரியும் மிஸ்டர் லிங்கன். ஆனால் அவர் அதை மறந்து விட்டாரென்று நினைத்தேன் '' என்றார் லிங்கனின் கட்சிக்காரர்.

லிங்கன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. தலையைத் தொங்க விட்டுக் கொண்டு கோர்ட்டை விட்டு வெளியே நடக்கலானான். மேரி பேராச்சரியம் அடைந்தாள். இது என்ன விசித்திர நடத்தை !

ஜட்ஜ் டிரீட் லிங்கனை விளித்து, '' மிஸ்டர் லிங்கன்! எங்கே போகிறீர்கள் ? வழக்கைத் தொடர்ந்து நடத்த விரும்ப வில்லையா ?'' என்று கேட்டார்.

லிங்கனின் முகம் வெளிறியிருந்தது. அவன் சொன்னான் : '' யுவர் ஆனர் ! இந்த வழக்கை நான் கை கழுவி விட்டேன்.''

மேரி, பாதி சந்தோஷமும், பாதி குழப்பமும் அடைந்த வளாகத் தன் ஆசனத்தில் சாய்ந்து கொண்டாள். '' பாவம் ! இத்தடவை கோர்ட்டு ஆரம்பித்ததும் லிங்கன் எடுத்துக் கொண்ட முதல் வழக்கு இப்படியா ஆக வேண்டும் ?'' இப்படி அவள் கூறிய போதிலும், அவனுடைய நேர்மையான குணத்தைப் பற்றி ஃபிரான்ஸிஸ் தம்பதி கூறியிருந்தது பொய்யாகி விட்டதைக் கண்டு மகிழ்ச்சி கொண்டாள்.

இடைவேளைக்குப் பிறகு மீண்டும் லிங்கனின் வழக்கு ஒன்று தான் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அது ஒரு மான-நஷ்ட வழக்கு. அதில் பிரதிவாதியின் சார்பில் லிங்கன் ஆஜரானான். வாதியைப் பிரதிவாதி தாக்கியதன் காரணமாக அவருக்கு நிரந்தரக் காயம் எதுவும் ஏற்பட்டு விடவில்லை என்பதை லிங்கன் ருசுப்படுத்த வேண்டிய கட்டம் வந்தது. வழக்கில் முக்கியமான சாட்சியாக இருந்தவர் இல்லினாய்ஸில் பிரபலமான ஒரு ரணவைத்தியர். அவர், வாதிக்கு ஏற்படுத்தப்பட்ட காயம் கடுமையானது என்று சாட்சியம் கொடுத்தார். லிங்கன் அவரை விழித்துப் பார்த்து விட்டு, தெளிவாக, வார்த்தை வார்த்தையாக நிறுத்திக் கேட்டான் ; '' டாக்டர் ! இந்த வழக்கில் வாதியின் காயத்துக்கு அத்தாட்சி கொடுக்க நீங்கள் எவ்வளவு பணம் பெற்றுக் கொள்ளுவீர்கள் ?''

ரண வைத்தியர் ஜட்ஜிடம் திரும்பி, '' யுவர் ஆனர் ! இந்தக் கேள்விக்கு நான் விடை சொல்ல வேண்டுமா ?'' என்று கேட்டார்.

'' ஆமாம் ; அது நியாயமான கேள்வி தான் '' என்றார் ஜட்ஜ் டிரீட்.

'' வாதியின் காயத்தின் தன்மையைப் பற்றி அத்தாட்சி கொடுப்பதற்கு என்னுடைய 'ஃபீஸ்' முந்நூறு டாலர் '' என்றார் ரண வைத்தியர்.

மேரி மற்றும் அங்கு கூடியிருந்தவர்கள் எல்லோர் கவனமும் லிங்கனிடம் திரும்பின. லிங்கன் தனது ஆள்காட்டி விரலை ரண வைத்தியரை நோக்கி நீட்டியவாறு, குரலில் வெறுப்பும் கோபமும் ஒருங்கே தொனிக்க, ''கனம் ஜூரி அவர்களே! கவனித்துக்கொள்ளுங்கள் பெரிய தொகை! அதனுல் பெரிய அத்தாட்சி!'' என்ருன்.

இறுதியில் அந்த வழக்கில் லிங்கனின் கட்சிக்காரர் விடுதலை செய்யப்பட்டார்.

நான்கு நாட்களுக்குப் பிறகு மற்ருெரு வழக்கு விசாரணைக்கு வந்தது. அது நகர மக்கள் அனைவரையும் பரபரப்படையச் செய்திருந்த வழக்கு. மேரி, மெர்ஸிலிவிங், ஜூலியா ஜேன் மூவரும் கோர்ட்டுக்கு வரச் சிறிது தாமதமாகி விட்டது. கோர்ட்டில் ஒரே கூட்டம். அவர்களுக்கு உட்கார இடம் கிடைக்க வில்லை. சுவர் ஓரமாக நின்று கொள்ள வேண்டியதாயிற்று. வழக்கின் விவரம் இது தான்: கடந்த ஆகஸ்டு மாதத்தில் ஹென்ரி லாக்வுட் என்ற ஒருவர் ஒரு மூகாமில் சுட்டுக் கொல்லப்பட்டார். ஸோவைன் என்ற சாட்சி ஷெரிப்பிடம் சென்று, கிரேஸன் என்பவர் தான் ஹென்ரி லாக்வுட்டைச் சுட்டுக் கொன்றதாகச் சாட்சியம் கொடுத்திருந்தார். கிரேஸனின் தாயார், பெரிய வக்கீலை அமர்த்தித் தனது மகனின் வழக்கை நடத்தவே விரும்பினுள். ஆனுல் அவளிடம் அதற்குப் போதிய பணமில்லாததால் லிங்கனிடம் வந்திருந்தாள்.

சர்க்கார் தரப்பில் வழக்கை நடத்திய பிராஸிகியூட்டர் ஸோவைனைக் கூண்டில் ஏற்றிச் சாட்சியம் கூறச் செய்தார். கிரேஸன், ஹென்ரி லாக்வுட்டைச் சுட்டு விட்டு ஓடிப்போனதைத் தாம் பார்த்ததாகவும், தாம் ஓடிச்சென்று லாக்வுட்டைத் தூக்கியதும் அவர் மரணமடைந்ததாகவும் சாட்சியம் கொடுத்தார் ஸோவைன்.

வழக்கு மிக மோசமானதாகக் காணப்பட்டது. ஸோவைன் சாட்சியம் கொடுத்த போது லிங்கன் அசிரத்தையாக அமர்ந்திருந்ததையும், அவருடைய சாட்சியத்தின் எந்தப் பகுதியும் முரணுனது என்று தடை செய்யாததையும் மேரி கவனித்தாள். பிராஸிகியூட்டர் தமது விசாரணையை முடித்துக் கொண்டதும், லிங்கன் நாற்காலியிலிருந்து எழுந்தான்.

''மிஸ்டர் ஸோவைன்! கொலை நடந்த சமயத்தில் நீங்கள் லாக்வுட்டுடன் இருந்ததாகவும், அவர் சுடப்பட்டதைப் பார்த்ததாகவும் கூறினீர்கள். நீங்கள் அப்பொழுது அவர்களுக்கு அருகில்தான் நின்று கொண்டிருந்தீர்களா?''

'' அருகில் இல்லை. மரங்களுக்கு இடையே நின்று கொண்டிருந்தேன்.''

'' என்ன மரங்கள் அவை ?''

'' புங்க மரங்கள்.''

'' புங்க மரங்கள் ஆகஸ்டு மாசத்தில் இலை அடர்ந்து இருக்கும் அல்லவா ?''

'' ஆமாம்.''

'' சரி ; லாக்வுட்டும் கிரேஸனும் இருந்த இடத்தில் மெழுகுவத்தி ஏதேனும் எரிந்துகொண்டிருந்ததா ?''

'' இல்லை.''

'' பின் எப்படி நீங்கள் லாக்வுட் சுடப்பட்டதைப் பார்த்தீர்கள் ?''

'' நிலவு வெளிச்சத்தில்.''

லிங்கன் உடனே தனது கோட்டுப் பையில் கையை விட்டு ஒரு சிறிய புத்தகத்தை எடுத்து, அதில் ஒரு பக்கத் தைத் திருப்பி, கோர்ட்டாரிடம் சாட்சியமாகக் கொடுத் தான். ஜட்ஜ் அப்புத்தகத்தைப் பார்த்து விட்டுத் திருப்பிக் கொடுத்ததும் லிங்கன், '' இந்தப் பஞ்சாங்கம் ஸ்பிரிங்ஃபீல் டிலும், இல்லினாய்ஸ் மாகாணத்திலும் அரசாங்கத்தால் உபயோகிக்கப் படுவது. இதன்படி ஆகஸ்டு ஒன்பதாம் தேதி கொலை நடந்த சமயம் நிலவே இருந்திருக்க முடியாது. ஏனென்றால், அன்றிரவு ஒரு மணிக்குத் தான் சந்திரோ தயம்.'' என்றான்.

இறுதியில் சாட்சியாகக் கூண்டிலேறி நின்ற ஸோவைன், தானே லாக்வுட்டைச் சுட்டுக் கொன்றதாக ஒப்புக் கொண் டான்.

' மோசமான வழக்குகளுக்கு லிங்கனைப்போன்ற மோச மான வக்கீல் வேறு கிடையாது என்று அன்று நினியன் எப்படிச் சொன்னான் ? அப்படி ஒன்றும் அவர் மோசமான வழக்குகளை மேலும் மோசமாக்க வில்லையே ? அவரையே ஏமாற்ற முயன்ற கட்சிக்காரர்களின் வழக்குகளைத்தானே அவர் மோசமாக்கினார் ; அதாவது அவருடைய வார்த்தை களிலே சொல்வதானால் கையைக் கழுவி விட்டார் ' என்று நினைத்துக்கொண்டாள் மேரி.

சஞ்சாரக் கோர்ட் மூடிற்றோ இல்லையோ, ஸ்பிரிங் ஃபீல்டின் வக்கீல் கூட்டமும் வடிந்து விட்டது. ஆனால் கோர்ட் மூடப்பட்ட உடனே ஸ்பிரிங்ஃபீல்டில் ஒரு புயல் வீச ஆரம் பித்தது. அந்தப் புயலில் டாடு குடும்பத்தினர்தான் சிக்கிக் கொண்டிருந்தனர்.

1837-இல், மேரி முதல் தடவையாக ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்திருந்த போது, கெண்டக்கி மாகாணத்தைச் சேர்ந்த அவளுடைய பெரியப்பா மகன் லூஸி ஹார்டினும் அவன் கணவன் மார்க்கஸ் சின்னும் அருகிலிருந்த ஜாக்ஸன்வில்லில் குடியேறினர். அவர்கள் வரும்போது கெண்டக்கியிலிருந்து இரண்டு அடிமைகளையும் கூட்டி வந்திருந்தனர். 1818-இல் வகுக்கப்பட்ட இல்லினாய்ஸ் மாகாண அரசியல் சட்டப்படி அம்மாகாணத்தில் யாரும் அடிமைகளை வைத்துக் கொள்ளக் கூடாது. ஆகையால், அடிமைப் பழக்கத்தை எதிர்த்து வந்த சில ஜாக்ஸன்வில்காரர்கள் அந்த இரண்டு நீக்ரோ அடிமைகளும் சுதந்திர மனிதர்கள் என்று கூறி அவர்களைத் தங்கள் வீட்டில் ஒளித்து வைத்துக் கொண்டு விட்டனர். ஆனால் சின் தம்பதிகள், அவர்களில் ஆண் அடிமையைப் பிடித்து, அவனை விற்பனைக்காக அடுத்த மாகாணத்துக்கு அனுப்பி விட்டனர். பெண் அடிமை, இல்லினாய்ஸ் அரசியல் சட்டப்படி தான் சுதந்திரமானவள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒரு வழக்குத் தொடுத்திருந்தாள். ஜாக்ஸன்வில்லில் அடிமைப் பழக்கத்தை எதிர்க்கும் கிளர்ச்சி அதிகமாக இருந்ததால், அவ்வூர் ஜட்ஜ், இந்த வழக்கை மாகாணத் தலை நகருக்கு மாற்றி விட்டிருந்தார்.

லூஸி சின்னின் சார்பில், ஸ்டீஃபன் டி லோகன் இந்த வழக்கை நடத்தப் போகிறானென்று நினியன் சொன்னான். ஆனால் மேரியால் அதை நம்பவே முடியவில்லை. அடுத்த தடவை அவன் வீட்டுக்குப் போயிருந்தபோது அவள் இது பற்றிக் கேட்டாள்; ''ஸ்டீவ்! என்னதான் லூஸி சின் நமக்கு சொந்தக்காரியாக இருந்த போதிலும், நீ அவள் சார்பில் இந்த வழக்கை நடத்த ஒப்புக்கொண்டிருப்பது கொஞ்சங்கூட நன்றாக இல்லை. அடிமைகள் வைத்துக் கொள்வதை இம்மாகாணத்தில் சட்டபூர்வமாக்குவது உன் நோக்கமல்ல என்று நான் நினைக்கிறேன்.''

''இல்லை மேரி; அது என் நோக்கமல்ல. ஆனால் ஒவ்வொருவருக்கும் தங்களையும் தங்கள் சொத்துக்களையும் பாதுகாத்துக்கொள்ள உரிமை இருக்கிறது. அடிமைப் பிரச்னை சரியானபடி தீர்க்கப்பட வேண்டுமென்றால், வழக்கு சம்பந்தப்பட்ட இரு கட்சி வாக்குமூலங்களும் மிகவும் கவனமாகச் சமர்ப்பிக்கப் படவேண்டும்.''

''ஆனால் நீ அடிமைத் தொழிலை ஆதரிக்கும் கட்சிக்காக வாதாடினால், நீயும் அதை ஆதரிப்பதாகத்தானே மக்கள் கருதுவார்கள்?''

''நான் அப்படி நினைக்க வில்லை மேரி. தங்கள் கட்சிக்காரர்களின் கொள்கைகள் தான் வக்கீல்களின் கொள்கை

களாகவும் இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. உண்மையில் அப்படி இருக்கவும் முடியாது. வக்கீல் கோர்ட்டின் ஓர் அதிகாரி. வழக்கில், சட்டம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் எல்லாவற்றையும் வெளிக்கொண்டு வருவது அவருடைய வேலை. அவ்வாறே நான் என் வேலையைப் பூரணமாகவும், விருப்பு-வெறுப்பு இன்றியும் செய்யப் போகிறேன்; அவ்வளவு தான்.''

அன்றிரவு சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் தங்களிடையே நடந்த சம்பாஷணையை மேரி, எலிஸபெத்திடமும் நினியனிடமும் கூறினாள். நினியன் அதைக் கவனமாகக் கேட்டு விட்டுப் பிறகு சொன்னான்: ''சின் தம்பதிகளுக்கு வழக்காட உரிமையிருக்கிறது. ஆகையால் அவர்கள் கட்சியை எடுத்துச் சொல்லும் பணியை யாராவது ஒரு வக்கீல் ஏற்றுக் கொண்டு தானே ஆக வேண்டும்? இல்லினாய்ஸிலே நன்கு பயிற்சி பெற்ற வக்கீலான ஸ்டீவ் அவர்கள் கட்சியை வாதாட முன்வந்திருப்பது நல்லது தான். சின் தம்பதிகளும், அவர்களுடைய வக்கீல் ஸ்டீவும் இந்த வழக்கில் தோற்று விட்டார்களானால், அடிமைகளின் சுதந்திரத்துக்கு அசைக்க முடியாத சான்று ஏற்பட்டு விடும்.''

''ஆனால் ஸ்டீவ் இந்த வழக்கை ஜெயித்து விட்டால், ஆயிரக்கணக்கான தெற்கத்திக் குடும்பத்தினர், தங்கள் அடிமைகளுடன் இல்லினாய்ஸில் குடியேறி விடுவார்களே? பிறகு நமது மாகாணம் அடிமைத் தொழிலை ஆதரிப்பதாக அல்லவா ஆகிவிடும்?''

''அவன் அப்படி ஜெயித்து விடமாட்டான்: அந்த நீக்ரோப் பெண்ணுக்காக நான் ஆஜராகப் போகிறேன்'' என்றான் நினியன்.

மேரி திகைப்பினால் அப்படியே வாயைப் பிளந்துவிட்டாள். இவரையா நெஞ்சிரக்கமற்ற பிரபு வம்சத்துக்காரர் என்று மக்கள் கூறுகிறார்கள்? தான் கேட்ட அளவு 'ஃபீஸ்' தர எவரும் முன்வராத காரணத்தால் சென்ற தடவை கோர்ட் நடந்தபோது இவர் ஒரு வழக்கைக் கூட ஏற்றுக் கொள்ள வில்லை; இப்பொழுது ஃபீஸே இல்லாத கேஸ் ஒன்றை ஏற்றுக்கொண்டிருக்கிறார்! அவள் எழுந்து சென்று நினியனின் கன்னத்தில் அன்புடன் முத்தமிட்டு விட்டு, எலிஸபெத்திடம் திரும்பி, ''நீ பாக்கியசாலி லிஸ்; பெருமைப்பட வேண்டிய ஒருவரைக் கணவராகப் பெற்றிருக்கிறாய்'' என்றாள்.

மறு நாள் அவள் ஸ்டீஃபன் டக்ளஸ்ஸையும், ஆப்ரஹாம் லிங்கனையும் தேநீருக்கு அழைத்தாள்.

அவ்விருவரையும் தனியாகச் சந்திக்கும் வாய்ப்பு இப் பொழுதுதான் அவளுக்குக் கிட்டிற்று. தேநீர் பருகிக்

கொண்டே அவர்கள் இருவரும் தாங்கள் ஆஜராக இருந்த ஒரு கொலை வழக்கைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அப்பேச்சிலிருந்து அவ்விருவரின் குண பாவங்களையும் மேரி கிரகித்துக் கொள்ள முடிந்தது. அவள், சின் தம்பதியின் அடிமை வழக்கைப் பற்றி லோகனிடமும், நினியனிடமும் தான் நிகழ்த்திய சம்பாஷணையை விவரித்து விட்டு, ''இந்த வழக்கைப் பற்றி உங்கள் இருவரின் கருத்து என்ன?'' என்று வினவினாள்.

டக்ளஸ் பளிச்சென்று பதில் கொடுத்தான். ''நீ கேட்பது அசட்டுக் கேள்வி மேரி; வக்கீல் தொழில் என்பது என்ன வென்று தெரியாதவர்கள் கேட்கும் கேள்வி. லோகன் கூறியது சரியே. நான் அடிமைப்படுத்துவதை எதிர்ப்பவன் தான்: அடிமைகளை வாங்கவும் மாட்டேன்; யாராவது இனாமாகக் கொடுத்தால் கூட ஏற்றுக்கொள்ளவும் மாட்டேன். இருந்தாலும் சின் தம்பதி என்னிடம் வந்து எங்கள் சொத்து பறிபோனதற்கு வழக்காட வேண்டும் என்று கேட்டிருந்தால் மறுத்திருக்கமாட்டேன். வழக்கை ஏற்றுக்கொண்டு என் சாமர்த்தியத்தை எல்லாம் காட்டி அதை நடத்தியே இருப்பேன்.''

மேரி இப்பொழுது லிங்கனிடம் திரும்பி ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள் மிஸ்டர் லிங்கன்? லோகன் இப்படி செய்திருப்பது நியாயம் என்று நீங்களும் கருதுகிறீர்களா?'' என்று கேட்டாள்.

டக்ளஸ்ஸைப்போல் லிங்கன் சட்டென்று பதிலளிக்க வில்லை. அவன் முகத்தில் ஆழ்ந்த விசனம் தேங்கி யிருப்பதை மேரியால் காண முடிந்தது. சிறிது நேரத்துக்குப் பிறகு அவன் கண்களைத் தாழ்த்திக் கொண்டு, ''நான் அடிமைப் படுத்துவதை எவ்வகையிலும் ஆதரிக்க மாட்டேன். என்னுடைய கருத்தில் அது மகத்தான அநியாயம்; கெட்ட பழக்கம். வெள்ளையர்கள் சுதந்திர மனிதர்களாக விளங்கலாம்; கறுப்பர்களான நீக்ரோக்கள் கூடாது; இதில் தான் அடிமைத்தனத்தின் முழுச் சோகமும் அடங்கி யிருக்கிறது. சுதந்திர நாட்டில் அடிமைப் பழக்கத்தைக் கொண்டுவர விரும்புகிறவர்களுக்குச் சாதகமாக வழக்காட வேண்டியதை வக்கீல் தொழிலின் கடமை என்று நான் ஒரு போதும் கருத மாட்டேன்.''

''தீவிர வாதிகளான நீங்கள் இருவரும் என்னை மன்னிக்க வேண்டும். நான் 'ரெஜிஸ்டர்' பத்திரிகாலயத்துக்குப் போய் இவ்வாரத்துத் தலையங்கத்தைச் சரிபார்க்க வேண்டியிருக்கிறது; வருகிறேன்'' என்று விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டான், டக்ளஸ்.

அவன் போன பிறகு மேரியும், லிங்கனும் தங்கள் நாற்காலிகளை நெருக்கிப் போட்டுக்கொண்டு பேச ஆரம்பித்தனர்.

லிங்கன் மெதுவான குரலில் சொன்னான் : ''நான் ஒன்றும் அப்படித் தீவிரவாதி இல்லை, மோலி. அடிமை முறையை அநுமதிக்கும் மாகாணங்களில், அடிமைகளின் பேரில் அவர்களுடைய எஜமானர்களுக்குப் பூரண உரிமை உண்டு என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அநேக இடங்களில், அடிமைத் தனத்தை ஒழிக்க முன்வந்திருக்கும் தீவிர வாதிகளை, எஜமானர்களை அடிமைகளுக்கு எதிராகத் திருப்பி விட்டு, அந்தப் பேதைகளின் துயரத்தை அதிகப் படுத்தி யிருப்பதை நான் அறிவேன்.'' அவன் ஒரு நிமிஷம் நிறுத்தி விட்டு, மேரியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே தொடர்ந்தான் : ''நான் அடிமை முறை நிலவும் மாகாணத்தில் வசித்ததே இல்லை. உண்மையில், மிஸ்ஸிஸிப்பி நதி வழியாக நியூ ஆர்லியன்ஸுக்கு இரண்டொரு தடவை போயிருந்தபோதுதான், இந்தக்கண்ணராவியைக் கண்டிருக்கிறேன். அடிமைகளை அடக்கி ஆண்டு கொண்டு வாழ்வது எப்படி இருக்கும் ? சொல் மோலி.''

அவள் தன் நினைவுகளைக் கோவைப்படுத்திக் கொள்ளச் சிறிது நேரமாயிற்று. பிறகு சொன்னாள் : ''குழந்தைப் பிராயத்தில் அது என்னவோ மிகச் சாதாரணமாகவே இருந்தது. எங்கள் வீட்டிலுள்ள அடிமை வேலைக்காரி ஸாலி, என் சொந்தத் தாயை விட எங்களிடம் பாசம் கொண்டவள். நாங்களும் அப்படித்தான். எங்கள் வீட்டிலுள்ள அடிமைகள் அனைவரையும் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே கருதியிருக்கிறோம். வீட்டுக் குழந்தைகளாகிய எங்களை விட அவர்களுக்கு அதிகச் சலுகைகள் உண்டு. எங்களுடைய மிகப் பெரிய குடும்பத்திலும் சரி ; எங்கள் நண்பர்களின் எஸ்டேட்டுகளிலும் சரி ; நீக்ரோக்கள் அன்புடன் தான் நடத்தப்படுகிறார்கள். கறுப்பு நிறத்தவருக்கும் வெள்ளையருக்கும் இடையே எங்களைப் பொறுத்த வரை ஒரு பாச உணர்ச்சியே நிலவி வருகிறது. என்னுடைய எட்டாவது வயசில் டாக்டர் வார்டின் கல்லூரியில் படிக்கப்போகும் வரை, அடிமைகளைக் கொடுமைப்படுத்தும் எஜமானர்கள் உண்டு என்பதே எனக்குத் தெரியாது.''

பிறகு அவள், முதல் தடவையாக தங்கள் ஊர் கோர்ட்டுக் கட்டடச் சதுக்கத்தில் ஒரு நீக்ரோ அடிமையும், அடிமைப் பெண்ணும் கசையடி பட்டதைக் கண்டு மனம் கலங்கியது; மெயின் தெருவிலுள்ள தங்கள் வீட்டு வாசல் வழியே அடிமைகள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு நடத்திச் செல்லப்பட்டது; ஏலம் கூறும் மேடையில் ஓர் அடிமைக் குடும்பத்தினர் தனித்

தனியே ஏலம் விடப்பட்டு, தொலை தூரப் பிரதேசங்களுக்கு பிரித்து அனுப்பப்பட்டது ; தங்கள் வீட்டுக்கு அருகில் வசித்து வந்த ஸ்ரீமதி டர்னர் என்பவள் ஒருநாள் ஒரு நீக்ரோக் குழந்தையை தன் வீட்டு இரண்டாம் மாடியி லிருந்து தெருவில் வீசிக் கொன்றது முதலிய பல சம்பவங் களைக் கூறினாள். இறுதியாக, தான் லெக்ஸிங்டனை விட்டு வருமுன்பு தன் தந்தை மற்றொருவரின் அடிமைகளை ஏலத் தில் விற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு விரட்டப்பட் டதையும், அப்பொழுது காஸியஸ் கிளே, ''உலகில் அடி யோடு ஒழிக்கப்பட வேண்டிய தீமைகளில் அடிமை முறை ஒன்று ; அடிமை முறையை எவ்விதத்தில் ஆதரித்தாலும், அது அம்முறையை முழுவதும் ஆதரிப்பதற்கு அடையா ளமாகவே ஆகும்'' என்று கூறியதையும் சொன்னாள்.

''என் தந்தையும், உங்களைப்போலவே அடிமை முறையை ஒழிக்கக் கிளம்பி யிருக்கும் தீவிர வாதிகளை ஆதரிக்காதவர் தான். ஏனென்றால், அவர்கள் தங்களுக்கு இருக்கும் தீவிரத்தில், ஐம்பது வருடங்களாய் நீக்ரோக்களின் நன்மைக் காக மற்றவர்கள் செய்து வந்த சேவைகளை நாசமாக்கி விடுவதை அவர் கண்டிருக்கிறார். நீக்ரோக்களுக்கு குடியேற்ற அந்தஸ்துக் கிடைக்கச் செய்ய அவர் உழைத்துக் கொண் டிருக்கிறார்.''

''ஆம், நான் கூட அப்படிச் செய்வதைத்தான் பலமாக ஆதரிக்கிறேன்.''

'' மற்றும் நீக்ரோ அடிமைகளின் குழந்தைகள் இருபத் தோரு வயசை அடைந்ததும் அவர்களுக்கு விடுதலை அளித்து விட வேண்டும் ; அப்படிச் செய்து வந்தால் நாளடைவில் அடிமைத்தனம் மறைந்து விடும் என்றும் அவர் கருதுகிறார். அடிமைத் தனத்தை, உடனே ஒழித்து விடத் துடித்துக் கொண்டிருக்கும் நண்பன் காஸியஸ் கிளேயைப் போன்ற பலர் எங்கள் ஊரில் இருக்கிறார்கள். காஸியஸ் கிளே இந்தப் பணிக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக் கிறான். அவன் சக்தி வாய்ந்தவன். அசாத்தியத் துணிவும், உடற்பலமும், அறிவும் உடையவன். உலகில் ஓர் அடிமை கூட இல்லை என்று ஆகும் வரை அவன் ஓயமாட்டான்.''

லிங்கன் மோவாயைத் தாழ்த்திக் கொண்டு மூக்குக் கண்ணாடிக்கு மேலாகப் பார்ப்பது போல் மேரியைப் பார்த் தான். பிறகு, ''மோலி ! உனக்கு அந்த காஸியஸ் கிளே என்பவனைப் பிடித்திருக்கிறதா ?'' என்று கேட்டான்.

'' பிடிக்கிறதாவா ? நான் வளர்ந்து மணப் பிராயத்தை அடைவதற்குள் அவனை மணந்து கொண்டு விட்ட மேரி ஜான் வார்ஃபீல்டை என் உயிருள்ளவரை மன்னிக்கவே மாட் டேன்.'' என்றாள் அவள்.

அந்த வருஷம் வசந்தகாலம் சற்று முன்னதாக ஏப்ரல் மாசத்திலேயே தொடங்கிவிட்டது. ஸ்பிரிங்ஃபீல்டின் இளம் வக்கீல்கள் அனைவரும், அவ்வருஷத் தேர்தல் பிரசார வேலையில் ஈடுபட்டனர். அவ்வருஷம் சட்டசபைத் தேர்தலும், ஜனாதிபதித் தேர்தலும் நடைபெற இருந்தன. மேரியின் நண்பர்களில் பெரும்பாலோர் தேர்தல் வேலையாக ஜாக்ஸன்வில், கார்லின்வில், ஆல்டன் பென்வில், ட்ரேமண்ட், புளூமிங்டன், பாண்டியாக், க்ளிண்டன், பீட்டர்ஸ்பெர்க் போன்ற இடங்களுக்குப் போவதும், திரும்பி ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்து இரண்டொரு நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்டு மீண்டும் போவதுமாக இருந்தனர்.

அவர்கள் எல்லோரிலும் ஸ்டீஃபன் டக்ளஸ்தான், இத்தனைத் தடபுடல்களுக்கும் இடையில் மேரியை மறந்து விடாது இருந்தான். அவன் எங்கேயாவது வெளியூர் போவதாக இருந்தால் அவளிடம் விடை பெற்றுச்செல்ல வருவான். பிறகு திரும்பி வரும்போது, அவளுக்கு ஒரு கைக்குட்டையோ, ஏதாவது வாசனைத் திரவியங்களோ வாங்கி வந்து வெகுமதி அளிப்பான். மேரிக்கு மாத்திரமல்ல; ஜூலியா ஜேன், ஸாரா டன்லப் போன்ற இன்னும் சிலருக்கும், அவன் இவ்வாறே வெகுமதிப் பொருள்கள் வாங்கி வந்து கொடுப்பான்.

இப்படித் தங்கள் நண்பர்கள் எல்லோரும் ஊரில் இல்லாது போனதால், மேரியும் அவளுடைய தோழிகளும் பொழுது போக்குக்காகப் பாதசாரிகள் சங்கம் என்று ஒன்றை ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும் அவர்கள், ஆளுக்கு ஒரு பலகாரக் கூடையுடன்கூடி, புல்வெளி வழியே கால்நடையாக வெகு தூரம் நடந்து செல்வார்கள். வழியில் தென்படும் காட்டு மலர்களைச் சேகரித்துக் கொள்ளுவார்கள். பிறகு ஏதாவது ஒரு மேடான இடத்துக்குப் போய், உச்சி வேளைச் சூரியனின் கிரணங்கள் முகத்தில் பட அமர்ந்து கொண்டு, கையில் கொண்டு வந்திருக்கும் உணவைப் புசித்து விட்டு, மாலையில் வீடு வந்து சேருவார்கள். இம்மாதிரிப் புளூகிராஸிலும், மேரியும் அவளுடைய தோழிகளும் செய்வதுண்டு. அன்று மேரி, இவ்வாறு வெளியே சென்று விட்டு வீடு திரும்பியதும், ஆடை மாற்றிக் கொண்டு சிகைக்கு எண்ணெய் தடவிக் கொள்ளத் தொடங்கினாள். வாலெஸ் அண்டு டில்லெர்ஸ் கடையில் வாங்கிய அந்த வாசனைத் தைலத்தை உபயோகிக்கத் தொடங்கிய பிறகு தனது கேசம் முன்னைவிடக் கறுத்துத் தனக்கு ஒரு விசேஷக் கவர்ச்சியை அளித்திருப்பதாக அவள் கருதினாள்.

அதோடு இதர ரோமத்தோடு சேராமல், தன் அழகையே கெடுத்து வருவதாகக் கருதியிருந்த பொன் நிற

ரோமக் கத்தையும் இப்பொழுது படிந்து வருவதை அவள் கவனித்தாள்.

அவள் சிறிது நேரம் ஏதாவது படித்தவாறு ஒய்வெடுத்துக்கொள்ளலாமென்று ஸ்மோலெட் எழுதிய ''ராட்ரிக் ராண்டமின் அருஞ்செயல்கள்'' என்ற புத்தகத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். அப்பொழுது வேலைக்காரி கீழே லிங்கன் காத்திருப்பதாக அறிவித்தாள். மேரி, விரித்துப் போட்டுக்கொண்டிருந்த தலையை சீவிப் பின்புறமாகக் கட்டி, இரண்டொரு கொண்டை ஊசிகளைச் சொருகிக்கொண்டு, ஒரு மெல்லிய சால்வையால் உடலைப் போர்த்தவாறு கீழே இறங்கிச் சென்றாள். ஸ்டீஃபன் டக்ளஸ்ஸைப் போல் லிங்கன், தான் வெளியூர் செல்லுவதையோ, அல்லது அங்கிருந்து திரும்பி விட்டதையோ, மேரிக்கு அறிவிக்க வந்தது கிடையாது. அவள் பொழுது போக்காகத் தனது நண்பர்களுக்குச் சீட்டு அனுப்பி இடை இடையே வீட்டுக்கு வரவழைப்பாள். அப்பொழுதுங்கூட லிங்கன் பெரும்பாலும் வர மாட்டான். ஆனால் அசந்தர்ப்பமான வேளைகளில், அவள் தையல் வேலையில் முனைந்திருக்கும் போதோ, அல்லது எலிஸபெத்தின் குழந்தைகளைக் குளிப்பாட்டிக் கொண்டிருப்பது போன்ற வேலைகளில் ஈடுபட்டிருக்கும் போதோ, இல்லா விட்டால் இப்பொழுது போல் சிறிது ஓய்வெடுத்துக் கொள்ள நினைக்கும் போதோ வந்து நிற்பான்.

லிங்கன் கீழே யிருந்த வரவேற்பு அறையில் முழங்கால்களின் மீது இரு கைகளையும் ஊன்றிக் கொண்டு, தலை முழங்கால்களில் இடிக்கும் படியாகக் குனிந்தவாறு அமர்ந்திருந்தான். அவன் தலையை நிமிர்த்தித் தன்னை நோக்குவானென்று மேரி சிறிது நேரம் அறையின் நடுவே நின்றாள். ஆனால் அவன் அசையாமல் அமர்ந்திருந்ததால், அவள் லேசாக இருமிக் கொண்டே அருகில் சென்றாள். லிங்கன் தலையை நிமிர்த்தி அவளைப் பார்த்த போது அவனுடைய இடது விழி மேலேறி, மாறு கண் உடையவனின் பார்வையைப் போல் தோற்றமளித்தது.

அவன் ஒரு விநாடி நேரம் அவளை நோக்கி விட்டுப் பிறகு தலையை மெதுவாகத் திருப்பி தான் எங்கிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளுபவன் போல் அறையைச் சுற்றிப் பார்க்கலானான்.

''மிஸ்டர் லிங்கன்! ஏன் ஒரு மாதிரியாக விழிக்கிறீர்கள்? உடல் நிலை சரியில்லையா?'' என்று கேட்டாள் மேரி.

''ஆமாம்; தலைவலி கொல்லுகிறது. அதன் வேதனையினால் கண்களையே திறக்க முடியவில்லை.''

''உங்கள் கண்களில் ஏதேனும் கோளாறு?''

அவன் சட்டென்று நாற்காலியிலிருந்து எழுந்து,'' என்ன கேட்டாய்?'' என்று வினவினான்.

''ஆமாம்; தலை வலியால் கண்களையே திறக்க முடிய வில்லை என்கிறீர்களே; அதனால்தான் கேட்டேன்.''

''இல்லை; என் கண்களில் கோளாறு ஒன்றுமில்லை.''

''ஜர்னல்,'' ''ரெஜிஸ்டர்'' போன்ற பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்படும் தலைவலி மருந்துகளை உபயோகித் துப்பார்த்தீர்களா?''

அவன் தளர்வுடன் சிரித்தான். ''அவை எல்லாம் வெறும் சாராயம், மோலி. ஒரு பாட்டில் சாப்பிட்டாயா னால் தலைவலி நிற்கும். ஆனால் மறு நாள் காலையில் பத்து மடங்கு அதிகமாக மீண்டும் தோன்றி விடும்.''

''அப்படியானால் கொஞ்சம் டீயாவது குடிக்கிறீர்களா? லெக்லிங்டனில் எங்கள் வீட்டில் உடல் ஒரு மாதிரியாக இருந்தால், நாங்கள் முதல் முதலில் டீதான் குடிப்போம்.''

''டீயா? என் வாழ்நாளிலே நான் அதை ஓரிரு தடவை தான் குடித்திருக்கிறேன். இருந்தாலும் தலைவலிக்கு அது நல்லதென்றால் கொஞ்சம் சாப்பிடுகிறேன்.''

மேரி 'ஸ்ட்ராங்'காக ஒரு கப் டீ தயாரித்து எடுத்து வந்தாள். அவன் அதை மெதுவாக உறிஞ்சிக் குடித்தான். தேநீர் குடித்த பின்பு தலைவலி குறைந்து விட்டது. அவன் அவளுக்கு வந்தனம் செலுத்தி விட்டு, ''நான் எங்கே வந்தி ருக்கிறேன் என்பதையே உன்னைக் கண்ட பிறகுதான் தெரிந்து கொண்டேன் மேரி; அத்தனை வேதனையுடன் தன் நினைவின் றியே தெருவோடு வந்து கொண்டிருந்தேன். அந்த நினைவு தெளிவற்ற நிலையிலும் சென்ற ஞாயிற்று கிழமை யன்று நீ காட்டு மலர்களைப் பறித்துத் தொப்பியிலிட்டுக் கொண்டு தலையிலும் சூடிக்கொண்டு சென்ற காட்சி என் மனக் கண் முன் நின்றது. பிறகு நான் நினைவுற்ற போது நீ என் எதிரே நின்றாய்'' என்றான்.

''நீங்கள் இங்கே வந்து சேர்ந்ததில் என்க்கு மிக்க மகிழ்ச்சி, மிஸ்டர் லிங்கன். உங்களுக்குத் தொல்லையோ வேதனையோ ஏற்படும் போதெல்லாம் தயவு செய்து இங்கே வந்து ஆறுதல் பெற்றுப் போங்கள். அதோடு நீங்கள் மகிழ்ச்சி யோடும் உற்சாகத்தோடும் இருக்கும் போதும் இங்கே வாருங்கள்; நானும் அதில் பங்கு கொள்கிறேன்.''

அவன் அந்தச் சொற்களின் உள்ளர்த்தத்தை உணர முயலுபவன் போல் மேரியை நோக்கினான். பிறகு அவனிடம் ஓர் இன்பமான புன்னகை மலர்ந்தது.

''ஆம்; இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு அளிக்க வேண்டியது நியாயந்தானே?'' என்றான் அவன்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை நன்றாக வெயில் காய்ந்தது. மாதா கோவிலுக்குப் போய் வந்த பின்னர், பிற்பகலில் பாதசாரிகள் சங்கக் காரிகைகள் எட்வேர்ட்ஸ் மாளிகையில் கூடி அங்கிருந்து ஐந்து மைல் தூரத்திலிருந்த ஒரு பண்ணைக்குச் சென்றனர். அன்று அவர்களுடன் பல இளைஞர்களும் சேர்ந்து கொள்ள இருந்தனர்.

லிங்கன் முடி வெட்டிக்கொண்டும் முகசுவரம் செய்து கொண்டும் நன்றாக அலங்கரித்துக் கொண்டும் எட்வர்ட்ஸ் மாளிகைக்கு வந்து சேர்ந்தான். மேரி அவனைப் புன்சிரிப்புடன் வரவேற்றாள்.

''அடேயப்பா! இன்றைக்கு உங்கள் அலங்காரம் பிரமாதம் மிஸ்டர் லிங்கன். இன்று எங்களுடன் வரப்போகும் இளைஞர்கள் எல்லோரிலும் நீங்கள் தான் நேர்த்தியான உடை அணிந்தவராக விளங்கப் போகிறீர்கள்'' என்றாள்.

''ஓ! நான் முடிவெட்டிக் கொண்டிருப்பதைத் தானே சொல்லுகிறாய்? அது கிராமத்து நாவிதனின் கைவேலை, மோலி. சில வருஷங்களுக்கு முன்பு நியூ ஸேலத்தில் ஒரு நாள் நான் பகல் முழுவதும் விறகு வெட்டும் வேலை செய்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு நீக்ரோ இளைஞன் என்னிடம் வந்து தான் ஒரு நாவிதன் என்றும், தனக்கு வேலை எதுவும் கிடைக்காது திண்டாடுவதாகவும் கூறினான். அவனை நான் தங்கியிருந்த வீட்டுக்கு அழைத்துப் போய் அங்கே இருந்தவர்களையெல்லாம் அவனிடம் க்ஷவரம் செய்து கொள்ளவும், முடி வெட்டிக் கொள்ளவும் செய்து அவன் கொஞ்ச நாள் கவலையின்றி வாழத்தக்க தொகையைச் சேகரித்துக் கொடுத்து இந்த ஊருக்குப் போகும்படி கூறி அனுப்பினேன். இன்று என்னை கவர்ச்சியாகத் தோன்றச் செய்திருப்பது அவனுடைய கைவண்ணந்தான்.''

''எதற்காக இப்படிச் சுற்றி வளைத்துப் பேசுகிறீர்கள், மிஸ்டர் லிங்கன்? என்னைக் கேட்டால் இதெல்லாம் வசந்த காலத்தின் விளைவு என்று தான் சொல்லுவேன்.''

அவன் முகத்தில் மகிழ்ச்சி ததும்பிற்று. ''நீ சொல்வதும் சரியாகவே இருக்கலாம் மோலி'' என்றான் அவன்.

அன்றையப் பகல் வேளை மிகவும் மனோகரமாக இருந்தது. மேரி குதிரைகளைப் போட்டுக் கொண்டு வயல்களிடையே உற்சாகமாக நடந்து சென்றாள். அவர்கள் எல்லோரும் குதிக்கால் உயர்ந்த பூட்ஸை அணிந்திருந்தனர். போகும் வழியில் புல் வெளியிலே பூத்திருந்த காட்டு மலர்களைப் பறித்துக்கொண்டும், மேப்பிள், எல்ம் போன்ற மரத்தின் கிளை

களைத் தொட்டுப் பிடிக்க முயன்று கொண்டும் நடந்து சென்றனர். மற்றப் பெண்கள் எல்லோரும், லிங்கனையும்; சாமுவேல் டிரீட்டையும் கவனிக்கவே வில்லை. ஆகையால் மேரி அவர்கள் கைகளைப் பிடித்துக் கொண்டு நடந்தாள். எல்லோரும் குறிப்பிட்ட பண்ணையை வந்தடைந்தனர். ஒரு பெரிய ஓக் மரத்தடியில் ஒரு மேஜை போடப்பட்டிருந்தது. அதன் மீது ஒரு துணியை விரித்து உணவுப் பொருள்களைப் பரப்பினர்.

சாப்பாடு முடிந்த பிறகு ஸ்டீஃபன் டக்ளஸ் பண்ணையின் முற்றத்தில் ஒரு பெரிய கோடரி கிடப்பதைப் பார்த்தான். ''இதை ஒரே கையால் தூக்கி நெட்டுக் குத்தலாக நிறுத்திப் பிடித்துக் கொள்ள யார் யாரால் முடிகிறது பார்க்கலாம்'' என்றான் அவன். அவனும், ஸ்பீடு, டிரீட், காங்ளிங், டிரம்புல், மாத்தெனி ஆகியோரும் இந்தப் பந்தயத்தில் கலந்து கொள்ள வந்தனர். ஆனால் கோடரியின் முனை மிகவும் கனமாக இருந்ததால், பலர் அதைத் தரையிலிருந்து தூக்கி விட்டபோதிலும் ஒரே கையினால் உயரே கொண்டு செல்ல முடியவில்லை. டக்ளஸ் ஒருவன் தான் கிட்டத் தட்ட இடுப்பளவு தூரம் அதைத் தூக்கினான். பிறகு அவனாலும் முடியவில்லை. கீழே போட்டுவிட்டான்.

அவர்கள் இம்முயற்சிகளில் ஈடுபட்டிருந்தபோது மேரி லிங்கனின் முகத்தையே நோக்கிக் கொண்டிருந்தாள். அவன் முகத்தில் ஒரு விசித்திரமான உணர்ச்சி காணப்பட்டது. எல்லோரும் அப்பந்தயத்தில் தோல்வியுற்றதும், அவள் லிங்கனிடம் திரும்பி, ''மிஸ்டர் லிங்கன்! நீங்கள் ஒருவர் தான் முயற்சி செய்து பார்க்கவில்லை. உங்களால் அதைத் தரையிலிருந்தாவது அசைக்க முடியுமா பாருங்களேன்'' என்றாள்.

''மோலி! என் வாழ்வின் முதல் இருபது வருடங்களை இது மாதிரி கோடரி பிடித்தே கழித்திருக்கிறேன். நான் வெட்டிப் போட்டிருக்கிற கிளைகளைக் கொண்டு அமெரிக்காவின் மேற்குப் பகுதி முழுவதும் வேலி பிடித்திருக்க முடியும், தெரியுமா?'' என்றான் அவன்.

''நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்கள். உங்களால் இந்தக் கோடரியைத் தரையிலிருந்து தூக்க முடியுமா?''

மற்ற இளைஞர்கள் லிங்கனை முயன்று பார்க்கும்படி வற்புறுத்தினர். லிங்கன் உணவு மேஜைக்கு நடந்து, தனது கோட்டு, காலர் முதலியவற்றைக் கழற்றி வைத்தான். பிறகு கோடரி இருக்கும் இடத்துக்குச் சென்று அதன் கைப்பிடி நேரே இருக்கும்படி முனையை லேசாகத் தரையில்

ஊன்றினான். பின்னர் சற்றுக் கீழே குனிந்து, கைப்பிடியை மெதுவாகப் பிடித்து கம்பீரமாக மேலே தூக்கி, நெட்டுக் குத்தலாக நிறுத்திக் காட்டினான்.

எல்லோரும் மகிழ்ச்சி பொங்கக் கை தட்டிய போது, அவன் தலையை லேசாக ஆட்டிக்கொண்டே, ''எப்பொழுது என் பலத்தைக் காட்ட இறங்கி விட்டேனோ, அப்பொழுது அதை முழுவதும் காட்டி விடுகிறேன். இங்கே இன்னொரு கோடரி கிடைக்குமா, பாருங்கள்'' என்றான்.

மற்றொரு கோடரி வந்தது. லிங்கன் முன்பு செய்தது போலவே அவ்விரண்டின் மூனைகளையும் தரையில் ஊன்றி லாவகமாக, ஒரே சமயத்தில் கைக்கு ஒன்றாக அவற்றையும் தூக்கி நிறுத்திக் காட்டினான்.

மேரி, இதுவரை இத்தனை உடல் வலிவுடையவர்களைக் கண்டதேயில்லை, லிங்கனின் மெல்லிய சட்டைக்கும், கனத்த கால் சட்டைக்கும் உள்ளே, பலம் பொருந்திய தசைகள் இருப்பதை அவள் ஊடுருவி நோக்கினாள். எந்த மரத்தடியில் அவன் தனது பலத்தை வெளிக்காட்டினானோ, அந்த ஓக் மரம் போல் அவன் நிற்பதையும், அதனுடைய நீண்ட கிளைகளைப்போல் அவனுடைய மெலிந்து நீண்ட கைகால்கள் இருப்பதையும் அவள் தெவிட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

லிங்கன், இரு கைகளிலும் இருந்த கோடரிகளைக் கீழே போட்டுவிட்டு, கைக்குட்டையை எடுத்து நெற்றியில் வழிந்த வேர்வையைத் துடைத்துக் கொண்டான். அவளுக்குத் தலையைச் சுற்றும் போல் இருந்தது. முகத்தை சட்டென்று திருப்பிக் கொண்டாள்.

ஃபிரான்ஸெஸ்ஸும், அவளுடைய கணவன் வில்லியம் வாலெஸ்ஸும் மேரியை ஒரு நாள் குளோப் ஹோட்டலுக்கு விருந்து சாப்பிட அழைத்திருந்தனர். அந்த ஹோட்டலின் சாப்பாட்டு ஹாலில் ஒரு மூலையில் அவர்கள் மூவரும் அமர்ந்து கொண்டனர். அப்பொழுது சட்ட சபை, கோர்ட் எல்லாம் மூடப்பட்டிருந்தும்கூட சுமார் நூறு ஆண் பெண்கள் அந்த ஹோட்டலில் நடுப்பகல் உணவு அருந்த வந்திருந்ததைக் கண்டு மேரி வியப்படைந்தாள். பரிமாறும் ஹோட்டல் சிப்பந்திகள், அங்கே வருவோர், போவோர், இப்படியாக ஹோட்டலில் ஒரே இரைச்சலாக இருந்தது. இத்தகைய இரைச்சல் நிறைந்த ஹோட்டலில் ஒரு வருஷத்துக்கும்மேலாக ஃபிரான்ஸெஸ் எப்படித்தான் பொறுமையுடன் வசித்து வருகிறாளோ என்று ஆச்சரிய முற்றாள் மேரி. அது பற்றி அவள் கேட்ட போது ஃபிரான்ஸெஸ் சொன்னாள்: ''உண்மையில் இந்த ஹோட்டல் வாழ்க்கையை நான் மிகவும் உற்சாக

மாகவே அநுபவித்து வருகிறேன் மேரி. வித விதமான மக்களோடு கலந்து பழகிக் கலகலப்பாக இருக்க, எனக்கு இந்த ஹோட்டல் வாழ்க்கைதான் கற்றுக் கொடுத்தது. நாம் மகிழ்ச்சியோடிருந்தால், பலரை மகிழ்விக்க முடியும் என்ற பாடத்தையும் இது தான் எனக்குப் போதித்தது.''

மேரி, டாக்டர் வாலெஸ்ஸைப் பற்றி நினைத்துக் கொண்டாள். அவனைக் கணவனாகத் தேர்ந்தெடுத்த ஃபிரான்ஸெஸ் எவ்வளவு கெட்டிக்காரி! அவனிடம் ஒரு தனித்த இனிமை காணப்பட்டது. தன்னுடைய தோழர்களைப்போல் அவன் அரசியல் வாதியுமல்ல; தர்க்க வாதியுமல்ல; அவனுக்கு அதிலெல்லாம் சுவையோ, அபிப்பிராயமோ கிடையாது என்பதில்லை. ஆனால் ஸ்பிரிங்ஃபீல்டில் நிலவும் அரசியல் பித்தையும், அரசியல் அடிதடிகளையும் அவன் சிறிதும் விரும்பவேயில்லை. தானுண்டு தன் காரியமுண்டு என்று இருந்து வந்தான் அவன்.

விருந்து முடியும் தறுவாயில் ஃபிரான்ஸெஸ் தன் தங்கையிடம். 'என்ன இருந்தாலும் மேரி, நாங்கள் இந்த ஹோட்டலை விட்டுப் போய்விடப் போகிறோம். டாக்டர் ஹெல்மின் வீட்டுக்கு அடுத்தாற்போல் நாங்கள் ஓர் அழகிய வீட்டை வாங்கியிருக்கிறோம். அடுத்த மாசத்தில் ஒரு சனிக்கிழமையன்று கிரகப்பிரவேச விருந்தளிக்கத் திட்டமிட்டிருக்கிறோம். அந்த விருந்துக்கு உனக்கு ஜோடியாக லிங்கனை அழைக்கட்டுமா?'' என்று கேட்டாள்.

மேரி, கையில் எடுத்த உணவு ஸ்பூனை அப்படியே கீழே வைத்தாள். ''ஃபிரான்ஸெஸ் ஏன் இப்படிக் கேட்கிறாள்? எனக்குத் தெரிந்தவரை நான் லிங்கனிடம் அப்படி ஒன்றும் விசேஷ அக்கறை காட்டியதில்லையே! ஒரு வேளை இவளாகவே நான் அவனை விரும்புவதாக நினைத்துக் கொண்டாளோ, என்று யோசித்தாள். பிறகு அவள் தன் தடுமாற்றத்தை மறைத்துக்கொண்டு, ''மற்றவர்கள் எல்லோரையும் விட்டு விட்டு ஏன் லிங்கனை எனக்கு ஜோடியாக அழைக்கட்டுமா என்று கேட்டாய் ஃபிரான்ஸெஸ்?'' என வினவினாள்.

''என்னைக் கேட்டிருந்தால் ஸ்டீவ் டக்ளஸ்ஸை ஜோடியாக அழைத்தால் மேரிக்குப் பிடித்திருக்கும் என்று தான் சொல்லியிருப்பேன்'' என்றான் டாக்டர் வாலெஸ்.

''இல்லை மேரி; உனக்கு லிங்கனிடம் விசேஷ அக்கறை ஏற்பட்டிருப்பதை நான் கவனித்தேன்'' என்றாள் ஃபிரான்ஸெஸ்.

தன் சகோதரி கூறுவது சரிதானே என்று தலையைச் சாய்த்துக் கொண்டே சிந்தித்தவாறு மேரி சொன்னாள்: ''ஆமாம். மிஸ்டர் லிங்கனிடம் எனக்கு அக்கறை ஏற்பட்டுத்

தான் இருக்கிறது. அதற்குக் காரணம் அவர் ஓர் அலாதி மனிதர் என்பது தான். எல்லா விஷயங்களிலும் மற்ற நண்பர்களைப்போலவே தான் நான் அவரையும் கருதுகிறேன். நீ அவரை உன் விருந்துக்கு அழை; ஆனால் எனக்காக அழைக்க வேண்டாம்.''

ஃபிரான்ஸெஸ்லின் கிருகப் பிரவேச விருந்து பிரமாதமான முறையில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. வீட்டின் பின்புறத்தில் நடனத்துக்காக ஒரு மேடை அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஸ்பிரிங்ஃபீல்டின் சிறந்த கோஷ்டி வாத்தியக் காரர்கள் இன்னிசை பொழிந்து கொண்டிருந்தனர். மேரியும் லிங்கனும் பேசிக்கொண்டிருக்கையில் மறுநாள் டாக்டர் ஹெளகனின் வீட்டுக்கு அவளைத் தன்னுடன் வருமாறு அழைத்தான் அவன். டாக்டர் ஹெளகனின் வீட்டில் அடுத்த வாரம் விக் கட்சியின் கூட்டம் ஒன்று நடக்க இருந்தது. லிங்கன் அக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தவர்களில் ஒருவன்; ஆதலால் அதற்கான காரியங்களைக் கவனிக்க மறுநாள் அங்கு போக வேண்டியிருந்தது. முதலில் தன்னுடன் மாதா கோவிலுக்கு வந்தால், பிறகு அவனுடன் டாக்டர் ஹெளகனின் வீட்டிற்கு வருவதாகக் கூறினாள் மேரி. லிங்கன் சிறிது தயங்கி விட்டுப் பிறகு உடன்பட்டான்.

''கூட்டம் என்றதும் நினைவு வருகிறது: பெல்வில்லில் விக் கட்சிக் கூட்டங்களை நீங்கள் மிக வெற்றிகரமாக நடத்தியதாகக் கேள்விப்பட்டேனே'' என்றாள் மேரி.

''இல்லை'' என்று நிராசையுடன் தலையசைத்தான் லிங்கன். ''உண்மையில் நான் அக்கூட்டங்களில் சிறிது கூட சோபிக்கவில்லை. வான் பூரன் போன்ற ஜனநாயகக் கட்சிக்காரர்களின் ஆட்சி நம்மைப் பொருளாதார நெருக்கடியில் கொண்டு விட்டதைப் பற்றி நான் ஒரு பெரிய பிரசங்கம் புரிந்தேன். அன்று ஒருவன் ஒரு குதிரையை இருபத்தைந்து டாலருக்கு விற்றான் என்று கேள்விப் பட்டிருந்தேன். ஆகவே நமது பொருளாதார நிலைமை எவ்வளவு மோசமாகிவிட்டது என்பதைக் கூட்டத்தினருக்கு எடுத்துக் காட்ட அச்சம்பவத்தை ஓர் உதாரணமாகக் கூறினேன். நான் என் பிரசங்கத்தைமுடித்தேனே இல்லையோ, குதிரையை விற்றவன் அக்கூட்டத்திலிருந்து எழுந்திருந்து, 'என் குதிரைக்கு ஒரு கண் பொட்டை. அதனால் தான் அதை இருபத்தைந்து டாலருக்கு விற்றேன்' என்று கூறினான். அவ்வளவுதான்; என் நீண்ட பிரசங்கத்துக்கு மதிப்பே இல்லாமல் போய் விட்டது.''

''ஆனால் ரெஜிஸ்டர் பத்திரிகையில் வெளியாயிருந்த செய்தி, உங்கள் பெல்வில் பிரசங்கம் தெளிவாகவும், சக்தி

வாய்ந்ததாகவும் பயனளிக்கக் கூடியதாகவும் இருந்ததென்று கூறிற்றே!'' என்றாள் அவள்.

அவன் முகத்தில் விசனம் மறைந்தது. ''ஆமாம்; அதெல்லாம் சும்மா மரியாதைக்கு'' என்றான்.

மறு நாள் அவர்கள் மாதாகோவிலிலிருந்து டாக்டர் ஹெளகனின் மாளிகையை நோக்கி நடந்து கொண்டிருந்த போது, அவளோடு மாதா கோவிலுக்கு வந்ததில் தனக்கு எவ்விதத் தொந்தரவும் ஏற்பட வில்லை என்றும், பாதிரி புரிந்த பிரார்த்தனைப் பிரசங்கந்தான் சிறிது அடக்கமாக இருந்ததென்றும் கூறி விட்டு, ''ஒரு மனிதன் மதப்பிரசங்கம் செய்கையில் சிங்கநாதம் புரிய வேண்டாமா?'' என்றான் லிங்கன்.

இப்படிப் பேசிக்கொண்டே அவர்கள் கை கோத்து நடந்து கொண்டிருந்தார்கள். லிங்கனின் நெடிய உருவத்தின் முன் மேரி மிகக் குள்ளமானவளாகக் காணப்பட்டாள். இருந்தாலும் அவனோடு நடந்து செல்லுவதில் அவளுக்குச் சிரமமே ஏற்படவில்லை.

அவளுடைய நடைக்கு ஏற்றபடி அவன் தன் நடையைக் குறுக்கிக் கொண்டான். ஆகையால் மேரி அவனோடு கை கோத்துச் செல்லுகையில் ஓடவோ, வேகமாக நடக்கவோ வேண்டியிருக்கவில்லை. பிறரின் சக்தியை உணர்ந்து, அவர்களுக்குச் சிரமம் ஏற்படாதவாறு தன்னுடைய போக்கை மாற்றிக் கொள்ளும் அவனுடைய சுபாவம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

டாக்டர் ஹெளகனின் மாளிகை பதினைந்து ஏக்கர் நிலப்பரப்பின் நடுவில் அமைந்திருந்தது. சுற்றிலும் ஒரே மரச் சோலை. புளூகிராஸ் மாளிகைகளைப் போல் கட்டட அமைப்புக் கொண்டிருந்த அந்த மாளிகை மேரிக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர்கள் கதவைத் தட்டியதும் டாக்டர் ஹெளகனே வந்து கதவைத் திறந்தார். மேரி, அவரைத் தனது பெரியப்பா டாக்டர் ஜான் டாடின் வீட்டில் பார்த்திருக்கிறாள். லிங்கன் கூட்டம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டிருந்த போது அவள் அம் மாளிகையின் ஒவ்வோர் அறையாக நுழைந்து பார்த்தாள். ஸ்பிரிங் ஃபீல்டில் வேறு எந்த வீட்டிலும் அறைகள் இத்தனை விசாலமாகவும், வசதியாகவும் இருந்ததில்லை என்று அவளுக்குத் தோன்றியது.

''டாக்டர் ஹெளகன்! உங்கள் வீடு ஒரு கலைக்கோயிலாக இருக்கிறதே!'' என்றாள் அவள்.

''ஆமாம்; இந்த வீட்டின் மீது எங்களுக்கு உயிர். எனினும் இதை நாங்கள் விற்றுவிடப் போகிறோம்; எங்களுக்கு இது மிகவும் பெரிய மாளிகை'' என்றார் டாக்டர் ஹெளகன்.

''விற்கப் போகிறீர்களா? எனக்கு இந்த வீடு ரொம்பப் பிடித்திருக்கிறது டாக்டர் ஹெளகன். கலியாணம் செய்து கொண்டதும் இது போன்ற மாளிகையில் தான் குடும்ப வாழ்வைத் தொடங்க விரும்புகிறேன்'' என்றாள் மேரி.

''என் வாழ்த்துக்கள் மிஸ் டாடு. உன்னைக் கைப்பிடிக்கப் போகிற அதிருஷ்டசாலி யாரோ?'' என்று கேட்டார் டாக்டர் ஹெளகன்.

மேரி உதட்டைக் கடித்துக் கொண்டு சொன்னாள்: ''சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன் டாக்டர். கலியாணத்தைப் பற்றி நான் இப்பொழுது எதுவும் திட்டமிட்டிருக்கவில்லை.''

''நல்லது, புரிந்தது; நானும் இப்பொழுதே இந்த வீட்டை விற்றுவிடப் போவதில்லை. யாராவது இதை விலைக்கு வாங்கிக் கொள்ள வந்தால், உன்னைக் கலந்து கொண்ட பிறகு விற்கிறேன்; சரிதானே?''

மேரிக்கு அக்கட்டடத்தின் மீது ஆசை விழுந்து விட்ட போதிலும், அவள் இந்தச் சம்பாஷணையை ஒரு விளையாட்டுப் பேச்சாக்கி முற்றுப் புள்ளி வைக்க விரும்பினாள். ஆகவே ''ரொம்ப நல்லது! நாம் இருவருமே காத்திருப்போம்'' என்றாள்.

டாக்டர் ஹெளகனின் வீட்டிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தபோது, மேரி அவ் வீட்டைப் பற்றி லிங்கனிடம் மிக உற்சாகத்தோடு பேசினாள்.

''ஆனால் மோலி, அது எவ்வளவு பெரிய வீடு?'' என்றான் லிங்கன் அமைதியாக.

''எனக்கு எப்பொழுதுமே அழகான வீடுகளைத்தான் பிடிக்கும். உங்களுக்கு அப்படி இல்லையா மிஸ்டர் லிங்கன்?'' என்று கேட்டாள் அவள்.

''உண்மையைச் சொல்லப் போனால் நான் வீடுகளைப் பற்றி அதிகமாகச் சிந்தித்துப் பார்த்ததே கிடையாது. வாழ்விலே பெரும் பகுதியை நான் மரக் குடிசைகளிலே கழித்து வந்திருக்கிறேன். கடந்த இரண்டு மூன்று வருடங்களாக ஜோஷின் கடை மாடியில் படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறேன். ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வரும் வரை ஓர் அழகிய வீட்டின் உட்புறம் எப்படியிருக்கும் என்பதைக்கூட நான் பார்த்தது கிடையாது. உன் பெரியப்பா பிள்ளை ஜான் ஸ்டூவர்ட்டின் வீடுதான் நான் பார்த்த முதல் பெரிய வீடு.

ஆனால் நீ வாழ்வில் வீட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பவள், அப்படித்தானே மோலி?''

''ஆமாம்.''

லிங்கன் ஏற்பாடு செய்திருந்த விக் கூட்டத்துக்காக இண்டியானா, அயோவா, மிஸ்ஸௌரி, இல்லினாய்ஸ் ஆகிய பிரதேசங்களிலிருந்து ஆயிரக்கணக்கான விக் கட்சியினர் வந்திருந்தனர். சிலர் பத்து நாள் பிரயாணம் செய்து சுமார் இருநூறு மைல் தூரத்திலிருந்து கூட வந்திருந்தினர். போருக்கு அணிவகுத்துச் செல்லும் படையினர் நடுவழியில் தங்கியிருப்பது போல், அவர்கள் கூடாரம் அடித்துக் தங்கியிருந்தார்கள். உணவு முதலியவற்றையும் தாங்களே கொண்டு வந்திருந்தார்கள். ஜனநாயகக் கட்சிப் பத்திரிகை ஒன்று, ஜெனரல் ஹாரிஸன் மரக்குடிசையில் வசித்து, புளித்த ஆப்பிள் ரஸப் பானத்தையே குடித்துத் தமது குறை வாழ்நாளை எளிய முறையில் கழிக்கப் போவதாகப் பெருமையுடன் எழுதியிருந்ததால் தங்களாலும் அத்தகைய எளிய முறையில் வாழ முடியும் என்பதைக் காட்ட, விக் கட்சிக் கூட்டத்துக்காக வந்திருந்தவர்கள் இப்படிக் கூடாரம் அடித்துத் தங்கியிருந்தார்கள். பிரதிநிதிகள், கால் நடையாகவும் குதிரை சவாரி செய்தும், பண்ணை வண்டிகளிலும் வந்திருந்தனர். ஸாங்கமென் ஜில்லாவிலிருந்து எண்பது பிரதிநிதிகள் வந்திருந்தனர். அவர்கள் அசல் மரங்களைப் பிடுங்கித் தங்கள் வண்டியில் வைத்து, அதன் கீழ் மரக்குடிசை ஒன்றை அமைத்துக் கொண்டு அதிலேயே பிரயாணம் செய்து வந்தனர். இவர்களுடைய வண்டியை இருபத்தாறு எருதுகள் இழுத்து வந்தன. பத்துப் பனிரெண்டு பாண்டு வாத்திய கோஷ்டியினர் வந்திருந்தனர். ஒவ்வொருவரும் தங்கள் வண்டிகளில் ஒரு பீப்பாய் நிறைய புளித்த ஆப்பிள் ரஸப் பானத்தையும் கொண்டு வந்திருந்தனர்.

மேரி கூட்டத்தோடு கூட்டமாக டாக்டர் ஹெளகனின் மாளிகைக்கு வந்து அங்கு நடந்த பிரசங்கங்களை மூன்று மணி நேரம் கேட்டுக் கொண்டிருந்தாள். கூட்டத்துக்கு வந்திருந்தவர்கள் அனைவருக்கும் நடுப்பகல் உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவள் அங்கே சென்றாள். லிங்கன் அந்தப் பிரம்மாண்டமான கூட்டத்துக்கு உணவு தயாரிக்கும் ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண்டிருந்தான்..

''இந்தப் பிரசங்கமாரியைத் தாங்கிக்கொள்ள ஜனங்களுக்கு வலிமை வேண்டுமல்லவா மேரி? அதற்கான ஏற்பாடுகள் தாம் இவை'' என்று அவன் கூறினான்.

டாக்டர் ஹெளகனின் மாளிகை முகப்பில் பெரிய மேடை அமைத்து, அதில் நின்று தான் பிரசங்கிகள் சொற்

பொழிவாற்றி வந்தனர். இந்தப் பிரசங்கத் தொடரில் பத்தொன்பதாவது பிரசங்கியாக லிங்கன் மேடை மீது ஏறினான். அப்பொழுது இரவு பதினேரு மணி ஆகிவிட்டது. பிரசங்கம் நிகழ்ந்த இடத்தில் நூற்றுக் கணக்கான தீவட்டிகள் ஒளி வீசிக் கொண்டிருந்தன. 'இவ்வளவுபேர் பேசி விட்ட பிறகு லிங்கன் என்ன புதிதாகப் பேசி விடப்போகிறார்?' என்று நினைத்தாள் மேரி. சொற்பொழிவாளர்களை வரிசைப்படுத்திப் பேசச் செய்தது, அந்தப் பிரம்மாண்டமான கூட்டத்தின் உணவு ஏற்பாடுகளைக் கவனித்தது போன்ற வேலைகளில் ஈடுபட்டு வந்திருந்த அவன் மிகுந்த களைப்புடன் காணப்பட்டான். அவனுடைய ஆடைகள் எல்லாம் அழுக்கடைந்தும் கசங்கியும் போயிருந்தன.

இருந்தாலும் அவனுடைய அந்த அழகற்ற தோற்றத்தையும் கவர்ச்சியற்ற குரலையும் மிஞ்சிக்கொண்டு அவனிடமிருந்து ஓர் ஒளி, அங்கு எரிந்த தீவட்டிகளின் ஒளியையும் மங்கச் செய்து கொண்டு வீசுவதாக மேரிக்குத் தோன்றியது. அது என்ன ஒளி என்பதை அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை. அதற்கு அர்த்தம் என்ன என்பதையும் அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

தனது பிரசங்கத்தைச் சுருக்கமாக முடித்துக் கொண்டு லிங்கன் மேடையிலிருந்து இறங்கிவிட்டான். யாரோ ஒருவர் இருவர் கரகோஷம் செய்தனர். மேரி இப்பொழுது வீடு திரும்பத் தயாராகி விட்டாள். ஆனால் அவளுடைய வீட்டுக்காரர்கள் எவரும் கூட்டம் முடிந்தாலன்றி அங்கிருந்து எழுந்திருக்கத் தயாராயில்லை.

நள்ளிரவுக்குப் பிறகு தான் கூட்டம் முடிந்தது. எலிஸபெத், நினியன், ஸ்டீஃபன், லோகன், ஆகியோருடன் மேரி பிரசங்கிகளைக் கைகுலுக்கிப் பாராட்டச் சென்றாள். ஒருவராவது லிங்கனை அவ்வளவாகப் பாராட்டாதது அவளுக்கு வருத்தமாக இருந்தது. அவன் வெறுப்புடன் அங்கே ஒரு மூலையில் நின்று கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு மேரி அங்கு சென்றாள்.

''ஆப்ரஹாம்! நீங்கள் பேசிய பேச்சில் ஒரு வார்த்தை கூட என் நினைவில் இல்லை. இருந்த போதிலும் உங்கள் பிரசங்கம் என்னை மிகவும் கவர்ந்து விட்டது'' என்றாள் அவள்.

அவள் அவனை ஆப்ரஹாம் என்று அழைத்தது இதுதான் முதல் தடவை.

லிங்கன் அவள் கையை இறுகப் பற்றிக் கொண்டு, ''எனக்கே நான் என்ன பேசினேன் என்பது தெரியாது மோலி. இருந்தாலும் உனக்கு அது பிடித்திருந்தது உன் அன்பையே

காட்டுகிறது'' என்று கூறிவிட்டு, தன் கோப்பு அனைத்தையும் உதறி விடுவது போல் ஒரு நெடு மூச்சு விட்டான். பிறகு சொன்னான்: ''உண்மையில் மற்றவர்களைவிட நான்தான் இன்று அதிக மகிழ்ச்சி அடைய வேண்டும். ஏனென்றால் எனது மேற்பார்வையில் தயாரான சாப்பாட்டைப் புகழாதவர்களே இல்லை.''

ஹெளகன் மாளிகையிலிருந்து கூட்டம் கலைய ஆரம்பித்தது. எலிஸபெத் பின்னால் திரும்பிப் பார்த்தாள். மேரியும் லிங்கனும் கைகோத்து நடந்து வந்து கொண்டிருந்தனர், வரிசை வரிசையாய்க் கையில் தீவட்டிகளைப் பிடித்துக் கொண்டு மக்கள் நகரத்தை நோக்கி போய்க் கொண்டிருந்தனர். அவர்களிடையே மெதுவாகவும் அமைதியாகவும் அவ்விருவரும் நடந்து வந்தனர். ஹெளகன் மாளிகை, நகரின் வடக்கு எல்லையில் இருந்தது. அங்கிருந்து தென்மேற்கு எல்லையில் இருந்த எட்வர்ட்ஸ் தம்பதிகளின் வீட்டுக்கு வெகு தூரம். எட்வேர்ட்ஸின் வீட்டை அடைந்ததும் மேரி லிங்கனின் கையைக் குலுக்கி விட்டு, ''ஆப்ரஹாம்! உங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன். என் பெரியப்பா ஜட்ஜ் டாடையும் அவருடைய மகள் ஆனையும் பார்த்து வர நான் மிஸ்ஸௌரிக்குப் போகப் போகிறேன்'' என்றாள்.

''மிஸ்ஸௌரிக்கா? ஏன் மோலி? ஏதாவது விசேஷமுண்டா?''

அங்கே தன்னை எதிர்பார்த்து பல வாலிபர்கள் காத்திருக்கிறார்கள் என்றெல்லாம் தனது பெரியப்பா எழுதியிருந்ததைக் கூறுவது உசிதமல்ல என்று கருதினாள் அவள். ஆகையால், ''சும்மாதான். கோடை மாதங்களை ஊர் மாற்றிக் கழித்து விட்டு வரலாமென்று நினைத்தேன்'' என்றாள்.

''உன் பிரிவு எனக்கு என்னவோ போலிருக்கும் மோலி.''

''உண்மையாகவா? அப்படியானால் பொழுது கிட்டும் போது எனக்குக் கடிதம் எழுதுங்கள். உங்கள் தேர்தல் பிரசார முயற்சி பயனளிக்கட்டும். நீங்கள் இத்தேர்தலில் சிறந்த வெற்றி பெறப் போகிறீர்கள்.''

அவர்கள் அருகருகே நின்று கொண்டிருந்தார்கள். லிங்கன் அவள் கைகளைப் பற்றி இன்னும் அருகே இழுத்துக் கொண்டான். அவனுடைய முகம் அவளுடைய முகத்தை ஆவலோடு நெருங்கிற்று. அவள் முதலில் தன் கன்னத்தைத் தான் திருப்பிக் காட்டினாள். பிறகு, எப்படித் தனது முகமும்,

மனமும் மாறின என்பது அவளுக்கே தெரியாது. ஒரு நொடியில் அவர்களிடையே இருந்த சிறிதளவு இடைவெளியும் குறைந்தது. ஒருவர் அணைப்பில் மற்றவர் இணைந்தனர். இருவர் உதடுகளும் உறவாடின. அந்த ஒரு விநாடியில், அவர்களிடையே இருந்த தூரம், மாறுபாடுகள் எல்லாம் மறைந்து விட்டன. பிரிவுக்கு முன் கூடும் இரு உள்ளங்களாக அவர்கள் அப்பொழுது இணைந்து நின்றனர்.

பிறகு அவன் முகம் அவள் முகத்தை விட்டுப் பிரிந்தது; அணைத்திருந்த கைகளும் பிரிந்தன. ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அவன் திரும்பி நடந்தான்.

★

அத்தியாயம்-3

"உள்ளமும் உடலும்"

1

மிஸ்ஸௌரியிலும் வெப்பம் மிகுதியாகவே இருந்தது. மேரி, பிற்பகலில் ஒரு சிறு தூக்கம் போட்டுவிட்டு அப்பொழுது தான் விழித்துக் கொண்டாள். கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்கு நினைவு வந்தது. ஜன்னலுக்கு வெளியே ஓர் இலை கூட அசையாமல் நின்ற மரங்களை அவள் கண்கள் நோக்கின. இம்மாதிரி காற்று நிலைத்து, வெப்பமும் மிகுதியாக இருந்தால் புயல் வீசினாலும் வீசக்கூடும். ஸ்பிரிங்ஃபீல்டில் குளோப் ஹோட்டல் வாசலில் தான் கோச்சு வண்டிக்காகக் காத்துக் கொண்டிருந்தபோது இடித்த இடி, அருகே கட்டப் பட்டு வந்த அரசாங்க மாளிகையின் மேல்தளச் செங்கற்களைச் சிதறி விழச் செய்தது அப்பொழுது அவள் நினைவுக்கு வந்தது. சிறு பிராயத்திலிருந்தே அவளுக்கு இடி என்றால் பயம். மேமி ஸாலி, ''இடி என்பது, மனிதர் செய்யும் அக்கிரமங்களைப் பொறுக்க மாட்டாமல், கோபங்கொண்டு அலறும் பிசாசின் குரல்'' என்று சொல்லுவாள்.

மேரியின் அருகில் மற்றொரு கட்டிலில் படுத்திருந்த அவளுடைய பெரியப்பா பெண் ஆன் சிரித்துக் கொண்டே கண் விழித்தாள். முன்னாள் இரவு தனது பெரியப்பா ஜட்ஜ் டேவிட் டாடைப்பற்றி அவள் கூறிய கதை நினைவுக்கு வரவே மேரியின் முகத்திலும் புன்னகை மலர்ந்தது. அது இவர்கள் இப்பொழுது தூங்கிக் கொண்டிருந்தார்களே, இது போன்ற பகல் தூக்கம் சம்பந்தப்பட்ட கதை. ஜட்ஜாக இருந்தபோது டேவிட் டாடு ஒரு சமயம், வக்கீல் ஒருவர் தமது வழக்கைப் பற்றி நீண்ட பிரசங்கம் புரிந்து கொண்டிருக்கையில் தூங்கிப் போய் விட்டாராம். பிறகு விழித்துக்கொண்டதும் அவர், தமது குமாஸ்தாவை நோக்கி,

''கோர்ட்டை அவமதித்த குற்றத்துக்காக எனக்குப் பத்து டாலர் அபராதம் விதித்திருப்பதாக எழுதிக்கொள். ஒன்று, நான் இந்தப் பகலில் தூங்கும் பழக்கத்தை விட்டொழிக்க வேண்டும்; இல்லாவிட்டால் இந்த ஜட்ஜ் வேலையை விட்டு விட வேண்டும்'' என்றாராம்.

ஆன் எழுந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டு, ''ஏன் தனக்குத்தானே சிரித்துக் கொள்ளுகிறாய் மேரி?'' என்று கேட்டாள்.

அவள் தன் சிரிப்பின் காரணத்தை விளக்கி விட்டு, 'மிஸ்டர் லிங்கன் இந்தக் கதையை மிகவும் ரசிப்பார். இதைத் தமது கதைக் களஞ்சியத்தில் சேர்த்துக் கொள்ளுவார்'' என்றாள்.

ஆன் அவளைக் கூர்ந்து நோக்கினாள். ''நீ லிங்கனை நேசிக்கிறாய்; இல்லையா?'' என்று அவள் கேட்டாள்.

''ஆமாம்.''

''மற்ற எவரையும் விட அதிகமாகவா?''

''நிச்சயமாகச் சொல்லுவதற்கில்லை. ஒரு வேளை இருக்கலாம்'' மேரியின் நெஞ்சம் படபடத்தது.

''அவனை எனக்கு நினைவிருக்கிறது. நிச்சயமாக அவன் ஒரு.....'' ஆன் சிறிது ஆலோசித்து விட்டு, ''மேம் பாடுபடாய் மனிதன்தான்'' என்று முடித்தாள்.

''அவர் உலகத்திலேயே அழகானவர் என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஜனாதிபதிப் பதவிக்கு வரக்கூடிய தகுதி அவருக்கு இருக்கிறது'' என்றாள் மேரி.

''அதற்காக எவளும் அவனை மணந்து கொள்ள மாட்டாள்.''

''அதிருக்கட்டும்; நீ எதற்காக ஒரு சொகுசுக்காரனை மணந்து கொள்ளப் போகிறாய்?''

மேரிக்கு, ஏன் இந்த விஷயமாக இவளுடன் பேச்சுக் கொடுத்தோம் என்று தன்மீதே கோபம் ஏற்பட்டது.

ஆன் முகத்தில் களிப்புத் தோன்ற, ''ஏனென்றால்- அவரை நான் காதலிக்கிறேன்; கல்யாணம் என்பது வேறு என்ன?''

''அது வாழ்க்கையில் ஒரு போக்குதான்,'' என்று மேரி கூற ஆரம்பித்தபோது அவளுடைய பெரியப்பா கூப்பிடுவது கேட்டது. ''சரி, சரி; நாம் கீழே போவோம், வா'' என்று அவள் ஆனை துரிதப்படுத்தினாள்.

மேரியின் பெரியப்பா டேவிட், டாடு குடும்பத்திலேயே மிகவும் உல்லாசமானவர். அவர் ஒரு வாய் அரட்டை.

கடுமையாக உழைப்பார்; உண்பார்; குடிப்பார்; உறங்குவார்; இடையே பல உற்சாகமூட்டும் வேலைகளிலும் ஈடுபடுவார். அவற்றில் ஒன்று தமது குடும்பத்தின் மூதாதையரைப்பற்றி அவர் சேகரித்து வைத்திருந்த குறிப்புகள். அன்றிரவு சாப்பாட்டுக்குப் பிறகு அவர் மேஜைமீது ஒரு பெரிய காகிதத்தைப் பரப்பிக் கொண்டு, வம்ச வாரியாகத் தங்கள் மூதாதையரைப் பற்றித் தொகுத்து வைத்திருந்த விவரங்களை மேரிக்குக் காட்டினார். 1679-இல் ஸ்காட்லாண்டில் தங்கள் குடும்பத்தினர் வசித்து வந்தது; பிறகு 1720-இல், பென்ஸில்வேனியாவில் தங்கள் குடும்பத்தினர் முதன் முதலாகக் குடியேறியது போன்ற ஒவ்வொன்றையும் அவர் அவளுக்கு விளக்கிக் கொண்டே வந்தார். இறுதியாகச் சொன்னார்: ''நம்முடைய மூதாதையர்களில் பலர் சிறந்த போர் வீரர்களாக விளங்கியிருக்கின்றனர் மேரி. டியூக் ஆப் மான்மத்துடன் போரிட்டு 'சர்ச் ஆப் இங்கிலாந்தை' ஸ்தாபித்தவர்களும் நமது மூதாதையர்களில் இருக்கிறார்கள். உன் பாட்டனார் ஜெனரல் வாஷிங்டனுக்காகப் போர் செய்தவர். அவருடைய சகோதரர்கள் ஜார்ஜ் ரோஜர்ஸ் கிளார்க்குக்காகப் போரிட்டார்கள். பின் தலைமுறைகளில் வந்தவர்கள் சிவப்பு இந்தியருடன் நிகழ்த்திய போரிலும், 1812-இல் நடந்த யுத்தத்திலும் பங்கெடுத்துக் கொண்டதுதான் உனக்குத் தெரியுமே? எல்லோருமே வெறும் போர்வீரர்களாக மட்டும் இருந்து விடவில்லை. பெரிய பெரிய பதவிகளும் வகித்திருக்கிறார்கள். ஒருவர் இல்லினாய்ஸின் முதல் ஸிவில் கவர்னராக இருந்திருக்கிறார்; இன்னொருவர் மிச்சிகனின் பிரதேச கவர்னர் பதவி வகித்திருக்கிறார்; மற்றொருவர் பென்ஸில்வேனியா கவர்னராக இருந்திருக்கிறார். நம்மிடையே சமாதானச் சிற்பிகளும் இருந்திருக்கின்றனர். ஆனால் அவர்களும் தங்கள் காலத்தில் புகழோங்கி விளங்கியவர்கள் தாம். மதகுருக்களாகவும், பேராசிரியர்களாகவும், சட்டசபை அங்கத்தினர்களாகவும், ஜட்ஜுகளாகவும்.....''

பெரியப்பா இப்படி பேசிக் கொண்டிருக்கையில், மேரியின் மனது ஆப்ரஹாம் லிங்கனின் குடும்பத்தைப்பற்றி நினைத்துக் கொண்டது. தனது மூதாதையரை அவன் லட்சியமே செய்யவில்லை. என்றாலும், அவர்களைப்பற்றி அவளுக்கு விவரமாகக் கூறியிருந்தான். அவர்கள் 'குவேக்கர்'' என்ற ''நண்பர்கள் சங்க'' மதப்பிரிவைச் சேர்ந்தவர்கள். பென்ஸில்வேனியா, வெர்ஜினியா முதலிய இடங்களில் குடியேறி, இறுதியாகக் கென்டக்கி மாகாணத்தில் நிலைபெற்றார்கள். தனது தாயின் குடும்பத்தைப்பற்றிச் சொல்லவேண்டிய கட்டம் வந்தபோது, லிங்கன் நெடுநேரம் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு மௌனமாக அமர்ந்திருந்தான்.

பிறகு, ''அவர்கள் வெர்ஜீனியாவில் சாதாரணக் குடும்பத்தவர்கள். இரண்டாந்தரக் குடும்பம் என்றுதான் சொல்ல வேண்டும்'' என்றான்.

அவள் தன்னைத்தானே கடிந்து கொண்டாள். 'நான் ஒரு பள்ளிக் குழந்தையைப்போல் அல்லவா நடந்து கொள்ளுகிறேன்? யார் எதைப் பற்றிப் பேசினாலும், உடனே லிங்கனை அதில் ஈடுபடுத்திப் பார்க்கிறேனே? அப்படி அவரை ஒவ்வோரிடத்திலும் ஒப்பிட்டு நோக்க எனக்கும் அவருக்கும் இடையே என்ன உறவு இருக்கிறது? அவர்தான் வயசுப் பெண்களுடனேயே பழகாதவர் ஆயிற்றே! நியூ ஸேலத்தில் அவருக்கு இரண்டே இரண்டு சிநேகிதிகள்தான் இருந்தனரென்றும், அவர்கள் இருவரும் கல்யாணமானவர்கள் என்றும் ஷீமதி பௌலிங் கிரீன் என்ற மாது அவருக்கு ஆபத்தில் உதவி வந்தவள் என்றும், மற்றொரு சிநேகிதியான ஷீமதி ஜாக் ஆம்ஸ்ட்ராஸ் அவருக்குத் துணி மணிகள் தைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தவள் என்றுந் தானே எலிஸா ஃபிரான்ஸிஸ் கூறியிருக்கிறாள்?'

''பால் நடனத்துக்குப் புறப்பட நேரமாகிவிட்டது, மேரி; நீ அலங்கரித்துக்கொள்ளவில்லையா?'' என்ற ஆனின் குரல் மேரியின் சிந்தனையைத் துண்டித்தது. அவர்கள் இருவரும் அலங்கரித்துக்கொள்ளப் படுக்கை அறைக்குச் சென்றனர்.

மேரி கொலம்பியாவுக்கு வரும் முன்பு, அங்கே சில நாட்கள்தான் தங்க முடியும் என்று அறிவித்திருந்தாள். ஆனால் எழுநூறு பேர்கள் வசித்துவந்த, புகையிலை விளை பொருளுக்குக் கேந்திரமான மிஸிஸிப்பி மாகாணத்தின் அந்தப் பரபரப்பு நிறைந்த ஊர் வேறு விதமாக நினைத்தது. அது மேரியைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடிற்று. ஒவ்வொரு நாளும் அவளை யாராவது தேநீர் அருந்த அழைத்துக்கொண்டிருந்தார்கள்; இல்லாவிட்டால் விருந்துக்கு அழைத்துக் கவுரவித்தார்கள். இதோ பாருங்களேன்; இன்று அவள் போக இருந்த 'பால்' நடனம், அவ்வாரத்தில் அவளுடைய கவுரவார்த்தம் நடைபெறும் நான்காவது நடனம். ஆம்; இவற்றுக் கெல்லாம் காரணம் அவளுடைய பெரியப்பா டேவிட் டாடுதான். அவள் மிஸ் ஸௌரியின் கல்யாணச் சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளவள் என்று அவர் ஊராருக்கெல்லாம் அறிவித்து விட்டதால் அந்த ஊரில் புதிதாகக் குடியேறியிருந்த ஐந்தாறு மணமாகாத இளைஞர்கள் அவளை இடைவிடாமல் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள்.

மேரியும், ஆனும் அலங்கரித்துக் கொண்டு, இரவு சுமார் எட்டு மணிக்கு பிராட்வே முனையிலிருந்த, 'பால்' நடனம்

நடைப்பெறப் போகும் வீட்டை அடைந்தனர். அந்த வீட்டின் கீழ்த்தள அறைகள் நான்கும், இரண்டு பெரிய ஹால்களும் 'பால்' நடனத்துக்காக அலங்கரிக்கப்பட்டிருந்தன. இசை முழங்கிக் கொண்டிருந்தது. வேகமாக வாசிக்கப்பட்ட அந்தப் பாடல்களுக்குகேற்ப நடனமாடி மேரிக்குப் பழக்கமில்லை; ஆகையால் ஒவ்வொரு நடனமும் முடிவதற்குள் அவள் மிகவும் திணறிப்போய்விட்டாள். அன்று அவளோடு நடனமாடியவன், பாட்ரிக் ஹென்ரி என் பவரின் பேரன். அவனைத்தான் மேரி மணந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பெரியப்பா டேவிட்டுக்கு இருந்தது. அவள் அவ்வூருக்கு வந்த அன்று மாலையில் அவர் சொன்னார்: ''ஹென்ரி என்ற அந்த இளைஞன் எல்லோரு டனும் ஒத்துப் போகக் கூடியவன் மேரி. அதோடு அவன் ஒரு நல்ல வக்கீல். தன் முன்னோர்களின் சிறந்த குணங் களுக் கெல்லாம் மேம்பட்ட சுபாவம் அவனுக்கு. நீ ஒரு வக்கீலையே மணந்து கொள்ள வேண்டு மென்பது என் எண் ணம்; ஏனென்றால் அத்தனை அரசியல் அறிவு உனக்கு இருக் கிறது.''

மேரி அவரைச் சீண்டினாள்: ''ஏன் பெரியப்பா? எனக் காக ஒரு பல் வைத்தியரைப் பிடித்து வைத்திருப்பதாகக் கூறினீர்களே; அவர் என்ன ஆனார்?''

''அந்த முட்டாள் காத்திருக்க முடியாது என்று கூறி விட்டு, ஒரு வாரத்துக்கு முன்பு வேறொரு பெண்ணை மணந்து கொண்டு விட்டான். நீ கவலைப்படாதே மேரி; அவனைவிட உயர்ந்த வரன்களாக ஒரு டஜன் இளைஞர்களை நான் பிடித்து வைத்திருக்கிறேன்'' என்றார் அவர்.

ஹென்ரி, மேரியால் கவரப்பட்டுவிட்டான் போலிருக் கிறது. ஒரு நடனம் முடிந்த பிறகு, ''இவ்வூரில் நீங்கள் நடனமாடும் வேகம் என்னை வியக்கச் செய்கிறது. நான் ஸ்பிரிங்ஃபீல்டுக்குத் திரும்பிச் சென்றதும்.....'' என்று அவள் ஆரம்பித்ததுமே அவன் குறுக்கிட்டு, '' என்ன? என்ன சொன்னாய் மிஸ் மேரி? ஸ்பிரிங்ஃபீல்டுக்குத் திரும்புவதா? ஏன் மிஸ்ஸௌரி உனக்குப் பிடிக்கவில்லையா?'' என்று கலக்கத் துடன் கேட்டான்.

ஆனால், அடிமைத் தொழில் அமுலில் இருக்கும் ஓர் ஊரில், தான் வாழ விரும்பவில்லை என்பதை அவள் எப்படி அவனிடம் கூற முடியும்? அவர்களுடைய விடுதலைக்காகப் பாடுபட்டு வரும் ஊரில் வாழ்ந்து வருபவளான அவள், புகை யிலை வயல்களில் அடிமைகளை மாடாக உழைக்கச் செய்யும் இவ்வூர் வாசியாகிவிட நினைப்பது, நவயுகத்திலிருந்து, பழங் காலத்தை நோக்கிச் செல்லும் யாத்திரையாக முடியும் என் பதைத்தான் எவ்வாறு அவனுக்கு விளக்க முடியும்?

அன்றைய நடனம் முடிந்து, மேரியும் ஆனும் வீடு திரும்பியபோது இரவு இரண்டு மணியாகிவிட்டது. மேரி கீழ் ஹாலில் இருட்டான இடத்தில் நின்று கொண்டிருந்தாள். வெளியே வாசலில், அவளுடைய பெரியப்பா பிள்ளை தன் காதலிக்கு விடை கொடுத்து அனுப்பிக் கொண்டிருந்தான். பின்னர் மேரியும் ஆனும், உடை மாற்றி முகம் கழுவிக் கொண்டு வந்து படுத்துக் கொண்டனர். ஆன் ஒரே உற்சாகமாக இருந்தாள். ''காதலிப்பதும், காதலிக்கப்படுவதும் ஒரு மகத்தான பாக்கியம் இல்லையா மேரி? ஏன்தான் சிலர் காதலுக்கு இடமே அளிக்காமல் வாழ நினைக்கிறார்களோ?'' என்றாள் அவள்.

இப்படியெல்லாம் காதல் நினைவு கொந்தளிக்கப் பேசிய போதிலும், ஆன் படுக்கையில் படுத்ததுமே அயர்ந்து தூங்கி விட்டாள். ஆனால் மேரிக்குத் தூக்கம் வரவில்லை. 'ஏன்தான் சிலர் காதலுக்கு இடமே அளிக்காமல் வாழ நினைக்கிறார்களோ?' என்ற ஆனின் சொற்கள் அவள் செவிகளில் திரும்பத் திரும்ப ஒலித்தன. நிச்சயமாக அவள் அப்படி வாழ விரும்பவில்லை. மெண்டல் பள்ளியில் தன்னுடன் படித்த தோழிகள் காதல் கொண்டதை அவள் கண்டுதானிருந்தாள். ஆனால் அம்மாதிரிக் காதல் விளையாட்டை அவள் வெறுத்தாள். தனக்கு இருப்பது ஒரே உயிர்; ஒரே காதல் என்று அவள் திடமாக நம்பினாள். ஆகையால் அவற்றைக் கெட்டிக்காரத்தனமாகவும், நன்றாகவும் உபயோகிக்க விரும்பினாள். அதனால் தனது உணர்ச்சி வசப்பட்ட சிநேகிதிகளைப்போல், அவ்வளவு நளினமாகவும், அவ்வளவு ஆசையுடனும், அவள் காதல் செய்ய மாட்டாள் என்று அர்த்தமில்லை. தனது உள்ளம் ஈடுபடாத மனிதரிடம் அவள் தன் உடலை ஒப்படைக்க விரும்பவில்லை.

அப்படியானால், அவளுடைய உள்ளம் யாரிடம் லயித்திருந்தது?. இந்தக் கொலம்பியாவில் நடைபெறும் கோலாகலங்களில் அது ஆப்ரஹாமை மறந்ததா? அவனிடம் தன் உள்ளம் அவ்வளவு தூரம் ஈடுபட்டிருந்ததைக் கண்டு அவளுக்கே வியப்பு மேலிட்டது. 'அப்படியானால் நான் அவரைக் காதலிக்கிறேனா?' என்று அவள் தன்னையே கேட்டுக் கொண்டாள். அது கண்டதும் காதலாக இல்லாதிருக்கலாம்; அல்லது பழக்கத்தினால் கனிந்த காதலாகவும் இல்லாதிருக்கலாம். எனினும் அவளுடைய உணர்ச்சிகள் என்னவோ மெல்ல மெல்ல வளர்ந்து கொண்டுதானிருந்தன.

ஏன்? ஆப்ரஹாமின் மீது தனக்குக் காதல் ஏற்படும்படி அவரிடம் இருக்கும் விசேஷந்தான் என்ன?. அவருடைய நேர்மையா? அநேகமாகத் தன்னுடன் பழகிவந்த எல்லா இளை

ஞர்களுமே நேர்மையாகத்தான் நடந்து வந்திருக்கின்றனர். அவருடைய ஆடம்பரமற்ற போக்கா? இது தனக்குக் காதலை ஏற்படுத்தும் வண்ணம் முக்கியத்துவம் பெற்றிருக்குமென்று அவளால் நினைக்க முடியவில்லை. ஏனென்றால் ஆடம்பர மற்றவர்களில் பெரும்பாலோர் வெறும் மண்டுக்களாக இருப்பதை அவள் அறிவாள். அவருடைய துணிச்சலா? அப்படிப் பார்க்கப் போனால் ஸ்டீஃபன் டக்ளஸுக்கு என்ன துணிச்சலுக்குக் குறைவா? உடற்பலமா? முரடர்களுக்குக் கூடத்தான் உடற்பலம் இருக்கிறது. அவரிடம் உள்ள புனிதத்தன்மையா? இல்லவே இல்லை. ஏனென்றால் புனிதத் தன்மை ஏற்படும்படி அவர் ஒன்றும் அத்தனை தெய்வப் பற்றுக் கொண்டவரல்ல. அவருடைய நகைச்சுவையா? அடிக்கடி அவை வறட்டும் பொது ஹாஸ்யமாக இருந்தாலும், சில சமயம் ரசிக்கத் தக்கவையாகவே இருந்தன. ஆனால் அவை ஒரு ஆழ்ந்த கருத்துடையவை ஆகவோ, அறிவாளிகளின் ஹாஸ்ய மாகவோ இருந்ததில்லை. சீரிய கருத்துக்களா? சீரிய கருத்துக்கள் ஏற்படும் வண்ணம் அத்தனை கல்வியறிவோ, ஒழுங்கு முறைகளில் பயிற்சியோ பெற்றவரல்ல அவர். குணமா? அழகா? ஜொலிப்பா? அல்லது கவரும் தன்மையா? இவற்றிலெல்லாம் அவரை மிஞ்சக்கூடிய இளைஞர்கள் ஸ்பிரிங்ஃபீல்டிலும், லெக்ஸிங்டனிலும் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். லஞ்சம், ஊழல் இவற்றிற்கு அடிமைப்படாத அவருடைய உறுதியா? இருக்கலாம்; ஆனால் அத்தனை உறுதி தம்மிடம் இருப்பதை அவர் அதிகமான சம்பவங்கள் மூலம் நிரூபித்திருக்கவில்லையே! பணிவா? பணிவு இருக்கிறது. ஆனால் அது அவருடைய ஏழ்மை வாழ்வால் ஏற்பட்டதல்லவா?

ஆப்ரஹாமிடம் என்னதான் விசேஷ குணபாவங்கள் இருந்த போதிலும், ஸ்பிரிங்ஃபீல்டில் வேறு எந்தப்பெண்ணும் அவற்றால் கவரப்படவில்லை. இருந்தாலும் நிச்சயமாக அவரிடம்ஏதோ ஆகர்ஷணம் இருக்கத்தான் இருக்கிறது. கிளாரிஸ் குரோவ் போக்கிரிகள் அதை உணர்ந்திருந்தனர். சிவப்பு இந்தியர்களை ஒழித்துக் கட்டும் போரில் அவரைத் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்த ராணுவ சிப்பாய்கள் அதை உணர்ந்திருந்தனர். இல்லினாய்ஸ் மாகாணத்தில் விக் கட்சியினர் உணர்ந்திருந்தனர். அவளுடைய பெரியப்பா பிள்ளை ஜான் ஸ்டூவர்ட்டும் அதை உணர்ந்து தானிருந்தான். அந்த ஆகர்ஷணம் எது? தலைமை தாங்கி நடத்திச் செல்லக்கூடிய திறமைதானா? எதையும் எப்படிக் கையாண்டு, எப்படி நடத்தி எப்படிச் சமாதான முறையில் சமாளிக்க வேண்டும் என்பதை அவர் கற்றிருந்ததுதானா? அதற்கென்ன? எத்தனையோ பேர்கள், சந்தர்ப்ப வசத்தால் தலைவராகி விடுகிறார்கள். அவர்களைப் போல் இவரும் ஒருவராக இருக்கலாம்.

ஜன்னலுக்கு வெளியேயிருந்த காட்டு அத்திமரமும், பூவரச மரமும் நிலவொளி பட்டு மினுமினுப்பதைப் பார்த்துக் கொண்டே படுத்திருந்த மேரியின் உள்ளத்தில் மற்றொரு கஷ்டமான கேள்வி எழுந்தது. ''ஆப்ரஹாம் என்னைக் காதலிக்கிறாரா? நான் அவரை காதலித்தால் அவர் என் காதலை ஏற்றுக்கொள்வாரா?''

அவர், காதலைக் கண்டு பயப்படுகிறவர். ''காதல் ஒரு நாசகாரி'' என்று அவர் கூறியிருக்கிறார்.

ஆனால் அதெல்லாம் பழங்கதை. இப்பொழுது அவர் என்னை ''மோலி'' என்று செல்லப் பெயரிட்டு வாஞ்சையுடன் அழைக்கிறார். களைப்பாகவும், விசனமாகவும், மனம் தளர்ந்தும் இருக்கும்போது ஆறுதலுக்கு என்னை நாடியே வருகிறார். என் நட்பு அவருக்கு உற்சாகமூட்டுகிறது. நான் பேசுவதையும் காரியங்கள் செய்வதையும் அவர் வியக்கிறார்; நாட்கணக்கில் அவர் என்னைத் திரும்பிப் பாராமலேயே இருந்திருக்கிறார்; ஆயினும் நான் ஸ்பிரீங்ஃபீல்டிலிருந்து புறப்படுமுன்பு, 'எனது பிரிவு என்னவோ போலிருக்கும்' என்று கூறினார். அவர் எனக்குக் கடிதம் எதுவும் எழுதவில்லை. ஒரே ஒரு தடவை ''ஒல்டு ஸோல்ஜர்'' பிரதி ஒன்றில் என்னை வாழ்த்தி ஒரு வரி கிறுக்கி அனுப்பியிருந்ததைத் தவிர.

எப்படி இருந்தாலும், கடந்த சில மாதங்களில் அவரைப் பற்றி அநேக விஷயங்களை அவள் அறிந்து கொண்டிருந்தாள்; அவர் ஸ்பிரிங்ஃபீல்டில் வேறு எந்தப் பெண்ணின் வீட்டுக்கும் போனதில்லை. அவளைத் தவிர வேறு எந்தப் பெண்ணுடனும் நடனமாடியதில்லை. அதோடு ''சமூகத்தைச் சிறிதாவது முன்னேறச் செய்யாமல் நான் சாக விரும்பவில்லை'' என்று கூட அவளிடம் கூறியிருக்கிறார். அது அவருடைய உள் மனத்தின் ஏக்கமல்லாது வேறு என்ன?

ஆகையால் அவள் தன் மனநிலையையும், ஆப்ரஹாமின் மனநிலையையும் கவனமாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

2

செப்டம்பர் மாசத்தில் மேரி ஸ்பிரிங்ஃபீல்டுக்குத் திரும்பி வந்தாள். ''பெரியப்பா டேவிட்டுக்கு நான் இங்கே திரும்பி விட்டதில் மிகவும் ஏமாற்றம். நான் மிஸ்ஸௌரி வாலிபர்களில் யாராவது ஒருவனை மணந்து கொண்டு அவ்வூர்க்காரியாகி விடுவேன் என்று அவர் நினைத்திருந்தார்; மிஸ்ஸௌரியிலிருந்து புறப்படுவதற்கு முன்னுள் ஆன் எனக்கு

ஒரு விருந்தளித்தாள். அந்த விருந்துக்கு வந்திருந்த வாலிபர்கள் அனைவரும் நான் மீண்டும் மிஸ்ஸைளரிக்குத் திரும்பி வருவது நிச்சயமென்று பந்தயம் கட்டினார்கள்'' என்று அவள் தன் சகோதரி எலிஸபெத்திடம் கூறினாள்.

அன்று எலிஸபெத் தையல் கழகத்தின் கூட்டத்திற்குச் சென்ற பிறகு, மேரி மாளிகைத் தோட்டத்துக்கு வந்து பூப் பறித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது ஸ்டீஃபன் டக்ளஸ் சிரித்த முகத்துடன் அங்கே வந்து சேர்ந்தான்.

'' மேரி! இப்பொழுதுதான் நீ வந்திருக்கிறாய் என்று கேள்விப்பட்டேன். நீ இல்லாமல் ஸ்பீரிங்ஃபீல்டு இருளடைந்து கிடந்தது. உன் வரவு நல்வரவாகட்டும்.'' என்றான் அவன்.

அவனுடைய வரவேற்பு அவளுக்கு மகிழ்ச்சியளித்தது. ஸ்டீஃபன் டக்ளஸ் அவள் கன்னத்தில் முத்தமிட்டான்.

''உங்களையெல்லாம் மீண்டும் பார்க்கக் கிடைத்ததில் மகிழ்ச்சியடைகிறேன் ஸ்டீவ். நீ ராஜ்ய சட்டசபைத் தேர்தலில் எங்கள் கட்சிக்குச் சரியான கசையடி கொடுத்து விட்டாய் போலிருக்கிறதே!'' என்றாள் மேரி.

''ஓ! மிஸ்ஸைளரி வரை எட்டிவிட்டதா அந்தச் செய்தி?'' என்றான் அவன். பெருமையால் அவன் நெஞ்சு நிமிர்ந்தது. தொடர்ந்து சொன்னான்: ''ஆனால் அதெல்லாம் என்ன பிரமாதம். ஹென்ரி கிளேயின் சிஷ்யையான விக் கட்சி இளவரசியே! நாங்கள் உங்களை ஜனாதிபதித் தேர்தலிலும் ஒரு கை பார்த்துவிடத்தான் போகிறோம்.''

அவள் அவனோடு வாதாட விரும்பவில்லை. இருந்தாலும், ''உங்கள் வெற்றியினால் ஜனநாயகக் கட்சிக்காரர்களுக்கு ஏதாவது பயன் ஏற்படுமா?'' என்று கேட்டாள்.

டக்ளஸ் தலையைத் தடவிக் கொண்டான். '' நிச்சயமாக! ஏன் இல்லாமல்? இத்தனை மாதங்களாக நான் செய்து வந்த பிரசாரம் எல்லாம் என்னவது?. உண்மையைச் சொல்லப்போனால் இந்தத் தேர்தல் காரணமாக நான் கடனில் மூழ்கிக் கிடக்கிறேன். அவன் தன் நிஜார்ப் பைக்குள் கையை விட்டுச் சில நாணயங்களை எடுத்துச் சுண்டிக் கொண்டே ''ஆயினும், நான் ஒரேடியாக பாப்பராகி விடவில்லை. என்னிடம் சில 'ஸெண்டு'கள் மீதம் இருக்கத்தான் இருக்கின்றன. வா, நாம் வாட்ஸனின் மிட்டாய்க் கடைக்குப் போய் ஏதாவது வாங்கிச் சாப்பிட்டு விட்டு வரலாம்'' என்றான்.

அவள், தான் பறித்த மலர்களைத் தொடுத்து எடுத்துக் கொண்டு, '' வருகிறேன்; ஆனால் ஒரு நிபந்தனை; முதலில், இந்த மலர் மாலையை உன் தலையில் சூட்ட அனுமதிக்க வேண்டும் '' என்றாள்.

அவள் மலர்ச் சரத்தை அவன் தலையைச் சுற்றிக் கட்டிய போது இருவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். பிறகு அவர்கள் கை கோத்துக் கொண்டு நடக்கலாயினர். சதுக்கத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தபோது, தெருவில் போவோர் வருவோர் அனைவரும் அவர்களை வியப்புடன் நோக்கினர். மிஸ் ஸெளாரியிலிருந்த இரண்டு மாத காலத்தில் இங்கே நிகழ்ந்துள்ள பல ரசமான மாறுதல்களைப் பற்றி மேரி பேசினாள். வாலெஸ் அண்ட் டில்லர் மருந்துக் கடையில் விளம்பரத்துக் காகத் தொங்க விடப்பட்டிருந்த பிரம்மாண்டமான கழுகு; புதிதாகக் கட்டப்பட்டு வரும் கட்டடங்கள்; க்ரிம்ஸ்லி அண்ட் லிவரிங் கடையில், பிலடெல்பியா, பால்டிமோர், நியூ ஆர்லியன்ஸ் ஆகிய இடங்களிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ள சரக்குகளைக் காட்சிக்கு வைத்திருப்பது; அது லெக்ஸிங்டன் கடைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருப்பது போலவே அழகாக இருப்பது; இவற்றையெல்லாம் பற்றி அவள் பேசிக் கொண்டே வந்தாள்.

சிறிது நேரத்துக்குள் அவர்கள் வாட்ஸனின் கடைக்கு வந்து ஏதோ வாங்கித் தின்று விட்டு, எட்வர்ட்ஸின் வீட்டுக்குத் திரும்பி வந்தனர். மேரி, ஸ்டீஃபனுக்கு விடையளித்து அனுப்பிவிட்டுத் திரும்பியபோது, கூடத்தில் எலிஸபெத்தும், நினியனும், திருப்தி நிறைந்த பார்வையைத் தன் மீது வீசிக் கொண்டிருந்ததைக் கண்டாள்.

''இரண்டு-மூன்று ஸ்திரீகள் வந்து விஷயத்தைச் சொன்னார்கள், மேரி. நீயும் ஸ்டீஃபனும் கைகோத்து நடந்து வந்து கொண்டிருந்தீர்களாம். ஸ்டீஃபன் நீ தொடுத்த ரோஜாப்பூ மாலையைத் தலையில் சுற்றிக் கொண்டிருந்தானும். குஷியாகப் போய்க் கொண்டிருந்தீர்களாமே?'' என்றாள் எலிஸபெத் முகமலர்ச்சியுடன்.

''அதனால் என்ன? நாங்கள் நண்பர்கள். கைகோத்துக்கொண்டு நடந்தோம்'' என்றாள் மேரி.

''அவ்வளவுதானு? ஒருவேளை ஸ்டீஃபனை மணக்கத் தீர்மானித்து விட்டாய் போலிருக்கிறது என்றல்லவா நாங்கள் நினைத்தோம்?'' என்றாள் எலிஸபெத். அவள் சொற்களில் ஏமாற்றம் மிதந்தது.

மேரியின் முகபாவம் சிறிதும் மாறவில்லை. எலிஸபெத் அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டாள். நினியன் சுருட்டு ஒன்றை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான். எலிஸபெத்தே மீண்டும் பேசினாள்; ''எப்படியானால் என்ன மேரி? உனக்கு அவனைப் பிடித்திருக்கிறது. சிலநாள் போனால் அதுவே காதலாக மலரும்.''

''மலராது லிஸ். மூன்று வருஷங்களுக்கு முன்பு ஸ்டீஃபனை முதல் தடவையாகப் பார்த்தபோது அவனைப்பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டேனே, அதே அபிப்பிராயந் தான் இன்னும் கொண்டிருக்கிறேன்'' என்றாள் மேரி.

''ஏன் மலராது என்கிறாய் மேரி?'' எலிஸபெத் எழுந்து தன் தங்கையருகில் வந்து நின்று கொண்டு தொடர்ந்தாள்: ''உன் மனது அவனிடம் கவியாதபடி ஏன் அதைக் கட்டிப் பிடிக்கிறாய்?. அவன் நல்ல பிள்ளை; முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு ஏற்றவள் நீதான். அவனை மணந்து கொண்டால் உன் வாழ்வு நிச்சயமாக நலம் பெறும்.''

''சில ஜோடிகள், காதலர்களாக இருப்பதற்குச் சிறிதும் பொருத்தமற்றவர்களாக இருப்பார்கள் லிஸ். ஒருக் கால் ஸ்டீஃபனையும் என்னையும் போல் அவர்கள் நோக்கத்திலும் போக்கிலும் தேவைக்கு அதிகமான ஒற்றுமை படைத்திருப்பதே அதற்குக் காரணமாக இருக்கலாம். இல்லாவிட்டால் அவர்களிடையே ஆண்-பெண்களிடையே ஏற்படும் உணர்ச்சி வெள்ளம் ஓடாதிருக்கலாம். தவிர.....''

''தவிர?'' எலிஸபெத் மேரியின் குரல் மாற்றத்தைக் கவனித்தாள்.

''நான் வேறொருவரைக் காதலிக்கிறேன்.

''என்ன? நீ வேறொருவரைக் காதலிக்கிறாயா? யார் அது?''

''மிஸ்டர் லிங்கன்.''

இமைக்கும் நேரம் அங்கே மௌனம் நிலவிற்று. பிறகு எலிஸபெத் சொன்னாள்: ''இதை நான் நம்பவே மாட்டேன். இந்த உலகத்தில் நீ காதலிக்க வேண்டிய கடைசி ஆளல்லவா அவன்?''

''கடைசி ஆள் அல்ல லிஸ். முதல் ஆள். ஒரே ஆள்.''

''ஆனால் உனக்கு எப்பொழுது அவன்மீது காதல் பிறந்தது? சில மாசங்களாக நீ ஊரில் இலையே: திரும்பி வந்த பிறகு அவனைச் சந்திக்கவும் இல்லை... .....''

மேரி சிரித்தாள்: ''அவர் அன்று கோர்ட்டுக் கட்டடத்து மாடியிலிருந்து கீழே குதித்தாரோ, அதே சமயம் என் மனசிலும் குதித்து விட்டாரென்று நினைக்கிறேன்.''

''ஆம்; சொர்க்க லோகத்திலிருந்து அப்படியே வந்து குதித்து விட்டான்! அவன் ஒன்றும் அதற்கு தேவ புருஷனில்லை மேரி'' என்றான் நினியன். அவன் குரலில் ஏளனம் தொனித்தது.

''நான் தேவ புருஷனுக்கு ஏங்கிக் கொண்டிருக்கவில்லை நினியன். எனக்கு ஒரு மனிதர்தான் வேண்டும். அவர் மனிதரல்ல என்று உங்களால் மறுக்க முடியாதே?''

'' நான் எதையும் மறுக்கவோ, உறுதி செய்யவோ இல்லை. நான் சொல்வதெல்லாம், அவன் நம் குடும்பத்தில் ஒருவனுவதில் எனக்கு விருப்பமில்லை என்பதுதான். ''

நினியனின் முகத்தில் கோபம் கொதித்ததைப் பார்த்த மேரி அவனருகில் சென்றாள். '' என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் நினியன். நான் உங்களிடம் பாசம் கொண்டவள் என்பதும், உங்கள் கருத்துக்களுக்கு மதிப் பளிப்பவள் என்பதும் உங்களுக்கே தெரியும். ஒரே ஒரு விஷயத்தை மாத்திரம் எனக்கு விளக்குங்கள்: மிஸ்டர் லிங்கனை நமது கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்ளத் தயாரா யிருக்கும் நீங்கள், எனக்குச் சந்தோஷத்தை அளிக்க மாத்திரம் அவர் ஏற்றவரல்ல என்று ஒதுக்குவது ஏன்? ''

''அவன் சிறந்த அரசியல் வாதிதான். ஆனால் அதற்கு மேல் அவன் உயரப்போவதில்லை. அவனுக்கு அதற்கு ஆவ லும் இல்லை. அவன் ஏழ்மையில் வாழ்கிறான்; சரியான நபர் களோடு கலந்து பழகுவதில்லை; எப்படித் தொழில் நடத்தி நிறையச் சம்பாதிக்க வேண்டும் என்பதும் அவனுக்குத் தெரி யாது. தவிர வாழ்வுக்குத் தேவையான நல்ல அம்சங்கள் ஒன்றும் அவனுக்குப் பிடிக்காது மேரி; நல்ல ஆடை, நல்ல வாகனம், நல்ல வீடு.....''

''ஆனால் அவற்றின் மீதெல்லாம் அவருக்கு விருப்பம் ஏற்படாதிருப்பதற்குக் காரணம், இளம் பிராயத்தில் அவர் அநுபவித்த கஷ்டங்கள் அல்லவா, நினியன்? சிறிது காலம் போனால் மற்ற மனிதர்களைப் போல் அவருக்கும் ஆவல் எல்லாம் ஏற்படத்தான் ஏற்படும். ஏன்? மற்றவர்களைவிட அதிகமாகக்கூட ஏற்படும். ''

'' ஆனால் உனக்கு வழங்குவதற்கு ஒன்றுமேயில்லாத ஒரு மனிதனிடம் உன் மனசு ஏன் ஈடுபட வேண்டும்? '' என்று எலிஸபெத் வருத்தத்தோடு கேட்டாள்.

'' ஏனென்றால் என்னிடம் அவருக்கு அளிக்க நிறைய இருக்கிறது, லிஸ். எதையும் பிரத்தியட்சமாகக் காண்பதைக் கொண்டுதான் முடிவு செய்யவேண்டும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் என்னுடைய தீர்மானங்களில், என்னுடைய அன்பளிப்புகளில், எனக்கே நம்பிக்கை யில்லாமற் போக லாமா? ''

பின்கோடைக் காலமாதலால் ஜன்னலருகில் ஈக்கள் ரீங்காரம்செய்து கொண்டிருந்தன. தேனீக்களின் வாசனையும் அங்கு வீசிற்று. எலிஸபெத் ஆறுதலும், அமைதியும் அடைந்தவளாகச் சொன்னாள்; ''மேரி! நாங்கள் மிஸ்டர் லிங்கனை விரும்பவில்லையென்று நினைக்காதே. அல்லது அவர்மீது எங்களுக்கு எவ்விதத் துரபிமானமும் கிடையாது.

ஆனால் ஒன்று மாத்திரம் நாங்கள் நிச்சயமாகச் சொல்வோம்; அவன் உனக்கு ஏற்றவனல்ல. வேறு எந்தப் பெண்ணுக் காவது அவன் ஏற்ற கணவனாகலாம். ஆனால் பாரம்பரியத்தில் உங்கள் இருவரிடையே உள்ள வித்தியாசத்தை நினைத்துப் பார். அவன் ஒரு சாதாரண மனிதன்.''

''அது உண்மையாக இருக்கலாம். ஆனால் நான் மீண்டும் சொல்லுகிறேன். நீ கடந்த காலத்தைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கிறாய். நான் கடந்த காலத்தில் வாழப் போவதில்லை. வளமான வருங்காலத்தை நாங்கள் இருவரும் உருச் செய்வோம்.''

''கடந்த காலத்திலிருந்துதான் வருங்காலம் முளைக் கிறது என்ற உண்மை எப்பொழுது முதல் பொய்யாயிற்று?''

மேரிக்கு இப்பொழுது ரோசம் வந்துவிட்டது. அவளு டைய குரல் கரகரப்படைந்தது. அவள் சொன்னாள்: ''நீ குறிப்பிடுகிற வித்தியாசங்கள் எல்லாம் சந்தர்ப்ப வசத்தால் ஏற்பட்டவை. அவருடைய பெற்றோர் ஏழைகள். அவர்கள் நல்ல பள்ளிக்கூடங்கள் இல்லாத எல்லைப் பிராந்தியத்தில் வசித்து வந்தார்கள். அவர் அறிவுவந்த பிராயந்தொட்டு உழைக்க வேண்டியதாயிற்று. நம் பெரியப்பா பிள்ளை ஜான் ஸ்டூவர்ட், 'அவர் இயற்கை உள்ளம் படைத்தவர்' என்று சொல்லுகிறான். நீயே பார்த்துக் கொள்ளேன்; எவ்வளவோ இடையூறுகளுக்கிடையே அவர் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்! 'அவர் சோம்பேறி; சுவையோ அவாக் களோ இல்லாதவர்' என்று நீ சொல்லுவதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். நாம் பண்பாடு என்று குறிப்பிடும் அந்த மெருகு ஏற்பட அவருக்கு வாய்ப்புகள் கிட்டவில்லை; அவ்வளவுதான். எனக்கு அந்த வாய்ப்புகள் கிட்டின; அதனால் நான் இப்படி இருக்கிறேன்; நமது டாடு குடும்பத்திலேயே பண்பாடு மிக்கவளென்று கருதப்படுகிறேன். அப்படியானால் ஆப்ரஹாம் லிங்கனைப் போன்ற ஒருவருக்கு அந்தப் பண் பாட்டை உண்டு பண்ண என்னால் முடியாதா? ஒரு சமயம் நீ அவரைப் 'பட்டை தீட்டப்படாத வைரம்' என்று குறிப் பிட்டாய். ஆனால் லிஸ், பட்டை தீட்டப்படாவிட்டாலும், ஆபரணக் கற்களிலெல்லாம் உயர்ந்ததல்லவா வைரம்?''

''ஆகவே அந்த வைரத்தை நீ பட்டை தீட்டப் போகிறாயாக்கும்.''

''ஆம்; அதற்கான பயிற்சி பெற்றிருக்கிறேன் நான். அதற்கான அன்பு பெற்றிருக்கிறேன். அவரிடம் பண்பாட்டை வளர்ப்பதற்கேற்ற சூழ்நிலையை என்னால் அளிக்க முடியும். ஆமாம் லிஸ்; அழகிய வீடு....., (அவளுடைய மனக்கண் முன் ஹெளகனின் மாளிகை வந்து நின்றது) படிக்கப்

புத்தகங்கள், கேட்க சங்கீதம், தக்க நபர்களை அழைத்துத் தக்கபடி உபசரிப்பது போன்ற பண்பாடு உயர்வதற்குத் தேவையான வசதிகளை நான் அளிக்க முடியும். அவரிடம் திறமை இருக்கிறது. அதை நினியனே ஒப்புக்கொண் டிருக்கிறார். என் திறமையையும் அவருடைய திறமையையும் ஏன் இணைக்கக் கூடாது?''

''இணைப்பதா? அப்படியானால் மிஸ்டர் லிங்கன் தன்னை மணந்து கொள்ளும்படி உன்னைக் கேட்டு விட்டானா.''

'' இல்லை. ''

ஒரு தாயின் பார்வையோடு எலிஸபெத் மேரியின் முகத்தை நோக்கினாள். தன் பேச்சு தங்கையை நோகச் செய்துவிட்டது என்பதை அவளால் கண்டு கொள்ள முடிந்தது.

'' மேரி? அவன் உன்னைக் காதலிப்பதாகவாவது கூறியி ருக்கிறானா? '' என்று அவள் மீண்டும் கேட்டாள்.

மேரி பேச வாயற்றவளாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

'' அப்படியென்றால், எந்த அடிப்படையில் இப்படி யெல்லாம் மனக்கோட்டை கட்டுகிறாய்? ''

'' காதலிக்கிறேன் என்று வாய் திறந்து சொன்னால்தான் கணக்கா? ஆயிரம் வழிகளில் அவர் தமது காதலை எனக்கு உணர்த்தியிருக்கிறார்.''

அவள் அழ விரும்பவில்லைதான்; இருந்தாலும் அவளையும் மிஞ்சிக்கொண்டு கண்களில் கண்ணீர் வழிந்தோடத் தொடங் கிற்று. எலிஸபெத் அவளை அன்புடன் அணைத்துத் தலையைத் தடவிக் கொண்டே, '' கண்ணே! பிற்காலத்தில் நீ வருத்த மடையக்கூடாது. அதற்காகத்தான் நாங்கள் இவ்வளவு தூரம் சொல்லுகிறோம். லிங்கனோடு பழகுவதை நாங்கள் தடுக்கவில்லை. அவனை நம் வீட்டுக்கு அடிக்கடி வரவழை; உபசரி; நெருங்கிப் பழகு; பழகப் பழக அவன் உனக்கு ஏற்றவனல்ல என்பது புரிந்துவிடும். அப்புறம் உன் காத லும் மறைந்து விடும் '' என்றாள்.

3

ஆப்ரஹாம் எங்கே போயிருக்கிறான் என்ற விவரம் நகரில் எவருக்குமே தெரியவில்லை. ஆகையால் மேரி '' ஸாங்கமோ ஜர்னல் '' காரியாலயத்தில் விசாரித்துப் பார்க்கலாமென்று அங்கே சென்றாள். ஸிமியன் இப்பொழுது '' ஜர்னல் ''

பத்திரிகையை மாத்திரமல்ல; ''ஓல்டு ஸோல்ஜர்'' வாரப் பத்திரிகையையும், நூற்றுக்கணக்கான பிரசாரத் துண்டுப் பிரசுரங்களையும் அச்சடித்து வெளியிட வேண்டியிருந்தது. மாகாண சட்டசபைத் தேர்தலில் விக் கட்சியினர் தோல்வியுற்றுவிட்டபோதிலும், மத்திய சட்டசபைத் தேர்தலில் இல்லினுய்ஸ் மாகாணத்தின் வோட்டு முழுவதும் ஜெனரல் ஹாரிஸனுக்கே கிடைக்க வேண்டுமென்று ஸிமியன் தீவிரமாக முயன்று வந்தான். இதெல்லாம் காரணமாக எலிஸாஃபிரான் ஸிஸ்ஸுக்கும் வேலை ஏற்பட்டது. அவள் ஒரு சமையல் ஸ்டவ்வையும் பாத்திரங்களையும் எடுத்துக்கொண்டு ''ஸாங் கமோ ஜர்னல்'' காரியாலயத்துக்கே குடிவந்து விட்டாள்.

''சந்தர்ப்பங்கள் நமக்கு சாதகமாகவே இருக்கின்றன மேரி; ஜாக்ஸன் மற்றும் வான் பூரனின் ஆட்சியின் கீழ் பனிரெண்டு வருஷங்களாத் தள்ளிவிட்ட மக்கள் இப்பொழுது ஆட்சி பீடத்தில் ஒரு மாறுதலை விரும்புகிறார்கள். 'இல்லினுய்ஸின் தெற்குப் பிராந்தியத்திலிருந்து ஒரு வோட்டைக் கூட நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் அந்தப் பிரதேச மக்கள் அடிமை முறையையும், ஜனநாயகக் கட்சியையுந்தான் ஆதரிப்பவர்கள்' என்று விக் கட்சிக் கமிட்டி அபிப்பிராயப் பட்டு, ஆப்ரஹாமை அங்கே போய் அவனுடைய நேரத்தை வீணுக்க வேண்டாமென்று கூறிற்று. இருந்தாலும் அவன் அங்கே போய் பிரசாரம் செய்து வெற்றியும் பெற்று வருகிறான்'' என்று அச்சுயந்திரத்தில் வேலை செய்துகொண்டே கூறினான் ஸிமியன். அருகே சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள் எலிஸா.

'ஓஹோ! அங்கேயா போயிருக்கிறார் லிங்கன்! தன் பேச்சைக் கேட்க விரும்பாத 'லிட்டில் ஈஜிப்ட்' மக்களிடையே பிரசங்கம் செய்துகொண்டிருக்கிறாரா? சரிதான். அப்படியானால் அவர் எனக்கு ஒரு கடிதங்கூட எழுதாததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை' என்று எண்ணிக்கொண்டாள் மேரி.

''ஸிமியன்! நான் உங்களுக்கு ஏதாவது ஒத்தாசை செய்யட்டுமா?'' என்று அவள் கேட்டாள்.

''செய் குழந்தாய். இங்கே வேலைக்கா பஞ்சம்? இந்த 'ஓல்டு ஸோல்ஜர்' பத்திரிகைப் பார்ஸல்களுக்கெல்லாம் விலாசம் எழுது. பிறகு இந்த 'ஃபைலை'ப் புரட்டிப் பார்த்து, நாம் பெயர்த்து வெளியிடத்தக்க கட்டுரைகள் ஏதேனும் பிற பத்திரிகைகளில் இருந்தால் அவைகளைக் கத்தரித்து எடுத்து வை.''

அவள் தன் மேல் கோட்டை அவிழ்த்து வைத்துவிட்டு, ஸிமியன் பணித்த வேலைகளில் ஈடுபட்டாள். ஈடுபட்டவாறே நினைத்துக் கொண்டாள்; 'ஜனநாயகக் கட்சியின் வெற்றி

காரணமாக, இனி ஆப்ரஹாம் மத்திய சட்டசபை அங்கத்தினர் ஆவதற்கோ, மாகாண சட்டசபையின் சபாநாயகர் ஆவதற்கோ சந்தர்ப்பம் இல்லாது போய்விட்டது. ஆனால் அவர் மாத்திரம் இல்லினாய்ஸ் மாகாணத்து வோட்டுக்களை ஹாரிஸனுக்குக் கிடைக்கச்செய்து அவருடைய வெற்றிக்கு உதவியவர்களில் முக்கியமானவர் ஆகிவிட்டால், புதிய மத்திய அரசாங்கத்தில் அவருக்கு ஒரு கண்ணியமான பதவி அளிக்கப்படும் என்பது நிச்சயம்'.

தினந்தோறும் அவள் காலை ஏழு மணிக்கே எழுந்து விடுவாள். காபியும் பழங்களும் சாப்பிட்டுவிட்டு, மாடியின் வடக்கு பக்கத்தில் இருந்த படுக்கை அறைக்குச் சென்று விடுவாள். அங்கே இப்பொழுது கட்டில் மெத்தை யெல்லாம் அகற்றப்பட்டு தையல் யந்திரமும், தையல் வேலைக்கான இதர சாமான்களும் வைக்கப்பட்டிருந்தன. வரப்போகும் குளிர்காலத்துக்கான உடைகளைத் தயாரிக்கும் வேலையில் மேரி கவிந்து விடுவாள். குழந்தைகளுக்கெல்லாம் கம்பிளி உடைகள் தைக்க வேண்டியிருந்தன. தவிர, நினியனின் சிற்றப்பா ஸைரஸ் எட்வேர்ட்ஸும், அவருடைய மகள் மாட்டில்டாவும் ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வர இருந்ததால், வீட்டின் ஜன்னல் மற்றும் கதவுகளுக்குத் திரைகளும், மெத்தை தலையணைகளுக்கு உறைகளும் புதிதாகத் தைத்துப் போடவேண்டியிருந்தது. இன்னும் எலிஸபெத்துக்கும் தனக்கும் குளிர்கால உடைகள் தயாரித்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஆகையால் இப்பொழுதெல்லாம் மேரி உச்சிவேளை வரை தையல் வேலையிலேயே ஈடுபட்டிருந்தாள். பிறகு சாப்பிட்டுவிட்டு ''ஜர்னல்'' ஆபீஸுக்குச் சென்று ஃபிரான்ஸிஸ் தம்பதிகளுக்கு உதவி புரிந்து வந்தாள். அடிக்கடி லிங்கனிடமிருந்து, ''ஜர்னல்'' ''ஓல்டு ஸோல்ஜர்'' பத்திரிகைகளில் வெளியிடுவதற்கான கட்டுரைகளோ, செய்திகளோ வரும். சில சமயம் தனது பிரசார முயற்சியின் அபிவிருத்திகளைப் பற்றியும் அவன் எழுதுவான். இவ்வாறு அவன் இருப்பிடம், பணி முதலியவற்றைப்பற்றி அவள் அறிந்து கொள்ள முடிந்தது.

இப்படி அவள் ஒரே சுறுசுறுப்புடனும், வருங்காலத்தைப் பற்றிய நம்பிக்கையுடனும் இருந்த போதிலும், நாட்கள் வீணே கழிந்துகொண்டிருந்தன. இது அவளை ஏங்கிப்போகச் செய்தது. ஆப்ரஹாம் தன்னைக் காதலிக்கிறாரா, இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள ஒரு மார்க்கம் மாத்திரம் இருக்குமானால்..... ?

செப்டம்பர் மாத இறுதியில் மேரியின் சிநேகிதி மார்த்தா ஜேன் லெளரிக்கும் ஸிட்னி ஆபெல் என்பவனுக்கும் திருமணம்

நடந்தது. அதற்கு மேரி போயிருந்தாள். அவள்தான் மார்த்தா ஜோனின் திருமண அங்கியைத் தைத்துக் கொடுத்திருந்தாள். கல்யாணம் இரவு ஏழரை மணிக்கு நடந்தது. ஏனென்றால் தம்பதிகள் ஹனிமூனுக்காகப் பத்து மணி வண்டியைப் பிடித்து சிக்காகோ போக இருந்தனர். திருமணச் சடங்குகள் நடந்து விருந்து முடிந்ததும் மேரி வீடு திரும்பினாள்.

அவள் களைத்துப் போயிருந்தாலும், மகிழ்ச்சியோடிருந்தாள். தனக்கும் ஆப்ரஹாமுக்கும் திருமணம் இதே மாதிரித்தான் நிகழ வேண்டுமென்று விரும்பினாள். ஆனால் பகல் பத்து மணிக்கு திருமணச் சடங்குகளும் பிறகு உச்சி வேளையில் விருந்தும் நடத்த வேண்டுமென்று எண்ணினாள். அவள் ஹனிமூனுக்குச் சிக்காகோ போக விரும்பவில்லை. தான் பார்த்திராத நியூ யார்க், பிலடெல்பியா, போஸ்டன் ஆகிய பெரிய நகரங்களுக்குத்தான் தாங்கள் போகவேண்டுமென்று அவள் திட்டமிட்டுக் கொண்டாள்.

அன்றிரவு அவள் எலிஸபெத்துடனும் நினியனுடனும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, அவர்கள் இருவரும் தன்னை ஒரு மாதிரியாகப் பார்ப்பதைக் கவனித்தாள்.

கையிலிருந்த குத்துமுள்ளைக் கீழே வைத்துவிட்டு, ''ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள் ?'' என்று கேட்டாள் அவள்.

''உனக்குத் தெரியாதா ? லிங்கன் திரும்பி வந்து விட்டானே !'' என்றாள் எலிஸபெத்.

அவள் திடுக்கிட்டாள் ; ''எப்பொழுது ?'' என்று கேட்டாள்.

''நேற்றுக் காலையில்.''

தன் உணர்ச்சிகளை மறைத்துவிட முயன்ற போதிலும் அவர்களிடம் தென்பட்ட ஏளனப் பார்வை அவள் கண்களுக்கு நீர்த்திரையிட்டது. 'அவர் வந்து இரண்டு நாட்களாகிவிட்டன. ஆனால் இன்னும் அவர் தன்னைப் பார்க்க வரவில்லை !' நினியனின் பேச்சு அவளுடைய சிந்தனையை மேலே ஓட விடாமல் தடுத்து நிறுத்திற்று. அவன் பேச்சின் ஆரம்ப வார்த்தைகள் அவள் காதில் சரியாக விழவில்லை.

''உன்னைப் பாதுகாத்துக் கொள்'' என்று முடிந்த வாக்கியத்திலிருந்துதான் அவள் தொடர்ந்து கேட்டாள். நினியன் சொல்லிக் கொண்டிருந்தான். ''நீ இம்மாதிரி மனநிம்மதியற்றுப் போவதையோ, உன் வாழ்வையும் வாய்ப்புகளையும் பாழாக்கிக் கொள்ளுவதையோ நாங்கள் காண விரும்பவில்லை, மேரி. அந்த மனிதனுக்குக் கொஞ்சமாவது, கண்ணியமோ மரியாதையோ தெரிந்திருந்தால், அவன்

உள்ளத்தில் உன்னைப் பற்றிய சிந்தனை சிறிதளவாவது இருந்திருந்தால், இவ்வளவு அசிரத்தையாக இருந்திருப்பாளா?''

''அவருடைய போக்கு அப்படிப் பட்டதுதான் நினியன். முன்பு எத்தனையோ தடவைகளில் திரும்பிப் பல நாட்கள் வரை என்னைக் காண வராமலேயே இருந்திருக்கிறார்'' என்று மேரி சப்பைக் கட்டுக் கட்டினாள்.

'அப்படியானால் மேரி, உன்னை லட்சியம் செய்வதாகவே காட்டிக் கொள்ளாத ஒருவரிடம் நீ எப்படிக் காதல் கொள்ளலாம்?''

'' அவர் என்னை லட்சியம் செய்யாமல் ஒன்றுமில்லை'' என்று மேரி தலையைத் தாழ்த்திக் கொண்டு ரோஷத்துடன் கூறினாள்.

எலிஸபெத் தன் கணவனைக் கண்டிக்கும் தோரணையில் கழுத்தை அசைத்தாள். பிறகு மேரியைச் சமாதானப் படுத்த முயலுபவள் போல், '' அப்படியானால் சரி, கண்ணே! அவன் உன்னைக் காதலிக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்ளாமலா, நீ அவன் மீது காதல் கொண்டிருக்கப் போகிறாய்?'' என்றாள்.

அன்றிரவும், மறு நாள் பகலும் இரவும் லிங்கன் அந்தப் பக்கமே தலைகாட்டவில்லை. '' ஜர்னல்'' ஆபீஸுக்குப் போனால் அவரைச் சந்திக்க முடியுமென்பது அவளுக்குத் தெரியும். ஆனால் அவரை யதேச்சையாகச் சந்திப்பதற்கென்று அங்கே போக அவள் விரும்பவில்லை. லிங்கன் தான் அவளைச் சந்திக்க வரவேண்டும்.

அவன் வந்தான். மறு நாள் காலை ஏழு மணியிருக்கும் அப்பொழுது. முன்னாள் பெல்வில்லுக்குப் போய் விட்டு இரவு நெடு நேரத்துக்குப் பிறகே வீடு திரும்பியிருந்ததால் எலிஸபெத்தும் நினியனும் இன்னும் எழுந்திருக்கக் கூட இல்லை. அவள் காபி சாப்பிட்டு விட்டு ஹாலிலிருந்து தையல் அறைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது கதவுத் தாழ்ப்பாள் ஓசைப் படுத்தப் பட்டது.

மேரி கதவைத் திறந்தாள்.

வெளியே லிங்கன், கன்னங்கள் ஒட்டி, இளைத்துத் துரும்பாக நின்று கொண்டிருந்தான். பல மாதப் பிரிவு, அவர்களைச் சிறிது நேரம் மௌனமாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே நிற்கச் செய்தது. பிறகு மேரி முணு முணுக்கும் குரலில் '' வாருங்கள் மிஸ்டர் லிங்கன். இத்தனை நாட்களுக்குப் பிறகு இன்றாவது என் நினைவு வந்ததே! இந்த அதிகாலை வரவுக்கு நான் எப்படி நன்றி செலுத்துவது?'' என்று அவனை வரவேற்றாள்.

''அதிகாலே! ஆம், பொழுது விடிவதற்குள்ளாகவே வந்து விட்டேன் அல்லவா?'' என்றான் லிங்கன்.

''ஆமாம் காலையில் ஏதாவது சாப்பிட்டீர்களா?''

''இல்லை; ஆனால் அதற்காக நான் வரவில்லை.''

''நீங்கள் அதற்காகத்தான் வந்திருக்கிறீர்கள் என்று நான் சொல்லவில்லை. இருந்தாலும் ஏதாவது சாப்பிடலாமே. என்னுடைய ஆடையும் அலங்காரமும் மிக அலங்கோலமாக இருக்கிறதா? சிறிது அவகாசம் அளித்தால் நொடியில் அலங்கரித்துக் கொண்டு வந்து விடுகிறேன்.''

''பரவாயில்லை; நீ ஒன்றும் என் அளவு மோசமாக இல்லை.''

''பார்த்தீர்களா? இம்மாதிரி உற்சாகமூட்டும் பேச்சுக்காகத்தான் நான் கோடைக் காலம் முழுவதும் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தேன்.''

லிங்கனுக்குக் கசையடி கொடுப்பதுபோல் இருந்தது மேரியின் இப்பேச்சு. அவளுக்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ஆகவே அவள் சொன்னாள். ''பரவாயில்லை; இன்றைச் சந்திப்பு அதையெல்லாம் ஈடு செய்து விட்டது. வாருங்கள்; சாப்பாட்டு அறைக்குப் போகலாம். பெர்த்தாவை உங்களுக்குக் காலை உணவு தயாரித்து வரச் சொல்கிறேன். உங்களைப் பார்த்தால், ஜூன் மாசத்தில் நாம் கடைசியாகச் சந்தித்துக் கொண்ட நாளிலிருந்து இன்று வரை ஒன்றுமே சாப்பிடாதவர் போல் இருக்கிறது.''

''இல்லை; இல்லை; இடையே நான் எவ்வளவோ விழுங்கினேன், அரசியல் விஷயங்கள் உள்பட. ஆனால் அவற்றைச் சாப்பாடென்று சொல்ல முடியாது. கிடைத்தவற்றைக் கிடைத்தபோது சாப்பிட்டேன். ஆம்; வோட்டுச் சேகரிப்பதற்காக அரசியல் வாதிகளாகிய நாங்கள் எதற்கும் தயாராயிருக்க வேண்டும் அல்லவா?''

மேரியின் பச்சாதாபம் இன்னும் அதிகமாயிற்று. அவள் சமையலறைக்குச் சென்று பெர்த்தாவிடம், விரைவில் தல்ல காலை உணவு தயாரித்துக் கொண்டுவரச் சொல்லிவிட்டு, ஒரு கோப்பை காபியுடன் லிங்கனிடம் வந்தாள். அந்த அருமையான ஹனுவா காபியைப் பருகிய பிறகு லிங்கனின் முகத்திலிருந்த சோர்வு சற்றே மறைந்தது. விரைவில் சமையற்காரி காலை உணவு தயாரித்துக் கொண்டு வந்து வைத்தாள். லிங்கன் அதை ஆவலோடு சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டே மேரி மௌனமாக அமர்ந்திருந்தாள்.

அவன் முடித்ததும், எலிஸபெத்தும் நினியனும் மாடியிலிருந்து இறங்கி வந்தனர். தனது மைத்துனிக்குக் கணவ

ஞைகப் போகிறவனை வரவேற்கக் கூட மறந்து விட்டு நினியன் கெய்ரோவைச் சுற்றி விக் கட்சிக்கு ஆதரவு எப்படி யிருக்கிறது என்பதை லிங்கனிடம் விசாரிக்கத் தொடங்கி விட்டான். அவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் மேரி அலங்கரித்துக் கொள்ள மாடிக்குச் சென்றாள். அவள் திரும்பி வந்தபோது அறையில் லிங்கன் மாத்திரம் ஒரு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான். அவளைக் கண்டதும் அவன் புன்சிரிப்புடன், '' நான் முன்பே உன்னைச் சந்திக்க வந்திருப்பேன்; ஆனால் எனக்கு மிகவும் களைப்பாக இருந்தது. ஒவ்வொரு நாள் காலையிலும் இங்கே வரவேண்டுமென்று நினைத்துக் கொண்டே இருந்தேன். அது இன்றுதான் நிறைவேறிற்று'' என்றான்.

'' எப்படியாவது நீங்கள் வந்தீர்களே ; அதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி '' என்றாள் அவள்.

'' மிஸ்ஸௌரியில் கோடைக் காலத்தை இன்பமாகக் கழித்தாயா மோலி ?''

நெடு நாட்களுக்குப் பிறகு தன்னை அவன் செல்லப் பெயரிட்டு அழைத்தது அவளைப் பூரிக்கச் செய்தது; '' ஆமாம் ; மிகக் குஷியாகக் கழித்தேன்.''

'' சந்தோஷம் '' என்று கூறிவிட்டு அவன் அவள் கைகளைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டான். ''பஞ்சு போன்ற உன் கைகளின் அழகே அழகு. நான் உனக்குக் கடிதம் எழுதாவிட்டாலும், உன்னை நினைத்துக் கொள்ளாத நாளே கிடையாது. தேர்தலுக்கு நீ நிறைய உழைத்தாயென்று லிமியன் சொன்னான். எனக்குப் பெருமையாக இருந்தது.''

அவனுடைய இந்தப் புகழ்ச்சி மொழிகள் அவளை மகிழச் செய்தன. அவனுடைய கைகளோடு இணைந்திருந்த தன் கைகளை அவள் எடுத்துக் கொள்ளாமலே சொன்னாள் : '' ஊரில் விக் கட்சி இயக்கங்களின்போது நான் என் அப்பாவுக்கு உதவுவது வழக்கம். ஜனநாயகக் கட்சிக்காரர்கள் மாகாணச் சட்டசபையில் பெரும்பான்மையான ஸ்தானங்களைக் கைப்பற்றிக் கொண்டதில் எனக்கு மிகவும் விசனந்தான், ஆப்ரஹாம். ஆனால் அதே சமயம் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதில் எனக்கு மகிழ்ச்சி.''

'' ஆமாம் ; என்னுடைய வெற்றியும் ஒரு வெற்றியா? எந்த விக் கட்சி அபேட்சகனையும் விடக் குறைவான வோட்டுகளுடன்தானே நான் ஜெயித்திருக்கிறேன் ? அது கூட இதுதான் என் கடைசி வெற்றியாக இருக்குமென்று நினைக்கிறேன். கிராம மக்கள் நான் நகரத்தான் ஆகி விட்டேன் என்று நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் நகர

மக்களோ என்னை இன்னும் கிராமத்தானாகவே கருதுகிறார்கள்.''

அவன் பேச்சில் துளிக்கூட நிராசை இல்லை. ஏதோ உண்மையைச் சொல்லுவது போலவே இருந்தது அவன் பேச்சு. இருந்தாலும் அவள் அவனுக்குப் பரிந்து பேசத் தொடங்கினாள். '' நீங்கள் மாகாணச் சட்ட சபையில் எட்டு வருஷங்கள் பதவி வகித்தது போதாதா? ஆம் ஆப்ரஹாம்; இனி நீங்கள் மத்திய சட்ட சபைக்குப் போக வேண்டிய காலம் வந்து விட்டது. ஹாரிஸனின் தேர்தலுக்குப் பிறகு நீங்கள் மத்திய சட்ட சபைக்குப் போகவும் போகிறீர்கள்.''

பிறகு அவன், தனது பிரசாரச் சுற்றுப் பிரயாண அனுபவங்களை அவளுக்குக் கூறினான். சின்னஞ்சிறு நகரங்களிலுள்ள ஹோட்டல்களில் தான் தங்கியது; அங்கே ஒரே அறையில் மூன்று நான்கு பேர்களை அனுமதித்திருந்தது; மற்றவர்கள் விட்ட குறட்டையினால் இரவு முழுவதும் தூக்கம் வராமல் பர்ன்ஸ், ஷேக்ஸ்பியர் ஆகியோரின் புத்தகங்களை, காற்றில் அசைந்தாடும் மெழுகுவத்தியின் மங்கிய ஒளியில் படித்து வந்தது; அவர்கள் கொடுத்த கட்டில்கள் தனக்குப் போதாததாக இருந்தமையால், முழங்காலுக்குக் கீழே கட்டிலுக்கு வெளியே தொங்கும்படி படுத்துக் கொள்ள வேண்டியிருந்தது, ஆகியவற்றை விவரித்துவிட்டு, ''மிஸ்ஸௌரித் தேர்தலில் நீ என்ன என்ன கவனித்தாய்?'' என்று கேட்டான்.

அவள் அங்கு நடந்தவற்றை யெல்லாம் நினைவுக்குக் கொண்டு வந்து தொகுத்துச் சொன்னாள். அவ்வூர்ப் பத்திரிகைகளிலிருந்தும், இதரப் பத்திரிகைகளிலிருந்தும் தான் கிரகித்தவற்றையும் விவரித்தாள். மேரி இம்மாதிரி அரசியல் விவரங்களையெல்லாம் குழந்தைப் பிராயத்திலிருந்தே கற்றவள் என்பதை அறியாத லிங்கன் அவள் அறிவித்த விஷயங்களை ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருந்தான்.

மேரி நிறுத்தியதும் அவன் குனிந்து அவளுடைய தோள்களைப் பற்றிக் கொண்டான் '' மோலி! நீ ரொம்ப நன்முகப் பேசுகிறுயே? புத்தகத்திலிருப்பதைப் படிப்பது போல் கடகடவென்று ஓடுகிறதே உன் பேச்சு! எனக்கு மாத்திரம் கூட்டங்களில் இம்மாதிரிப் பேச வருமாஞல்.....?''

'' ஆப்ரஹாம்! நீங்கள் தனித்த பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள். அண்டை அயலில் ஆட்கள் கூட இல்லாத காடுகளில் உங்கள் இளமைப் பிராயம் கழிந்திருக்கிறது. காட்டில் கோடரியுடன் சுற்றித் திரிய நேரிட்ட உங்களுக்குப் பேசச் சந்தர்ப்பம் எப்படிக் கிட்டியிருக்கப் போகிறது?

பேசுவதற்குத் தான் யார் இருந்திருக்கப் போகிறார்கள், உங்களையும் மரங்களையும் தவிர? ஆனால் நான் வளர்ந்த சூழ்நிலை இதற்கு முற்றிலும் மாறுபட்டது. நான் எங்கும், எப்பொழுதும் மக்களால் சூழப்பட்டே வளர்ந்தேன். வீட்டில் பத்திருபது பேர், பள்ளியில் முப்பது நாற்பது பேர், நடனத்துக்குப் போனால் என்னைச் சுற்றி நாற்பது-ஐம்பது பேர் என்று. அவர்கள் நிறைய நிறையப் பேசி, என்னையும் பேசச் செய்து பழக்கப் படுத்தி விட்டார்கள்.''

அவன் விசனத்தோடு தலையசைத்துக் கொண்டான்: ''அது ஏன் மோலி உன்னோடு இருக்கும் போது மட்டும் எனக்கு மிக்க வசதியாக இருப்பது போல் தோன்றுகிறது? ஆம்; நீ ஒரே ஒருத்தி தான் எனக்கு மிக சகஜமானவளாகத் தென்படுகிறாய்!''

''ஒருக்கால் நாம் நண்பர்களாக இருப்பது தான் அதற்குக் காரணமோ என்னவோ?''

லிங்கன் ஒரு விநாடி அவளை உற்று நோக்கினான். அறையில் அமைதி நிலவிற்று. உலகமே உறங்குவது போல் இருந்தது. அவன் சொன்னான்: ''இல்லை; அது நட்புக்கும் மேற்பட்டது. ஆனால் அது என்ன என்பது தான் எனக்குத் தெரியவில்லை.''

அவன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டு உதட்டில் முத்தமிட்டான். ஆப்ரஹாமின் அணைப்பில் அவள் தன்னையே மறந்தாள். ஆனால் ஒன்று மாத்திரம் அவளுடைய உணர்வில் தட்டியது. 'அந்த நட்புக்கு அப்பாற்பட்ட உணர்ச்சி' என்றென்றும் நல்லது; என்றென்றும் சரியானது!

அவன் மேரியை அணைத்திருந்த கைகளைப் பிரிக்காமலேயே சிறிது பின்வாங்கி அவளுடைய ஆவல் ததும்பும் முகத்தைப் பார்த்தான். பிறகு ''அது.....அதுதான்..... காதலா மோலி?'' என்றான்.

4

அன்று மேரி அதிகாலையிலேயே எழுந்து விட்டாள். வெளியே அக்டோபர் மாசத்துச் சூரியனின் கதிர்கள் ஒளி பரப்பிக் கொண்டிருந்தன. தங்களுடைய திருமணச் செய்தியை ஒரு பெரிய விருந்தளித்துத் தெரிவிக்க வேண்டுமென்றும், திருமணத்தை எவ்வளவு சிறப்பாக நடத்த வேண்டுமென்றும், புது வீடு வாங்கி, அதை எப்படி அலங்

சரிக்க வேண்டு மென்றும் அவள் நினைத்துப் பார்த்துக் கொண்டாள். அதே சமயம் வேறொரு விஷயமும் அவளுக்கு நினைவு வந்தது. லெக்லிங்டனில் தன் தந்தையிடம் கூறியது போல், இந்த ஊரில்தான் திருமணத்தைப் பற்றி அறிவிப்புச் செய்வதோ, திருமணத்துக்கு நாள் குறிப்பிட்டுக் காத்திருப் பதோ வழக்கமில்லையே !

அவள் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தாள் '' எல்லாம் கனவு : எல்லாம் கனவு '' என்ற ஏதோ ஒரு பாட்டை முணு முணுத்துக் கொண்டே கண்ணாடியின் முன்னால் போய் நின்று, தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டாள். 'நான் முன்னைவிட இப்பொழுது அழகாகத்தான் இருக்கிறேன். என் கண்கள் பெரிதாயிருப்பதைப் போல் தோன்றுகின்றன. என்னுடைய வதனம் முன்னைவிடப் பளிச்சிடுகிறது. என் சிகை மிகக் கவர்ச்சியாக விளங்குகிறது. ஆனால் நான் அந்த வாசனைத் தைலத்தைத் தடவிக் கொள்ளுவதை நிறுத் திக் கொள்ள வேண்டும். அது என் கேசத்தை மிகவும் கருமை யாக்கி வருகிறது. ஆப்ரஹாமுக்கு அது பிடிக்குமோ, என்னவோ ? அவரைக் கேட்க வேண்டும்' என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

அவள் உடை மாற்றிக் கொண்டு, காலை உணவு அருந்துவதற்காக மாடியிலிருந்து கீழே இறங்கினாள். என்று மில்லாத புதுமையாக அன்று கீழே இறங்கிச் சென்றபோது, ஒரு புது உலகில் நுழைவது போலிருந்தது அவளுக்கு.

ஆப்ரஹாம் நடுப்பகலில் மணிப்படி வந்துவிட்டான். அவன் தலையை அநாவசியமாகக் குனிந்து கொண்டே உள்ளே நுழைந்ததைக் கண்டு அவள் புன்னகை புரிந்தாள். தணிந்த வாயில்களுள்ள மரக் குடிசைகளில் வசித்து வசித்து, அவ னுக்கு இப்பொழுது எந்த வீட்டுக்கு வந்தாலும் தலையைக் குனிந்து கொண்டே நுழைவது வழக்கமாகி விட்டது. ஆப்ர ஹாம் அழகாக முடி வெட்டிக் கொண்டும், க்ஷவரம் செய்து கொண்டும், வாசனைத் தைலம் தடவி சிகையை நன்றாகச் சீவி விட்டுக் கொண்டும் இருந்தான். ஆடைகளும் நன்றாக இஸ்திரி போடப்பட்டு மடிப்புக் கலையாமல் இருந்தன.

தன்னை முத்தமிடுவதற்காக அவள் முகத்தை நிமிர்த்திக் காட்டினாள். ஆப்ரஹாம் அவள் உதட்டில் முத்த மிட்டான். ஆனால் அணைத்துக் கொள்ளவில்லை. அவன் கைகள் இரண் டும் பின்னால் மறைந்து கொண்டிருந்தன.

'' இன்று நீ மிக அழகாக இருக்கிறாய் மோலி '' என்றான் அவன்.

'' நன்றி, ஆப்ரஹாம் அதையேதான் நான் உங்களுக்கும் சொல்ல வேண்டும் '' என்றாள் அவள்.

''நல்லது மோலி; அப்படியிருந்தாலும், நாம் ஒரு வரை ஒருவர் பார்த்து மகிழ்வதில் நான்தான் அதிக பாக்கிய சாலி.''

'' இல்லை; இது உண்மையில்லை. காதல் நம் இருவர் இடையிலும் எவ்வித வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது.''

அவன் பின்புறம் மறைத்துக்கொண்டிருந்த கைகளை முன்னால் கொண்டு வந்தான். கைகளில் ஒரு சிறிய பொட்டலம் இருந்தது. '' மிஸ்டர் டில்லரின் கடைக்குப் போயிருந்தேன். அவர் உனக்கு இந்த லாவண்டர் வாசனை நீர் பிடிக்கும் என்றார். இது இங்கிலாந்திலிருந்து நியூ யார்க்குக்குச் சமீபத்தில் வந்த 'கிரேட் வெஸ்டேர்ன்' கப்பலில் வந்தது.''

''ஓ! மிக்க வந்தனம். உங்கள் அன்பை மெச்சுகிறேன். ஆனால் உங்களுக்குப் பரிசளிக்க என்னிடம் ஒன்றும் இல்லையே! நான் இன்னும் வீட்டை விட்டு வெளியே போகவே இல்லையே!'' என்றாள் மேரி.

அவன் அவள் காதருகில் குனிந்து ரகசியமான குரலில் சொன்னான் : ''ஆம்; உன்னிடம் ஒன்றும் இல்லை, மிக அபூர்வப் பரிசான உன்னைத் தவிர. மோலி! நான் ரஞ்சகமாகப் பேசத்தெரியாதவன். என் உள்ளத்தில் உணர்ச்சி வெள்ளம் பொங்குகையில், அதை வார்த்தைகளாக வெளியிட எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்றை மாத்திரம் நீ அறிந்துகொள்ள வேண்டும். உன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணிடமும் எனக்குக் காதல் ஏற்பட்டதே கிடையாது.''

அவள் ஒரு விநாடி மௌனமாக இருந்தாள். பிறகு சொன்னாள் ; '' இந்தப் பொன் மொழியை என் உள்ளம் என்றும் மறவாது.''

பிறகு அவர்கள் பகல் உணவு அருந்தச் சென்றார்கள். லிங்கனும், நினியனும், ஹாரிஸன் வரும் தேர்தலில் வெற்றி பெறப் போவதைப் பற்றியும், வாஷிங்டனில் ஏற்படப் போகும் விக் கட்சி ஆட்சியைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மேரி அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு அமைதியாக வீற்றிருந்தாள்.

சாப்பாட்டுக்குப் பின்னர் மேரியும் ஆப்ரஹாமும் உலாவச் சென்றனர். அவர்கள் ஸ்பிரிங்ஃபீல்டை ஒரு பெரிய வட்டம் சுற்றிக் கொண்டு கடைசியாக டாக்டர் ஹெளகனின் மாளிகையை வந்தடைந்தனர். சென்ற தடவை அவர்கள் இங்கு வந்திருந்த போது நடந்த சம்பாஷணைகளை அவன் நினைவுக்குக் கொண்டு வர முயற்சிப்பது போல் மேரிக்குப்

பட்டது. டாக்டர் ஹெளகன் அச்சமயம் வீட்டில் இல்லை. வேலைக்காரன் ஒருவன் அவர்களை வரவேற்றான். மேரி அந்த மாளிகையின் அறை அமைப்புகளையும், மர வேலைப் பாடுகளையும், நல்ல வெளிச்சமும், காற்றும் அளித்த பெரிய ஜன்னல்களையும், மொத்தத்தில் அந்த மாளிகை எவ்வளவு லட்சணமாக கட்டப்பட்டிருக்கிறது என்பதையும் அவனுக்கு விவரித்துக்கொண்டே வந்தாள். அவளுக்கு ஏற்பட்ட உற்சாகத்தில் லிங்கனுக்குத் தன் பேச்சு அலுப்பை ஏற் படுத்தி விட்டதைக் கூட உணரவில்லை.

" பெரிய வீடுதான் ; அதற்கேற்றாற்போல் நிறையப் பணத்தையும் விழுங்கியிருக்குமே " என்றான் அவன்.

" அப்படி ஒன்றும் நிறையப் பணம் ஆகியிருக்க வேண்டு மென்ற கட்டாயமில்லை. அழகு உணர்ச்சியுடனும், நல்ல அமைப்புடனும் ஒரு வீட்டைக் கட்டுவதற்கு, ஒரு சாதாரண வீட்டுக்கு ஆகும் பணத்தைவிட அதிகமாக ஒன்றும் செல வாகாது."

அவள் தன் கைகளை, அவன் கைகளில் கோத்துக் கொண்டு முன்புற ஜன்னல் ஒன்றுக்கு அழைத்துச் சென்றாள். அந்த ஜன்னலடியில் நின்று பார்த்தால், மாளிகையின் அழகிய முன் வாசலும், அதற்கு அப்பால் பரந்திருந்த காடுகளும் நன்கு தெரிந்தன.

மேரி அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே சொன் னாள் : " நான் ஒன்று சொல்லுவேன் ; வித்தியாசமாக நினைத்துக் கொள்ள மாட்டீர்களே ? என் தாய் இறக்குமுன் எனக்கு இண்டியானாவிலுள்ள எண்பது ஏக்கர் நிலத்தை எழுதி வைத்திருக்கிறாள். கல்யாணத்துக்குப் பிறகு அது எனக்குக் கிடைக்கும். அப்பா, அந்த நிலங்கள் முன்னை விடப் பன்மடங்கு விலையுயர்ந்து விட்டதாகச் சொல்லுகிறார். அதில் பதினைந்து ஏக்கர் நிலத்தை விற்றால் இந்த வீட்டை நாம் வாங்கி விடலாம். அது நம் கல்யாணத்துக்கு நான் அளிக்கும் வரதட்சிணையாக இருக்கும்."

லிங்கன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டு மௌன மாக இருந்தான். நாம் அவருடைய மனசு நோகும்படி பேசி விட்டோமா என்று நினைத்தாள் மேரி. ஆனால் நல்ல குடும்பத்துப் பெண்கள் எல்லோருக்குந்தான் திருமணத்தின் போது வரதட்சிணை கொடுக்கிறார்கள் ; அதே போல் தன் கல்யாணத்தின்போது தான் கொண்டு வரக்கூடியதை அவள் அவனிடம் கூறியதில் தவறு என்ன இருக்கிறது ? லிங்கன் தலையை நிமிர்த்தியதும் அவள் அவன் முகத்தை நோக்கினாள். தனது பேச்சு அவனை நோகச் செய்யவில்லை என்பதைக் கண்டு அவளுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. உண்மையில்

அவன் உதட்டில் லேசான கேலிப் புன்னகைதான் மலர்ந்தது. அவன் சொன்னான் : ''மோலி ! எனக்குப் படுத்துக் கொள்ளச் சொந்தமாக ஒரு படுக்கை கூட இருந்ததில்லை ; அப்புறம் அல்லவா அறையையோ, வீட்டையோ பற்றி நினைத்திருக்கப் போகிறேன் ? இரவல் படுக்கையிலிருந்து இது போன்ற ஒரு மாளிகைக்கு என்னை ஒரேயடியாகத் தாவச் சொல்லுகிறாயே ?''

''இது ஒன்றும் மாளிகையல்ல ; அழகான அமைப்பு வாய்ந்த வீடுதான். அப்புறம் என்னவோ தாவுவது என்றீர்களே, அது ரொம்ப காலத்துக்கு முன்பே நீங்கள் செய்திருக்க வேண்டியதாகும். நீங்கள் முப்பது வயசைக் கடந்து விட்டீர்கள் ; நம் கட்சியின் தலைவர்களில் ஒருவராக விளங்குகிறீர்கள் ; தவிர இல்லினாய்ஸின் பிரசித்தி பெற்ற வக்கீலாகவும் இருக்கிறீர்கள் ; விரும்பியிருந்தால் நீங்கள் நெடு நாட்களுக்கு முன்பே ஒரு வீட்டை வாங்கியிருக்க முடியாதா ?''

''ஏற்கனவே வாங்கியுள்ள என்னுடைய 'தேசியக் கடனை' அடைக்க முடியாமலிருக்கையிலா ?''

அவள் சிறிது விசனமாகச் சிரித்துவிட்டுச் சொன்னாள் :

''எனக்கு வீட்டு நிர்வாகத்தில் நல்ல பயிற்சி உண்டு. ஆகையால் உங்கள் வருவாய்க்கு ஏற்ற முறையில் நான் குடும்பத்தை நிர்வகித்து வருவேன்.

''என் வருவாய் !'' என்று அவன் அவள் பேச்சை இடைமறித்தான். ''ஜான் ஸ்டூவர்ட் வாஷிங்டனுக்குப் போய் விட்டான். நானே கடந்த ஆறு மாசங்களாக அரசியலில் மூழ்கிக்கிடக்கிறேன். இதனால் எங்கள் வக்கீல் தொழிலே மறைந்து விட்டது. உனக்குத் தெரியுமா மோலி, அடுத்த சஞ்சாரக் கோர்ட்டில் நாங்கள் வாதாட வேண்டிய வழக்குகள் மிக மிகக் குறைவு என்பது ?''

''ஆனால் நீங்களும், ஜானும் உங்கள் வருங்காலத்துக்கு அஸ்திவாரம் இட்டு வருகிறீர்களே. உங்களுடைய அரசியல் தொடர்பு, உங்களுக்குப் புதுப் புது நண்பர்களை அளிக்கிறது. அதற்கேற்றபடி உங்கள் வக்கீல் தொழிலும் அந்தப் புது நண்பர்கள் மூலம் பெருகத்தானே செய்யும் ?''

''அப்புறம் இன்னொன்று கூட மோலி. இந்த மாதிரி ஒரு பிரம்மாண்டமான மாளிகைக்கு நான் சொந்தக்காரனானால் ஜனநாயகக் கட்சிக்காரர்கள் என்னையும் ஒரு பிரபு என்றே கருதத் தலைப்பட்டு விடுவார்கள். பிறகு அவர்கள், அன்றொரு நாள் நான் கர்னல் டெய்லரின் கோட்டை இழுத்து அவர் வண்டவாளங்களை அம்பலப்படுத்தினேனே, அது போல் என் வீட்டுத் திரைச்சீலையை இழுத்து என்னைச் சந்தி சிரிக்க வைத்து விடுவார்கள். மேலும் இங்கு எல்லாரும் மண

மானதும் ஓரிரு வருஷங்கள் ஹோட்டலில்தான் வசிப்பது வழக்கம். மணமகள் புது வாழ்வைச் சுதந்திரமாக அநுபவிப்பதற்காகவே அப்படிச் செய்கிறார்கள். அதற்குச் செலவும் குறைவு. நாம் பணத்தைச் சேமிக்கவும் முடியும்.''

''நீங்கள் விரும்புகிறபடி நடக்க நான் தயார்தான். ஆனால் அதே சமயம் நம்முடைய குடும்ப வாழ்வை ஹோட்டலில் தொடங்க எனக்குப் பிரியமில்லை. ஏனென்றால் ஹோட்டலில் தனிமை கிடையாது. வீட்டு நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள நான்தான் அஞ்சவில்லை என்றேனே. உண்மையில் நான் அதை முழு மனசுடன் வரவேற்கவே செய்கிறேன்.''

''ஆனால் நீ ஏன் ஆரம்பிக்கும்போதே உச்சிக் கொம்பில் ஆரம்பித்து விட்டுப் பிறகு கீழே இறங்க விரும்புகிறாய்?''

''ஹௌகனின் வீடு உச்சிக் கொம்பல்ல; அது நமக்கு ஒரு தற்காலிக வீடுதான். அடுத்த, இருபது வருஷங்களுக்குள்ளாக நாம் இதைவிட நேர்த்தியான வீட்டில் வசிப்போம். ஆம்; அமெரிக்காவிலேயே நேர்த்தியான வீடு; அதை நாம் பணம் கொடுத்து வாங்கவோ, அல்லது அதற்கு வாடகை கொடுக்கவோ கூட வேண்டாம். மக்களே நாம் அங்கே வசிப்பதற்கான செலவுகளை ஏற்றுக் கொள்ளுவார்கள்.''

லிங்கனுக்கு அவள் பேச்சு விளங்கவில்லை. ''அது என்ன அப்படி ஒரு வீடு?'' என்று அவன் கேட்டான்.

அவள் மகிழ்ச்சி பொங்கச் சிரித்துக் கொண்டே, ''புரியவில்லையா? 'ஓயிட் ஹவுஸ்' தான்'' என்றாள்.

அவனும் அவளுடன் சேர்ந்து சிரித்தான். பிறகு சொன்னான்: ''நிச்சயமாகச் சொல்லுகிறேன் மோலி; என் ஆசை இத்தனை உயரத்துக்கு எட்டவே எட்டாது.''

''உண்மையாகவா? அப்படியானால் நீங்கள் முப்பதாவது வயசிலேயே மத்திய சட்ட சபையில் இடம் பெற முயன்றீர்களே அது பொய்யா? கடனாளியாக இருந்தும், வருங்காலம் சூனியத்துடன் விளங்கி வந்தும், உங்கள் ஆசை அதற்குத் தாவிற்று என்றால், இப்பொழுது ஜனாதிபதியாக வேண்டும் என்று மாத்திரம் ஏன் ஆசைப் படக்கூடாது? சட்ட சபையை அடையும் ஆவலுக்கும், 'ஓயிட் ஹவுஸை' அடையும் ஆவலுக்கும் தரத்தில் தான் வித்தியாசமே தவிர விதத்தில் இல்லையே!''

அவளுடைய தர்க்க வாதம் அவனை மகிழச் செய்தது. அவன் சொன்னான்: ''மேரி டாடு! நீ ஆணாகப் பிறந்திருக்க வேண்டும்.''

பிறந்திருந்தால் புகழ் பெற்ற வக்கீலாக விளங்கியிருப்ப தோடு, 'ஒயிட் ஹவுஸில்' வாழும் தகுதியை நீயே பெற்றும் இருப்பாய்.''

இதற்குப் பதில் சொல்ல அவள் சிறிது சிரமப்பட வேண்டியிருந்தது. இருந்தாலும் அவள் சொன்னாள்: ''ஆனல் ஏற்கனவே நான் ஒரு பெண்ணைக் பிறந்துவிட்ட படியால் ஓர் ஆணின் கையைப் பிடித்துக் கொண்டுதான் இப்பொழுது அங்கே போயாக வேண்டியிருக்கிறது. அந்தப் பாக்கியத்தை எனக்கு நீங்கள் அளிப்பீர்களா?''

5

காதலர்களுக்கு ஏற்ற மாசம் அக்டோபர். இனிமையான காற்று; மிதமான வெப்பமுடைய வெயில்; இவற்றோடு எங்கும் பச்சைப் பசேலென்ற சூழ்நிலையும் சேர்ந்து காதலர் களை மகிழ்விக்கும் மாசம் அது.

ஒவ்வொரு நாளும் பகல் சாப்பாட்டுக்குப் பிறகு மேரி ''ஜர்னல்'' ஆபீசுக்குப் போய் லிங்கனைச் சந்திப்பாள். அவர்கள் இருவரும் ''தி ஓல்டு ஸோல்ஜர்'' பத்திரிகை வேலைகளில் ஈடுபடுவார்கள். சிலசமயம் அவள் அவனுக்குக் கடிதம் எழுதிக் கொடுத்து உதவுவாள். மாலை நான்கு மணிக்கு அவர்கள் பாதசாரி சங்க அங்கத்தினர்களுடன் சேர்ந்து வெளியே சுற்றப்போவார்கள். இருட்டிய பிறகு அவர்கள் அங்கத்தினர்களுள் யாராவது ஒருவர் வீட்டில் கூடி இரவுச் சாப்பாடு சாப்பிடுவார்கள். அடிக்கடி அவர்கள் டிப்பெகானே இசைக் கழகத்திலும் கலந்துகொள்ளுவார்கள். இந்த இசைக் கழகம், ''ஜர்னல்'' ஆபீஸ் இருந்த கட்ட டத்தின் மாடியில்தான் இருந்தது. விக் கட்சி இளைஞர் களும் யுவதிகளும் இந்தக் கழகத்துக்கு வந்து, பலவிதப் பாடல்களைப் பாடிக் களிப்பார்கள்.

ஒவ்வோர் இரவும் இக்கழகத்தில் சுமார் முப்பது-நாற் பது யுவதிகளும், சுமார் நூறு இளைஞர்களும் கூடுவார்கள். மேரிதான் அவர்கள் பாடல்களுக்கு பியானே வாசிப்பாள். ஆப்ரஹாம் இப்பொழுது மிகவும் உற்சாகமாக இருந்தான். மாகாண சட்ட சபையில் ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றதால் ஏற்பட்ட ஏமாற்றத்தை, வரப்போகும் ஜனதி பதித் தேர்தலில் ஹாரிஸனுக்கு வெற்றி தேடிக் கொடுப் பதற்கான முயற்சியில் அவன் மறந்துவிட்டான். வக்கீல் தொழிலில் அவனுக்குப் போதிய வழக்குகளும் இல்லை; போதிய கட்சிக்காரர்களும் இல்லை; ஆகையால் அன்றன்று

பகலில் தனது அரசியல் வேலைகள் முடிந்ததும், அவன் நேரே எட்வர்ட்ஸின் மாளிகைக்குத்தான் வருவான். அவர்கள் இப்படி எப்பொழுதும் ஒன்றாக இருந்ததை யாரும் அதிகமாகச் சட்டை செய்ததாகத் தெரியவில்லை. சட்டை செய்திருந்தாலும், அரசியல் விவகாரமாகத்தான் அவர்கள் இப்படிக் கூடித் திரிகிறார்கள் என்றே நினைத்திருப்பார்கள்.

ஒரு நாள் அவர்கள் இருவரும், நினியன் மற்றும் எலிஸபெத்துடன், மேஜர் எலிஜா இவெஸ் என்பவரின் பண்ணையில் நடந்த ஸாங்கமன் ஜில்லா விவசாய சங்கத்தின் பொருட்காட்சிக்குப் போயிருந்தார்கள்.

அப் பொருட்காட்சியில் சிறந்த எருதுகளுக்கான போட்டி நடந்தது. இப்போட்டியில் நினியனின் எருது ஒன்று இரண்டாவது பரிசு பெற்றது. மற்றொரு நாள் அவர்கள் ஒரு வனவிலங்குக் காட்சிக்கும், சர்க்கஸுக்கும் போனார்கள். இந்த வனவிலங்குக் காட்சியிலும் சர்க்கஸிலும், ஒட்டைச் சிவிங்கியும், யானையும் இருந்தன. ஸ்பிரிங்ஃபீல்டுக்கு அவ்விரு மிருகங்களும் புதியவை. ஆகையால் திரளான மக்கள் அவற்றைக் காணக் கூடினர். பாவம்; அந்த யானையை ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குக் கொண்டு போகும்போது, படுதாவால் முழுவதும் மூடித்தான் கொண்டு போவார்கள். ஏனென்றால் யானையைப் பார்த்திராத அப்பக்கத்து மக்கள் அதைத் தெருவிலேயே பார்த்துவிட்டால், பிறகு இவர்களுடைய சர்க்கஸுக்கோ, வனவிலங்குக் காட்சிக்கோ பணம் கொடுத்து வருவார்களா?

அவர்கள் எங்கேயாவது வெளியே நடந்துபோகும்போது, ஹெளகனின் மாளிகைப் பக்கம் போய் விடாதபடி ஆப்ரஹாம் மிகுந்த எச்சரிக்கையோடு இருந்தான். மேரியும் பிறகு அவ்வீட்டைப்பற்றிய பேச்சை அவனிடம் எடுக்கவேயில்லை.

அநேகம் நாட்களில் இரவு நேரத்தில் அவர்கள் எட்வர்ட்ஸ் வீட்டு ஹாலில் கணப்பின் முன் அமர்ந்து புத்தகம் படிப்பார்கள். ஆப்ரஹாமுக்குச் சரித்திரப் புத்தகங்களைப் படிப்பதில்தான் ஆவல் அதிகம். முக்கியமாக தேர்தல்களைப் பற்றி அச்சரித்திரங்கள் என்ன சொல்லுகின்றன என்பதை அறிவதில் அவனுக்கு மிகுந்த ஆர்வம். ஆகையால் மேரி உலக சரித்திரப் புத்தகங்களிலிருந்து தேர்தல் பற்றிய பகுதிகளைப் பொறுக்கி அவனுக்குப் படித்துக் காட்டுவாள். ஆனால் அவன் அந்தத் தேர்தல் சம்பவங்களை விட அதை எழுதிய ஆசிரியரின் எழுத்துத் திறமையில் லயித்து விடுவான். ஒரு தடவை, ஓர் ஆசிரியரைப்பற்றிக் குறிப்பிடுகையில் அவன் சொன்னான்: ''சின்னஞ்சிறு கருத்துக்களைச் சொல்லவும் அதிக

பட்சம் வார்த்தைகளே உபயோகிப்பதில் இந்த ஆசிரியருக்கு இணையே கிடையாது.''

மற்றொரு சமயம் அவள் கிரேக்க சரித்திரத்திலிருந்து, சிக்கலான நீண்ட பகுதி ஒன்றை அவனுக்குப் படித்துக் காட்டி விட்டு, அதை அவன் ஒப்புக் கொள்ளமாட்டான் என்று எண்ணினாள். ஆனால் அவன் சொன்னான்: ''இல்லை, இல்லை; அப்படி ஒன்றும் இல்லை. நூல் நீளமாக இல்லாவிட்டால் பட்டத்தை வானத்தில் அதிக உயரம் பறக்கவிடமுடியாது.''

தன்னை அறியாமலேயே இப்பொழுது மேரியிடம் அவனைக் கவர்ந்திழுக்கும் தன்மைகள் ஏற்பட்டன. எப்பொழுதும் அவன் கைகளோடு தன் கைகளைக் கோத்துக் கொண்டாள். அவனுடைய புஜத்தை அடிக்கடி தடவிக் கொடுத்தாள். அவனுக்குப் பிடித்தமான விஷயங்களையே பேசினாள். எப் பொழுதும் வனப்பு மிக்கவளாக விளங்கத்தக்க ஆடைகளையே அணிந்து கொண்டாள். ஆண்களைக் கவரத் தன்னைப் போன்ற பெண்கள் கையாளும் வழிகளையெல்லாம் கையாண்டாள். அவள் உள்ளத்தில் காதல் ஏற்படும் வரை அதே வழிகளை அவள் எள்ளி நகைத்து வந்தாள். ஆனால் இப்பொழுது அவை அவளுக்கு நல்லவைகளாகப்பட்டன. அவளுடைய தோழமை அவனுக்கும் சந்தோஷத்தை அளித்தது. இப் பொழுதெல்லாம் அவனுக்கு முன்போல் அந்த தலைவலிகூட ஏற்படுவதில்லை. முன்பெல்லாம் 'குளிர் காலத்து நடுக்கம் வசந்த காலம் வரைத் தன்னை விட்டுப் போவதில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தவன், இப்பொழுது கடுமையான குளிரில் கூட ரொம்ப சௌகரியமாக, நல்ல ஆரோக்கியத் துடன் காணப்பட்டான்.

''இப்பொழுதெல்லாம் நீங்கள் ஆழ்ந்த கருத்தோடு காரியங்கள் செய்கிறீர்கள்'' என்று மேரி ஒரு சமயம் லிங்கனைப் பாராட்டியபோது அவன் சொன்னான்: ''எப் பொழுதும் நான் இம்மாதிரி இருந்ததில்லை. மேரி என்ற பெண்ணைப்பற்றி முன்பு சொல்லியிருக்கிறேன் அல்லவா? ஒரு சமயம் நாங்கள் இருவரும் வேறு சிலருடன் குதிரை சவாரி செய்து கொண்டு பௌலிங் கிரீன் என்ற இடத்துக்குப் போனோம். வழியில் ஓர் ஆழமான நீரோடையைக் கடக்க வேண்டியிருந்தது. நான் என் போக்கில் எல்லோருக்கும் முன்னால் அந்த ஓடையைக் கடந்து அக்கரைக்குப் போய் விட்டேன். எங்களுடன் வந்த இதர இளைஞர்கள் தாங் கள் அழைத்து வந்திருந்த பெண்களுக்கு ஓடையைக் கடக்க உதவி புரிந்தனர். ஆனால் நான் அப்படிச் செய்யாமல் மேரியை அசட்டை செய்து விட்டுப் போய் விட்டதில் அவ ளுக்கு மிக்க வருத்தம் அவள் இதைப் பற்றிக் குறை கூறிய

போது 'தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளத் தெரிந்த வள் நீ என்று நான் நினைத்தேன்' என்றேன். அன்றிரவு அவள் தன் சகோதரியிடம் சென்று, 'பெண்களுக்கு எது மகிழ்ச்சியளிக்கும் என்பதை அறியாத மண்டு இந்த லிங்கன்' என்று கூறினாளாம்.''

''நீங்கள்தான் அவள் மீது காதல் கொண்டிருக்கவில் லையே; அதனால் அப்படிச் செய்தீர்கள். ஆனால் காதல் வைத்துள்ள என்னை அப்படி மூழ்கச் செய்து விட மாட்டீர் களே?'' என்று கேட்டாள் மேரி.

''நிச்சயமாக மாட்டேன் மோலி. அன்பு கொண்ட யாரையும் நான் கைவிடமாட்டேன். 1830-இல் எங்கள் குடும் பம் இல்லினாய்ஸ் மாகாணத்தில் குடியேற வந்து கொண்டி ருந்தது. வண்டியில் சாமான்களையெல்லாம் ஏற்றிக்கொண்டு நாங்கள் வந்து கொண்டிருந்தோம். வழியெல்லாம் ஒரே உறைபனி. பனி உறைந்திருந்த நீரோடை ஒன்றை நாங்கள் கடந்து வர வேண்டியிருந்தது. மிகுந்த சிரமத்துக்குப் பிறகு நாங்கள் ஒருவாறு அந்த ஓடையின் எதிர்க் கரையை அடைந் தோம். அப்பொழுதுதான் அக்கரையில் எங்கள் நாயை விட்டு வந்து விட்டதை நான் கவனித்தேன். பொழுது இருட்ட ஆரம்பித்து விட்டது. அந்த நாய்க்காக நான் மீண்டும் ஓடையைக் கடந்து அக்கரைக்குப் போக வேண் டாம் என்றார் என் தந்தை. ஆனால் நான் பூட்ஸையும், ஸ்டாக்கிங்ஸையும் கழற்றி வீசி விட்டு ஓடையின் அக்கரைக்கு நீந்திப் போய், குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த அந்த நாயைத் தூக்கிக் கொண்டு திரும்பி வந்தேன். இவ்வளவும் ஏன் செய் தேன் தெரியுமா மோலி? நான் அந்தப் பெண் நாயை நேசித் ததால் தான்.''

ஆப்ரஹாம், நாயுடனா என்னை ஒப்பிட்டு.....'' என்று அவள் ஏதோ பேச வாயெடுத்தாள். ஆனால் அவன் கண்களில் அச்சமயம் சிரிப்பொளி மிகுந்ததைக் கண்டு, தான் கோபிப்பதைக் கண்டு மகிழவே அவன் இக்கதைகளையெல் லாம் சொன்னான் என்பதைப் புரிந்து கொண்டு மேரி தன்னை அடக்கிக் கொண்டாள்.

லிங்கன் ஒன்றுக் கொன்று மாறுபட்ட சுபாவமுடையவன் என்பதை அவள் கண்டு கொண்டாள். ''முரட்டுத்தனம் ஒரு புறமும், ஒழுக்கம் ஒருபுறமும் இருக்கின்றன அவரிடம். துயரம் ஒருபக்கம் இருந்தாலும் சிறந்த நகைச்சுவையும் இருக்கிறது. மெலிந்த உடல்; ஆனால் அந்த உடலிலோ அசுர பலம். வாழ்வது நாடோடி வாழ்க்கை; ஆனால் அவருக்கு இருக்கும் ஆசைகளோ வானமுகட்டை எட்டுபவை. கோமாளித்தனத் துக்கு எதிராக மற்றவர் வாதங்களைத் தகர்த்தெறியும் தர்க்க

ஞானம். காதல் பசி இருக்கிறது; ஆனால் பெண்களைக் கண்டால் கூச்சப்படும் சுபாவம். ஜனநாயகக் கட்சிக்காரர்களின் சூழ்நிலையில் வளர்ந்தவர். 'விக்' கட்சியின் மீது விசுவாசம் கொண்டவராக விளங்குகிறார். ஆழங்காண முடியாதவர்; மெல்லிய இதயம் படைத்த எந்தப் பெண்ணும் இவரை மணந்து கொண்டு வாழ முடியாது. ஆமாம்; மெல்லிய இதயம் படைத்தவளுக்கு இவரைப் போன்றவரிடம் காதலே ஏற்படாதே!'' என்றெல்லாம் மேரி எண்ணிக் கொண்டாள்.

விக் கட்சி ஜெயித்தால் ஹென்ரி கிளே ஜனாதிபதியாக வாஷிங்டன் செல்வார். அவரோடு தன் தந்தையும் செல்வார்; தானும் போகலாம் என எண்ணியிருந்த அவள், இப்பொழுது அதே விக் கட்சியின் வெற்றி மூலம் ஆப்ரஹாமின் மனைவியாக அங்கே போகலாம் என்று ஆசைப்படுவதுதான் எத்தனை விசித்திரமானது. ஆனால் அது விசித்திரமாக இருந்த போதிலும், அந்த நன்னாளை அவள் ஆவலோடு எதிர்பார்த்தாள். அங்கே ஓர் அருமையான வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். வசதியாக வாழவேண்டும்; தலைநகரின் பிரமுகர்களுடன் கலந்து பழக வேண்டும்; ஆப்ரஹாமின் நெட்டை உருவத்துக்கேற்ப அவர் எல்லோரிலும் உயர்ந்தவராகக் கருதப்படும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றெல்லாம் அவள் திட்டங்களிட்டாள்.

கடைசித் தடவையாக, தேர்தலுக்கு முன் செய்ய வேண்டிய பிரசாரத்துக்காக ஆப்ரஹாம், ஸ்பிரிங்ஃபீல்டிலிருந்து போக வேண்டி வந்தபோது அவனுக்குப் போகவே மனசில்லை.

அவளும் அவனுடைய பரிதவிப்பைப் பார்த்து விட்டு, ''நீங்கள் போகத்தான் வேண்டுமா? ஏற்கனவே பல மாதங்களாகச் செய்துவந்த பிரசாரங்கள் மூலம் உங்கள் கடமையை நிறைவேற்றிவிட வில்லையா?'' என்று கேட்டாள்.

''இரண்டே இரண்டு வாரங்கள்தான் மோலி. நான்லாரென்ஸ் மாகாணம் வழியாகத் திரும்பி அங்குள்ள வோட்டுக்களை நம் கட்சிக்குச் சேர்த்துவிட்டு வரவேண்டும். இதற்கு பத்தொன்பது டாலர் கூலி. அது என் சுற்றுப் பிரயாணச் செலவுக்குப் போதும்,'' என்றான் அவன்.

அவர்கள் அன்புடன் முத்தமிட்டுக்கொண்டு பிரிந்தார்கள். ஆப்ரஹாமின் தலை மறையுமட்டும் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள், மேரி. பிறகு, 'தேர்தல்கள் முடிந்ததும் அவர் திரும்பி வருவார். உடனே நாங்கள் மணம் செய்து கொள்ளுவோம்' என்று எண்ணிக்கொண்டாள்.

6

ஸ்பிரிங்ஃபீல்டு ஒரே அரசியல் கொந்தளிப்பு நிறைந்த ஊராகி விட்டது. வியாபாரம், தொழில் எல்லாம் ஸ்தம்பித்து விட்டன. விக் கட்சிக்காரர்களும், ஜனநாயகக் கட்சிக் காரர்களும், வோட்டுச் சேகரிக்கும் இறுதி முயற்சியில் ஈடுபட்டனர். விக் கட்சிக் காரர்கள், அமெரிக்கன் ஹவுஸின் தென்புறம் ஒரு பெரிய அரங்கம் அமைத்துப் பிரசங்கங்கள் நிகழ்த்தினர். ஒவ்வொரு மாலையும் மேரி இப்பிரசங்கங்களைக் கேட்கப் போனாள்.

நவம்பர் இரண்டாம் தேதி தேர்தல். அதற்குள் அவளுக்கும் குடும்பத்தினருக்கும் சந்தோஷமளிக்கும் செய்திகள் பல வந்தன. அக்டோபர் முப்பதாம் தேதி தேர்தல் நடந்த பெனிசில்வேனியா, ஓஹியோ போன்ற ஜில்லாக்களில் ஹாரிஸனுக்கு மகத்தான வெற்றி. அடுத்த இரண்டு நாட்களில் மெயின், வெர்மாண்ட் ஆகிய ஜில்லாக்களிலும் விக் கட்சியே வெற்றி பெற்றதாகச் செய்தி வந்தது. தவிர ஜனநாயகக் கட்சியின் அரணாக விளங்கிய கெண்டக்கி, டென்னஸி, ஜார்ஜியா ஆகிய இடங்களும் ஹாரிஸனுக்கு வெற்றி தந்தன. அதேபோல் ஸ்பிரிங்ஃபீல்டிலும் அதன் சுற்றுப்புற நகரங்களிலும் விக் கட்சிக்கே பெருவாரி வோட்டுக்கள் கிடைத்து விட்டால், இல்லினாய்ஸ் மாகாணத்தைப் பற்றிய கவலை ஹாரிஸனுக்கு இராது. அதோடு அது விக் கட்சிக்கு ஒரு மகத்தான வெற்றியும் ஆகிவிடும்.

இப்படியெல்லாம் அவள் நினைத்திருக்க ''ஜர்னல்'' ஆபீஸில் லிமியன் ஃபிரான்ஸிஸ் அத்தனை உற்சாகமாகக் காணப்படவில்லை.

''லிமியன்! என்ன நீங்கள் இப்படி உற்சாகமற்றவர்களாக இருக்கிறீர்கள்? ஸாங்கமன் ஜில்லாவில்கூட நமக்கே வெற்றி என்று இன்று பகலில் நான் கேள்விப்பட்டேன்'' என்றாள் மேரி.

லிமியன் சில கணக்குகளைப் போட்டுக் காட்டிக் கொண்டே, ''இதோ பார் மேரி. இந்த வெற்றியெல்லாம் சேர்ந்தாலும் நமக்கு சுமார் ஆயிரம் வோட்டுகள் குறைவாக இருக்கின்றன. அப்புறம் ஜனநாயகக் கட்சிக்கு முழு வோட்டுகளும் விழக்கூடிய தெற்கத்தியப் பிரதேசங்கள் வேறு இருக்கின்றன'' என்றான்.

''ஆப்ரஹாம் அங்கே வாரக் கணக்காகப் பிரசாரம் செய்திருக்கிறாரே! அவர் முயற்சிக்கு அப்பிராந்தியத்தில் சில வோட்டுகளாவது கிடையாதா?''

''சில வோட்டுகள் கிடைக்கக்கூடும். ஆனல் அது போதாது நமக்கு. மத்திய இல்லினுய்ஸிலும், வடக்கு இல்லினுய்ஸிலும் நமக்கு பெருவாரி வோட்டுகள் கிடைத்தால் தான் தெற்குப் பிரதேசத்தில் ஜனநாயகக் கட்சி பெறும் வெற்றியை நாம் ஈடு செய்யமுடியும்.''

''ஆனல் வாஷிங்டனில் விக் கட்சி நிர்வாகம் ஏற்பட்டு விட்டால், நாம் அதைப் பற்றி அதிகம் கவலைப்பட வேண்டுமா?''

ஸிமியன் ஃபிரான்ஸிஸ் ஒரு விநாடி அவளை ஆழம் பார்ப்பதுபோல் பார்த்துவிட்டு, ''இந்தக் கேள்விக்கு லிங்கனையே விடை தரச்செய்கிறேன்'' என்முன்.

ஒரு நிமிஷம் அங்கே அமைதி நிலவிற்று.

பிறகு, ''அப்படியானல் அவர் திரும்பிவிட்டாரா?'' என்று மேரி வியப்புடன் கேட்டாள்.

''ஆமாம்; நேற்றிரவு.''

அன்று மாலையில் லிங்கன் எட்வர்ட்ஸ் மாளிகைக்கு வந்ததும், மேரியால் அவன் கோலத்தைப் பார்த்துச் சகிக்கவே முடியவில்லை. அவனுடைய உடல் நோய்வாய்ப் பட்டவனின் உடல் போல் இருந்தது. கண்களைச் சுற்றித் தோல் அநேக மடிப்புகளாகச் சுருங்கியிருந்தது. தாடையில் முன்னிலும் ஆழமாகக் குழி விழுந்திருந்தது. அது அவனுடைய முகத் தோற்றத்தையே மாற்றி விட்டிருந்தது. அவனுடைய அடர்ந்த கரிய கேசம் சீவப்படாமல் நெற்றியில் புரண்டது. தோள்களும், இடுப்பும், முழங்கால்களும் தொய்வுற்றிருந்தன. ஆனல் இவை எல்லாவற்றியிலும் மோசமாக இருந்தவை அவனுடைய கண்கள்தாம். அவை இருளடைந்து வேதனை நிறைந்து காணப்பட்டன. இடது கண் மேலே ஏறி அவதியால் துடிப்பவன் கண்போல் தோற்றமளித்தது.

அவளுக்கு அவன் கோலத்தைப் பார்த்ததும் அழ வேண்டும்போல் இருந்தது. தாய், குழந்தையைக் கையிலேந்திச் சீராட்டுவதுபோல் அவனைக் கையிலேந்திச் சீராட்ட வேண்டும் போல் இருந்தது. அவனுடைய உலர்ந்த உதடுகளை முத்தமிட்டு துயரத்தையெல்லாம் துடைக்க வேண்டும் போல் இருந்தது. உணர்ச்சியற்ற ஜடமாக அல்லவா அவர் தோற்றமளிக்கிறார்!

''ஆப்ரஹாம்! உங்களை மீண்டும் மனப்பிராந்தி பற்றிக் கொண்டு விட்டது போலிருக்கிறது! எங்கே பிடித்தீர்கள் உங்கள் அருமை நண்பனை? லாரென்ஸ்வில்லிலா?'' என்று அவள் வருத்தத்தோடு கேட்டாள்.

அவன் கரகரத்த குரலில் சொன்னான்: "இல்லை; லாரன்ஸ்வில்லில் நான் பிடித்ததெல்லாம் வோட்டுப் பெட்டிகள்தாம்."

"சந்தேகமில்லை, அந்தப் பெட்டிகளுக்கிடையேயிருந்து நீங்கள் ஓர் விரியன் பாம்பையும் பிடித்து அதனுல் தீண்டப் பட்டிருக்கவேண்டும்."

"விரியன் பாம்பல்ல மோலி; ஜனநாயகக் கட்சிக் காரர்கள்தாம். அவர்கள்தாம் என்னைத் தீண்டி விட்டார் கள். அந்த ஊரில் வெற்றியை அவர்கள் தட்டிக்கொண்டு போய் விட்டார்கள். இரண்டாயிரம் வோட்டுகளே வித்தி யாசம். இருந்தாலும் என்ன? வெற்றி அவர்களுக்குத் தானே? என் வாழ்வில் ஓர் ஆண்டு பாழாகி விட்டது. என் கடன்கள் வளர்ந்து விட்டன. என்னுடைய வக்கீல் தொழில் நசித்து விட்டது. ஸ்டீஃபன் டக்ளஸ் மீண்டும் ஒருமுறை நம் மண்டையில் அடித்தே விட்டான்."

"எனக்குத் தெரியும். இதனுல் உங்களுக்கு ஏற்பட் டுள்ள மனவருத்தமும் எனக்குத் தெரியும். அதை உங்கள் கண்களே கூறுகின்றன. ஆனுல் நீங்கள் மனம் வருந்து வதால் அது இனி சீராகிவிடப் போகிறதா?"

அவன் ஸோபாவில் சாய்ந்து கொண்டான். இரண்டு கைகளையும், கால்களுக்கிடையே, தரையில் இடிக்கும்படி தொங்க விட்டுக் கொண்டு, "இதெல்லாம் எனக்கு வேண் டும்; நன்றுக வேண்டும்" என்றான் நிராசையுடன்.

அவள் பச்சாத்தாபத்துடன் புன்னகை புரிந்தாள். "கடந் ததைப்பற்றிக் கண்ணீர் விட்டு என்ன பயன்? நான் உங்களை மீண்டும் உற்சாகமுள்ளவராக்கி விடுகிறேன்; கவலைப்படா தீர்கள்."

அவனுடைய துயரம் அறையெங்கும் எதிரொலிப்பது போலிருந்தது. மேரியால் அதைத் தாங்க முடியவில்லை. அவள் அவன் அருகில் சென்று, தோள்மீது கை வைத்துக் கொண்டு, "உங்களுக்குக் கொஞ்சம் காபியும் பலகாரங்களும் கொண்டு வருகிறேன். இப்பொழுது உங்களுக்குத் தேவை யானதெல்லாம், ஓய்வும் உற்சாகமுந்தான். நியூ ஸைலத்தில் வாக்காளர்களிடம் நீங்கள் என்ன சொன்னீர்கள் என்பதை நினைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். 'நான் அரசியலில் பின்னணியில்தான் நிற்க வேண்டுமென்பது உங்கள் கருத் தானுல், அதைவிடப் பெரிய தோல்விகளை அநுபவித்துப் பழக்கப்பட்டவன்தான் நான்' என்று கூறவில்லையா? அப்படிப் பேசிவிட்டு, இப்பொழுது தோல்விக்காக வருந்தலாமா?"

அவளுடைய பேச்சு அவனுக்குச் சிறிது ஆறுதலை அளித்தது போலும். அவன் சொன்னான்: ''ஆனால் இந்த விஷயம் நீ நினைப்பதைவிட மோசமானது. ஸ்டீவர்ட்டும் நானும் எங்கள் கூட்டுவக்கீல் தொழிலை மூட்டை கட்ட வேண்டியதுதான். ஏனென்றால் எங்களிடம் இப்பொழுது உள்ள வழக்குகள் மிகவும் குறைவு. நாங்கள் கூட்டுச் சேர்ந்த வருஷத்தில் ஸாங்கமன் ஜில்லா கோர்ட்டில் ஜூலை மாதத்தில் மாதத்திரம் அறுபத்தாறு வழக்குகள் எங்களுக்கு வந்தன. இப்பொழுது இந்தத் திங்கட்கிழமை கோர்ட் திறந்ததும் நான் வாதாட வேண்டியிருக்கும் வழக்குகள் எத்தனை தெரியுமா? பதினெட்டே பதினெட்டுத்தான். அதிலும் பெரும்பான்மையானவை 'வாய்தா'ப் போடக்கூடியவை; இல்லாவிட்டால் தோற்றுப்போகக் கூடியவை.''

''ஸ்டீவர்ட்டின் நிலை இப்படி ஆனதற்கு நான் விசனிக்கிறேன். ஆனாலும் நீங்கள் இருவரும் அரசியலில் நல்ல செல்வாக்குப் பெற்றுவிட்டீர்களே? ஸ்டீவர்ட் உங்களை ஒதுக்கிவிட்டால், உங்களுக்குப் புதிய கூட்டாளி ஒருவன் கிடைக்க மாட்டானா, என்ன? புதிய கட்சிக்காரர்கள் வர மாட்டார்களா, என்ன? நீங்கள் நல்ல வக்கீல் என்று பெயர் பெற்றிருக்கிறீர்கள். சட்டசபையில் விக் கட்சியின் தலைவராக விளங்குகிறீர்கள்.''

அவன் உடலை முறுக்கி இதற்கெல்லாம் மறுப்புத் தெரிவித்தான். பிறகு சொன்னான்: ''கடந்த ஆறு மாதத்தில் என் வருமபடி என்ன தெரியுமா? லாரென்ஸ்வில்லில் தேர்தல் வேலையைச் செய்ததற்காக அரசாங்கத் தணிக்கையாளர் பத்தொன்பது டாலர் அளித்தாரே, அதைத் தள்ளிவிட்டால் என் வருவாய் மிக மிகக் சொற்பமே.''

மேரி எழுந்து சென்று அவனுக்கு ஒரு கோப்பை காபி கொண்டு வந்து கொடுத்தாள். பிறகு அவன் முன் நின்று கொண்டு சொன்னாள்: ''ஆப்ரஹாம்! உங்களுடைய வேடிக்கைப் பேச்செல்லாம் எங்கே போய்விட்டன? கதை சொல்லும் திறமையனைத்தும் எங்கே மறைந்து விட்டன?'' அவள் அவனைப்போல் மூக்கால் பேசிக்கொண்டே, முன்பு ஒரு சமயம் அவன் சொன்ன வார்த்தைகளையே கூறிக் களிப்பூட்ட முயன்றாள்: ''நான் முதன் முதலில் சட்டசபையில் பேச எழுந்தபோது என்ன நடந்தது தெரியுமா, மோலி? 'சபாநாயகர் அவர்களே!' என்று திரும்பித் திரும்பிச் சொல்லிக் கொண்டிருந்தேனே தவிர எனக்கு அதற்குமேல் பேசவரவில்லை. கடைசியில் பார்வையாளர்களில் ஒருவர் எழுந்திருந்து, ''சபாநாயகர் அவர்களே! கண்ணியம் பொருந்திய நண்பர் அவர்கள் திரும்பித் திரும்பி 'சபாநாயகர் அவர்

களே!' என்று கூறிக் கொண்டிருக்கிறாரே யன்றி மேலே ஒன்றும் பேசாததால், பேச விஷயம் ஒன்றுமில்லாமல் தவிக்கிறார் என்று அர்த்தமாகிறது. ஆகையால்.....'''

அவன் கண்களில் ஒரு கணம் மகிழ்ச்சி ஒளி தோன்றிற்று. ஆனால் மின்னல் வேகத்தில் அது மறைந்துவிட்டது. அவள் தோல்வி மனப்பான்மை வெளிப்பட அவனை நோக்கி விட்டுப் பிறகு அந்த அறையிலிருந்தே, அந்த வீட்டிலிருந்தே வெளியே போய்விட்டாள்.

மறுநாள் காலையில் மேரி அலங்கரித்துக் கொண்டு தன் சகோதரி ஃபிரான்ஸெஸ்ஸைப் பார்க்க குளோப் ஹோட்டலுக்குச் சென்றாள். உச்சி வேளையில் ஃபிரான்ஸெஸ்ஸின் கணவன் டாக்டர் வாலெஸ், ஹாஃப்மன் ரோ நாலாம் நம்பர் கட்டடத்திலிருந்த தனது மருந்துக் கடையிலிருந்து வந்தான்.

மேரி அவனிடம் சென்று, ''வில்லியம்! மனிதருக்கு மனப்பிராந்தி ஏற்படுவதற்குக் காரணம் என்ன?'' என்று வினவினாள்.

வில்லியம் எழுந்து வைத்திய நூல்கள் வைத்திருந்த கண்ணாடி அலமாரிக்குச் சென்று ''அநுபவ மருந்துக் கலைக் களஞ்சியம்'' என்ற புத்தகத்தை எடுத்து வந்தான். பிறகு அதைப் பிரித்துப் பார்த்து விட்டு, ''இந்தப் புத்தகத்தில் மனப்பிராந்தி ஒரு வியாதி என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் அது ஒரு நரம்புக் கோளாறுதான். பெரும்பாலும் பயத்தின் அடிப்படையில் அது ஏற்படுகிறது'' என்றான்.

''பயமா?'' அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ''எதைக் கண்டு பயம்?''

''பயம் என்பதையே கவலை என்று மாற்றிக் கொள். பாதுகாப்பைப் பற்றிய கவலை; இல்லாவிட்டால் வெற்றியைப் பற்றிய கவலை என்று எடுத்துக் கொள்ளலாம். சில சமயம் மிதமிஞ்சிய வேலையாலும் இவ்வியாதி தோன்றலாம். தொல்லைகளாலும், ஏமாற்றங்களாலும் ஏற்படலாம்.'' அவன் அப்புத்தகத்தை மேரியிடம் கொடுத்து, ''நீயே படித்துப் பாரேன். இதிலொன்றும் அப்படிப் புரியாத கலைச்சொற்கள் இல்லை'' என்றான்.

அவள் அதைப் படித்துப் பார்த்தாள்:

''**மனப் பிராந்தி**: ஊக்கம் குன்றி வருவதாலும், ஒரு சாதாரண நோயினால் பெரிய ஆபத்து விளைந்துவிடக்கூடும் என்ற காரணமற்ற பீதியாலும் ஏற்படக் கூடிய ஒரு நோய். நோயாளி செய்யும் ஒவ்வொரு செயலும், முற்றிய நோயினாலும், தாங்க முடியாத வேதனையினாலும் செய்யப்படுவது

போல் ஒழுங்கற்ற முறையில் இருக்கும். தாங்க முடியாத தலைவலி இருப்பதாகவும், வெளிச்சத்தைக் காண முடியாமல் கண் கூசுவதாகவும் நோயாளிகள் கூறக்கூடும். தலையில் ஒரு மலையைப் புரட்டி வைத்திருப்பது போல் கனப்பதாகவும், அது நினைவையே பறித்து விடும் போல் இருப்பதாகவும் அவர்கள் கூறலாம். தலையை இடுக்கியில் வைத்து நசுக்குவது போன்ற வேதனை ஏற்படும். விழிகள் தெறித்து விழுந்துவிடும்போல் இருக்கும். பொறுக்க முடியாத கவலையும், தளர்ச்சியும், மூர்ச்சை அடைதலும், உடல் நடுக்கமும், எந்த நிமிஷமும் தனக்குச் சாவு வந்துவிடலாம் என்ற மனப் பயமும் நோயாளிக்கு ஏற்படலாம்.....''

''சிகிச்சை'' என்று குறிப்பிடப்பட்டிருந்த பகுதிக்கு வந்ததும் டாக்டர் வாலெஸ் சொன்னார்: ''அதை நானே சொல்லுகிறேன் மேரி. இதற்குச் செய்யவேண்டிய சிகிச்சை மிக எளிதானது. மருந்தோ மாயமோ இந்த நோய்க்குத் தேவையில்லை. நல்ல சாப்பாடு, ஓய்வு, தோழமை, சிரிப்பு, காதல் போன்றவைதாம் இதற்கு மருந்து.''

''காதலா? அது மிகவும் கசப்பான மருந்தாயிற்றே வில்லியம்? அதை விழுங்க மாட்டேன் என்று பல்லைக் கடித்துக் கொள்ளும் நோயாளியை எப்படி விழுங்கப் பண்ணுவது?'' என்றாள் மேரி நிராசையுடன்.

இதன் பிறகு பல நாட்கள் வரை லிங்கனைப் பற்றி ஒரு தகவலும் மேரிக்குக் கிட்டவில்லை. பின்னர், ஒரு நாள் இரவு வெகு நேரத்துக்குப் பிறகு அவன் அவளைத் தேடி வந்தான். அவள் அவனை உள்ளே அழைத்துச் சென்றாள்.

''மேரி! நாம் செய்து கொண்ட முடிவை மாற்றிக் கொள்ளுவதற்காகவே நான் இப்பொழுது வந்திருக்கிறேன்'' என்றான் அவன்.

''முடிவை மாற்றிக் கொள்ளவா?''

''ஆமாம், நான் ஒரு கோழை, மேரி. உனக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதி அனுப்பிவிடத்தான் நினைத்தேன். ஆனால் கடிதத்தை எழுதி, ஸ்பீடிடம் படித்துக் காட்டியபோது, அவன் அதைக் கிழித்துக் கணப்பில் போட்டுவிட்டு, 'உனக்குத் தைரியமிருந்தால் இதை அவளிடம் நேரே போய்ச் சொல்' என்று அனுப்பிவிட்டான்.''

அவன் வார்த்தைகள் அவளைத் திடுக்கிடச் செய்தன. ''நம்முடைய உறவைப் பற்றி ஸ்பீடிடம் பேசினீர்களா? ஏன் பேசினீர்கள், ஆப்ரஹாம்?'' என்று அவள் கோபத்தோடு கேட்டாள்.

''எனென்றால் அவன் என் நண்பன். உதவி தேவை யாக இருக்கும்போது நான் நண்பனையல்லாமல் வேறு யாரை நாட முடியும்?''

''அப்படியானால் நான் உங்கள் சிநேகிதி இல்லையாக் கும்?'' அவள் முகம் கடுமையாயிற்று.

''இதில் உன் தவறு எதுவும் இல்லை, மோலி.''

''ரொம்ப வந்தனம். ஆம்; நான் செய்த தவறெல் லாம் உங்கள் மீது காதல் கொண்டதுதானே!''

''நீ என் வார்த்தைகளைத் தப்பர்த்தம் செய்து கொள் ளுகிறாய்.''

''அக்டோபர் மாசத்தில் உங்களை ஆனந்தத்தில் ஆழ்த் திய அதே விஷயம், நவம்பரில் உங்களைத் துயரத்தில் ஆழ்த் தியிருக்கிறது. நான் யாரை நம்புவது, ஆப்ரஹாம்? அக் டோபர் மாசத்து லிங்கனையா? நவம்பர் மாசத்து லிங்கனையா? இல்லாவிட்டால் டிசம்பர் மாசத்துக்கு மூன்றாவது லிங்கன் ஒருவர் தோன்றக் கூடுமோ?''

அவன் சோகம் எதிரொலிக்கச் சிரித்தான். ''கோபம் உன் நாவைச் சூடாக்குகிறது மேரி.''

''அதே மாதிரி மனப் பிராந்தி உங்களைக் கண்டிப்பான வர் ஆக்குகிறது. உங்களுக்கு ஏதோ ஒரு விஷயத்தில் தோல்வி ஏற்பட்டு விட்டது என்பதற்காக எங்கேயாவது விழுந்து உயிரை விட்டுவிடுவீர்கள் போலிருக்கிறதே!''

''உயிரை விடமாட்டேன் மேரி, குளிர் காலம் முழுவதும் நிம்மதியாகத் தூங்கப் போகிறேன் -வட துருவக் கரடிகளைப் போல.'' ''ஆனால் அந்த உறக்கத்தில் பங்கு கொள்ள நான் அருகதையற்றவளா?'' என்று கேட்ட அவள், பிறகு மிகவும் அமைதியாக, ''ஆப்ரஹாம்! உங்க ளுக்கு என்மீதிருந்த காதல் வற்றி விட்டதா?'' என்று வின வினாள்.

''நான் அப்படிச் சொன்னேனா மேரி? காதல் எனக்கு ஏற்றதல்ல என்று தான் சொல்லுகிறேன். திருமண வாழ் வுக்கு என்னால் ஈடு கொடுக்க முடியாது என்று தான் கூறு கிறேன்.''

''ஆப்ரஹாம்! நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்களா, இல்லையா?'' என்று அவள் மீண்டும் கேட்டாள்.

''காதலிக்கிறேன்.''

அவள் இன்பக் கிளு கிளுப்பால் ஒரு கணம் கண்களை மூடிக் கொண்டாள்.

லிங்கன் தொடர்ந்து சொன்னான்: ''ஆனால் நான் கல்யாணம் செய்து கொள்ள முடியாது. ஏனென்றால் அதற்கேற்ற வருவாய் எனக்கு இல்லை.''

''நானே அதற்குக் கவலைப்படவில்லையே, நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?''

''ஏனென்றால் அது என் பொறுப்பாகிறது. வாழ்வில் உன்னைத் தோல்வியடையச் செய்ய நான் விரும்பவில்லை.''

''இன்னும் எவ்வளவோ முக்கியமான விஷயங்கள் மூலம் ஒரு பெண்ணுக்கு வாழ்வில் தோல்வி தோன்றுமிருக்கச் செய்ய முடியும்.''

அவன் முகத்தைச் சுளித்துக் கொண்டான். பிறகு அதிருப்தி பிரதிபலிக்கும் உரத்த குரலில் சொன்னான்: ''உன்னுடைய உலகம் பணக்கார உலகம் மேரி. என்னை மணந்து கொண்டு ஏழ்மையை மூடி மறைக்க வேண்டிய நிலை உனக்கு ஏற்பட வேண்டாம்.''

''நிச்சயமாக நான் அதை மூடி மறைக்க மாட்டேன்.''

''ஆம் மேரி; நீ செல்வத்தில் புரண்டு வளர்ந்தவள். கஷ்டம் என்றால் என்ன என்பது உனக்குத் தெரியாது. அந்த பிரம்மாண்டமான ஹெளகான் மாளிகையின் மீது உனக்கு எவ்வளவு ஆசை விழுந்திருக்கிறது என்பதைக் கவனிக்கையில்.....''

இப்பொழுது அவள் முகத்தைச் சுளித்தாள். ''ஆம்; அந்த மாளிகையை நான் விரும்பியது உண்மையே. ஆனால் என் விருப்பத்தை உங்கள் உள்ளத்தில் புகுத்த முயன்றது என் தவறுதான்.''

''இல்லை மேரி, நீ உன் மனத்தைத் திறந்து காட்டியது சரிதான். நீ அதுபோன்ற ஒரு மாளிகையில் வசிக்க வேண்டியவள்தான். அதற்குத் தேவையான சூழ்நிலை, பண்பாடு, பாரம்பரியம் எல்லாம் உனக்கு இருக்கின்றன.''

''மண்ணுங்கட்டி! அப்படிப்பட்ட உயர்நிலையில் வாழ வேண்டுமா, வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவள் நானல்லவா?''

''மேரி! பேசுவதில் உனக்கு இணையாக நிற்க என்னால் முடியாது.''

''ஆம்; காதலில் கூடத்தான்.''

''சரி; நான் வருகிறேன் மேரி. விசனிக்கிறேன். எதுவும் நிர்ணயிக்க முடியாத வருங்காலத்தை உடைய நான் உனக்கு எதையுமே வழங்குவதற்கில்லை.''

''நீங்கள் என்னைக் காதலித்துங்கூட எனக்கு வழங்க உங்களிடம் ஒன்று மில்லை என்று கூறுவதாலல் நாம் பிரிந்து விடுவதுதான் நல்லது.''

அவள் அவனைத் தாண்டி முன் வாசலுக்கு நடந்தாள். ''நீங்கள் இனி எனக்கு எவ்விதத்திலும் கட்டுப் பட்டவரல்ல, ஆப்ரஹாம்'' என்று கூறிவிட்டு, கதவைத் திறந்து, அவன் முகத்தைப் பாராமலே, ''குட்பை, ஆப்ரஹாம்'' என்றாள்.

அவன் ஓர் அடி எடுத்து வைத்தான். பிறகு தயங்கி நின்று அவளுடைய முகத்தைக் காண லேசாகத் திரும்பினான். மறு நிமிஷம் இருவரும் தாவி வந்து ஒருவரை ஒருவர் அணைத்துக்கொண்டனர்.

''என்னை மன்னித்து விடு, மோலி. நான் ஏதோ வேகத்தில் பேசிவிட்டேன். உனக்கு வழங்க என்னிடம் எவ்வளவோ இருக்கின்றன. என் அன்பு முழுவதுமே இருக்கிறது.''

மேரியின் கடுமையும், வேகமும் தணிந்து விட்டன. அவள் அவன் கையில் துவண்டாள்.

7

அவர்கள் உறவு அக்டோபர் மாசத்தில் உறங்கிக் கொண்டிருந்தது போலவேதான் இப்பொழுதும் இருந்தது. எனினும் அன்றைச் சம்பவத்தினால் ஒருவர் மனதை ஒருவர் புண்படுத்தி விட்டதன் காரணமாக அவர்களுடைய காதல் வளர்ந்து வலுப்பெற்றது.

பல நாட்கள் அவள் அலங்கரித்துக் கொண்டு அவனுக்காக இரவு ஒன்பது மணி வரைக் காத்திருந்து விட்டுப் பிறகு 'இனி அவர் வரமாட்டார்' என்று தன்னந்தனியே உட்கார்ந்து இராச்சாப்பாட்டை உண்ண நேரிட்டது. ஆகவே, அடுத்த தடவை ஆப்ரஹாமைச் சந்தித்தபோது இருவரும் சேர்ந்து இவ்விஷயமாக ஒரு முடிவு செய்தனர். அதாவது, அவன் தினந்தோறும் அவர்களைக் காண வரவேண்டியதில்லை. ஆனால் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவளோடு பகல் சாப்பாடு சாப்பிடவும், புதன்கிழமையன்றும், சனிக்கிழமையன்றும் இரவில் அவளைச் சந்திக்கவும் வர வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டனர். இந்த ஏற்பாட்டை டிசம்பர் மாதம் முதல் அமுலுக்குக் கொண்டு வருவதென்றும் அவர்கள் தீர்மானித்திருந்தனர். ஆனால் டிசம்பர் மாதம் முதல் புதன்கிழமையன்று 'வர இயலாது' என்று ஆப்ரஹாம் சீட்டுக் கொடுத்து அனுப்பிவிட்டான். அதே மாதிரிச் சீட்டு சனிக்கிழமையன்றும் வந்தது.

ஆனல் ஞாயிற்றுக்கிழமையன்று அவன் பகல் உணவுக்கு வந்தான். ''புதனன்றும், சனியன்றும் ஏன் வர இயலவில்லே?'' என்று மேரி கேட்டபோது, அவன், ''சும்மாதான்; வேடிக்கையாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்தேன்'' என்ருன்.

''வேடிக்கையாகப் பொழுது போக்கினீர்களா? அப்படியென்ருல்.....?''

''புதிய அரசாங்க மாளிகையின் முன்னறையில் 'ஸெனேட்' சபை, மக்கள்சபை அங்கத்தினர்களாகிய நாங்கள் கூடி அச் சபைகளின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் கிண்டல் செய்து கொண்டிருப்போம். பிரமாதமாக விவாதங்கள்கூட நடக்கும். ஸெனேட் சபையும் மக்கள் சபையும் கூடியிருக்கும்போது பேச முடியாத அல்லது பேசக்கூடாத விஷயங்களேயெல்லாம் இங்கே பேசித் தீர்ப்போம். ஒவ்வொரு விஷயத்துக்கும் ஒரு கமிட்டி உண்டு. நன்னடத்தை, சாந்தம், மற்றும் கொண்டாட்டங்களுக்கான கமிட்டியில் நான் ஓர் அங்கத்தினன்.''

''நல்ல ஆளைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள்'' என்று அவள் கடுமையாகக் கூறினுள்.

அவள் பேச்சைச் செவி மடுக்காமலே அவன் சொன்னன்: ''இந்த வெட்டிக் கூட்டங்கள் கூட ஆரம்பித்ததிலிருந்து கிளப்பில் நடக்கும் சூதாட்டமும், காப்பிக் கடையும் தூங்க ஆரம்பித்து விட்டன. எங்கள் கூட்டம் அவ்வளவு சுவாரசியமாக இருப்பதால் ஒரு மனிதன் கூட 'கிளப்' பக்கமோ, காப்பிக் கடைப் பக்கமோ தலேகாட்டுவதில்லே. இரு சபைகளிலும் கொண்டுவரப்படும் அர்த்தமற்ற மசோதாக்களேப் பற்றி நாங்கள் கேலி செய்வோம். சபையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பலர் இதன் மூலம் அறிந்து கொண்டுள்ளார்கள்.''

''உங்களுடைய இந்த வெட்டிக் கூட்டம் எவ்வளவு வேடிக்கையாக இருக்கும் என்பதையும், அதனல் என்ன என்ன நன்மைகள் ஏற்படும் என்பதையும் நான் தெரிந்து கொண்டேன். ஆனல் உங்களே நாலு நாட்களுக்கு ஒருமுறை காண்பதற்குக் கூட, நான் சட்டசபைத் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்று உங்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளும் அருகதை பெற்ருலன்றி முடியாது என்றல்லவா தோன்றுகிறது!'' என்ருள் மேரி.

அவர்களிடையே அந்தச் சண்டை ஏற்படுவதற்கு முன்பு, திருமணத்தைப் பற்றிய நினேவு இருவர் உள்ளத்திலும் மிகுதியாக இருந்தது. ஆனல் இப்பொழுது திருமண நினேவு அவர்களிடையேயிருந்து மறைந்து விட்டது போல் தோன்

றிற்று. முக்கியமாக ஆப்ரஹாமின் நடத்தை அப்படித் தான் இருந்தது. மேரியிடம் இன்னும் காதலை வளர்த்து வந்த போதிலும், திருமண நினைவையே தன் மனத்திலிருந்து விரட்டி விட்டது போலத்தான் அவன் நடந்துகொண்டான்.

சட்டசபைகள் கூட ஆரம்பித்ததும், ஊர் மீண்டும் கலகலப்படைந்தது, மாகாணத்தின் பல்வேறு ஜில்லாக் களின் பிரதிநிதிகள் தங்கள் குடும்பங்களுடன் வந்து சேர்ந் தனர். புதுப் புது மசோதாக்களைக் கொண்டு வரும் நோக் கத்தோடு வக்கீல்களும், தொழிலதிபர்களும் கூட ஸ்பிரிங் ஃபீல்டுக்கு வந்திருந்தனர். ஊரின் சமூக வாழ்க்கை மறு படியும் பெருகி விட்டது. அநேகமாக ஒவ்வொரு நாளும் விருந்துகளும், நடனங்களும் பல இடங்களில் நடந்தன. ஆனால் அவற்றுக்கெல்லாம் ஆப்ரஹாமைத் தன்னுடன் வருமாறு மேரி அழைத்தபோது அவன் மறுத்து விட்டான்.

''டிசம்பர் பத்தாம் தேதி முதல் அமெரிக்கன் ஹவுஸில் நடனம் நடக்கப் போகிறது. அது, சட்டசபையின் இந்தக் கூட்டம் முடியும்வரை தினசரி நடக்கும். அதற்கு நான் உன்னை அழைத்துப் போகிறேன். ஆனால் இந்த 'பார்ட்டி' களும் நடனங்களும் எனக்கு ஏற்றவையல்ல. இவற்றில் கலந்து கொண்டு எனக்குப் பழக்கமும் இல்லை'' என்றான் அவன்.

''எல்லாம் பழகிக்கொண்டால் தானே வரும்? எல்லோ ரும் நீங்கள் தங்களுடன் கலந்து பழக வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். ஒரு காரியம் செய்யலாம். எனக்கு வரும் அழைப்புகளில், நமக்கு மிகவும் வேண்டியவர்களின் அழைப் புகளை மாத்திரம் ஏற்றுக்கொள்ளுவோம். மீதியை நிராக ரித்து விடலாம். இது சரிதானே? அல்லது இதற்குங்கூட உங்களுக்கு விடுதலையளிக்கும்படி கோர நான் இன்றிரவு நடக்கும் உங்கள் வெட்டிக் கூட்டத்துக்கு வந்து முறையிட்டுக் கொள்ள வேண்டுமா?'' என்று அவள் இறைஞ்சும் குரலில் அவனிடம் கேட்டாள்.

அவன் பல்லை இளித்தான். எப்பொழுதுமே அவள் இப் படி வேடிக்கையாகப் பேச ஆரம்பித்துவிட்டால், அவனை எளிதில் வெற்றி கொண்டு விடுவாள்.

* * *

பனிக்காற்று ஸ்பிரிங்ஃபீல்டில் பலமாக வீசிக் கொண் ருந்தது. எலிஸபெத்தைக் கடுமையான ஜலதோஷம் பிடித் துக் கொண்டது. மேரி அவளுக்குப் படுக்கையை விரித்துக் கொடுத்துப் படுக்கச் செய்தாள். பிறகு அவளுக்குத் தேநீர் எடுத்துக் கொண்டு மாடிக்கு வந்தபோது, எலிஸபெத் நீண்ட

கடிதம் ஒன்றைப் படித்துக்கொண்டிருப்பதைக் கண்டாள். அக்கடிதம் அவர்களுடைய பெரியப்பாவின் மருமகள் மேரி வெர்ஜீனியா ஸ்டூவர்ட்டிடமிருந்து வந்திருந்தது. மேரி வெர்ஜீனியா ஸ்டுவர்ட், ஜான் ஸ்டூவர்ட்டின் மனைவி. ஜான் ஸ்டூவர்ட் அச்சமயம் இரண்டாந்தடவை காங்கிரஸ் அங்கத் தினனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வாஷிங்டனுக்கு போயிருந் தான். அங்கிருந்து தான் மேரி வெர்ஜீனியா ஸ்டுவர்ட் அக் கடிதத்தை அனுப்பியிருந்தாள்.

மேரியைக் கண்டதும் எலிஸபெத், ''மேரி! உனக்குத் தெரியுமா, லிங்கனுக்குக் காய்ச்சலாமே?'' என்றாள்.

''காய்ச்சலா?'' என்று பரபரப்புடன் கேட்டாள் மேரி. ''என்ன காய்ச்சல்? நேற்றுக் கூட நான் அவரைப் பார்த்தேன்!''

எலிஸபெத் சிரித்துக்கொண்டே சொன்னாள். ''காய்ச் சல் என்றால் உடல் காய்ச்சல் இல்லை; மனக் காய்ச்சல். அவன் நம் பெரியப்பா பிள்ளை ஸ்டூவர்ட்டுக்குக் கடிதம் எழுதியிருக்கிறானும். தனது சேவை அவனுக்குத் தேவைப் படுகிறது என்று காரணம் காட்டி ஸ்பிரிங்ஃபீல்டில் தான் வகித்து வரும் போஸ்ட் மாஸ்டர் பதவியை டாக்டர் ஹென்ரியை ஏற்றுக்கொள்ளச் செய்யும்படிக் கேட்டுக்கொண் டிருக்கிறானும்.''

''ஓ! அதுவா?'' என்றாள் மேரி ஆறுதலுடன். ''அது அவருக்கு இயற்கையாக உள்ள மனப்பிராந்தி. டாக்டர் ஹென்ரி இவ்விஷயமாகத் தினசரி அவருடன் பேசுவதுண்டு.''

''அது சரி; ஆனால் அவன் பொகோட்டாவுக்குப் போகிற விவரத்தை நீ ஏன் என்னிடம் கூறவில்லை?''

''பொகோட்டாவா? அது எங்கே இருக்கிறது?''

''மத்திய அமெரிக்காவில், கொலம்பியா மாகாணத்தில். மிஸ்டர் ஹாரிஸன் ஜனாதிபதிப் பதவி ஏற்றதும் முதல் காரிய மாக லிங்கனை பொகோட்டாவில் அரசாங்கக் காரிய நிர்வா கஸ்தர் பதவியில் நியமிக்கப் போவதாக கூறிக்கொண்டிருக் கிறாராம்.''

மேரியின் முகம் சிவந்தது. எலிஸபெத்தின் அறையி லிருந்து சென்றதும் அவள், ஆப்ரஹாமுக்கு ஒரு சீட்டுக் கொடுத்து அனுப்பினாள். சதுக்கத்துக்குத் தென்புறமாக இருந்த காபீல்டின் புதிய கட்டடத்தில் ஒரு சித்திரக் காட்சி அப்பொழுது நடந்துகொண்டிருந்தது. உடனே அங்கே வந்து தன்னைச் சந்திக்குமாறு அவள் அச்சீட்டில் குறிப்பிட் டிருந்தாள். அவள் சீக்கிரமாக அலங்கரித்துக்கொண்டு, கடு மையாக வீசிக்கொண்டிருந்த பனிக் காற்றையும் பொருட்

படுத்தாது காபீல்டின் கட்டடத்தை நோக்கி நடந்தாள். இருபத்தைந்து ஸெண்டு கட்டணத்தைச் செலுத்திவிட்டு உள்ளே சென்று அங்குள்ள பல்வேறு சித்திரங்களைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தாள். அந்த ரசனையில் தான் வந்த காரியத்தைக்கூட மறந்துவிட்டாள், மேரி.

அவள், 1838-ஆம் வருஷம் ஜூன் மாதம் 28-ஆம் தேதி நடந்த விக்டோரியா மகாராணியின் முடிசூட்டு விழாவைச் சித்தரித்த படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த போது லிங்கன் தன் பின்னல் வந்து நிற்பதை உணர்ந்தாள். தலையைத் திருப்பாமலே, ''உங்களுக்குச் சித்திரங்களில் ரசனை உண்டா? இங்கே இருக்கும் சித்திரங்கள் லெக்ஸிங்டனில் அடிக்கடி நடக்கும் சித்திரக் காட்சிகளில் நான் பார்த்திருப்பவைகளைவிட நேர்த்தியாக இருக்கின்றன'' என்றாள்.

அவன் அந்தப் படங்களைத் திரும்பிக்கூடப் பார்க்க வில்லை. அவள் திரும்பி அவனை நோக்கினாள். தன்னை இங்கே அழைத்த காரணம் என்ன என்பதைக் கேட்கும் தோரணையில் அவனுடைய கண்கள் தோற்றமளித்தன.

''கடைசியாக நீங்கள் வெளி உலகைப் பார்க்கத் துணிந்து விட்டீர்கள் போலிருக்கிறதே'' என்றாள் அவள்.

''ஓ! நான் பொகோட்டாவுக்குப் போகப் போவதைப் பற்றிச் சொல்லுகிறாயா? ஆமாம்; யார் சொன்னார்கள் உனக்கு அந்த விஷயத்தை?''

''சுற்று வழியாக வாஷிங்டனிலிருந்து எனக்கு எட்டிற்று அந்தச் செய்தி.''

''அதை நான் உன்னிடம் ஏன் சொல்லவில்லை, தெரியுமா? எனக்கு அந்தப் பதவியை வாங்கிக் கொடுக்க ஸ்டூவர்ட்டால் முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை; அதனால் தான்.''

''உங்கள் எண்ணம் ஏன் இத்தனை தாழ்ந்து சென்று விட்டது? சென்ற வருஷம் கோடைக் காலத்தின்போது மத்திய சட்ட சபையைப்பற்றிக் கனவு கண்ட நீங்கள் இப்பொழுது எங்கோ ஒரு காட்டில் ஒரு சிறிய வேலையைப் பெற முயற்சி செய்கிறீர்களே?''

''அவ்வளவுதான் என் தகுதி.''

''அப்படி என்ன நீங்கள் வாழ வகை தெரியாதவர் ஆகிவிட்டீர்களா?'' அவள் குரலில் இகழ்ச்சி தொனித்தது. தன் வேகத்தை அடக்கிக் கொள்ளுவதற்காகச் சிறிது நேரம் பேசாதிருந்தாள்; பிறகு சொன்னாள்: ''மற்றெல்லா விஷயங்களிலும் நான் என்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு விடுகிறேன். ஆனால் உங்கள் விஷயம் வந்தால் மாத்திரம் என்னால்

அப்படி இருக்க முடியவில்லை. இதுவரை நான் சந்தித்துள்ள எந்த மனிதருக்கும் இல்லாத திறமையும், வருங்காலமும் உங்களுக்கு இருக்கிறது என்று நான் திடமாக நம்பியிருக்க, நீங்கள் இப்படி மனம் தளர்ந்து போய்க் கொண்டிருக்கிறீர்களே! இதைப் பார்க்கையில் நான் என்னையே முட்டாளாக்கிக்கொண்டு விட்டதுபோல் அல்லவா தோன்றுகிறது?''

''சும்மா என்னைக் கிண்டல் செய்யாதே மோலி.''

''ஆப்ரஹாம்! தயவு செய்து இப்படி ஓடிப்போவதைப் பற்றி நினைக்காதீர்கள். ஏழெட்டு வருஷங்கள் கழித்து திரும்பி வரும்போது எங்கே வந்து சேரவேண்டியிருக்கும், தெரியுமா?''

''தெரியும். நான் எந்தக் குழியில் விழுந்தேனோ, அதிலிருந்து எழுந்து வருவேன்.''

''ஆனால் நீங்கள் இத்தனைக் காலமாக வளர்த்து வந்த அரசியல் வாழ்க்கை என்னாகும்?''

''எல்லாம் மண்ணோடு மண்ணாகப் போய்விடும். ஆனால் நான் இப்பொழுது எதையாவது இட்டு என் வருங்காலத்தை நிரப்பத்தான் வழி பார்க்கிறேன்.''

''நீங்கள் என்னை பொகோட்டாவுக்கு அழைத்துப் போவதைப்பற்றி இதுவரை ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் நான் சொல்லுவேன். உங்கள் வருங்காலம் வளமையடையுமென்றால் நான் நரகத்துக்கு வேண்டுமானாலும் போகத் தயார். சொர்க்கம் கிடைப்பதாக இருந்தாலும் அது உங்கள் வருங்காலத்தைப் பாதிக்குமென்றால் அங்கே போகமாட்டேன்.''

அவளுடைய புகழ்ச்சி அவனை மகிழ்வித்தது. அவன் சொன்னான்: ''இல்லை மோலி; என்னுடைய காதலி இல்லாமல் நான் மத்திய அமெரிக்காவுக்குப் போவேனா, என்ன? இருந்தாலும் நான் மோசமாக நடந்துகொண்டு விட்டேன், இல்லையா?'' அவன் கண்களில் இருந்த தளர்ச்சி மறைந்தது. தொடர்ந்து சொன்னான்: ''இந்தியர்கள் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோது நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. அன்று கடும்போர் நடந்தது. இரவு வெகு நேரத்திற்குப் பிறகு நான் முகாமுக்குத் திரும்பி வந்தேன். நண்பன் ஒருவன் என்னைக் கண்டதும் ஆச்சரியத்துடன், 'ஆப்! நீ தானா? எங்கே இன்றைச் சண்டையில் இறந்து விட்டாயோ என்று நினைத்தேன்' என்றான். 'இல்லையப்பா, நான் சாகவில்லை' என்றேன் நான். 'பின் இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய்? ஓடிப் போய்விட முயலவில்லையே?' என்று கேட்டான்

அவன். ' இல்லே அப்பனே, நான் ஓடிப்போக முயலவே இல்லே. ஆனல் யாராவது நான் வெளியே போன வேகத்தைப் பார்த்திருந்தால், அதோடு டாக்டரைத் தேடிப் போகிறேன் என்றும் தெரிந்துகொண்டிருந்தால், யாருக்கோ உடல் நிலே ரொம்ப மோசமாகியிருக்கிறது என்றுதான் நினேத்திருப்பார் கள்' என்றேன் நான்.''

அவள் அவன் கூறிய கதையைக் கவனமாகக் கேட்டாள். '' கடவுள் காப்பாற்றட்டும். என் ஆப்ரஹாம் பழைய மனிதராகி விட்டார் '' என்றாள் அவள்.

அவன் கண்காட்சி சாலேயைச் சுற்றி நோக்கினன். அருகில் யாரும் காணப்படாமையால் அவளே இழுத்து அணேத்து முத்தமிட்டுவிட்டுப் பிறகு சொன்னன்: '' நீ கூறியது முற்றிலும் சரி, மோலி. என் சந்தேகங்கள் என்னுடைய ஊக்கத்தையே குலேத்துவிட்டிருந்தன. இப்பொழுது பொகோட்டா போகும் எண்ணம் என்னேவிட்டுப் பறந்தோடிவிட்டது.''

8

நவம்பர் மாத இறுதியில் நினியனின் பெரியப்பா ஸைரஸ் எட்வர்ட்ஸ், ஆல்டனிலிருந்துவந்தார். அவர் மாகாண சட்ட சபையில் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார். மாகாண சட்ட சபை அங்கத்தினர்கள் தம்மை மத்திய சட்ட சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்து அனுப்புவார்கள் என்ற உறுதியுடன் அவர் ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்திருந்தார். அவர் நினியனின் வீட்டில் தங்க மறுத்துவிட்டார். ஹோட்டலில் தான் தமது பிரசாரத்துக்கு வசதியாகவும் சுதந்திரமாகவும் இருக்குமென்று கூறிக்கொண்டு அங்கே போய்விட்டார். ஆனல் தமது இருபது வயது மகள் மாட்டில்டாவை நினியனின் வீட்டில் விட்டுவிட்டுப் போனர். அவள் மேரியின் அறையிலேயே தங்கியிருந்தாள். மாட்டில்டா, அவளுடைய தந்தையையும் நினியனேயும்போல் நெட்டையானவள். அழகிய செம்பட்டை ரோமம். அதைப் பின்னி, தலேயைச் சுற்றிக் கட்டிக் கொண்டிருப்பாள்.

'' அவள், கல்யாண நினேவோடு ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்திருக்கிருள். ஆகையால் நான் ஒரு விருந்து நடத்தி, நண்பர்களே வரவழைக்கப்போகிறேன் '' என்று எலிஸபெத் மேரியிடம் கூறினுள்.

அந்த விருந்துக்கு ஸ்பிரிங்ஃபீல்டிலிருந்த மணமாகாத ஆண்-பெண்கள் அனேவரும வந்திருந்தனர். கீழ் அறையிலுள்ள சாமான்களே எல்லாம் அகற்றிவிட்டு அங்கேதான்

விருந்தும் நடனமும் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விருந்து முடிந்ததும், கோஷ்டி இசை முழங்க ஆரம்பித்தது. ஆப்ரஹாமும் அந்த விருந்துக்கு வந்திருந்தான்.

மாட்டில்டாதான் அன்றை விருந்துக்கு நடுநாயகமாக விளங்கினாள். அவள் மிகக் கவர்ச்சிகரமாக அலங்கரித்துக் கொண்டிருந்தாள். மேரி ஒதுங்கியே இருந்தாள். இருந்தாலும் அவளிடம் உற்சாகத்திற்குக் குறைவில்லை. அவளுடைய முகமும் கண்களும் ஒரு தனி ஒளி வீசின. விருந்தினர் பாட விரும்பும்போதெல்லாம் அவள் எலிஸபெத்தின் பியானோவை வாசித்துக் கொண்டு ஸ்டீஃபன் டக்ளஸுடன் பல பாட்டுக்களைப் பாடினாள்.

இப்படி ஒதுங்கியிருந்தபோதிலும் அன்றை விருந்தில் ஒருவன் மேரியினால் கவரப்பட்டுவிட்டான். அவன் பெயர் எட்வர்ட் வெப். குள்ளமான உருவமுடைய அவன் பிரசித்தி அடைந்துகொண்டிருந்த ஒரு வக்கீல். சார்மிஜில்லாவிலிருந்து சட்ட சபை அங்கத்தினனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்திருந்தான். வெர்ஜீனியாவில் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்தவன் அவன். சமீபத்தில் மனைவியை இழந்தவன். அவனுக்கு இரண்டு சிறு குழந்தைகள் உண்டு. அவன் கண்டிப்பானவனாகக் காணப்பட்டான். விவாதங்களில் கலந்து கொள்ளும்போது எல்லோரையுமே தாக்கிப் பேசினான். இருந்தாலும் அவனுடைய ஆடை அலங்காரமும் சுபாவமும் இனிமையாக இருந்தன. அவன் மேரியைவிட்டு அகலவேயில்லை. லிங்கனின் குடும்பத்துக்குப் பழைய நண்பனாக இருந்தபோதிலும், மேரியை அடைவதில் அவனோடு போட்டி போடத் தயாராக இருந்தான்.

விருந்தினருக்கு மதுபானம் வழங்கப்பட்டது. லிங்கன் மதுபானத்தை மறுத்துவிட்டபோது அவன், ''குடித்தால் எப்படி யிருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ளுவதற்காவது ஒரு தடவை குடித்துப் பார்க்க வேண்டாமா?'' என்றான்.

லிங்கன் அவனுக்குச் சுடச் சுடப் பதில் அளித்தான்: ''ஆமாம்; பாம்பு கடித்தால் எப்படியிருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள ஒரு விரியன் பாம்பைப் பிடித்து உன் கால் கட்டை விரலில் கடிக்க விட்டுப் பார்த்துக்கொள்ளுவது தானே!''

வெப் பதில் பேச வழியின்றி, தன் பைக்குள் கையை விட்டுப் பெரிய சுருட்டு ஒன்றை எடுத்து ஆப்ரஹாமிடம் நீட்டி, ''நல்லது; அப்படியானால் இந்தச் சுருட்டையாவது குடியேன்'' என்றான்.

''வந்தனம். எனக்கு எந்த விதமான கெட்ட பழக்கங்களும் கிடையா.''

வெப் தனது 'ரம்' மது கிளாஸின் மீது பார்வையைச் செலுத்திக்கொண்டே, ''கெட்ட பழக்கங்கள் இல்லாத மனிதர்களிடம் நன்னடத்தையும் குறைவாகவே இருக்கும் என்பது என் அனுபவம்'' என்றான்.

லிங்கன் இதைக் கேட்டுக் கலகலவென நகைத்தான். இடையே அடுத்த நடனத்துக்கான இசை முழங்கத் தொடங்கிற்று. வெப் தன் மதுக் கோப்பையைக் கீழே வைத்து விட்டு, மேரியின் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு நடனமாட ஆரம்பித்துவிட்டான். மறுத்துப் பேச அவளுக்கு அவன் சந்தர்ப்பமே அளிக்கவில்லை.

நடனமாடிக்கொண்டே அவன் சொன்னான்: ''மிஸ் மேரி! லிங்கனும் நீயும் ஏதோ ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன்.''

''ஓஹோ! அதற்குள் நகர மக்கள் அதை ஊகித்து விட்டார்களா?'' என்று நினைத்துக் கொண்டாள் மேரி.

வெப் தொடர்ந்து சொன்னான்: ''அவசரப்பட்டு முடிவு எதுவும் செய்துவிட வேண்டாம், மிஸ் மேரி. கடலில் இன்னும் எவ்வளவோ நல்ல மீன்கள் உள்ளன.'' அவன் தலையை மேலும் கீழும் அசைத்தது, அந்த நல்ல மீன்களில் தானும் ஒருவன் என்பதைக் காட்டுவது போல் இருந்தது.

''மிஸ்டர் வெப்! உங்களை இதற்கு முன் நான் மூன்று நான்கு பார்ட்டிகளில் சந்தித்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் நீங்கள் என்னைத் திரும்பிக் கூடப் பார்த்ததில்லை. தவிர, துக்கம் கொண்டாடுவதற்கு அடையாளமாக நீங்கள் கையில் கட்டிக் கொண்டிருக்கும் கறுப்புப் பட்டை, என்னைப் போன்ற பெண்கள் உங்களை நெருங்கக் கூடாது என்பதை அறிவிக்கும் சின்னமில்லையா?'' என்றாள் மேரி.

''ஆம்; நான் துக்கம் கொண்டாடுவதன் அடையாளமாகத்தான் அது இருந்தது. இன்றிரவு உன்னைக் கூர்ந்து நோக்கும் வாய்ப்பைப் பெறும் வரை. ஆனால் இப்பொழுது நான் உன்னை என் துணைவியாகுமாறு கேட்கும் முடிவுக்கு வந்துவிட்டேன்.''

''இந்தப் பார்ட்டி மாட்டில்டாவுக்குக் கணவன் தேடுவதற்கானது. ஆகையால் நீங்கள் அவளைத்தான் திருமண நினைவுடன் அணுகவேண்டியது முறை. லிங்கன் கூட, அவள் முகத்தழகை இன்று புகழ்ந்து பேசினானென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.''

''நல்லதாயிற்று! அப்படியானால் லிங்கன் அவளைத் திருமண நினைவுடன் நெருங்கட்டும். மிஸ் மேரி! இங்கே வந்திருக்கும் இளைஞர்களில் மிகச் சிறந்த என்னை நீ தேர்ந்தெடுத்துக்கொள். அந்த அப்பாவி லிங்கன் உனக்கு ஏற்றவனல்ல. அந்தப் பயல் ஜோஷுவா ஸ்பீடை மணந்து கொண்டு அவன் கடை மாடியில் குடித்தனம் வைக்கத்தான் லாயக்கு.''

மேரியின் கண்கள் அறையைச் சுற்றி அலைந்தன. ஆப்ரஹாமைச் சுற்றி பல இளைஞர்கள் நின்று சிரித்துக்கொண்டிருப்பதை அவள் கண்டாள். அவளும் களங்கமற்று நகைத்து வெப்பின் பேச்சு மேலே வளராதபடி மழுப்பி விட்டாள்.

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன்னுள் சதுக்கத்தில் உள்ள ஒரு கடையில் அவள் ஏதோ சாமான் வாங்கிக்கொண்டிருந்தாள். அப்பொழுது எதிர்பாராதபடி லிங்கன் அங்கே வந்தான். அதற்கு முன்னுள் மாலையில் அவர்கள் வால்டோர் ஹோட்டலில் நடந்த ஒரு பெரிய விருந்துக்குப் போயிருந்தனர். சுமார் முந்நூற்றைம்பது பேர்கள் அந்த விருந்தில் கலந்துகொண்டனர். அப்பொழுது லிங்கன் அங்கே கூடியிருந்த பெண்களின் அலங்காரத்தைப் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் அவள் காதில் சொன்னான்: ''ஸ்பிரிங்ஃபீல்டு வர வரப் பகட்டான ஊராக மாறி வருகிறது. இந்தப் பெண்களின் அலங்காரத்தைப் பார். இந்தப் பகட்டான உடைகளைத் தயாரிக்க இவர்கள் மாதக் கணக்கில் பாடுபட்டிருக்க வேண்டும், இல்லையா?''

இப்பொழுது மேரியின் அலங்காரத்தைப் பார்த்ததும் அவன் முகத்தில் புன்சிரிப்பு மலர்ந்தது. அவளுடைய கைகளைப் பற்றிக்கொண்டு, ''மோலி! முன்னிரவு நேரத்தை உன்னோடு அமைதியாகக் கழிக்க நான் மிகவும் ஏங்குகிறேன். கணப்பின் முன்னால் அமர்ந்து, நீ எனக்கு பர்ன்ஸ், ஷேக்ஸ்பியர் ஆகியோரின் நூல்களைப் படித்துக் காட்டியும், நாம் ஆசை தீரப் பேசியும் எவ்வளவு நாளாகிவிட்டன?'' என்றான்.

''அப்படியானால் இன்று இரவே நாம் அதை மீண்டும் தொடங்கிவிட்டால் போகிறது'' என்றாள் மேரி.

''ஆனால் இன்றிரவு நாம் பேக்கர் குடும்பத்தாரின் விருந்துக்குப் போகவேண்டுமே.''

''வர இயலாது என்று சீட்டு அனுப்பிவிடுகிறேன். எலிஸபெத்தும் நினியனும் மாட்டில்டாவை அழைத்துக் கொண்டு வெளியே எங்கோ போகிறார்கள். வீட்டில் நாம் மாத்திரந்தான் இருப்போம். சரி, ராத்திரிச் சாப்பாட்டுக்கு உங்களுக்கு என்ன பண்ணவேண்டும்?''

''ஏதாவது பண்ணச் சொல் மோலி! எனக்குத்தான் சாப்பிடும்போதுகூட ஒரு பதார்த்தத்துக்கும் இன்னொன்றுக்கும் வித்தியாசம் தெரியாதே! ஆப்பிள் ஒன்றுதான் எனக்கு எப்பொழுதும் பிடித்தமான பண்டம்.''

அவள் அவனுக்கு நல்ல உணவு தயாரிக்கச் செய்து காத்திருந்தாள். லிங்கன் தனது கோட்டுப் பையில் ஒரு பொட்டலத்துடன் வந்து சேர்ந்தான். அவளை அணைத்து முத்தமிட்டான். ''இத்தகைய அன்பார்ந்த அணைப்பைப் பெற்று எத்தனை நாட்களாகி விட்டன!'' என்று மேரி கூறியபோது அவன் சொன்னான்: ''அது உன் ஆவலாலும், நாம் இன்று போல் அடிக்கடி வீட்டிலேயே முன்னிரவுப் பொழுதைக் கழிக்கவேண்டும். பெரிய பெரிய விருந்துகளிலோ, அல்லது வெளியில் எங்கேயாவது சந்தித்துக்கொள்ளும்போது இப்படி ஆசைதீரக் கட்டி அணைத்துக்கொள்ள முடியுமா, என்ன?'' பிறகு அவன், தான் கொண்டுவந்த பொட்டலத்தை அவளிடம் கொடுத்துக்கொண்டே, ''மோலி! கிறிஸ்துமஸ் வெகுமதியை நாளைக்குத்தான் நான் உனக்கு அளிக்கவேண்டும், ஆனால்.....''

அவள், அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தாள். அதில் ஒரு பவழ நெக்லெஸ்ஸும், பவழத்திலே செய்யப்பட்ட வளையல் ஜோடி ஒன்றும் இருந்தன. அவற்றின் நிறமும் அழகும் அவளைக் கவர்ந்தன.

''உங்கள் கைகளினாலே இவற்றை எனக்கு அணிந்து விடுங்கள்'' என்றாள் மேரி.

அவன் முதலில் வளையல்களை அவள் கைகளில் போட்டான். பிறகு பின்னால் நின்றுகொண்டு நெக்லெஸ்ஸை அணிவித்தான். அவன் கைகள் அவள் கழுத்தைச் சுற்றியிருந்தன; கன்னம் அவள் கன்னத்தோடு உராய்ந்தது. அவள் அவன் பிடிக்குள்ளாகவே லாகவமாகத் திரும்பி அவனை முத்தமிட்டாள்.

''ஆப்ரஹாம்! உங்களிடம் போதிய பணம் இல்லாதபோது இத்தனை செலவு செய்து இந்தப் பரிசை வாங்கியிருக்க வேண்டாம். இருந்தாலும் வாங்கி வந்துவிட்டீர்கள். அம்மட்டும் எனக்கு மகிழ்ச்சியே. இதை உங்கள் காதலின் சின்னம் என்று நான் கருதுவது தவறு?'' என்று அவள் கேட்டாள்.

சாப்பாட்டுக்குப் பிறகு அவர்கள் கணப்பின்முன் அமர்ந்தனர். அவன் ஈஸாப்பின் நீதிக் கதைப் புத்தகத்திலிருந்து பல கதைகளை அவளுக்குப் படித்துக் காட்டினான். அவள் அன்று மாலையில் டி டாக்கெவல் எழுதிய ''அமெரிக்காவில்

ஜனநாயகம்'' என்ற நூலை வாங்கி வந்திருந்தாள். அதில் ஓர் அத்தியாயத்தை அவனுக்குப் படித்துக் காட்டினாள்.

பிறகு அவர்கள் ஒருவரை ஒருவர் அணைத்தவாறு நடு ராத்திரி வரை அமர்ந்திருந்தனர்.

ஆப்ரஹாம் சொன்னான்: ''மோலி! நான் உன்னைப் பல தடவை புண்படுத்தியிருக்கிறேன். ஆனால் அது நான் வேண்டு மென்று செய்ததல்ல. மனதில் தளர்ச்சி ஏற்படும்போது, நான் என்னை மாத்திரமன்றி, என்னைச் சார்ந்தவர்களையும் புண்படச் செய்துவிடுகிறேன்''.

''எனக்கு அது தெரியும்'' என்றாள் அவள்.

''புளூகிராஸ் வாசிகளாகிய நீங்கள் கல்யாணத்தைப் பற்றி மக்களுக்கு முன்னறிவிப்புச் செய்யவேண்டியதை ஒரு முக்கிய சம்பிரதாயமாகக் கருதுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். அம்மாதிரி நமது திருமணத்தைப்பற்றியும் முன் னறிவிப்புச் செய்ய விரும்புகிறாயா?''

''ஆம் அன்பே! அப்படிச் செய்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்.''

''அப்படியானால் அதை எப்பொழுது செய்யலாம்?''

''எலிஸபெத்தும், நினியனும், புத்தாண்டு தினத்தன்று ஒரு பெரிய விருந்து நடத்தப்போகிறார்கள். அந்த விருந் தில் நாம் ஒருவரை ஒருவர் வாழ்த்திக்கொள்ளும் கட்டத்தில் அறிவித்தால் பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன்.''

''சரி; அப்படியே செய்துவிடுவோம்'' என்றான் அவன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு ஆப்ரஹாம் ஒரு வண்டி யைக் கொண்டு வந்து அவளை வெளியே அழைத்துச் சென்றான். உறைபனி படர்ந்த புல்வெளி வழியே அவர்கள் கோச்சு வண்டியை ஓட்டிச் சென்றார்கள். குதிரைகளின் கடிவாளத்தை இடக்கையில் பிடித்துக்கொண்டும், வலக்கையால் மோரியை அணைத்துக்கொண்டும் வண்டியை ஓட்டிச் சென்றான் ஆப்ர ஹாம். வெயில் அடித்துக்கொண்டிருந்தபோதிலும், குளிர் அதிகமாக இருந்தது. அவர்கள் பேசியபோது வாயிலிருந்து மூச்சுக்காற்று ஆவியாக வெளியே வந்தது.

இப்படி சுமார் ஒரு மணி நேரம் பிரயாணம் செய்த பின்னர் அவர்கள், இரண்டு ரஸ்தாக்கள் சந்திக்கும் ஓர் இடத் துக்கு வந்தார்கள். அங்கே சிறிய ஹோட்டல் ஒன்று இருந் தது. இருவரும் வண்டியிலிருந்து இறங்கி அந்த ஹோட்ட லுக்குச் சென்றனர். சூடாகச் சாப்பாடோ, மதுபானமோ கொடுக்கும்படிக் கேட்டான் ஆப்ரஹாம்.

''இந்தக் குளிர்காலத்தில் இங்கே யார் வருகிறார்கள் ஐயா, சாப்பாடும், மதுபானமும் தயாரித்து வைத்துக் கொள்ள? வேண்டுமானால் சுடச்சுட 'ஸூப்' இருக்கிறது, கொண்டு வருகிறேன்'' என்றான் ஹோட்டல்காரன்.

''நல்லது; அதையே கொண்டு வாருங்கள்'' என்றாள் மேரி.

அவர்கள் தாங்கள் அணிந்திருந்த கனத்த கம்பிளி மேலாடைகளைக் கழற்றிவிட்டு, கணப்பின் முன் அமர்ந்து கொண்டனர். சிறிது நேரத்தில் ''ஸூப்'' கொண்டு வரப் பட்டது. அதைப் பாத்திரத்தோடு மடியில் வைத்து சாப் பிட்டுக்கொண்டே பேச ஆரம்பித்தனர்.

''இனி நான் சஞ்சாரக் கோர்ட்டில் வழக்குகளை நடத்த ஊர் ஊராகப் போகும்போது உன்னையும் அழைத்துச் செல்ல வேண்டும். ஏனென்றால் நான் தனியாகச் செல்லும்போது இத்தனை உற்சாகமாக இருப்பதில்லை'' என்று ஆப்ரஹாம் மேரியின் கையைப் பற்றிக்கொண்டு கூறினான்.

''ஆம் ஆப்ரஹாம்; நீங்கள் வேண்டியமட்டும் தனிமை வாழ்வை அநுபவித்து விட்டீர்கள். இனியாவது உங்களைக் கவனித்துக்கொள்ள ஒருத்தி அவசியம் வேண்டும்'' என்றாள் மேரி.

''அப்படியொன்றும் என்னைக் கவனித்துக் கொள்ளுவ தற்கென்று ஒருத்தி தேவையில்லை''.

''பின் ஏன் நீங்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுகிறீர்கள்? அதற்குக் காரணம் வேளா வேளையில் சரியான சாப்பாடு இல்லாததால்தான்.''

''மோலி! நீ என் தாயாராக இருந்திருக்கவேண்டும்.''

''அப்படியானால், உண்மையான காதலில் தாயன்பு தானகத் தோன்றும் என்று கிரேக்க நாடகங்களில கூறப் படுவது உண்மைதான்.''

ஆப்ரஹாம் திடீரென்று மௌனமானான். அவன் முகம் சட்டென்று கறுத்து விட்டது. அவன் கண்களிலே அப் பொழுது தென்பட்ட வேதனையைப்போல் அவள் எப்பொழு துமே கண்டதில்லை. அவன் ஏதோ பேச முயன்றான்; ஆனால் முடியவில்லை? ஏன்? என்ன நேர்ந்து விட்டது அவனுக்கு?

''ஆப்ரஹாம்! உங்களுக்கு என்ன? உங்கள் உள்ளத்தில் ஏதோ வேதனை சூழ்ந்திருப்பது போல் காணப்படுகிறதே!'' என்று மேரி கேட்டாள்.

''ஆம் மோலி; நீ நினைத்தது சரிதான்.'' இந்த வார்த் தைகள் அவனிடமிருந்து வெடித்து வெளி வந்தன. ''அது என் தாயாரைப்பற்றிய விஷயம். அதெல்லாம் பழங்கதை;

அதை நான் மறந்துவிடவேண்டும் என்று ஆயிரம் தடவை நினைத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் முடியவில்லை.''

அவன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். எதையோ கூறத் தன்னைத் திடப்படுத்திக் கொள்ளுவதுபோல் இருந்தது அந்த மௌனம். ஒரு விநாடிக்குப் பிறகு தலையை நிமிர்த்திக்கொண்டு சொன்னான்: ''அதை எவரிடமும் சொல்லாமலிருப்பதே உத்தமம். இருந்தாலும் நாம் நமது திருமணச் செய்தியை வெளிப்படுத்தத் தீர்மானித்துவிட்ட பிறகு அவ்விஷயத்தை உனக்கு நான் முன்னதாகவே அறிவித்துவிடத்தான் வேண்டும்.''

லிங்கன் மீண்டும் மௌனமானான். அவனுடைய நாடியின் துடிப்பை மேரியால் கேட்க முடிந்தது. அப்படி என்ன விஷயத்தை அவளுக்குச் சொல்லப் போகிறான்? கடைசியாக அவன் அவள் கண்களைக் கூர்ந்து நோக்கிக்கொண்டே கூறலானான்: ''மோலி! என் தாயார் நான்ஸி, தந்தை யார் என்பது தெரியாமல் பிறந்தவள். அவளுடைய தாயான லூஸி ஹாங்க்ஸ், அவளை இரண்டு வயசுக் குழந்தையாக இருந்தபோது கெண்டக்கிக்குக் கொண்டு வந்தாள். இது எல்லோருக்கும் தெரியும்.''

இச்செய்தி மேரியை எப்படிப் பாதித்திருக்கிறது என்பதை அறிய முயலுபவன்போல் அவன் ஒரு விநாடி அவள் முகத்தை நோக்கினான். பிறகு சொன்னான்: ''என் தாய் இந்த அவமானத்தை எப்படிச் சகித்திருந்தாள் என்பதை நான் அறிவேன். இந்த மனத் துயரை நான் அவளுடைய கண்களில் எப்போதும் கண்டிருக்கிறேன். ஆம்; அது என் பாரம்பரியத்துக்கு ஒரு களங்கம்; அவளுடைய வேதனைக் கெல்லாம் காரணம். இந்த நினைவு என்னை ஒவ்வொரு நாளும் அரித்துத் தின்றுகொண்டே இருக்கிறது.''

இச் செய்தி மேரியைத் திடுக்கிடத்தான் வைத்தது. அவள், தாய் வழியிலும் சரி, தந்தை வழியிலும் சரி, அப்பழுக்கற்றவள். மேரி, லிங்கனின் முகத்தை ஆராய்ந்தாள். அவன் கைகளைத் தொங்கவிட்டுக்கொண்டு தலையைக் குனிந்த வாறு அமர்ந்திருந்த கோலம், தன் தாயின் துயருக்காகவும், தன்னைச் சூழ்ந்துள்ள இந்த மாசுக்காகவும் எவ்வளவு தூரம் வருந்துகிறான் என்பதை அவளுக்குத் தெளிவாக உணர்த்திற்று. அவனுடைய துயரை அவள் வார்த்தைகளால் போக்க முடியாது. அவனோடு ஒன்றித்தான் போக்க வேண்டும்.

மேரி சொன்னாள்: ''ஆப்ரஹாம்! நாம் ஏன் காத்திருக்க வேண்டும்? ஏன் புத்தாண்டு தினத்தன்றே நாம் வாழ்வைத் தொடங்கிவிடக்கூடாது?. 'ஷாம்பேன்' மது விநியோகிக்கப்படும்போது, நமது திருமணத்தைப்பற்றி அறிவிப்

போம். சாப்பாடு முடிந்ததும் திருமணத்தையும் முடித்துக் கொண்டு விடலாமே?''

காதலும் நன்றியும் தோன்றும் முகத்துடன் அவன் அவளை நோக்கினான். ஆனால் சட்டென்று அந்த உணர்ச்சிகள் மறைந்தன. அவற்றின் இடத்தை வேறொரு உணர்ச்சி ஆக்கிரமித்துக் கொண்டது. அது என்ன? கவலையா? பயமா? என்ன என்பதை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

'' கொஞ்ச காலம், ஒரு வருஷமோ, இரண்டு வருஷமோ போகட்டும் மோலி'' என்றான் அவன்.

'' அப்படி ஒரு வருஷமோ, இரண்டு வருஷமோ காத்திருப்பதால் நமக்குக் கிடைக்கப்போவது என்ன? இளமையா? நம்பிக்கையா? தைரியமா?'' என்று கேட்டாள் அவள்.

'' அவை இல்லை. பணமும், அதனால் பாதுகாப்பும் கிட்டும்.''

'' பணத்தின் மூலம் பாதுகாப்புக் கிட்டுமா? எப்படி? பணந்தான் வேகமாக வந்து போகக்கூடியதாயிற்றே! நம் வரை நமக்குக் காதலே பாதுகாப்பு. ''

'' உண்மைதான் மோலி. காதல் அழிவற்றது.''

'' அப்படியானால் அன்பே, நாம் புத்தாண்டன்றே மணந்து கொள்ளுவோம். ''

அவன் தடுத்துப் பேசாமல், மௌனமாக இருந்தான். அவள் அவன் கன்னத்தோடு கன்னம் ஒட்டிக் கொண்டு '' நன்றி ஆப்ரஹாம். நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். நமது திருமண வாழ்க்கை உங்களுக்கு ஒருபோதும் துயரளிக்காது '' என்றாள்.

9

புத்தாண்டு தின விருந்துக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதில் மூழ்கியிருந்தாள் எலிஸபெத். சமையலறையிலிருந்து ருசிகரமான உணவுப் பதார்த்தங்களின் மணம் 'கம்' மென்று வீசிற்று. அவ்வீட்டில் மொத்தம் நான்கு வேலைக்காரர்கள்தான் உண்டு. அவர்களில் இருவர் வீட்டைச் சுத்தம் செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். ஆகையால், மேரியும் சமையல் வேலையில் தன் சகோதரிக்கு உதவி செய்து கொண்டிருந்தாள். ரொட்டியும், பிஸ்கட்டும் செய்வதற்காக மாவு பிசைந்து கொண்டிருந்ததால் அவளுடைய முழங்கை வரை மாவு ஒட்டிக்கொண்டிருந்தது.

மேரி இதுவரை எலிஸபெத்திடம், தன்னுடைய திருமணத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. அவள் கேக்குக்காகப் பிசைந்த மாவை உருட்டத் தயாரானபோது தான் மேரி அவளிடம் அதைக் கூறத் துணிந்தாள். சகோதரியின் மாவு படிந்த விரல்களைப் பற்றிக் கொண்டு, ''லிஸ்! நமது குடும்பத்தினருக்கு மட்டுமே அளிக்கப்படும் இந்த விருந்துக்கு நீ லிங்கனையும் அழைத்திருப்பது உன் மேலான குணத்தைக் காட்டுகிறது'' என்றாள்.

எலிஸபெத் முகத்தைத் திருப்பாமலே, ''இது உன் வீடு மேரி. உனக்கு வேண்டியவர்கள் எல்லோருக்கும் இங்கே நடக்கும் எந்த விசேஷத்துக்கும் அழைப்பு அனுப்பப் படும்'' என்றாள்.

''இல்லை; அதற்காகச் சொல்லவில்லை. நாங்கள்..... நாங்கள் எங்கள் திருமணத்தைப்பற்றி இன்றை விருந்தில் புத்தாண்டு வாழ்த்துக் கூறும்போது அறிவிக்கப்போகிறோம்.''

மேரி இதைக் கூறிய பிறகு சகோதரிகள் இருவரும் நெடுநேரம் அமைதியாக இருந்தனர். அச்சமயத்தில் எலிஸபெத், தங்களிடையே யிருந்த சகோதர பாசத்தையும், நம்பிக்கைகளையும், கனவுகளையும் பற்றியே சிந்தித்திருக்க வேண்டும் என்பதை மேரி உணர்ந்து கொண்டாள். இறுதியாக எலிஸபெத் பேச வாய் திறந்தபோது, அவளுடைய முக விலாசத்தில் தென்பட்ட கவலைகளும் வருத்தங்களும் மறைந்துவிட்டிருந்தன.

அவள் சொன்னாள்: ''இவ்விஷயமாக அன்று நாங்கள் எதிர்ப்புக் கூறியதற்கு மன்னித்துக்கொள் மேரி. ஏனென்றால், உங்கள் திருமணத்துக்கு எத்தனையோ தடைகள் இருந்தன. அவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்த பிறகுதான் நீ இம்முடிவுக்கு வந்திருக்கிறாயா என்பதை நாங்கள் நிச்சயமாகத் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது. ஆப்ரஹாம் நம் குடும்பத்தில் ஒருவனைக்போவதை நாங்கள் இப்பொழுது வரவேற்கிறோம். அது சரி; எவ்வளவு நாட்களுக்குப் பிறகு நீங்கள் திருமணம் செய்துகொள்ளப் போகிறீர்கள்?''

மேரி மகிழ்ச்சி ததும்பச் சிரித்தாள். ''நாட்களா? சாப்பாட்டுக்கு முன்பு திருமணச் செய்தியை அறிவிக்கப் போகிறோம். சாப்பாடு முடிந்ததும் கலியாணம்.''

''ஓஹோ! அப்படியானால் இன்றை விருந்து கல்யாண விருந்தென்று சொல். ஆம்; இந்தக் கேக்குகளைக் கூட திருமணக் கேக்குகளாக அல்லவா நான் செய்யவேண்டும்?''

''லிஸ்! தயவு செய்து இதை ஒருவரிடமும் சொல்லாதே! நான் எல்லோரையும் திகைக்கச் செய்யவேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றாள் மேரி.

அன்றைப் பகலில் வானம் மப்பு மந்தாரமின்றி நிர்மலமாக இருந்தது. மிதமான குளிரும் இருந்தது. உச்சி வேளையில், ஒரு மணிக்குச் சிறிது முன்னர், மேரி சமையல் அறையிலிருந்து வெளிவந்து, அலங்கரித்துக் கொள்ளத் தொடங்கினாள்.

தலையை நடு வகிடு எடுத்து அழகாக வாரி விட்டுக் கொண்டாள். ஆப்ரஹாம் பரிசளித்திருந்த பவழ நெக்லெஸ்ஸையும், வளையல்களையும் அணிந்து கொண்டாள். சிறந்த ஆடைகளை உடுத்துக்கொண்டாள். விருந்தினர்களுக்குக் கொடுப்பதற்காக வைத்திருந்த ஆரஞ்சுப் பழம் முதலிய பொருள்களை ஒழுங்காக எடுத்து வைத்துக்கொண்டு தயாராக இருந்தாள். விருந்துக்கு ஒவ்வொருவராக வரத் தொடங்கினர். டாடு குடும்பத்தினர், வாலெஸ் குடும்பத்தினர், ஹார்டின்ஸ் குடும்பத்தினர், எட்வர்ட்ஸ் குடும்பத்தினர் ஆகியோர் தங்கள் குழந்தைகளுடன் வந்தனர். மேரி அவர்களையெல்லாம் இன்முகத்துடன் வரவேற்றாள்.

விருந்தினர் எல்லோரும் வந்து 'ஷாம்பேன்' மது வழங்கப்படு முன்பு, அதாவது சரியாகப் பிற்பகல் ஒன்றரை மணிக்கு வந்தால் போதுமென்று அவள் ஆப்ரஹாமிடம் சொல்லி ஏற்பாடு செய்திருந்தாள். மணி ஒன்றரை ஆகி விட்டது. எலிஸபெத் மேரியின் முகத்தை நோக்கினாள். மேரி கூடத்திலிருந்த கடிகாரத்துக்குச் சென்று மணியைப் பார்த்தாள். ஒன்றரை ஆகி விட்டது. ஆகையால் எலிஸபெத்தை நோக்கித் தலையசைத்தாள். ஆம்; ஷாம்பேன் பாட்டில்களைத் திறந்து கண்ணாடித் தம்ளர்களில் ஊற்றி எல்லோருக்கும் வழங்கி முடிவதற்குள் ஆப்ரஹாம் வந்து விடுவார். அவள் ஹாலின் முன் கோடியில் வாசல் அருகில் வந்து, கதவைத் திறக்கத் தயாராக நின்றுகொண்டாள்.

ஆனால் வெளியே காலடிச் சப்தமும் கேட்கவில்லை; எவரும் கதவைத் தட்டவும் இல்லை. அன்றை விருந்தைக் கவனித்துக் கொள்ளுவதற்காக அமர்த்தப்பட்டிருந்த பணிப் பெண்கள், ஷாம்பேன் மது நிரப்பிய கண்ணாடித் தம்ளர்களைத் தட்டுகளில் வைத்து எடுத்துக்கொண்டு எல்லோருக்கும் விநியோகிக்க ஆரம்பித்தனர். அவர்களுள் ஒருத்தி மேரியிடம் டிரேயை நீட்டியபோது அவள் ஷாம்பேன் தம்ளரை எடுத்துக் கொள்ளவில்லை. ''என்ன காரணத்தால் அவர் வரவில்லை?'' இந்தக் கேள்வியில் மூழ்கியிருந்தாள் அவள்.

இதற்குள் எல்லோருக்கும் மது வழங்கப்பட்டுவிட்டது. நீக்ரோ பணிப் பெண் அவள் முன் டிரேயை நீட்டியபடி நின்று கொண்டிருந்தாள். அறையின் எதிர்க் கோடியில் இருந்த அவளுடைய பெரியப்பா பிள்ளை ஹார்டின் இதைப் பார்த்துவிட்டு, '' மேரி ! நீ எப்பொழுது முதல் குடிக்கும் பழக்கத்தை றிறுத்தினாய் ?'' என்று வேடிக்கையாகக் கேட்டான்.

மேரியின் கண்கள் சட்டென்று மற்றொரு முறை கடிகாரத்தை நோக்கின. மணி ஒன்றே முக்கால். அவள் நெஞ்சு வேதனையால் துடித்தது. சட்டென்று மது கிளாஸில் ஒன்றைக் கையிலெடுத்துக்கொண்டாள் மேரி. முகத்தில் ஒரு புன்சிரிப்பைத் தவழ விட்டுக்கொண்டு, ''உனக்குத் தெரியாதா ஜான் ஜே, நான் வாஷிங்டன்காரர்கள் கோஷ்டியில் சேர்ந்து விட்டேன் என்பது?'' என்று சாதுரியமாகப் பதிலளித்தாள்.

அவள் வாஷிங்டனிலுள்ள குடி ஒழிப்புச் சங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டாளென்பதைப் புரிந்து கொண்டு எல்லோரும் ' கொல் ' லென்று நகைத்தனர். நகைப்பு அடங்கியதும், நினியன் தன் கிளாஸை உயர்த்திப் பிடித்துக் கொண்டு '' எல்லோருக்கும் என் புது வருஷ வாழ்த்துக்கள்'' என்று சம்பிரதாய முறையில் விருந்தினரை வாழ்த்தினான். உடனே எல்லோரும் அதையே கூறி ஷாம்பேன் மதுவைப் பருகினர். பிறகு கைகுலுக்கிக்கொள்ளுவதும், முத்தம் வழங்கிக் கொள்ளுவதும் தொடர்ந்தன. மேரிக்கு ஷாம்பேன் மது வேம்பாகக் கசந்தது. இதற்குள் கூடத்துக் கடிகாரம் இரண்டு மணி அடித்து விட்டது. அவள் தன் சகோதரியிடம் சென்று, '' லிஸ்! விருந்தை ஆரம்பிக்க நேரமாகிவிட்டது. ஆப்ரஹாம் திருமண லைசென்ஸை வாங்கிக் கொண்டு வருவதாகக் கூறியிருந்தார். ஒருக்கால் அங்கே தாமதமாகி விட்டிருக்கலாம். ஆகையால் அவருக்காகக் காத்திருக்க வேண்டாம். விருந்தை ஆரம்பித்து விடு. அவர் லைசென்ஸ் கிடைத்ததும் வந்து விடுவார் '' என்று ரகசியமாகக் கூறினாள்.

'' ஓ ! அப்படியானால் சரி '' என்று கூறிவிட்டு எலிஸபெத் விருந்தைத் தொடங்கி வைத்தாள்.

மேஜையைச் சுற்றி அமர்ந்திருந்த விருந்தினர் சளசளவென்று பேசியவாறு விதம் விதமான விருந்துச் சாப்பாட்டை உண்பதில் கவனமாக இருந்தது அவளுக்கு ஆறுதலை அளித்தது. ஏனென்றால் ஒருவரும் அவளுடைய ஏமாற்றத்தைக் கவனிக்கவில்லை அல்லவா ? மணி இரண்டரையும் ஆகிவிட்டது. ஆப்ரஹாம் வருவான் என்ற நம்பிக்கை இப்

பொழுது அவளுக்கு அறவே அற்றுப் போய் விட்டது. புத்தாண்டு தினத்தன்று, விவாக லைஸென்ஸ் பெற வேண்டிய அரசாங்க காரியாலயம் பகல் முழுவதும் திறந்தே இருக்கும். ஆகையால், ஆப்ரஹாம் லைஸென்ஸ் பெறச் சென்றிருந்தால் அங்கே இத்தனை தாமதம் ஏற்படக் காரணம் இல்லை. ஒருக்கால் அவருக்கு உடல் நலமில்லையோ? அப்படியே இருந்தாலும் செய்தி சொல்லி அனுப்பியிருக்கக்கூடாதா?

மேரி, விருந்தினர்களோடு சாப்பிடுவது போலவும், பேசிக்கொண்டிருப்பது போலவும் பாசாங்கு செய்தாள். ஆனால் அவள் மனம் அவள் வசம் இல்லை. எப்பொழுதேனும் நிலை தவறிக் கீழே சாய்ந்து விடுவோமோ என்ற பயத்தில் அவள், தான் அமர்ந்திருந்த நாற்காலியை இடக்கையால் அழுத்திப் பிடித்துக்கொண்டிருந்தாள். இப்படி எல்லாம் செய்தும் அவளால் நெடுநேரம் தன்னை அடக்கிக்கொண் டிருக்க முடியவில்லை. விருந்தினர்களோடு அமர்ந்திருந்த எலிஸபெத் சமையலறையில் வைத்திருந்த திருமணக் கேக் கின் அலங்காரங்களைக் கலைத்து, சாதாரண கேக்குபோல் ஆக்கி அதை விருந்தினருக்கு விநியோகிப்பதற்காக எடுத்து வரச் சென்றபோது மேரியால் அங்கே வீற்றிருக்க முடியவில்லை. அவள் விருந்தினரின் மன்னிப்பைப் பெற்றுக் கொண்டு, மாடியிலிருந்த தன் படுக்கை அறைக்கு விரைந் தாள். கதவை மூடி உட்புறம் தாழிட்டுக்கொண்டு, படுக்கை யில் குப்புறச் சாய்ந்துவிட்டாள்.

அவள் நெஞ்சு வேதனையால் துடித்தது. கை கால்கள் மரத்துப்போயின. ஒவ்வொரு மூச்சும் சோகப் பெருமூச் சாக வெளி வந்தது. சிறிது நேரத்துக்குப் பிறகு அவளுக்கு மூச்சு விடுவதுகூடக் கஷ்டமாகி விட்டது. அவள் உடலே செயலிழந்துவிட்டது. கண்களில் கண்ணீர் வெள்ளம் கரைபுரண்டு ஓடிற்று. அவள் விம்மி விம்மி அழுதாள். பிறகு அமைதியாகப் பிரேதம்போல் கிடந்தாள்.

குளிர்காலச் சூரியன் சீக்கிரமே விடை பெற்றுக்கொண் டான். அறையை இருளும், குளிரும் கப்பின. மேரி மெது வாகப் படுக்கையிலிருந்து எழுந்தாள். முகம் கழுவும் அடுக் கில் தண்ணீரை நிரப்பி, கண்ணீர் வழிந்தோடியிருந்த கண் களையும் முகத்தையும் கழுவி விட்டுக்கொண்டாள். தலை முடியைச் சீராக்கிக்கொண்டாள். பிறகு கம்பிளி உடை ஒன்றை அலமாரியிலிருந்து எடுத்து அணிந்துகொண்டு கணப் பின் முன் வந்து அமர்ந்துகொண்டாள்.

தான் பெரிய தவறு செய்துவிட்டது இப்பொழுதுதான் அவளுக்கு விளங்கிற்று. ஆம்; ஆப்ரஹாம் இன்று தங்கள் திருமணத்தை நடத்த இணக்கம் தெரிவிக்கவே இல்லை.

அவள்தான் அந்தப் பிரச்னையைக் கிளப்பினாள்; அவனோடு வாதிட்டாள். அவனுடைய எதிர்வாதங்களை முறியடித்தாள். அதன் பிறகு, மேலே என்ன பேசுவது என்பது தெரியாமல் அவன் மௌனமாக நின்றிருக்கிறான். கண்மூடித்தனமான காதலினால் அவள் அந்த மௌனத்தை அவனுடைய சம்மதத்தின் அடையாளமாகக் கருதிவிட்டாள்.

ஆப்ரஹாமுக்கு நன்மை என்று கருதிய ஒரு காரியத்தில் அவள் அவனை ஈடுபடுத்த முயன்றாள். ஆனால் அவனுடைய போக்குக்கு முற்றிலும் மாறான வகையில், மற்றொருவரை (அதாவது தன்னை) ஏமாற்றும் நிர்ப்பந்தத்துக்கு அவனை விரட்டி விட்டாள்.

இது அவனை எத்தனை சங்கடத்துக்கு உள்ளாக்கியிருக்கும் என்பது அவளுக்குத் தெரியும். எத்தனை குற்ற உணர்ச்சியையும், வேதனையையும் அவனுக்கு ஏற்படுத்தியிருக்கும் என்பதையும் அவள் அறிவாள். அவள் அவன் நிலைக்கு வருந்தினாள்; தன் நிலைக்கும் கூடத்தான். அவன் மனதை முழுவதும் தயார்ப்படுத்திய பிறகு, அவள் தங்கள் திருமண அறிவிப்பை அவனுடைய பூர்ண சம்மதத்துடன் செய்து, சிறிது காலத்துக்குப் பிறகு கல்யாணத்தையும் நடத்திக் கொண்டிருக்கலாம். இப்பொழுது ஒன்றுக்கும் வழியில்லை. தன் காரியம், தன் இச்சையே குறியாக அவள் இருந்து விட்டாள். அவள் ஆப்ரஹாமை மிகவும் இக்கட்டான நிலைக்கு விரட்டிவிட்டாள். தன்னை ஏமாற்றிவிட நேர்ந்ததை மிகப் பெரிய பிழையாகக் கருதி, அவன் அவள் முகத்தில் விழிக்கவே பயந்துகொண்டிருப்பான். எல்லாம் இப்பொழுது தலைகீழாக மாறிவிட்டன.

தங்களுடைய முதல் சந்திப்பின்போது அவன் என்ன சொன்னான்? ''என் உள்ளத்தில் இப்பொழுதுதான் காதல் மலர் விட்டிருக்கிறது'' என்று சொல்லவில்லையா? அவனுக்கு மட்டும் என்ன? அவளுக்குங்கூட அதுதான் காதலின் ஆரம்பம். ஆனால் அந்த ஆரம்பத்திலேயே அதற்கு முடிவையும் தேடிக்கொண்டு விட்டாள் அவள். இதற்கு முழுக்க முழுக்க அவளேதான் பொறுப்பாளி; வேறு எவரும் இல்லை.

10

அன்றிரவு முழுவதும் மேரிக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. அறையின் தெற்குச் சுவரிலிருந்து ஜன்னல் வழியே விடி வெள்ளி வெளிச்சம் பரவ ஆரம்பித்தது. முன்னிரவில் மாட்டில்டா படுத்துக்கொள்ள வந்தபோது அவள் கண்களை

மூடிக்கொண்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்தாள்; ஆனால் மாட்டில்டா தூங்கிய பிறகு அவள் கண்களைத் திறந்துகொண்டு இருளைப் பார்த்தவாறு படுத்துக் கிடந்தாள். 'ஆப்ரஹாம் என் வாழ்விலிருந்து அடியோடு மறைந்துவிடப் போகிறாரா?' இதுதான் அவள் உள்ளத்தை அச்சமயம் குடைந்துகொண்டிருந்த கேள்வி.

ஆப்ரஹாம் தங்களிடையே ஏற்பட இருந்த திருமண உறவை விரும்பாமல் இல்லை. அப்படியிருந்தும் அதுபற்றி அறிவிப்புச் செய்யவேண்டிய தருணத்தில் அவர் வராமல் இருந்தது, எதைக் காட்டுகிறது? அவர் ஒரு மோசமான மனிதன்; அவர் அவளைக் காதலிக்கவில்லை; ஒருக்கால் காதலித்தாலும், அவள் அவரைக் காதலிக்கத் தகுதியற்றவள் என்பதைத் தானே? இப்பொழுது அவளுக்கு அவன் மீதிருந்த மதிப்பெல்லாம் போய்விட்டது; ஏன்? அவளுடைய சுயமதிப்பே போய்விட்டது. இப்படியெல்லாம் இரவு முழுவதும் மனம் வருந்திக்கொண்டிருந்த போதிலும், அவள் உள்ளத்தின் ஒரு மூலையில், 'நாம் மாத்திரம் லிங்கனை இவ்வளவு வற்புறுத்தியிராவிட்டால் அவர் அவசியம் வந்துதான் இருப்பார்' என்ற எண்ணமும் தோன்றுமல் இல்லை.

நல்ல வேளையாக இந்த விஷயம், தனக்கு, ஆப்ரஹாமுக்கு மற்றும் எலிஸபெத்துக்கு மாத்திரமே தெரிந்திருக்கிறது என்பதில் அவளுக்கு அளவற்ற ஆறுதல். எலிஸபெத், தன் கணவனிடங்கூட இதைப்பற்றி மூச்சுவிடமாட்டாள். ஆனால், திருமணத்தை நடத்திவைக்க வர இருந்த பாதிரியார் மூலம் ஒரு வேளை இச்செய்தி ஸ்பிரிங்ஃபீல்டு எங்கும் பரவிவிடுமோ? பரவிவிட்டால் அவள் வெளியே தலை நீட்டவே முடியாது போய்விடுமே!

அவள் படுக்கையிலிருந்து எழுந்து மேலங்கி ஒன்றை அணிந்துகொண்டு கண்ணாடிக்கு முன் போய் அமர்ந்து தன் முகத்தை அதில் நோக்கினாள். தனது வலது கன்னத்தில் ஒரு கறுப்புக் கோடு விழுந்திருப்பதை அவள் கவனித்தாள், எழுந்து சென்று குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவிக்கொண்டாள். தலையைச் சீவி விட்டுக்கொண்டாள். மெல்லச் சிரிக்க முயன்றாள். மெண்டலின் பள்ளியில் அவள் நான்கு வருஷகாலம் நடிப்புக் கலை பயின்றிருக்கிறாள். நடிப்புக்கேற்ற திறமைகள் அனைத்தும் அவளுக்கு இருப்பதாக மிஸியர் மெண்டலும், மாடம் மெண்டலும் பல தடவை கூறியிருக்கிறார்கள். அந்த நடிப்புத் திறமையை அவள் இப்பொழுது பயன்படுத்திக் கொள்ளுவாள். தவிர டாடு குடும்பத்தாருக்கே எத்தகைய வேதனையையும், எத்தகைய தோல்வியையும் வெளிக் காட்டிக்கொள்ளாதிருக்கும்

திறமை உண்டு. அந்தப் பாரம்பரிய குணமும் அவளுக்கு இப்பொழுது உதவியளிக்கும்.

காலையில் எலிஸபெத்தைச் சந்தித்ததும், அவளுடைய முகபாவமோ, பேச்சோ எவ்வித மாறுபாட்டையும் காட்டாததைக் கவனித்தாள், மேரி.

''குட் மார்னிங் மேரி; காபி சாப்பிடுகிறீயா?'' என்று எலிஸபெத் கேட்டாள்.

''ஆகட்டும் லிஸ்'' என்றாள் மேரி.

''எனக்கும்கூட காபி சாப்பிட்டால் தேவலைபோலிருக்கிறது. எல்லோருக்குமே இப்படித்தான். முதல் நாள் விருந்து நடத்திஞல் மறுநாள் எழுந்திருக்கு முன்பே அவர் களைக் களைப்பு வாட்டிவிடுகிறது இல்லையா?''

அவள் கேட்ட கேள்விக்கு விடையே தேவையில்லை. காபியின் சூடு உடலில் சுறுசுறுப்பை ஏற்படுத்தியதும் மேரி நினைத்துக்கொண்டாள்: ''ஸ்பிரிங்ஃபீல்டு மிகச் சிறிய ஊர். சிற்சில தெருக்களும், சிற்சில கடை வீதிகளும் உள்ள ஊர். ஆகையால் லிங்கன் இங்கே வராவிட்டாலும், அவரை நாம் எங்கேயாவது சந்திப்பது நிச்சயம்-ஏதாவது ஒரு கடையிலோ, யாரேனும் நண்பர்கள் வீட்டிலோ, வீதியிலோ நாங்கள் விரைவில் சந்தித்துக்கொண்டே ஆக வேண்டும். அப்படிச் சந்தித்துக்கொள்ளும்போது இருவர் தவறுகளையும் மறந்துவிட்டு, ஒன்றுமே நடவாததுபோல் கைகோத்துக்கொண்டு நடப்போம்.''

இந்த எண்ணம் அவளுக்கு ஆறுதல் அளித்தாலும், நாட்கள் செல்லச் செல்ல அவள் மனதில் மீண்டும் பாரம் ஏறத் தொடங்கிற்று. தலையை இரும்புப் பட்டையால் சுற்றி இறுக்குவது போலவும், கைகளும் கால்களும் சதா குளிரால் விறைத்துப்போவது போலவும் அவளுக்குத் தோன்றின. ஆயினும் இதன் காரணமாக அவள் தினசரி அலுவல்களை நிறுத்திக்கொண்டு விடவில்லை. கடை-கண்ணிகளுக்குப் போய் வந்தாள். நண்பர்களைச் சந்திக்கச் சென்றாள். அழைக்கப்பட்ட விருந்துகளில் தவறாது கலந்துகொண்டாள். இப்பொழுதெல்லாம் கார்மிக்காரனை எட்வின் வெப் அவளோடு மிகவும் நெருங்கிப் பழகினான். அவளை விருந்துகளுக்கும், ''பால்'' நடனங்களுக்கும் அழைத்துச் சென்றான். வெகு மதிகளை வாங்கி வந்து குவித்தான். அவளோடு லிங்கன் காணப்படாததைப்பற்றி எவரும் எதுவும் பேசவில்லை. தன் வயசுப் பெண்கள் மாத்திரம் சில சமயம் தன்னை விநோதமாக நோக்குவதை மேரி உணர்ந்தாள்.

லிங்கனும், மேரியைப் போலவே, தன் வேலைகளை ஒழுங்காகக் கவனித்து வந்தான். ஏனென்றால் பத்திரிகைகளில் அவனைப்பற்றிய செய்திகள் அடிக்கடி வெளியாகிக்கொண்டிருந்தன. நாக்ஸ் ஜில்லாவில் கேல்ஸ்பர்க் என்ற ஊரைச் சேர்ப்பதற்கான சட்ட சபைத் தீர்மானத்துக்குச் சாதகமாக வோட் அளித்தான் என்றும், ஆண்டுரூ ஜாக்ஸன் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும், விக் கட்சிக் காரனை அவன் அவருடைய தீர்மானமான, ஜனவரி 8-ஆம் தேதியையே நியூ ஆர்லியன்ஸ் யுத்த தினமாக அநுஷ்டிக்க வேண்டும் என்பதை ஆதரித்தான் எனவும், மராமத்து இலாகாவின் பழைய போர்டார் சமர்ப்பித்த கணக்கைப் பரிசீலனை செய்யும் தீர்மானத்தை எதிர்த்தான் எனவும், இப்படி அவனைப்பற்றிப் பலப் பல செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகிக் கொண்டிருந்தன. தவிர, சஞ்சாரக் கோர்ட்டும், ஸுப்ரீம் கோர்ட்டும் திறந்துவிட்ட போதிலும், லிங்கன் ஒரே ஒரு வழக்குக்காக மட்டுமே ஆஜரானதும், அதுவும் ஒரு விவாகரத்து வழக்காக இருந்த வேடிக்கையும் மேரியின் கவனத்தை ஈர்த்தன.

இந்த நிலையைக் கலைக்க வந்து சேர்ந்தான் நினியன். அவனுக்கு மற்ற மனிதர்களின் உணர்ச்சி மாற்றங்கள் ஒருபோதும் தென்படாது. நினியன் ஒரு நாள் மாலையில் மேரியின் அறைக்கு வந்து, "என் பாராட்டுக்கள் மேரி. இப்பொழுதுதான் உன் கண்கள் திறந்தன போலும். நீ ஆப்ரஹாம் லிங்கனுக்கு ஆசைகாட்டி மோசம் செய்துவிட்டாயென்று ஊரெல்லாம் பேச்சாக இருக்கிறதே! உங்களுடைய காதல் முறிவுக்குப் பிறகு அவனுக்கு இரண்டு மூன்று தடவை மயக்கம் ஏற்பட்டுவிட்டது என்று கூட நான் கேள்விப் பட்டேன்" என்றான்.

மேரி தன் உதடுகளின் துடிப்பைப் பல்லைக் கடித்து அடக்கிக்கொண்டாள். யார் இந்த வதந்தியைக் கிளப்பி விட்டது? எனக்கு அவமானம் ஏற்படக்கூடாது என்று ஆப்ரஹாமே இப்படிக் கதை கட்டி விட்டிருப்பாரோ? அல்லது பல நாட்களாக எங்கள் இருவரையும் சேர்ந்து காணுமையால் ஊர்க்காரர்களே இப்படி ஊகித்துக்கொண்டிருப்பார்களோ? என்னைத் தவிர, வேறு எந்தப் பெண்ணும் ஆப்ரஹாமை ஏறெடுத்தும் பார்க்கவில்லை என்பது ஏற்கனவே ஊரார் செய்துகொண்டிருக்கும் முடிவு. ஆகவே எங்களைச் சேர்ந்து காணுவதால், எங்களிடையே பிணக்கு ஏற்பட்டிருக்கும் என்று அவர்கள் ஊகித்திருப்பார்கள். அப்படி ஊகித்திருந்தால், நான்தான் அவரை நிராகரித்திருப்பேன் என்று அவர்கள் கருதியிருப்பது நியாயந்தானே?

மறு நாள் காலையில் மேரியின் பெரியப்பா பிள்ளை ஜான் ஜே. அவளைச் சந்தித்தபோது, ''லிங்கன், ஸ்பீடின் கடையில் உடல் நலமின்றிப் படுத்திருக்கிறான்'' என்று கூறினான். அவனுக்கு வந்திருப்பது குளிர்காலத்துக் காய்ச்சல் இல்லை யென்றும், வழக்கமாக வரும் மனப்பிராந்தி நோய்தானென்றும், ஜான் ஜே. யிடம் சில கேள்விகள் கேட்டுத் தெரிந்து கொண்டாள் மேரி. ஏன்? அவளைக் கூடத்தான் மனநோய் பற்றிக்கொண்டிருந்தது. உணவு, உறக்கம் எல்லாம் அவளுக்கும் குறைந்து விட்டிருந்தன. ஆனால் அவனளவு தன்னைத் தானே வதைத்துக்கொள்ளும் திறமை அவளுக்கு எங்கே இருந்தது?

ஒரு வாரத்துக்குப் பிறகு ஒரு நாள் அவளும், அவளுடைய சகோதரி ஃபிரான்ஸெஸ்ஸும், லிண்ட்ஸே சகோதரர்கள் கடையில் ஏதோ சாமான்கள் வாங்கச் சென்றிருந்தபோது லிங்கனை அவள் அக்கடையில் காண நேரிட்டது. அவன் தன்னைப் பார்த்து விடலாகாது என்று மேரி தன் சகோதரியின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு அருகிலிருந்த இன்னொரு வாசல் வழியாக நுழைந்தாள். சில விநாடிகளுக்குப் பிறகு லிங்கன் இவர்களைத் தாண்டிச் சென்றான். உடல் இளைத்து, கன்னங்களும், கண்களும் குழி விழுந்து, உடம்பிலுள்ள எலும்பெல்லாம் தெரிய அவன் நடந்து சென்றதைப் பார்த்துவிட்டு, ஃபிரான்ஸெஸ் மெதுவான குரலில் சொன்னாள்: ''பாவம்! லிங்கன் ஏன் தன்னைத் தானே இப்படி வதைத்துக்கொள்ளுகிறான்!''

லிங்கனுடைய தோற்றம் மேரியையும் மனம் கலங்கவைத்தது. 'நல்ல வேளை! என்னுடைய தற்பெருமைதான் என்னை இவரைப் போல் இடிந்து போகாமல் காத்து நிறுத்தியிருக்கிறது' என்று அவள் தனக்குள்ளே கூறிக் கொண்டாள்.

லிங்கன் மாகாண சட்டசபை அங்கத்தினனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் செய்தியை மேரி பத்திரிகையில் படித்தாள். அதே சமயம் வாஷிங்டனிலிருந்த அவளுடைய பெரியப்பா பிள்ளை ஸ்டுவர்ட் ஒரு கடிதம் எழுதியிருந்தான். அதில் அவன், லிங்கனிடமிருந்து தனக்கு வந்துள்ள கடிதத்தின் ஒரு பகுதியை எடுத்து எழுதியிருந்தான்: 'நான் இப்பொழுது மிகவும் பரிதாபகரமான நிலையில் வாழ்கிறேன். என்னுடைய நிலை மனித குலத்துக்கு ஏற்பட்டு விடுமானால், இந்த உலகில் உற்சாகமான முகத்தைக் காண்பதே அரிதாகி விடும். என் நிலையில் அபிவிருத்தி ஏற்படுமா என்பது எனக்கே தெரியாது. ஏற்படாது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இந்த நிலையில் நான் வாழ்வது கடினம்.

ஒன்று நான் சாக வேண்டும்; அல்லது நல்ல நிலைக்கு வர வேண்டும்.'

லிங்கனின் கடிதத்தின் இப்பகுதியைக் குறிப்பிட்டு விட்டு, ஸ்டூவர்ட், '' உங்களுக்குள் என்ன தகராறு அம்மா?'' என்று கேட்டிருந்தான் தன் கடிதத்தில்.

சில நாட்களுக்குப் பிறகு ஜேம்ஸ் காங்க்ளிங் மேரியைக் காண வந்தான். அவன் தேநீரைப் பருகிக்கொண்டே அவளுடைய முகத்தை நோட்டம் விட்டுவிட்டுப் பிறகு சொன்னான்:

'' பாவம் லிங்கன்! அவனுல் பேசக் கூட முடியவில்லே. அவனுடைய பரிதாப நிலேயைப்பற்றிச் சற்று முன் நான் மெர்லிக்கு எழுதிய கடிதத்தில்கூடக் குறிப்பிட்டேன்.'' அவன் சிறிது நிறுத்திவிட்டுப் பிறகு கேட்டான்: '' ஏன் மேரி? நீ எட்வின் வெப்பை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்து விட்டாயா?''

அனறிரவு அவள் படுக்கையில் படுத்தவாறு மனசை ஓட விட்டாள். நல்ல வேளே! மாட்டில்டா ஊர் சென்று விட்டாள். ஆகையால் அவள் தனியே இருந்து சிந்திக்க முடிந்தது. வெப் விஷயமாக ஜேம்ஸ் காங்க்ளிங் கூறியதை அவள் நினேத்துப் பார்த்தாள். 'என்ன? நான் அவனே ஏற்றுக்கொள்ள நிச்சயித்து விட்டேனு?' என்று அவள் தன்னேத் தானே கேட்டுக்கொண்டாள். லிங்கனின் தோழமையை இழந்து ஏங்கி நின்றபோது அவளுடைய தனிமை உணர்ச்சியைப் போக்க ஒரு தோழன் தேவையாக இருந்தான். அந்த ஸ்தானத்தை வெப் பூர்த்தி செய்ததற்காக அவள் அவன்மீது நன்றிகொண்டிருந்தது உண்மையே. ஆனுல் அவனே மணம் செய்துகொள்ளும் நினேவு தனக்குத் தோன்றியதே இல்லேயே!

மறு நாள் மாலேயில் வெப் அவளேச் சந்தித்துத் தன்னே மணம் செய்து கொள்ளுமாறு கேட்டபோது, மேரி அதையேதான் சொன்னுள். '' அப்படியானுல் உனக்கு ஒருத்திக்குத்தான் அந்த எண்ணம் தோன்றவில்லே என்று சொல்ல வேண்டும். ஏனென்றுல் ஊர்க்காரர்கள் அனேவருக்கும் நாம் மணம் செய்துகொண்டு விடுவோம் என்று தோன்றியிருக்கிறதே! கடந்த ஒரு மாதப் பழக்கத்தில் என் நோக்கத்தை நான் உனக்குக் குறிப்பாக உணர்த்திக் கொண்டுதான் வந்தேன். நீதான் அதைப் புரிந்துகொள்ளவில்லே போலிருக்கிறது'' என்றுன் வெப்.

முதல் தடவையாக அவள் எட்வின் வெப்பை தலே முதல் கால்வரை கூர்ந்து நோக்கினுள். பிறகு சொன்னுள்: '' நீங்கள் நட்புக்கு ஏற்றவர்தான்.....''

''நான் உன்னிடம் நட்பை யாசிக்கவில்லை'' என்று அவள் பேச்சில் குறுக்கிட்டான் வெப். பிறகு சொன்னான்: ''மணம் செய்துகொண்டு, அன்பைப் பொழிந்து வாழ்க்கை நடத்துவதையே வேண்டுகிறேன். என் இரு குழந்தைகளும் தாயன்புக்கு ஏங்கிக் கிடக்கிறார்கள். அந்த அன்பை அவர்களுக்கு அளித்து, உனக்கும் எனக்கும் பிறக்கும் குழந்தைகளுக்கும் அளிக்க வேண்டுகிறேன்.''

''அது சரி; நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்களே; ஊரில் உங்கள் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள யார் இருக்கிறார்கள்?'' என்று கேட்டாள் மேரி.

''அவர்கள் பாட்டி, காலஞ்சென்ற என் மனைவியின் தாயார், எங்கள் வீட்டுக்கு அருகில்தான் வசிக்கிறாள். அவள் கவனித்துக்கொள்ளுவாள்.''

இதைக் கேட்டதும் மேரியின் முகபாவம் திடீரென்று மாறிவிட்டது. எட்வின் வெப்பிடம் அவளுக்கு ஏதேனும் கொஞ்சம் கவர்ச்சி ஏற்பட்டிருந்தால், அந்தச் சிறிதளவு கவர்ச்சியும் இதைக் கேட்டதும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

''ஏன் மிஸ் டாடு, உன் முகம் இப்படி விசனத்தைக் காட்டுகிறது?'' என்று கேட்டான் வெப்.

''ஒன்றுமில்லை. லெக்ஸிங்டனில் இருக்கும் என் பாட்டி பார்க்கரின் நினைவு வந்தது.....''

''மிஸ் டாடு! இப்பொழுது நடக்கும் சட்டசபைக் கூட்டம் முடிந்ததும், நாம் மணம் செய்துகொண்டு, தம்பதியாகக் கார்மிக்குச் செல்லவேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன்'' என்று அன்று இறுதியாகக் கூறிவிட்டுச் சென்றான் வெப்.

* * *

ஆப்ரஹாமைப் பற்றி எதுவுமே அறிய முயலக்கூடாது என்று மேரி தீர்மானித்துக் கொண்டாள். ஆயினும் பிப்ரவரி மாதத் துவக்கத்தில் அவளுக்கு அவனைப் பற்றிய செய்தி ஒன்று எட்டிற்று. ஜோஷுவா ஸ்பீடு தன் கடைமை விற்றுவிட்டு கெண்டக்கியிலுள்ள தன் தாயின் நில புலன்களை மேற்பார்வையிடச் சென்று விட்டான் என்றும், இதன் காரணமாக லிங்கன் தங்கியிருக்க இடமின்றி, தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பட்லர் தம்பதியின் வீட்டிலேயே வசிக்கவும் சென்றுவிட்டானென்றும் அவள் கேள்விப்பட்டாள். சட்ட சபையில் அவன் இப்பொழுது மிகவும் சுறுசுறுப்போடு விளங்கினான். ஆளும் கட்சியினராகிய

ஜனநாயகக் கட்சிக்காரர்கள், தங்கள் கட்சியைச் சேர்ந்த ஐவரை இல்லினாய்ஸ் ஸுப்ரீம் கோர்ட் நீதிபதிகளாக நியமிக்க இருந்தனர். இதை எதிர்க்கத் தனது கட்சியினருக்கு உதவி கொண்டிருந்தான் லிங்கன். இதை அவளுக்குக் கூறிய ஸ்டீஃபன் டக்ளஸ், அந்த ஐந்து நீதிபதிகளுள் தானும் ஒருவன் என்று அறிவித்தான்.

''ஸுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்! ஸ்டீவ்! அந்தப் பதவியை நீ திறமையுடன் வகிப்பாய்'' என்றாள் மேரி.

''வகித்துத்தான் ஆகவேண்டும். முக்கியமாக, லிங்கன் என்னைப்பற்றி, 'இரட்டிப்பு வருவாய்; கேட்பானேன்? முன்னைவிட இன்னும் தலைக்கனத்துடன் நடந்து கொள்ளுவான்' என்று கூறிக் கொண்டிருக்கிறானே; அதற்காக வாவது நான் அப்பதவியை மிகக் கவனமாக வகித்து வர வேண்டும்'' என்றான் டக்ளஸ்.

ஆப்ரஹாமின் சாதுரியப் பேச்சை நினைத்துப் புன்முறுவல் பூத்தாள். ஆப்ராஹம் மட்டுமென்ன? அப்பொழுது அந்த ஊர்க்காரர்கள் எல்லோருமே ஜட்ஜ் பதவிக்கு, தகுதியுள்ள ஜனநாயகக் கட்சிக்காரர்களே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதற்காக இம்மாதிரி அரசியல் உபாயம் கலந்த திண்டல்களைச் செய்து வந்தனர்.

பிப்ரவரி மாத மத்தியில் மேரியின் பெரியப்பா பிள்ளை ஸ்டீஃபன் டி லோகன், முதல் தெருவின் வடக்குக் கோடியிலிருந்த தன் வீட்டுக்கு ஒரு ஞாயிற்றுக்கிழமை அவளை விருந்துக்கு அழைத்தான். உயரமான பகுதியில் கட்டப்பட்டிருந்தது அந்தப் பெரிய வீடு. சுற்றிலும் வேலி பிடிக்கப்பட்டு, நல்ல நடைபாதைகள் கொண்டு மிக அழகாக விளங்கிற்று, அது. சாப்பாட்டுக்குப் பிறகு அவர்கள் அவனுடைய படிப்பு அறையில் அமர்ந்து இனிப்புப் பிராந்தி அருந்திய வாறு பேசிக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது லோகன் சொன்னான்: ''மேரி! எட்வர்டு பேக்கரும், நானும் இதுவரை கூட்டாகத் தொழில் நடத்தி வந்தோம். இப்பொழுது நாங்கள் பிரிந்துவிடப் போகிறோம். எனக்குப் புதுக் கூட்டாளி ஒருவன் வேண்டும். யாரைச் சேர்த்துக்கொள்ளுவது என்பதுபற்றி நான் இன்னும் எவ்வித முடிவும் செய்யவில்லை. இருந்தாலும் ஆப்ரஹாம் லிங்கனே இதற்குத் தகுந்த ஆளாக இருப்பானென்று எனக்குத் தோன்றுகிறது. அவனுடன் சேர்ந்தும், அவனுக்கு எதிர்க் கட்சியிலிருந்தும் நான் பல வழக்குகளை நடத்தியிருக்கிறேன். அந்த அநுபவங்களிலிருந்து அவன் ஒரு சிறந்த வக்கீல் என்றே எனக்குப் பட்டது.''

லோகன் ''உன் அபிப்பிராயம் என்ன?'' என்று மேரியைக் கேட்காவிட்டாலும், அவனுடைய பேச்சில் அக் கேள்வி தொக்கி நின்றது. 'டாடு குடும்பத்தில், என்னையும் சேர்த்து, எத்தனை பேர்தான் லிங்கனைத் தங்கள் கூட்டாளி யாக்கிக்கொள்ள ஆசைப்படப் போகிறார்கள்?' என்று அவள் நினைத்துக்கொண்டாள். பிறகு சொன்னாள்: ''லிங்கனுக்கு இது ஓர் அரிய வாய்ப்புத்தான். ஆம், இவ்வூரில் நீதான் தலைசிறந்த வக்கீல் என்று எல்லோரும் சொல்லிக்கொள்ளுகிறார்களே!''

ஸ்டீஃபன் லோகன் பலமாகத் தலையசைத்துக்கொண்டே, ''எனக்கு அவனைப் பிடித்திருக்கிறது. அவனையே கூட்டுச் சேர்த்துக்கொள்ள விரும்புகிறேன். மார்ச்சு முதல் தேதி வாக்கில் சட்டசபையின் இந்தக் கூட்டம் முடியும். அதன் பிறகு அவன் என்னோடு சேர்ந்து கொண்டால் போதும்.''

மேரி சட்டென்று நாற்காலியிலிருந்து எழுந்து லோகனின் கன்னத்தில் முத்தமிட்டாள். ஆம்; ஸ்பிரிங்ஃபீல்டின் தலை சிறந்த வக்கீலுடன் கூட்டுச் சேருவதன் மூலம், நிச்சயமாக ஆப்ரஹாமின் மனச் சஞ்சலங்கள் அனைத்தும் மாறிவிடும். அவருடைய உடல் நிலை அபிவிருத்தி அடையும்; தன்னம்பிக்கை பிறக்கும்; மீண்டும் காதலும் கூடப் பிறக்கும். 'நீ ஒரு வக்கீலைத்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்' என்று தன் பெரியப்பா முன்பு ஒரு தடவை கூறியிருந்ததை மேரி நினைத்துக்கொண்டாள். அப்படியென்றால் அவள் எட்வின் வெப்புக்கு வீண் ஆசை காட்டிக் கொண்டிருக்கக் கூடாது.

மேரி ஒரு நாள் வெப்பைத் தேநீர் அருந்த அழைத்து தன் தாயின் மரணம், தங்கள் மாற்றுந்தாயின்மீது பாட்டி பார்க்கருக்கு ஏற்பட்ட வெறுப்பு, அதனால் டாடு குடும் பத்தில் ஏற்பட்ட தகராறுகள், மனஸ்தாபங்கள் எல்லாவற் றையும் விளக்கினாள்.

இறுதியாகச் சொன்னாள்: ''ஆகையால் மிஸ்டர் வெப், இந்த மாதிரி அநுபவங்களுக்கு உள்ளாகாத ஒருத்தியை நீங்கள் மணந்துகொள்ளுவதுதான் நல்லது.''

''அப்படியானால் உனக்கு என்னை மணந்து கொள்ள இஷ்டமில்லை என்று சொல்.''

''மன்னித்துக்கொள்ளுங்கள். நான் என்னைப்போலவே கலியாணத்துக்குப் புதியவரான ஒருவருடன், வாழ்வைப் புதிதாக ஆரம்பித்து, எங்கள் குடும்பத்தைப் புதிதாக உருச் செய்யவே விரும்புகிறேன்'' என்றாள் அவள்..

11

சட்டசபைக் கூட்டம் முடிவுற்றது. வாஷிங்டனில் ஜனாதிபதி ஹாரிஸன் மரணமடைந்தார். ஸ்பிரிங்ஃபீல்டு நகரே துயரத்தில் ஆழ்ந்தது. லிங்கனும், லோகனும், கூட்டு வக்கீல் தொழிலை ஆரம்பித்துவிட்டனர். புது வருஷம் பிறந்து சில வாரங்களும் ஆகி விட்டன. ஆனால் மேரியும் லிங்கனும் சந்தித்துக்கொள்ளும் வாய்ப்புத்தான் ஏற்படவே இல்லை. 'இனி நாமாக அவரைச் சந்திக்க முயலவே கூடாது; அவர்தான் நம்மைச் சந்திக்க வர வேண்டும்' என்று மேரி உறுதி செய்து கொண்டாள். இதற்காக லிங்கனைச் சந்திக்கக் கூடிய இடங்கள் பக்கமே அவள் போகாமல் இருந்தாள்; அரசியல் கூட்டங்கள், விவாதக் கூட்டங்கள், 'லிஸீம்' என்ற இலக்கியப் பயிற்சிக் கூட்டங்கள், '' ஜர்னல் '' ஆபீஸ், மற்றும் பட்லர் தம்பதி வீட்டிலிருந்து லிங்கன் தனது ஆபீஸ் செல்லும் வழியிலுள்ள தெருக்கள், இந்த இடங்களுக்கெல்லாம் போவதை அவள் தவிர்த்தாள்.

மனசை இவ்வாறு கட்டுப்படுத்தியது அவளுடைய நரம்புகளைப் பாதிக்க ஆரம்பித்தது. இதற்காக அவள் தனது கவனத்தை இதர அலுவல்களில் அதிகமாகச் செலுத்தத் தொடங்கினாள். எப்பொழுதும் தன் வயது வாலிபர்களுடனும் யுவதிகளுடனும் கூடிக் களித்திருப்பது; விருந்துக்கும், நடனத்துக்கும் வரும் அழைப்புக்கள் ஒன்றைக்கூட விடாமல் ஏற்றுக்கொள்ளுவது; இவ்வாறு தன் மனப்பாரத்தைக் குறைக்க முயன்றாள். வலுக்கட்டாயமாகத் தன்னைத் தானே இத்தகைய கேளிக்கைகளில் ஈடுபடுத்திக்கொண்டாலும், அந்த நடிப்பைத் தான் திறம்பட நடித்து வருவதாகவே அவளுக்குத் தோன்றிற்று.

ஆனால் இரவுப் பொழுது அவளுக்கு நரகவேதனையாகத்தான் இருந்தது. படுக்கையில் தூக்கமின்றி கண்களைத் திறந்துகொண்டு கிடக்கும்போது, இந்த நடிப்பெல்லாம் எங்கோ ஓடி ஒளிந்துவிடும். வெப்பம் மிக்க அந்த அறை அவளுக்குக் குளிரும்; கனத்த கம்பளிகளின் அடியில் அவளுடைய உடல் சில்லிட்டுப் போகும். அடிக்கடி அவளுக்குக் கனைப்பு மேலிடும். அவளுடைய தலை கனம் தாங்காமல் துவளும்.

அந்த வருடம் வசந்தகாலம் சீக்கிரமே ஆரம்பமாகிவிட்டது. புல் வெளிகளில் மலர்கள் பூத்துச் சொரிந்தன. நிலம் செழிப்பாகவும் மிருதுவாகவும் மாறிற்று. ஆனால் மேரியின் ஏமாற்றம் என்னவோ அப்படியே தான் இருந்தது. ஏப்ரல் மாதத்து மிதமான வெப்பமும், மே மாதத்துக்

கோடையும்கூட அவளுடைய உள்ளத்தின் குளிரைப் போகக் முடியவில்லை. ஏனென்றால், உடல் ஆரோக்கியமும், பொருளாதாரச் செழிப்பும் மாத்திரமே லிங்கனின் மன நிலையை மாற்றி, அவனைத் தன்னை நாடி வரச்செய்து விடாது என்பது இப்பொழுது அவளுக்குத் தெளிவாகிவிட்டது. ஒரு நாள் அவள் தனது பெரியப்பா பிள்ளை ஸ்டுவர்ட்டைச் சந்தித்தாள். லிங்கனின் இடைவிடா வேண்டுகோளுக்காக அவனுக்கு பொகோட்டாவின் 'சார்ஜ்-டி-அபயேர்ஸ்' வேலை கிடைக்கச் செய்ய உள் நாட்டு மந்திரி டேனியல் வெப்ஸ்டரிடம் தான் சிபாரிசு செய்துவருவதாக ஸ்டுவர்ட் அறிவித்தான்.

ஆப்ரஹாம் இப்பொழுது டிரெமாண்டில் நடக்கும் சஞ்சாரக் கோர்ட்டில் வழக்குகளை நடத்தச் சென்றிருந்தான்; பின்னர் அவன் மக்லீன் சஞ்சாரக் கோர்ட்டுக்கும், பாண்டியாக், க்ளிண்டன், அர்பானா, டான்வில், சார்ல்ஸ்டன் முதலிய இடங்களுக்கும் போக இருந்தான்.

அவன் அவ்வூரில் இல்லாமல் இருந்தது, அவளுடைய மனவேதனையைச் சிறிது குறைத்தது. ஆம், வீட்டு நடைபாதையில் பரிச்சயமான அவனுடைய காலடிச் சப்தம் கேட்டுவிடுமோ என்றும். முன் வாசல் கதவை அவன் தட்டி விடுவானே என்றும், கதவைத் திறந்ததும் அங்கே விசனம் தோன்றும் கண்களுடனும், விசனமே எதிரொலிக்கும் புன்சிரிப்புடனும், தன்னை நோக்கிக் கைகளை நீட்டிக் கொண்டு நிற்பானே என்றும் அவள் கவலைப்பட வேண்டியதில்லை யல்லவா? தவிர, அவன் சுவாசிக்கும் அதே காற்றைச் சுவாசிக்க வேண்டியதில்லை; அவன் நடக்கும் தெருக்களை விலக்க வேண்டிய தில்லை; எதிர்பார்த்திருக்கும் அந்த பயங்கரமான சந்திப்பை எதிர்கொள்ள வேண்டியதும் இல்லை யல்லவா?

ஜூன் மாதத்தில் ஸாங்கமென் சஞ்சாரக் கோர்ட் திறந்தது. வக்கீல்களின் படை திரும்பி வந்தது. லோகன்—லிங்கன் கூட்டு வக்கீல் கம்பெனிக்கு பல வழக்குகள் இருந்தன. ஜூலையில் திறக்க இருந்த இல்லினாய்ஸ் ஸுப்ரீம் கோர்ட்டிலும் நிறைய வழக்குகள் இருந்தன. ஆப்ரஹாம் இப்பொழுது பொகோட்டாவில் 'சார்ஜ்-டி-அபயேர்ஸ்' வேலை பெறும் எண்ணத்தையே விட்டுவிட்டான்.

அந்த மட்டும் நல்லதுதான், ''காதல் அழிவற்றது'' என்று அவன் கூறியிருந்ததை அவள் நினைத்துக்கொண்டாள்; அதே சமயம், 'அந்த அழிவற்ற காதல் மீண்டும் என்னை நாடி வரும்வரை உயிரோடிருப்பேனா?' என்றும் எண்ணிக் கொண்டாள்.

ஜூன் மாதத்தில் டிட்டஸ், ஆங்கெவின் சர்க்கஸ்

ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்தது. அதன் ஆரம்ப ஆட்டத்துக்குத் தங்களுடன் வருமாறு ஃபிரான்ஸிஸ் தம்பதி மேரிக்குச் சீட்டு அனுப்பினர். சர்க்கஸ் கூடாரத்தினுள், பருமனான அந்த இருவரின் இடையே அவள் பெஞ்சில் அமர்ந்திருந்தாள். பபூன்கள் வந்து விளையாடிவிட்டுச் சென்றனர்; மிருகங்கள் வந்து தங்கள் திறமையைக் காட்டிவிட்டுச் சென்றன. பிறகு மெல்ல அவர்கள் அவளோடு பேச்சுக்கொடுக்க ஆரம்பித்தனர்.

''மேரி! ஆப் இந்த ஊருக்கு வந்ததுமே நாங்கள் சந்தித்தோம்'' என்று எலிஸா பேசத் தொடங்கினாள்; ''விபரீதத்தை விளைவித்த அந்த ஜனவரி முதல் தேதியைப் பற்றி அவன் பேசினான். உடனே நான், 'அந்த விபரீதத்தை விளைவித்தவள் நீயா, அல்லது அதனால் பாதிக்கப்பட்டவள் நீயா?' என்று கேட்டேன். 'நீ அதனால் பாதிக்கப்பட்டவள்தான்' என்றான் அவன்.''

அவள் முடித்ததும் ஸிமியன் பிரான்ஸிஸ் தொடங்கினான்: ''உடனே நான் அவனிடம், 'நீ ஏன் அந்த விபரீதம் நிகழ இடமளித்தாய்? மறதியாலா, அல்லது வேண்டுமென்றேதானா?' என்று கேட்டேன். 'இரண்டும்தான்; என்னால் அன்று போக முடியவில்லை. என் உடல் நிலை சரியாக இல்லை' என்று பதிலளித்தான் அவன். ஆகவே, அவன் குற்றத்தை ஒப்புக்கொள்கிறான் என்பதை உனக்கு அறிவிக்க நாங்கள் விரும்பினோம்''

மேரி, நீக்ரோ ஒருவன் பாடிக்கொண்டே செய்த சர்க்கஸ் வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தாள். அதே சமயம், 'ஆமாம்; அதைத் தெரிந்துகொண்டதும் நல்லதுதான்; ஆயினும் அதனை அறிந்துகொண்டதால் எனக்கு என்ன பயன் ஏற்பட்டுவிடப் போகிறது?' என்றும் நினைத்துக் கொண்டாள்.

''மேரி என்று இன்னொரு பெண் இருக்கிறாளே; அவளைப்பற்றி உனக்கு ஏதேனும் தெரியுமா?'' என்று எலிஸா கேட்டாள்.

மேரி தலையசைத்துக்கொண்டே, ''ஆம்; என்னை மோலி என அழைக்கலாமா என்று கேட்டபோது ஆப்ரஹாம் அவளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்'' என்றாள்.

''நீ படிக்கும் பொருட்டு நாங்கள் ஒரு கடிதம் கொண்டு வந்திருக்கிறோம். ஏனென்றால் அதைப் படித்தால் உன் மனப் பாரம் சிறிது குறையும். நியூ ஸேலத்தில் நடந்த ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றி ஆப், ஸ்ரீமதி ஆர்வில் பிரெளனிங் என்பவருக்கு எழுதிய கடிதம் அது.''

பரிச்சயமான கையெழுத்தில் இருந்த அந்தக் காகிதங்களை மேரி வாங்கிக்கொண்டாள். பாண்டு வாத்தியம்

முழங்க சர்க்கஸ் வேலைகள் மும்முரமாக நடந்துகொண் டிருந்தன. அவள் ஆப்ரஹாமின் கடிதத்தைப் படிக்க லாஞள் ;

''1836 இலையுதிர் காலத்தில், எனக்குத் தெரிந்த குடும்பஸ்திரீ ஒருத்தி, என்னிடம் ஒரு விஷயம் கூறினுள் ; தனது தந்தையைப் பார்ப்பதற்காகக் கெண்டக்கிக்குப் போகப்போவதாகவும், அங்கே தன் தங்கை ஒருத்தி இருப்ப தாகவும், அவளை நான் கலியாணம் செய்து கொள்ளுவதாக இருந்தால், திரும்பி வரும்போதுகூட அழைத்து வருவ தாகவும் அவள் சொன்னுள். இரண்டு மூன்று வருஷங் களுக்கு முன் அந்த அம்மாளின் தங்கையை நான் பார்த் திருந்தேன். கெட்டிக்காரியாகவும், எனக்கு ஏற்றவளாக வும் இருந்ததால், 'சரி' என்று கூறினேன்.

உரிய காலத்தில் அந்த அம்மாள் தன் தங்கையுடன் திரும்பி வந்தாள். அவள் சிறிது பருமன் என்பது எனக்கு முன்பே தெரியும். ஆனல் இப்பொழுது அவளைப் பார்த்த போது, ஃபால்ஸ்டாஃப் (Falstaff) போன்றவர்களுக்குத் தான் அவள் ஏற்ற ஜோடி என்று தோன்றிற்று. வாயில் பல பற்களைக் காணவே யில்லை. வெட்ட வெளியில் கிடக்கும் மரம் போலிருந்தது அவளுடைய தோற்றம். இதை யெல்லாம் பார்த்ததும், இந்த வளர்ச்சியும் தோற்றமும் ஒருத்திக்கு ஏற்படுவதற்குக் குறைந்தது நாற்பது வருஷமா வது ஆகி யிருக்க வேண்டும் என்ற எண்ணந்தான் எனக்கு ஏற்பட்டது. சுருங்கச் சொல்வதென்ருல் எனக்கு அவளைக் கொஞ்சங்கூடப் பிடிக்கவே யில்லை. ஆனல் நல்லதோ, கெட்டதோ, அந்த அம்மாளிடம் இவளை ஏற்றுக் கொள்வ தாகக் கூறிவிட்டேனே !

''வாழ்வில் இதுவரை நான் எதற்கும் என்னைக் கட்டுப் படுத்திக் கொண்டது கிடையாது. கனவிலும் சரி; நினை விலும் சரி, எப்பொழுதுமே எந்த விதமான பிடியிலும் சிக்கிக் கொள்ளாமல் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்பது தான் என் ஆவல்.

''இங்கே நான் பட்ட அவதிகளுக்கெல்லாம் பிறகு, எனக்கு இப்பொழுது எதிர்பாராத விதத்தில் இந்த வியூ கத்திலிருந்து விடுதலை கிடைத்திருக்கிறது. எவ்வளவு நாள் முடியுமோ, அவ்வளவும் நான் அந்த சுந்தரியிடம் கலியாணப் பேச்சையே எடுக்காமல் இருந்தேன். பிறகு என்னுடைய ஏமாற்றத்தை யெல்லாம் ஒதுக்கிவிட்டு, ஒரு நாள் அவ ளிடம் நேரடியாகவே கலியாண விஷயத்தைப் பிரஸ்தாபித் தேன். ஆனல் அவள் கூறிய பதில் என்னைத் திடுக்கிட வைத்தது. 'இல்லை; நம் கலியாணத்தைப்பற்றிய எண் ணத்தை நான் கைவிடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது!'

என்றாள் அவள். இந்த எதிர்பாராத பதில் என்னைப் பலவிதத்தில் துன்புறுத்திவிட்டது. மனிதனைப் பிறந்த எவனும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டான் என்று நான் கருதிக் கொண்டிருந்த ஒருத்தி, பிரமாதமாக நினைத்துக்கொண்டிருந்த என்னை நிராகரித்து விட்டதைக் கண்டபோது என் கர்வமெல்லாம் நிலைகுலைந்துவிட்டது.

''சிலர் பெண்களால் முட்டாளாகப் படுவதுண்டு. ஆனால் நான் என்னையே முட்டாளாக்கிக் கொண்டேன். இனிமேல் கலியாணத்தைப்பற்றிக் கனவில்கூட கருதக்கூடாது என்ற முடிவுக்கு நான் வந்துவிட்டேன். என்னைக் கணவனைக் கொள்ளும் அளவு முட்டாளாக ஒருத்தி இருப்பாளென்ற சமாதானம் இனி எனக்கு ஒரு போதும் ஏற்படாது.''

உங்கள் உண்மையுள்ள நண்பன்,

ஆ. லிங்கன்.

மேரி இந்தக் கடிதத்தைப் படித்ததும் சிலையாக அமர்ந்து விட்டாள். ஆப்ரஹாம் தன்னைப்பற்றியும் பிறரைப்பற்றியும், இவ்வளவு கிராதகத்தன்மையுடன், இவ்வளவு கொடூரத்தன்மையுடன் நினைப்பதைக் கண்டதும், 'இது அவருடைய மனைவியாதியின் கூரல்லவா?' என்ற நினைவு தோன்றி அவளை வருத்திற்று.

அவள் அந்தக் காகிதங்களை மடித்து, ஸ்ரீமதி ஃபிரான்ஸிஸ்னிடம் திருப்பிக் கொடுத்தாள். ''இந்தக் கடிதத்தை எனக்குக் காட்டியதற்கு நன்றி எலிஸா. ஏதோ ஒரு விநோதமான வகையில் எனக்கு இது உதவித்தான் இருக்கிறது, அவருடைய பிரச்னையின் மையப் பொருள் நானல்ல என்பதை இப்போது இன்னும் நிச்சயமாகத் தெரிந்துகொண்டு விட்டேன்'' என்றாள் அவள்.

''மேரி! உன் விஷயமாக நான் அவனோடு பேசட்டுமா?'' என்று எலிஸா அநுதாபத்தோடு கேட்டாள்.

''வேண்டாம்; வந்தனம். ஆப்ரஹாம் சொல்லுகிறபடி ஒவ்வொருவரும் தங்கள் தவற்றின் பலனைத் தங்களே தான் அநுபவிக்கவேண்டும்.'' என்று கூறினாள் மேரி.

* * *

அந்த வருஷம் ஜூன் மாதத்தில் இடியும் மழையும் மிக மோசமாக இருந்தன. பீதி கொண்ட மேரி, அறைக்கு ஓடி, படுக்கையில் படுத்துக்கொண்டு நன்றாக மூடிக்கொண்டாள். எலிஸபெத் அறைக்கு வந்து, அவளுடைய படுக்கையில் உட்கார்ந்து, மேரியின் தலையை எடுத்துத் தனது மடியில் வைத்துக் கொண்டாள்.

''பைத்தியமே! இடி உன்னை என்ன செய்துவிடும்? அது வெறுமே ஆவேசமாகச் சப்தத்தைக் கிளப்புமேயன்றி

வேறு ஒன்றுமேயில்லை'' என்று அவள் தன் தங்கைக்கு ஆறுதல் கூறினாள்.

ஜன்னலுக்கு வெளியே மழை தாரை தாரையாகக் கொட்டிற்று. எலிஸபெத்தின் கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுதாள் மேரி. தன் தங்கை அழுவது இடியை நினைத்தல்ல; அதை விடப் பெரிய விஷயந்தான் அவள் அழுகைக்குக் காரணம் என்பது எலிஸபெத்துக்குத் தெரியுமாதலால், அவள் அன்புடன் மேரியின் தலையை வருடினாள்.

பிறகு கோடைக்காலம் வந்தது. வெப்பம் மிகவும் கடுமையாக இருந்தது. மூச்சு விடக்கூடக் காற்று இல்லாதது போல் காற்றுமேட்டம் ஸ்தம்பித்துவிட்டிருந்தது. வீட்டுக்குள், நகரத்துக்குள், புல்வெளிகளில், எங்கு போனாலும் இறுக்கமாகவே இருந்தது. ''கோடை மாதங்களை பீஞ விஸ்டாவில் கழிக்கலாம், வா'' என்று லெக்ஸிங்டனிலிருந்து அவளுடைய அப்பா எழுதியிருந்தார். மிஸ்ஸௌரியிலிருந்து மேரியின் பெரியப்பா வேறு கடிதம் எழுதியிருந்தார். 'புதிய மணப்பிராயத்து இளைஞர்கள் நிறைய வந்திருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கவேண்டாமா? வா'' என்று அழைத்திருந்தார் அவர். ஆனால் அந்த இரு அழைப்புக்களையும் மேரி நிராகரித்துவிட்டாள்.

ஆகஸ்டு மாத இறுதியில் ஒரு நாள் ஸ்டீஃபன் லோகன் அவர்கள் வீட்டுக்குச் சாப்பிட வந்தான். அப்பொழுது அவர்கள், சட்ட விரோதமாய் அடிமையாக விற்கப்பட்ட ஓர் இளம் நீக்ரோப் பெண்ணின் சார்பில் ஆப்ரஹாம் லிங்கன் மாகாண ஸுப்ரீம் கோர்ட்டில் வாதாடி வழக்கை ஜெயித்துக் கொடுத்ததுபற்றிப் பேசினார்கள். லிங்கனின் சாமர்த்தியமான வாதத்தால் அப்பெண்ணுக்கு நிரந்தரமாகச் சுதந்திரம் கிடைத்துவிட்டது. அடிமை முறைக்கு இவ்வழக்கின் மூலம் சரியான அடி கொடுத்துவிட்டதற்காக ஸ்பிரிங்ஃபீல்டில் எல்லோரும் லிங்கனைப் பாராட்டினர். ஆப்ரஹாம் இப்பொழுது, லூயிவில்லுக்குச் சில மைல் தூரத்திலிருந்த ஜோஷுவா ஸ்பீடின் எஸ்டேட்டில், அவனையும், அவன் குடும்பத்தினரையும் பார்த்துவரப் போயிருக்கிறான் என்றும் லோகன் அறிவித்தான்.

அன்றிரவு மேரி நன்றாகத் தூங்கினாள். அதை இயற்கையான தூக்கம் என்று சொல்ல முடியாவிட்டாலும் இரவு அவளுக்கு அமைதியுடன் கழிந்தது, மறுநாள் காலையில் அவளுக்கு ஜுரம் வந்துவிட்டது. படுக்கையிலிருந்து எழுந்திருக்கவே முடியவில்லை. எலிஸபெத், பெரியப்பா டாக்டர் ஜான் டாடுக்கு ஆள் அனுப்பி வரவழைத்தாள்.

அவர் மேரியை கனத்த கம்பிளிகளால் மூடி, தமது வீட்டுக்குச் சிறிது வடக்கே இருந்த தம்முடைய ஆஸ்பத்திரிக்கு வண்டியிலேற்றிச் சென்றார். ஆஸ்பத்திரிப் பரிசோதனை அறையிலிருந்த பெரிய நாற்காலியில் அவர் அவளைப் படுக்க வைத்தார். அவளுடைய கவுனின் கைப் பாகத்தைத் தோள் வரை மடித்து விட்டார். முழங்கைக்கும் தோளுக்கும் இடையே, கையில் ஒரு கயிற்றை இறுக்கிக் கட்டினார். பிறகு நீண்ட ஆபரேஷன் கத்தி ஒன்றினால் ஒரு ரத்த நாளத்தைக் கீறி, கால் காலன் ரத்தம் வரை வெளியே எடுத்துவிட்டார்.

பின்னர் அவர் வாந்தி எடுக்கச்செய்யும் மருந்து ஒன்றையும், அதைத் தொடர்ந்து சில பேதி மருந்துகளையும் சிறிது ஆமணக்கு எண்ணெயையும் அவளுக்குக் கொடுத்தார். நெஞ்சில், மருந்து தடவிய பெரிய 'பிளாஸ்திரி' ஒன்றையும், காலில் அதே 'பிளாஸ்திரி'யில் சிறிதாக ஒன்றையும் ஒட்டினார். இந்தச் சிகிச்சைகளுக்குப் பிறகு மேரி படுக்கவைக்கப்பட்டு, கனத்த போர்வைகளால் மூடப்பட்டாள். அந்த பிளாஸ்திரிகள் எட்டு மணி நேரத்துக்கு, அவளுக்குப் பொறுக்க முடியாத வலியை அளித்தன. பிறகு அவை எடுக்கப்பட்டு, அந்த இடங்களில் ஏற்பட்டிருந்த புண்ணுக்கு சீனிக் காரத் தூள் தூவப்பட்டது.

ஃபிரான்ஸெஸ்ஸும், டாக்டர் வாலெஸ்ஸும், மறு நாள் காலையில் மேரியைப் பார்க்க வந்தனர். டாக்டர் டாடு வெளியே எங்கோ வைத்தியம் பார்க்கப் போயிருந்தார். வில்லியம் வாலெஸ் மேரிக்கு ஏற்பட்டிருந்த புண்களைப் பார்த்தான். அவளிடமிருந்து எடுக்கப்பட்ட ரத்தம், அவளுக்கு வாந்தியும், பேதியும் எடுக்கக் கொடுக்கப்பட்ட மருந்துகள், ஆகியவற்றைப்பற்றிக் கேட்டான். பிறகு தன் மைத்துனியின் படுக்கையின்மீது குனிந்து "மேரி! இதெல்லாம் அநுபவமுள்ள டாக்டர் ஒருவர் செய்யும் சிகிச்சையா? உனக்குச் செய்யப்பட்ட சிகிச்சை அனைத்தும் அநாவசியம் அம்மா. உனக்கு உடற் கோளாறு ஒன்றுமே இல்லை; எல்லாம் மனக் கோளாறுதான்" என்றான்.

12

மேரியின் பெரியப்பா பிள்ளை லோகன், ஸெப்டம்பர் மாத மத்தியில் ஆப்ரஹாம் திரும்பி வருவான் என்று கூறியிருந்தான். இப்பொழுது அவள் ஆப்ரஹாம் திரும்பி வரும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கலானாள். இடையே உள்ள நாட்கள் தங்கள் இருவருக்கும் இடையே உள்ள அகழி போலவும், அந்த அகழிக்குக் குறுக்கே தான் ஒரு

பாலம் அமைக்க வேண்டியிருப்பதுபோலவும் அவளுக்குத் தோன்றின. இப்படி அவள் ஆப்ரஹாமை எதிர்பார்த்திருக்க, ஜோஷுவா ஸ்பீடு ஒரு நாள் வந்து வீட்டுக் கதவைத் தட்டினான். அவள் அவனை சங்கீத அறைக்கு அழைத்துச் சென்றாள். மாலை நேரத்தில் அந்த அறைதான் குளிர்ச்சியாக இருக்கும். ஸ்பீடுக்குப் பருகப் பானங்கள் கொண்டுவந்து கொடுத்தாள். கொடுத்துவிட்டு, ''ஜோஷ்! காதல் கொள்ளுவதும், காதலை நிராகரிப்பதுமான தொழிலில் தீவிரமாக ஈடுபட்டிருந்தாய் போலிருக்கிறது!'' என்று கேட்டாள்.

சிறிது ஆலோசனை கலந்த புன்சிரிப்பு ஒன்று ஸ்பீடிடம் மலர்ந்தது. அவன் சொன்னான்: ''பானி ஹென்னிங் மீது நான் காதல் கொண்டிருப்பதாக லிங்கன் சொல்லுகிறான். அவளுடன் தன்னைக் காண வரும் சந்தர்ப்பம் ஒன்று கிட்டுமென்றுதான், அவனை நான் லெக்ஸிங்டனுக்கு அழைத்ததாகவும் லிங்கன் கூறுகிறான். அவன் எனக்குக் கலியாணத்தில் ஊக்கமூட்டிக்கொண்டே இருக்கிறான். ஆனால் ஒவ்வொரு தடவையும் நான் அவனை ஏமாற்றிக்கொண்டே வருகிறேன்.''

குளிர் காலம் சீக்கிரமே ஆரம்பமாகிவிட்டது. ஸ்பிரிங் ஃபீல்டு இதுவரை கண்டிராத குளிர் காலமாக இருந்தது அது. எப்பொழுதும் இருட்டு; எப்பொழுதும் மழை; எங்கு பார்த்தாலும் ஒரே சேறு மயம். அவற்றின்மீது பலகைகளையும், பழைய பீப்பாய்களையும், சட்டங்களையும் வீசி நடந்து செல்ல வழி செய்துகொள்ள வேண்டி இருந்தது. பெரும்பாலான இரவுகளில், கடுமையான பனியும் மழையும் காரணமாக, ஒருவரும் வீட்டை விட்டு வெளிச் செல்ல முடியாதபடி ஆகிவிடும். இதனால் கூட்டங்களையும், பார்ட்டிகளையும் ரத்து செய்ய நேரிட்டு விடும்.

மேரிக்கு அடிக்கடி ஜலதோஷம் பிடித்துக்கொண்டது. அவளுடைய கண்கள் வீங்கிச் சிவப்பேறிவிட்டன. ரொம்ப மோசமாக இருந்த நாட்களை அவள் படுக்கையில் படுத்தவாறே தள்ளினாள். குழந்தைப் பிராயத்தில்தான் அவள் இம்மாதிரி மோசமான நிலையில் படுக்கையில் கிடந்ததுண்டு. ஆனால் மெண்டலின் பள்ளியில் படித்துவந்த நான்கு வருஷங்களில் ஒரு தடவைகூட இத்தகைய நிலை ஏற்பட்டதில்லை. டாக்டர் வார்டின் கீழ் படித்து வந்த அந்தப் பரபரப்பான இரண்டு வருஷகாலத்தில்கூட எப்பொழுதோ ஒரிரு தடவைகள் தான் இத்தகைய நிலை ஏற்பட்டது. தான் எங்கோ விளிம்பில் நின்று கொண்டிருப்பது போன்ற தோற்றம் இப்பொழுது அவளிடம் நிரந்தரமாகி விட்டது. நாத்துடுக்கையும், கசப்புடன் நடந்துகொள்ளுவதையும் தவிர்க்க

அவள் இப்பொழுது அரும் பாடுபட வேண்டியிருந்தது. எலிஸபெத் அன்புடன்தான் இருந்தாள்; ஆனால் அவளும் பொறுமை இழக்கத் தொடங்கிவிட்டாள். ஜேம்ஸ் ஷீல்ட்ஸும், லீமன் டிரம்புல்லும் இப்பொழுது மேரியிடம் அதிகமான அன்பும் ஆதரவும் காட்டி நெருங்கிப் பழகி வந்தனர். அவர்களுள் ஒருவனே அவள் ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது?

புத்தாண்டு தினம் வர இருப்பது அவளுக்குத் திடீரென நினைவுக்கு வந்தது. உடனே அவள் உள்ளத்தில் ஒரு காட்சி விரிந்தது. ஆப்ரஹாம் அவளுக்கு வாழ்த்துக்கூற வருவான். காலை ஒன்பது மணியிலிருந்து வரத்தொடங்கிவிடும் கூட்டத்தில் ஒருவனாக அல்ல; இரண்டு வருஷங்களுக்கு முன் நடந்தது போல், எல்லோரும் வந்து போய், வீடு அமைதி அடைந்த பிறகு வந்து கதவைத் தட்டுவான். அவள் கதவைத் திறந்து, "மிஸ்டர் லிங்கன்! கடைசி இடமாக இங்கே வந்தீர்கள் போலிருக்கிறது" என்பாள். அதற்கு அவன், "இதுதான் இன்று என் முதல் விஜயம்; கடைசி விஜயமல்ல" என்பான். இந்த நினைவினால் அவள் மிகவும் பரபரப்படைந்தாள். புத்தாண்டு தினத்தன்று அணிந்து கொள்ளவேண்டிய புது உடைக்கு இப்பொழுதே திட்டமிட்டாள். அடிக்கடி தையல் அறைக்குள் சென்று கொண்டே இருந்தாள்.

ஆனால் புத்தாண்டு தினத்தன்று எட்வர்ட்ஸ் தம்பதியின் நண்பர்களில் எவ்வளவோ பேர் வாழ்த்துக் கூற வந்து சென்றனர். லிங்கன் மாத்திரம் வரவே இல்லை.

சந்தோஷத்தை எதிர்பார்த்து அவள் காத்திருந்ததற்கெல்லாம் தக்க வெகுமதி கிடைத்து விட்டது. இப்பொழுது அவளுடைய ஊக்கம் முழுவதும் குன்றிவிட்டது. பழைய தலைவலி புதிய உருவில் வர ஆரம்பித்தது. அந்தச் சித்திரவதையைத் தாங்கிக்கொள்ளும் வலுவை அவளுடைய கர்வந்தான் அளித்து வந்தது. அதுதான் அவளை ஒரு நாள், ஸாங்கமன் பாதுகாப்புப் படையினருக்காக ஜேம்ஸ் ஷில்ட்ஸ் செய்த பிரசங்கத்தைக் கேட்டு வரலாமென்று புறப்பட்டுப் போகச் செய்தது. மற்றொரு நாள் புதிய ரெயில் பாதையில் ஜாக்ஸன்வில் வரைப் போய் வரவும் அவளைத் தூண்டிற்று.

பிறகு 1842 ஏப்ரல் மாத ஆரம்பத்தில், ஜோஷுவா ஃபீடிடமிருந்து மேரிக்கு ஒரு கடிதம் வந்தது. தான் கலியாணம் செய்துகொள்ளத் தகுதியுடையவனு என்பதைப் பற்றி பல விசனகரமான சந்தேகங்களை வெளியிட்டு விட்டு, இறுதியாகத் தான் பானி ஹென்னிங்கை மணந்துகொண்டு விட்டதாகவும், இப்பொழுது. இதுவரை எதிர்பார்த்திராத சந்தோஷத்தை அடைந்திருப்பதாகவும் அவன் எழுதியிருந்

தான். இந்தச் செய்தி ஒரு புறம் இருந்தபோதிலும், அவனுடைய கடிதத்தின் முக்கிய அம்சம் அப்பொழுது தான் அவனுக்கு லிங்கனிடமிருந்து வந்திருந்த கடிதத்தின் ஒரு பகுதியை அதில் பெயர்த்து எழுதியிருந்ததே யாகும்.

'' உண்மையாகச் சொல்லுகிறேன்; விபரீதத்தை விளைவித்துவிட்ட ஜனவரி முதல் தேதிக்குப் பிறகு நான் அநுபவித்த களிப்பையெல்லாம்விட அதிகமான மகிழ்ச்சியை உன் கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்த சிறிது நேரம் பெற்றேன். அதுமுதல், என்னுல் ஒருத்தி இன்னும் துயரத்துக்குள்ளாகி யிருக்கிருளே, என்பது தோன்றி, என் நெஞ்சை வதைத்துக்கொண்டே இருக்கிறது.''

'' இதற்காக என்னை நொந்துகொள்ளாமல் இருக்க முடியவில்லை. ஏனென்ருல், அவள் துயரத்தில் ஆழ்ந்திருக்கையில் நான் சந்தோஷமாக இருக்க விரும்புகிறேன் அல்லவா? சென்ற திங்கட்கிழமை, அவள் ஒரு பெரிய கோஷ்டியுடன் ஜாக்ஸன்வில்லுக்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அப்பொழுது அவள் எனக்குக் கேட்கும்படியாக அந்தப் பிரயாணத்தைத் தான் மிகவும் ரசித்ததாகக் கூறினுள். இதற்காகக் கடவுளை நான் போற்றுகிறேன்.''

ஆப்ரஹாமின் இந்த வரிகளைப் படித்துவிட்டு, மேரி கண்ணீர் சோர்ந்த கண்களுடன் அக்கடிதத்தைப் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தாள். '' என்னுல் ஒருத்தி துயரத்துக்குள்ளாகி யிருக்கிருளே என்பது தோன்றி என் நெஞ்சை வதைத்துக்கொண்டே இருக்கிறது'' என்ற அந்த வரியை அவள் மீண்டும் ஒரு முறை படித்தாள். மேரி ஓவென்னைப் பற்றி அவன் எழுதியிருந்த கடிதத்தை அவள் இப்பொழுது நினைத்துப் பார்த்தாள். அது அநுபவமற்ற ஒரு சிறுவனின் கடிதம்; இது முழுவதும் துயருற்ற ஒரு மனிதனின் கடிதம்; துயரினுல் அறிவு வளர்ச்சி பெற்ற ஒருவனின் கடிதம். ஆப்ரஹாமின் குணபாவம் இப்பொழுது கூரடைந்து, வலுப்பெற்றிருக்கிறது. இந்த நிலை ஏற்பட அவள் அவனுக்கு உதவி விட்டாள்.

அவளைப் பொறுத்தவரை, அவள் நெஞ்சு கட்டுக்கு அடங்காமல் துடித்தது. இம்மாதிரிப் பேசுகிற எந்த மனிதனும், தனது பிரிவுத் துயரை நீண்ட நாள் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. ' கடவுளே! இப்படிப்பட்ட நிலையில் அவன் தன்னை நாடி வரவேண்டும் என்று அவள் நினைத்தாள்? ஆயினும் எப்படிப்பட்ட நிலையில் வந்தாலும் இப்பொழுது அவனை ஏற்றுக்கொள்ள அவள் தயாராகி விட்டாள்.

வசந்தகாலம் வந்து குளிருக்கும் சேறுக்கும் முற்றுப் புள்ளி வைத்தது. சும்மா இருக்கும் நேரத்தில், மேரி மனச் சமாதானத்துக்காக, மே மாத இறுதியில் நடந்த ஜாக்கி கிளப் குதிரைப் பந்தயத்தின் முதல் 'ரேஸ்' களுக்குப் போனாள்; டாக்டர் வாலெஸ் தனது மருந்துக் கடையை, சதுக்கத் துக்கு அப்பால் ஒரு புது இடத்துக்கு மாற்றினான். அந்த இடமாற்ற வேலையில் அவள் அவனுக்கு உதவினாள். பத்திரி கைகளில் வெளியான செய்திகளிலிருந்து, லிங்கன் சட்ட சபைத் தேர்தலில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று அவள் அறிந்தாள்.

அவனுகவே விலகிக்கொண்டானா, அல்லது இரண்டு வருஷங்களுக்கு முன் நினியனைச் செய்ததுபோல், அக் கட்சி மகாநாடு லிங்கனை அந்தத் தேர்தலுக்குத் தங்கள் கட்சி அபேட்சனுக நிறுத்தாமல் ஒதுக்கிவிட்டதா, என்பதை அவளால் அறிந்துகொள்ள முடிய வில்லை.

மீண்டும் கோடைகாலம் வந்தது. வெப்பமும் சலிப்பும் கூடவே வந்தன.

ஆகஸ்டு மாதத்தில் ஒரு நாள், இரவுச் சாப்பாட்டுக்கு வருமாறு எலிஸா ஃபிரான்ஸிஸ் மேரிக்குச் சீட்டு அனுப்பி யிருந்தாள். மேரி போனபோது, எலிஸா அவளை வரவேற்பு அறைக்கு அழைத்துச் சென்றாள். அறை இருண்டிருந்தது. பகலில் அடித்த வெயிலுக்காக திரைச் சீலைகள் எல்லாம் இழுத்து விடப்பட்டிருந்தன. அறையின் நடுவில் ஆப்ர ஹாம் லிங்கன் நின்று கொண்டிருந்தான்.

13

மேரி லிங்கனைப் பார்த்து ஏறக்குறைய இரண்டு வரு ஷங்கள் ஆகிவிட்டன. இப்பொழுது அவனுடைய கண் களில் தெளிவு காணப்பட்டது. வாயும், தாடையும் முன்னைவிட வலுவுடன் விளங்கின. அவன் மெலிந்துதான் இருந்தான்; ஆயினும் ஆரோக்கியத்துடனும், முழுமை யுடனும் காணப்பட்டான்.

அவர்கள் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. ஆயினும் அவர்களிடையே அப்பொழுது மௌனம் நிலவவில்லை. முழு உருவற்ற எண்ணங்கள் அவள் மனதில் துள்ளிக் குதித்தன. அவனுடைய பிரகாசமான கண்களுக்குப் பின்னாலும் அதே மாதிரி எண்ணங்கள் சுழன்றுகொண்டிருந்ததை அவள் உணர முடிந்தது. நெடு நேரம் அவர்கள் அசையாமல் நின்றனர். பின்னர் ஆப்ரஹாம் அவளை இறுகத் தழுவி உதட்டில் முத்த மிட்டான்.

''உன்னைத் துன்பத்துக் குள்ளாக்கிவிட்டதற்கு விசனிக் கிறேன், மோலி'' என்றான் அவன்.

அவள் ''அப்படி ஒன்றும் இல்லை'' என்று தலை யசைக்கத் தொடங்கியபோது, ஆப்ரஹாம் அவளுடைய தோள்களை இறுக்கிப் பிடித்துக்கொண்டான். பிறகு சொன்னான்: ''இந்த உலகில் மற்றெல்லாவற்றையும் விட நான் விரும்புவது நாமிருவரும் சேர்ந்திருக்கவேண்டும் என்பதுதான். அந்த விருப்பத்தை நான் புத்தாண்டு தினத்தன்றே நிறைவேற்றிக் கொண்டு விடத்தான் எண்ணி னேன். ஆனால் அதற்குத் தேவையான மனோபலம் அப் பொழுது எனக்கு ஏற்படவில்லை. நீ எவ்விதத்திலாவது எனக்கு மன்னிப்பு அளிக்கவேண்டும்.''

''நான் உங்களை வற்புறுத்தினேன் ஆப்ரஹாம். நாம் ஒருவரை ஒருவர் மன்னித்துக்கொள்ள வேண்டியவர்களே. ஆம்; காதல் என்பதும் அதுதானே?''

ஃபிரான்ஸிஸ் தம்பதியுடன் அவர்கள் அன்றிரவு சாப் பிட்டார்கள். மறுமலர்ச்சி பெற்ற நட்பின் இன்பத்திலே திளைத்தார்கள். சாப்பாட்டுக்குப் பிறகு ஆப்ரஹாம் 'ஜர்னல்' பத்திரிகையில் வெளியிடுவதற்காக ஒரு கடிதம் எழுதத் தொடங்கினான். ''ரெபக்கா அத்தை'' என்ற பூனைப்பெயரில், ஜனநாயக அரசாங்கத்தின் கணக்குப் பரி சோதகரான ஜேம்ஸ் ஷீல்ட்ஸின் கொள்கைகளைத் தாக்கி அவன் அப்பத்திரிகையில் பல கடிதங்கள் எழுதி வந்தான். அவற்றில் ஒன்றுதான் அன்று எழுதியதும். இந்தக் கடிதங்களால் ஷீல்ட்ஸுக்கு ஏற்படப்போகும் சௌகரியங் களை அலசிச் சிரித்துக்கொண்டனர் அந்த நான்கு விக் கட்சியினரும். அவன் நீண்ட காகிதத் துண்டுகளில் வேக மாக எழுதித் தள்ளினான். மேரி படித்து ஆமோதிப்பதற்காகத் தான் எழுதி முடித்த ஒவ்வொரு பக்கத்தையும் அவளிடம் கொடுத்தபோது அவர்கள் கண்கள் சந்தித்துக்கொண்டு இமைக்கும் நேரம் நிலைத்து நின்றன. மேரி அவன் கொடுத்த பக்கம் ஒன்றைப் படித்தாள்:

''ஷீல்ட்ஸின் சரித்திரத்தில் உண்மை என்பதற்கு இடமே கிடையாது. அவனைப் பொறுத்தவரை உண்மை அர்த்தமற்றது. ஒரு நல்ல, நம்பத் தகுந்த பொய்யை அவனிடமிருந்து வரவழைப்பதுகூட, கல்லிலே நார் உரிப் பது போன்றது தான்.

''சென்ற வருஷம் குளிர்காலத்தில் ஸ்பிரிங்ஃபீல்டில் நடந்த ஒரு கண்காட்சிச் சந்தையில் அவனுடைய போக்கை நான் கண்டேன். அவனைச் சுற்றி ஒரே பெண்கள் கூட்டம். அவர்கள் வாங்கிய சாமான்களுக்கெல்லாம் அவன் தாராள

மாகப் பணத்தை அள்ளி வீசிக்கொண்டிருந்தான் ; ஏனென்றால் அது அவன் சொந்தப் பணம் அல்ல ; அரசாங்கத்தின் பணம்.''

அந்தக் கடிதத்தைப் பிரசுரிக்க லிமியன் சம்மதித்த பிறகு, மேரி வீட்டுக்குப் புறப்பட்டாள். லிங்கன் அவளைத் தொடர்ந்து முன் அறைக்குச் சென்றான். தலை அணியையும், சால்வையையும் அணிந்துகொள்ள அவளுக்கு உதவினான்.

'' நாளைக்கு உன்னைச் சந்திக்கிறேன் மோலி ; உன் வீட்டுக்கு வரலாம் அல்லவா ?'' என்று அவன் கேட்டான்.

மேரி தயங்கினாள் : '' வேண்டாம் ஆப்ரஹாம். இப்போதைக்கு நாம் இங்கேயே சந்தித்துக்கொள்ளுவதுதான் நல்லது. ஏனென்றால் நம்மைப்பற்றி பலப் பல பேசப் படுகின்றன '' என்றாள் அவள்.

'' அப்படியே செய்வோம் மோலி. நான்கு மணி சுமாருக்கு இங்கேயே சந்திப்போம்.''

லிமியனும், எலிஸாவும், தங்கள் வண்டியிலேயே மேரியை வீட்டில் கொண்டுவிட்டனர். அவள் அமைதியாக மாடிக்கு ஓடி, படுக்கையில் படுத்து, படுத்ததுமே நித்திரையில் ஆழ்ந்துவிட்டாள்.

மறு நாள் காலையில் எழுந்ததும், மேரி அவசரமாக அலங்கரித்துக்கொண்டு வீட்டிலிருந்து கிளம்பினாள். மெர்ஸி காங்க்ளிங் என்ற அவளுடைய தோழி மணமகளாகப் போகும் பெருமையில் மூழ்கியிருந்தாள். ஆகையால் அவளிடம் செல்லாமல் தனது மற்றொரு சிநேகிதியான ஜூலியா ஜோனைச் சந்தித்து அவளிடம் முன்னாள் நடந்த சம்பவங்களை ரகசியமாகக் கூறினாள். '' ஜூலியா ! நீதான் எனக்கு உதவி செய்யவேண்டும். லிங்கனை நான் சந்திக்கும் விஷயம் எலிஸபெத்துக்கும், நினியனுக்கும் இப்பொழுது தெரியக்கூடாது. ஆப்ரஹாம் என்னை மீண்டும் ஏமாற்றமாட்டார் என்பது நிச்சயமாகும்வரை அது அவர்களுக்குத் தெரியவே கூடாது.....''

ஜூலியா இந்தச் செய்தியை அறிந்து மகிழ்ச்சியடைந்தாள். அவர்கள் சந்திப்புக்குத் தான் உதவுவதாக வாக்களித்தாள்.

'' அப்படியானால் பிற்பகலில் என் வீட்டுக்கு வா. நாம் சதுக்கத்துக்குச் சென்று சில சாமான்களை வாங்குவோம். அதன் பிறகு நீ என்னுடன் ஃபிரான்ஸிஸ் தம்பதியின் வீட்டுக்கு வா. எங்கள் சந்திப்பைப்பற்றி ஊர்க்காரர்கள் கண்டபடி பேச இடமளிக்கக்கூடாது. ஆப்ரஹாமும் நானும் எங்கள் இணைப்பு விஷயமாக ஒரு முடிவுக்கு வரும் வரை,

நான் அவரைச் சந்திக்கும்போது என்னுடன் துணையாக யாராவது இருக்க விரும்புகிறேன்'' என்றாள் மேரி.

* * *

ஒவ்வொரு நாளும் பிற்பகல் மூன்று மணிக்கு ஜூலியா மேரியைக் கூப்பிட வந்தாள். அவர்கள் சதுக்கம் வரை சென்று நடந்து, பிறகு வெவ்வேறு பாதையில் ஃபிரான்ஸிஸ் தம்பதியின் வீட்டை அடைந்தனர். ஆப்ரஹாமின் கடிதம் 'ஜர்னல்'' பத்திரிகையில் வெளியாகி ஒரு வாரம் ஆன பிறகு, ஜேம்ஸ் ஷீல்ட்ஸ் பொது விவாத மேடை யொன்றில் பேசினான். அவன் பைத்தியம் பிடித்தவன்போல், இரண்டு மணி நேரம் கத்தி, ஆப்ரஹாமின் கடிதத்தின் குற்றச் சாட்டுகளைப் பிய்த்து எறிந்தான்.

இதைக் கேட்ட மேரி, ஜூலியாவிடம் சொன்னாள்: ''நான் ஜிம்மி ஷீல்ட்ஸுக்குப் பதில் எழுத விரும்புகிறேன். என் கடிதத்தில் ரெபாக்கா அத்தையை என்ன கூறச் செய்யப் போகிறேன் தெரியுமா? இம்மாதிரி அக்கடிதத்தை எழுதிய வனிடம் ''நேரிலே பேசிக்கொள்ளுவதாக ஷீல்ட்ஸ் பய முறுத்துவதைக் கண்டு, நான் அப்படியே இருந்த இடத் திலே தலைசுற்றி விழுந்து விடுவேனே என்ற அளவுக்கு நடுங்கிப் போய்விட்டேன். நேரிலே பேசிக்கொள்ளுவதாக இருந்தால் இங்கே வந்து என் கையைப் பற்றிக்கொண்டு பேசு. ஆனால் என்னோடு சண்டை போடுவது உன் விருப்ப மானால், எனக்கு விளக்குமாறு, கொதிக்கும் தண்ணீர், அல்லது வாளி நிறையத் தார் இவைகளில் ஒன்று இல்லாமல் சண்டை செய்யத் தெரியாது. இருந்தாலும் நமது சண்டை யின்போது நான் நிஜாரும், நீ ரவிக்கையும் போட்டுக் கொண்டு சண்டை செய்யலாமா, அல்லது வேறு எப்படிச் செய்யலாம் என்பதை நீயே தேர்ந்தெடுக்க விட்டு விடுகி றேன்'' இப்படித்தான் பதில் எழுதச் செய்வேன்.

மேரியும், ஜூலியாவும் வந்தபோது ஆப்ரஹாம் அவர் களுக்காக காத்துக்கொண்டிருந்தான். மேரி, ஷீல்ட் ஸுக்கு எழுத விரும்பிய கடிதத்தைப்பற்றிக் கேட்டதும் அவனுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. உடனே அவளே அதை எழுதச் செய்தான். ஸிமியன் அக்கடிதத்தை மறு நாள் வர இருந்த 'ஜர்னல்' இதழில் வெளியிடுவதற்காக எடுத்துச் சென்றான்.

ஷீல்ட்ஸுக்கு இந்தக் கடிதத்தைப் படித்ததும் படு கோபம் வந்துவிட்டது. அவன் உடனே தனக்காக சண்டை செய்ய ஒரு கூலிக்கார மல்லனை ஸிமியன் ஃபிரான்ஸிஸிடம் அனுப்பிவைத்தான். லிங்கனை கைச் சண்டைக்கு அழைப்ப தாக சவால் விட்டு வரச் செய்தான். ஆனால் லிங்கன் அப் பொழுது டிரெமெண்டுக்கு ஓர் அலுவலாகப் போயிருந்தான்.

ஷீல்ட்ஸும் அவனுடைய கூலிக்கார மல்லனும் டிரெமெண்டுக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறார்கள் என்ற விவரம் மேரிக்குத் தெரிந்ததும், அவள் வில்லியம் பட்லர் என்பவனையும், பலசாலியான டாக்டர் மெர்ரிமன் என்பவனையும் கெஞ்சி, ஷீல்ட்ஸை முந்திச் சென்று ஆப்ரஹாமை எச்சரிக்க அனுப்பினாள்.

அடுத்த இரண்டாவது நாள் ஆப்ரஹாம் க்ஷேமமாக ஸ்பிரிங்ஃபீல்டுக்குத் திரும்பி வரும் வரை அவளுக்கு இருப்பே கொள்ளவில்லை.

"ஆப்ரஹாம்! இந்தத் துன்பத்தில் உங்களை நான் தான் மாட்டி விட்டேன்" என்று அவள் வருத்தத்தோடு கூறினாள்.

"இல்லை; நீ இல்லை மோலி. நான் அக்கடிதத்தை அமோதிக்கவில்லையா? ஆகையால் இதற்கு நான்தான் பொறுப்பாளி. "ஜர்னல்" பத்திரிகையில் அவனைத் தாக்கி எழுதிய கடிதங்கள் எல்லாவற்றுக்கும் சேர்த்து, ஒரளவுக்கு மன்னிப்புக் கோருவதாக நான் ஷீல்ட்ஸிடம் சொல்லப் போகிறேன். அதை அவன் ஏற்றுக்கொள்ளாவிட்டால், எங்கள் சண்டைக்கு கத்தியையே ஆயுதமாகக் கொள்ளலாம் என்று கூறிவிடப்போகிறேன்" என்றுன் லிங்கன்.

"உங்களுக்குப் புண்ணியமுண்டு ஆப்ரஹாம். ஜிம்மி ஷீல்ட்ஸ் உங்கள் மார்பளவு உயரம் கூட இல்லை. ஆகவே அவன் உபயோகிக்கும் கத்திகள் மூன்று அல்லது நான்கு அடி நீளமாவது இருக்கவேண்டும். அத்தனை நீளக் கத்திகளைக்கொண்டு அவன் எப்படி உங்களுடன் சண்டை செய்ய முடியும்?"

"அவனுல் முடியாதுதான்; எல்லோருமே இது பைத்தியகாரச் செயல் என்றுதான் சொல்லுவார்கள். இறுதியில் சண்டையே நடக்காது" என்று கூறிச் சிரித்தான் லிங்கன்.

போன இடத்திலெல்லாம், லிங்கனுக்கும், ஷீல்ட்ஸுக்கும் நடக்க இருக்கும் சண்டையைப்பற்றிய பேச்சாகவே இருப்பதை மேரி கண்டாள். இறுதியாக ஆப்ரஹாம் திரும்பி வந்தபோது, அவன் முகத்திலிருந்தே சண்டை எதுவும் நடக்கவில்லை என்பதை அவள் கண்டுகொண்டாள். அவர்கள் 'ராஜி' யாகப் போய்விட்டார்கள். ஆப்ரஹாம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். ஷீல்ட்ஸ் அதை ஏற்றுக்கொண்டான்.

ஆப்ரஹாம் சொன்னுன்: "மோலி! நான் பயங்கரமான பாடம் கற்றுக்கொண்டேன். வருஷக்கணக்காக ஜனங்களைக் கிண்டலும், கேலியும் செய்து பத்திரிகைகளில்

இம்மாதிரி அநாமதேயக் கடிதங்கள் எழுதி வந்திருக்கிறேன். ஆனால் அது சரியல்ல என்பதை இப்போதுதான் புரிந்து கொண்டேன். இந்தச் சம்பவம் என்னை மிகுந்த மனவருத்தத்துக்கு உள்ளாக்கிவிட்டது. இனி உயிருள்ள வரை இம்மாதிரி வேலையில் இறங்கவே மாட்டேன்.''

ஷீல்ட்ஸோடு ஏற்பட்ட தகராறுக்குப் பிறகு லிங்கன் தன் வாழ்வில் ஒரு கட்டத்தைத் தாண்டி விட்டவன்போல் தென்படுவதை அவள் கண்டாள். இப்பொழுது எல்லா விஷயங்களிலுமே அவனிடம் ஒரு பற்றுதல் காணப்பட்டது. அக்டோபர் மாதத் துவக்கத்தில் ஒரு நாள் அவன் அவளிடம் சொன்னான்: ''இன்னும் இரண்டொரு நாட்களில் நான் சஞ்சாரக் கோர்ட்டுகளில் வழக்குகளை நடத்த புறப்பட வேண்டியிருக்கிறது. இம்மாதம் முழுவதும் நான் வெளியூர்களில்தான் இருப்பேன். இந்தப் பிரிவு எனக்குப் பிடிக்கவில்லைதான். நவம்பர் மாதத் துவக்கத்தில் திரும்பி வந்ததும், என்னை மணந்துகொள்ளும்படி உன்னைக் கேட்கப் போகிறேன்.''

மேரி எவ்வித உணர்ச்சியும் காட்டவில்லை. ''அதற்கென்ன? இந்த விஷயத்தை நீங்கள் திரும்பி வந்த பிறகு பேசிக்கொள்ளுவோமே'' என்றாள்.

''நல்லது மோலி. ஆனால் ஒன்று நினைவிலிருக்கட்டும். நீ என்னை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், எனக்குத்தான் நீ என்பதை நான் இப்பொழுதே கூறிவிட்டேன்.''

இதற்கும் அவள் சரியான பதில் சொல்லவில்லை. இந்த விஷயத்தை மேரி, ஜூலியாவைத் தவிர வேறு எவரிடமும் கூறவில்லை. ஜூலியா, மேரியின் திருமண உடையைத் தைப்பதற்கு உதவி செய்வதாகக் கூறினாள். மேரி தலையசைத்துக்கொண்டே, ''ஜூலியா! நான் விதியில் மயங்கியிருக்கவில்லை. இத்தடவை எனக்கு உறுதியான பிடி கிடைத்திருக்கிறது. ஆனால் இத்தடவையும் நான் ஏமாற்ற மடைய நேரிட்டதோ, என்னால் அதைத் தாங்கவேமுடியாது'' என்றாள். அவள் உதடுகளில் உறுதி வெளிப்பட்டது.

நவம்பர் முதல் தேதி லிங்கன் திரும்பிவந்தான். க்ளிண்டன், அர்பானா, சார்ல்ஸ்டன் முதலிய இடங்களில் பல வழக்குகளை நடத்திவிட்டு அவன் திரும்பியிருந்தான். கோல்ஸ் ஜில்லாவில் இருந்தபோது அவன் தனது பெற்றோருக்காக நாற்பது ஏக்கர் நிலத்தை விலை பேசி, அதை யாருக்கும் விற்கக்கூடாது என்ற நிபந்தனையின்பேரில், பெற்றோரின் பெயரிலேயே சாஸனம் செய்து வாங்கியிருந்தான்.

மறு நாள் காலைப்பொழுதில் பெரும் பகுதியை அவன் தனது நீக்ரோ நண்பனின் 'பார்பர் ஷாப்பில்' செலவிட்டு,

அழகாக முடி வெட்டிக்கொண்டு, தலையைக் கழுவி, வாரி விட்டுக்கொண்டான். பிறகு கச்சிதமாக உடையணிந்து கொண்டு மேரியிடம் வந்தான். மேரி அவனுடைய அலங்காரத்தைப் பார்த்ததும், ''நீங்கள் மட்டும், இப்பொழுது சென்றிருந்த வெளியூர் யாத்திரையில் இவ்வளவு அழகாக விளங்கியிருந்தால், பல வெற்றிகளைச் சாதித்துக்கொண்டிருக்கவேண்டும்'' என்றாள்.

''நான் இயற்கையாகவே கலியாணச் சடங்குகளைத் தீவிரமாக அநுசரிக்க விரும்புகிறவன், மிஸ் டாடு! நீ என்னை நாளையோ, அதற்கடுத்த நாளோ மணம் செய்துகொள்ளுவாயா?'' என்று சம்பிரதாயமாகக் கேட்டான் அவன்.

''உங்கள் வார்த்தையை நம்பி நான் இணக்கம் தெரிவிக்கலாமா?'' என்று அவள் குரல் நடுங்க, ஆனால் கேலி தொனிக்கும்படியாக வினவினாள். ''முன்போல் இரண்டு வருஷங்கள் இருக்கிற இடம் தெரியாமல் மறைந்து விடமாட்டீர்களே?''

''நீ ஏதாவது ஓர் இடத்தைக் குறிப்பிடு. நான் புது ஸூட்டும், பளபளக்கும் பூட்ஸும் போட்டுக்கொண்டு மணக்கோலத்தில் அங்கே வந்து நிற்கிறேனா இல்லையா பாரேன்.''

மேரி லிங்கனின் புழுதி படிந்த பூட்ஸைப் பார்த்துவிட்டு விழுந்து விழுந்து சிரித்தாள். பிறகு சொன்னாள்: ''இப்பொழுது நான் உங்கள் உறுதிமொழியை நம்புகிறேன். எப்பொழுது நீங்கள் உங்கள் பூட்ஸுக்குப் பாலிஷ் போடும் அளவுக்குத் துணிந்துவிட்டீர்களோ, அப்பொழுது கலியாண விஷயத்தில் நீங்கள் உறுதியடைந்துவிட்டீர்கள் என்பது எனக்கு நிச்சயமாகிவிட்டது.''

லிங்கன் இளித்துக்கொண்டே, ''சரி; அப்படியானால் கலியாணத்தை நாளைக்கு டிரஸ்ஸர் பாதிரியாரின் முன்னிலையில் நடத்திவிடுவோமா?'' என்று கேட்டான்.

எலிஸபெத், நினியன் ஆகிய இருவரின் உருவங்களும் மேரியின் மனக்கண் முன்னே தோன்றின. அவள் சொன்னாள்: ''ஸ்பிரிங்ஃபீல்டில் திடீரென கலியாணங்கள் நடைபெறுவது வழக்கம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் சில பேர்களுக்கு நிலைமையை முதலில் விளக்கவேண்டியிருக்கிறது.''

''நல்லது மோலி. நீ எப்படி, எப்பொழுது நடத்தலாம் என்கிறாயோ, அப்படியே நடத்திவிடுவோம்.''

இதுபற்றி மறுநாள் காலையில் மேரி எலிஸபெத்திடம் கூறியபோது, அவள் காரியார்த்தமாக, ''மேரி! இன்று மாலையிலேயே கலியாணம் நடந்தாகவேண்டுமா? நமது டாடு குடும்பத்துக்கேற்ற வகையில் இக்கலியாணத்தை நான் நடத்த விரும்புகிறேன்; ஃபிரான்ஸிஸ் ஸின் கலியாணத்தை அப்படித்தான் நடத்தினோம்'' என்றாள்.

''லிஸ்! இருபத்திரெண்டு மாதங்களுக்குமுன் இக் கலியாணம் நடந்திருந்தால், உன் ஏற்பாடு நன்முக இருந்திருக்கும். இப்பொழுது அது காலந்தாழ்ந்ததில்லையா?'' என்று மேரி சிறிது விசனத்துடன் கூறினுள்.

''அப்படியானுல் இன்றிரவு எங்கள் எபிஸ்கோப்பல் தையல் கழகம் நம் வீட்டில் கூடுகிறது. வருகிறவர்களுக்குச் சாப்பாடு போடவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உங்கள் கலியாணம் எங்கள் கழகத்தின் முன்பே நடக்கட்டும்'' என்றுள் எலிஸபெத்.

''எபிஸ்கோப்பல் தையல் கழகத்தின் முன்பா? ஐயோ! வேண்டாம் லிஸ்!''

''சரி; அப்படியானுல் கலியாணத்தை நாளை வரை ஒத்திப்போட்டுவிடு. நான் முடிந்த வரை நல்ல விருந்து போட ஏற்பாடு செய்கிறேன். தின்பண்டங்களைத்தான் வீட்டில் தயாரிக்க முடியாது போலிருக்கிறது, 'ஒல்டு டிக்கி' யின் கடையிலிருந்து கொஞ்சம் இஞ்சி ரொட்டியும் பீரும் தான் வரவழைக்கவேண்டும்.''

மறு நாள் நடந்த மேரியின் கலியாணத்துக்கு ஜூலியா ஜேன்தான் மணப்பெண்ணின் தோழியாக விளங்கினுள். மேரியின் பெரியப்பா ஜானின் பெண்களாகிய லிஸ்லியும், ஆன் ராட்னியும் மணமகளின் பணிப் பெண்களாக இருந்தார்கள். டாக்டர் டாடு, ஸ்ரீமதி டாடு, மேரியின் சகோதரி ஃபிரான்ஸெஸ், டாக்டர் வாலெஸ், ஹெலன், பென் எட்வேர்ட்ஸ், டாக்டர் ஹென்ரி, லிங்கன், பல காலம் வசித்து வந்த வீட்டுக்காரர்களான பட்லர் தம்பதி எல்லோரும் வந்திருந்தனர். ஸ்ரீமதி பட்லர் மஞ்சள் நிற ஸாட்டின் கவுனை அணிந்துகொண்டு வந்திருந்தாள்.

மேரி, வெள்ளை 'ஸ்விஸ்' மஸ்லின் கவுன் ஒன்றை அணிந்துகொண்டிருந்தாள். அதை அவள் கோடைகால ஆரம்பத்திலேயே தைத்துவிட்டாள்; ஆனுல், இதுவரை உபயோகிக்கவில்லை. ஆகையால் அது புதிதாகவும் விறைப்பாகவும் இருந்தது. தவிர அது ஒன்றுதான் அவளிடமிருந்த வெள்ளை ஆடை. தன் தந்தை முன்பு நியூ ஆர்லியன்ஸிலிருந்து வாங்கித் தந்திருந்த முத்துமாலையையும் அணிந்து கொண்டிருந்தாள். அதை அணிந்துகொண்டபோது அவளுக்கு அப்பாவின் நினைவு வந்தது.

''பாவம் அப்பா! அவர் தனது இன்னொரு பெண்ணின் கலியாணத்தையும் பார்க்க முடியவில்லை. ம்.....ஆன் பாடு யோகந்தான்! அவளுக்கு இப்பொழுது எலிஸபெத்தின் வீட்டில் இடம் காலியாகிவிட்டது!''

ஆப்ரஹாம் தனது நண்பன் ஜேம்ஸ் மாத்தனியுடன் சீக்கிரமாகவே வந்துவிட்டான். மாத்தனிதான் மாப்

பிள்ளைத் தோழன். அவர்களோடு ராஜ்ய ஸுப்ரீம் கோர்ட்டின் நீதிபதி பிரெளனும் வந்தார். மாலை ஐந்து மணிக்கு, பாதிரியார் தமது பதவிக்குரிய உடைகளை அணிந்தவராய் வந்து சேர்ந்தார். கூடத்தில் உறவினர்களும் நண்பர்களும் வட்டமாக நின்றுகொண்டனர். பூஜ்ய டிரஸ்ஸர் திருமணச் சடங்குகளை ஆரம்பித்தார்.

''அன்புக் குழந்தைகளே! நாம் இங்கே, கடவுளின் கண் பார்வையில், இந்தக் கூட்டத்தின் முன்னிலையில் கூடியிருப்பது இந்த மனிதனையும், இந்தப் பெண்ணையும் புனித மணவினையில் ஈடுபடுத்துவதற்காகவே. திருமணம் என்பது ஒரு பவித்திரமான சடங்கு. ஆகையால் அதை யாரும் விவேகமற்றதாகவோ, எளிதாகவோ கருதிவிடக்கூடாது; பக்தியோடும், பகுத்தறிவோடும், நிதான புத்தியோடும், இறைவனிடம் பயத்தோடும் இதில் ஈடுபடவேண்டும்.....''

அன்று மழை சிறிது சீக்கிரமாகவே ஆரம்பித்துவிட்டது. அது கொட்டு கொட்டென்று கொட்டித் தீர்த்தது. ஜன்னல் கதவுகளில் மழைநீர் அலை அலையாக மோதி, அவைகளைக் கழுவி விட்டது. மழை எப்பொழுதும் ஆப்ரஹாமைச் சோர்வடையச் செய்யும் என்பது மேரிக்குத் தெரியும்.

பாதிரியார் லிங்கனை நோக்கி, ''ஆப்ரஹாம்! இந்த ஸ்திரீயை நீ மனைவியாக ஏற்றுக்கொண்டு, இறைவன் வகுத்துள்ள சட்டப்படி சேர்ந்து இருந்து, புனிதமாக மண வாழ்க்கை நடத்துவாயா?'' என்று கேட்டார்.

''நடத்துவேன்'' என்றான் ஆப்ரஹாம்.

''மேரி! நீ இந்த மனிதனைக் கணவனாக ஏற்றுக்கொண்டு இறைவன் வகுத்துள்ள சட்டப்படி சேர்ந்து இருந்து, புனிதமான மண வாழ்க்கை நடத்துவாயா?''

''நடத்துவேன்.''

பூஜ்ய டிரஸ்ஸர் மீண்டும் லிங்கனிடம் திரும்பி, நான் சொல்லுவதை திருப்பிச் சொல்: ''இந்த மோதிரத்தின் மூலம் நான் உன்னை மணக்கிறேன். இந்த உலகத்திலுள்ள என்னுடைய பொருள்கள் எல்லாவற்றையும் உனக்கு அளிக்கிறேன்'' என்றார்.

பாதிரியாரின் பேச்சைக் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்த நீதிபதி பிரெளன் ''அட கடவுளே! லிங்கன்! அதையெல்லாம் சட்டந்தான் உறுதி செய்துவிடுகிறதே!'' என்றார்.

ஒரு விநாடி அங்கிருந்தவர்களுக்கு இவர் என்ன பேசுகிறார் என்பது புரியாமல் குழப்பம் ஏற்பட்டது. பிறகு எல்லோரும் அதைப் புரிந்துகொண்டு சிரிக்க ஆரம்பித்தனர்.

பாதிரியாரும் பெரிதாகச் சிரித்தார். வெளியே கொட்டிய மழையின் இரைச்சலைக்கூட அமுக்கிவிட்டது அங்கு எழுந்த சிரிப்பொலி.

டிரஸ்ஸர் பாதிரியார் அந்தத் தங்க மோதிரத்தை லிங்கனிடம் கொடுத்தார். ஆப்ரஹாம் அதை மேரியின் இடது கை நடு விரலில் இட்டான்.

''இனி நீங்கள் கணவனும் மனைவியும் ஆகிவிட்டீர்கள்'' என்று அறிவிப்புச் செய்தார் பாதிரியார்.

இரண்டு அழகிய திருமணக் 'கேக்'குகளுடன் விருந்து நடந்தேறிற்று, ஒரு சிறு பின்னணி வாத்திய கோஷ்டி இசை முழக்க எல்லோரும் நடனமாடினர். எல்லோருக்கும் ஒரே ஆனந்தம். நினியனின் அருமையான ஷாம்பேன் மது எல்லோருக்கும் தாராளமாக வழங்கப்பட்டது.

நடு இரவுக்குச் சிறிது முன்னர் மேரியும், ஆப்ரஹாமும், மெல்ல முன் வாசல் வழியே வெளியே நழுவி அங்கே தயாராக நின்று கொண்டிருந்த கோச்சு வண்டியில் ஏறிக்கொண்டு குளோப் ஹோட்டலுக்குச் சென்றனர்.

ஆப்ரஹாம் கீழே ஹோட்டலின் ரிஜிஸ்தர் புத்தகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டிருந்தான். முன்பு ஜான் ஸ்டூவர்ட்—அவன் மனைவி மற்றும் தன் சகோதரி ஃபிரான்ஸெஸ்—டாக்டர் வாலெஸ் ஆகியோர் திருமணமானதும் வந்து தங்கியிருந்த அதே அறைக்கு மேரி நடந்தாள். கட்டிலில் புத்தம் புதுப் படுக்கை விரிக்கப்பட்டிருந்தது. மலர்கள் பரப்பப்பட்டிருந்தன. மேரி தன் விரலிலிருந்த அந்த சாதாரணத் தங்க மோதிரத்தைக் கழற்றி விளக்கடியில் கொண்டுபோய்ப் பார்த்தாள். அதில்

''காதல் அழிவற்றது''

என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

அதைப் படித்ததும் மேரிக்குக் கரை கடந்த மகிழ்ச்சி வெள்ளம் பொங்கிற்று. ரொம்ப காலத்துக்கு முன்பு ஆப்ரஹாம் ''காதல் அழிவற்றது'' என்று கூறினான். அப்பொழுது அவள் ''அந்த அழியாக் காதல் கிட்டும்வரை ஒருவர் உயிரோடிருக்க முடியுமானால் ..... ?'' என்று நினைத்துக்கொண்டாள். இப்பொழுது அந்த அழியாக் காதலைப் பெற அவள் உயிரோடிருந்துவிட்டாள்.

எப்பொழுதும் இந்த ஒன்று அவளுடைய நினைவில் இருக்கவேண்டும். காதல் பொங்கவும் செய்யும்; வற்றவும் செய்யும், சில சமயம் பிரகாசிக்கும், சில சமயம் மங்கிப் போகும், அதன் நல்ல அம்சங்களைப் பெற ஒருவர் அதன்

கெட்ட அம்சங்களை ஏற்று சகித்துக்கொள்ளவேண்டும். அதில்தான் இருக்கிறது காதலின் மகத்துவம். அது மீண்டும் மீண்டும் எழுந்து அமரத்துவம் பெற அதுதான் வழி. அவள் தன்னை அந்த அழியாக் காதலுக்கு அர்ப்பணித்துவிட வேண்டும்; வருங்காலத்தில் என்ன நிகழ்ந்தாலும் சரி; எத்தகைய கஷ்டங்கள், ஏமாற்றங்கள், துயரங்கள், துன்ப நிகழ்ச்சிகள் ஏற்பட்டாலும் சரி; அவற்றை யெல்லாம் அவள் கடந்து வரவேண்டும். அந்த மூர்க்கமான, திகிலளிக்கும் புயல்களினூல் அடித்துக்கொண்டு போகப்படாமல் மீண்டு வரவேண்டும். ஏனென்றூல் இறுதியில், அந்த இறுதியை ஓருவர் எவ்வளவு காலத்துக்குப்பின் எட்டினூலும், அதன் வழி எவ்வளவு இருண்டு கிடந்தாலும், வாழ்வின் பிரகாசத்தையே காண்பார்கள்.

ஆப்ரஹாம் நடந்துவரும் காலோசை கேட்டது. அவன் கை கதவைத் திறந்து. காதல் பொங்கும் முகத்துடன் மேரி அவனை நோக்கித் திரும்பினூள்.



அத்தியாயம் 4

"ஆப்ரஹாமின் முறை"

1

வட்டமான தகரத் தொட்டியிலிருந்த வெந்நீரில் மேரி முங்கி அமர்ந்தாள். வடக்கு ஜன்னலுக்கு வெளியே திரையாகப் பனி தங்கியபோதிலும், கணப்பின் ஒளியும் குளிர் நீரின் பரிமளமும் நிறைந்த அந்த அறை வெளிச்சமாகவே இருந்தது. ஆப்ரஹாம் கீழே ஹோட்டலின் சமையற் கட்டை ஒட்டியிருந்த ஆண்களின் குளியறைக்குச் சோப்பு, சீப்பு, கூர்வரக் கத்தி, துண்டு ஆகியவற்றுடன் சென்றிருந்தான்.

அவள் வின்ட்ஸர் சோப்பைத் தன் மெல்லிடையிலும் அடிவயிற்றிலும் தடவித் தேய்த்தாள். பிறகு வசீகரந்த தொட்டியின் விளிம்பில் சாய்ந்தவாறு, தங்களுக்கு விருப்பமான முறையில் மாற்றி அமைத்திருந்த அந்த ஹோட்டல் அறையெங்கிலும் விழிகளைச் சுழற்றினாள். தென் சுவற்றிலே இரு புறமும் பூத்தொட்டிகளுடன் கூடிய புத்தக அலமாரிகள்; முன்பிருந்த பழுப்பு மஞ்சள் வெல்வெட் திரைகளுக்குப் பதிலாக, இப்பொது அவளே தைத்துத் தொங்கவிட்ட ஆழ்ந்த சிவப்புச் சீலைகள். கணப்புக்கு முன்னே அவள் வாங்கிப்போட்ட சிறு மேஜை; அதன் மீது ஆரஞ்சு நிற மரச் சிமிழ்கள். அடுத்து, 'லெக்ஸிங்டன் அப்ஸர்வர்,' 'பால்டிமோர் நைல்ஸ் ரிஜிஸ்டர்,' 'நியூயார்க் ட்ரிபியூன்' ஆகிய பத்திரிகைக் குவியலும், பான்கிராப்ட் எழுதிய அமெரிக்க சரித்திரத்தின் ஒரு பாகமும் இருந்தன. அஸ்மாரகிரிக் கட்டிலை ஒட்டியிருந்த பீரோவில் அவளுடைய வெள்ளிச் சீப்புகள், பிரஷ்ஷுகள், ஸைன்ட் பாட்டில்கள் யாவும் இடம் பெற்றிருந்தன. மதுப்புட்டிகளுக்கும் ஒரு மறைவிடம் அதிலிருந்தது.

தவிர, அவள் இங்கே ஓரிரு வருஷங்கள் தங்கக் கூடுமல்லவா? அதனால், திருமணப் பரிசாகக் கிடைத்த பணத்தைக் கொண்டு, ஓவியம் ஒன்றும், சில அச்சுச் சித்திரங்களும் வாங்கிச் சுவற்றை அலங்கரித்திருந்தாள். கூடவே மென்மையான கம்பள விரிப்பு ஒன்று. அதன் மீது நீட்டிச் சாய்ந்துகொண்டு இரவில் மேரிக்காகக் கவிதைகளைப் படிப்பதில் ஆப்ரஹாமுக்கு எவ்வளவு விருப்பம்! புத்தக அலமாரிகளுக்கு எதிரே ஒரு ஃபிரான்சு தேச மரப் பெட்டி; அதில் லெக்ஸிங்டனில் உள்ள தன் குடும்பத்தினரோடு அவள் பரிமாறிக்கொள்ளும் கடிதங்களும், மற்றக் காகிதங்களும் இருந்தன.

ஸ்நானத் தொட்டியை விட்டிறங்கி வெப்பமான தரைக் கம்பளத்தின்மீது நின்றதுமே தன் உடலைப் பெரிய துண்டினால் துடைத்துக்கொண்டாள். பிறகு உள் உடுப்புக்கள், கால் உறைகள், சரிகை தைத்த அங்கி, செருப்பு இவற்றை அணிந்துகொண்டு, குளித்தொட்டியை அகற்றுவதற்காக பணியாளை அழைக்கும் மணியை அடித்தாள்.

சற்றைக்கெல்லாம் கீழே கூடத்தில் ஆப்ரஹாமின் காலரவம் கேட்டது. நீலக் கம்பிளி அங்கியும், மேரி அவனுக்குக் கிறிஸ்துமஸ் பரிசாக ஆளித்த அதே மிதியடியும் அணிந்த வாறு அவன் கதவண்டை தோன்றினான். அவனுடைய காதண்டை மயிர்கள் இப்பொழுது நீளமாகக் கன்னம்வரை இறங்கிக் காதின் கீழ்ப்பாகத்திற்கு ஈடாகத் தொங்கின. மேலே சிறிதாக வெட்டப்பட்டிருந்த சிகை வலப்புறத்தில் அகலமாகவும், முன் நெற்றியை மூடியவாறும் பரவியிருந்தது.

மணவாழ்க்கை அவனுக்கு ஒத்திருக்கிறது என்று மேரி எண்ணினாள். நான் என்றும் காணுதபடி அவர் நன்றாக இருக்கிறார். மேனி வண்ணத்திலே மெருகு; கண்களுக்குக் கீழே வலையமிட்டிருந்த கவலைக் கோடுகள் மறைந்துவிட்டன. காதல் அழிவற்றதாக இருக்கலாம். ஆனால் அதற்கு வடிவமும் இருக்கையில் என்ன அழகு!

ஆப்ரஹாம் ஜன்னலுக்குக் கீழேயிருந்த மேஜையின்மீது சீப்பையும், கூவரக் கத்தியையும் வைத்தான். பிறகு திரும்பி மேரியை நோக்கிக் கைகளை நீட்டினான். அவள் அவனது அணைப்பில் அடங்கி மார்புடன் ஒட்டிக்கொள்ளுகையில், ஆப்ரஹாம் அவளுடைய மென் தோளில் மெதுவாக முத்தமிட்டான்: "உம்...ம்... உன்னிடம் என்ன வாசனை...!"

"உங்களிடமும் தான்! சோப்பின் மணமே காரணம், இல்லையா? உங்களுக்காக மேலும் அதே சோப்பை வாங்க வேண்டும்" என்ற மேரி சற்றுப் பின்னால் சாய்ந்து அவன்

முகத்தைத் துருவினாள். பிறகு, ''நான் சொல்லக் கூடாதெனினும் சொல்லுகிறேன்: நான் உங்களுக்கு ஏற்றவள்தான்: இப்படிக் கண்ணோடு கண் நோக்குவதன் பயனே சீக்கிரமே நான் அடையப் போகிறேன்!'' என்று அவனைப்போலவே உரத்த குரலில் கேலியாக அபிநயித்துப் பேசினாள்.

ஆப்ரஹாம் தலையைப் பின்னால் சாய்த்துக்கொண்டு சிரித்தான்.

''இவ்வளவு தூரம் நாம் இணைந்து அழகாக மாறி வருவதைக் காணும்போது, ப்ரீஸின் விருந்துக்காக, எனது உடையை நன்றாக இஸ்திரி போட்டிருக்கலாமே என்றுகூட எண்ணுகிறேன்!''

''அதுதான் போட்டு வைத்திருக்கிறீர்களே!''

''அப்படியானால், வெள்ளைச் சட்டை, காலர் இவற்றைக் கூட அவற்றுடன் வைத்திருக்கிறேமா?''

''பின்னே? அவை பீரோவின் அடித்தட்டில் உள்ளன. நீங்கள் ஜோஷ் ஸ்பீடின் கடைக்கு மேலே வாழ்ந்த நினைவிலேயே இனியும் இருக்கக்கூடாது!''

அவன் கணநேரம் அடித்த சிலைபோல் நின்றான். அவன் தலை பக்கவாட்டில் திரும்பியிருந்தது; கண்களிலே ஒரு மருட்சி.

''மோலி! ஸ்பீடும் நானும் கல்யாணம் என்றாலே ஏன் அவ்வளவு பயந்தோம்? ஒன்றரை வருஷ காலம் கடிதங்கள் மூலம் ஒருவர் மற்றவரது கவலைகளையும், சந்தேகங்களையும் விடுவிக்க முயன்றுகொண்டுமிருந்தோம்.''

''இப்போது.....?''

அவனுடைய தீவிர மனோ நிலை மறைந்தது.

''இந்த அந்தரங்கச் சம்பாஷணையில் நான் கூறுவதெல்லாம் கோர்ட்டிலே சாட்சியமாக முடியாது என்பதை மறக்காதே. ஆனால் நான் ஸாம் மார்ஷல் என்ற வக்கீலுக்கு எழுதிய கடிதம் ஒன்றில், 'மணம் புரிந்துகொண்டதைத் தவிர இங்கே வேறு ஒரு புதுமையுமில்லை; இப்புதுமை எனக்கு ஓர் உன்னத அநுபவமாக உள்ளது,' என்று எழுதி விட்டேன். அக்கடிதம் மூலம் எவ்வளவு தூரம் மீள முடியாதபடி என்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு விட்டேன் என்பதை, அக்கடிதத்தைத் தபாலில் சேர்த்த பிறகே உணர்ந்தேன்.''

மேரி அவன் கையைப் பற்றிக் கணப்புக்கு முன்னேயிருந்த சாய்வு நாற்காலிக்கு இட்டுச் சென்றாள். பிறகு அவன் முன்னே மண்டியிட்டு அமர்ந்து, ''நீங்கள் நினைப்பதை விட இன்னம் அதிகமாக மீளமுடியாதபடி வேகமாக உங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள்!'' என்றாள்.

''அதென்ன, மோலி.....?''

''அன்பே!.....என் வயிற்றில் தங்கள் குழந்தை வளர்ந்து வருகிறது.'' அவனது கண்கள் அதிசயத்தால் அகன்றன.

''நிஜமாகவா? இது ரொம்பவும் சீக்கிரமில்லையா.....?''

''சீக்கிரம் என்று கூறுவது? 'தட்சணமே' என்று சொன்னால்தான் பொருந்தும். ஆனாலும் இரண்டு கோடரிகளை ஒரே மூச்சில் தூக்கி நிறுத்திய வலிமை உள்ள உங்களைப் போன்றவரிடமிருந்து அது நான் எதிர்பார்த்ததுதானே?''

அவனுடைய முகத்திலும் கழுத்திலும் உதிரம் பாய்ந்தது.

''ஏன் ஆப்ரஹாம், உங்கள் திருமுகங்கூடச் சிவக்கிறதே; இது சாத்யந்தானா?''

அவன் அப்படியே மேரியைத் தூக்கித் தன் இரு கரங்களிலும் தாங்கினான். அவனது அகக் கோலத்தை முகம் காட்டமுடியாதென்பதை மேரி அப்பொழுதுதான் கண்டாள்.

''உன்னை ஒரு வருஷத்திற்காவது சுதந்திரமாக விட்டு விடுகிறேன் என்று நான் வாக்களித்த பின்னரும்.....'' என்று இழுத்தான் ஆப்ரஹாம்.

''ஓ.....! எனக்குச் சுதந்திரமா? திருமணமாகி இரண்டு மாதங்கள் முடிவதற்குள்ளேயே என் கணவர் என்னைக் காதலிக்கிறார் என்பதற்கு சாட்சி.....தன் கைப்பட ஒரு வக்கீலுக்கு எழுதிய கடிதமிருக்கிறது; அது கோர்ட்டிலேயும் சாட்சியாகச் செல்லும்!''

* * *

குளோப்பிலிருந்து அமெரிக்கன் ஹவுஸ் அண்மையிலேயே இருந்தாலும், வழி நெடுகப் பனி ஆழமாகப் படிந்திருந்தால் அவர்கள் அண்டைவீட்டு வக்கீல் ஆல்பர்ட் டி பிளெட்ஸோவும், அவர் மனைவி ஹோரியட்டும் சென்ற வண்டியிலேயே புறப்பட்டனர். பிறகு அமெரிக்கன் ஹவுஸ்ஸின் வத்தி ஒளி நிறைந்த நடன அரங்கிற்குள் அவர்கள் நுழைகையில், அங்கே சுமார் முந்நூறு புருஷர்களுக்கிடையில் ஒரு சில பெண்களே இருந்ததைக் கண்டு மேரி வியந்து போனாள். லிட்னி ப்ரீன் தேர்வைக் கொண்டாட அமைத்த அவ்விழாவில் காங்கிரஸின் மற்ற அங்கத்தினர்கள் மட்டுமே பிரசன்னமாகியிருந்தார்கள்.

வாத்தியங்கள் வால்ட்ஸ் இசை துவக்கின. ஆப்ரஹாம் தன் கைகளை நீட்டினான். மேரி தன் மஞ்சள் பட்டுக் கீழணி அவனது பளபளக்கும் பூட்ஸின் மீது தோய்ந்து சுழலக் கணவனுடன் நடனமாடிச் சென்றாள். அடுத்த ஆட்டத்திற்கு ஸ்டீஃபன் டக்ளஸ் அவளை அழைத்தான். அவனுடைய நீலக் கண்களிலே சுடர் ஒளி தெறித்தது; சிகை அலை அலையாகத் தலையை மறைத்திருந்தது.

''ஸ்டீவ்! நீயே இவ்விருந்தை அளிக்க இருந்ததால், இன்று உற்சாகம் குன்றி இருப்பாய் என எதிர்பார்த்தேன்.

ஆனால் உன் விழிகளிலே புத்தொளி; புது நம்பிக்கை ஒளி வீசுகிறது.''

டக்ளஸ்ஸின் சிரிப்பு குரலை அதிர்த்தது. அவன் தொடர்ந்தான்: ''எனது ஜனங்களின் ஆதரவின்றி ப்ரீஸ் ஜெயித்திருக்க முடியாது. அவனோடு எனக்கு ஓர் ஒப்பந்தம்; அடுத்த தவணைக்கு அவன் எனக்கு ஆதரவு காட்டவேண்டும். நான் அமெரிக்க ஸெனேட்டில் நுழைந்துவிட்டால், அங்கேயே நிரந்தாமாய்த் தங்கி விடுவேன். ஏனெனில், எனக்கெதிராக அங்கு வரச் சதிசெய்யும் அளவுக்கு யாரையும் விடமாட்டேன்; சாதுரியம், இல்லையா மேரி?''

திடீரென்று கூடத்தில் கலகலப்பு. கண்கள் வாயிலண்டை திரும்பின. அங்கு வெள்ளை ராணுவ உடையில் பன்னிரு கீடர்கள் புடைசூழ ஒருவர் நீல உடையும், கறுப்பு வெல்வெட் மேலணியும், வெள்ளைக்காலரும் தரித்து நிற்பதைக் கண்டாள், மேரி. அவர் தீர்க்கதரிசி ஜோஸஃப் ஸ்மித் என்று அவளுக்குப் புரிந்தது. நவ்வூவில் செழித்து வாழ்ந்து வந்த மார்மோன்ஸ் என்ற வகுப்பாரின் தலைவர் அவர்.

ஜோஸஃப் ஸ்மித்தின் தரிசனம் அவள் நினைவில் ஸிமியன் ஃபிரான்ஸிஸ் இல்லத்தில் ஆப்ரஹாமை ரகசியமாகச் சந்தித்த நிகழ்ச்சிகளைத் தருவித்தன. ஏனெனில் அப்போதுதான் ஸிமியன், ஜான் பென்னெட்டின் கடிதங்களைப் பிரசுரித்துக் கொண்டிருந்தான். மிஸ்ஸெளரி கவர்னர் போக்ஸ் என்பவரைச் சுட உத்தரவிட்டதுமின்றி, சோதனையிட வந்த அதிகாரிகளுக்காக ஒருவிதமான விபசார விடுதிகளையும் அமைத்ததாக ஜோஸஃப் ஸ்மித்தின்மீது குற்றம் சாற்றினான் பென்னெட். அதோடு நில்லாமல், தீர்க்கதரிசியின் எதிரிகளைக் கொல்லச் சிறு படை திரட்டியதாகவும், தானே சக்கரவர்த்தியாகி ஆள்வதற்காக மேல் வம்சம் ஒன்றை ஸ்தாபித்ததாகவும் கூட ஸ்மித் குற்றம் சாற்றப்பட்டார். ஸிமியன் இவற்றையெல்லாம் வெளியிடக்கூடாதென்று ஆப்ரஹாம் மிகவும் வாதாடினான். ஆனால் அவன் கேட்கவில்லை. பிறகுதான், கவர்னர் போக்ஸைக் கொல்லத் தூண்டிய குற்றத்திற்காக ஸ்மித்தைக் கைது செய்ய கவர்னர் போர்டின் உத்தரவு வந்தது.

டக்ளஸ்ஸை விட்டு மேரி கணவனிடம் சென்றாள்.

''ஆப்ரஹாம் நான் அவரைச் சந்திக்கலாமா?''

''மோலி! ஸ்மித்துக்கு இப்போது ஏழு மனைவியராம்; எனக்கோ சின்னச் சிங்காரி நீ ஒருவள்தான். நிச்சயம் நீ இந்த இரண்டு மாதங்களுக்குள்ளாகவே என்னை மறுபடி அந்த சமையற்காரர்களின் பராமரிப்புக்கு அனுப்பமாட்டாய் அல்லவா?''

‘‘ உங்களை எங்கே அனுப்பவும் இனி என்னால் முடியாது. ஆனால் எனக்கு ஆவல் மீறுகிறது. அறிமுகப்படுத்தமாட்டீர்களா? ’’

ஜோஸஃப் அறிமுகத்தைக் கண்ணியமாக ஏற்றார். ஆப்ரஹாம் நகர்ந்து பெஞ்ஜமின் எட்வர்ட்ஸிடம் சென்றான்.

மேரியோ தன் விழிகள் அலாதியான காந்த சக்தி பெற்ற ஒரு ஜோடி நீலக் கண்களைத் துருவிக்கொண்டிருப்பதை உணர்ந்தாள். ‘உண்மையில் இந்த மனிதர் கடவுளின் தூதுவர் தானா? தேவன் மரோனியின் தங்கத் தட்டுக்கள் மறைந்துள்ள இடத்திற்கு கடவுள் இவரை இட்டுச் சென்று, பிறகு அவற்றைத் தெளிவாக்க இவருக்குச் சக்தியை அளித்தாரா? மார்மோன் புத்தகம் நிஜமாகவே புதியதொரு வேதப் புத்தகமாகுமா? ஆயிரக்கணக்கில் அறிவாளிகளும் இவரை நம்புகிறார்கள்; இவருடைய மதத்தையும் தினமும் பலர் தழுவுகிறார்கள்!’ என்றெல்லாம் எண்ணினாள்.

‘‘ ஸ்மித்! உங்களை ஸ்பிரிங்ஃபீல்டுக்கு நான் வரவேற்கிறேன். நீங்கள் வீண் கொடுமைக்கு ஆளாகியிருப்பதாகவே நாங்கள் பலரும் கருதுகிறோம்.....’’ என்றாள் மேரி.

‘‘ வந்தனம், ஸ்ரீமதி லிங்கன்! ’’ அவர் குரல் அபார சக்தியுடன் ஒலித்தது. ‘‘ கர்த்தர் எங்களுக்கு ஸ்பிரிங்ஃபீல்டில் நண்பர்களையே அளித்திருக்கிறார். ’’

‘‘ அதிலும் முக்கியம் என்னவெனில், கடவுள் உங்களைச் சட்ட வரம்புக்குள்ளேயே வைத்திருக்கிறார். தங்களை மிஸ் ஸெளரிக்குத் திருப்பி அனுப்ப இல்லினாய்ஸுக்குச் சட்டபூர்வமான அதிகாரமில்லை என்றே என் கணவர் கருதுகிறார்! ’’

ஸ்மித் விளையாட்டாக முறுவலித்தார்.

‘‘ ஸ்ரீமதி லிங்கன்! உங்களுக்கு எப்போதாவது உங்களுடைய மதமார்க்கத்தின்மீது சந்தேகம் எழுந்தால் நவ்வூ என்னும் ஊருக்கு வாருங்கள்; உண்மையான மார்க்கத்தை நான் உங்களுக்குக் காட்டுகிறேன். ’’

‘‘நன்றி!’’ என்று மரியாதையுடன் மொழிந்த மேரி ‘‘ அழைக்கப்படுவது என்றுமே இன்பம்’’ என்றாள்.

ஸ்மித் நகர்ந்ததும் மேரி கணவனிடம் திரும்பினாள். பெஞ்ஜமின் எட்வர்ட்ஸ், அவன் மனைவி ஹெலன் ஆகியோருடன் இருந்தான் ஆப்ரஹாம். ஹெலன் உணர்ச்சியுடன் மேரியை வரவேற்றாள்.

‘‘ மேரி! நாங்கள் .ஹெளகனின் மாளிகையை வாங்கியிருக்கிறோம்! ’’

உடனேயே மேரியின் கண்களில் விழிநீர்; அதைப் பிரயாசையுடன் அவள் உள்ளிழுத்துக்கொண்டாள்.

‘‘ என்னிடமும் ஒரு சேதி உள்ளது’’ என்று பெஞ்ஜமின் குறுக்கிட்டான், ‘‘ உன் பெரியப்பா பிள்ளை ஸ்டூவர்ட்

வாஷிங்டனிலிருந்து திரும்பியதும், என்னை அவனுடன் கூட்டாளியாகச் சேரமுடியுமா எனக் கேட்டிருக்கிறான்.''

''அப்படியானால் ஸ்டூவர்ட் மறுபடி காங்கிரஸுக்கு நிற்கப்போவதில்லையா?'' என்று சற்றுப் பொறுத்து வினவினாள் மேரி.

''இல்லை. அவனுக்கு இரு தடவைகள் நின்றது போதுமாம்'' என்ற எட்வர்ட்ஸ், ஆப்ரஹாம் பக்கம் திரும்பி, ''அடுத்த முறை உன்னுடையதுதானே, லிங்கன்?'' என்றான்.

''நிச்சயமாக. யாராவது காங்கிரஸுக்குப் போக விரும்பவில்லை என்று பேசிக்கொண்டால், அது தவறு என்று சொல்லு!''

வாத்தியங்கள் மௌனமாகி, பெண்ணும் ஹெலனும் அப்பால் சென்றதும் மேரி ஆப்ரஹாமைக் கன்னங்கள் சிவக்க நோக்கினாள்.

''உங்கள் வெற்றிக்கு நாமும் இம்மாதிரி விருந்தளிப்போம்; ஸ்பிரிங்ஃபீல்ட் முழுவதுமே அதைக் கொண்டாட வரும்.''

''உண்மை மேரி! நானும் எதிர்காலத்தைக் கூர்ந்து நோக்கவேண்டும். அடுத்த ஆகஸ்டில் காங்கிரஸ் தேர்தல் வருகிறது. என் குழந்தையும்....இரு....இரு....ஆகஸ்டிலேயே பிறந்து விடாதா? அதுவும் எச்சரிக்கை இல்லையா?. அவன் தான் என்னை முதன் முதலாக 'மகா கனம் பொருந்திய லிங்கன்' என்று அழைக்கப் போகிறான்!''

2

'மிஸ்டர் அண்டு மிஸஸ் லிங்கன்' என்று பெயர் எழுதிய கார்டுடன், கணவனோடு சென்று புத்தாண்டு வாழ்த்துக்களை வழங்குவதே மேரிக்கு ஒரு தனி இன்பமாக இருந்தது.

தண்மையான இரவுக் காற்றிலே கையோடு கை கோத்துக்கொண்டு நடந்த அவர்கள் குளோப் ஹோட்டலை அடைகையில் இரவு மணி ஒன்பது. ஆதம்ஸ் தெருவில் ஒரு கன்னாரின் கடையை நெருங்கியிருக்கும் இரண்டடுக்குமாளிகை தான் குளோப் ஹோட்டல். வாசலில் எல்ம்ஸ், மாபிள்ஸ் செடிகள்; இரண்டு மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை தவறாது கைமாறும் அக்கட்டடத்தின் தோற்றமும் மாறிக்கொண்டே வந்தது. ஒவ்வொரு புதிய உரிமையாளரும் ஓரிரு அறைகளைக் கூட்டியதால், அளவுக்கு மீறிய கிடங்கைப்போல் அது காட்சி தந்தது. உள்ளே வசதிகளுக்குப் பஞ்சமில்லை. இடது பாகத்தில் இருந்த பெண்கள் விடுதியும், பெரிய உணவு விடுதியும் ஆதம்ஸை நோக்கியிருந்தன. ஒரு படிக்கட்டு மேல் மாடிகளுக்கு வளைந்து சென்றது. அதன் இரு மருங்கிலும் முறையே ஆறு

அறைகள். அவை நிரந்தர விருந்தாளிகளுக்கென ஒதுக்கப் பட்டவை. அநேகமாக பிளட்ஸோ குடும்பத்தினரும், ஸ்ரீமதி போர்னெதத்தும் அங்கே இருப்பார்கள். ஸ்ரீமதி போர்னெதத் ஒரு விதவை; அவள் அழகாகப் பியானோ வாசிப்பாள். மற்றப் படி ஜஸ்டின் பட்டர்ஃபீல்ட் போன்ற சட்ட நிபுணர்களும், நீதிபதி நாதனியேல் போப்பும் கூட அங்கிருந்தார்கள். மாடியில் இருப்பதால் இவர்களுக்கு, எப்போதும் வந்து போய்க் கொண்டிருப்போரின் 'கச முசச்' சப்தத்திலிருந்து விடுதலை கிடைத்தது. ஆனால் இவ்வசதிகளை முறியடிக்கும் வகையில், கட்டடத்தின் மேலே தொங்கும் பெரிய மணி, யார் வாசலில் வந்திறங்கினாலும் கொடூரமாக ஒலிக்கும்!

எலிஸபெத், ஃபிரான்ஸெஸ் இவர்களைப்போலவே மேரியும் தாய்மைக் கோலத்தை எளிதில் தாங்கினாள். ஆனாலும் அவர்கள் அதிகமாக வெளியே செல்லவும் தவறவில்லை. ஆன்ரோட்னியின் திருமணம், நினியனுடைய புதுக் குழந்தையின் பெயர் சூட்டல், பாண்டுக் கச்சேரி ஆகிய எதையும் அவர்கள் தவிர்க்கவில்லை. இடையில் நிம்மதியாக மாலையில் ஆப்ரஹாமுடன் அறையில் தனித்து இருப்பதையும் அவள் மகிழ்ச்சியுடன் அநுபவித்தாள். ஆப்ரஹாம் மேஜையடியில் கணப்புக்கு முன் அமர்ந்து நீல மசியால் நீண்ட காகிதங்களில் ஸாங்மன் நகர 'விக்கு'களுக்கு வேண்டுகோள்கள் எழுதுவான்.

எழுத்தில் அவனடையும் இன்பத்தையும், மேஜையண்டை அவன் செலவழிக்கும் நீண்ட நேரத்தையும் கண்ட மேரி, ஆப்ரஹாம் அடிப்படையாகவே ஓர் இலக்கியகர்த்தா என்று நம்பினாள்.

''குழந்தைப் பருவம் முதல் ஒரு நூதன நடையை எழுதுவதில் கை தேற எனக்கு ஆசை. அதனால்தான் சில சமயங்களில் நான் கவிதைகள் புனைகிறேன். அப்போது தான் என் எழுத்தில் சந்தம் அமைகிறதா என அறிய இயலும். ஆனால் இதுவரை எனக்கு அதிக வெற்றியில்லை. இருப்பினும் நான் பிறர் கேட்பதற்காகவே எழுதுகிறேன்'' என்றான் ஆப்ரஹாம்.

''ஆனாலும் உங்கள் எழுத்து தெளிவாக இருக்கிறது; விஷயத்தின் சாராம்சத்தைச் சொற்செட்டுடன் சொல்லுகிறீர்கள்.''

அவன் அவளை நன்றியுடன் பார்த்தான். பிறகு கட்டிலுக்கும், பீரோ ஸோபாக்களுக்கும் இடையிலிருந்த குறு வெளியில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான்.

''எல்லா அபேட்சகர் தேர்வுக்கும் மகாநாட்டு முறையே நல்லதென 'விக்' கட்சிக்காரர்களை ஒப்புக்கொள்ளச்செய்ய என்னால் முடிந்தால் எவ்வளவு நலம்! இக்கொள்கை ஸ்டீஃபன் டக்ளஸ்ஸால் ஆரம்பிக்கப்பட்டதுதானென்றாலும் பரவா

யில்லே. இம்முறையிலுல்தான் இல்லினுய்ஸ் ஜனநாயகக் கட்சிக்கு அமோக வெற்றி கிட்டியுள்ளது. ஒற்றுமையே வலுவென்றும், விண்டுபட்ட வீடு தனித்து நிற்கமுடியா தென்றும் யாவரையும் நான் உணரச் செய்யவேண்டும்!''

ஆப்ரஹாமின் சொற்பொழிவைக் கேட்க மேரிக்குக் கொள்ளே ஆசை. ஆனுல் பெண்களேத்தான் கூட்டங் களுக்கு அநுமதிப்பதில்லேயே! அடுத்த இரு வாரங்களில் ஸாங் கமன் நகர்முழுவதும் அவன் பேசினுன். அவனுடைய எழுத்தைப்போலவே பேச்சும் மக்களேக் கவர்ந்தது. ஆனு லும் கூட்டத்திலிருந்து சோர்ந்துதான் திரும்பினுன் ஆப்ர ஹாம். என்ன நேர்ந்தது என்று மேரி விடுத்த வினுக் களுக்கும் சோர்ந்தே பதில் கூறினுன்:

''ஸாங்கமன் நகரமக்கள் என்னே உதறி விட்டனர்... எங்கள் தூது கோஷ்டி எட்வர்டு பேக்கருக்கு ஆதரவு காட்ட வேண்டுமாம்!'' இடக்கரத்தை மேலும் கீழும் ஆட்டியபடி அவன் மேலும் பேசினுன்: ''முதலில் பதிவான ஓட்டுக்களில் எனக்கு அதிகச் சாதகமில்லே. எனக்கு ஆதரவு மங்கி வந்தது; எனவே சகலமும் சரியுமுன் நானே நழுவிக்கொண்டு விட்டேன்!''

''அது கூடாது!'' என்று கூவினுள் மேரி. ''நீங்கள் ஒருபோதும் பின்வாங்கக்கூடாது!''

அவளிடமிருந்து திருப்பிய பார்வையைக் கீழ்த்திசை ஜன்னல் வழியே ஓட்டினுன், லிங்கன். அவனுடைய தோல்பற்றிய மேரி, ''என்னே மன்னியுங்கள், ஆப்ரஹாம். உங் களுக்கு எது சரியென்று படுகிறதோ, அப்படியே செய்யுங் கள். உங்களே முற்றிலும் ஒதுக்குவது அவர்களுக்கு நியாய மாகாது''

''ஓ! என்னே முற்றும் எங்கே ஒதுக்கினுர்கள்?'' என்ற ஆப்ரஹாம் ஒரு வறட்டுச் சிரிப்புச் சிரித்தான். ''பீகின் கூட்டத்திற்குச் செல்லும் தூது கோஷ்டியில் என்னேயும் சேர்த்திருக்கிறுர்கள். பேக்கருக்காக நான் முயற்சிக்க வேண் டும். தன் காதலியை மணக்கப் போகும் மற்றெருவனுக்குத் தானே மாப்பிள்ளேத் தோழனுக இருக்கவேண்டியதைப் போன்ற நிர்ப்பந்தம் எனக்கு!''

தன் ஏமாற்றத்தைக் கண்டு எள்ளி நகைக்கும் அவன் சுபாவம் மேரிக்கு ஆறுதலாக இருந்தது; அவள் முகத்தில் புன்னகை அரும்பியது.

மறு நாள், ஆப்ரஹாமின் தோல்விக்குக் காரணம் தானும்தான் என்று மேரிக்குப் புரிந்தது; பேக்கரின் ஆதர வாளர்களில் சிலர், கல்யாணத்திற்குப் பிறகு ஆப்ரஹாம் செல்வம், செருக்கு, குடும்ப அந்தஸ்து இவற்றிற்கு பிரதி நிதியாகி விட்டானென்று கூசாமல் சொன்னுர்கள்!

அன்று சாப்பாட்டின்போது மேரி சொன்னாள் : ''அவர்கள் உங்கள் உள்ளத்தைத் துழாவுகையில், அங்கே என்னைக் கண்டிருக்கிறார்கள். நமது விவாகத்திற்குப் பிறகு இது முதல் முயற்சி ; இது ஜெயிக்கும் என நான் நம்பியிருந்தேன் !''

மறுநாள் காலையில் ஸாங்கமன் சஞ்சாரக் கோர்ட்டுகள் திறந்துவிட்ட சேதியை அவள் மிகவும் வரவேற்றாள். ஏனெனில் லோகனும், லிங்கனும் அநேக வழக்குகளில் வக்காலத்துப் பெற்றிருந்தார்கள். கேசுகளில் கண்ணுக இருக்கையில் தனது தோல்வியை நினைந்து மாய லிங்கனுக்கு நேரமே இருக்காது. வழக்குகள்கூடப் பெரும்பாலும் பணம் சம்பந்தமானவை ; எனவே வருமானத்திற்கும் குறைவிராது.

லோகனுடன் கூட்டுச் சேர்ந்ததிலிருந்து சட்ட நிபுணனாக லிங்கன் அடைந்து வந்த சீரான முன்னேற்றங்களை மேரி கண்டு வந்தாள். அதிலும் லோகன் மட்டுமே நன்கு தேர்ச்சி பெற்றிருந்த சட்டங்களில்கூட லிங்கனின் பங்கு அபாரமாக வளர்ந்தது. மேரியின் உறவினனான லோகன், லிங்கனை நீண்ட விவாதங்களை யெல்லாம் எழுதச் செய்து வேலை வாங்குவதையும் அவள் அறிவாள். தன்னைச் சாதாரண சட்ட மாணவனைப்போல் லோகன் நடத்துவது ஆப்ரஹாமின் மனதைச் சில சமயங்களில் உறுத்துவதையும் அவள் உணர்ந்திருந்தாள்.

''லோகன் சட்டத்தை ஒரு சாஸ்திரமாக மதிக்கிறான்'' என்று ஒரு தடவை அலுத்துக்கொண்டான் ஆப்ரஹாம். '' அவன் படிப்பதெல்லாம் சட்டம்தான். நான் சரித்திரமோ, கவிதையோ, அரசியலோ படித்தால், பொழுதை வீணுக்குவதாக அவனுக்கு எண்ணம் !''

தன் தந்தையைப்போல் ஆப்ரஹாமும் வீட்டிற்கு நீதி ஸ்தல நண்பர்களையும், உத்தியோகஸ்தர்களையும், தொழில் அதிபர்களையும் விருந்துக்கு அழைத்து வருவானென்று மேரி எதிர்பார்த்தாள். ஆனால் லிமியன் ஃபிரான்ஸிஸ்ஸைத் தவிர வேறு யாரையும் அவன் அழைத்து வந்ததில்லை. அவள் கணவன் தன் மண வாழ்வை நண்பர்களிடமிருந்து ஒதுக்க எண்ணினானே என்னவோ? தெரு முனைகளிலும், தபாலாபீசிலும் அங்கங்கே நின்று பேசி நண்பர்களை அப்படியே அனுப்பிவிட்டு வந்து விடுவான். எட்வின் வெப் சொன்னமாதிரி அவன் ஆண்களுக்குள்ளே ஆண் ; சந்தேகமில்லை.

தவிர, தங்களை விருந்துக்கு அழைத்தவர்களைத் தானும் எதிர் விருந்துக்கு அழைக்க வேண்டியது அவசியமென்றும் அவன் கருதுவதில்லை.

மேரி தனது குடும்பத்தினருக்குக் குளோப்பில் நடத்திய

விருந்தைத் தவிர வேறொன்றும் அவன் நடத்தியதில்லை. இதனால் கடந்த இரு வாரங்களில் நடந்த இரண்டு மூன்று பெரிய விருந்துகளுக்கு லிங்கன் தம்பதிகள் அழைக்கப் படவே இல்லை.

இதுபற்றிக் கணவனிடம் விவரித்துச் சொல்வதை ஒத்திப்போட்டுக்கொண்டே வந்தாள் மேரி. அவனுக் கென்னவோ விருந்துகள் பிடிப்பதேயில்லை. குளோப்பில் வசிக்க வந்ததற்குக் காரணமே, வாரம் நாலு டாலர் செல வோடு போகும் என்பதற்காகத்தான். இப்படிச் சிறிது பணம் சேர்த்துக் கடன்களை யெல்லாம் அடைத்துவிட்டுக் கையிலும் கொஞ்சம் சேமித்து வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் அவன் கூறுவான். என்றாலும் இப்போது வில்லியம் த்ராண்டன், குளோப்பில் நடத்திய பெரிய விருந்துக்கு மற்ற வக்கீல்கள், டாக்டர்கள் யாவரையும் அழைத்தபோதிலும் இவர்களை மட்டும் விட்டுவிட்டதால், இதுபற்றிக் கணவ னிடம் கூற விரும்பினாள் மேரி. த்ராண்டன் அமெரிக்கன் ஹவுஸ்ஸில் அளித்த பல விருந்துகளுக்கு லிங்கன் குடும்பத்தை முன்பெல்லாம் அழைக்காமலில்லை. ஆனால் அதற்கு எதிர் மரியாதையாக அவர்களுக்கு விருந்து வைக்காததால்தானே இப்போது அவன் இவர்களை அழைக்காமல் தவிர்த்து விட்டான்?

புயலும் மழையும் ஜன்னலைத் தாக்கிக் கொண்டிருந்த ஓரிரவில் மேரி சொன்னாள் : ''ஆப்ரஹாம் ! நியூ ஸேலம் கடன்களை யெல்லாம் முதலில் ஒழித்துவிடவேண்டு மென்கிறீர்கள். அதற்காக என்னுடைய இந்தியாஞ நிலங் களை விற்றால் என்ன ? அப்பணத்தைக் கொண்டு கடன்களை அடைத்துவிட்டால், நாம் நிம்மதியான புதுவாழ்வைத் தொடங்கலாமல்லவா ?''

அவன் புத்தகத்தில் பதித்திருந்த பார்வையை உயர்த்தி, 'இப்போது எப்படி இப்பேச்சு எழுந்தது ?' என்ற கேள்விக் குறியுடன் அவளைப் பார்த்தான். பிறகு, ''மேரி ! உன் நிலங்களை விற்று என் சொந்தக் கடன்களை அடைப்பதை நான் எப்படிச் சகிப்பேன் ?'' என்றான்.

''உங்கள் ஆட்சேபணை எனக்குப் புரியவில்லை. உங்க ளுடைய தற்கால வருமானத்தைப் பழங் கடனடைக்கப் பயன்படுத்தினால், அக்கடன்கள் எனதாகவும் ஆகின்றன. பட்ட கடனை நீங்கள் அடைக்க விரும்புவது நியாயந்தான். ஆனால் நமக்கு மற்றொரு கடமையும் இருப்பதை நான் மறக்க முடியவில்லையே ? அதாவது சமூகக் கடன்கள் !''

அவன் முகத்தில் வெறுப்பு சுழித்தோடுவதை அவள் உணர்ந்தாள் ; அவன் கண்கள் மீண்டும் புத்தகத்தில் பதிந்துவிட்டன.

மார்ச் மாத மத்தியில், எட்வர்ட்ஸ் வீட்டிலிருந்து மேரி சென்றுவிட்டதால் ஏற்பட்ட காலி ஸ்தானத்தை நிரப்ப அவள் தங்கை ஆன் வந்தாள். மேரி அவளைப் பார்த்து மூன்றரை வருஷங்கள் ஓடிவிட்டன. ஆனலும் ஆன் சிறிதும் மாறவில்லை. இன்னமும் அதே தேய்ந்த முகம், பூரிப்பற்ற மார்பகம்! ஆப்ரஹாமைக் காண்பதற்காக மேரி அவளை குளோப்பிற்கு விருந்துக்கு அழைத்திருந்தாள். சற்றைக்கெல்லாம் ஆப்ரஹாம் சில மனிதர்களுடன் வந்து, வாசற்படியில் நின்று பேசிக்கொண்டிருந்தான்.

ஆன் கேட்டாள் : ''இவர்களில் யார் லிங்கன்?''

''அடர்ந்த சிகையுடன் நிற்கும் அந்த உயரமான மனிதர்!''

ஆன் அவனை உற்று நோக்கினாள். அப்போது தனது மனத்தில் எழுந்த ஏமாற்றத்தை ஆன் மறைக்க முயலவில்லை. ''அந்தக் கருத்த, கோடிட்ட முகம் பெற்றவரா? ம்ம்...ம்... இப்படிப்பட்ட ஆளை நீ பிடித்திருப்பதால் கல்யாண மார்க்கெட்டில் என் மதிப்பு குறையத்தான் போகிறது!'' என்றாள்.

மேரி ஒரு முறை தங்கையைக் கடிந்து நோக்கிய பின் வெறுப்புடன் மொழிந்தாள் : ''உன்னிடம் கொஞ்சமாவது இரக்கம் இருக்குமானால், இப்படிக் கொடுமையாகப் பேசுவது மட்டுமல்ல ; நினைக்கவே கூடாது, ஆன்!''

ஆன் பிடிகொடுத்துப் பேசாததை ஆப்ரஹாமே சீக்கிரம் உணர்ந்தான்.

''மேரி! உன் தங்கைக்கு என்னைக் கண்டதும் ஏமாற்றம் போலிருக்கிறது. அன்று கோர்ட்டில் அரசாங்க வக்கீல் ஒருவன் சொன்னதை அவளிடம் நான் கூற விரும்புகிறேன் : குரூபியான மனிதன் தன் சொந்தத் தகுதியை நம்பி வாழ்கிறான் ; இயற்கையின் உதவி அவனுக்கில்லை. அவன் தனது நற்குணத்தாலும், நடத்தையாலும் தனது குறையை ஈடு செய்ய உழைக்கிறான். ஆனால் அழகான மனிதனை, தனக்கு மூளை, இதயம் மற்றும் எதுவுமே இல்லாது போனாலும் தன் முகத்தின் அழகே அவற்றை ஈடுசெய்யுமென நம்புகிறான்.''

ஆன் ஒருகணம் இதை அசைபோடுகையில், அவள் விழிகள் கவிழ்ந்தன. பிறகு நிமிர்ந்து, ஆப்ரஹாமின் புன்முறுவலுக்குப் பதிலாக இளநகை சிந்தினாள். அப்போது மேரியின் எண்ணம் வேறு விதமாக ஓடியது : 'நான் நெருப்பை நெருப்பால் எதிர்க்கிறேன் ; இவரோ தீயைச் சிரிப்பால் அணைக்கிறார்!'

ஏப்ரல் பிறந்ததும் ஆப்ரஹாமும், நகரின் மற்ற வக்கீல்களும் வெளியே முகாம் போட்டார்கள். குதிரையில் செல்லுவதை விட, குளோப்பின் வண்டிகளில் ஒன்றை

வாடகைக்கு அமர்த்தலாம் என்ற யோசனைக்கு ஆப்ரஹாமை மேரி இணங்கச் செய்துவிட்டாள். அவன் சென்றதும், முதல் கடிதத்தில் மோசமாக உள்ள சாலைவழிகளையும் இடர்ப்படும் பெருநதிகளையும் பாலங்களையும்பற்றிக் குறிப்பிட்டிருந்தான். ஸாங்கமன் நதியைத் தாண்டி இரண்டுமைல்களுக்கப்பால் அவனுடைய குதிரை சேற்றில் சிக்கி வண்டிச் சக்கரத்தின் அச்சு ஒன்றும் உடைந்துவிட்டது; மறுநாள் ஒரு மலைச்சரிவில் இறங்குகையில் சக்கரம் தனியாகவே கழன்று வந்துவிட்டதாம். குதிரையில் சென்றிருந்தால் அடிச் சறுக்கல் ஏற்படாதது மட்டுமின்றி, கழன்று விழுவதற்குச் சக்கரமும் கிடையாதல்லவா?

மேரி தனிமை தாளாது தவித்தாள். பிற்பகலில் எலிஸபெத் அல்லது ஃபிரான்ஸெஸ்ஸின் இடத்திற்குப் போய் அங்கே, பிறக்கப் போகும் தன் குழந்தைக்குத் துணிமணிகள் தைத்த வண்ணம் நேரத்தைப் போக்கினாள்: எப்போதாவது அவளுக்கு உடல் நலமில்லாவிடில், அண்டை வீட்டிலிருந்த ஹோரியட் பிளட்ஸோ மேரியைக் கவனித்துக் கொண்டாள். வாரம் ஒரிரு தடவை மேரி நண்பர்களைத் தன்னோடு சாப்பிடவும் அழைத்தாள். மெர்ஸி, அல்லது ஹெலன் யாராவது வருவார்கள். இதற்கான உணவுச் செலவைத் தன் சொந்தப் பணத்திலிருந்தே ஈடுசெய்தாள் மேரி.

ஒரு தினம் பிற்பகலில் மெர்ஸி கையில் ஒரு கடிதத்தை அலைத்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் ஓடி வந்தாள். இருவரது கணவன்மார்களும் புளூமிங்டனில் இருந்தார்கள்; அறுபது மைல்கள் தாண்டி அங்கே ஒரு வாரம் கோர்ட் முகாம் இட்டிருந்தது.

''மேரி, உன் கைச் சாப்பாடு இல்லாவிடில் உன் கணவருக்குச் சரிப்படாது போலிருக்கிறது; இக்கடிதத்தைப் பார்; ஜேம்ஸிடமிருந்து இப்போதுதான் வந்தது!''

அவள் கடிதத்தை வாங்கி, அதில் மெர்ஸி காட்டிய வாக்கியங்களை மட்டும் படித்தாள்:

''நான் திங்களன்று மாலை புளூமிங்டனை அடைந்ததும் அங்கே லிங்கன் தீவிரமான 'வீட்டு நோயா'ல் அவதிப்படுவதைக் கண்டேன்; அவன் தலை அடிக்கடி தெற்குப் பக்கமே திரும்புகிறது!'' மேரியின் கண்களில் நீர்த்திரை யிட்டது.

மே மாதத் துவக்கத்தில் நடக்கவிருந்த மகாநாட்டுக்காக ஆப்ரஹாம் பீகின் செல்ல இருந்தான். ஒரு ஞாயிறன்று எலிஸபெத்தின் வீட்டிற்கு விருந்திற்குப் போவதற்காக மேரி உடைகளை அணிந்துகொண்டிருக்கையில், இடைகழியில் ஏதோ பழக்கமான காலரவம் கேட்டது. மேரி கதவைத் திறந்தாள். எதிரே ஆப்ரஹாம், களைப்பு

மேலிட்டு உடலெல்லாம் புழுதியுடன் நின்றுகொண்டிருந்தான்! மறுவிநாடி அவன் அப்படியே அவளை அலக்காகத் தூக்கிக் கைகளில் சுமந்து கொண்டு கணப்புக்கு எதிரிலிருந்த ஸோபாவுக்குச் சென்று, அவளைத் தன் மடிமீது இறுத்திக் கொண்டான். அப்போது அவனது முரட்டுத் தாடி அவளுடைய மென் வதனத்தில் உரசி எரிந்து நோகச்செய்தது. தனக்கு மூச்சு விட முடிந்ததும் மேரி கூவினாள்:

"இதெப்படி திடீரென்று, ஆப்ரஹாம்! நீங்கள் லிவிங்ஸ்டன் போக இருந்தீர்களே!"

"உன்னை விட்டு மேலும் பிரிந்திருப்பதைச் சகிக்க வில்லை. வெள்ளியன்று கோர்ட் கலைந்ததும், ஒரு குதிரையை வாடகைக்கு அமர்த்தினேன்... இந்த அறுபது மைல்களை எப்படிக் கடந்தேனோ, தெரியாது. இன்றும் நானையும் நாமிருவரும் சேர்ந்திருக்க முடியும்; நாளை நின்று நான் மீண்டும் புறப்பட வேண்டும்!"

ஆப்ரஹாம் குளிக்கும்போது, ஸோபாவுக்கு உறைகளை மாற்றிக்கொண்டிருந்த மேரியின் நினைவு சுழன்றது: வார முடிவில் மனைவியுடனிருப்பதற்காக ஆப்ரஹாம் மட்டுமே ஓடி வந்திருக்கிறார். மற்ற வக்கீல்கள் வரவில்லை. இப்படிப் பெருமைப்படுவதற்கு ஆண்டவன் என்னை மன்னிக்கட்டும்; என்னைத்தேடி ஓடோடி வந்திருக்கும் அவரை எல்லோருக்கும் காட்டி நான் பெருமையடித்துக்கொள்ளப் போகிறேன்!

3

வசந்த காலம் வரும்போதே மேரிக்குத் தொடர்ந்த தலைவலியையும் கொணர்ந்தது. அதற்குப் பாதிக் காரணம் குளோப்பின் உச்சியிலிருந்து அடிக்கும் பெரிய மணியின் கொடூர ஓசைதான். இதனால் தூக்கம் கெட்டு, மேரி எழுந்து படுக்கையில் நடுங்கிக் கொண்டே அமருவாள். காலும் கையும் சில்லிட்டுக் கம்பளிக்குள்ளேயும் அவள் உடல் வெடவெடக்கும். கணவனோடு ஒட்டிக்கொண்டு, அவனது உடலின் கதகதப்பைப் பெற முயலுவாள்.

முடிந்தவரை இந்நிலையைக் கணவனுக்குத் தெரியாமல் மறைத்து வந்தாள். ஆனால் இன்று பட்டப்பகலில் அவன் வந்தபோது ஜன்னல்கள் மூடியிருந்ததையும், தலையில் அவள் மஃப்ளர் அணிந்திருந்ததையும் கண்டுவிட்டானே! தலைவலியைக் குறைப்பதற்காக வெளிச்சத்தையும், சப்தத்தையும் தவிர்க்க வேண்டியிருக்கிறதென்று அவள் விளக்க நேர்ந்து விட்டது.

குளோப்பிற்குப் புதுச் சமையல்காரன் ஒருவன் வந்தான். அவன் ரொட்டியைக் கசப்பாகவும், கோதுமைக் 'கேக்'குகளை மஞ்சளாகவும் தயாரித்தான். மேரிக்கு உணவு இறங்காததற்குக் காரணம், இந்தப் புதுச் சமையலா அல்லது அவள் உடல் நலமின்மையா என்று புரியவில்லை.

''நல்லவேளை, நம் உடல்கள், கார்க்கால் இறுக்கமாக மூடும் கண்ணாடிப் பாட்டில்களாக இல்லை; அப்படியிருந்தால் வயிற்றுக் குமைச்சல் தாளாமல் வெடித்திருக்கும்!'' என்றாள் மேரி.

''மேரி டாடு கேலி செய்வதை இப்போதுதான் முதல் தடவையாகக் கேட்கிறேன்!'' என்று பதில் வந்தது.

வயிற்றில் குழந்தை வளர்ந்துவிட்டதால், உணவு அறைக்குத் தினமும் மூன்று தடவைகள் சென்று வருவது சிரமமாக இருந்தது. தவிர, அப்போது அவள்மீது விழும் ஆண்களின் புது மாதிரிப் பார்வை! ஒரு சமயம் மேரி இடைகழியில் செல்லும்போது யாரோ மெதுவாகக் கூறியது அவள் காதில் விழுந்துவிட்டது :

''லிங்கன் தன் படுக்கை ஓரத்தில் முதல் தடவையாக உடைகளைக் களைந்து வைத்தபோதே, ஸ்ரீமதி லிங்கன் கருத் தரித்திருக்க வேண்டும்!''

இதைத் தொடர்ந்த கேலிச் சிரிப்பு அவள் உள்ளத்தைச் சுட்டது. அன்று அவளால் எதையுமே சாப்பிட முடியவில்லை. பேசியவர்கள் தம் கை விரல்களால் ஏதோ எண்ணுவது போலவும் தெரிய, அவள் நிலை படுமோசமாகியது. மேரியின் திருமணம் பகிரங்கமாகிவிட்டதால், வயிற்றுக் குழந்தை லிங்கனுடையதுதானா என்று அவர்கள் கணக்குப் போட்டுப் பார்ப்பதாகவே அவள் நினைத்தாள். மற்றவரது இச்சந்தேகம் அவள் நெஞ்சில் முள்ளாகத் தைத்தது. இருப்பினும் தன் குடும்பத்தினரிடமோ, கணவனிடமோகூட இதுபற்றி அவளால் ஏதும் பிரஸ்தாபிக்க முடியவில்லை. ஸ்டூவர்ட்டின் மனைவியும், அவளது சகோதரி ஃபிரான்ஸெஸ்ஸும் இதே கட்டிலில் கருவுற்றுத் தாய்மைப்பேறு பெற்றவர்கள்தானே?

மேரி நடுவில் தனது மைத்துனனான டாக்டர் வாலெஸ்ஸிடம் சென்று தன் உடல் உபாதைகளைப் பற்றிக் கூறினாள்; தன் சகோதரிக்கு ஏற்படாத வகையில், சூழ்நிலை கூடத் தன்னைச் சிரமப்படுத்துவதையும் விவரித்தாள்.

''வில்லியம்! டாக்டர் 'என்ற முறையில் பேசுங்கள்; என்னிடம் இப்போது என்ன கோளாறு?''

டாக்டர் வாலெஸ்ஸுக்குத் தீட்சண்யமற்ற கண்கள்; வலது இமை மேற்புறம் ஏறியும், இடது இமை கீழே

சரிந்தும் இருப்பதால், அவன் முகத்தில் நிரந்தரமான ஒரு வினுக் குறி !

தான் நல்ல ஆரோக்கியத்துடன் இல்லாவிடினும், அவன் பலருடைய நோய் நொடிகளைத் தீர்த்திருக்கிறான். அவனுக்கே மருந்துக் கடை ஒன்றும் உண்டு. ஆயினும் கூடுமான வரை மருந்துகளைத் தவிர்ப்பதே நல்லது என்பது அவன் கொள்கை.

''தேக நலம் பற்றியோ, குழந்தையைப் பற்றியோ கவலைப்படாதே, மேரி. ஆப்ரஹாமைப் பிரிந்த அதிர்ச்சி தான் இன்னமும் உன் நரம்புகளைப் பாதித்திருக்கிறது.....''

''நான் கேட்டுக்கொண்டுதானிருக்கிறேன். சொல்லிக் கொண்டே போங்கள் வில்லியம்.''

''அந்த இருபது மாசங்களிலும் உன் நரம்புகளுக்கு அதிகமான அதிர்ச்சி ஏற்பட்டது ; பிறகு ஆப்ரஹாமைத் திரும்பவும் பெற்று, அவனை மணமும் செய்துகொண்டவுடன் உன் நோய் தீர்ந்துவிட்டது. ஆனால், அந்த நரம்புத் தளர்ச்சிமட்டும் இன்னமும் சரிப்படவில்லை.''

''வில்லியம் ! அது முற்றும் குணமாக இன்னும் எத்தனை நாட்களாகும் ?... அப் பிரிவு ஏற்படவே இல்லை யென்று நான் உணரும் நாள் வருமா.....?''

டாக்டர் வாலெஸ் குழாயில் புகையிலையைத் திணித்து, அதைப் பற்றவைக்காமல் கீழே வைத்தான்.

''அதைச் சொல்லுவது கடினம், மேரி ! நீண்ட கால நிம்மதி உனக்குத் தேவை.''

அவள் மெதுவாக நடந்து குளோப்பிற்குத் திரும்பினாள். வழியில் வசந்த காலக் கதிரவனின் இளங் கதிர்கள் அவள் வதனத்தில் இதமாக விழுந்தன ; சோர்ந்த அவள் நயனங் களும் அவ்வெயிலில் குளித்தன. மேஜையண்டை நின்றபடி பணியாளை அழைத்து, ஸாரா பெக்கைக் கூப்பிடச் சொன் னாள் மேரி. பழுப்புக் கூந்தலும், எலும்போடிய தோற்ற மும் உள்ள ஒரு விதவை ஸ்ரீமதி பெக். ஆனால் அவள் கணவன் ஹோட்டல்கள் நடத்துவதற்கு அவளுக்கு நல்ல பயிற்சி அளித் திருந்தான்.

மேரி சௌகரியமாக நாற்காலியில் அமர்ந்ததும் ஸாரா வந்தாள். தனக்கென்று உபரியான சில வசதிகள் தேவை யென்றும், அவற்றை அளித்தால் அதற்கான செலவைத் தான் ஏற்பதாகவும் சொன்னாள் மேரி.

''சூலுற்ற பெண்களுக்கு எல்லா வசதிகளும் உண்டு'' என்றாள் ஸாரா ஆழ்ந்த குரலில்.

உடனே, சாப்பாட்டைத் தனது அறையிலேயே அளிக்க வேண்டுமென்று கேட்டாள் மேரி ; பிறகு தனது சொந்தப் படுக்கைத் துணிகளை உபயோகிக்கவும், அவற்றைச்

சுத்தம் செய்வதற்கான பொருள்களை உள்ளே கொண்டு வரவும் அனுமதி கோரினாள்.

இதற்குப் பிறகு தினமும் ஒரு தடவைதான் தன் அறைக்கு வெளியே சென்றாள் மேரி.

அதுவும் சந்தடியற்ற சமயத்தில், எட்வர்ட்ஸ், மெர்ஸி அல்லது ஜூலியாவைக் காண்பதற்குத் தான். முதலில் ஆப்ரஹாமை தன்னுடனேயே சாப்பிடச் சொன்னாள், ஆனால் சீக்கிரமே அது அவனுக்கு ஏற்றதல்ல என்று புரிந்து விட்டது. சாப்பிடுகையில் ஏற்படும் கும்மாளச் சிரிப்பும், வம்புப் பேச்சும் அவனுக்குத் தேவையாக இருந்தன. தவிர அரசியல் சேதிகளைக் கொணரும் பிரமுகர்களையும், தொழில் முறையில் வக்காலத்துக் கொடுக்கக்கூடிய வர்த்தகர்களையும் அவன் அங்கே தானே சந்திக்கலாம்? எனவே மேரி ஆப்ரஹாமைப் பிறகு உணவு விடுதிக்கே அனுப்பலானாள்.

இப்போது அவர்களை மற்றவர்கள் விருந்துகளுக்கு அழைப்பதும் நின்றுவிட்டது. கடந்த ஆறு மாதங்களாகப் பிரதி வெள்ளிக்கிழமை இரவும் மேரியின் சகோதரிகளிடமும், ஸிமியன் ஃபிரான்ஸிஸ்ஸினிடமும் மட்டுமே அவர்கள் சென்றார்கள்.

மேரி தக்க காலத்தை எதிர் நோக்கியிருந்தாள். குழந்தை பிறந்து விட்டால் இம்மாதிரி வாழ்வு முற்றுப் பெற்றுவிடும். தமக்கென்று ஓர் இல்லம் அமைத்துக் கொண்டு வாழ ஆப்ரஹாமை இணங்கச் செய்துவிடலாம்.

பீகின் மகாநாட்டிலிருந்து ஆப்ரஹாம் சிறு பையனைப் போன்ற உற்சாகத்துடன் திரும்பினான். அவளுடைய பெரியப்பா பிள்ளை ஜான் ஹார்டின், எட்வர்ட்டு பேக்கரை விட அதிக ஆதரவைப் பெற்றுவிட்டானும். எனவே ஹார்டினையே தேர்தலுக்கு நிறுத்தும்படி ஆப்ரஹாம் பேக்கரைக் கேட்டுக்கொண்டான். பிறகு 1844-ஆம் ஆண்டுத் தேர்தலில் பேக்கரை காங்கிரஸ் பிரதிநிதியாகச் சிபாரிசு செய்யும் தீர்மானம் ஒன்றையும் பிரேரித்தான்.

"எனக்கு முறைக் கொள்கை புரிகிறது" என்று தலையை மேலும் கீழும் வேகமாக ஆட்டினாள் மேரி. "அப்படியானால் பெரியப்பா பிள்ளை ஹார்டினும், பேக்கரும் 1846-இல் உங்களுக்கு ஆதரவு தருவார்களா?"

"நான் அவர்களிருவரையும் என் முழுப் பலத்துடன் ஆதரித்தால், அவர்களும் அதே முறையில் எனக்கு உதவுவார்கள் என்றே நம்புகிறேன்!"

இம்மாதிரிக் கொள்கையை ஸ்டீஃபன் டக்ளஸ் தான் முன்பு உருவாக்கினான் என்பது அவள் நினைவில் மிதந்தது.

"அப்படியானால் நாம் நமது முறைக்கு நாலு வருஷங்கள் காத்திருக்கவேண்டுமா.....?"

அவன் நீண்ட விரல்களுள்ள தனது கைகளை அவள் முன்னே நீட்டியவாறு, ''பின் வேறென்ன செய்வது, மோலி? நான் வெறும் மூன்றுவது ஸ்தானத்திலிருக்கிறேன். எனினும் இவ்வழியில் முன்னேற ஒரு லட்சியமாவது இருக்கிறது.''

''ஆனல் ஸ்டீஃபன் டக்ளஸ் ஜனநாயகக் கட்சியாருடன் செய்த மாதிரி நீங்களும் இந்த ஏற்பாட்டுக்கு முடிவு கட்டினல்? ஒரே ஒரு தவணைக்குத்தான் நீங்கள் நிற்கவேண்டுமென்று நியதியாக்கும்!''

ஆப்ரஹாம் உதட்டைப் பிதுக்கினன். ''நானும் மற்றவர்களைப்போலத்தானே நடக்கவேண்டும்? பெரியப்பா பிள்ளை லோகனும்கூட காங்கிரஸ்ஸுக்குள் நுழைய விரும்புகிறன்.....''

''சரி...சரி..... தாய்மார்கள் தாம் பொறுமையுடன் ஒன்பது நீண்ட மாதங்கள் காக்கவேண்டுமென நினைத்தேன். ஆனல் உங்களோடு ஒப்பிட்டால் எங்கள் பாடு எவ்வளவோ தேவலை. நீங்கள் ஒரு தவணை காங்கிரஸ்ஸுக்குள் இருப்பதற்கு நாலு வருஷங்கள் காத்திருக்கப் போகிறீர்கள். அதற்குப் பிறகு நாம் எங்கே போவது?'' என்றாள் மேரி.

அவனுடைய கண்கள் இப்போது ஜொலித்தன.

''அந்தக் கேள்வியை நான் உன்னிடமே திருப்பிக் கேட்கிறேன், மேரி: உனக்குக் குழந்தை பிறந்த பிறகு, நாம் இங்கிருந்து எங்கே செல்லுவது? ஏன் நமக்கு மேலும் குழந்தைகள் பிறக்கலாமல்லவா? அதே மாதிரி, திட்டமிட்டு முயன்றால், மேலும் பதவிகள் கிட்டலாம்.....''

''உங்கள் பேச்சு சரியென்றே தோன்றுகிறது, ஆப்ரஹாம். ஆயினும், காங்கிரஸ்ஸுக்குள் நுழைவதைப்போல தாய்மை பெறுவது அவ்வளவு கஷ்டமில்லை யென்பதில் எனக்கு மகிழ்ச்சி தான்!'' என்றாள் அவள்.

4

திடீர்ப் புயலைப்போல் ஒரு நாள் கீழ் வானத்தில் கோடை உதயமாயிற்று. மேரி எப்போதும் போல் தன் அறையைச் சுத்தப்படுத்தியிருந்தாள். ஒன்றுவிட்டு ஒரு நாள் படுக்கை உறைகளை மாற்றி, அவற்றை நூதனமாகவும், குளுமையாகவும் வைத்திருந்தாள். தினம் இரு தடவைகள் பரிமள நீரில் குளிப்பாள். அந்தி வேளைகளில் அண்டை வீட்டு ஸ்ரீமதி பர்னதத்திடம் பியானோப் பாடங்களைக் கூடக் கற்று வந்தாள்.

லோகனுக்கும் லிங்கனுக்கும் வேலை மிகவும் அதிகமாகி விட்டதால், அவர்கள் ஆறாவது தெருவுக்கும் ஆதம்ஸ் தெருவுக்கும் இடையே அரசாங்க மாளிகைச் சதுக்கத்துக்கு எதிராக இருந்த தபால் ஆபீஸ் கட்டடத்தின் மாடியில் ஒரு பெரிய பகுதிக்குத் தங்கள் காரியாலயத்தை மாற்றினார்கள். மேரி தனது ஹோட்டல் அறையின் கிழக்கு ஜன்னல் வழியாக அந்த ஆபீஸ் கட்டடத்தைக் காணமுடிந்தது. லோகன் மாகாணச் சட்ட சபையில் இருந்ததால், கம்பெனியின் வெளி விவகாரங்களுடன் ஸ்பிரிங்ஃபீல்டு வழக்குப் பேப்பர்களையும் கூட ஆப்ரஹாமே கவனிக்க நேர்ந்தது. அதற்காக அவன் வருந்தவில்லை. ஆனால் சாமான்யமான பாண்டு, பத்திரங்களை எழுதுவது அவனுக்கு அலுப்பாகத்தானிருந்தது. அத்துடன் ஒரு வருத்தம்: அதாவது, கம்பெனியின் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கைத்தானே லோகன் அவனுக்கு அளிக்கிறான் ?

"இப் பங்கீடு இரண்டு வருஷங்களுக்கு முன்பு சரிதான். தொழில் ஆரம்பமான அந்நாட்களில், அநேகமாக வழக்குகள் யாவும் லோகனுடையதே. ஆனால் இப்போது என் வழக்குகளும் வருகின்றனவே !" என்றான் ஆப்ரஹாம்.

பாரபட்சமான இந்த வருமானப் பங்கீடு மேரிக்கு இப்போதுதான் முதலில் தெரிந்தது.

"நீங்கள் லோகனுடன் இதுபற்றிப் பேசினீர்களா ?"

"இல்லை. அவனே அதைப்பற்றி எண்ணவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அவன் பிள்ளை டேவிட் அடுத்த வருஷம் சட்ட லைஸென்ஸ் பெற்றுவிடுவான். லோகன் அவனையும் கம்பெனியில் நுழைக்க விரும்புகிறான். அச் சமயம் நாங்கள் எல்லாவற்றையும்பற்றி முடிவு செய்வோம் !"

மறு நாள் காலை உணவுக்குப் பிறகு, 'ஏ. லிங்கன்' என்று விலாசமிட்ட ஒரு கடிதம் குளோப்புக்கு வந்தது. உறையின் இடது மூலையில் 'முக்கியம்' என்ற முத்திரை. மேரி கேம்ரிக் உடையையும், ப்ளாரன்ஸ் மஃப்ளரையும் அணிந்துகொண்டு லோகன்-லிங்கன் இவர்களது ஆபீசுக்கு நடந்தாள். அங்கு மாடிப்படிப் பக்கம் அவள் சென்றதே இல்லை. இன்று அங்கிருந்த சாமான்ய ஏற்பாடுகளைக் கண்டு அதிசயமடைந்தாள். முன் ஜன்னலுக்கருகிலும், நடு அறையிலும் சிறு மேஜைகள் ; பற்பல பாணிகளில் சாமான்யமான நாற்காலிகள் ; மேஜையை ஒட்டிச் சுவற்றில் புத்தக அலமாரிகள் ; அவற்றில் ப்ளாக்ஸ்டனின் புத்தகங்கள் ஒரு அடுக்கும், கென்ட் எழுதிய விமரிசனங்களும், சிட்டியின் வக்காலத்துக்களும், மற்றுமிரு சட்டப் புத்தகங்களும் இருந்தன. ஆப்ரஹாம் கதவண்டை மேரியைக் கண்டதுமே, காகிதங்கள்

பரப்பிக் கிடந்த மேஜையிலிருந்து துள்ளி எழுந்து ஓடிவந்தான்.

"ஸ்ரீமதி லிங்கன்! நீங்களும் சட்ட வேலையைக் கொண்டு வருவது எங்களுக்குக் கௌரவமே. உங்கள் கணவர்மீது விவாக ரத்து ஒன்றுமில்லையே?"

"உங்களுக்கு வந்த கடிதமொன்றைக் கொணர்ந்திருக்கிறேன். அதன்மீது 'முக்கியம்' என்று எழுதப்பட்டிருப்பதால், அது உடனடியாக உங்களுக்குத் தேவைப்படலாம் என்றும் கருதினேன்."

ஸ்டீஃபன் லோகன் அவ்வறையிலிருந்த தனது ஒரே மேஜையிலிருந்து எழுந்து வந்தான். அவனுடைய சிறிய கூட்டாளியான லிங்கனின் முன், நடுப்பகலில் சாயும் லிங்கனின் நிழலைப்போல அவ்வளவு சிறியவனைத் தோன்றினான் அவன். உயரமாகத் தெரிவதற்காக அவன் தனது செம்பட்டை மயிரை அடர்த்தியாக வளர்த்திருந்தான். ஆனாலும் அவை நிறமிழந்து, அடித்தலையில் வெளுத்த பழுப்பாக இருந்தன. நூல் சட்டையும், கனமான சராயும் அவன் அணிந்திருந்தான். மேரி கொணர்ந்த கடிதத்தை லோகனிடம் காட்டினான், ஆப்ரஹாம். லோகன் அவளுக்கு வந்தனம் கூறிவிட்டு, தனது ஐம்பது சதமே பெறுமானமுள்ள கோரைத் தொப்பியை எடுத்துக்கொண்டு அகன்றுவிட்டான்.

ஆபீசின் மறுபக்கத்தில் மேரிக்கு முதுகைக் காட்டிக் கொண்டு ஒருவன் சட்டப் புத்தகங்களில் புதைந்திருந்தான். பிறகு அவன் தலையைத் திருப்புகையில், மேரி அவனை வில்லியம் ஹெர்ன்டன் என்று எளிதில் புரிந்துகொண்டாள். ஸ்பீட் ஸ்டோரின் மாடியில் ஆப்ரஹாம், ஜோஷுவா ஸ்பீட் இவர்களுடன் வசித்த இளைஞன் அவன். ஒரு சமயம் மேரியின் வால்ட்ஸ் நடனத்தைச் சர்ப்பத்தின் நெளிவுக்கு உவமையாகக் கூறியவன். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் வெறுப்புடன் மௌனமாகப் பார்த்துக்கொண்டார்கள். பிறகு ஹெர்ன்டன் எழுந்து, பெயருக்குக் குனிந்து வணங்கிவிட்டு நகர்ந்துவிட்டான். மேரியும் சிறிது ஒதுங்கிக்கொண்டாள். அவன் சென்ற பிறகு கேட்டாள்:

"இவனுக்கு இங்கென்ன வேலை?"

"ஏன், பில்லி எங்களிடம் சட்டம் பழகுகிறான்."

"ஹெர்ன்டன் உங்களிடம் பயிற்சி பெறுகிறானா? அவனை ஏன்தான் இங்கு அநுமதிக்கிறீர்களோ?"

"பில்லி நல்ல பையன்." ஆப்ரஹாமின் சமாதானச் சொற்களில், பெற்றோர்களின் அன்பு ததும்பியது. "தன் மனைவி, குழந்தைகளைக் காப்பாற்றவேண்டி அவன் கடையொன்றில் குமாஸ்தா ஊழியம் புரிகிறான். எஞ்சிய நேரங்களில் கடந்த மூன்று வருஷங்களாக அவன் எங்களிடம் சட்

டம் படிக்கிறான். என்னை அவன் இவ்வாய்ப்புக்காகக் கேட்ட பொழுது.....''

''ஆனால் உங்களிடம் பயிற்சி பெறுவதற்கு இன்னமும் தகுதியுள்ள பலர் இருப்பார்களே!''

''உன் பெரியப்பா பிள்ளை ஸ்டூவர்ட் என்னைத் தன் ஆபீசில் எடுத்துக்கொண்ட போது, என்னிடம் இத்தகுதி கூட இல்லை, மேரி. உண்மையில் பில்லிக்கு நுட்பமான அறிவு இருக்கிறது. அதிகம் படிக்கிறான்; எனக்குத் தெரிந்த எந்த ஐந்து நபர்களையும்விட அவன் ஐந்தே நிமிஷங்களில் அதிகமான வார்த்தைகளையும், அதிகக் கருத்துக்களையும் கொட்டி உதிர்க்கிறான். சில சமயங்களில், இந்த தேசத்தி லுள்ள அத்தனை அச்சு எழுத்துக்களையுமே அவன் கரைத்துக் குடிப்பதாகக்கூடத் தோன்றுகிறது.''

''குப்பியில் வரும் திரவத்தையும் சேர்த்துத்தானே.....?'' என்றாள் மேரி எரிச்சலுடன்.

''ஆமாம்..... சில சமயங்களில் சிறிது அதிகமாகவே தான் குடிக்கிறான் பில்லி. ஆனால் அதற்குக் காரணம், கடைக் குமாஸ்தாவாகச் சந்தடியற்று அவன் வாழ்வதுதான். எங்க ளுடன் இருப்பதால் இப்போது அவ்வளவு மோசமில்லை. அவன் சீக்கிரத்தில் வாஷிங்டன்காரர்களுடன் சேர்ந்தாலும் அதிசயமில்லை.''

கணவனின் வார்த்தைகளில் சிரத்தையைக் கண்ட மேரி தணிந்துவிட்டாள்: ''என்னை மன்னியுங்கள், ஆப்ரஹாம். உங்கள் ஆபீசில் யார் யார் இருக்கவேண்டுமென்பது, நிச்சய மாக உங்களுடைய சொந்தக் காரியம்!''

* * * *

ஆகஸ்டு முதல் தேதியன்று அவர்களுக்கு ஆண் குழந்தை பிறந்தது. பிரசவம் ஆன பிறகு அலுப்பினால் மேரி கண்களை மூடியத்தனிக்கையில், ஆப்ரஹாம் நர்ஸிடம் பேசிக்கொண் டிருந்த வார்த்தைகள் அவளுடைய செவியில் விழுந்தன.

''பையன் பெரிய மீனைத் தானிருக்கிறான்; அவன் எனது நீண்ட கால் ஒன்றையும், மேரியின் குட்டைக்கால் ஒன்றையும் சுவீகரித்துக்கொள்ளவில்லையே?''

பையனை மீனென்றால் என்ன பொருள் என்ற சிந்தனையில் மேரி கண்ணயர்ந்தாள். குழந்தையின் கால்களைப்பற்றிய பேச்சும் அவ்வளவு ஹாஸ்யமாக இல்லை. ஆனால் தனது முதல் குழந்தையைக் கையில் தாங்கிக்கொண்டு, முன் நெற்றியில் வேர்வை துளிர்க்க நிற்கும் ஒரு புருஷனிடமிருந்து வேறென்ன தான் எதிர்பார்க்க முடியும்?

எலிஸபெத்தும் ஃபிரான்ஸிஸ்ஸும் முறையே அவளை கவனித்துக்கொண்டார்கள். இருவருக்குமே தங்கள் குழந்தை

களை விட்டு விட்டு வர இயலாதபோது, ஸ்ரீமதி பிளட்ஸோ வந்து மேரியையும், குழந்தையையும் குளிப்பாட்டுவாள். எலிஸா ஃபிரான்ஸிஸ் பிற்பகலில் வருவாள். மேரியின் மற்ற தோழிகளும் ஏதாவது பரிசுகளுடன் வந்தார்கள். அறை முழுவதும் புஷ்பங்களும், பழங்களும், சஞ்சிகைகளும், குழந்தைக்கான துணிமணிகளுமாக நிறைந்தன.

பல மாதங்களுக்கு முன்னமேயே பெட்ஸி கொடுத்திருந்த ஆர்டரின்பேரில் பாரிஸிலிருந்து ஒரு கட்டு ஃபிரெஞ்சுப் புத்தகங்களும் வந்தன. குழந்தை பிறந்த மூன்றும் நாள் மேரி கேட்டாள் :

'' உங்கள் அப்பாவின் பெயரான 'தாமஸ்' என்பதையே குழந்தைக்கு இட விரும்புகிறீர்களா ?''

'' இல்லை !''

'' அப்படியானால் ராபர்ட் என்று என் அப்பா பெயரை வைக்கிறேன்.''

'' இதோ பார் மேரி, நான் ஸ்பீடுக்கு வாக்களித்திருக்கிறேன்.....என் முதல் குழந்தைக்கு அவன் பெயரான ஜோஷுவா என்ற பெயரையை வைப்பதாக.....'

'' ஜோஷுவாவா ? ஸ்பீட் தன் குழந்தைக்கு அப் பெயரை வைத்துக்கொள்ளட்டும் ! இப்போது மாஸ்டர் ராபர்ட்டை எடுத்து இங்கே கொண்டுவாருங்கள் ; அவனுக்கு ஆகார நேரம் வந்துவிட்டது !''

அவள் இரு ஜன்னல்களுக்கும் இடையிலிருந்த நாற்காலியில் காற்றுட அமர்ந்திருக்கையில் மேலேயிருந்த பெரிய மணி அடித்தது. வாசலில் யாரோ வருகிறார்கள் என்பதற்கு அடையாளமல்லவா அது ? அதேபோல் யாரோ மேலே ஏறிவரும் காலடி ஓசை. மேரி எழுந்தாள்.....அவளுடைய தந்தை கதவண்டை நின்றார். அவருடைய தலை, அவள் நினைவுக்கு மீறி நரைத்திருந்தது ; தாடை உருண்டு காலரில் புதைந்திருந்தது ; அவர் முகம் முழுவதுமே முறுவல். மறுவினாடி அவள் அவர் அணைப்பில் புகுந்தாள்.

'' ஏனப்பா, நீங்கள் வருவதுபற்றிக் கடிதமே எழுதவில்லை ?''

'' அந்த அவகாசத்தை மூட்டை கட்ட உபயோகித்துக் கொண்டேன் ; கிடைத்த முதல் காரில் பிராங்போர்ட்டுக்குப் புறப்பட்டுவிட்டேன்.'' அவர் குரல் இன்னமும் தழுதழுத்தது. ஆனால் நான்கு வருஷப் பிரிவுக்குப் பிறகு இருக்கக் கூடிய அதிகப்படியான இனிமை அதில் ஒலித்தது. ''நான் குழந்தையைப் பாக்கலாமா ? அவன் டாடு வம்சத்தைக் கொண்டிருக்கிறானா, லிங்கன் வம்சத்தையா ?''

'' இப்போது அவன் ஆகாரத்தில்தான் நாட்டம் கொண்டிருக்கிறான் ! அவனுக்கு உங்கள் பெயரைத்தான்

வைத்திருக்கிறோம்.'' அவள் குழந்தையைத் தொட்டிலிலிருந்து எடுத்தாள். ''பதினான்கு குழந்தைகளைப் பெற்ற உங்களுக்கு அவனை எப்படிப் பிடிப்பதென்று தெரியுமென்றே எண்ணுகிறேன்'' என்று சிரித்தாள்.

வெகு நேரம் கழித்துத்தான் ராபர்ட் டாடு குழந்தையைக் கீழே விட்டார். விட்டு விட்டு தமது மற்ற மூன்று பெண்களையும், லிங்கனையும்பற்றி விசாரித்தார்.

'' உங்கள் விருப்பத்திற்கு மாறுகவே நடந்திருந்தாலும், அவரை உங்களுக்குப் பிடிக்குமென்றே நம்புகிறேன்..... இது விசித்திரமில்லையா ?'' என்றாள் மேரி.

'' புளூகிராஸ் இளைஞர்களை யெல்லாம் நீ ஒதுக்கியதை நினைக்கையில், இவனிடம் ஏதாவது தனித் தகுதி இருக்கத்தான் வேண்டும்.''

'' தனித் தகுதி என்பதற்குத் தனி ரகம் என்று அர்த்தமென்றால், அவர் அப்படித்தான்.'' அவளது சிரிப்பில் பூர்ண நம்பிக்கையில்லை ; அதுவும் ஆன் நடந்துகொண்ட விதத்திற்குப் பிறகு !

ஆப்ரஹாம் அதே சமயம் தோளில் கோட்டும், புழுதி படிந்த பூட்ஸுமாக உள்ளே வந்தான்.

அவனுடைய சராயின் அடியில்கூட மண் படிந்திருந்தது; அதோடு, வேர்வையால் நனைந்த சட்டையும் பரட்டைத் தலையும்.

''இதோ உங்கள் மாப்பிள்ளை !'' என்று மேரி மொழிகையிலேயே, இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இருவரது பார்வைகளிலும் நம்பிக்கையில்லை. '' அப்பா, இந்த அசுரக்கை பந்து-ஆட்டக்காரர்தாம் உங்களுடைய புது மாப்பிள்ளை ! இந்த வெயிலில் மணிக்கணக்கில் பந்துகளை எறிவதைவிட வேறு நல்ல காரியம் எதுவும் ஏனோ அவருக்குத் தெரியாது.''

தன் கோட்டுப் பையிலிருந்து, பழைய கால் உறைகளால் செய்யப்பட்ட பந்து ஒன்றை எடுத்து, அதைப் பார்த்துக் கொண்டே ஆப்ரஹாம் சொன்னான் :

'' எப்போதாவது ஓர் ஆட்டமாவது ஜெயிக்க முடிந்தால், நான் இந்த வெப்பத்தைப் பொருட்படுத்தமாட்டேன். அதற்காக இதுவரை, சிறுவன் ராபர்ட்டைக் காலேஜுக்கு அனுப்ப போதுமான தொகையைச் செலவிட்டிருப்பேனே என்னவோ ? ஆனாலும், நான் ஒரு நல்ல ஆட்டக்காரனாக மாற முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை.''

'' ஒரு சமயம் நீங்கள் கிளாரீஸ் குரோவைச் சேர்ந்த தடியர்களைக்கூடத் தோற்கடித்தீர்களாமே? இருந்தாலும் எப்படி நீங்கள், அப்படிப் பயில்வான் ஆனீர்கள் என்பது எனக்கு இன்னும் சந்தேகம்தான்.''

ஆப்ரஹாம் சிரித்தான் : ''எனக்குப் பழைய கதை யொன்று நினைவு வருகிறது : யரோ ஒருவன் வேட்டையாடும் போது மற்றவர்கள் யாவரையும்விட அதிகமான கோழிகளை சுட்டுக்கொண்டு வந்தானும். இத்தனைக்கும் அவனிடம் ஒரு துருப்பிடித்த துப்பாக்கி தானிருந்தது ; வேட்டை நாயும் கிடையாது. ஆனால் எப்போதும் சுமக்க முடியாமல் கோழிகளைச் சுமந்துகொண்டு தான் வேட்டையிலிருந்து திரும்பினான். இதைக் கண்ட அவன் நண்பன் ஒருவன் 'அதெப்படி, ஜேக் ?' என்று அவனைக் கேட்டான். ஏனெனில் நண்பனுக்கு வேட்டையில் ஒரு கோழிகூடக் கிடைப்பதில்லை. ஜேக் உடனே அவன் காதோடு வாய் பொருத்தி, 'மெள்ள வேலி ஓரத்தில் மறைந்துகொண்டு கூடைச் செடிபோல் சப்தம் செய்தால் போதும் ; கோழிகள் தாமே வந்துவிடும்' என்றானும் ரகசியமாக.''

மாமனும், மாப்பிள்ளையும் சிரித்து விட்டுக் கை குலுக்கினார்கள். கணவனிட மிருந்து ஒரு ஹாஸ்யக் கதை யைக் கறந்துவிட்ட பெருமையில் மேரி மகிழ்ந்துபோனாள்.

மறு நாள் மாலை டாக்டர் ஜான் டாடு தம் சகோதரருக் காக ஒரு குடும்ப விருந்தை நடத்தினார். முதல் தடவையாக மேரியும் அன்று வெளியே புறப்பட்டாள். இறுக்கமான உள் ரவிக்கையை மறுபடி அணிய ஏற்பட்ட இந்த வாய்ப்பு அவளுக்கு உவப்பாக இருந்தது. அழகாகத் தோன்ற விரும் பிய அவள், விறைப்பான உள் பாவாடைமீது நீலக் கவுனை அணிந்துகொண்டாள். தலையில் மூத்துக்களைப் பதித்துக் கொண்டாள். அவளுடைய கண்கள் எழில் சுடர் வீசின; கன்னங்களில் வண்ண மெருகு ஏறியிருந்தது. மாடிப் படி களில் இறங்கும்போது ஆப்ரஹாம் அவளைத் தூக்கிச்செல்ல முன் வந்தான்.

ஆனால் அவள் கணவனின் கைகளைப் பற்றிக்கொண்டு நடந்தே வரமுடியும் என்றாள்.

அவளும், ராபர்ட்டும்தான் அன்றைய விருந்தில் பிர தானமாக விளங்கினார்கள். அவள் தந்தை தன் சகோதரரை யும் அவரது பிள்ளைகளையும் பார்த்துப் பதினைந்து வருஷங்க ளாவது இருக்கும். எனவே யாவரும் களிப்போடு குலாவி னார்கள். இடையில் ஆன் பேசினாள் :

''மேரிக்குக் குழந்தை பிறந்தது அதிசயமில்லையா...? இல்லாவிடில் அப்பா ஸ்பிரிங்ஃபீல்டையே பார்த்திருக்கமாட் டார் !''

தொடர்ந்து ஒரு மௌனம். எலிஸபெத்துக்கும், ஃபிரான் ஸெஸ்ஸுக்கும் குழந்தைகள் பிறந்தபோது மட்டும் ராபர்ட் ஏன் வரவில்லை என்று குத்தலாகத்தான் ஆன் இப்படிப் பேசி னாள் என்பதை யாரும் கவனிக்கவில்லை. ஆனால் அவள்

வெற்றி சிறிது நேரம்தான். உடனே ராபர்ட் டாடு தன் சட்டையிலிருந்து மூன்று ஆபீஸ் காகிதங்களை எடுத்து, மண மான தமது மூன்று பெண்களிடமும் கொடுத்தார். மேரி தன்னிடம் கொடுக்கப்பட்ட தஸ்தாவேஜைப் படித்து, ஸ்பிரிங்ஃபீல்டுக்கு மூன்று மைல் கிழக்கேயுள்ள எண்பது ஏக்கர் நிலத்துக்குத் தான் சொந்தக்காரி என்பதை உணர்ந்தாள்; அவற்றின் மதிப்பு ஆயிரம் டாலர்களுக்குக் குறையாது!

மறுநாள் மாலை சாப்பாட்டிற்குப் பிறகு, தன் கணவனும் தந்தையும் உட்கார்ந்து உரையாடுவதைக் கவனித்துக் கொண்டிருந்தாள் மேரி. வரப்போகும் ஜனாதிபதித் தேர்தல், டெக்ஸாஸுக்காக அமெரிக்கா மெக்ஸிகோவுடனும், ஒரேகானுக்காக பிரிட்டனுடனும் சண்டையிடுமா இடாதா என்பது பற்றியெல்லாம் அவர்கள் விவாதித்தனர். இறுதியில் மெல்ல ராபர்ட் சொன்னார்:

''எலிஸபெத்துக்கும், ஃபிரான்ஸிஸுக்கும் தந்தது போல் நான் மேரிக்குத் திருமணப் பரிசு ஒன்றும் கொடுக்க வில்லை. ஆப்ரஹாம்! நான் மாதந்தோறும் அவளுக்கு ஒரு பத்து டாலர் அனுப்பினால் உனக்கு ஆட்சேப மில்லையே? இளம் பெண்கள் 'கன்னு பின்னு' வென்று ஏதாவது வாங்கிக் கொண்டு திருப்தியடைவார்கள்!'' அதோடு நிறுத்திய அவர், விங்கன் குறுக்கிட்டுவிடுவானே எனப் பயந்தவர் போல் உடனேயே தொடர்ந்தார்: ''துணிகளும், நகைகளும், கைப்பணமுமாக மேரிக்கு அதிகச் செல்லம் கொடுத்து வளர்த்து, நான் அவளை ஓரளவு கெடுத்தும் விட்டேன். காரணம், அவள் என்மீது காட்டிய அள்வற்ற அன்புதான்!''

கணவனின் முகம் கறுத்து, உதடுகள் அதிருப்தியுடன் உருண்டதை மேரி கவனித்தாள். ஆனால் அவள் என்னவோ கணவனின் கடன்களையும், சிக்கனத்தையும்பற்றி அப்பாவிடம் கூறவில்லை. எனவே அவள்மீது குற்றம் என்ன? ஆப்ரஹாமும் அவள் முகத்தில் இந்த நிலையையே கண்டான். உடனே அவனுடைய முகத்தில் தோன்றிய கடுகடுப்பு மறைந்தது; மேஜைக்கு எதிரேயிருந்த இரு டாடுகளையும் பார்த்து அவன் புன்னகை புரிந்தான்.

5

செப்டம்பர் மாதம் பிறந்து ஒரு வாரத்திற்கெல்லாம் ஆப்ரஹாம் டிரெமாண்ட், ஹேஞ்வர், புளூமிங்டன், கிளின்டன், அர்பானா முதலிய ஊர்களுக்கு முகாம் சென்றான். ஆனால் ஒரு தடவையாவது பல நாட்கள் சேர்ந்து அவன் வெளியே தங்கவில்லை. இடையில் ஓரிரு நாளைக்காவது

குதிரை மீதேறி, மேரியையும் குழந்தையையும் காண வந்து விடுவான். ஆனால் பிறந்த இரு மாதங்களுக்குள்ளேயே குழந்தை தாய்ப்பாலைத் துறந்துவிட்டதால் சற்று எடை குறைந்து போனான். அத்துடன் இரவில் அதிகமாகக் கத்தவும் ஆரம்பித்ததால் மேல் மாடியில் குடியிருந்தவர்கள் புகார் செய்தனர். மேரி டாக்டர் வாலெஸ்ஸை அழைத்தாள்.

'மேரி! குழந்தைக்கு ஒய்வே கிடைப்பதில்லை போலிருக்கிறதே. அதனால்தான் அவன் சாப்பிடுவதில்லை. அவன் எப்போதும் விழித்திருக்கக் காரணம்.....?'

''அந்த மணி ஓசைதான், வில்லியம். அர்த்த ராத்திரி வரை அது அடிக்கிறது; பிறகு மீண்டும் நாலு மணிக்கெல்லாம் ஆரம்பமாகிவிடுகிறது.....குழந்தைக்கு அது சகஜமாகி விடுமென நினைத்தேன்.....ஆனால் அது எனக்கே பழகிப்போகவில்லையே.....''

''மேரி, ஏன் சில சாமான்களை மட்டும் எடுத்துக் கொண்டு ஆப்ரஹாம் வரும் வரை நீ எங்களுடன் வந்து தங்கக்கூடாது?

''நன்றி வில்லியம்; ஆனால் எனக்கென்று ஓர் இடம் தேட வேண்டாமா?''

அன்று முதலே மேரி, ராபர்ட்டை ஸ்ரீமதி பிளட்ஸோவிடம் விட்டுவிட்டு, வீடு பார்க்கும் வேலையில் மூழ்ந்தாள். சதுக்கத்திலிருக்கும் பிரைட்டன் என்ற வீட்டுத் தரகன் மேரிக்கு இரு வீடுகளைக் காண்பித்தான். ஒன்று, விலை அதிகமான பெரிய செங்கற் கட்டடம்; மற்றது சிறியதாக மூன்று அறைகளும், ஒரு சமையற்கட்டும் மட்டுமே கொண்ட மேலடுக்கற்ற வீடு. இவற்றைத்தவிர ஸ்பிரிங்ஃபீல்டில் வாடகைக்கு வேறு வீடுகளே காலியில்லை என்றான் பிரைட்டன். இப்போது ஸ்ரீமதி லிங்கன் வீடு ஒன்றை வாங்குவதற்கே விரும்பினாள்.....?''

''நாங்கள் வாங்கத்தான் போகிறோம்!'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டே திரும்பினாள் மேரி. 'அப்பா கொடுத்த எண்பது ஏக்கர் நிலத்தையும் விற்றுவிடுகிறேன். ஆப்ரஹாமுக்கு அது பிடிக்காது. ஹெளகன் மாளிகையைப் பற்றியதுபோல எங்களுக்குள் சச்சரவு வரும். ஆனால் குழந்தையின் சௌக்கியம் முக்கியமில்லையா?'

அவளுக்கு மூச்சுத் திணறி, தொண்டையும் அடைத்தது. கணவனுடன் பிளவுபடுவதைத் தடுக்கவேண்டுமென்பதை அவள் அறிவாள். அவர்களுடைய இன்பம்தான் அவள் வாழ்வில் முக்கியமானது. அடுத்த இரு நாட்களில் ராபர்ட்டின் உடம்பு சரியாகாவிடில், வில்லியம் அழைத்தபடி அங்கே போய்த்தான் தங்கவேண்டும். ஆப்ரஹாம் திரும்பியதும், மீண்டும் ஹோட்டலுக்கு வந்து விடலாம். அவர்களுக்கு

மணமாகி ஒரு வருஷமாகிவிட்டது; அவனுக்குக் கவலையே அளிக்கக்கூடாதென்று, தன் வார்த்தைகளிலும் செயல்களிலும் வெகு கவனமாக இதுவரை இருந்திருக்கிறாள் மேரி. கவலை சந்தேகங்களைத் தோற்றுவிக்கும்; அது ஒன்றே அவர்களுடைய இன்பத்திற்கு நஞ்சாகும்!

மறுநாள் சாயங்காலம் நாலாவது தெருவிலுள்ள ஒரு வீட்டின்முன் ஏதோ வண்டி நின்றது. சிறு குடும்பம் ஒன்று அவ்வீட்டிலிருந்து சாமான்களை வெளிப்படுத்துவதையும் மேரி கண்டாள். அக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தியிடம் சென்று விசாரித்ததில், அந்த வீடும், அதிலுள்ள தட்டு முட்டு சாமான்களும் சேத் டின்ஸ்லே என்பவருக்கு விற்கப்பட்டு விட்டதாகத் தெரிந்தது. பிறகு மேரி அதன் உள்ளே நுழைந்தாள். இடைகழிக்குப் பின்னல் சமையற் கட்டு; அங்கே எம்பரர் ஸ்டவ் ஒன்றிருந்தது. மறு புறத்தில் இரண்டு படுக்கை அறைகள். அவற்றில் ஒன்றில் அச்மா நகரிக் கட்டிலும், மேஜை யொன்றும் கிடந்தன; மற்றது வர்ணப் பூச்சுக்கூட இல்லாமல் காலியாக இருந்தது.

டின்ஸ்லேயின் கடைக்குக் கடுகி நடந்தாள் மேரி. சுவர்க் காகிதங்கள் பட்டுத்துணிகள் ஆகியவை விற்கும் கடை அது. சேத் டின்ஸ்லே ஒரு வியாபாரி மட்டு மல்ல சிறிது லேவாதேவியும் கூடச் செய்வார். மேரி மேல்மூச்சு வாங்க ஒரே துடிப்புடன் அவரிடம் தன் தேவையை விவரித்தாள்.

"சரி.....ஸ்ரீமதி லிங்கன், நான் அந்த வீட்டை விற்பதாகத் தானிருந்தேன்.....ஆனால் அது உங்களுக்குப் பிடித்திருக்குமானால்....."

"ஓ.....மிஸ்டர் டின்ஸ்லே! அந்த வீடு எனக்கு அவசரமாகத் தேவை. குடிபோனதும் நானே அதை நன்கு சரிப்படுத்திவிடுகிறேன். வாடகை எவ்வளவு கேட்பீர்கள்?"

டின்ஸ்லே தமக்குள் கொஞ்சம் கணக்குப்போட்டு விட்டுச் சொன்னார்: "தட்டுமுட்டு சாமான்கள் உள்பட மாசம் ஐந்து டாலர்கள்!"

நேரம் மெல்லக் கழிந்தது; அவளுக்கு ஆவல் ஜ்வரம். இருப்பினும் அர்பஞவிலிருந்து ஆப்ரஹாம் திரும்பிய பிறகும், அவன் நன்கு குளித்துவிட்டு வரும்வரை தன் மனசைக் கட்டுப்படுத்திக்கொண்டாள். பிறகு ஒரே மூச்சில் குழந்தையின் உடல் நிலைமைபற்றியும், இடையிடையே அச்சிறிய வீட்டைப் புகழ்ந்தும் அது சிக்கனமானது என்ற உண்மையையும் சொல்லி முடித்தாள்...

ஆப்ரஹாம் அவளை வாரி அணைத்து ஆவல் மிக்க வாயால் அழுத்தி முத்தமிட்டான்.

"ஜூரியை அசைக்கும்படி வேண்டுகோள் விடுத்து விட்

டீர்கள், வக்கீல் டாடு! நாளைக் காலையில் முதல் காரியமாக அங்கே மாறிவிடுவோம்...''

''நன்றி நீதிபதியவர்களே!'' என்று மொழிந்தாள் மேரி.

* * *

மஞ்சளும் சிவப்பும் கலந்த திரைச் சீலைகளையும், படுக்கை அறைக்கான உறைகளையும் மேரி தைத்துப்போட்டாள்; கூடத்தில் ஓவியங்களைத் தொங்கவிட்டாள். புத்தக அலமாரிகளைச் சுவற்றிலே மாட்டி தன் சாய்வு மேஜையையும் ஒழித்து வைத்தாள். ஆப்ரஹாமின் எழுதும் மேஜையும், வீட்டிலிருந்த மற்ற விளக்குகளும் மட்டும் அவர்களுடையவை. குழந்தை இப்போது நன்கு உறங்கி, உணவும் உட்கொண்டதால், அதன் எடை அதிகரித்தது. ஆயினும், நாலு மாதங்களாகியும்கூட அவன் இன்னமும் முகம் பார்க்கவில்லை. தன் கை அசைவுகளைப் பார்க்கும்போது ஏனோ அவன் தனது இடது கண்ணை மூடிக்கொண்டான். எலிஸபெத் என்னவோ இது சரியாகிவிடும் என்றே சொன்னாள். மேரிக்கு எம்பரர் ஸ்டவ்வை உபயோகிப்பதில் தேர்வு இல்லாவிட்டாலும், எட்வர்ட்ஸின் சமையலறையில் எலிஸபெத்துக்கு உதவி செய்த அனுபவத்தில் முதல் சில நாட்களில் எப்படியோ ரொட்டியைச் சுட்டு, மாமிசத்தையும் வாட்டிச் சமைத்து விட்டாள்.

நல்ல வேளையாக உணவைப் பற்றி ஆப்ரஹாம் சலித்துக்கொள்ளாதது அவளுக்கு ஆறுதலாக இருந்தது. நாள் முழுவதும் சமைப்பது, தைப்பது, பாத்திரங்களைக் கழுவுவது, வீட்டைத் துடைப்பது, குழந்தையைக் கவனிப்பது ஆகிய வேலைகளைச் செய்தபின் அவள் களைத்துப் போனாள்; படுக்கப்போகுமுன் கணப்பின்முன் அமர்ந்து ஒரு மணி நேரம் படிப்பதோடு அவள் திருப்தியுற வேண்டியிருந்தது. ஸ்பிரிங்ஃபீல்டில் இம்மாதிரி வீட்டுக் காரியங்களைத் தானே செய்வதென்பது சற்றுக் கௌரவக் குறைவுதான். எனவே ஒரேகான் அகதிகளைப்போல் இவர்களும் தனித்து விடப்பட்டார்கள்.

மேரி அதற்காகக் குறைப்படவில்லை; சமூகம் மதிக்கும் அளவுக்கு அவளுடைய அந்தஸ்து உயரும்போது, அவளே அந்தஸ்தின் உதாரணமாகிவிடுவாள்!

ராபர்ட் நன்கு வளர்ந்தான்; ஆனால் ஆறு மாதங்களாகியும் தன் கையிலுள்ள பொம்மையின்மீதுகூட அவன் பார்வை ஏனோ நிலைக்கவில்லை. மேரி மனம் கலங்கினாள். ஒரு நாள் பிற்பகலில் அவனை ஆகாரம் கொடுக்கக் கையில் எடுத்தபோது, அவனுடைய இடது கண் ஓர் ஓரமாகச் சொருகியிருந்ததைக் கண்டாள். உடனே இதயம் துடிதுடிக்க

அவனைப் படுக்கையில் கிடத்தி, ஒரு சிவப்புப் பந்தை அவன் முன்னே அங்குமிங்கும் ஆட்டி, அவனுடைய விழி அசைவைக் கவனித்தாள். என்ன செய்தும் குழந்தையின் இடது விழி நடுக் கண்ணுக்கு அப்பால் நகரவில்லை!

வேதனையால் அவள் உள்ளம் விண்டது. வேகமாக ராபர்ட்டுக்கு உடை அணிவித்து, ஒரு கம்பளித் துண்டால் போர்த்தித் தோளில் போட்டுக் கொண்டு வாலெஸ்ஸின் மருந்துக் கடைக்கு விரைந்தாள்.

வாலெஸ்ஸும், டில்லரும் தங்களுடைய கடையின் ஒரு மூலையில் புதிதாக ஒரு சோடா ஊற்றை நிறுவியிருந்தார்கள். மறுபுறத்தில் பெருங்காயம், மார்பியா, மருந்து வேர்கள் முதலியவை நிறைந்த ஜாடிகள். கடையின் நடுவில் சதுர மான ஒரு கறுப்பு ஸ்டவ்; அதைச் சுற்றிலும் அரை டஜன் பிரம்பு நாற்காலிகள். ஆப்ரஹாம் உள்பட, வம்பளக்க வரும் புருஷர்கள் யாவரும் அங்கேதான் அமருவார்கள்.

தோளில் குழந்தையுடன் வந்த மேரியைக் கண்ட டாக்டர் வாலெஸ் மேஜையில் பதிந்திருந்த பார்வையை அதிசயத்துடன் உயர்த்தினான். அவனது மேஜைமீது மேரி குழந்தையைக் கிடத்தினாள்.

''வில்லியம்! எனக்கு உண்மை தெரியவேண்டும்; குழந் தையின் கண்ணில் ஏதோ கெடுதல் இருக்கிறது, இல்லையா!''

''அது தான்... தசை நார்களில் ஒன்று சம நிலை தவறியுள்ளது.''

''அப்படியென்றால்? மாறி இருக்கிறது என்கிறாயா.....?

''அது அந்த விளைவைத்தான் கொடுக்கிறது.'' மேரியின் நெஞ்சம் குமைந்தது. ''ஓ வில்லியம்! அது ஒரு நாளும் சரியாகாதா?''

''இது ஒரு வித பிறவிக் குறை, மேரி; இந்நிலை எப்படி ஏற்படுகிறதென்று புரிவதில்லை. ஆனால் இதற்கு நீ பழகிக் கொண்டு தானாக வேண்டும்.''

''ஆப்ரஹாமின் கண்கள் அதிக வேலையின்போது... தலைவலியுடன்.....மாறுவது போல் தான் பாபியின் கண் களும் இருக்குமோ?''

''இல்லை.....இல்லை.'' டாக்டர் இடைமறித்தார். ''பலமுள்ள தனது மற்ற கண்ணினால் பார்ப்பது குழந்தைக்குப் பழக்கமாகிவிடும். ஆப்ரஹாமின் கண்கள் சிலசமயம் செங் குத்தாக இடம் மாறுகின்றன; அவன் அதிக வேலை செய்யும் போது, பார்வை நிலை பெயர்ந்து தலைவலியையும் கொடுக் கிறது.''

அவள் நாற்காலியில் புதைந்து, கைகளால் தன் முகத் தைப் பொத்திக்கொண்டு, மனமார அழுதாள், வில்லியம் அருகில் நின்றவாறு நிதானமாகப் பேசினான்:

''மேரி! நீ கலங்கக்கூடாது. உன் உடம்பையும் நீ சிரமப்படுத்திக்கொள்ளத் தகாது என்பதை நினைவில் வைத்துக்கொள்.''

* * *

அவர்களுடைய கல்யாணத்தை நடத்திவைத்து, குழந்தை ராபர்ட்டுக்கு 'பாப்டிஸ்'மும் செய்து வைத்த பூஜ்யர் டிரஸ்ஸர், அவர்களை ஒரு ஞாயிறன்று உணவுக்கு அழைத்தார். அன்று மழைபெய்து ஓய்ந்திருந்தது. இருந்தாலும் அவர்கள் பூஜ்யர் டிரஸ்ஸரின் லிப்ரெரியில் வசதியாக அமர்ந்தார்கள். ஆப்ரஹாமின் மதப்பற்றைப்பற்றிப் பேசுகையில் அவர் அவனை எபிஸ்கோபல் பற்றுக்கு மாற்ற முயன்று கொண்டிருந்தார். மேரி பிரதி ஞாயிறன்றும் எட்வர்ட்ஸ் குடும்பத்தினருடன் சேர்ந்து பிரார்த்தனைக்குச் செல்லுவாள். கணவனுக்குத் தெரியாமலேயே அவள் வருஷ முழுவதுக்கும் சந்தாவைக்கூடக் கொடுத்திருந்தாள்.

மத குரு டிரஸ்ஸரின் வீடு ஆப்ரஹாமைக் கவர்ந்தது. கைத்திறன் நிறைந்த அழகான அதன் மரக் கட்டடத்தையும், பீரோக்களையும் அவன் மேரிக்குக் காட்டினான். அவர்கள் வீடு திரும்பும் வழியில், ஃபிரான்ஸெஸ்ஸின் வீட்டில் குழந்தையை எடுத்துக்கொள்ள நின்றனர். அப்பொழுது அவன் ஆவலுடன் கேட்டான்:

''அது அழகாகச் சமைந்த கட்டடம் இல்லையா, மேரி? ஒரு நூறு வருஷமாவது நிலைக்கும்!''

அவளுக்கு ஏனோ அந்த வீடு பிடிக்கவில்லை. குறுகலாகவும், இருண்ட சிறு அறைகளுடனும், முப்பட்டையாகவும் இருப்பதுபோல் தோற்றியது. இருந்தாலும் ஆப்ரஹாமின் எண்ணத்திற்கு ஏன் மாறு சொல்லவேண்டும் என்ற நினைவில் ''நல்ல வசதியான வீடுதான்!'' என்றாள்.

சொந்தமான தங்களது நான்கு அறைகளில் வளைய வரும் கணவனைக் கண்ட மேரிக்கு, அவன் கூடக் குடும்பத் தலைவன் ஆவதை விரும்புவதுபோலவே தோன்றியது. அவன் மட்டும், 'அவசியத்துக்கு மேல் செலவு ஒன்றும் செய்யாதே' என்று சொல்லிக் கொண்டே வந்தான். அவனும் வெளி ஊர் செல்லுகையில், ஹோட்டல் செலவு, குதிரைச் செலவு இவற்றைத்தவிர வேறு ஒரு காசுகூட விரயம் செய்ய மாட்டான். தனக்கென்று தனியாக அவனுக்கு வேறு எந்தச் செலவினமான பழக்கமும் இல்லை.

புத்தாண்டு பிறந்ததைத் தொடர்ந்து ஒரு நாள் ஆப்ரஹாம் படுக்கை அறைக்குள் வந்து, அவளுடைய அலங்கார மேஜையண்டை நின்றதைக் கவனித்த மேரி திரும்பினாள். இதுவரை அவள் கண்டிராத ஒரு முகபாவம் அவன் முகத்

தில் எழுதப்பட்டிருந்தது. கண்களில் பிரகாசம்; உதட்டில் ஒரு இதமான சிரிப்பு. அவன் தன் கைகளை அவள் தோள்களின் மீது வைத்து, முழங்கைகளை அவள் மார்பில் பின்னி, தன் கன்னத்தை அவளுடைய கன்னத்தின் மீது ஒட்டினான். தன் அதரங்கள் அவனுடைய அதரங்களின் மீது பொருந்தும்படி மேரியும் முகத்தை இசைவாகத் திருப்பிக் கொண்டாள்.

"நமக்கு ஒரு வீடு வாங்கியிருக்கிறேன், மோலி! இது வரை யோசித்துக்கொண்டிருந்தேன்; இப்போதுதான் விற்பனை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டேன்!"

"வாங்கி விட்டீர்களா...? எந்த வீடு...? எங்கே..?"

"பூஜ்யர் டிரஸ்ஸரின் வீடு. எனக்கு அதை மிகவும் பிடித்து விட்டது. உன்னைக் கூட ஒரு நாள் கேட்டேன்; உனக்கும் பிடித்திருக்கிறது என்றுயே, நினைவிருக்கிறதா...?"

அவள் நினைவு சுழன்றது: 'மதகுருவின் வீடு... எனக்கு அது பிடிக்கவில்லையே. அழகற்ற, குறுகலான வீடு அது... மரியாதைக்காக ஏதோ சொல்லப் போய்... வீட்டையே வாங்கியாகி விட்டதே!'

"பூஜ்யர் டிரஸ்ஸர் அதைக்கட்ட ஆயிரத்து ஐந்நூறு டாலராவது செலவழித்திருப்பார்" என்று தொடர்ந்தான் ஆப்ரஹாம். "நான் அதற்கு எழுநூறு டாலர் ரொக்கமும், லோகனிடம் கட்டிவரும் எனது சீட்டுப்பணம் முந்நூறும் தரப்போகிறேன்."

அவன் அவளை நாற்காலியிலிருந்து தூக்கி இறுக அணைத்துக் கொண்டான்.

"இந்த ஒரே காரியத்திற்காக நமது திருமண நாள் முதல் நான் பணம் சேமித்து வந்தேன்: வீடு வாங்கவேண்டும் என்ற உன் விருப்பத்தைப் பூர்த்திசெய்வதற்காக! அதனால் தான் நீ இந்த வீட்டிற்காகச் செலவு செய்வதையும், விருந்துகள் வைப்பதையும் நான் விரும்பவில்லை. தினமும் பத்து சதம் செலவழித்துக் கைப் பந்து ஆடுவதைக் கூட நிறுத்தி விட்டேன்..."

அவள் கண்களில் நீர் மறைத்தது. எவ்வளவு தவறுகவும், தரித்திர புத்தியுடனும் அவள் அவனைப் பற்றி நினைத்திருந்தாள்! இவ்வளவு நாட்களும் அவன் அவளைப்பற்றித் தானே நினைத்துக்கொண்டு இருந்திருக்கிறான்! அந்த மற்றொரு மேரி என்ன சொன்னாள்? 'ஒரு பெண்ணினுடைய இன்பமெனும் சங்கிலியை இணைக்கும் சிறு கரணை ஒன்று தான் அவனிடம் இல்லை' என்று. ஆனால், அவன் எங்கே அந்த முதல் மேரியைக் காதலித்தான்? அவன் இவளை நேசிக்கிறான்; எனவே இவள் தன் உடலில் உயிருள்ள வரையில், அவனுடைய காதலைச் சந்தேகிக்கக்கூடாது!

ஆனால் பூஜ்யர் டிரஸ்ஸரின் வீடு பிடிக்கவில்லை யென்று அவனிடம் எப்படிச் சொல்வது? அது அவனுடைய அன்புக்கு ஈடற்ற செய்கையாகாதா? மேரி புது வீட்டுக்குச் செல்வாள்; அங்கே சந்தோஷமாகவும் இருப்பாள்; ஒரு புது கட்டம் ஆரம்பம்.

6

ஏறாயிறன்று மாலை அவளும் ஆப்ரஹாமும் நகரின் தென் கிழக்கு மூலையிலிருந்த தங்கள் புது வீட்டைக் காணச் சென் றார்கள். தெருவிலிருந்து மூன்று படிகள் உயரத்திலிருந்த மூன் கதவினருகில்நின்றாலே, அரசாங்க மாளிகையை இணைக் கும் திறந்த வெளிகளை அவளால் காணமுடிந்தது. கதவை இடித்ததும் ஒரு பணியாளன் வந்து திறந்தான். இருவரும் ஆறடி நீளமே இருந்த இருண்ட ரேழிவழியே செல்லுகையில் குறுகிய மாடிப்படிகளையும் கண்டார்கள். மேரி வலதுபுறம் திரும்பி மதகுருவின் லிப்ரெரியைப் பார்த்தாள். அதுதான் குடும்பத்தினர் அளவளாவுவதற்கான இடமாக இருக்கத் தகுதியானது. பதினறு அடி அகலமும், இருபதடி நீளமும் உள்ள பெரிய அறை அது. அங்கே ஒரு கணப்பும், நான்கு ஜன்னல்களும் இருந்தன இரு ஜன்னல்கள் எட்டாவது தெருவையும், இரு ஜன்னல்கள் ஜாக்ஸன் தெருவையும் நோக்கி யிருந்தன. அங்கே வசதியாக ஒரு ஸோபா, சாய்வு நாற் காலிகள், புத்தக அலமாரிகள், எழுத்து மேஜை, நடுவில் பத்திரிகைகள் வைப்பதற்காக ஒரு வட்ட மேஜை இவற்றைப் போடலாமென நினைத்தாள். இதற்கு எதிர் அறையும் அதே அளவுதான். அது தனித்து அமருவதற்கு உபயோகமாகும். அங்கே தரை முழுவதும் கம்பளம் விரித்து, சுவற்றில் ஓவியங் களை மாட்டி, சில நாற்காலிகளையும் கறுப்பு ஸோபாவையும் போடவேண்டும்.

மேலும் அவள் ஊன்றி நோக்கினாள். இவற்றிற்குப் பின் னால் ஒரு படுக்கை அறை. ஆப்ரஹாமுக்கென்று வாங்குவ தாக இருக்கும் ஒன்பதடிக் கட்டிலைப் போடும் அளவுக்கு அது பெரியதாக இல்லை. ஆனால் அவர்களது அச்மாநகரிக் கட்டி லையும், ராபர்ட்டின் தொட்டிலையும் போடப் போதும். சாப் பாட்டு அறை இடைகழிக்குப் பின்னால் இருந்தது. வீட்டின் தென் பாதி கட்டப்படாமல், ஆனால் கூரையிடப்பட்ட 'போர்ச்'சாக இருந்தது. உணவு அறைக்குப் பின்னால், 'ஸ்டோர் ரூம்' சேர்ந்த ஒரு சமையலறை. மாடியிலிருக்கும் இரு அறைகளில் ஆப்ரஹாம் நடுவில்தான் நிமிர்ந்து நிற்க முடியும்; மற்ற இடங்களில் கூரை தலையைத் தட்டும்.

இவற்றில் ஒன்றை அவள் தைப்பதற்காகவும், மற்றதை அவன் ஒய்வு எடுத்துக் கொள்ளுவதற்காகவும் உபயோகிக்கலாம்.

மே மாத ஆரம்பத்தில் லிங்கன் குடும்பம் ஜாகை மாறியது. அதற்குள் வீட்டுக்கான பணம் முழுவதும் கொடுத்தாகி விட்டது. ஆனால் அங்கே அவர்கள் நிம்மதியாக வாழ ஆரம்பிப்பதற்குள் அரசியல் விவகாரங்கள் தலைதூக்கின. ஆப்ரஹாமின் பெயர் ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்களின் பட்டியலில் இடம் பெற்றிருந்தது. 'விக்' கள் ஹென்றி கிளேயை ஜனாதிபதித் தேர்தலுக்கு நிறுத்தியிருந்தார்கள். டென்னஸியைச் சேர்ந்த கேள்விப்படாத காங்கிரஸ்காரரான ஜேம்ஸ் போக் என்பவரை ஜனநாயகக் கட்சியார் நிறுத்தியிருந்தனர். திட்டப்படி, ஜான் ஹார்டினுக்கு அடுத்தபடியாகக் காங்கிரஸ்ஸுக்கு எட்வர்ட் பேக்கர் நிறுத்தப்பட்டார். நினியனும், மேரியின் பெரியப்பா பிள்ளை லோகனும் ராஜ்ய சட்ட சபைக்கு அமர்த்தப்பட்டார்கள். மார்மோன் தீர்க்கதரிசி ஜோஸஃப் ஸ்மித் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தாமும் நிற்பதாக அறிவித்தார். உடனேயே ஸ்மித்தையும் அவருடைய மார்கோனியர்களையும் இல்லினாய் லிலிருந்து..... ஏன், அமெரிக்காவிலிருந்தே..... வெளியேற்ற வேண்டுமென்று தீவிரமாகி வந்த கூட்டத்திற்கு லிமியன் ஃபிரான்லிஸ் தலைவனானான்.

கோடையோ அல்லது தேர்தல் போராட்டமோ வலுத்து உஷ்ண நிலையை அடைவதற்குள், ஸ்மித்தும் அவரது கையாட்களும் 'நவ்வூ எக்ஸ்போஸிடர்' என்ற பத்திரிகாலயத்தைக் கொளுத்தி, அதன் அச்சு யந்திரங்களையும் மிஸிஸிப்பி நதியில் எறிந்துவிட்டார்கள். இப்பத்திரிகை பிளவுண்ட மார்மோனியர்களால் நிறுவப்பட்டது. இச் செய்கையும், தீர்க்கதரிசியின் தேர்தல் முயற்சியும் இல்லினாய்ஸில் பீதியை உண்டாக்கவே, ஸ்மித்தையும், இந்த நாசவேலையில் ஈடுபட்ட எல்லா மார்மோனியர்களையும் ஸ்பிரிங்ஃபீல்டிலிருந்து நூறு மைல் தூரத்திலிருக்கும் கார்தேஜ் நகர ஷெரீப்பிடம் சரணடையுமாறு உத்தரவிட்டார், கவர்னர் ஃபோர்டு. தொடர்ந்து, சட்டப்படி அவர்கள் விசாரிக்கப்படு முன்னமேயே, புரட்சிக்காரர்கள் சிறைசாலை உடைத்துச் சென்று ஜோஸஃப்பையும், அவர் சகோதரன் ஹைரம் ஸ்மித்தையும் சுட்டுக் கொன்று விட்டனர்!

ஸ்பிரிங்ஃபீல்டு ஸ்தம்பித்து நின்றது; லிமியன் ஃபிரான்லிஸ் படுத்த படுக்கையாகி விட்டான்; ஆப்ரஹாமும் அதே நிலையில் திறந்த கதவிற்கு எதிரே சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தான்.

''எந்தத் தனி மனிதனின் மனச்சாட்சியாலும் தாங்க முடியாத பெரிய பிரச்னை இது'' என்றான் ஆப்ரஹாம் லிங்

ரத்துடன். ''1837-இல் அடிமை ஒழிப்புக்காரர்களுக்கான பத்திரிகை ஒன்றை நடத்துவதற்காக அல்டானுக்குச் சென்ற எலிஜா பி. லவ்ஜாய் என்றவனின் கதை உனக்கு நினைவிருக்கிறதா? அவனுடைய அச்சகங்களும் இரு தடவைகள் கொளுத்தி நாசமாக்கப்பட்டன. இவ்வழியில் அவனைத் தடுக்க முடியாதென்று தெரிந்ததும், கூட்டம் அவனையே இறுதியில் கொன்றுவிட்டது. என் வாழ்வில் நடந்த எதையும் விட அக்கொலை என்னை அசைத்துவிட்டது. அப்போது நான் இக்கட்டுரையை எழுதி, அதையே 'இளைஞர்கள் லீஸியம்' முன்னே பிரசங்கமும் புரிந்தேன்.''

பழைய ''ஜர்னல்'' பத்திரிகைத் தாள் ஒன்றை அவன் மேரியிடம் கொடுத்தான். அவள் படிக்க ஆரம்பித்தாள். அதன் முதல் பாராவில் சுதந்திர ஜனநாயக ஆட்சியை ஸ்தாபித்த எல்லா அமெரிக்கர்களுக்கும் தன் நன்றியைத் தெரிவித்துவிட்டு, அவன் அடுத்துக் கேட்டிருந்தான்:

''கடல் கடந்து எந்த ராணுவ அரக்கனாவது வந்து நம்மைத் தாக்குவான் என்று நாம் எதிர்பார்க்கிறோமா? இல்லை! அப்படியானால் எங்கிருந்துதான் நாம் அபாயத்தை எதிர்நோக்குகிறோம்? நான் கூறுகிறேன்: அப்படி ஒரு அபாயம் நமக்கு நேரக்கூடுமானால், அது நம்மிடையிலிருந்துதான் முளைக்க வேண்டும்.....நமக்கு நாசம்தான் கதி என்றால், அதை ஆரம்பிப்பவர்களும் முடிப்பவர்களும் நாமேதான். நீதிஸ்தலங்களின் முறையான தீர்ப்புக்கு எதிராக மூர்க்கமும் பயங்கரமும் நிறைந்த பேயாட்டம் பரவி வருவதைத்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன்.....''

மேரி அவனுடைய சீரான சிந்தனையைப் புகழ்ந்தாள்; அவன் மேலும் சொன்னான்: ''அதனால்தான் டெக்ஸாஸுக்காக மெக்ஸிகோவுடன் யுத்தம் புரிவதை நான் எதிர்க்கிறேன்; அதுவும் இதைப்போன்றதொரு கூட்டான பலாத்காரச் செயல்தான். பலாத்காரச் செயலினால் எதையும் சாதிக்க முடியாது; அதனால் அழிக்கத்தான் முடியும்; முக்கியமாக அதை ஆரம்பிப்பவர்களே அழிந்துபோவார்கள்.''

கோடை அதிகமாகியபோது தேர்தல் போராட்டமும் உச்ச நிலையை அடைந்தது. பிரதி தினமும் மாலை வேளைகளில் சதுக்கத்திலிருந்த 'லாக் காபின்'ல் ஆப்ரஹாமும், அவனது 'விக்' கட்சிக்காரர்களும் உள்நாட்டு அபிவிருத்தி, வரி நிலை, பாங்கிப் பிரச்னை முதலியவைபற்றி பிரசங்கம் புரிந்தார்கள். ராபர்ட்டைப் பார்த்துக்கொள்ள யாரையாவது அமர்த்திவிட்டு மேரியும் தவறாது இவற்றைக் கேட்கச் சென்றாள். வெகு நாட்களாகவே, அவன் பிரசங்கங்களுக்காக வெளியூர் செல்லுகையில் தானும்கூடச் செல்ல வேண்டுமென்ற ஆசை மேரிக்கு. அது இப்போதுதான்

பூர்த்தியாகியது. வண்டாலியாவில் நடக்கவிருந்த ஒரு மாபெரும் கூட்டத்திற்குக் கணவனுடன் சேர்ந்து போக அவளுக்கும் ஒரு வாரப் பயணம் கிட்டியது.

ஒரு திங்கட்கிழமை காலை, லோகன் குடும்பத்தோடு சேர்ந்து ஒரு பெரிய வண்டியில் அவர்கள் புறப்பட்டார்கள். இவர்களைத்தவிர ஸ்பிரிங்ஃபீல்டு தூது கோஷ்டியில் பலநூறு பேர்கள் இருந்தனர். அவர்களில் பல பெண்கள் வெள்ளை ஆடையும், தொப்பியும் அணிந்து வந்தார்கள். முதல் வரிசையில் நகரத்து பாண்டு வாத்தியக் கோஷ்டி இசை எழுப்பிச் சென்றது. ஹில்ஸ்பரோவில் அவர்களை உள்ளூர் வாத்தியங்களுடன் எதிர்கொண்டழைத்து, மாபிள்ஸ் தோட்டப் பங்களா ஒன்றுக்கு அழைத்துச் சென்றார்கள். அன்றை மாலைக் கூட்டம் கோர்ட் ஹவுஸில் முடிந்த பிறகு, மேரியும் ஆப்ரஹாமும் உள்ளூர் 'விக்' குடும்பம் ஒன்றுடன் தங்கினார்கள். மறுநாள் காலையில் ஊர்வலம் மீண்டும் கிளம்பி, பிற்பகலில் வண்டாலியாவை அடைந்தது.

ஆப்ரஹாம், நாட்டின் பல பாகங்களிலிருந்து வந்திருந்த குடும்பங்களுக்கு மேரியைப் பெருமையுடன் அறிமுகம் செய்வித்தான். ஆருயிரம் 'விக்' கட்சிக்காரர்கள் கூடியிருந்தனர்; அவர்களில் ஆயிரம் பேர் பெண்கள். மேரி, நகர் வழியே ஓர் ஊர்வலத்தை முன்நின்று நடத்திச் சென்றாள்; போர்க்கும், இறைச்சியும் பரிமாறினாள்; சதுக்கத்தில் கூடாரங்களிலும், மரத்தடிகளிலும் அமர்ந்து டன் கணக்கில் பிரசங்கங்களைக் கேட்டாள்; சந்தோஷமாகவும், சகஜமாகவும் எல்லோருடனும் பழகினாள். அவளுக்கு யாவரையும் பிடித்தது; மற்றப் பெண்களும் அவளை விரும்பினார்கள். புருஷர்கள் மேரியை அரசியல் விஷயங்களை நன்கு அறிந்தவளாகவே கருதினார்கள்; அத்துடன் ஹென்ரி கிளேயுடன் அவளுக்கு நீண்டநாள் சிநேகமானதால், அவரைப்பற்றிப் பேசும்படியும் கேட்டார்கள்; 'விக்' கட்சியில் ஒரு முக்கியமானவளாகக் கருதப்பட்டு தனக்குக் கிட்டிய இத்தகைய கவரவங்களை மேரி அநுபவித்து மகிழ்ந்தாள். ஸ்பிரிங்ஃபீல்டுக்குத் திரும்பியதும், நெருக்கமானவர்களுக்கு விருந்துகள் வைத்து, அதன் மூலம் தனது ஸ்தானத்தை வலுப்படுத்திக்கொள்ளவும் நிச்சயித்தாள்.

இரண்டு வாரங்களுக்குகெல்லாம் எட்வர்டு பேக்கர் காங்கிரஸுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; நினியனும், மேரியின் பெரியப்பா பிள்ளை லோகனும் ராஜ்ய சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

'விக்' கட்சிக்காரர்களின் வெற்றி இம்மட்டும்தான்; நவம்பரில் நடைபெற்ற ஜனதிபதித் தேர்தலில் இல்லினாய்ஸ் உள்பட நாடு முழுவதிலும் ஜனநாயகக் கட்சிக்கே பெரும் பாலான வெற்றி. போட்டி பலமாக இருந்தது. மேரி

லிமியனின் கசப்பான வார்த்தைகளை நினைவுபடுத்திக்கொண்டாள்: ''அதனால்தான் நான் அரசியலை வெறுக்கிறேன்; இழந்தவனுக்கு ஒன்றுமேயில்லை!'' அவளுக்கு ஆவல் மூண்டது: வாஷிங்டனில் ஜனநாயகக் கட்சியின் ஆட்சி வந்த பிறகு, இன்னும் இரு வருஷங்களில் காங்கிரஸ்ஸுக்கு ஆப்ரஹாமின் முறை வருகிறதே; அப்போது ஸாங்கமன் ஜில்லாவிலும் ஏழாவது ஜில்லாவிலும் அவனைத் தேர்ந்தெடுக்கும் அளவுக்கு ஆதரவு எஞ்சியிருக்குமா? இக் கவலையை அவளால் வாய்விட்டுச் சொல்லமுடியவில்லை. சொன்னால், சுயநலக்காரி என்ற குற்றச்சாட்டு வந்துவிடும். ஆனால் எந்த மனைவிதான் கணவனது முன்னேற்றத்திற்கு ஆசைப்படுவதில்லை? உலகில் அது சாதாரணமான சொந்த உயர்வையோ, தாழ்வையோ பற்றிய விஷயமல்ல; அதற்கும் சற்று மேலானது. ஒரு மனிதனின் நிறைவு அது! தன் கணவன் மிகமிக மேம்பட்டவன் என நினைப்பதில் என்ன தவறு? அல்லது மேம்பட்ட அவனது சாமர்த்தியத்தை உபயோகித்துக்கொள்ள வேண்டுமென்று நினைப்பதுதான் தவறு? அவனுக்குத் தன்னைப்பற்றியுள்ள அபிலாஷைகளைவிட அவளுக்கு அவனைப் பற்றியுள்ள அபிலாஷைகள் ஒன்றும் அதிகமில்லை.

ஆனால் அபிலாஷை மட்டும் போதுமா? இல்லை, சாமர்த்தியம்தான் போதுமா? இல்லினாய்ஸில் குறைந்த ஆதரவுள்ள ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்கள்; வாழ்வு முழுவதும் தங்களது லட்சியத்திற்காக உழைத்துவிட்டு, இப்படித் தோல்வியைத்தான் அவர்கள் அநுபவிக்க வேண்டுமா?

* * * * *

ஜனாதிபதித் தேர்தலில் தோல்விகண்டது முதல், ஆப்ரஹாமுக்குத் தன் கூட்டுத் தொழிலைப்பற்றிய கலக்கம் அதிகமாகியது. லோகன், லிங்கன் இவர்களது கம்பெனிக்கு இல்லினாய்ஸில் நல்ல மதிப்பு இருந்ததால், அவனைத் திருப்தியுடன் இருக்கச் செய்வதற்கு மேரி அரும்பாடு பட்டாள். வருஷக் கடைசியில் இதுபற்றி அவனுடன் பேச அவளுக்கு வாய்ப்பும் கிடைத்தது:

''அநேகமாக வாஷிங்டன் செல்வோமென்று நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்; இச்சமயம் பார்த்து ஒரு நல்ல கம்பெனியிலிருந்து பிரிந்துபோகலாமா, ஆப்ரஹாம்? நாம் வாஷிங்டன் போக நேர்ந்தால், இங்கே வேலைகளைப் பார்த்துக்கொண்டு, நமது வருமானத்தை அதிகப்படுத்த லோகன் நமக்குத் தேவைப்படுவான். உங்களுக்குப் பிறகு அவன் காங்கிரஸ்ஸுக்குப் போக நேர்ந்தால், அப்போது உங்கள் இஷ்டப்படி நீங்கள் ஆபீஸை நடத்திக்கொள்ளலாம்.''

இவ்விஷயமாக திடீர் முடிவு எதுவும் செய்வதில்லையென்று அவன் ஒப்புக்கொண்டான்.

ஆனல் அடுத்து நிகழ்ந்த சம்பவம் அவள் வாயைப் பிளக்க வைத்துவிட்டது. பழுப்பான புது உடை அணிந்து ஒரு நாள் அவள் எலிஸபெத்தைக் காணச் சென்றபோது, எலிஸபெத் அவளே மௌனமாகத்தான் வரவேற்றாள்.

"ஏன் மேரி, நிஜம்தானு? ஆப்ரஹாம் லோகனிட மிருந்து பிரிந்து, வில்லியம் ஹெர்ண்டனுடன் கூட்டாகச் சேர்ந்துவிட்டானுமே?"

"இருக்காது, எலிஸபெத். ஆப்ரஹாமின் ஆபீஸில் சட்டம் பழகும் மாணவனல்லவா ஹெர்ண்டன்?"

"போன வாரம் அவன் சட்ட லைஸென்ஸ் பெற்றுவிட்ட தாக நினியன் சொல்கிறார்."

மேரியின் அடிமனம் துடித்தது; அவள் வீடு திரும்பி, ஜன்னலோரமாகக் கிடந்த நாற்காலியில் அமர்ந்தாள்; மன மிருந்த நிலையில் அவளுக்குச் சமைக்கவேண்டுமென்றுகூடத் தோன்றவில்லை. தூரத்தில் சதுக்கத்திலிருந்து வயல்களைத் தாண்டிக்கொண்டு ஆப்ரஹாம் வருவது தெரிந்தது.

இடுப்பில் ஒரு கையை வைத்துக் கொண்டு முழுப் பாதத்தையும் தரையில் சமமாக ஊன்றித் தூக்கி, நடந்து வந்துகொண்டிருந்தான் அவன். கூடத்தில் கோட்டையும், தொப்பியையும் மாட்டிவிட்டு அறைக்குள் அவன் வரும்வரை அசையாமல் அமர்ந்திருந்தாள் மேரி.

"உங்கள் கூட்டுத்தொழில் விஷயம் நிஜந்தானு, ஆப்ரஹாம்?" என்று அவள் கேட்டாள்.

"லோகன், தன் பிள்ளை டேவிட்டைக் கம்பெனியில் நுழைக்க விரும்புகிறான்; மூன்று பேர்களுக்கு அங்கே அவசிய மில்லை என்பது அவன் கருத்து. அதனுல் எனக்கு ஒரு புதுக் கூட்டாளி தேவையாக இருந்தது . . ."

"அதற்காக ஸ்பிரிங்ஃபீல்டின் கடைசி மனிதனைப் பொறுக் கினீர்களாக்கும்..... இந்த இல்லினுய்ஸ் முழுவதிலும் அவன் ஒருவன்தான் உங்களுக்கு உதவமுடியும், இல்லையா .... ?"

"அப்படியில்லை; எனக்குத் தேவையான சரக்கு பில்லி யிடம் இருக்கிறது."

"என்ன சரக்கு?" அவள் குரல் உயர்ந்தது. அதைக் குறைக்க அவள் முயலவும் இல்லை. "அவனிடம் என்ன தன்மானம் இருக்கிறதா, தொழிலில் நல்ல ஸ்தானம் இருக் கிறதா, இல்லை ஸ்பிரிங்ஃபீல்டு சமூகத்தில் நல்ல அந்தஸ்துதா னிருக்கிறதா?"

"பில்லி நல்ல உழைப்பாளி; சிறந்த சட்ட நிபுணனும் கூட. கணக்கு வழக்குகள், சாமான்யமான அன்றுடப் பேப் பர்கள் இவற்றிலிருந்து எனக்கு விடுதலை அளிக்கவும், அவற் றைத் தானே கவனித்துக்கொள்ளவும் ஒப்புக்கொண்டிருக் கிறான்....."

''இந்த ராஜ்யத்தில் உள்ள எத்தனையோ பயிற்சிபெற்ற வக்கீல்கள் உங்களோடு கூட்டுச் சேரக் காத்திருக்கையில், ஏன் இப்படி நீங்கள் பிடிவாதமாய் உங்கள் யோக்கியதையைக் குறைத்துக்கொள்ளவேண்டும்?''

''என் யோக்கியதை என்னிடமிருந்துதான் வெளிப்பட வேண்டும்; நானெப்படி சட்டம் பேசுகிறேன் என்பதிலிருந்து அது தீர்மானிக்கப்படும். அது என் கூட்டாளியிடமிருந்து வராது.'' அவன் குரல் மிகவும் கூர்மையாகிக் கொண்டு வந்தது. ''எட்டு வருஷங்கள் நான் ஜூனியர் கூட்டாளியாக இருந்தாகிவிட்டது; அக்காலத்தில் கற்றுக் கொண்டும், உத்தரவுகளைப் பெற்றுக்கொண்டும் உழைத்து விட்டேன். வயதாகி வரும் எனக்கு இனியும் அந்த நிலை சரிவராது. இன்று முதல் நான்தான் ஸீனியர் கூட்டாளி; பில்லி நான் விரும்பும் ஜூனியர் கூட்டாளியாக இருப்பான்.''

அவனுடன் வாதாடிப் பயனில்லை; அவன் மனம் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டது. ஆனாலும் அவள் தனது சீற்றத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

''உங்களுடைய எந்தத் தனித்தன்மை அவனை விரும்புகிறது? ஒரு மாசம் முன்புதான் தெருவில் குடித்துவிட்டுச் சண்டை போட்டதற்காக அவனைப் போலீஸார் இழுத்துச் சென்று இரவு முழுவதும் சிறையில் அடைத்திருந்தார்கள். ஸ்பிரிங்ஃபீல்டின் மகா மட்டமான கூட்டத்தாருடன் அவன் பழகுகிறான்; நம்ம இருவர் குடும்பங்களும் ஒரு நாளும் நெருங்கிப் பழகமுடியாது.''

''ஏன் மேரி? நான் இன்னமும் மோசமான பின்னணியிலிருந்து வந்தவன்தானே? புளூகிராஸ் ராஜவம்சத்தில் பெண் கொள்ள எனக்குத் தகுதி இருந்ததென்றால், பில்லியும் அவன் மனைவியும் எப்படி நமக்குத் தாழ்ந்துபோவார்கள்?''

இந்தப் பலமான வாதத்துக்கு அவளால் ஒரே பதில் தான் கொடுக்க முடிந்தது: ''நான் வீண் ஜம்பம் படைத்தவள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அது தவறு. உங்கள் நிலைமைக்குக் குந்தகம் வருமென்று நான் எண்ணுகிறேன்...'' பேசப் பேச அவள் குரல் தணிந்ததே ஒழியக் கடுமையாகவில்லை. ''வேறு சிறந்தவர்கள் கிடைக்கையில், அவனை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள், ஆப்ரஹாம்?''

''வேறு சிறந்தவர்கள் கிடைக்கையில் என்னை ஏன் தேர்ந்தெடுத்தாய், மேரி?''

''நீங்கள்தாம் சிறந்தவர்.''

''பில்லியும் அப்படித்தான்; அவனுக்கு ஒரு வாய்ப்பைக் கொடு.''

பில்லி என்ற பெயரைச் சொல்லுகையில் அவன் குரலில்

அன்பு ததும்புவதைக் கண்டாள் மேரி. நட்பின் காரணமாகத்தான், அவள் பேச்சை அவன் புரிந்துகொள்ளவில்லை யென்றும் மேரிக்குப் புலனுயிற்று. 'மோலி,' 'பில்லி' என்ற இரு செல்லப் பெயர்களைத்தான் அவன் உபயோகித்திருக்கிறுன். அவனுடைய கூட்டாளிகளான ஸ்டுவர்ட், லோகன் உள்பட ஸ்பிரிங்ஃபீல்டில் மற்ற எவரையுமே அவர்களுடைய குடும்பப் பெயரால்தான் குறிப்பிடுவான். ஆப்ரஹாமின் அன்பில் இந்த இளைஞனுக்கும் பங்கு இருந்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆனலும், இந்த நட்பு அவள் கணவனுக்கு முக்கியமானது போலும்?

அவள் மென் குரலில் தொடர்ந்தாள்: ''நிச்சயம் அவனுக்கு மூன்றில் ஒரு பங்கு அளிக்கமாட்டீர்கள்?''

''வருமானத்தில் பாதி என்று முன்பே சொல்லி விட்டேன்.''

''பாதியா ... ? எதற்காக?''

''இல்லாவிடில் சிறிது நாட்களில் அவனும் என்னைப் போலவே அதிருப்தி அடைவான். எனக்குப் பிடிக்காததை நான் பிறர்மீது சுமத்தமாட்டேன்.''

அவளைப் பார்வையிலிருந்து விலக்க விரும்புபவள்போல் கைகளை எழுப்பி நீட்டினுள், மேரி. பிறகு மெதுவாகப் பின்னே இழுத்துக்கொண்டாள். கையைப் பிசைந்தாள்.

''..... பாதி வருமானம் ..... இவ்வளவு வருஷங்கள் உழைத்துப் பூர்வாங்க ஏற்பாடுகள் செய்த பிறகு .....? அதுவும் ஒரு குடிகாரக் கூட்டாளிக்கு .....''

அறையின் உஷ்ணம் அதிகமாகியது.

''எனது சட்டக் கூட்டாளியைத் தேர்ந்தெடுப்பதை எனக்கே விட்டுவிடு, மேரி. என் வாழ்வின் இந்த அம்சத்தில் நீ குறுக்கிடக்கூடாது; உனக்கு இந்த உரிமையை நம் திருமணம் அளிக்காது.''

''வாஸ்தவம்'' என்றுள் அவள் கடுங்குரலில். ''ஆனல் உங்களைப்பற்றி அபிலாஷைகள் கொள்வதற்கும், சில விஷயங்களில் உங்களுக்கு உதவி, யோசனைகள் கூறுவதற்கும் எனக்கு உரிமையிருக்கிறது. இப்போது உங்கள் வாழ்க்கையில் எனது சிரத்தை எவ்வளவுவரை என்னும் எல்லையை எப்படித் தீர்மானிப்பது?''

அவன் குன்றிப் போனன்.

''கொடுமையாகப் பேசுகிறுய், மேரி. எந்த விஷயத்திலும் நீ எனக்குச் சரிசமானமானவள். உன் அபிப்பிராயத்தை நான் எப்போதும் விரும்பிக் கேட்கிறேன்; மதிக்கிறேன். ஆயினும் இவ்விஷயத்தில் மட்டும் நீ என் தீர்மானத்தை மதிக்கவேண்டும் .....''

சிறிது நேரம் இருவரும் மௌனமாக அமர்ந்தார்கள்;

பிறகு ஆப்ரஹாம் கூடத்திற்குச் சென்று தன் தொப்பியையும் கோட்டையும் எடுத்து அணிந்து கொண்டு டவுனுக்குத் திரும்பிச்சென்றான்.

இதுதான் அவர்களுடைய முதல் பெரிய சண்டை; தன்னை நிதானப்படுத்திக் கொள்ள அவளுக்கு வெகு நேரம் ஆகியது. பிறகுதான் அவன் சாப்பிடாமலேயே ஆபீஸுக்குப் போய்விட்டது நினைவுக்கு வந்தது. அவள் வெட்கினாள். கணவனிடம் எவ்வளவு கோபம் கொண்டாலும் சரி, அவனைச் சாப்பிடச் செய்யவேண்டியது மனைவியின் கடமை யில்லையா?

7

அந்த வருஷத்துக் குளிர்காலம் மிதமானதாக இருந்தது. மேரி ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வந்ததிலிருந்து இதுவரை வந்துபோன குளிர்காலங்களிலெல்லாம் இது மிதமானது. ஏப்ரல் மாதச் சீதோஷ்ணம் போல் நாட்கள் இளம் வெப்ப மாக இருந்தன. சட்ட சபை திறந்ததும், நகரமே வியக்கும் படியாகப் பெரிய விருந்து ஒன்றை எலிஸபெத்தும் நினியனும் நடத்தி, ஸ்பிரிங்ஃபீல்டின் சமூகக் கேளிக்கையைத் துவக்கி வைத்தார்கள். மேரி இந்த விருந்தை மிகவும் வரவேற்றாள். ஏனெனில் தொடர்பு விட்டுப்போன பல முக்கியமான நண் பர்களை மீண்டும் சந்தித்து நட்பைப் புதுப்பித்துக்கொள்ள இது வாய்ப்பளித்தது. லிங்கன் ஹெர்ண்டன் கூட்டுத் தொழில் விஷயம் அறிவிக்கப்பட்டபோது பலருடைய புருவங் கள் உயர்ந்தன. ஆனால் ஆப்ரஹாம் இன்னமும் லோகனுடன் கூட்டாகவே பல வழக்குகளை நடத்தி வந்தான். தவிர, அவன் வெளியூர் செல்லுகையில் லிங்கன் ஹெர்ண்டன் என்ற கூட்டுப் பெயரில் தொழில் புரியவில்லை. அங்கேங்கே நகரங் களின் சிறந்த வக்கீல்களைச் சேர்த்துக்கொண்டதால், அவன் யோக்கியதையோ, வருமானமோ ஒன்றும் பாதிக்கப்பட வில்லை. ஸீனியர் கூட்டாளியாக இருந்தது ஆப்ரஹாமுக்கு வசதியாக இருந்தது; ஹெர்ண்டன் பல வேலைகளைத் தானே கவனித்துக் கொண்டதால், அவனுக்குப் படிக்கவும் எழுதவும் அதிக நேரம் கிடைத்தது.

சட்ட சபை திறந்த திங்கட்கிழமை மாலை ஆப்ரஹாம் தன் நாற்காலியில் சாய்ந்த வண்ணம், பத்திரிகையின் பக்கங் களை வேகமாகப் புரட்டிக் கொண்டிருந்தான்.

"உங்களுக்கு எங்கேயோ போக வேண்டிய அவசரம் போலிருக்கிறது; நீங்கள் இந்த நிமிஷத்தில் நாற்காலியை

வெறுப்பது போல் யாரும் செய்து நான் கண்டதில்லை'' என்றாள் மேரி.

''இதோ பார் மோலி, இன்றிரவு எங்களுடைய முதலாவது வெட்டிக் கூட்டம் கூட இருக்கிறது.....சகபாடிகளின் உரத்த சிரிப்புகளைக் கேட்க என் காதுகள் ஏங்குகின்றன'' என்றான் அவன்.

''அப்படியானால் சீக்கிரமே போங்கள்; இந்த நிலையில் உங்கள் தோழமை எனக்குச் சரிப்படாது.''

அவன் படியிறங்கிச் செல்லுகையில், 'அவர் மீது எனக்கு ஒரு புகாரும் கிடையாது' என நினைத்த மேரி தனக்குள் புன்முறுவல் பூத்துக் கொண்டாள். அவன் தினமும் கணப்புக்கும் அடுப்புக்கும் வேண்டிய விறகுகளை வெட்டிப் போட்டான்; பசுக்களைப் பால் கறந்தான்; லாயங்களைச் சுத்தப் படுத்திக் குதிரைகளையும் தேய்த்தான்; கிணறு வெட்டவும், வேலி போடவும் கூட ஏற்பாடுகள் செய்திருந்தான்.

மேரியும், தான் சிறந்த கிரகராணியாக இருந்ததில் பெருமையே கொண்டாள்: அவளது சாமான்கள் அறையில் மாவுகளும், ஊறுகாயும், வடாம் வத்தல்களும், அரிசியும் நிறைந்திருக்கும். அவள் தலைசிறந்த சமையற்காரி இல்லை; ஆனால் பொன் வறுவலாக எப்படிக் காப்பிக்கொட்டையை வறுப்பதென்று அவள் கற்றிருந்தாள்; இம்முறையில் பொடி அதிகம் காணுவதுடன், வாசனையும் அதிகமிருக்கும். பாலைக் கறந்ததுமே உருளியில் வார்த்து எப்படி நல்ல பாலடைக் கட்டிகளைத் தயாரிப்பதெனவும் அறிந்திருந்தாள். குளிர் காலம் முழுவதும் அவள் குடும்பம் புதிய பீச் பழங்களையே உண்டது. ஏனெனில் கடந்த கோடையின்போது, பழுத்த பீச் பழங்களை எப்படிக் கோந்தினால் மூடி, வார்னிஷ் அடித்துப் பதப்படுத்துவது என்று அவள் தெரிந்து கொண்டிருந்தாள். இப்போது அவர்களுக்குப் புதிய பீச் பழம் தேவைப்படும்போது, அதன் மூட்டத்தைப் பிரித்தால் போதும்; வெந்த கோழி முட்டையின் ஓட்டை அகற்றுவது போல!

வீடு, பிரமாதமான முறையில் வரவேற்புகள் அளிக்க, அத்தனை எடுப்பாக இல்லைதான்; கூடமும் சாப்பாட்டு அறையும், சிறிதாகவும் இருண்டும் இருந்தன; இரு அறைகளுக் கிடையில் அனுயாசமாகப் போக முடியாது. இருந்தாலும் இக்குறைகளைத் தனது புளூகிராஸ் எழிலாலும், சாதுரியத்தாலும் மேரி நிவர்த்தித்து விட்டாள். விருந்தாளிகளை அன்போடு கைகொடுத்து முன் வாசலிலேயே வரவேற்பாள்; பிறகு கன்னத்தில் ஓர் இளம் முத்தம்; தொடர்ந்து ஒரு சுவையான கேள்வி!

எப்பொழுதாவதுதான் ஓர் ஜரிஷ் பெண்ணை உதவிக்கு வைத்துக்கொண்டாள் அவள். மற்றப்படி வீட்டு வேலைகளை

யெல்லாம் தானே கவனித்தபோதிலும், எப்படியோ எபிஸ்கோபல் தையல் சங்கத்தின் தலைவிகளில் ஒருவளாகிவிட்டாள். வாரத்தில் பெரும்பாலான நாட்கள், பிற்பகல்களில் பெரிய பண்ணை வண்டி ஒன்று லிங்கனின் வீட்டு வாசலில் வந்து நிற்கும். தனது பெரிய தையற் கூடையுடன் வெளியே வருவாள் மேரி. பண்ணை வண்டியில் வைக்கோல்களுக்கிடையே மெர்லி காங்கிளிங்கையும், மற்றும் பத்துப் பனிரெண்டு கிளப் அங்கத்தினர்களையும் காண்பாள். பிறகு அவளும் ஏறிக் கொள்ளுவாள். வண்டி புறப்பட்டு மற்றொருத்தியின் வீட்டிற்குச் செல்லும்.

ஜூலை மூன்றும் தேதி வியாழனன்று மேரி, தான் கருவுற்றிருப்பதை உணர்ந்தாள். அத்தேதி அவள் மனத்தில் பதிந்து விட்டது. அதற்குக் காரணம், அன்றுதான் அவள் ஆப்ரஹாமிடம் படுக்கையறையில் அந்தரங்கமாக இதைச் சொன்னாள். பிறப்பது பெண்ணாக இருக்குமென்று இருவரும் நம்பினர். பேசிக்கொண்டேயிருந்த அவர்கள் தூங்குவதற்குள் மாதாகோவில் மணிகள்கூட அடித்துவிட்டன. பிறகு சில நிமிஷங்களுக் கெல்லாம் பதிமூன்று பீரங்கி வெடிகளைக் கேட்டதும் மேரி விழித்துக் கொண்டாள்; அதே சமயம் ஆப்ரஹாமின் கண்களும் திறந்து கொண்டன.

''இவ்வளவு கொண்டாட்டங்களும் எனக்கு இரண்டாவது குழந்தை பிறக்கப் போவதை விளம்பரப்படுத்துவதற்குத்தானா? ராணுவத்தினருக்கு எப்படி இவ்வளவு சீக்கிரம் இந்தச் செய்தி தெரிந்தது?'' என்றாள் மேரி.

அவன் அரைத் தூக்கத்தில் சிரித்தான்: ''இதெல்லாம் பாதி உன்னைக் கவுரவப் படுத்தத்தான்; மற்றப் பாதிதான் 'ஜூலை நாலு' விழாவுக்காக ஸ்பிரிங்ஃபீல்டு மக்களை எழுப்புவதற்கு. இவை யாவும் நான் அரசாங்க மாளிகையில் பிரசங்கம் புரிய வேண்டுமென்பதை எனக்கு நினைவுறுத்துகின்றன.''

இரண்டு மணிக்குச் சற்று முன்னடியே லிங்கன் தம்பதிகள் சதுக்கத்துக்கு நடந்தார்கள். அரசாங்க மாளிகை மைதானம் இன்னமும் வேலி போடப்படாமலேயே இருந்தது. அதோடு போர்ட்டிகோவைச் சரிப்படுத்துவதற்காக அங்கே சரளைக்கற்களை வேறு கொட்டியிருந்தார்கள். நூற்றுக் கணக்கான பண்ணை வண்டிகள் அவற்றை ஒட்டி நின்றன.

மேயர் ஜேம்ஸ் காங்கிளிங்கினுடைய புகழ்ச்சியான முன்னுரையையும், ஆப்ரஹாமின் 'மிஸ்டர் சேர்மன்' என்ற வார்த்தைகளையும் மேரி கேட்டாள். பிறகு அவன் தனது இரண்டு மணிப் பிரசங்கத்தைத் தொடங்கினான். நாட்டைப் பிளக்க விழையும் பிரச்னைகளை ஜாக்கிரதையாக ஒதுக்கி விட்டு அமெரிக்க வாழ்க்கையில் ஒற்றுமைகளைத் தோற்றுவிக்கும் சக்திகளைப்பற்றி விவரித்தான். அடிமைத்தனம்,

டெக்ஸாஸ், கலிபோர்னியா சம்பந்தமாக மெக்ஸிகோ வுடன் சண்டை; ஓரேகான் எல்லைத் தகராறு முதலியவை பற்றி அவன் பேசவில்லை. ஆனாலும் அவனுடைய இந்த முன் ஜாக்கிரதை ஒன்றையும் சாதிக்கவில்லை. ஏனெனில், மேரி யின் பெரியப்பா பிள்ளை ஹார்டின் மீண்டும் காங்கிரஸுக்கு நிற்க 'விக்' கட்சிக்காரர்களைச் சரிப்படுத்தி வருவதாகத் தெரியவந்தது. ஆப்ரஹாம் உடனே ஹார்டினைச் சந்திக்க ஜாக்ஸன்வில்லுக்குக் குதிரையை நடத்தினான்; ஆனால் மறு நாளே சுரத்தின்றித் திரும்பியும் வந்துவிட்டான்.

"உன் பெரியப்பா பிள்ளைக்கு ஏனோ என்னைப் பிடிக்க வில்லை. காங்கிரஸுக்கு அடுத்ததாக நானே நிற்கவேண்டும் என்று எங்களுக்குள்ளே செய்துகொண்ட ஏற்பாட்டை அவன் இப்பொழுது மறுக்கிறான். தனது தேர்தல் பிரசாரத் தையும் அவன் ஆரம்பித்து விட்டான்."

மேரியின் பார்வையில் துயரம் கவிந்தது.

"முறைக் கொள்கையை ஸ்தாபிக்க நான் மூன்று வருஷங்கள் உழைத்தேன்" என்று கூறிவிட்டு அவன் கன்னத்தை தடவிக் கொண்டே தொடர்ந்தான். "இருந் தாலும் ஹார்டினுக்கு வேண்டிய நண்பர்கள் இருக்கிறார் கள்; அவன் இத்தடவை அபேட்சகனாக நின்றால், காங்கிரஸ் ஸிலேயே தங்கியும் விடுவான். அத்துடன் மேன்மை தங்கிய ஆப்ரஹாம் லிங்கனின் கதை முடிந்து விடும்."

விஷயத்தை இன்னமும் சிக்கலடையச் செய்ய இதே சமயத்தில் அவள் பெரியப்பா பிள்ளை ஸ்டீஃபன் லோகன் தானும் இப்பொழுதே காங்கிரஸுக்கு அபேட்சகனாக நிற்கப்போவ தாக அவர்களிடம் தெரிவித்தான். 'விக்' கட்சித் தூது கோஷ்டியினருக்கு ஆப்ரஹாமின் கருத்துக்களைத் தெரிவித்து டஜன் கணக்கில் கடிதங்கள் எழுதுவதில் அவளும், அவனும் அன்றைய மாலைப்பொழுதைச் செலவிட்டார்கள்.

"ஜனாதிபதித் தேர்தலுக்கு அபேட்சகனாக நிறுத்தப் பெறுவதில் சிரமமிருக்காது" என்றாள் மேரி வரட்டுக் குரலில்.

அடுத்த 'விக்' கட்சிக் கூட்டத்தில் ஆப்ரஹாமின் பெய ரைப் பிரேரிக்க வேண்டுமென்று மிகவும் கேட்டுக்கொண்ட தன் பலனாக ஸ்டீஃபன் லோகன் அதற்கு ஒப்புக்கொண்டான். ஆனால் ஆப்ரஹாம் ஒரு முறைக்கு மேல் தொடர்ந்து முயற் சிக்கக் கூடாது என்பது அவன் விதித்த நிபந்தனை. இனிமேல் அவளுடைய மற்றொரு பெரியப்பா பிள்ளை ஜானை வழிக்குக் கொணர வேண்டியதுதான் பாக்கி.

அவன் ஏதோ சட்ட விஷயமாக ஸ்பிரிங்ஃபீல்டுக்கு வருகி வரை மேரி காத்திருந்தாள். அவன் ஸ்டூவர்ட் வீட்டில் தங்கி யிருந்ததால் மேரி அங்கே சென்றாள். ஹார்டின் பணக்காரன்

வாழ்வில் வெற்றி கண்டவன்; ராஜ்யப் படையின் தலைவன்; மற்ற பெரியப்பா பிள்ளைகள் எல்லோரையும் விட அழகனும் கூட. அடர்த்தியான கிராப்புத் தலை, முன் தலையில் மட்டும் சிறிது நரைத்திருந்தது; விசாலமான கூரிய கருத்த விழிகள்; ரோமானியர் மூக்கு; வாயும் தாடையும் உறுதியாக இருக்கும். மேரியும் அவனும் தனித்துப் பேசும்படி, ஸ்டீவர்ட் அவர்களைச் சாதுரியமாக முன் கூடத்தில் அமர்த்தி யிருந்தான்.

''ஜான்!'' என்று அவள் ஆரம்பித்தாள்: ''நீயும் பேக்கரும் காங்கிரஸ்ஸில் உங்கள் முறைகளைப் பெறுவதற்காக ஆப்ரஹாம் பொறுமையுடன் காத்திருந்தார். இப்போது அவர் முறை என்று கருதுகிறார்.''

''மேரி! உன் மீது எனக்கு எப்போதும் பிரியம் உண்டு; அதனால் இத்தகராறு நமக்குள் மனக்கசப்பை ஏற்படுத்துவதை நான் விரும்பவில்லை. உன் கணவனுக்காக நான் விலக மறுப்பதில் எனது சொந்தக் காரணம் ஒன்றுமில்லை. காங்கிரஸ்ஸில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு இது ஒரு முட்டாள்தனமான கொள்கை என்ற எனது முடிவுதான் இதற்குக் காரணம். இம்முறைப்படி எந்தத் தனி மனிதனும் தனது வேலையை அறிந்து கொள்ளும் வரைக்கூடக் காங்கிரஸ்ஸில் தங்க முடிவதில்லை; முக்கியமான கமிட்டிகளில் அங்கம் வகிப்பதற்கேற்ற நீண்ட அனுபவமும் அடைய முடிவதில்லை. இந்நிலையில் நம்மில் எவரும் மற்ற அங்கத்தினர்களுக்கு நன்கு அறிமுகமாவதும், அதன் மூலம் நல்ல செல்வாக்குப் பெறுவதும்தான் எப்படி? புதிதாக வரும் காங்கிரஸ்காரன் எதையும் சாதிக்க முடியாது; இந்த மாற்று முறைக் கொள்கையால் இறுதி வரையில் புதிது புதிதாகக் காங்கிரஸ்ஸுக்கு ஆட்கள் வருவதைத் தவிர வேறொன்றும் கிடைக்கப் போவதில்லை!''

''உன் அபிப்பிராயத்தை நான் மறுதளிக்கவில்லை'' என்றாள் மேரி தணிவுடன். ''இல்லினாய்ஸில் சிறிய கட்சி ஒன்றைச் சேர்ந்த எங்களுக்கு ஏழாவது ஜில்லாவின் இந்த ஒரு காங்கிரஸ் ஸ்தானத்தை விட்டால், வேறொன்றுமில்லை. அதனால் தான் அதை மற்ற சிறந்த மனிதர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு.''

''மேரி! உன் கணவன், மக்கள் தங்கள் அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையில் குறுக்கிடுகிறான்.''

அவள் தன் கைகளை அவன் தோளின் மீது வைத்துக் கொண்டு கெஞ்சினாள்: ''ஓ ஜான்! நாங்கள் இவ்வளவு நாட்கள் காத்திருந்தோம்; தயவு செய்து எங்கள் வாய்ப்பை எங்களுக்கு அளித்து விடு!''

ஆப்ரஹாம் ஸுப்ரீம் கோர்ட் திறந்ததும் டிசம்பர் மாச

ஆரம்பத்தில் திரும்பி விட்டான். ஹார்டினுடன் தான் பேசியதை அவள் அவனிடம் கூறவில்லை. மகாநாட்டில் ஜான் ஜே. இது பற்றிச் சண்டையே போடுவான் என்று ஆப்ரஹாம் தீர்மானமாக இருந்தான்.

இத் தகராறுகள் நடக்கையில், அதன் முடிவைப் பற்றிக் கவலை கொண்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்ற டாக்டர் வாலெஸ்ஸின் எச்சரிக்கையைக் கடைப் பிடிக்க அவள் முயன்று கொண்டிருந்தாள். அவளுடைய மற்றொரு கவலை, எங்கே தனது இரண்டாவது குழந்தையும் விழி புரண்டு பிறந்து விடுமோ என்பதுதான்.

இவ்வருஷ விடுமுறையில் ஒரு புத்தாண்டு விருந்தை அளிக்க ஆப்ரஹாம் ஒப்புக் கொண்டபோது அவள் மகிழ்ச்சி அடைந்தாள்; இது கவலைகளிலிருந்து அவள் மனசைத் திருப்பும். எல்லா நண்பர்களும் வீட்டின் திறந்த வெளியில் வரவேற்கப்படுவார்கள் என்று அவள் செய்தி அனுப்பினாள். சாப்பாட்டு மேஜையின் இரு ஓரங்களிலும் வைக்க இரு சர்க்கரைப் 'பிரமிட்'டுகளுக்கு வாட்ஸனின் மிட்டாய்க் கடையில் ஆர்டர் கொடுத்தாள். ஒரு பாத்திரம் நிறைய உரித்த ஆரஞ்சுகளை அழகாக அடுக்கி நடுவில் வைத்து, அதைச் சுற்றிலும் வெள்ளித் தாம்பாளங்களில் வெள்ளைத் திராட்சைகளையும், மற்றப் பழங்களையும் வைத்தாள்.

பிப்ரவரி நடுவில் ஜான் ஹார்டின் வேண்டா வெறுப்பாகக் காங்கிரஸ் தேர்தலிலிருந்து வாபஸ் பெற்றுக் கொண்டு லிங்கன் அத்தேர்தலுக்கு நிற்க இடமளித்தபோது, ஆப்ரஹாம் ஆச்சரியம் அடைந்த அளவு, மேரி ஆச்சரியமடையவில்லை.

மார்ச் மாத மத்தியில் அவளுடைய சொந்த வீட்டிலே, சொந்தப் படுக்கையிலே மேரியின் இரண்டாவது குழந்தை எட்வர்டு பிறந்தான். குழந்தையின் கண்கள் சரியாக இருந்ததைக் கண்ட மேரிக்கு, தனக்குப் பெண் பிறக்கவில்லையே என்ற ஏமாற்றங்கூடத் தணிந்து விட்டது. படுக்கையறையில் கணப்புக்கு முன்னே சிறிய குளிக்கும் தொட்டி வந்தது; குழந்தையின் துணிகளைக் காய வைப்பதற்காக நெருப்பை ஒட்டி ஒரு மரஸ்டாண்டு; அவளுடைய படுக்கையை அடுத்துத் தொட்டில்; இரவில் குழந்தை முணு முணுத்தால், படுக்கையிலிருந்தபடியே அரைத் தூக்கத்திலும் கையை நீட்டி ஆட்டும்படி அது போடப்பட்டிருந்தது. மாடியிலே ராபர்ட்டுக்குப் படுக்க வசதி செய்திருந்தாள்.

ஆப்ரஹாம் அதிகார பூர்வமாக நியமனம் பெற்றுப் பத்து நாட்கள் கூட ஆகவில்லை; ஸிமியன் ஃபிரான்ஸிஸ் 'ஸாங்கமன் ஜர்ன'லில், 'ஆப்ரஹாம் லிங்கன் காங்கிரஸுக்குப் போகிறார்' என்று தலையங்கம் வெளியிட்டு நான்கு

நாட்கள் கூட ஆகவில்லை ; அதற்குள், அமெரிக்கா மெக்ஸிகோவுடன் போர் தொடுத்தது. இல்லினாய்ஸ் முழுவதுமே யுத்த வெறி ; எங்கிலும் தொண்டர்கள் திரட்டுவதற்காகவும், தேசிய உணர்ச்சியைப் பெருக்குவதற்காகவும், பெரிய பொதுக் கூட்டங்கள், பிரசங்கங்கள், அணிவகுப்புக்கள். முதல் இல்லினாய்ஸ் படைக்குத் தலைமைதாங்க ஜான் ஹார்டினை கவர்னர் ஃபோர்டு நியமித்தார்; ஜேம்ஸ் ஷீல்ட்ஸ் நில ஆபீஸ் கமிஷனர் உத்தியோகத்தை ராஜினாமாச் செய்து விட்டு இல்லினாய்ஸ் தொண்டர்களுக்குத் தலைவனானான்.

அவர்களுடைய நண்பன் பேக்கர் காங்கிரஸ்ஸை விட்டு விட்டு, நான்காவது இல்லினாய்ஸ் படையைத் திரட்டித் தலைமை தாங்க முயன்றான்; ஸ்டீஃபன் டக்ளஸ் கூட ராணுவத்தில் சேருவதற்காக ராஜினாமாச் செய்ய முயன்றான். ஆனால் மேரி தன் கணவனிடம் மாத்திரம் இம்மாதிரியாதொரு சூசனையையும் காணவில்லை. யுத்தவெறியைக் கிளப்பிப் பத்திரிகைகளில் லிமியன் ஃபிரான்சிஸ் எழுதிய தலையங்கங்களை அவன் கண்டித்தான். ஜனாதிபதி போக், ஜெனரல் டய்லரை ரியோ கிராண்டிக்கு அனுப்பியதுதான் யுத்தத்தைத் துரிதப்படுத்த உதவியிருக்கிறது எனவும் நம்பினான்.

''நீங்கள் ஐந்தாவது இல்லினாய்ஸ் படையைத் திரட்ட முனையப்போகிறீர்கள், இல்லையா ?'' என்று மேரி சந்தேகத்துடன் வினவினாள்.

''இந்தியர்களைத் துரத்த நான் பிளாக் ஹாக் போருக்குச் சென்றேன்.....ஆனால் இப்போது எனக்கு வயசாகி விட்டது ; யுத்தமென்றால் எனக்குப் பிடிக்க வில்லை ; புரியவுமில்லை. ஸ்பிரிங்ஃபீல்டின் சிறந்த யுவர்களில் பலர் திரும்பி வரப் போவதில்லை என்பதை நினைக்கும்போது என் உள்ளமே ஒடுங்குகிறது. நமது அரசாங்கத்தின் நடத்தை இல்லினாய்ஸ் விவசாயி ஒருவன் சொன்னதை நினைவு படுத்துகிறது : 'எனக்கு நிலங்களின் மீது பேராசையில்லை ; நான் என்னுடைய நிலங்களுக்குப் பக்கத்திலிருப்பதைத்தான் விரும்புகிறேன்' என்றான் அவன்.''

முன்பு 1832-இல் ஆப்ரஹாமை, அவனுடைய முதல் ராஜ்ய சபைத் தேர்தலில் தோற்கடித்தவர்களில் ஒருவரான பீட்டர் கார்ட்ரைட் என்ற மெதாடிஸ்ட் அர்ச்சகரை ஜன நாயகக் கட்சியார் மறுபடியும் அவனுக்கு எதிரே நிறுத்தினார்கள். இல்லினாய்ஸில் கார்ட்ரைட் மிகவும் சக்தி வாய்ந்த பேச்சாளர் பிரதி வருஷமும் ஆயிரக்கணக்கான மைல்கள் சுற்றுப் பிரயாணம் செய்து கூட்டங்களும், 'காம்பு' களும் நடத்துவார். வீட்டுக் கூரை மாதிரி அவர் தலையில் அடர்ந்த சிகை ; பேசும்போது அவரது அகன்ற வாய் தாடை எலும்பு வரை கிழியும்.

கார்ட்ரைட் அபேட்சகராக நிற்பதை அறிந்ததும் ஆப்ரஹாம் கூவினான் : "இது ஓர் அரசியல் பிரசாரமாக இருக்கப் போவதில்லை ; வரிப் பிரச்னை தவிர வேறெதிலும் எங்களுக்குள் வேற்றுமையில்லை. நான் கார்ட்ரைட்டை அறிந்த வரை இது ஒரு மத மறுமலர்ச்சி இயக்கமாக போகிறது. ஜில்லாவில் ஒவ்வொருவருடனும் கை குலுக்க முயல வேண்டியதுதான் என்று நினைக்கிறேன்."

ஒரு வெப்பமான ஞாயிறன்று, ஜூலை ஆரம்பத்தில், அவர்கள் ஸ்பிரிங்ஃபீல்டில் கார்ட்ரைட் நடத்திய முக்கியமான பெரிய கூட்டத்திற்குச் சென்றிருந்தார்கள். கடைசி வரிசையின் கோடியில் அவர்களுக்கு இடம் கிடைத்தது. பூஜ்யர் கார்ட்ரைட் பாவம் செய்பவர்களை நிந்தித்து நெருப்பாகக் கக்கினார்.

"இங்கே ஏன் அவர் பாவிகளைத் தேடுகிறார் என்று எனக்குப் புரியவில்லை" என்று ஆப்ரஹாம் முணுமுணுத்தான். "இவர்கள் எல்லோரும் அவருடைய ஜனநாயகக் கட்சிக்காரர்கள் தாமே !"

இச்சமயத்தில் கூட்டத்திலே லிங்கன் தம்பதி இருப்பதைக் கவனித்து விட்டார் கார்ட்ரைட். ஒரு கணம் லிங்கனை உருத்து நோக்கிய அவர் தம் கைகளை எழுப்பிக் கூவினார் : "புது வாழ்வைப் பெற்று, கர்த்தரிடம் உள்ளத்தைக் கொடுத்து, சுவர்க்கம் செல்ல விரும்புபவர்கள் எல்லோரும் எழுந்திருங்கள் !"

ஒரு சிலர் எழுந்து நின்றனர். "நரகத்துக்குப் போக விரும்பாதவர்கள் அனைவரும் எழுந்து நில்லுங்கள்." இப்போது எஞ்சிய கூட்டமே எழுந்தது. மேரி, மேலும் நன்றாக நாற்காலியில் புதைந்து கொண்டதை அக் கூட்டம் கூர்ந்து நோக்கியது. பூஜ்யர் கார்ட்ரைட் ஆழ்ந்த குரலில் கூவினார்: "நான் விடுத்த அழைப்பைப் பலர் ஏற்றுக் கொண்டதைக் கவனித்தேன். அதோடு ஒருவரைத் தவிர மற்றவர் யாவரும் நரகத்துக்குப் போக விரும்பவில்லையென்றும் தெரிந்து கொண்டேன். மிஸ்டர் லிங்கன் ! உங்களை நான் கேட்கலாமா ? நீங்கள் எங்கே போகப் போகிறீர்கள்?"

ஆப்ரஹாம் மெல்ல எழுந்து, தனது உரத்த கெண்டக்கிக் குரலில் சொன்னான் :

"நான் காங்கிரஸ்ஸுக்குப் போகப் போகிறேன்."

அங்கு கணநேரம் திகைப்பும் மௌனமும் நிலவியது. பிறகு விண்ணை எட்டும்படி ஒரு பெரிய சிரிப்பு. ஆப்ரஹாம் மேரியின் கைகளைப் பற்றி அழைத்துக்கொண்டு கூட்டத்தை விட்டு நகர்ந்தான். அவள் தனக்குள் சிரித்துக்கொண்டாள், ஆனால் ஆப்ரஹாம் ஏனென்று குதூகலம் கொள்ளவில்லை.

''அரசியல் கூட்டத்தை மதக் கூட்டமாக மாற்றுவது மட்ட ரகம்'' என்றான் அவன்.

மேரி தன் கையை அவனுடைய கையுடன் பின்னிக் கொண்டு சொன்னாள்: ''ஆனால் உங்களுடைய அந்த ஹாஸ்யமான பதில்! அது நூறு பிரசங்கங்களுக்குச் சமானம்; பூஜ்யர் கார்ட்ரைட்டை மதப் பிரசாரம் செய்ய விட்டு விட்டு, உங்களைத் தான் அரசியலில் ஈடுபடுவதற்கு வாஷிங்டனுக்கு அனுப்பவேண்டுமென அது நிரூபித்துவிட்டது!''

அவள் சொன்னது சரிதான்; இரண்டே நாட்களுக்குள் இந்தக் கதை ஜில்லா முழுவதும் பரவிவிட்டது: லிங்கன் எப்படி அழகாக கார்ட்ரைட்டைக் கவிழ்த்துவிட்டான் என்பதை மக்கள் சொல்லிச் சொல்லிச் சிரித்தார்கள். அந்த மதகுரு இதைத் தாளாது, லிங்கன் ஒரு நாஸ்திகனென்றும், அதனால் கிறிஸ்தவர்களுக்குப் பிரதிநிதியாகக் காங்கிரஸ்ஸில் இருக்க அருகதையற்றவன் எனவும் ஓர் அறிக்கை விடுத்தார்.

தமாஷ் பண்ணும் நிலைமை மாறியது. பல தினங்கள் ஆப்ரஹாம் சிறிய துண்டுக் கடிதங்களில் ஏதோ குறிப்புகள் எழுதுவதையும், பிறகு அதைத் தொப்பியில் வைத்துக் கொள்வதையும் மேரி கண்டாள். பிறகு அவன் மேஜையண்டை அக் குறிப்புகளுடன் அமர்ந்து, தனக்குத் திருப்தியான சிறு அறிக்கை யொன்று எழுதினான். அதைப் பத்திரிகை ஆபீசுக்கு எடுத்துச் சென்று, அச்சிட்டு, ஏழாவது ஜில்லா முழுவதும் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்தான்:

சக நகரவாசிகளே:

பகிரங்கமாகக் கிறிஸ்துவ மதத்தைக் கேலி செய்பவன் என்று என் மீது குற்றச் சாட்டுப் பரவியுள்ளது. அதற்கு நான் இவ்விதத்தில் பதிலளிக்கிறேன்:

நான் எந்தக் கிறிஸ்தவச் சர்ச்சிலும் சேரவில்லை என்பது உண்மை; ஆனால் வேதங்களில் உள்ள உண்மைகளை நான் ஒருபோதும் மறுத்ததில்லை; எந்த மதத்தையும், முக்கியமாகக் கிறிஸ்தவ மதத்தை அவமதிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் நான் பேசவில்லை.....எந்த மனிதனுக்கும், தான் வாழும் சமூகத்தின் உணர்ச்சிகளை இப்படி அவமதிக்க உரிமையிருக்கிறதென்று நான் இன்னும் நினைக்கவில்லை....

அந்த ஹாஸ்யத்தின் ஊடுருவும் சக்தியோ, பூஜ்யர் கார்ட்ரைட்டின் அரசியல் சாமர்த்தியமின்மையின் எதிரொலியோ, அல்லது ஜில்லாவில் அந்த பெரும்பாலும் 'விக்' கட்சிக்காரர்களே நிரம்பியிருந்ததாலோ என்னவோ, எதுவென்று மேரிக்குத் தெரியாது; ஆனால் ஆப்ரஹாமுக்கு மொத்த ஓட்டுக்களில் ஐம்பத்தாறு சதம் கிடைத்துவிட்டது!

"ஏனெனெ தெரிய வில்லை மேரி, காங்கிரஸ்ஸுக்கு நான் தேர்ந்தெடுக்கப்பட்ட விஷயம், எதிர்பார்த்த அளவுக்கு என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தவில்லை" என்று ஆப்ரஹாம் அன்றிரவு தன் அறையில் குறுக்கு நடை நடக்கையில் அசிரத்தையுடன் கூறினான்.

"அது சாதாரணச் சோர்வு உணர்ச்சிதான், மேன்மை தங்கிய லிங்கன் அவர்களே! பிரசவித்த பின் அப்படித்தான் இருக்கும். நீங்கள் மீண்டும் எழுந்து வழக்கம்போல் நடமாடத் தொடங்குங்கள்; பிறகு உங்களுக்கு ஒரே மகிழ்ச்சியாகத் தான் இருக்கும்" என்று மேரி தாய்மை உணர்ச்சியுடன் கூறினாள்.

8

மூன்றாவது முறையாகக் காங்கிரஸ்ஸுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்டீஃபன் டக்ளஸ் அவர்கள் வீட்டுக்கு வந்தான். மகிழ்ச்சியுடன் அவர்கள் கைகளைக் குலுக்கினான்.

"வாழ்த்துக்கள். உனது வெற்றி குறித்து நான் அடையும் மகிழ்ச்சியை "ரிஜிஸ்டர்" பத்திரிகையில் எழுத விரும்பவில்லை; ஆனால் ஸ்பிரிங்ஃபீல்டில் உள்ள 'விக்' கட்சிக்காரர்கள் யாவரையும் விட ஆப்ரஹாம் லிங்கன் மிகவும் நேர்மையானவன் என்று எப்போதும் சொல்லியிருக்கிறேன்" என்று கூறினான். ஆப்ரஹாம் நகைத்தான். மேரி சொன்னாள்: "உனக்கு ஈடாக நாங்களும் வர இத்தனை காலம் ஆகி விட்டது, ஸ்டீவ்! ஆனால், நாங்கள் வாஷிங்டனை அடையும் போது நீயும் அங்கிருப்பாய் என்பதில் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி."

"லிங்கன்! மெக்ஸிகோ யுத்தம் பற்றி நீ உற்சாகம் காட்டவில்லை என்று அறிகிறேன்; அது தேசிய வீரனுவதற்கு வழியாகாது. தேச பக்தனும், நீதிமானும் ஒரே படுக்கையில் ஒரு நாளும் வசதியாக தூங்கியதில்லை."

ஆப்ரஹாம் தோள்களைக் குலுக்கிக் கொண்டே, "என் கால்கள் வெளியே தொங்காத விதத்தில் இன்னமும் நான் ஒரு படுக்கையைக் காணவில்லை." என்றான்.

மேரி அன்று காலையில் தயாரித்து வைத்திருந்த இனிப்புக் 'கேக்'குகளையும், ஒரு கிளாஸ் 'ஜிஞ்ஜ்'ரையும் சாப்பிட்டுக் கொண்டே, சிகாகோவுக்கு நிரந்தரமாகப் போய் விடப் போகும் தனது திட்டத்தையும், அங்கே ஏரிக் கரை நகரத்தில் சொத்துக்கள் வாங்கியிருப்பதையும் மேரியிடம் விவரித்தான் ஸ்டீஃபன் டக்ளஸ். அத்துடன் வடக்குத்

கலிபோர்னியா விவசாயி ஒருவரின் மகளைத் தான் காதலிப்பதாயும், வரப்போகும் வசந்தகாலத்தில் தங்களுடைய திருமணம் நடக்கலாம் எனவும் கூட அந்தரங்கமாகச் சொன்னான்.

ஆனால் அடுத்தாற் போல் இல்லினாய்ஸ் மாகாண சபை கூடியதும், அவர்கள் காங்கிரஸ்காரனான ஸ்டீஃபன் டக்ளஸ்ஸை அமெரிக்காவின் சட்ட சபைக்குப் பிரேரித்தார்கள். உடனே மேரி '' ஒரு தடவை சட்ட சபைக்குள்ளே புகுந்து விட்டால் தான் அங்கேயே தங்கி விடமுடியுமென்று வெகு நாட்கள் முன்பே அவன் என்னிடம் கூறியிருக்கிறானே'' என்று கூவினாள்.

ஆப்ரஹாம் ஹாலுக்குச் சென்று, முதல் நாள் தனக்கு வந்திருந்த அழைப்பு ஒன்றைத் தொப்பியிலிருந்து எடுத்தான். '' இதைக் கேள், மேரி : கனம் பொருந்திய ஸ்டீஃபன் டக்ளஸ்ஸைக் கவுரவிக்க ஸெனேட் சேம்பரில் ஒரு பாராட்டு விழா நடைபெறும். சிற்றுண்டிகளும் பானவகைகளும் உண்டு. சபை அரங்கில் நடனம். தங்கள், மனைவியாருடன் வரும்படி அன்போடு கேட்டுக் கொள்ளுகிறோம்'' என்று அதைப் படித்தான்.

'' அவனுக்கு ஈடாக நாம் வந்ததெல்லாம் நான்கு மாதங்களுக்குத்தான்.'' என்றாள் மேரி மனச்சோர்வுடன்.

'' மோலி ! இப்போது நான் டக்ளஸ்ஸுடன் தீவிரமாகப் போட்டியிடவில்லை ; எங்கள் இருவருக்குமே அங்கு இடமிருக்கிறது.''

'' இல்லினாய்ஸிலிருந்து இரண்டு ஜனாதிபதிகளுக்கா?''

ஆப்ரஹாம் கிளுக்கினான். '' காங்கிரஸ்ஸுக்குத் தேர்வு பெறுவதற்கே நமக்கு இவ்வளவு காலம் ஆனதைப் பார்த்தால், ஜனாதிபதி ஆவதற்குள் நமக்கு மெதுஸேலாவைப் போல் வயதாகி விடும். ஆனால் எதற்காக எங்களிருவரையும் நீ இப்படி ஒப்பிட்டுப் பார்க்கிறாய் ? ஸ்டீஃபனை மணந்து கொண்டிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று நினைக்கிறாயா?''

'' நான் ஸ்டீவை மணந்திருக்கவே முடியாது. ஏனெனில் அவன் என் கையைக் கோரவில்லை ; நானும் அவனைக் காதலிக்கவேயில்லை '' என்றாள் மேரி அருவருப்புடன். தொடர்ந்து கூறினாள் : '' மன நிலையிலும் சரி, உடற் கட்டிலும் சரி, நாங்கள் தோலோடு பட்டாணி சேர்ந்திருப்பது போல் தான் ஒன்றாக இருக்கிறோம். கண்ணாடியில் தோன்றும் எங்களது பிம்பங்களை வேண்டுமானால் நாங்கள் முறையே மணந்து கொண்டிருக்கலாம். எனவே அவன் சீனாவின் சக்கரவர்த்தியாக இருந்தால் கூட, அவனை மணக்காததற்காக நான் வருந்தக் காரணமில்லை.''

''அவன் சீனுவின் சக்கரவர்த்தியாவதற்குக் காரணமில்லை; ஆனால், என்ஜினீயர்கள் இங்கிருந்து ஜாக்ஸன்வில்லுக்கு ரெயில் பாதை அமைத்தது போல், ஜனாதிபதி மாளிகைக்குப் போக அவ்வளவு நன்முகத் திட்ட மிட்ட வழி அவன் முன்னே இருக்கிறது.''

அவள் கால்களைத் தீர்மானமாகத் தரையில் பதித்துக் கொண்டு ''இறுதி முடிவைப் பற்றி நீங்கள் பந்தயம் வைக்க விரும்புகிறீர்களா?'' என்று கேட்டாள்.

மேரி அப்போது மூட்டைகளைக் கட்டிக் கொண்டு வாஷிங்டன் செல்லத் தயாராகத்தானிருந்தாள்; ஆனால் ஆப்ரஹாம் அங்கே இடம் பெற ஒரு வருஷமாவது ஆகும் போலிருந்தது. இந்த இடைக்காலத்தில் பிரயாணத்திற்கு ஏற்பாடுகளைச் செய்வதுடன், ஒரு முறை லெக்ஸிங்டனில் உள்ள தனது குடும்பத்தாரைப் போய்ப் பார்த்து வரவும் அவள் திட்டமிட்டாள்.

ஆகவே, தனது அவகாசத்தில் பெரும் பகுதியைச் செலவிட்டு, பையன்களுக்குக் கால் உறைகளும், மற்ற உடைகளும் தயாரித்தாள். ஆப்ரஹாம் ஒரு புதிய ஸூட்டும், பூட்ஸ்களும் வாங்கத் தயங்கிய போது, அவள் அழுத்தமாகக் கூறினாள்:

''ஆப்ரஹாம்! நீங்கள் வாங்கித்தானாக வேண்டும்! நான் என் பிறந்த வீட்டிற்குப் போகும் போது, ஏழை உறவினர் ஒருவரையும் அழைத்துப் போக மாட்டேன்.''

சமூகத்தில் தனக்குரிய இடத்தைத் திரும்பப் பற்றிக் கொண்டு விட்ட அவளுக்கு, விருந்துகளைத் தொடர்ந்து நடத்த வேண்டு மென்ற தேவையிருக்கவில்லை. அவர்கள் இருவருமே பணம் சேமிக்க விரும்பினர்கள். ஆப்ரஹாம் தனது நியூ ஸேலம் கடன்களை அடைத்து விட்டு ஒரு சுதந்தர மனிதனாக வாஷிங்டன் செல்ல விரும்பினான். அவளோ, பணத்தைச் சேர்த்து நல்ல வீட்டில் குடியிருக்கவும், பணியாட்களை அமர்த்திக் கொண்டு வாழவும், தன் கணவனை நல்ல பின்னணியில் இருத்தவும் விரும்பினாள். வேலை செய்ய வந்த ஐரிஷ் பெண்கள் சாமான்களைத் தாராளமாகச் செலவழித்ததால், சர்க்கரை ஜாடியையும், மற்ற விலையுயர்ந்த சமையற் சாமான்களையும் பீரோவில் வைத்துப் பூட்டினாள் மேரி. இரவில் கணப்பு அணைந்து விட்டால், ஆப்ரஹாம் அண்டை வீட்டிலிருந்து தணலைக் கொணர்ந்து போடுவதன் மூலம் கிராக்கியான தீக்குச்சிகளைச் செலவிடுவதைக் குறைத்தான்.

ஒரு நாள் காலை ஆப்ரஹாம் ஆபீஸுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கையில் சிறிது பணம் வேண்டுமென்று அவனிடம் கேட்டாள் மேரி. ஆபீஸுக்குப் போனதும் பணத்தைத் தனது புதிய சட்ட மாணவன் மூலம் அனுப்புவதாகச் சொன்னான் அவன். சற்றைக்கெல்லாம் கதவைத் தட்டும் ஓசை கேட்டது; அவள் கதவைத் திறக்கையில் எதிரே நீலக் கண்களும் செம்பட்டைச் சிகையும் படைத்த ஓர் இளைஞன் நின்று கொண்டிருந்தான்.

''ஸ்ரீமதி லிங்கன்தானே நீங்கள்? என் பெயர் கிப்ஸன் ஹெரிஸ். இந்த உறையை மிஸ்டர் லிங்கன் உங்களிடம் கொடுத்து வரச்சொன்னார்'' என்றான் அந்த இளைஞன்.

அவன் குரல் மெதுவாக இருந்தது: தோரணை கண்யமாக இருந்தது. அவள் அவனை உள்ளே அழைத்தாள். அழகாகக் குனிந்து அதை அவன் ஏற்றுக்கொண்டான். பிறகு தான் பல வாரங்களாக லிங்கனிடமும், ஹெர்ண்டனிடமும் சட்டம் கற்று வருவதாகச் சொன்னான். மிஸ்டர் லிங்கனை அவன் நல்ல ஆசிரியராகக் கருதுகிறானா என்று மேரி கேட்டாள். அவன் கண்களில் ஒளி சிதற, தலையைப் பக்கவாட்டில் அசைத்தான்.

''எனக்கு சாட்சிச் சட்டங்கள், அல்லது மற்ற எந்தச் சட்ட நுணுக்கங்கள் பற்றியோ பயிற்சி தேவைப் படும்போது நான் ஹெர்ண்டனிடம் செல்வேன். குறிப்பிட்ட விஷயத்தை எப்படி நேராக அணுகுவது என்று லிங்கன் போதிப்பார். இன்று காலையில்தான் அவர், 'பசுமையான மரத்தைவிட உதிர்ந்த மொட்டை மரமே தம்மைப் பொறுத்தவரை சுவாரஸ்யமானது என்று கூறினார். அப்பொழுதுதான் வான் வுக்கோடுகளின் அழகும், மூண்டு மூடிச்சுக்களின் கோரமும் வெளிப்பட எலும்புக் கூடு காட்சியளிக்கும்' என்றார் அவர். 'பிறகு அது நமது புகழ்ச்சிக்கு உரியதா இல்லையா என்று தீர்மானிப்பது எளிதாகி விடுகிறது' என்றும் கூறினார்.''

அன்று மாலை, ''மிஸ்டர் ஹெரிஸ்ஸை ஞாயிற்றுக்கிழமை சாப்பாட்டிற்கு அழைத்தால் நன்றாயிருக்காதா?'' என்று ஆப்ரஹாமைக் கேட்டாள் அவள்.

''நிச்சயமாக, நான் படிப்பதைக் கேட்க ஒரு புது நபர் கூட இருப்பது நல்லது தான்.''

ஒரு நாற்காலியைத் தலைகீழாகத் திருப்பிப் போட்டு, அதன் மீது சாய்ந்தபடி தரையில் அமர்ந்த ஆப்ரஹாம், காப்டன் ஜான் ஸி. பிரெமாண்ட் என்பவர், புதிய மெலப் பிர தேசங்கள், ஓரேகான், வட கலிபோர்னியா இவற்றிற்குத்

தாம் போய் வந்ததுபற்றி எழுதியிருந்த ரிபோர்ட்டை அனுபவித்துப் படிக்கலானான். இவ்விடங்களுக்குச் செல்லும் வழியிலுள்ள சம வெளிகள், பாறை வழிகள், பயங்கரப் பிராணிகள் இவைபற்றி நல்ல வர்ணனைகளும், வழிகாட்டும் அழகிய படங்களும் இந்த ரிபோர்ட்டுடன் இருந்ததால், ஏற்கனவே மக்கள் மேற்குநோக்கி திரள் திரளாகச் செல்ல ஆரம்பித்திருந்தார்கள். சென்ற வசந்த காலத்தில் மேரிக்குத் தெரிந்த சிலர் கூட ஒரு கூட்டமாக மேற்கு நோக்கிப் புறப்பட்டார்கள். ஸ்பிரிங்ஃபீல்டில் நன்கு தெரிந்தவர்களான ஜார்ஜ் டோனர், ஜேம்ஸ் ரீட் இவர்களுடைய குடும்பங்களின் தலைமையில் அக்கூட்டம் கிளம்பியது. ஆண், பெண், குழந்தைகள் சகிதம் மொத்தம் முப்பத்து நான்கு பேர்கள் சென்றார்கள். குதிரைகளையும், பசுக்களையும் ஓட்டிக்கொண்டு, சாமான்கள், ஆகாரப் பொருள்கள், துப்பாக்கிகள் இவைகளையெல்லாம் வேண்டிய அளவுக்கு அவர்கள் எடுத்துச் சென்றதை மேரி கவனித்திருந்தாள்.

இளைஞன் ஹோரிஸ் அடிக்கடி ஞாயிற்றுக் கிழமைகளில் சாப்பாட்டுக்கு வரலானான். இரு தடவைகள் ஊரில் முக்கிய விருந்துகள் இருக்கையில், ஆப்ரஹாம் வெளியூர் செல்ல நேர்ந்து விட்டது. அப்போது மேரிக்கு ஹோரிஸ் உதவியாகச் செல்லட்டுமென்று சொன்னான் அவன். அதன்படியே அவ் விருந்துகளில் அவன் ஸ்தானத்தை ஹோரிஸ் ஏற்றான்; விருந்து கொடுத்தவர்களது வீட்டில் ஆப்ரஹாமின் பெயர் ஒரு தடவைகூடப் பேசப்படவில்லை.

வசந்தம் வந்தது. மரங்களும் காட்டுச் செடிகளும் முன்கூட்டியே அழகாகப் புஷ்பித்தன. மேரிக்கு இது மகிழ்ச்சியூட்டும் காலமாக இருந்தது. டாக்டர் வாலெஸ் சொன்னது சரிதான்: மன அமுக்கம் இல்லாமல், தினசரிக் குடும்ப அலுவல்களில் மூழ்கிக் கிடப்பதுதான் அவளுக்குத் தேவையாக இருந்தது. தன்னை அவள் நன்கு கட்டுப்படுத்திக் கொண்டு, சிறு கவலைகள், மனவேதனையை அதிகப்படுத்தும் விஷயங்கள், இவற்றிலிருந்து ஒதுங்கிச் சென்று கொண்டிருந்தாள். இன்பமும், நிம்மதியுமாக அந்த நாட்கள் கழிந்தன. ஆப்ரஹாம் பழ மரங்களை நட்டான், அவள் பின்புறத் தோட்டத்தில் பூச் செடிகளை வளர்த்தாள். எதை அவளால் முற்றிலும் ஒதுக்கித் தள்ள முடியவில்லையோ, அதைக் குறைந்த உணர்வுடன் சமாளித்தாள். ஒரு நாள் இடியும், புயலும் வந்து அவள் தலையினுள் விடாத அதிர்ச்சியை உண்டாக்கின. உடலே அதனால் பாதிக்கப்பட்டு வெடவெடக்கையில் அவளால் தாளமுடியவில்லை. உடனே படுக்கைக்கு ஓடிப் போர்வையால் தலைவரை மூடிக்கொண்டாள்.

சற்றைக்கெல்லாம் முன் கதவு சாத்தப்படும் சப்தம் கேட்டது; அடுத்த நிமிஷம் ஆதரவான ஆப்ரஹாமின் கைகள் அவளை அணைத்துக்கொண்டிருந்தன.

''ஆப்ரஹாம்.....நீங்கள் வந்துவிட்டீர்களா.....? அதற்குள்ளாகவா.....?''

''இடி உன்னை எவ்வளவு பாதிக்குமென்று எனக்குத் தெரியும்; அதுவும் அது அதிகமாவதைக் கண்டதும், நான் ஓடிவந்தேன்'' என்றான் ஆப்ரஹாம்.

மத்தியானச் சாப்பாட்டுக்குப் பிறகு மாடிப்படியண்டை ஏதோ கூக்குரல் கேட்டது. அவள் ஹாலுக்கு ஓடுவதற்கும் அங்கே ராபர்ட் அவள் காலடியில் உருண்டு ஊளையிடுவதற்கும் சரியாக இருந்தது. தலை நிமிர்ந்த அவள் எதிரே ஆப்ரஹாம் கால் உறையுடன் நின்று சிரித்துக்கொண்டிருப்பதைக் கண்டாள்.

''கொஞ்ச நேரமாக அவன் என் பூட்ஸைப் போட்டுக் கொள்ள முயன்று கொண்டிருந்தான்; கடைசியில் அவை அவனைக் கீழே தள்ளிவிட்டாற் போலிருக்கிறது. நல்ல வேளையாகக் காயம் ஒன்றும் படவில்லை.''

அவன் குழந்தைகளிடம் பாசத்துடனும், நளினமாகவும் நடந்து கொண்டான். வீட்டிற்கு வரும்போது அவர்களுக்குத் தின்பண்டங்கள் கொண்டு வருவான்; வண்டியில் ஏற்றிக் கொண்டுபோய் அவர்களைச் சுற்றிக் காண்பிப்பான்; அவர்களை மகிழ்விக்கப் புதுப்புது விளையாட்டுகளைச் சொல்லிக் கொடுப்பான். துடியாகவும், பேச்சுக்காரனுகவும் இருந்த ராபர்ட்டின் மீது அவனுக்குத் தனிப்பிரியம். ஆப்ரஹாம் அவனைக் கொழுக்கட்டை என்பான்; அவனுடைய உடல் வாளிப்பில் அவனுக்கு மிகுந்த பெருமை. மேரியின் ஒரே வருத்தமென்ன வெனில், அவன் குழந்தைகளைக் கண்டிக்க மாட்டான். அதற்கு அவன் காரணமும் கூறுவான்:

''உலகில் வேண்டிய கஷ்ட நஷ்டங்கள் பின்னல் இருக்கின்றன; எனவே குழந்தைப் பருவத்திலாவது அவர்கள் சந்தோஷமாக இருக்கட்டும்.''

''ஆனல் கட்டுப்பாடுடன் வளர்க்கப்படாத குழந்தைகள் பிற்காலத்தில் சமாளிக்க முடியாதவையாக ஆகிவிடும். வயசான வாழ்க்கையில் கூட இன்பம் உண்டு, இல்லையா?''

அவளுடைய கேலியைக் கண்டு அவன் சிரித்தான்: ''என் அப்பா என்னை இரும்புக் கையால் கட்டுப்படுத்தி வளர்த்

தார். இந்தச் சிறுபயல்கள் என்னை நேசிக்கவேண்டும்; வீட்டையே கொளுத்தினால்கூட நான் அவர்களைக் கண்டிக்கப் போவதில்லை.''

ஆனால் ராபர்ட்டுக்கு மகிழ்ச்சியளிக்கத் தந்தையின் முயற்சி மட்டும் போதவில்லை. அவன் மந்தமாகவும் பேசாமலும் இருந்தான்; பிறகு தம்பிப் பாப்பாவுடன் ரகளைகள் செய்யவும் தொடங்கினான்; மேரி அவனைக் கண்டித்தால் வீட்டை விட்டு ஓடிவிடவும் ஆரம்பித்தான். வாசற் படியில் நின்று அவள் தொண்டை கிழியக் கத்த வேண்டியிருந்தது. அல்லது, அவனைத் தேடிக் கொண்டு அலையவும் நேர்ந்தது. அவனைக் கண்டு பிடித்துத் தண்டிப்பாள் அவள். அதன் பலன், அவன் அடிக்கடி மேலும் ஓடி மறையலானான். பிறகு ஒரு நாள் பக்கத்து வீட்டுக் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்த அவன், பாதியில் ஓடிவந்து, தாயின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதான்:

''.. .....அம்மா.....ஏம்மா பசங்கள் என்னை..... ஒன்றரைக் கண்ணன் என்கிறார்கள்.....?''

அவள் இதயத்தில் 'சுரீர்' என்று வலி கண்டது; அவள் குனிந்து அவனைக் கட்டிக் கொண்டாள். ஆனால் பதில் சொல்ல முடியவில்லை.

''ஏம்மா அவர்கள் என்னைக் கேலி செய்கிறார்கள்? ஏன் என் கண்கள் இப்படி இருக்கின்றன...? அம்மா, நீ அதைச் சரி பண்ண முடியாதா?.....''

ராபர்ட்டின் அட்டகாசம் தொடருகையில், எட்வர்டின் பாடு திண்டாட்டமாகியது. அவனது பொம்மைகளை உடைத்து விடுவான்; ஒரு தடவை ராபர்ட் அவனை ஓங்கி அறைந்ததால், குழந்தையின் மூக்கில் ரத்தம் கூட வந்து விட்டது. ஆப்ரஹாம் மேரியின் பக்கம் திரும்பி வருத்தத்துடன் கேட்டான்:

''ஒரு சிறு குழந்தை எப்படி இவ்வளவு அல்பமாக இருக்க முடியும்?''

''அவன் சிரமங்களை 'எட்டி' பகிர்ந்து கொள்வதற்கில்லையல்லவா? அதனால் அவன் மீது ராபர்ட்டுக்கு வெறுப்பு.''

ஸ்பிரிங்ஃபீல்டிலும் கஷ்டங்கள் அதிகமாகிக் கொண்டு வந்தன. ஏனெனில், யுத்தம் பற்றிய உற்சாகம் தணிந்து கொண்டே வந்தது; அநேக இல்லினாய்ஸ் இளைஞர்கள் மடாமோரோ ஸில் ஜுரத்தால் இறந்தனர்; கெர்ரா கோர்டோவில்

ஜேம்ஸ் ஷீல்ட்ஸ் மார்பில் சுடப்பட்டு இறந்தான்; பியூனா விஸ்டா சண்டையில் ஜான் ஹார்டின் கொல்லப் பட்டான். இதே போல் உள்ளம் உடையும்படியான மற்றொரு செய்தியும் வந்தது: கலிபோர்னியா சென்ற டோனர் கூட்டத்தின் ஒரு பகுதி ஸீராஸ் மலை உச்சியில் பனியில் சிக்கி, உணவின்றிப் பல குழந்தைகளைக் கொன்று தின்றும் மீள வழியின்றி மடிந்து விட்டார்களாம்!

மெக்ஸிகர்கள் காஷியஸ் கிளேயைப் பிடித்து விட்டதாக அவள் தந்தை எழுதினார்; ஆனால், லெக்ஸிங்டன் வாலிபர்கள் நிறைந்த ஒரு படையையே அவன் காப்பாற்றி விட்டதால், யாவரும் அவனை ஒரு பெரிய வீரனாகவே கருதினார்கள். அடிமை ராஜ்யங்களுக்குள்ளிருந்து கொண்டு அடிமைத்தனத்தை எதிர்ப்பதற்கென்று 'ட்ரூ அமெரிக்கன்' என்ற பத்திரிகையை இரு வருஷங்களுக்கு முன்பு ஆரம்பித்ததற்காக அவனைக் கண்டனம் செய்த அதே லெக்ஸிங்டன், இப்போது அவனைப் பாராட்டியது. இப்பத்திரிகை ஆரம்பிக்கப் படுவது பற்றிப் பத்திரிகையில் படித்த மேரி, காஷியஸ் கிளேக்கு ஒரு சந்தா கூட அனுப்பியிருந்தாள். காஷியஸ் ஸின் முதல் தலையங்கங்களை ஆப்ரஹாமுக்கு உரக்கப் படித்தாள். அவற்றில் கிளே தன்னை 'அடிமைத்தனத்தின் உறுதியான விரோதி' என்று தெரியப்படுத்தினான். ஆனால், 'சட்ட வரம்புக்குள் ளேயே அடிமைகளை விடுவிக்க முயற்சி செய்ய வேண்டும்' என்றும் எழுதியிருந்தான்.

''உன் நண்பன் கிளே தைரியமான மனிதன்'' என்றான் ஆப்ரஹாம். ''அடிமைத்தனத்தை ஒழிக்காவிடில், அது யுத்தத்தில் முடியும் என்ற வறட்டு எச்சரிக்கையைத் தவிர அவனுடைய மற்றக் கொள்கைகள் எனக்குப் பிடிக்கின்றன.''

கோபம் கொண்ட ஜனக் கூட்டம் ஒன்று 'ட்ரூ அமெரிக்கன்' பத்திரிகாலயத்திற்குள் நுழைந்து, அச்சகங் களைக் கலைத்ததுடன் இவ்விஷயம் முடிந்தது. ஒரு நாள் சாப்பிடும்போது கிப்ஸன் ஹோரிஸ்ஸின் கதையை ஆப்ரஹாம் கூறுகையில், அந்தச் சட்ட மாணவன் பதிலளித்தான்:

''நாடு ஐக்கியமாக இருக்க வேண்டுமானால் ஓர் உள் நாட்டுப் போரை நடத்தித்தான் ஆகவேண்டுமென்று என் தந்தை நம்புகிறார். இச்சண்டை அவர் காலத்தில் ஏற்படாததாயினும், நிச்சயமாக என் காலத்திலாவது நடக்கு மாம். அந்த யுத்தம் முடிந்ததும், அடிமைத்தனம் மடிந்து அரசாங்கம் இன்னும் அதிக அதிகாரத்துடன் காப்பாற்றப் படும் என்று அவர் நம்புகிறார்.''

மேரியின் கை நடுங்கியது; காபிக் கோப்பையைக் கீழே வைத்து விட்டாள். யுத்தம்.....கெண்டக்கிக்கும் இல்லினாய்ஸுக்கும்.....அவளுடைய பையன்கள்.....பெட்லியின் பையன்களுடன்.....சண்டையிட்டுக் கொன்று கொண்டா.....? அது நிஜமாக முடியாதது!

''கிப்ஸன், இப்படி மீண்டும் ஒரு முறை சொல்லி விடாதே. இம்மாதிரிப் பேச்சுக்கள் அபாயகரமானவை என்பார் ஆப்ரஹாம்.....'' என்றாள் அவள்.

முகம் இருண்டு, சிந்தனையுடன் தலையைத் தொங்க விட்டுக் கொண்டு அமர்ந்திருந்தான் ஆப்ரஹாம். பிறகு அவன் பேசியபோது பதில் நேரிடையாக இல்லை.

''மக்களின் பிரதிநிதியாகவும், மக்களைக் காப்பாற்றுவதாகவும் அமைந்துள்ள மற்ற எந்த அரசாங்கத்தையும் விட, நமது அரசாங்கம் மிகவும் பூரணத்துவத்தை நெருங்கி இருக்கிறது. நம் அரசாங்கம் ஜனங்களுடையது; அதை ஆக்குவதோ அழிப்பதோ அவர்கள் கையில் தானிருக்கிறது. அடிமைத்தனத்தால் நாம் அதை அழிக்க முயலுகிறோம். ஆனால், இப்பிரச்னையில் முடிவுகாணத் தவறியதற்காக நாம் யுத்தத்தை மேற்கொண்டால், அது கொடுமையும் துயரமும் நிறைந்த ஒரு தோல்வியையே அளிக்கும். நமது ஒற்றுமையே நமது இருக்கைக்கு அடித்தளம்; அதை அழித்தால், இந்த மண்ணின் மீதுள்ள கடைசிப் பெரிய நம்பிக்கையும் அழிந்து விடும்.''

ஜூலை முதல் தேதியன்று சிக்காகோவில் நடக்கும் நதிகள், துறைமுகங்கள் பற்றிய கூட்டத்திற்குப் பயணமாவதன் ஆப்ரஹாம். இந்த நாலு நாள் முகாமுக்குத் தன்னுடன் கூட வரும்படி மேரியையும் அழைத்தான். அவளுக்குப் புதிய நகரமான சிக்காகோவைக் காண ஆசையிருந்தும், உடன் செல்ல மறுத்து விட்டாள்.

''நீங்கள் சுதந்திரமாகப் பலருடனும் பழகி, பலரது நட்பைப் பெறவேண்டும். ''விக்'' கட்சிப் பெரியவர்களையெல்லாம் சந்திக்க இது நல்லதொரு வாய்ப்பு; நாம் வாஷிங்டனை அடைவதற்குள் உங்களைப் பலபேர் அறிந்துகொள்வார்கள்.''

''இதோ பார், மோலி. நான் ஒரே ஒரு சிறிய பிரசங்கத்திற்காகத்தான் போகிறேன்.''

''மற்ற மூன்று நாட்களில் நீங்கள் அளக்கப் போகும் வீண் கதை.....?''

''போட்டாயே, ஒரு போடு! அப்போது நிச்சயம் ஓரிரு புது நண்பர்களைப் பிடித்துக் கொள்ளுகிறேன்!'' என்று அவன் தமாஷாகப் பதிலளித்தான்.

சொன்னதற்கு மேலாகவே அவன் செய்து விட்டான்; அவன் வீடு திரும்பிய சில நாட்களுக்கெல்லாம், 'நியூ யார்க் ட்ரிபியூன்' பத்திரிகையைப் பிரித்த மேரி, தேசத்தின் சக்தி வாய்ந்த பத்திராதிபர்களில் ஒருவரான ஹொரேஸ் கிரீலி என்பவர் எழுதியிருந்த அறிக்கையைப் படித்தாள்.

''நாட்டின் ஒரே 'விக்' மாகாணமான இல்லினாய்லிலிருந்து காங்கிரஸ்ஸுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அந்த நெட்டை மனிதர் மேன்மை தங்கிய ஆப்ரஹாம் லிங்கன் அழைக்கப் பட்டதும், மிஸ்டர் பீல்டின் பேச்சுக்குச் சுருக்க மாகவும், மகிழ்ச்சி துள்ளவும் பதிலளித்தார்.''

''மகிழ்ச்சி துள்ள என்ற வார்த்தை எனக்குப் பிடிக்கிறது; 'தெவிவாக' என்ற வார்த்தையை விரும்பும் அளவுக்கு இதையும் விரும்புகிறேன்'' என்றாள் மேரி.

''மேலும் ஒரு சேதி, மோலி: நமது வீட்டை கார்னலியஸ் என்ற செங்கல் கண்டிராக்டருக்கு ஒரு வருஷத்திற்கு வாடகைக்கு விட்டு விட்டேன். ஒத்துக்கொள்ளப்பட்ட நூறு டாலர்களுக்குப் பதில் தொண்ணூறு டாலர்கள் தான் வாடகை பெறப்போகிறேன். அதற்குப் பதில் வடக்குப் படுக்கை அறையில் அவன் நமது சாமான்களைப் போட்டு வைக்க ஒத்துக்கொள்கிறான், திருப்தி தானே?''

வாஷிங்டனில் அவள் திட்டமிட்டு வைத்திருப்பது போன்ற வீட்டிற்குக் கொடுபட வேண்டிய வாடகைக்கு இந்தத் தொண்ணூறு டாலர்கள் கணிசமான ஈடாக இருக்கும்! அவள் தன் கைகளால் கணவனின் கழுத்தை வளைத்துக் கொண்டு அவனை முத்தமிட்டாள்.

பிறகு ''எனக்கு ரொம்பவும் மகிழ்ச்சி, மிஸ்டர் லிங்கன்'' என்றாள்.

9

விடியற்காலை நாலு மணிக்கு குளோப்பை விட்டு கோச்சு வண்டி புறப்பட்டது. ஆப்ரஹாம் ராபர்ட்டைத் தூக்கிக் கொண்டான்; தூங்கும் எட்வர்டை மேரி தோளில் சாத்திக் கொண்டாள். இருவரும் இருட்டில் நடந்தார்கள். ஆல்டனுக்குப் போகும் ரஸ்தா அவள் எட்டு வருஷங்களுக்கு முன்பு பார்த்ததை விட இப்போது மிகவும் அபிவிருத்தி

யடைந்திருந்தது. பருவத்தின் முதல் மழை பெய்து அது ஈரமாகவும் இருந்தது. அந்தத் தொண்ணூற்று எட்டு மைல்களைக் கடக்க இரண்டு நாட்களாயின; புதன்கிழமை காலை அவர்கள் ஸையின்ட் லூயிக்குப் போக வேகமான நீராவிப் படகு ஏறினார்கள். ஆனால் அவர்கள் ஏழு மைல்கள் தாண்டியதுமே, படகு மணற் திட்டு ஒன்றில் மோதி அதில் சிக்கிக் கொண்டு விட்டது. படகின் கனத்தைக் குறைப்பதற்காக புருஷர்கள் இறங்கிக் கரைக்குச் சென்றார்கள். ஸையின்ட் லூயியில் அவர்கள் பெரிய படகு ஒன்றுக்கு மாறினார்கள். அது முதலில் மிஸ்ஸிஸிபியில் சென்று, பிறகு ஓஹியோ நதிக்கு மாறி லூயிவில்லுக்குச் சென்றது. இந்த ஐந்நூறு மைல் பிரயாணத்தின்போது அவர்களுக்குக் குழந்தைகளுக்குத் தேவையான தொட்டில்களுடன் கூடிய சிறு மரக் 'காபின்' கிடைத்தது.

பிராங்பர்ட்டிலிருந்து புறப்பட்டு, சிறிது ரெயில் பிரயாணம் செய்து லெக்ஸிங்டனை நெருங்கும் போதே, பழுப்பான சணல் வயல்களையும், சமவெளிகளையும், காடுகளையும் கண்டு மேரிக்கு உணர்ச்சி பெருகியது. கிழவன் நெல்ஸன் அவர்களைச் சந்திக்க ஸ்டேஷனுக்கு வந்திருந்தான். வெளிர் நீலக் கோட்டும், வெள்ளிப் பித்தான்களும் அணிந்திருந்தான் அவன். அன்று புழுக்கமாகவும் வறண்டும் இருந்தது. மேரிக்கு இருந்த உணர்ச்சி உச்சத்தில், பெரிய தெருவிலிருந்த பழக்கமான கடைகளைக் கூட அவள் கவனிக்கவில்லை.

எட்வர்டைக் கையில் எடுத்துக் கொண்டு அவள் முதலில் வீட்டிற்குள் நுழைந்தாள். ராபர்ட்டைத் தூக்கிக் கொண்டு பின்னால் ஆப்ரஹாம் வந்தான். முன் கதவண்டை அவள் குடும்பமே நின்று கொண்டிருந்தது. முதலில் பெட்ஸி கைகளை நீட்டினாள்; அவள் தலை பழுப்படைந்து, முகம் சிறிது மெலிந்திருந்தது. ஆனால் அவள் கண்கள் இன்னமும் ஒளியுடன் விளங்கின. அடுத்தாற்போல் குழந்தைகள் வந்தார்கள்—பதினைந்து வயது மார்த்தா, பதினேழு வயது எமிலி, ஏழு வயது எலோடீ, ஆறு வயதுக் காதரைன், எல்லோரும். குழந்தைகள் பழுப்பு மஞ்சள் உடைகளும், வெள்ளை பூட்ஸுகளும், வெள்ளை மஸ்லின் மேலணிகளும் அணிந்திருந்தார்கள். பதினைந்து வயதை மீறி வளர்ந்திருந்த டேவிட் மேரியை இறுகத் தழுவிய தழுவில் அவளுக்குத் தன் எலும்புகள் ஒடிந்து விடும்போல் இருந்தது.

டான்வில் ஸெண்டர் காலேஜிலிருந்து வந்திருந்த ஸாமுவேல் உயரமாகவும், அழகாகவும், பளிச்சென்ற வெள்ளைப் பற்களுடனும் இருந்தான். கடைசியாகச் செந்தலை அலெக்

ஷாண்டர் வந்தான். முன்பு அவள் தோளில் தூக்கிச் சுமந்த அவனுக்கு இப்போது வயது எட்டு.

அடுத்தாற் போல் நீக்ரோப் பணியாட்கள் அவளுடன் சேர்ந்து குலுக்கத் தயாராகக் காத்திருந்தார்கள். முதலில் வந்த மேமி ஸாலி முன்னே விடப் பருத்து இருந்தாள். மேரி, வாய் அகலச் சிரித்து அவளை முத்தமிட்டுவிட்டு, எட்வர்டை அவள் கையில் கொடுத்தாள். பிறகு சானி என்ற சமையற்காரி கூவினாள்: ''மிஸ் மேரி! அப்படியானால் அங்கே உன்னிடமுள்ள ஐரிஷ் பெண்களுக்கு எப்படி நல்ல பிஸ்கட் செய்வதென்று தெரியாதென்று சொல்லுகிறாய்?''

அதற்குள் ஆப்ரஹாம், குடும்பத்தினர் ஒவ்வொருக்கும் தனியாக அறிமுகம் செய்விக்கப் பட்டான். மேரியின் சாய லிருந்ததால் அவன் எமிலியை எளிதில் புரிந்து கொண்டான். பெட்ஸியின் முந்தானைக்குள் ஒளிந்து கொண்டிருந்த அவளை இழுத்து, ''இவள்தான் சின்னத் தங்கையா?'' என்றான்.

கதவு திறக்கப் பட்டதும், மேரி தந்தையின் அணைப் புக்குள் முடங்கினாள்; இப்போதுதான் அவளுக்கு உண்மை யாக வீடு திரும்பியிருப்பது போலிருந்தது. அவர் நீல நிற ஸூட்டும், சுருக்கம் வைத்த மேல் கோட்டும், சரிகை தைத்த சட்டையும், கல் பதித்த பித்தான்களும் அணிந்திருந்தார்; அவளுக்காக அவர் புதிதான, சிறந்த உடையில் இருந்தார்.

சாப்பாட்டுக்குச் சட்னி, மேரிக்குப் பிடித்த சில இனிய பண்டங்களைத் தயாரித்திருந்தாள். வெள்ளிக் கோப்பையில் கிழட்டு நெல்ஸன் கொணர்ந்த 'ஜீலப்' பானத்தை ஆப்ர ஹாம் குடிக்க மறுத்து விட்டதால், நெல்ஸனுக்கு சற்று மன வருத்தம்.

மேரியின் பழைய படுக்கை அறையையே லிங்கன் தம் பதிகளுக்கு பெட்ஸி ஒழித்துவிட்டாள். அங்கே தங்களது சாமான்களைப் பிரிக்கையில், ஆப்ரஹாம் சொன்னான்:

''இந்த வீடு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது; நான் எதிர்பார்த்த அளவு இது பெரிதாகவும், படாடோபமாகவும் இல்லை.''

மேரி தனக்குள் சிரித்துக் கொண்டாள்: பெட்ஸியின் வாழ்வு முறைகளும், பழக்கங்களும் எவ்வளவு பணச் செலவு டையன என்பதை அவன் அறிய வழியேயில்லை.

பிறகு அவன் படுக்கையில் அமர்ந்து லெக்ஸிங்டன் அப்ஸர்வர் பத்திரிகையைப் படிக்கையில், லைப்ரெரியில் இருந்த அப்பாவிடம் சென்றாள் மேரி. கணநேர மௌனத்திற்குப் பிறகு அவள் தந்தை சொன்னார்:

''உன் சகோதரர்களைக் காணவில்லையே என்று நீ நினைக்கக்கூடும். அவர்களை இன்று இங்கு வரும்படி சொல்லியிருந்தேன். ஆனால் . . . . அவர்கள் என் விருப்பத்தை மதிக்கவில்லை. நீ பிறந்த வீட்டில், லெவி வசிக்கிறான்; ஜார்ஜ் மெகோவன் ஹோட்டலில் தங்கிக் கொண்டு, வைத்தியப் பள்ளிக்குப் போகிறான். அவன் நன்றாகப் படிக்கிறான்; ஆனால் அவனுக்கு பெட்ஸியினிடமும், மற்றக் குழந்தைகளினிடமும் பழக விருப்பமில்லை.'' அவர் மன நெகிழ்ச்சியுடன் கணப்பை நோக்கி நடந்தார்; பிறகு அவர் திரும்புகையில் மேரியின் விழிகள் நீரில் மிதப்பதைக் கண்டார். ''மேரி! எனது இரண்டு குடும்பங்களையும் சேர்க்கும் ஒரே இணைப்பு நீ தான். என் குழந்தைகளில் நீ ஒருத்திதான், இரண்டு தரப்பிலும் அன்பு காட்டுகிறாய். உன் சித்தி வழி வந்த தம்பி தங்கைகளை நேசித்து, அவர்களுக்கு உதவியாய் இருப்பதாக எனக்கு உறுதி கொடு, மேரி. உன்னை விட்டால், நான் நம்பும்படி வேறு ஒருவரும்இல்லை.''

''இச் சிறு குழந்தைகளிடம் எப்போதுமே எனக்கு அன்பு உண்டு, அப்பா! அவர்களை நான் ஒரு போதும் மாற்றாந் தாய்க்குப் பிறந்த தம்பி, தங்கைகள் என்று நினைத்ததே இல்லை. சண்டையிடுவதில் எனக்குச் சமர்த்தியமே கிடையாதென்று டாக்டர் வார்டு ஒரு முறை சொன்னது என் நினைவிற்கு வருகிறது.''

மறு நாள் காலை நவம்பர் மாதத்துச் சூரியன் பளிச்சென்று வெப்பத்துடன் உதயமானான். இரு புறமும் ரோஜாச் செடிகளுடன் காட்சியளிக்கும் வெள்ளைக் கப்பி ரஸ்தா வழியாக ஆப்ரஹாமை உலாவ அழைத்துச் சென்றாள் அவள். பிறகு குன்றின் அடிவாரத்திற்குச் சென்று, அங்கே நீர்க் கழிகளுக்கு எதிரிலிருந்த சிறு வாராவதியின் மீது இருவரும் நின்றார்கள். அதற்குப் பிறகு நகரத்தைச் சுற்றிக் காண்பிக்க அவனை இட்டுச் சென்றாள் மேரி. அங்கே அழகிய வீடுகளையும், தோட்டங்களையும், அகன்ற தெருக்களையும் அவனுக்குக் காட்டினாள். புல் தரைகளையும், புஷ்பங்களையும், பன்றிகளும் குப்பைகளும் அற்ற சுத்தமான தெருக்களையும் கண்ட ஆப்ரஹாம் சிலிர்த்துப் போனான். மிஸியர் கிரான் வேறெங்கோ போய் விட்டார்; டாக்டர் வார்டு இறந்து விட்டார். ஆனால் காலேஜ் லாட்டும், டிரான்ஸில்வேனியா சர்வகலாசாலையும் மாறவே இல்லை.

பார்க்கர் விடுதியின் திறந்த மாடிக்கு வந்த போது, அவர்கள் யாரோ சிலர் முனகி அழும் குரல்களைக் கேட்டார்கள். ஆப்ரஹாம் நின்ற இடத்தில் உறைந்து விட்டான். கீழே

'மெக்கானிக்ஸ் அலே'யைத் தாண்டித் தெரிந்த அழிக் கம் பிகள் வழியாக அடிமைகள் கூட்டமொன்று தெரிந்தது. அங்கே ஆண்களும், பெண்களுமாக நீக்ரோக்கள் அடைபட் டுக் கிடந்தனர். அவர்களில் சிலர் நின்று கொண்டிருந்தனர்; சிலர் ஈரமான செங்கற் தரையிலே சாய்ந்து கிடந்தனர். அத் தளத்தின் ஒரு மூலையில் ஒரு நீக்ரோவின் கைகளை உயர்த் திக் கம்பம் ஒன்றன் மீது கட்டியிருந்தார்கள். ஆப்ரஹாமின் முகம் ரத்தம் சுண்டி செத்துப் போய் விட்டதற்குச் சமமாக வெளிறியது.

''அது புல்லம்மின் அடிமைச் சிறை'' என்றுள் மேரி நிதானமாக. ''நீங்கள் மயக்கம் போட்டு விழுந்து விடுவீர் கள் போலிருக்கிறதே.''

தன் நண்பர்களையெல்லாம் அழைத்து, மேரிக்கும், ஆப்ரஹாமுக்கும் ஒரு விருந்து வைத்தாள் பெட்ஸி. சாப் பாட்டுடன் நடனமும் இருந்தது. விக்ளிப், பாட்லி, டிராட்டர், கிரிட்டென்டன், ஸ்டூவர்ட், வார்ஃபீல்டு, ஹம்ப்ரி, மார்கன், கிளே, ப்ரெக்கென்ரிட்ஜ் ஆகியோர் மனைவியருடன் வந்திருந் தனர். பணியாட்கள் பச்சை வெல்வெட்டு நிறமும் தங்க நிறமும் கொண்ட நாற்காலிகளையும், செர்ரி மர ஸோபாக் களையும் கூடத்திற்குள் மாற்றுகையில் மேரி தன் பழைய நாட்களுக்கே சென்று விட்டாள். சாப்பாட்டு அறையில் சிவப்பு அக்ரோட்டு மர மேஜையை முழு நீளத்திற்கு இழுத்து அதன் மீது பெட்ஸியின் சிறந்த விரிப்புக்களைப் போட்டார் கள். வெள்ளித் தட்டுக்களில் வாட்டிய மாட்டு இறைச்சி யும், மற்ற லெக்ஹார்ன்களுக்குகே உரித்தான உணவு வகைகளும் வைக்கப்பட்டிருந்தன.

வாசற்பக்கத்தில் குதிரைகளின் குளம்போசை கேட்ட வண்ணமிருந்தது. மேரி தனது பழைய நண்பர்களை வர வேற்றுக் கொண்டிருந்தாள். பெண்கள் உயர்ந்த ரகக் கவுன் களையும், நகைகளையும் அணிந்து வந்தனர்; ஆண்கள் உடலை ஒட்டிய சராய்களையும், அழகிய நிறங்களில் கோட்டுகளையும் அணிந்து கொண்டு வந்தனர். டெஸ்மான்ட் ஃபிளெம்மிங் கையும், அவனுடைய பச்சைக் கண்கள் படைத்த அழகிய இளம் மனைவியையும் பெட்ஸி அழைத்திருந்தாள். மார்க ரெட் விக்ளிப் ஆப்ரஹாமை நோக்கிப் புருவங்களை உயர்த்தி யதைக் கண்ட மேரி கேலியாகச் சிரித்துக் கொண்டே சொன் னாள்:

''அவர் மயிலைப் போல அழகாகவும், கர்வமாகவும் இருக்கிறார்; ஆனால் மயிலை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வேன்?''

அவள் சகோதரன் ஜார்ஜ் தாமதமாக வந்தான். சிறிது குடித்து விட்டு வந்ததாலோ என்னவோ அவன் முகம் சிவந்திருந்தது. அவன் அதிகம் வளராமலேயே இருந்தான். அவனுடைய வாய்க் குளறல் மட்டும் அதிகமாகியிருந்தது. அவனைப் பார்த்ததில் தனக்கு எவ்வளவு மகிழ்ச்சி என்பதை மேரி அவனிடம் சொல்ல முயன்றாள்; விருந்தாளிகள் கூட்டமொன்று அவனிடம் 'ஹலோ' சொல்ல வந்த போது தான், அவன் குடி மயக்கம் குறைந்து பதில் சொல்ல ஆரம்பித்தான். பிறகு அவன் மூர்க்கத் தனமாக எழுந்து, உணவு அறைக்குச் சென்று, ஒரு பெரிய கோப்பை நிறைய மதுவை ஊற்றிக் குடித்து விட்டு எங்கோ மறைந்து விட்டான். லெவி இறுதியில் தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு வர இசைந்தான். பருத்த முகமுடைய அவன் மனைவி லூயிஸா, ஸாண்டர்ஸ்வில்லிலிருந்த தங்கள் குடும்பத்துச் சணல் ஆலையில் நம்பகமான மானேஜர் ஆவதற்குக் கணவனுக்கு உதவி புரிந்தவள்.

விருந்து வெற்றியுடன் முடிந்தது. குறைந்தது ஒரு டஜன் விருந்துகளுக்கும், நடனங்களுக்குமாவது மேரிக்கு வெளியிலிருந்து அழைப்பு வந்திருக்கும். அவளுடைய நண்பர்கள் ஆப்ரஹாமின் தோழமையை நன்கு அநுபவித்தார்களென்றே தோன்றியது. பிளெமிங் மட்டும் அவளை 'ஸ்ரீமதி காங்கிரஸ்காரன்' என்று அழைத்தான்.

லெக்ஸிங்டனின் வக்கீல்களது அலுவலகங்கள் உள்ள 'ஜோர்டன் ரோ'வுக்கும், கச்சேரிகளுக்கும் செல்ல விரும்பிய ஆப்ரஹாம் அதிகாலையிலேயே தன் மாமனாருடன் புறப்பட்டான். பிற்பகல் நேரங்களில் அவன் மாடியில் புத்தக அலமாரிகளுக்கெதிரே அமர்ந்து, படிப்பதைக் கண்டாள் மேரி. ஒரு நாள் ஆசிரியர் ப்ரையண்ட் எழுதிய 'தனடோப்ஸிஸ்' (Thanatopsis) என்ற நூலிலிருந்து மேரியிடம் ஏதோ படித்துக் காண்பித்தான். மற்றொரு நாள், போப்பின் புத்தகத்திலுள்ள அடியிற்கண்ட வரிகளைப் படித்தான்:

"உன்னை நீயே தெரிந்துகொள். எல்லாம் கடவுள்
கவனித்துக்கொள்ளுவாரென்று ஊகித்துவிடாதே;
மனித குலத்தை மனிதன் மூலம்தான் முறையாக
ஆராய வேண்டும்."

இவ்வளவு சந்தோஷமாகவும், கவலையற்றவளாகவும் மேரி அவனைக் கண்டதேயில்லை.

ஒரு சனிக்கிழமை யன்று மாலை ஹென்ரி கிளேயின் பிரசங்கத்தைக் கேட்பதற்காக அவர்கள் மார்க்கெட் ஹவுஸ்ஸுக்

குப் போனார்கள். ஆப்ரஹாம் தனது லட்சிய வீரரான அவர் பேசிக் கேட்டதேயில்லை. கிளேயின் உணர்ச்சி வழியும் குரலும், கவர்ச்சிகரமான தோரணையும் அவனை மெய்சிலிர்க்கச் செய்தன. ''இது ஒன்றும் தற்காப்பு யுத்தமில்லை; இது ஒரு வேண்டாத ஆக்கிரமிப்பு யுத்தம்'' என்று கிளே முழங்கிய போது, அவன் 'ஆம்' என்று தலையை ஆட்டினான், மறு நாள் ஞாயிற்றுக்கிழமை யன்று, ஒரு தம்பதியர் 'மதேய்ரா' அருந்துவதற்காக ஆஷ்லாண்டுக்கு அவர்கள் அழைக்கப் பட்டனர்.

தொடர்ந்த திங்களன்று கோர்ட் தினம். உச்சிப் பொழுதில் மேரியும், ஆப்ரஹாமும் 'சீப் ஸைட்' என்ற இடத்திற்குச் சென்றார்கள். அங்கே கோர்ட் கட்டடத்தின் முன்னே வழக்கமான குதிரைகள், பசுக்கள், ஆடுகள் முதலிய கால்நடை வியாபாரிகளைக் கண்டாள் மேரி. ஜாடி விற்பனையாளர்களும், பச்சை, மஞ்சள் உடைகளில் தொப்பியணிந்து நிற்கும் நாட்டு வைத்தியர்களும், பழைய சாமான் கடைக்காரர்களுமாக அங்கு ஒரே கூட்டம்.

சில நிமிஷங்களில் நீதிஸ்தலத்திற்கு எதிரே அடிமைகளின் விற்பனை ஆரம்பமாகியது. ஆப்ரஹாம் அவள் கையைப் பிடித்துக் கொண்டான். அடிமை வியாபாரிகளை நெருங்கி நின்றார்கள் இருவரும். நீண்ட கோட்டுகளும், கம்பளித் தொப்பிகளும் அணிந்த அவர்கள் கூவிக் கொண்டிருந்தார்கள்: ''இந்த அடிமை.....உடல் வலுவுள்ளவன். மாடாக உழைப்பான்.....! இந்தப் பெண்.....இருபத்து மூன்று வயசுதான்; கை தேர்ந்த சமையற்காரி.....!''

ஆப்ரஹாமின் விரல்கள் அவள் தோளைக் கிள்ளின. ''வா.....போகலாம்!'' என்று அவன் மெதுவாக ஓதினான்.

அவர்கள் கூட்டத்திடையே நுழைந்து செல்லும்போது, உரத்த குரலில் மீண்டும் ஏலம் கூவுவது கேட்டது:

''அடுத்து, மொத்தமாக ஐந்து நீக்ரோக்கள்..... ராபர்ட் எஸ். டாடுக்கும், வில்லியம் ஏ. லெவிக்கும் சொந்தமானவர்கள்.....ஒரு மதிப்பீட்டிற்காக, உயர்ந்த ஏலதாருக்கு அளிக்கப்படும்.....எல்லோரும் சிறந்த உழைப்பாளிகள்: பிள்ளை பெறக் கூடியவர்கள்.....திடகாத்திரமானவர்கள்...!''

சீப் ஸைடு வழியாக அவர்கள் விரைந்து சென்றார்கள்..... பிறகு மேரி வெளிறிய முகத்துடன் நின்ற தன் தந்தையின் விழிகளை உறுத்து நோக்கிக் கொண்டு தான் நிற்பதை உணர்ந்தாள்.

''மேரி.....இதைத் தவிர்ப்பதற்கு எனக்கு வேறு வழி யில்லை என்பதை ஆப்ரஹாமுக்குச் சோல், மேரி. வில்லியம் லெவியின் சகோதரனுக்கு நான் பெருந்தொகை கடன் கொடுத்திருந்தேன். அவன் அதைத் திருப்பிக் கொடுக்கத் தவறி விட்டான். இந்த அடிமைகளைத் தவிர அவனுக்கு வேறு ஆஸ்தி இல்லாததால், கோர்ட்டார் அவர்களை விற்கும் படி உத்தரவு போட்டார்கள்.''

தன் ஒரு கையால் தன் தகப்பனுரையும், மற்றதால் ஆப்ரஹாமையும் பிடித்துக் கொண்டாள் மேரி. அவர்கள் அனைவரும் மௌனமாகவே வீடு திரும்பினர்கள். இக் கொடுமையில் தன் தந்தையின் பங்கைப் பற்றி ஆப்ரஹாம் என்ன நினைக்கிறான் என்பதை அறிவதற்காக, அவனை ஒரு தடவை ஓரக் கண்களால் ரகசியமாகப் பார்த்தாள் மேரி. ஆனால் ஆப்ரஹாம் இது பற்றி அந்தரங்கமாக அவர்களுடைய அறையில் தான் பேசினான்; அப்போதும் அவன் ராபர்ட் டாடைப் பற்றிக் குறிப்பிடவே யில்லை.

''அடிமை முறை அமுலில் இருக்கும் இடங்களில் அதை ஒழிக்கக் கூடாதென்றும், அடிமைகள் தனிப்பட்டவர் சொத்து ஆதலால், சட்ட ரீதியாக இன்றி அச்சொத்துக்களைப் பறிக்க அரசியல் சட்டம் அநுமதிக்காது என்றும் நான் எவ்வளவு எளிதாகச் சொல்லியிருக்கிறேன். இந்தப் பிராணிகள் வெறும் சொத்துக்களா, அல்லது மனித இனங்களா? எது முதலில் வருகிறது, வாழ்வா சட்டமா? நமது அரசியல் சட்டம் மனித ஆத்மாக்களையும், உடல்களையும் அடிமைப் படுத்த அநுமதிக்குமானால், அதற்கு என்ன அர்த்தம்?''

அவனுக்கு ஆறுதல் மொழி கூற அவளுக்குத் தெரிய வில்லை.

10

தோள்களில் தூங்கும் குழந்தைகளுடன் அவர்கள் பின்னிரவில் வாஷிங்டனை அடைந்தார்கள். அங்கிருந்து அவர்கள் புறப்படுகையில், அழுக்கடைந்தும், இடிந்தும் சிதைந்தும் கிடந்த அந்த ரெயில்வே ஸ்டேஷனைச் சுற்றித் திரியும் சோம்பேறிகள் அவர்களை முறைத்துப் பார்த்தார்கள். இறுதியில் அவர்கள் பென்ஸில்வேனியா அவென்யூவும், இரண்டாவது தெருவும் சந்திக்குமிடத்தை அடைந்தபோது, அங்கிருந்த வண்டிக்காரர்களின் கூப்பாடுகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அங்கிருந்து பிரௌன்ஸ் ஹோட்டலுக்குச் செல்ல சில நிமிஷங்களே பிடித்தன. ஒரு வாரப் பிரயாணத்தின் அலுப்

புடன் தங்களது அறைக்குள் நுழைந்த அவர்கள், அங்கி
ருந்த பெரிய மெத்தையின் நடுவில் குழந்தைகளைக் கிடத்தி
விட்டு, இரு புறங்களிலும் படுத்தார்கள். உடைகளைக்கூட
அவர்கள் முழுவதும் கழற்றவில்லை. மறுநாள் காலையில்
அவர்கள் நேரம் கழித்தே எழுந்தார்கள். சிற்றுண்டியை
முடித்துக் கொண்டு ஊரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார்
கள். புழுதி நிறைந்த தெருக்களில் இறைந்து கிடந்த குப்
பைகளை மேய்ந்து கொண்டு பன்றிகளும், கோழிகளும்
திரிந்தன. இரண்டு மூன்று வீடுகளுக்கு இடையே ஒரு திறந்த
வெளி இருந்தது. பென்ஸில்வேனியா அவென்யூவின் கோடி
யிலிருந்த 'ஓயிட் ஹௌஸ்,' 'காபிடல்' இவற்றுக்கு முன்னே
ஒரு திடல் இருந்தது. அதன் வழியே அவர்கள் நடந்தனர்.
அருகில் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றில் அரசாங்க
இலாகா இருந்தது; யுத்த இலாகாவும், கடற்படை இலாகா
வும் கூட அங்கே சிறு சிறு கட்டடங்களில் இருந்தன; கஜானு
வுக்காக ஒரு கட்டடம் அங்கே கட்டப்பட்டு வந்தது.

பென்ஸில்வேனியா அவென்யூவில், விலங்கிடப்பட்ட
அடிமைக் கூட்டம் ஒன்று ஏதோ மதத் தோத்திரங்களை ஓதிக்
கொண்டு எதிரே வருவதை அவர்கள் பார்த்தார்கள். லிங்
கன் தம்பதிகளை நெருங்குவதற்குள், அந்த அடிமைக் கூட்டம்
ஜார்ஜியா பென் என்ற ஒரு சிறிய கட்டடத்துக்குள்ளே விரட்
டப்பட்டது. கட்டடத்தின் பலமான மரக்கதவு அந்த
அடிமைகளை உள்ளே விட்டு மூடிக்கொண்டது. மேரி கூடச்
சரிவரக் கேட்க முடியாத சிறு குரலில் ''ஒரு சுதந்தர நாட்
டின் தலைநகரில் இப்படியொரு நிகழ்ச்சி நடை
பெறுவது எவ்வளவு கொடுமை!'' என்று கூறினாள்
ஆப்ரஹாம்.

உச்சிப்பொழுதில் அவர்கள் தங்களுடைய சாமான்களை
ஒரு வாடகை வண்டியில் போட்டுக்கொண்டு, காபிடல்
பார்க்குக்கு எதிரே ஒரு குன்றின்மீதிருந்த ஸ்ரீமதி ஸ்பிரிக்கின்
உணவு விடுதிக்குச் சென்றார்கள். முதல் தெரு இருபுறமும்
மரங்களுடன் அகலமாகவும், ஓரத்தில் தார் இட்ட நடை
பாதைகளுடனும் இருந்ததைக் கண்டு மேரி மகிழ்வடைந்
தாள். மூலை வீட்டில் டப் கிரீன் என்ற சிறந்த பத்திரிகை
அதிபர் வசித்தார்; அடுத்தாற்போல் இரு தனிப்பட்டோரின்
வீடுகள்; அதற்கும் அப்பால் உணவு விடுதிகள்; இறுதியில்
ஸ்ரீமதி ஸ்பிரிக்கின் விடுதி.

ஆன் ஸ்பிரிக் அவர்களை வெளி வாயிற்படியிலேயே
வரவேற்றாள். அழகான தோரணையுள்ள கண்யமான மாது
அவள். அவர்களை அவள் இரண்டு மாடிகள் தாண்டி, விடு

தியின் பின்புறத்திலிருந்த பெரிய அறை ஒன்றுக்கு அழைத்துச் சென்றாள். அறையில் இரு படுக்கைகளும், உடைகளுக்கான பீரோக்கள் இரண்டும், தூசி படிந்த சுவர்க் காகிதங்களும், அதிகம் தோய்த்த மெத்தை உறைகளும், நிறமிழந்த திரைச் சீலைகளும் காணப்பட்டன. பின் ஜன்னலுக்கு வெளியே வரிசையாகக் கக்கூஸ்கள்; அவற்றையடுத்து மாட்டுக் கொட்டிலும், பன்றித் தொழுவமும்; முற்றத்தில் கோழிகளும், நாய்களும் கட்டப்பட்டிருந்தன. மேரி ஜன்னலிலிருந்து அவசர அவசரமாகப் பின்வாங்கினாள். இதெல்லாம் தற்காலிகமாகத்தானே?

கதவை யாரோ மெல்லத் தட்டும் சப்தம் கேட்டது. திறந்ததும், எதிரே நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு நீக்ரோ பழுப்பான கிராப்புத் தலையும், குளுமையான கண்களுமாகக் கையில் ஒரு மணியை வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தான்.

''சாப்பாடு தயார், ஸ்ரீமதி லிங்கன்.''

நீண்ட, ஆனால் குறுகலான உணவு அறை, நடைபாதைக்குப் பின்புறம் இருந்தது. அங்கே ஒரு நீண்ட, ஆனால் அகலம் குறுகிய மேஜை போடப்பட்டிருந்தது. லிங்கன் தம்பதிகள் கடைசியாக அங்கே சென்றார்கள். அறிமுகத்திற்காக ஒவ்வொருவரும் எழுந்தனர். மேஜையின் நடுப்பக்கத்தில் ஸ்ரீமதி ஸ்பிரிக் அமர்ந்தாள்; அவளை யடுத்து ஒஹியோவைச் சேர்ந்த தீவிர அடிமை ஒழிப்புவாதியான ஜோஷுவா ஹட்டிங்ஸ், மற்ற படி, ஒருபுறம் ஐந்து பென்சில்வேனியா 'விக்' கட்சிக்காரர்கள் வரிசையாக உட்கார்ந்திருந்தனர். மேஜையின் இப்பக்கத்திலேயே லிங்கன் தம்பதிகளுக்கும் இடம் கிடைத்தது. முதலில் மிஸ்டர் ரிச்சர்ட்ஸனும், அவருடைய கருவுற்றிருந்த மனைவியும் அமர்ந்திருந்தனர். அடுத்த பக்கத்தில் டாஃப்கிரீன் தம்பதிகளும், மிஸ் லிலிப்பியைச் சேர்ந்த பாட்ரிக் டாம்கின்ஸும்; ப்ரூம் தம்பதிகள்; லிங்கனுக்குப் பிடித்த ஹாஸ்ய எழுத்தாளர் நாதன் ஸார்ஜெண்ட்; பிறகு இந்தியானாக் காங்கிரஸ்காரர் எம்ப்ரீ; ஃபிரெஞ்சு என்ற பெயர் கொண்ட ஒருவன்; துயரபாவம் வழியும் ஹாம்ஸ்டஃப் என்பவர்; இளைஞனை வைத்திய மாணவன் ஸாமுவேல் புஸி, இவனுடன் தான் ஹாம்ஸ்டஃப் தனது புதிய இசைக் கற்பனை பற்றி அலசிக் கொண்டிருந்தான். மேரிக்கு எதிர்த்தாற் போல், காதின் மேலும், மூக்கிலும் கூட ரோமத் திட்டுக்களுள்ள ஒருவன் அமர்ந்திருந்தான். சாப்பிடும்போது தனது உள் பையிலிருந்து ஒரு பொடி டப்பியை எடுத்து, தனது பெரிய மூக்கு நிறைய அடைத்துக்கொண்டான் அவன்.

மொத்தம் இருபத்துநான்கு பேர்கள் மேஜையைச் சுற்றி யிருந்தனர். ராபர்ட்டும், எட்வர்டும் மட்டுமே குழந்தைகள்.

திங்கட்கிழமையன்று கணவனோடு காபிடலுக்குச் சென்ற மேரி, மாடி ஏறிச் சபைக்குப் பின்னாலிருந்த பார்வை யாளர்களுக்கான இடத்தில் அமர்ந்தாள். அங்கிருந்து கொண்டு அவள், காங்கிரஸ்மேக்கு வந்திருக்கும் புதிய அங் கத்தினர்கள் சீட்டுக் குலுக்கிப் போட்டுத் தங்களுக்குரிய ஆசனங்களைத் தேர்ந்தெடுப்பதைக் கண்டாள். கடைசி வரி சையில் ஒரு மோசமான ஆசனந்தான் ஆப்ரஹாமுக்குக் கிடைத்தது. வில்லிஸ் அவனுடைய சூட்டுக்கு இஸ்திரியும், பூட்ஸுகளுக்குப் பாலிஷும் போட்டிருந்தான். முக்கிய மான இந்த நாளுக்காக அவள் ஒரு புதிய வெள்ளைச் சட்டை, காலர், பட்டுக் கால் உறை இவற்றைச் சேமித்து வைத்தி ருந்தாள். சபையிலிருந்த மற்றவர்களையெல்லாம் விட உயர மாகத் தோன்றிய ஆப்ரஹாம் அழகாக இருப்பதாகவே மேரி நினைத்தாள். பின்புறம் இழுத்துச் சீவி விடப்பட்டிருந்த அவன் தலை பளபளத்தது; சுத்தமாக க்ஷவரம் செய்யப்பட்ட முகம்; ஒளி சிந்தும் கண்கள். மணி பன்னிரண்டடித்ததும், சபாநாயகர் புது அங்கத்தினர்களை எழுந்திருக்குமாறு உத் தரவிட்டார். ஆப்ரஹாம் பதவிப் பிரமாணம் செய்தபோது அவள் மகிழ்ச்சியுடன் முறுவலித்தாள்.

வாஷிங்டன் சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு, அதன் சிறந்த பாகத்தில் நல்ல வீடு ஒன்றை அமர்த்திக் கொள்ளப் பல வாரங்கள் பிடிக்குமாதலால், அதுவரை இந்த உணவு விடுதியிலே தங்கித்தானாக வேண்டும் என்பதை உணர்ந் தாள் மேரி. அதனால் ஸ்ரீமதி ஸ்பிரிக்கினுடைய விடுதியின் தினசரி நடைமுறைகளை அநுசரித்து நடந்து கொண்டாள். சீதோஷ்ணம் மனோகரமாக இருந்ததால், அவள் குழந்தை களைப் பார்க்கில் விளையாட விட்டாள். அங்கே யிருந்த நீரூற்றில் அவர்கள் கப்பல் விட்டு மகிழும்போது, மேரி ஏதா வது படிப்பாள். காங்கிரஸ்ஸில் முதல் பிரசங்கத்தைச் செய் யுமாறு கணவனை நச்சரித்து வந்தாள் மேரி; இரண்டு வாரங் களுக்குப் பிறகுதான் அவன் அதற்கு இணங்கினான்.

''நான் என் சாமர்த்தியத்தைக் காட்டவேண்டுமென்று நீ கவலைப்படுவதால், அப்படியே செய்யத் தீர்மானித்து விட்டேன்'' என்றான் அவன்.

கணவனுடைய பேச்சைக் கேட்பதற்காக, ஆயிரம் பேர்கள் அமரக்கூடிய 'பார்வையாளர் காலரி'யில் அவள் இருமுறை சென்று உட்கார்ந்தாள். டிஸம்பர் 22-ஆம் தேதி யன்று ஆப்ரஹாம் ஜனாதிபதி போக் அவர்களிடம் ''நமது

குடிமக்களின் ரத்தத்தால் நனைந்த ஒரு குறிப்பிட்ட இடம், அந்த ரத்தம் சிந்தப்பட்டபோது, நம்முடைய சொந்த இடமாக இருந்ததா இல்லையா?'' என்று கேட்டான். அடுத்தாற்போல் அவன் செய்த நீண்ட பிரசங்கம், தபால்களை எடுத்துச் செல்வதற்கான தபால் இலாகா ஒப்பந்தங்களைப் பற்றியதாக இருந்தது. மகா கனம் பொருந்திய ஆப்ரஹாம் லிங்கன் தன் சாமர்த்தியத்தைக் காட்டுவதைக் காண்பதற்கு ஒரு சில பார்வையாளர்களே வந்திருந்ததைக் கவனித்த மேரிக்குச் சிறிது கோபமாகத்தான் இருந்தது.

சாப்பாட்டு அறையில் கூடுபவர்கள் பெரும்பாலும் 'விக்' கட்சிக்காரர்களாகவே இருந்ததால், சாப்பிடும்போது எழும் பேச்சு அமைதியாகவே இருக்கும் என்று எதிர்பார்த்தாள் மேரி. ஆனால் பென்ஸில்வேனியாக் காங்கிரஸ்காரன் டிக்கி, மிஸ்ஸிஸிபி காங்கிரஸ்காரன் டாம்ப்கின்ஸுடன் எப்போதும் தர்க்கமிடுவதில் ஒரு தனி இன்பம் கண்டான். அடிமை ஒழிப்பு வாதியான டிக்கியின் உரத்த சண்டைக் குரல் பல தடவைகள் குழந்தை ராபர்ட்டைப் பயந்து அழச் செய்து விட்டது. எனவே மேரி பையன்களை மாடிக்கு அழைத்துச் சென்று சமாதானப்படுத்த வேண்டியதாயிற்று. மற்றொரு சமயம், 'டாம்ப்கின்ஸ் ஓர் அடிமை-எதிர்ப்பு 'விக்' கட்சிக் காரரால் தோற்கடிக்கப்படுவான்' என்று தான் நம்புவதாகக் கூறி உரக்கச் சிரித்தான் டிக்கி. உடனே கத்தியையும் குத்து முள்ளையும் கீழே வைத்து விட்டு, முகத்தைத் தன் இரு கைகளாலும் தாங்கிக்கொண்டு ஆப்ரஹாம் தனக்கே உரிய உரத்த குரலில் முழக்கினான்:

'' தோல்வியைப் பற்றிப் பேசும்போது ஸைப்பர்வைஸர் தேர்தலுக்கு நின்ற ஒருவனின் விஷயம் என் நினைவிற்கு வருகிறது. தேர்தலன்று காலையில் அவன் வீட்டை விட்டுப் புறப்படும்போது தன் மனைவியிடம், ' இன்றிரவு நீ இந்த நகரத்து ஸைப்பர்வைஸருடன் தூங்கப்போகிறாய்' என்று கூறிவிட்டுச் சென்றான். ஆனால் தன் வெற்றியில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த அவன் தோற்கடிக்கப்பட்டுவிட்டான். அன்று இரவு அவன் மனைவி நல்ல உடைகளை அணிந்து கொண்டு எங்கோ புறப்பட்டாள். 'ஏய்! இந்த இருட்டில் எங்கே போகிறாய்?' என்று கூவினான் அவன். 'நீங்கள்தானே சொன்னீர்கள், நான் இன்றிரவு ஸைப்பர்வைஸருடன் தூங்க வேண்டும் என்று! அதனால் அவரிடம் போகிறேன்' என்றாள் அவள்.''

கதையை முடித்ததும் தலையைப் பின்னால் சாய்த்துக் கொண்டு அவன் சிரித்தான். மேஜையண்டை இருந்த

யாவரும், டிக்கி உள்பட அவன் சிரிப்பில் கலந்துகொண்டனர். டிக்கிக்கு மட்டும் இக்கதை அவனைக் கேலி செய்கிறதா, அல்லது டாம்கின்ஸையா என்று புரியவில்லை.

ஒரு வீட்டைப் பிடிக்கவேண்டுமென்ற தனது திட்டத்தை அவள் ஆப்ரஹாமிடம் சொல்லவில்லை. வீட்டுக்கான தேவை அதிகப்பட்டுவரும்; அவர்களுக்கு விருந்துகளுக்கு அழைப்புகள் வரும்; அதற்குப் பிரதியாக அவர்களே விருந்துகள் கொடுக்கவும் நேரிடும். ஆப்ரஹாம் நட்புக்கொள்ள விரும்பும் முக்கிய மனிதர்களும், பெரிய இடத்துக் குடும்பங்களும் வருவார்கள் என்று மேரி நினைத்தாள்.

பனி விழ ஆரம்பித்தது; பிறகு மழையும் புயலும் வந்து நகரத்தையே தெப்பமாக்கிவிட்டன; தெருக்களில் முழங்கால்வரைச் சேறும் தண்ணீரும். குழந்தைகளைப் பார்க்கிற்கு அழைத்துச் செல்ல முடியவில்லை. ஜோஷுவா கிட்டிங்ஸ் சில சமயம் குழந்தைகளை வராந்தாவில் விளையாட்டுக் காட்டி மகிழ்விப்பாள். ஆனால் அவளுக்கு முக்கியமான உதவி வில்லிஸ்லிடமிருந்துதான் கிடைத்தது. அவன் தனது விடுதலையைப் பெறுவதற்காகப் பல வருஷங்கள் உழைத்ததாக அறிந்துகொண்டாள். இன்னும் இரு வருஷங்களில் எஞ்சியுள்ள அறுபது டாலர்களையும் அவன் கொடுத்து விடுவான். மேரி கணவனுடன் செல்லும்பொழுதோ, அல்லது கடைகளுக்குப் போகும்பொழுதோ வில்லிஸ்தான் குழந்தைகளைப் பார்த்துக்கொண்டான். அவனுக்கும் அப்போது வேலையிருக்குமானால், சிறந்த தாதியான தனது தங்கை வில்லிஸாவை அழைத்து வருவான்.

ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு நகரத்தின் சமூக வாழ்க்கைக்குள் மெல்ல நுழைந்து புறப்பட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள் மேரி. ஸ்பிரிக்கின் விடுதியிருந்த 'காபிடல் ஹில்' ஒரு சிறந்த குடியிருப்பு ஸ்தலம். இங்குதான் சட்டசபை அங்கத்தினர் தாமஸ் ஹார்ட் பென்டன் தமது மனைவியுடனும், ஏழு பெண்களுடனும் வசித்தார். ஜெஸ்ஸி பிரெமாண்ட் கூட, அப்போதுதான் கலிபோர்னியாவிலிருந்து திரும்பியிருந்த தன் கணவனுடன் இங்கே வசித்தாள். சில வீடுகள் தாண்டி ஜெனரல் ஜான் ஆதம்ஸின் குடும்பமும், அரசாங்க இலாகா மந்திரி புச்சானனின் வீடும் இருந்தன. இந்த மனிதர்கள் உயர்ந்த சமூக அந்தஸ்து உள்ளவர்கள்; வாஷிங்டனில் நிரந்தரமாக வசிப்பவர்கள். இருப்பினும், பதின்மூன்று பதினான்காவது தெருக்களுக்கு நடுவில் உள்ள 'எஃப்' தெருச் சதுக்கம்தான் இன்னமும் நல்ல இடமென்று அவள் நினைத்தாள். அங்கே மாஜி

ஜனாதிபதியும் தற்போதைய காங்கிரஸ் அங்கத்தினருமான ஜான் குவின்ஸி ஆதம்ஸ் வசித்தார். அங்கே வாடகை அதிகமாயிருக்கும் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது தான்; ஆனாலும், வருங்கால உயர்வை உத்தேசித்து அவள் அதற்குத் தயாராக இருந்தாள்.

வாஷிங்டனில் புது வருஷப் பிறப்பு தினம் முக்கியமான தினம். ஜனாதிபதி, உப ஜனாதிபதி, அரசியல் இலாகா மந்திரி ஆகியோரின் மாளிகைகளும், ஸ்ரீமதி ஜேம்ஸ் மாடிஸன், ஸ்ரீமதி அலெக்ஸாண்டர் ஹாமில்டன் முதலிய பிரபல விதவைகளின் வீடுகளும் அன்று எல்லோருக்கும் திறந்திருக்கும். லிங்கன் தம்பதிகள் வரவேற்பு விருந்தில் கலந்து கொள்ள 'ஓயிட் ஹவுஸ்'ஸுக்குப் போகத் திட்டமிடுகிறார்கள் என்பதை அறிந்ததும், ஜோஷுவா கிட்டிங்ஸ், ''அந்தச் சங்கடத்திலா போய் சிக்கிக்கொள்ளப்போகிறீர்கள்'' என்று கேட்டான்.

இருப்பினும் வருஷப் பிறப்பன்று, மேரி நீலப் பூக்கள் போட்ட வெள்ளைப் பட்டுக் கவுனை தன்னை அலங்கரித்துக்கொண்டாள். 'ஓயிட் ஹவுஸ்'ஸுக்குப் போவதற்காக அவர்கள் ஒரு பீட்டன் வண்டியை அமர்த்திக்கொண்டார்கள். 'ஓயிட் ஹவுஸ்'ஸின் முன்னாலிருந்த திடல் மக்களுக்காகத் திறந்து விடப்பட்டிருந்தது. நூற்றுக்கணக்கான ஜனங்கள் மாளிகையைச் சேர்ந்த புல் தரையில் நடந்து கொண்டிருந்தனர். முன்புறம் வரிசையாக நின்ற வண்டிகளையும், பல வண்ண அங்கிகளுடன் வந்த வெளிநாட்டுத் தூதுவர்களையும் காண்கையில், வரவேற்புத் தொடங்கி நேரமாகிவிட்டதென்பது தெரிந்தது.

லிங்கன் தம்பதிகள் தங்களது மேல் அணிகளைப் பணியாளிடம் கொடுத்துவிட்டு, கண்ணாடிகளாலும் ஒளி விளக்குகளாலும் ஜ்வலித்த அறைக்குள் நுழைந்தார்கள். ஒரு கோடியில் கண்கவரும் கவன்களுடன், தலையிலும் கழுத்திலும் வைரங்கள் ஜ்வலிக்க ஓர் அழகிய பெண்களின் கூட்டம்; மறுபுறம் ஐம்பது, அறுபது கனவான்கள் மௌனமாக நின்று கொண்டிருந்தார்கள். ஜனாதிபதி போக், அறையின் நடுவில் இருந்தார். அவருக்கு வலது புறம் யுத்த மந்திரி மிஸ்டர் மார்ஸி; அவருக்குப் பின்னால் ஸ்ரீமதி போக் பெரிய நாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்தாள். மேரியும், ஆப்ரஹாமும் வரவேற்பு வரிசையின் கோடியில் அமர்ந்தார்கள். பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு, வெல்வெட் உடையிலிருந்த ஸாரா போக், மேரியை வரவேற்றாள். மதப்பற்றுமிகுந்த அவள் 'ஓயிட் ஹவுஸ்'ஸில் சீட்டாட்டம், நடனம், அல்லது மற்ற கேளிக்கைகளைத் தடுத்திருந்தாள்.

ஒரே விநாடியில் மேரி, ஜஞதிபதி போக்கினிடம் சென்ருள். அவர் சற்றுக் குட்டையாகவும், பரந்த நெற்றியுடனும் இருந்தார். அவரது கண்கள் கூர்மையாகவும், வாய் உறுதியாகவும் இருந்தன. அவளே வரவேற்பதில் தாம் மகிழ்ச்சியடைந்ததாகக் கூறினர் அவர். அவள் மரியாதைக்கு முறுவலித்து விட்டு, ஆப்ரஹாமுக்கு வழியை விட்டுவிட்டு விலகி நின்ருள். ஆனல் அவளே விட ஆப்ரஹாம் இன்னும் அதிகமாகவே வாயடைத்து நின்ருன். ஒரு போலீஸ்காரன் அவன் முழங்கையைப் பற்றிக்கொண்டு ''அறிமுகம் ஆகி விட்ட கனவான்கள் தயவு செய்து கிழக்கு அறைக்குச் செல்ல வேண்டும்'' என்று நாசூக்காக வலியுறுத்தினன்.

என்ன நடந்து கொண்டிருக்கிறதென்று புரிவதற்குள் ளாகவே, அவர்கள் கிழக்கு அறையைக் கடந்து, கடற்படை பாண்டு வாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருந்த முகப்பு வாசலையும் தாண்டி, வெளியே தெருவிற்கு வந்துவிட்டார்கள்.

''இப்போது நாம் என்ன செய்வது?'' என்ருன் ஆப்ரஹாம்; சகஜமற்ற இச்சூழ்நிலையினல் அவனுக்குச் சங்கடமாயிருந்தது.

'' எனக்கென்ன தெரியும்? குடிக்கவோ, சாப்பிடவோ ஒன்றுமே கிட்டாத ஒரு வரவேற்புக்கு நான் வருவது இதுவே முதல் தடவை! அது அச்சுறுத்துவதாகவும் இருந்தது. தெருவைக் கடந்து ஸ்ரீமதி ஜேம்ஸ் மாடிஸனையாவது பார்க்கலாம்'' என்ருள் அவள்.

சமூகத் தொடர்புகளுக்காக அவள் தனது பழைய நண்பர்களே நம்பியிருந்தாள்; ஆனல் ஒன்றும் நடக்கவில்லே. இப்போது சட்டசபை அங்கத்தினனக இருக்கும் ஸ்டீஃபன் டக்ளஸ் அவர்களது இடத்திற்குச் சாப்பிட வந்தான். ஆனல் இவர்களே அவன் அழைக்கவேயில்லே. டக்ளஸ் இங்கே வந்தபோது, ஆப்ரஹாம் தனது வாடிக்கைக்காரன் ஒருவனுக்கு டக்ளஸ் கொடுக்கவேண்டியிருந்த கடன் தொகையை வசூலித்துவிட்டான் என்பதை அறிந்த மேரி கணவன்மீது சீறினுள்.

அமெரிக்க ஸுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்கை வாதிப்பதற்காக வந்திருந்த ஹென்ரி கிளேயைச் சந்திக்க விரும்புவதாக, அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்கு ஒரு சீட்டு எழுதி அனுப்பினுள் மேரி. உடனேயே அவர் இவர்களே இரவுச் சாப்பாட்டுக்கு வருமாறு அழைப்பு அனுப்பினர். அவர்கள் சென்றபோது, தமது சொந்த விஷயங்களேப் பற்றியே பேசிவிட்டு, அவர்களேச் சந்தித்ததில் தனது

மகிழ்வையும் தெரிவித்துவிட்டுத் திருப்பி அனுப்பிவிட்டார் அவர். அதற்குப் பிறகு மிஸ்டர் கிளேயிடமிருந்து தகவலே இல்லை.

டாடு குடும்பத்தின் நெடுநாள் நண்பரான சட்டசபை அங்கத்தினர் கிரிட்டெண்டனின் உதவியை விசேஷமான சந்தர்ப்பத்தில் பெறலாம் என்று மேரி நினைத்து வந்தாள், ஜனவரி 16-ஆம் தேதி ஸாரா பென்டனுக்கு கல்யாணம் நடக்க விருந்தது. அதற்கு கிரிட்டெண்டனுக்கு அழைப்பு வந்திருந்தது. வாஷிங்டன் சமூக வாழ்க்கையில் தாமஸ் ஹார்ட் பென்டனின் குடும்பத்திற்கு நல்ல மதிப்பு உண்டு. எனவே அவர்கள் வீட்டுக் கல்யாணத்திற்கு அவளுக்கு அழைப்புக் கிடைக்குமானால், அங்கே தன் சமூகத் தொடர்புகளை ஆரம்பித்துக் கொள்ள நல்ல வாய்ப்பாகும் என்று கருதினாள் மேரி. கிரிட்டெண்டன் இக் கல்யாணத்திற்காக அவளுக்கும் ஓர் அழைப்பைத் தருவிக்க முடியுமா? அவனால் முடியவில்லை; அவளாகக் கேட்பது அகவுரவம் என்று அவள் உணர்ந்தாள்.

தனது ஏமாற்றங்களையெல்லாம் பற்றி அவள் கணவனிடம் கூறவில்லை. அவனுக்கு ஸ்ரீமதி ஸ்பிரிக்கின் விடுதி பிடித்திருந்தது; தினமும் மற்ற காங்கிரஸ்காரர்களுடன் காபிடலுக்கு நடப்பதையும், சாப்பாடானதும் வராந்தாவில் ஒரு மணி நேரம் அமர்ந்து வம்பளப்பதையும் அவன் அனுபவித்தான். வாரத்தில் சில நாட்கள் மற்ற ஆண்களுடன் அவன் காஸ்பரி மைதானத்துக்கு விளையாடச் சென்றான். அங்கே அழகற்ற தோரணையில் ஆடிய அவன், அபூர்வமாகத் தான் ஜெயித்தான் என்றாலும், தன்னுடைய கதைகளினாலும் கோணல்களாலும் அங்கிருக்கும் கூட்டத்தை மகிழச் செய்தான். வாரம் இருமுறை அவன் மேரியை வெளியே அழைத்துச் சென்றான். காருசியிலுள்ள எதியோபியத் திறந்த வெளிக் கண்காட்சிக்கோ, ஸ்லோமேன்ஸ் என்பவன் தன் இரு பெண்களோடு சேர்ந்து பியானோக் கச்சேரி செய்வதைக் கேட்பதற்கோ அவர்கள் செல்வார்கள். அநேகம் தடவை அவர்கள் பிரெமாண்ட் ராணுவ விசாரணைக் கோர்ட்டுக்குச் சென்று, அங்கு நடைபெறும் விசாரணைகளைக் கேட்டார்கள்.

"வா மேரி; புதன், சனி இரு நாட்களிலும் மாலையில் ஓயிட் ஹவுஸ் மைதானத்தில் கடற்படைப் பாண்டு கோஷ்டியின் கச்சேரி நடக்கிறதாம். அங்கு இதமான வெப்பமாகவும், அழகாகவும் இருக்கும் என்கிறார்கள். நீ சட்டை மட்டும் போட்டுக் கொண்டு, 'ஹாய்'யாக அங்கே வெளியில் உட்காரலாம்" என்று ஒரு நாள் அவளை அழைத்தான் ஆப்ரஹாம்.

தபாலாபீஸுகள், தபால் ரோடுகள் ஆகியவை பற்றிய கமிட்டியிலும், யுத்த இலாகாச் செலவுகள் பற்றிய கமிட்டியிலும் ஆப்ரஹாம் அங்கத்தினராக நியமிக்கப்பட்டான். யுத்த இலாகாச் செலவு என்றால், மெக்ஸிகோவுடன் யுத்தம் நடத்துவது பற்றிய செலவுகள்! இந்த இரண்டாவது நியமனம் வந்தபோது மேரி சொன்னாள்:

"ஸ்பிரிங்ஃபீல்டு வெட்டிக் கூட்டம் உங்களை மரியாதை, நிதானத்தன்மை, சம்பிரதாயம் இவை போன்ற கமிட்டிகளில் நியமித்த மாதிரி இருக்கிறது இது."

தனது சமூக வாழ்க்கையின் தன்மைக்கு ஏற்ற மாதிரி வீட்டை அமைத்துக்கொள்ள வேண்டுமென்ற அவள் திட்டம் தோல்வியுற்றதால், நிரந்தரமாகச் சர்க்கார் சிப்பந்திகள் வசிக்கும் தெருக்களில் வீட்டுக்காக அவள் தேடியலைந்தாள்.

இறுதியில் பால்டிமோர் பாணியில் கட்டப்பட்டிருந்த சிவப்புச் செங்கல் வீடு ஒன்று அவள் பார்வைக்கு வந்தது. அது இரண்டு மாடிக் கட்டடம்; படிக்கட்டுகளிலும், முன்னால் ஜன்னல்களைச் சுற்றிலும் வெள்ளைக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. வாடகையும் அதிகந்தான்; காங்கிரஸ் கூட்டம் முடியும் வரை முந்நூறு டாலர்கள்—அதாவது அடுத்த வருஷம் மார்ச்சு வரை. ஆனாலும் அவ்வீட்டிலிருந்த தட்டு முட்டு சாமான்கள் அழகாக இருந்தன. வெகு சீக்கிரம் அவள் அதை விருந்துகளுக்கும், நடனங்களுக்கும் ஏற்ற பின்னணியுடையதாக மாற்றியமைத்துவிட முடியும்.

ஞாயிற்றுக்கிழமை, சாப்பாடு முடியும் வரை காத்திருந்தாள் மேரி. பிறகு ஆப்ரஹாமை அந்த வீட்டுக்குள் இட்டுச் சென்று, "நீங்கள் இந்த அழகிய வீட்டைப் பார்க்க வேண்டும்" என்றாள். முன்னும் பின்னுமிருந்த நடைபாதைகள், டிராயிங் ரூம், சாப்பாட்டு அறை, மாடியிலிருந்த மூன்று படுக்கை அறைகள் இவற்றை யெல்லாம் மேரி சுற்றிக் காண்பித்ததும், மாடிப்படிகளின் நடுவில் நின்ற ஆப்ரஹாம் சட்டென்று அவள் பக்கம் திரும்பிக் கேட்டான்:

"மேரி! உன் திட்டந்தான் என்ன? எதற்கு என்னை நீ இங்கு அழைத்து வந்தாய்?"

அவள் ஒரு பெருமூச்செறிந்து விட்டு, ஒரே மூச்சில் தன் விருப்பத்தைச் சொன்னாள்:

"இங்கே இரண்டு மாசங்களாக நாம் ஹோட்டலில் இருந்து விட்டோம். இப்போது நம்மால் நமக்கு இஷ்டமானபடி ஏற்பாடுகள் செய்து கொள்ள முடியும். அடுத்த

பதினைந்து மாசங்களை நாம் இங்கே கழிக்கப் போகிறோம். நமது வீட்டில் நாம் ஒரு குடும்பமாக வசிக்க வேண்டுமென்றே நான் நினைக்கிறேன்.''

அவன் அப்படியே அதிசயித்துப் போனான்.

'' நீ ஸ்ரீமதி ஸ்பிரிக்கின் விடுதியில் சந்தோஷமாக இருக்கவில்லை யென்பது எனக்குத் தெரியாது. சாப்பாடு நன்றாக இருக்கிறதென்று நீ சொன்னாயே?''

'' ஸ்ரீமதி ஸ்பிரிக்குக்கு எதிராக நான் எதுவும் சொல்லவில்லை ஆப்ரஹாம். ஆனால், உங்களுக்குத் தெரியாதா நான் இந்த ஹோட்டல் வாசத்துக்கெல்லாம் பழக்கப்பட்டவள் இல்லையென்பது?''

'' அப்படியானால் ஏன் நீ வாஷிங்டனுக்கு வந்தாய்? நமது திட்டம், ஸ்ரீமதி ஸ்பிரிக்கின் விடுதியில் தங்குவதென்பது தானே?''

அவன் குரல் சிறிது கடுமையாக இருந்தது. தானே அவன் கோபத்திற்குக் காரணம் என்பதை மேரி உணர்ந்தாள்.

'' நான் உங்களுடன் இருக்க விரும்பித்தான் வந்தேன், ஆப்ரஹாம்'' என்று அவள் மெதுவாகப் பதிலளித்தாள். '' அதோடு குழந்தைகளுடன் இருப்பதையே நீங்களும் விரும்புகிறீர்கள்.''

''ஆனால் நாம் இப்போதிருக்குமிடத்திலேயே வாழ்க்கை எளிமையாகவும், மனதுக்கிசைந்தும் இருக்கிறதே. வாடகையும் நியாயமானது. அதை ஏன் நீ குலைக்க விரும்புகிறாய்?'' என்றான் அவன்.

'' ஏனென்றால், நாம் வசதியாக வாழ மட்டுமே வாஷிங்டனுக்கு வரவில்லை. நீங்கள் ஒரு சட்டசபை அங்கத்தினராகவும், நான் ஓர் உபசாரிகையாகவும் வெற்றி காணவே வந்திருக்கிறோம்.''

'' ஓ! அது தான் காரணமாக்கும். சமூக வாழ்க்கை, இல்லையா?''

தனக்கு ஏற்பட்ட எரிச்சலை அவள் அடக்கிக்கொண்டாள்.

''வில்லிஸ்ஸின் உதவியால் நல்ல பணியாட்களை நான் பொறுக்கியிருக்கிறேன். இந்த வீட்டை அழகிய பாணி

யில் அமைக்க எனக்கு ஒரு வாரம் கூடப் பிடிக்காது.'' கெஞ்சுபவள் போல் அவள் கைகளை நீட்டினாள். ''உங்களுக்குப் புரியவில்லையா, ஆப்ரஹாம்? உங்களுக்கு நல்ல தொடர்புகளை நான் ஏற்படுத்தப் போகிறேன். வாஷிங்டனில் உள்ள பெரிய குடும்பங்களையும், அரசாங்க உத்தியோகஸ்தர்களையும் விருந்துக்கு அழைக்கப்போகிறேன். இவர்கள் மட்டுமல்ல; சட்டசபை அங்கத்தினர்கள், மந்திரி சபை அதிகாரிகள், வெளி நாட்டுத் தூதுவர்கள்.....''

''ஹோ.....ஹோ.....மேரி, குதிரைகள் அவிழ்த்துக் கொண்டு வண்டியைப் பின்னால் விட்ட மாதிரித்தான்! நாம் இங்கிருந்த இரண்டு மாதங்களில் ஒருவரும் நமது தொடர்பைப் பற்றிக் கவலைகொள்ளவில்லை. இதற்காக நீ பலவித முயற்சிகள் செய்திருக்கிறாய் என்று கூட எனக்குச் சந்தேகம். இப்போது நீ வீட்டை அமர்த்திக்கொண்டதற்காக, அவர்கள் நம்மீது அக்கறை கொள்வார்களா?''

அவள் தலை நிமிர்ந்து நின்றாள்: ''சமூகம் நம்மைத் தேடி வரும்; அதற்கு நான் உறுதி தருகிறேன்.''

''இல்லை மேரி, உன்னால் முடியாது. நாமே சென்று, நம்மை மதிக்காதவர்களை அழைப்பதை நான் விரும்ப மாட்டேன். வாஷிங்டன் நகரமே தெற்கத்திக்காரர்களால்தான் நடக்கிறது என்று சொல்லிக் கேட்டிருக்கிறேன். அவர்கள் வறட்டுப் பெருமை கொண்ட ஜம்பப் பெண்கள்; தங்களோடு நம்மை ஒரு நாளும் ஒட்டவிட மாட்டார்கள்.''

''நான் இந்த நகரத்திலுள்ள எந்தப் பெரிய மனுஷிக்கும் குறைந்தவளல்ல!''

''வாஸ்தவம் மோலி; ஆனால் லிங்கன் தம்பதி அப்படியில்லை.''

அவன் அவளைப் பார்த்துச் சிரித்தான். அது அவளை அதிகமாக நிலைகுலையச் செய்தது.

''ஆப்ரஹாம்! இங்கே ஹவுஸ் தபாலாபீஸில் வீண் கதைகள் பேசுவதற்கு மேலேயும் நீங்கள் உயர்ந்தவர் என்பதை நாம் ஸ்தாபித்தாக வேண்டும்.''

''இந்த வர்ணனையில் கொஞ்சம் எரிச்சலும் இருக்கிறது, இல்லையா ஸ்ரீமதி லிங்கன்?''

அவள் அரசியல் விஷயங்களுக்குத் தாவினாள்.

''நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் வருகிறது. போக் ஜனரஞ்சகமான ஜனாதிபதி இல்லை. அடுத்த தடவை நம் கட்சி ஜெயித்தால், வாஷிங்டனில் உள்ள நிரந்தர சட்ட சபை அங்கத்தினர்கள், காங்கிரஸ்காரர்கள் இவர்களிடையே நீங்கள் தெரிந்தவராக இருப்பது உங்களுக்கு

அநுகூலம். கட்சி மன்றங்களில் நீங்கள் உயர்ந்திருக்க விரும்பவில்லையா?''

''ஊரிலுள்ளவர்களையெல்லாம் நம் வீட்டிற்கு விருந்துக்கு அழைப்பதால், நான் முன்னேறிவிடுவேன் என்று நம்பவில்லை''

அவன் படிகளில் இறங்கிக்கொண்டே தொடர்ந்தான்; ''அதோடு ஸ்பிரிக்கின் விடுதி எனக்குப் பிடித்திருக்கிறது: அங்குள்ள மனிதர்களையும் அவர்களுடைய வேடிக்கைகளையும், தோழமையையும் நான் விரும்புகிறேன்.''

''ஆனால் எனக்குப் பிடிக்கவில்லை.'' அவள் தன் மனத்தைத் திறந்து சொன்னாள். ''கெட்ட வார்த்தைகள் பேசும் டிக்கியுடன் அமர்ந்து 'சூப்' அருந்துவது எனக்குச் சிரமமாக இருக்கிறது; ஹம்ஸ்டப் தனது மலச்சிக்கல், வயிற்றுப் போக்கு இவைகளைப் பற்றி வர்ணிப்பதையும் என்னால் கேட்க முடியவில்லை; அந்த மயிர்க்காடு மனிதன் மூக்கில் பொடியைத் திணித்துக் கொண்டு, மேஜை முழுவதும் தும்முவதும் அப்படியே!''

''இதோ பார் மேரி, மற்றவர்கள் எப்படி இருந்தாலும், நாம் அதை அநுசரித்துக் கொண்டுதான் போக வேண்டும்.''

''அதற்கு அவசியமே யில்லை. இந்த வீடு நேர்த்தியாக இருக்கிறது.''

''உன் பெரியப்பா பிள்ளை ஸ்டூவர்ட்டும், அவன் மனைவியும் இங்கே வந்தபோது ஸ்ரீமதி ஸ்பிரிக்கின் விடுதியில் தான் தங்கியிருந்தார்கள். ஸ்ரீமதி ரிச்சர்ட்ஸனும், ஸ்ரீமதி கும்ப்ஸனும் கூட இங்கே திருப்தியுடனேயே வாழ்கிறார்கள். நீயும் ஏன் திருப்தியோடு இருக்கக்கூடாது, மேரி?''

''மற்றப் பெண்களை விட்டு விட்டு நீங்கள் என்னை மணந்து கொண்டீர்கள்; அதற்குக் காரணம் நான் மற்றவர்களைப் போலில்லாமல் வேறு மாதிரியாக இருப்பதுதான் என்று நினைக்க எனக்கு உரிமையிருக்கிறது.''

அவளைத் தணிந்து வரும்படி அழைப்பது போல் அவன் தன் கையை அவள் முன்னே நீட்டினான்.

''ஆமாம்; நீ தனிப்பட்டவள்தான்; உனது தனிப்பட்ட குணங்கள் எல்லாமே என்னை ஆகர்ஷிக்கின்றன. உன்னுடைய வாதம் புரியும் தன்மையைக் கூட. இருந்தாலும், இம்மாதிரியான ஒரு வீட்டை அமர்த்த நான் தயாராக இல்லை; நான் இதில் வசதியாக இருக்க முடியாது; ஆசைப்படக் கூடாத ஓர் இடத்தில் வாழ்வதாகவே எனக்குத் தோன்றும். ஒரு வேளை மறுமுறையும் நான் காங்கிரஸுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் வேண்டுமானால் இங்கு வருவோம்; நாம் நான்கு பேர்களுக்கு நன்கு தெரிந்தவர்களான

பிறகு வருவதானால் சரிதான்.....சமூக வாழ்வில் பெருமைக்கு எஞ்சின ஒரு பொருட்டாக மதிப்பதற்கில்லை. நீ ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்து, ஒருவரும் வரவில்லையென்றால் எப்படியிருக்கும் என்று எண்ணிப்பார். அது உன் நெஞ்சைப் புண்ணாக்கிவிடும், மேரி. எளிமையுடனும், நிதானமாகவும் நமது வேலைகளைச் செய்து விட்டு, இத்தடவை நாம் ஊர் திரும்பினால், வருத்தப்படக் காரணம் ஒன்று மிராது. திரும்பிப் பார்க்க ஒரு தோல்வியோ, அவமானமோ கூட இராது.''

கதவைத் திறந்து, அவள் வருவதற்காக அவன் காத்திருந்தான்; அவளோ இருந்த இடத்திலேயே பிடிவாதமாக நின்றாள்.

'' நம் முன்னேற்றத்திற்காக நீ செய்யும் ஏற்பாடுகளுக்கெல்லாம் நான் நன்றி காட்டவில்லை என்று நினைக்காதே, மேரி. உன் முயற்சி பற்றி நான் பெருமைப்படுகிறேன்; நன்றியுடனும் இருக்கிறேன். ஆயினும், என் அன்பே, இப்போது இதை நான் விரும்பவில்லை. நான் இந்த வீட்டை அமர்த்தித்தான் ஆக வேண்டுமா?''

'ஆமாம்' என்றால் அவன் மேலே வாதம் செய்ய மாட்டான் என்று புரிந்தாலும் அவள் வேறு வழியின்றி இறங்கிவந்தாள்.

பிறகு அவனுடைய பெரிய எலும்புக்கையை எடுத்து, தன் கன்னத்தில் வைத்துக்கொண்டு, அதுவரை அடக்கிக் கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டே சொன்னாள்:

'' இல்லை, என் அன்பே; நீங்கள் இந்த வீட்டை அமர்த்தவேண்டாம்.''

11

மறுபடியும் மழை பெய்து, தெருக்களெல்லாம் நடந்து செல்ல முடியாதவைகளாகி விட்டன. 'போடாமாக்'கிலிருந்தும், சதுப்பு நிலப் பிரதேசங்களிலிருந்தும் அடித்த குளிர் காற்று சவுக்கடி போல் விழுந்தது. குழந்தைகள் விளையாட முடியாமல் திண்டாடியதால், அவர்களுக்குக் கனமான கோட்டுகளும், மஃப்ளர்களும் அணிவித்து, ஒரு மூலைக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து கல்வெட்டுக்காரர்கள் வேலை செய்து கொண்டிருப்பதைக் காண்பித்தாள், மேரி. குளிர் அதிகமாகத் தாக்கியதால் ஓர் இடத்தில் சேர்ந்தாற்போல் நிற்பதோ, உட்காருவதோ முடியாமலிருந்தது. எட்வர்டுக்கு மார்பில்

சளி ; தொடர்ந்து ராபர்ட்டுக்குத் தொண்டை புண்ணு யிற்று. டாக்டர் புஸே என்ற இளைஞர் குழந்தைகளைக் கவனித்தார். பிற்பகல் நேரங்களில் தனது ஓய்வு நேரத்தின் போது வில்லிஸ் அவர்களது அறைக்கு வந்து குழந்தைகளுடன் விளையாடினான். தனது சேவைகளுக்குப் பணம் எதுவும் பெற்றுக் கொள்ள அவன் மறுத்து விட்டான். தனக்கு முழு விடுதலை கிடைத்ததும், முதற் காரியமாக எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளப் போவதாக அவன் சொன்ன போது, மேரிக்கு அவனுடைய அன்புக்குப் பிரதி உபகாரம் செய்ய ஒரு வழி தோன்றியது.

'' வில்லிஸ்! நிச்சயம் நானே உனக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். என் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்கும் பல ஆரம்ப பாடப் புத்தகங்கள் என்னிடம் உள்ளன.''

வில்லிஸ் பேசாமல் வெளியே போனான். தினமும் அவள் ஒரு பாடத்தைக் கொடுத்து, அதைப் பார்த்து எழுதி வருவதற்காகக் காகிதங்கள், பேனு, இங்கிப் புட்டி யாவும் கொடுத்தாள்.

லிங்கன் தம்பதிகள் எங்குமே அழைக்கப்படவில்லை. புது நட்புக்களை ஏற்படுத்திக் கொள்ளவோ, தெரிந்தவர் களை உபசரிக்கவோ கூட அவள் மேலும் பிரயத்தனம் செய்ய வில்லை. தன் அறையில் அமர்ந்து படித்தோ, எழுதியோ பொழுதைப் போக்கிய அவள் வாஷிங்டன் நகரப் பெண் சமூகத்தைக் குற்றம் கூறுவும் முயலவில்லை. லிங்கன் தம்பதி கள் அவர்களுக்குத் தெரியாதவர்கள்தானே ? அவளும் பிறரிடம் பிராபல்யம் பெறும் ஆசையை விட்டொழித்தாள். இருந்தாலும் அவள் மனம் சஞ்சலம் தானடைந்தது; வாஷிங்டனில் அவளால் ஓர் உபயோகமுமில்லை. இச்சிறிய அறையில் குழந்தைகளுடன் இன்னும் ஒரு வருஷம் வசிக்க வேண்டும் என்பதை நினைக்கக் கூட அவளுக்குச் சிரமமாக இருந்தது. சுதோஷ்ணம் சரியில்லாத காலத்தில் குழந்தை களுக்கு விளையாட இடமில்லை; விஷமம் செய்யும் அவர் களை நிம்மதியுடன் இருக்கச் செய்வதற்கும் இங்கு வழியில்லை. அவர்களுடைய ஸ்பிரிங்ஃபீல்டு வீட்டை வாடகைக்குக் கொடுத்தது தவறுதலாகிவிட்டது..... இங்கு அவள் வந்ததே கூடத் தவறுதான். ஹோட்டல் வாழ்க்கை குழந்தை களுக்குச் சரியில்லை; அவளுக்கோ நிச்சயம் சரிப்படவில்லை.

ஆப்ரஹாமுக்கு அவனுடைய சொந்தப் பிரச்னைகள் இருந்ததால், தன் உணர்ச்சிகளை அவனிடமிருந்து மறைத்து வைக்க அவள் மிகவும் முயன்றாள். மெக்ஸிகோ சண்டையில் வெடித்த முதல் துப்பாக்கிக் குண்டு அமெரிக்க மண்ணில் தான் வெடித்தது என்பதை நிரூபிப்பதற்காக அவன் கேட்ட தஸ்தாவேஜுகளைத் தர அரசாங்கம் மறுத்துவிட்டது.

எனவே அவன் இந்த யுத்தத்தின் சட்ட நிலைபற்றி 'விக்' கட்சிக்காரர்களின் கண்டனத்தை நீடித்து நடத்த உதவினன்.

அதன் விளைவுகள் உடனே நிகழ்ந்தன. 'ஸ்பிரிங் ஃபீல்டு ரிஜிஸ்டர்' பத்திரிகை, யுத்த முயற்சிகளுக்கு உதவத் தவறியதற்காக, அவனைக் குற்றம் சாட்டியது; இல்லினாய்ஸ் ஜனநாயகக் கட்சிக்காரர்கள் அவனைக் கண்டனம் செய்யப் பெரும் கூட்டங்கள் நடத்தினர்கள். இல்லினாய்ஸுக்கு தேச பக்தியும், கட்டுப்பாடும் உண்டு என்பதை நிரூபிப்பதற்காகச் சட்டசபையில் ஸ்டீஃபன் டக்ளஸ் எழுந்து காங்கிரஸ்காரன் லிங்கனின் கொள்கையை எதிர்த்து ஓர் உணர்ச்சிகரமான சொற்பொழிவாற்றினன். யுத்தத்தை முடிப்பதற்காக இன்னமும் மெக்ஸிகோவில் சண்டையிட்டுச் செத்துக்கொண்டிருக்கும் துருப்புக்களை ஆப்ரஹாம் இழிவுபடுத்துவதாக, தனது சக 'விக்' கட்சிக்காரர்கள்கூட நினைக்கிறார்கள் என்று வில்லியம் ஹெர்ண்டன் எழுதினன். லிங்கனுடைய அரசியல் வாழ்க்கை இதோடு முடிந்துவிடும் என்றும் அவன் தெரிவித்தான். படையெடுப்புக் கொள்கையை மட்டும் தான் எதிர்ப்பதாகவும், உண்மையில் ராணுவச் செலவுகள் யாவற்றுக்குமே, தான் 'ஓட்டு'க் கொடுத்திருப்பதாகவும் சொன்ன ஆப்ரஹாமின் சமாதானம் சிறு பலனைத் தான் அளித்தது.

இத்துடன், மூன்று முறை தோல்வியுற்ற ஹென்ரி கிளே மீண்டும் ஜெயிக்க முடியாது என்ற காரணத்தால், ஜெனரல் ஸகாரி டெய்லர் என்பவரை 'விக்' கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலுக்கு நிறுத்த இப்போது ஆப்ரஹாம் முயன்று கொண்டிருந்தான். இது வாஷிங்டனிலுள்ள கிளேயின் ஆதரவாளர்களை அவனுடைய விரோதிகளாக்கியது. தவிர அவர்கள் ஊரிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த 'ரிஜிஸ்டர்' பத்திரிகை கூட, அரசியல்வாதியான லிங்கன், தான் வெறுக்கும் யுத்தங்களிலே கைதேர்ந்த ஒருவனையே ஆதரிப்பதாகக் குத்திக் காட்டிற்று.

பால்டிமோர் பாணியிலிருந்த வீட்டில் சற்றும் செல்வாக்கில்லாத 'விக்' காங்கிரஸ்காரர்களை மட்டுமே உபசரிக்க முடிந்திருக்கும் என்பதை மேரி இப்போது உணர்ந்தாள். அவளைத் தங்களது ஹோட்டல்களில் விருந்துக்கு அழைப்பதைத் தவிர வேறென்றும் அவர்களால் செய்திருக்க முடியாது.

அவள் துயரத்தில் தோய்ந்தாள். மாஜி ஜனாதிபதி ஜான் குவின்ஸி ஆதம்ஸ் இறந்தபோது, ஆப்ரஹாம் அவளுக்குக் காங்கிரஸ் சபையில் அதிகாரிகள் அமரும் 'ஸீட்' ஒன்றைப் பெற்றுத் தருவதாகச் சொன்னான். அவள் அதை மறுத்துவிட்டாள். அவள் தலையைச் சுற்றி ஓர் இரும்பு வளையம்

இறுகியதுபோல் கனத்தது; கதிரொளி அவள் கண்களைக் குத்தியது; மிஸ்டர் ஹம்ப்ஸ்டப் சாப்பிடுகையில் தனது புதிய நோய்பற்றி விவரித்தபோது அவள் அவனுடன் சண்டை யிட்டாள். ''எந்த நோயின் உச்சத்திலும் கூட நான் ஒருவித உணர்வும் பெறுவதில்லை; டாக்டர் புஸே என்னைப் பரிசோதிக்க முன்வருவாரா?'' என்று கேட்டான் அவன்.

''உச்சியிலிருக்கும் உங்கள் தலையையும் பரிசோதிக்கத் தானே விரும்புகிறீர்கள்'' என்று குத்தலாகக் கேட்டாள் மேரி.

இதைச் சொல்லி விட்டு அவள் நாவைக் கடித்துக் கொண்டுதானிருக்கவேண்டும். தொடர்ந்து எழுந்த சிரிப்புக் கூட அவளுடைய குற்றமுற்ற நெஞ்சின் வலியைக் குறைக்க வில்லை.

ஆப்ரஹாம் அவர்களது அறையில்தான் கடிதங்கள் எழுதுவான்; தனது பிரசங்கங்களையும் தயாரிப்பான். அடிக்கடி குழந்தைகள் சப்தமிட்டன. எட்வர்ட் அடிக்கடி தாயின் மடியில் அமர்ந்து அவள் கழுத்தைக் கட்டிக்கொள் வதால், ராபர்ட் கோபமடைந்து அவனைத் துன்புறுத்துவான். அவர்களை அவள் கீழேயிருந்த வராந்தாவுக்கும் அழைத்துச் செல்ல முடிவதில்லை. ஏனெனில், அங்கே மற்றவர்கள் படித்துக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருப்பார்கள். குழந்தைகளுக்கு வேடிக்கை காட்ட மேரிக்குப் பொறுமை யும் இருந்ததில்லை. அடிக்கடி ஆப்ரஹாம் அவளுக்கென்று ஒரு ஃபிரெஞ்சு நாவலின் பிரதியோ, அல்லது வேறு ஏதாவது பரிசோ வீட்டிற்குக் கொண்டுவருவான். இதனால், அவன் கூட மற்ற காங்கிரஸ்காரர்களின் மனைவியைப்போல் தானும் வீட்டிலேயே இருக்கவேண்டுமென்று விரும்புகிறான் என்று அவள் உணர்ந்தாள். அப்போதுதானே, தொந்தரவின்றித் தன் வேலைகளை முடிக்கவும், மற்ற ஆண்களுடன் தன் பொழு தைக் கழிக்கவும் அவனால் முடியும்?

அவன் இப்படி ஒருபோதும் வாய்விட்டுச் சொல்ல வில்லை. ஆயினும் இங்கே புறப்பட்டு வந்தது, தான் செய்துவிட்ட ஒரு தவறு என்பதை அவள் அறிவாள். திட்ட மிட்ட விஷயங்களில் தன் பங்கைச் செய்து முடிக்க அவளால் முடியவில்லை. ஆப்ரஹாம் நகல்கள் மேல் நகல்களாகக் கிழித்து எறிவதையும், ஹெர்ண்டனுக்கும் மற்ற நிருபர்களுக் கும் அரசியல் விஷயங்கள் பற்றிச் சுடச்சுட எழுதுவதையும் கவனிக்கும்போது, அவன் ஆனந்தமாயில்லை என்பது நிதரி சனமாயிற்று. காங்கிரஸ் கூட்டம் ஒத்திப்போடப்பட்டு, திட்டமிட்டுள்ளபடி தாங்கள் கிழக்கே செல்லுவதற்கு இன் னும் சில மாதங்கள் ஆகும்; அதுவரை நாட்களை எப்படிக் கழிப்பதென்று அவள் அதிசயித்தாள். கிழக்கே நியூயார்க்,

நியூ இங்கிலாந்து, கிரேட் ஏரிகள், நயாகரா நீர்வீழ்ச்சிகள் முதலிய இடங்களுக்கு உல்லாசப் பிரயாணம் செய்ய முன்பே ஒரு திட்டம் உருவாகியிருந்தது. இந்த உல்லாசப் பிரயாணத்துடன் தனது பிரசாரத் திட்டத்தையும் இணைத்திருந்தான் ஆப்ரஹாம். ஆனால் சொந்த ஊரில் உள்ள தனது கட்சிக்காரர்களிடையே அவனுக்கு மேலும் மதிப்புக் குறைந்து வருமாயின், இப்பயணம் நேராமலேயே கூடப்போகலாம். பிறகு அவர்கள் ஸ்பிரிங்ஃபீல்டுக்குத் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை. நவம்பரில் தங்கள் வீடு கைக்கு வரும்வரை, அங்கே குளோப் ஹோட்டலிலோ அல்லது வேறு ஏதேனும் வாடகை வீட்டிலோதான் தங்கவேண்டும்.

மார்ச் மாசக் கடைசியில் பெட்ஸியிடமிருந்து அவளுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் குழந்தைகளோடு அங்கு ஒரு தடவை வந்துபோகுமாறு அவள் எழுதியிருந்தாள்.

ஆப்ரஹாம் நிதானமாக, ''உன் குடும்பத்தினரிடம் போய் வர விரும்புகிறாயா, மோலி?'' என்று அவளைக் கேட்டான்.

''போவதை நீங்கள் விரும்புகிறீர்களா?''

''உன்னை என்னுடன் வைத்துக்கொள்வதையே நான் எப்போதும் விரும்புகிறேன். ஆனால் நீ இங்கே மகிழ்ச்சி குன்றியிருப்பதாகத் தெரிகிறது.....அந்தத் தலைவலி.....''

''எனக்கென்று நான் எந்த வேலையையும் காண முடியவில்லை, ஆப்ரஹாம். உங்களுடைய எழுத்து வேலைகளுக்கு உதவக்கூட என்னால் உபயோகமில்லையே.....''

''உன்னிடம் நிறைந்த சக்தியும், துருதுருப்பும் இருக்கின்றன.....உன் கவனத்தைக் கவர்ந்த அந்தச் செங்கல் வீட்டுக்குக் குடிபோகக்கூட நான் சம்மதிக்கவில்லை.''

குற்றத்தைத் தன்மேல் போட்டுக்கொண்டது அவனுடைய மனத் தாராளத்தைக் காட்டியது. அவள் அவன் முகத்தைக் கட்டிக்கொண்டாள். பிறகு சொன்னாள்:

''நான் ஊருக்குப் போய் வருவதும் நல்லதுதான். குழந்தைகள் ஓடைகளையும் குதிரைகளையும் கண்டு மகிழ்வார்கள். நாம் தீர்மானித்து விட்டபடியால், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் புறப்பட்டு விடுகிறேன்.''

மறு நாள் காலை அவளை ரெயில்வே நிலையத்திற்கு அழைத்துச் சென்றான் அவன். இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசவில்லை; படுக்கையில் ஆளுக்கு ஒரு மூலையில் விறைப்பாகவும், துக்கத்துடனும் படுத்திருந்த அவர்கள் இரவு முழுவதும் அநேகமாகத் தூங்கவில்லை. அவளுடைய சாமான்களை அவன் பிளாட்பாரத்திற்குக் கொணர்ந்த

போது, ' நாங்கள் தோற்று விட்டோம்; எங்கே, எப்படி என்று மட்டும் எனக்குத் தெரியவில்லை' என்று அவள் நினைத்துக்கொண்டாள்.

அவள் உள்ளத்தில் வேதனை புகுந்தது. ஆப்ரஹாமுக்கும் அப்படியேதான் என்பதும் தெரிந்தது. அவன் தன் இரு கைகளிலும், இரு குழந்தைகளைத் தாங்கியிருந்தான்.

'' உன் விருப்பத்தை மீறி நீ தங்கவேண்டியதில்லை, மோலி. சில வாரங்கள் ஓய்வெடுத்துக் கொண்ட பிறகு வந்துவிடு. ஒருவேளை அங்கே குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள யாராவது கிடைத்தால், நீ தனியாகத் திரும்பி வா..... பிறகு இங்கே உனக்கு அதிகச் சுதந்திரம் கிடைக்கும்....''

'' சுதந்திரம்!..... எதைச் செய்ய, ஆப்ரஹாம்?''

'' என்னோடு இருக்க.....எனக்கு உதவி புரிய...''

உற்சாகமூட்டும் முயற்சிதான்; ஆனால் அது உண்மையில் இரக்கத்தால் தூண்டப்பட்டது என்பதை அவள் அறிவாள். ஒரு கணம் அங்கே அமைதி தவழ்ந்தது. பிறகு என்ஜினீயர் ரெயிலிலிருந்து மணியை அடித்தான். அந்தச் சப்தத்தால் ஆப்ரஹாம் அதிர்ச்சியடைந்தான். அவன் முகத்தில் துயரம் படர்ந்தது. அவன் கண்கள் மேரியினுடைய கண்களைத் தேடின.

'' குழந்தைகளைப் பார்த்துக் கொள், மேரி ; அப்பாவை அவர்கள் மறந்து விடப் போகிறார்கள்.''

'' பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள் அவள். ஆனால் அவள் தனக்குள் அழுது கொண்டாள். அவனால் அவளைப் போக விட முடிகிறதே !

12

ரெயில் லெக்ஸிங்டனுக்குள் புகுவதற்குள் மேரி தன் முகத்தைப் பளிச்சென்று ஆக்கிக் கொண்டாள்: டாடு குடும்பத்தினருக்கே எந்தச் சங்கடங்களையும் பிறர் அறியாத வாறு தாங்கிக்கொள்ள முடியும். வாஷிங்டனைப் பற்றியும், சூதாட்ட விடுதிகளின் ஜன்னல்களில் உள்ள சிவப்பு விளக்குகளைப் பற்றியும், ஞாயிறு பிற்பகல்களில் எப்படி நகரம் முழுவதுமே பென்ஸில்வேனியா அவென்யூவுக்குச் சுற்ற வரும் என்பது பற்றியும் சுவையான கதைகளைச் சொன்னாள் அவள்.

வழியிலேயே ஆப்ரஹாமுக்கு ஒரு சிறு கடிதம் அனுப்பினாள்; லெக்ஸிங்டனில் இறங்கியதுமே நீண்ட கடிதம் ஒன்

றையும் எழுதினுள். தன் கணவன் மீதே தனக்கு வருத்தம் ஏற்பட்டிருந்தது அவளுக்குத் திகைப்பை அளித்தது.

பார்க்கப்போனுல், ஆப்ரஹாமின் கடிதங்களும் சிறிது திருப்தியாக இருந்தாலும், இழையாமல்தான் இருந்தன. ஆனுல் அவனும் அவள் பிரிவினுல் கலங்கியிருந்தான்.

" பிரிய மேரி,

துயர் மிகுந்த இவ்வுலகத்தில் நாம் ஒரு நாளும் பூர்ண திருப்தி பெறுவதில்லே. நீ இங்கிருந்தபோது, என் வேலே களுக்குச் சிறிது இடைஞ்சலாக இருப்பதாய் நினேத்தேன்; ஆனுல் இப்போது வேலேயைத் தவிர வேருென்றுமில்லாத தால் அதுவே கசந்துவிட்டது. உட்கார்ந்து காகிதங்களேப் புரட்டுவதையும், இப்பழைய அறையில் நான் மட்டுமே தங்குவதையும் நான் வெறுக்கிறேன். இந்த வாரத்தில் ஒரு சிறிய சொற்பொழிவு செய்யப்போவதாக நான் போன கடிதத்தில் எழுதியிருந்ததை நீ அறிவாய்; ஆனுல் நான் அப்படிச் செய்யும் வாய்ப்பைப் பெரும்லேயே இந்த வாரம் கழிந்துவிட்டது. இப்போது, அந்த விஷயத்திலிருந்த என் ஆர்வமும் போய்விட்டது.

இந்த வீடு முழுவதும்—இல்லே, உன்னுடு சுமுக உறவில் இருந்த யாவரும் — உன்னேப் பற்றி அன்பாக விசாரிக்கிருர் கள்.

உனக்குத் தலேவலி முற்றிலும் குணமாகி விட்டதா? ஆகியிருப்பது உண்மையானுல் நல்லது. எங்கே மறுபடியும் கல்யாணம் செய்து கொள்ள விரும்பும் அளவுக்கு நீ நன் ருகவும், பருத்தும், இளமையாகவும் மாறிவிடுவாயோ என்று நான் அஞ்சுகிறேன்."

டேவிட்டுடன் அவள் குதிரை மீதேறிச் சென்று மீண்டும் வயல்களின் பசுமை அழகைக் கண்டு அநுபவித்தாள். எப் படிக் குதிரை சவாரி செய்வது என்று டேவிட், ராபர்ட் டுக்குச் சொல்லிக் கொடுத்தான். வார இறுதியில் வெளி யிடங்களிலிருந்து அவளுக்கு விருந்துக்கு அழைப்புகள் வந்த வண்ணமிருந்தன. ஆனுல் அதிக அவகாசத்தை அவள் எமிலியுடனும், மற்ற தங்கைகளுடனும்தான் செலவழித் தாள். தான் பன்னிரெண்டு வயதாக இருந்த போது மரப்பட்டையினுல் கவுன்கள் செய்ததையும் அதை அணிந்து சர்ச்சுக்குப் போக முயன்றதையும் அவர்களுக்குக் கதை கதையாகக் கூறினுள். மற்றெரு சமயம் பெட்டியின் கவுனே அணிந்துகொண்டு பந்தய மைதானம் போக முயன் றதையும் கூறினுள். அநேக நாட்கள் அவள் மாலே நேரத்தை அப்பாவுடன் லேப்ரெரியில் கழித்தாள்.

தன்னை அறியாத, வேண்டாத நகரத்திலிருந்தும், தனக்குச் சிறைபோலிருந்த ஹோட்டல் அறையிலிருந்தும் வந்து விட்டது மேரிக்கு ஆறுதலாகவே இருந்தது. இங்கே லெக்ஸிங்டனில் அவளுக்குத் தெம்பு திரும்பிவந்தது. அவள் அதிகம் படித்தாள். ஹென்ரி கிளேக்கு நான்காவது தடவையாக நியமனத்தைப் பெற முயற்சித்து வந்த முக்கியமான கென்டக்கி 'விக்' கட்சிக்காரர்களுடன் அவள் நீண்ட பேச்சுக்கள் நடத்தினாள். ஆப்ரஹாம், ஜெனரல் டெய்லருக்கு 'விக்' கட்சிமூலம் நியமனம் பெற முயற்சிக்கிறான் என்று தெரிந்த போதிலும், அவர்களில் எவரும் மேரியிடம் அது பற்றிக் கேட்டு அவள் மனத்தை வருத்தவில்லை.

மேரிக்கு வாஷிங்டனுக்குத் திரும்ப முடியாமலும், அவளுக்கு அதில் இஷ்டமில்லாமலும் இருந்தால், ஜூலையில் காங்கிரஸ் கூட்டம் ஒத்திப்போடப்பட்டதும் தானே லெக்ஸிங்டனுக்கு வருவதாக ஆப்ரஹாம் எழுதினான்.

அவள் மாமா ஜேம்ஸ் பார்க்கர் தம் மூத்த மகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்காக பிலடல்பியா போக இருந்ததால், அப்படியே மேரியையும் அழைத்துச்செல்வதாகக் கூறினார். அவர்கள் திட்டமிட்டபடி உல்லாசப் பிரயாணம் குதிரைமூலம், ஒருவேளை காங்கிரஸ் முடியும் தருணத்தில் மேரி ஆப்ரஹாமிடம் போய்ச் சேர்ந்துவிடலாம்.

அவள் ஒரு முடிவுக்கும் வரவில்லை. ஜூன் மத்தியில் லெக்ஸிங்டனில் கோடை வெயில் அதிகமாகியது. டாடு குடும்பத்தினர் உயர்மான 'பியூனா விஸ்டா' என்ற வீட்டிற்குக் குடி மாறினார்கள். அழகான மேட்டின்மீது, மரங்கள் சூழ நின்றது அவ்வீடு. குழந்தைகள் அதை ஒட்டியிருந்த வயல்களிலும், காடுகளிலும் நாளைக் கழித்தனர்; ராபர்ட்டின் கண்களைப் பற்றி யாரும் ஏதும் கூறவில்லை; எட்வர்டு தன் கள்ளமற்ற முகத்தாலும், இனிமை தரும் நடத்தையாலும் வீட்டில் யாவருக்கும் செல்லக் குழந்தையாகி விட்டான். தன் மகள் வந்திருப்பதில் ராபர்ட் டாடுக்கு எல்லையற்ற ஆனந்தம். ஆப்ரஹாம் எழுதியிருந்தான் :

''.....உங்கள் யாவரையும் சீக்கிரம் காணமுடியுமென்று நம்பினேன். ஆனால் அது போகட்டும். நீ விரும்பும் வரை அங்கே தங்கிவிட்டு, இஷ்டப்பட்டபோது வந்து சேரு. அருமை 'ராஸ்கோல்'களுக்கு அன்பும் முத்தங்களும். பாசமுள்ள.....''

நியூ இங்கிலாந்து மாகாணங்களில் ஜெனரல் டெய்லரின் அதிருஷ்டம் சரியாக இல்லை. ஆகஸ்டில் அவருக்காகப் பிரசங்கங்கள் புரிய ஆப்ரஹாம் கிளம்பிக்கொண்டிருப்பதாகச்

செய்தி வந்ததால், அதற்குள் அவனிடம் போய்ச் சேருவதற்கு அவகாசமில்லை. ஸ்பிரிங்ஃபீல்டுக்குத் திரும்ப அவர்கள் தயாராகும் வரை, இங்கேயே நிம்மதியாக இருந்து விட்டுப் பிறகு அவனுடைய பயணத்தின் முடிவில் அவனைச் சிக்காகோவில் சந்திப்பதே சரியாக இருக்கும்.

இறுதியில், அக்டோபர் பிறந்ததும் அவள் குழந்தைகளுடன் சிக்காகோவுக்குப் புறப்பட்டாள். அதோடு ஷெர்மன் ஹவுஸில் இரு நாட்கள் தங்கவும் ஏற்பாடு. கோடை வெயிலில் குளித்த அவள் முகமும் உடலும் என்றும் விட நன்றாகவே இருந்தன. ஆப்ரஹாமும் சௌக்கியமாகவே காணப்பட்டான். அவன் கன்னங்கள் உப்பி, கண்கள் மலர்ந்து இருந்தன. மாலையில் அவன் ஒரு கூட்டத்தில் பேசுவதாக இருந்தான்; அது ஆறு மணி நேரம் முன்னால்தான் அறிவிக்கப்பட்டிருந்தாலும், கூட்டம் பெரிதாகக் கூடி விட்டது. அதனால் கோர்ட் ஹவுஸ்ஸிலிருந்து பொதுச் சதுக்கத்துக்குக் கூட்டத்தை மாற்ற நேர்ந்தது. இரண்டு மணி நேரம் மேரி அவன் பேச்சைக் கேட்டாள்; நியூ இங்கிலாந்தில் ஆப்ரஹாம் செய்த பிரசங்கப் பிரயாணம் அவனது ஆற்றலைக் கூர்மையாக்கி இருந்தது. தனது ஹாஸ்யத்தை மிகுந்த அளவுடனும், தெளிவாகவும் உபயோகித்துக்கொண்டான். ஜெனரல் டெய்லரின் தோல்வி, புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பிரதேசங்களில் அடிமைத்தனத்தை விஸ்தரித்து நிரந்தரமாக்கவே அமெரிக்க மக்கள் விரும்புகிறார்கள் என்பதையே குறிக்கும் என்ற தனது முக்கியக் கருத்தைச் சொல்லும்போது, தென் திசை மக்கள் மீது துவேஷத்தை எழுப்பாமல் வலியுறுத்தினான். அவன் செய்த பிரசங்கங்களுக்குள் இதுவே மிக மிகத் தெளிவானது என்று நினைத்தாள் மேரி. மறுநாள் 'சிக்காகோ டெய்லி ஜர்னல்' என்ற பத்திரிகையைப் பிரித்தபோது, அதுவும் அவள் அபிப்பிராயத்தையே பிரதிபலித்ததைக் கண்டாள். இந்தப் பிரசாரங்களின் ஆரம்பம் முதல் இதுவரை படிக்கப்பட்ட, கேட்கப்பட்ட சிறந்த சொற்பொழிவுகளில் இதுவும் ஒன்று என்று அப்பத்திரிகை எழுதியிருந்தது. இந்தப் புகழ்ச்சியைச் சுட்டிக் காண்பித்தபடி பத்திரிகையை அவனிடம் கொடுத்தாள் அவள்.

''சிக்காகோவில் நீங்கள் நன்றாகப் பிரசங்கம் செய்கிறீர்கள். இங்கே சென்ற தடவை நீங்கள் பேசியபோது ஹொரேஸ் கிரீலி 'நியூ யார்க் ட்ரிபியூ'னில் உங்களைப் புகழ்ந்து எழுதியிருந்தான்: ''இங்கே நீங்கள் அடிக்கடி வரவேண்டும்.''

அவன் இளித்தான்: ''இங்கேயே நிரந்தரமாக வசிக்கும்படி பலர் என்னிடம் சொல்கிறார்கள். இது வளர்ந்து வரும் நகரம்; ஆனால் குளிர்காலத்துக் காற்று நேராக நெஞ்சு மூலம் சுவாசப்பையையே தாக்கிவிடும் என்கிறார்கள்.''

மீண்டும் தங்கள் சொந்த வீட்டிற்கு வந்து, தங்களது உடைமைகளுக்கும், நண்பர்களுக்கும், நடுவில் இருந்தது நன்றாகவே இருந்தது. வடக்குப் படுக்கையறையிலிருந்து, தங்களது தட்டுமுட்டுச் சாமான்களைக் கொணர்ந்து போட்டார்கள். அவர்களுடைய சாமான்கள் தாம் அவர்களுக்கு இதமான சூழ்நிலையை அளித்தன. பிரிவுக்குப் பிறகு அவர்களுடைய நேசம் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டிருப்பதைக் கண்டாள் அவள். கல்யாணத்தைத் தொடர்ந்து வந்த அந்த ஆதி நாட்களைப் போலவே அது இன்பம் அளித்தது. இப்புதிய இன்பத்தை நுகருகையில் அவள் தன் மண இரவை நினைத்துக்கொண்டாள். அப்போது அவள் ஹோட்டலறையின் நடுவில் நின்று கொண்டு ஆப்ரஹாமுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். அச்சமயம் தன் செவிகளில் ஒலித்த அடியிற்கண்ட திருமணச் சடங்கின் வார்த்தைகளையே தனக்குள் சொல்லிக்கொண்டாள்: 'குமிழியிட்டு ஓடிய காதல் இப்போது பிரகாசிக்கிறது. என்ன ஏமாற்றங்கள் வந்தாலும், கஷ்டங்கள் சம்பவித்தாலும் நான் அதற்கு என்னை அர்ப்புணித்துக்கொள்ளுவேன். வாழ்க்கைப்பாதை எவ்வளவு இருட்டாக இருந்தாலும், இறுதியில் இன்ப ஒளியே எதிர் நோக்கியிருக்கிறது.''

ஆப்ரஹாம் சொல்லியிருந்தான்: 'காதல் அழிவற்றது; திருமணமும் அப்படித்தான். ஏனெனில் கல்யாணம் இந்த மண்ணுக்கும், வாலைப் பருவத்திற்கும் ஏற்ற காதலின் மற்றொரு வடிவமே.' அவள் மனத்தில் இவை இரண்டும் ஒன்றாகவே தோன்றின. அதனால்தான் அந்த ஒரு வருஷத் தூய்மைத் தவத்தின்போது, அவள் காதல் மறைந்து விடுகையில், லிங்கனை மறந்து விட்டு மற்றொருவனை மணக்குமாறு சொன்ன யோசனைகளுக் கெல்லாம் அவள் செவி சாய்க்க வில்லை. அவள் உள்ளத்தைப் பொறுத்த வரை முன்பே ஆப்ரஹாமை அவள் மணந்து கொண்டிருந்தாள்; அவன் அவளைக் காதலிப்பதாக அறிந்த விநாடியிலிருந்தே, தான் அவனுடைய மனைவியென்று எண்ணிவிட்டாள்.

பத்து நாட்கள் வீட்டில் தங்கிய பிறகு அவன் பீட்டர்ஸ்பர்க், ஜாக்ஸன்வில், டிரமண்ட், பீகின் முதலிய இடங்களுக்குச் சென்று டெய்லருக்காக ஆதரவு தேடினான். ஜெனரல் டெய்லரின் கொள்கைகள் பற்றியோ, அவர் எம்மாதிரி ஜனாதிபதியாக இருப்பார் என்றோ ஒருவருக்கும் தெரியாது. ஆனால் இவ்விஷயம் ஆப்ரஹாமுக்கு வருத்தமளிக்கவில்லை. 'விக்' கட்சிக்காரர்களின் பிரசாரம் டேவிட் வில்மாட்சின் கோஷத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது. மெக்ஸிகோவிலிருந்து சேர்க்கப்பட்ட புதுப் பிரதேசங்களில்

எக்காலத்திலும் அடிமைத் தனத்தை எந்த வடிவத்திலும் நுழையவிடக்கூடாது என்பதே அக் கோஷம்.

யுத்தம் பற்றிய அவன் கொள்கை காரணமாக இல்லினாய்ஸில் அவனுக்கு ஆதரவு குன்றியிருந்ததைப் பற்றி அவள் கவலைப்பட்டாள். ஆனால் அவன் எங்கே பேசினாலும் கூட்டம் திரண்டு வந்தது. இல்லினாய்ஸின் ஒரே 'விக்' காங்கிரஸ்காரனான அவன், ஜெனரல் டெய்லர் தேர்வு பெற்றால் சர்க்காரின் பிரதிநிதியாய் விடுவான். தன்னுடைய பிரசாரங்கள் எல்லாவற்றிலும், வெற்றி பற்றிய நம்பிக்கை அவனுக்கு இருந்ததில்லை. ஆனால், இப்போது முதல் தடவையாக இல்லினாய்ஸில் 'விக்'குகளுக்கு ஆதரவு கிட்டக் கூடும் என்று அவன் உண்மையாக நம்பினான்.

அவன் இல்லாத சமயத்தில் வீட்டின் மேல்புறத்திற்குச் சுண்ணாம்பு அடித்து, செங்கல் கணப்பையும் ரிப்பேர் செய்தாள், மேரி.

தேர்தலுக்கு முதல் நாள் மாலை அவன் வீட்டுக்கு வந்து விட்டான். வடக்கு பிரதேசங்களில் அவனுக்குக் கிடைத்த ஆதரவின் மகிழ்ச்சியில் தனது சொந்த 'ஓட்'டையும் போடுவதற்காக வந்து சேர்ந்தான். சமையற் கட்டு அடுப்புக்கு எதிரிலிருந்த குளிக்கும் தொட்டியில் தனது நீண்ட கால்களைச் சுருட்டிக்கொண்டு அமருவது அவனுக்குச் சிரமமாக இருந்ததால், புதிய துண்டை எடுத்துக் கையில் இடுக்கிக்கொண்டு 'ஸிடி ஹோட்டலி'ன் ஆண்கள் ஸ்நான அறைக்குச் சென்றான். திரும்பும்போது வழியில் கிராப்பு வெட்டிக்கொள்வதற்கும், க்ஷவரம் செய்து கொள்வதற்கும் பில்லியின் கடைக்குள் நுழைந்தான். முன் ஜன்னல் வழியே மேரி பார்க்கையில், குதூகலத்துடன் அவன் ஜாக்ஸன் தெருவில் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அவன் இளமையாகவும், சுறுசுறுப்புடனும் காணப்பட்டான்.

நியூயார்க்கின் முப்பத்தைந்து ஓட்டுகளும் 'விக்' கட்சிக்கே கிட்டும் என்ற செய்தியை 'ஜர்னல்' ஆபீஸிலிருந்து கொணர்ந்தான் ஆப்ரஹாம். தங்களது எதிர்காலத்தைப் பற்றிப் பேசியபடி அவர்களிருவரும் வசதியாகவும் தோழமையுடனும் இரவு வெகு நேரம் வரை விழித்துக் கொண்டே படுத்திருந்தார்கள்.

ஜெனரல் டெய்லர் தேர்தலில் வெற்றி பெற்று விட்டார். ஆனால் இல்லினாய்ஸ் மாகாணம் அவருக்கு அந்த வெற்றியைத் தந்து விடவில்லை. நூற்றுப் பத்தாயிரம் ஓட்டுக்களில் பதினேழாயிரம் ஓட்டுக்கள் மாறியிருந்தால் கூட அது ஆப்ரஹாமுக்கு மகத்தான வெற்றியைக் கொணர்ந்திருக்கும். அவன் பிரசாரம் செய்த இடங்களிலெல்லாம் ஜெனரல்

டெய்லர் வெற்றி பெற்றிருந்தார். நியூ இங்கிலாந்தில் அவன் செய்த பிரயாணமும் நல்ல பலனை அளித்திருந்தது. ஜெனரல் டெய்லரின் நியமனத்துக்கு அவன் முதல் முயற்சி செய்திருக்க வில்லையா? பல கடிதங்கள் எழுதி, பல மாதங்கள் உழைத்து, பிறகு பிலடெல்பியா கூட்டத்திலும் டெய்லர் நியமனம் பெற அவன் உதவ வில்லையா? ஜெனரல் டெய்லர் இதற்கெல்லாம் நன்றியுள்ளவராக இருப்பார் என்பதில் ஐயம் இருக்க முடியுமா?

தேர்தலுக்கும், காங்கிரஸ்ஸின் இரண்டாவது குறுகிய காலத் தொடர் கூட்டத்திற்கு ஆப்ரஹாம் வாஷிங்டன் புறப் படுவதற்கும் இடையில் இரண்டு வார அவகாசம்தானிருந் தது. மேரியும் கூடச் செல்லப்போகிறாளா என்ற கேள்வி இன்ன மும் எழவில்லை. அவள் லெக்ஸிங்டனில் இருந்த போது, தான் வாஷிங்டனுக்கு மீண்டும் வருவதை ஆப்ரஹாம் விரும்ப மாட்டான் என்பதுதான் அவளுடைய எண்ணமாக இருந் தது. இப்போதோ, சென்ற தடவை அடைந்த தோல்விக்குப் பிறகும் கூட அவன் குடும்பத்தை உடன் வைத்துக்கொள்ள விரும்புவான் என்பதுதற்கு வேண்டிய அறிகுறிகள் தென் பட்டன. 'விக்' கட்சிக்காரர்கள் வெற்றியடைந்த சந்தோ ஷத்துடன் திரும்பிக்கொண்டிருப்பார்கள்; ஆட்சியை ஏற்றுக் கொள்ளுவதற்கான பெரிய திட்டங்கள் ஆரம்பமாகியிருக் கும். ஆப்ரஹாமின் சுற்றுப்பிரயாணத்தின்போது பத்திரி கைகள் மிகுந்த ஆதரவு காட்டியிருந்தன; உப ஜனாதிபதி யாகத் தேர்வு பெற்றுள்ள மில்லர்டு பில்மோருடனும், நியூ யார்க்கின் அரசியல் தலைவரான தர்லோ வீட் என்பவருடனும் அவன் முக்கியமான ஆலோசனைகளை நடத்தியிருந்தான். இனி அவன் யாருக்கும் தெரியாத புள்ளி இல்லை. வாஷிங் டனின் உத்தியோக வட்டாரங்கள் இனி லிங்கன்களுக்குக் கதவுகளை அடைக்காது. ஜனநாயகக் கட்சிக்காரர்கள் பதவி களிலிருந்து மறைவார்கள், தங்களது தெற்கத்திய மனோவி யோடு! வாஷிங்டனில் புதிய சமூகம் ஒன்று துவங்கும்; அதை அவள் நன்கு ஸ்திரப்படுத்த முடியும்.

ஆப்ரஹாம் தலைதூக்கி விட்டான். அவனை இனி யாரும் ஒதுக்க முடியாது. உள் வட்டார நபர்களில் ஒருவனாக விளங்குவதற்கு அவனுக்கு எல்லா உரிமைகளும் உண்டு. ஆனால் அவன் அப்படி விளங்குவானா?

சிந்தித்துக்கொண்டே அவள் வீட்டு வேலையில் முனைந் தாள். அவர்கள் நால்வரும் இப்பயணத்தைச் செய்வதானால் செலவு மிகவும் அதிகமாகும். அவள் அப்படிச் செய்யலாமா? ஆனால் ஆப்ரஹாம் இல்லாத மூன்று மாதங்களும் தன் தனிமையை அவள் எப்படிப் போக்கிக்கொள்ளுவாள்? 'விக்'

கட்சிக்காரர்களின் இந்த முதல் வெற்றி ஒரு முக்கியமான திருப்பம் இல்லையா ?

இருந்தும், எங்கே நிராகரிப்பு ஏற்படுமோ என்ற பயம்; ஸ்ரீமதி ஸ்பிரிக்கின் விடுதிக்குத் திரும்புதல்.....அரசியல் விஷயங்களில் நிச்சயமின்மை.....உள் வட்டாரங்களுக்குள் மனக் கசப்பு.....தற்போதைக்கு நிச்சயமாக உள்ள இம் மூன்று மாத வாசத்தில் அவள் அவனுக்கு அளிக்கக்கூடிய சிறு உதவிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இப்பயணம் மிகவும் செலவானது தான்.

கணப்புக்கு முன்னே அமர்ந்து ஏதோ படித்துக்கொண் டிருந்த ஆப்ரஹாமை நெருங்கினாள் அவள்.

''ஆப்ரஹாம்! நான் உங்களோடு வாஷிங்டனுக்கு வர வில்லை.''

அவன் கண்களை உயர்த்தி, மூக்குக்கண்ணாடியின் மேல் புறம் வழியாகத் துருவுவதுபோல் அவளைப் பார்த்தான். அவனுக்குத் திருப்தியா, அதிருப்தியா என்பதை அறிவதற் காக, அவள் அவனை நெருங்கிக் கவனித்தாள். அவன் ஒரு அறிகுறியையும் வெளியிட வில்லை. அவன் பேப்பரைக் கீழே வைத்துவிட்டு அவளை நோக்கிக் கைகளை நீட்டினான்.

''.....எனக்காக நீ அப்படிச் செய்வதானால், மோலி.....''

தீர்மானத்தோடு, அவள் அவனை முத்த மிட்டாள். ''இது நம் யாவருக்குமே சிறந்ததாக இருக்கும். ஆரம்ப விழாவுக்குப் பிறகு, என்ன நடக்கப்போகிறதென்று நாம் அறிய முடியும்போது.....பிறகு நாம் மறுபடியும் ஒன்றுக இருக்கலாம்.'' ஒரு விநாடிக்குப் பிறகு அவள் கேட்டாள்: ''நமக்கு என்ன நேருமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? உங் களுக்கு.....அரசாங்க மேலிட பதவி கிட்ட.....சாத்திய மிருக்கிறதா.....?''

''ஒரு வாய்ப்பும் இல்லை!'' என்று அவன் பளிச்சென்று மொழிந்தான்; பிறகு அவன் சிரித்த அசட்டுச் சிரிப்பு, அவன் மனத்திலும் அப்படியொரு நினைவு எழுந்ததுண்டு என்பதைக் காட்டிற்று. ''ஒரு வேளை எனக்கு நில ஆபீஸ் பதவி கிடைக் கலாம்; ஏனெனில், எப்போதும் அது இல்லினாய்ஸுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. ஆனால் நினியனின் மாமா ஸைரஸ், நான் அதை அவனுக்கு வாங்கிக்கொடுக்கவேண்டு மென்று என்னிடம் உறுதிமொழி பெற்றுக்கொண்டிருக் கிறான். நான் எட்வர்டு பேக்கரை ஒரு மந்திரி ஸ்தானத் திற்குப் பிரரேபிக்கப்போகிறேன்.''

''எட்வர்டுக்கு மந்திரிப் பதவியும், ஸைரஸுக்கு நில ஆபீஸ் பதவியும் வாங்கிக்கொடுத்த பிறகு, உங்களுக்கென்று எதைப் பெறப்போகிறீர்கள்? அல்லது பெறலாமென்று நம் புகிறீர்கள்?''

அவன் பதில் சொல்லுமுன் புருவங்களைச் சுருக்கிக் கொண்டு தலையைப் பக்கவாட்டில் அசைத்தான். ''இந்த வாய்ப்பையே எனக்கு வாங்கிக்கொடுத்தவள் நீதான், மோலி. சர்க்காரில் இடம் பெறவேண்டுமென்று எனக்கும் ஆசைதான். மக்கள் தம்மைத் தாமே ஆள்வதற்கு உதவி புரிவதென்பது ஒரு தலைசிறந்த சேவை என்பது என் எண்ணம். ஆனால் இப்போது எனக்கென்று நான் எதைக் கேட்க முடியும்.....? எனக்கோ சாமர்த்தியமும் குறைவு. சாதனையும் அதிகமில்லை. எங்கே நான் தகுதியுடன் அமர முடியும்.....?''

போலிக் கோபத்துடன், மேமி ஸாலி செய்வது போல் அவள் தன் கைகளை மேலே தூக்கினாள்.

''எனக்கு முன்னால் நீங்கள் தன்னடக்கம் காட்டுவதில் எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால், தயவுசெய்து நீங்கள் பிறர் கேட்கும்படி இப்படிப் பகிரங்கமாகப் பேசவேண்டாம்!''

ஞாயிற்றுக்கிழமை காலை நான்கு மணி வண்டியில் அவன் வாஷிங்டனுக்குப் புறப்பட்டான். அவனுக்கு வயிறு நிறையக் காலை உணவு அளித்து அனுப்புவதற்காக அன்று மேரி மூன்று மணிக்கே எழுந்துவிட்டாள். அவன் குழந்தைகளை எழுப்பாமல், தூங்கும் நிலையிலேயே அவர்களை முத்தமிட்டான்; கணவனும் மனைவியும் விடைபெறும் சமயம் வந்தபோது, அவன் அண்மையிலிருக்கும் ட்ரெமண்டுக்கோ பீகனுக்கோ செல்வது போல் சகஜமாகவே அவர்கள் விடை பெற்றுக் கொண்டார்கள். நம்பிக்கையுடன் இருப்பதற்கு அவர்களுக்கு எவ்வளவோ காரணங்கள் இருந்தன.

13

அவளுக்கு வந்த தபால்களில் பிரதி தினமும் ஒரு கடிதம் மட்டுமின்றி, 'காங்கிரஷ்ஷனல் ரெக்கார்டு' அல்லது வாஷிங்டன் நகரச் செய்திகள் கொண்ட ஒரு வாஷிங்டன் பத்திரிகைப் பிரதியும் இருந்தது. சீக்கிரத்திலேயே எட்வர்டு பேக்கருக்கு மந்திரி ஸ்தானம் ஒன்றும் கிட்ட வில்லை என்பதை அவள் அறிந்து கொண்டாள்; ஸைரஸ்ஸுக்கும் ஆப்ரஹாம் நில ஆபீஸ் பதவியைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

'ஜெனரல் நில ஆபீஸ் பதவியை நானே எளிதில் அடைய முடியுமென்று நினைக்கிறேன். ஆனல் இல்லினுய்ஸில் வேறு யாருக்காவது அதை வாங்கிக் கொடுப்பது சிரமமாக இருக்கு மென்று தோன்றுகிறது. இங்கே நல்ல அறிமுகமில்லாத எவராலும், இந்தியானுவைச் சேர்ந்த மெக்காகியை வெல்ல முடியாது' என்று ஆப்ரஹாம் ஒரு கடிதத்தில் எழுதி யிருந்தான்.

அடிமை முறை பழக்கத்தில் உள்ள இடங்களில் அதை ஒழிப்பதில்லை என்ற கொள்கையின் கீழ் சகாரி டெய்லர் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் நாட்டில் அமைதி நிலவி விடும் என்று அவர்கள் நினைத்திருந்தார்கள். ஆனல் காங் கிரஸ்ஸில் அதற்கு எதிர் நிலையையே கண்டான் ஆப்ரஹாம். ஐக்கிய நாடாகச் சேர விரும்பும் கலிபோர்னியா, நியூ மெக்ஸிகோ ஆகிய மாகாணங்களின் வேண்டுகோள்களைத் தெற்கத்திப் பிரதிநிதிகள் வன்மையாக எதிர்த்தார்கள். அவற்றை அனுமதித்தால் காங்கிரஸ்ஸில் அடிமை எதிர்ப்புச் சக்திகளின் பலம் அதிகமாகிவிடும் என்று அவர்கள் பயந் தார்கள். தங்களது அடிமை உரிமை புதிய பிரதேசங்களில் பாதுகாக்கப்படாவிட்டால், பிரிந்து போய் விடுவதாகப் பல தெற்கத்திய மாகாணங்கள் தீர்மானங்களை நிறைவேற் றின. வில்மட் கொள்கைக்குத் தான் அளித்த ஓட்டைப் பற்றியும், கொலம்பியா ஜில்லாவில் அடிமை வியாபாரத்தை ஒழிக்கும்படியாக ஒரு சட்டத்தைத் தயாரித்துக்கொண் டிருப்பதாகவும் ஆப்ரஹாம் மேரிக்கு எழுதினன்.

தங்களது சொந்த எதிர்காலம் எப்படி என்பது பற்றி அவன் ஒன்றும் எழுதவில்லை. ஜெனரல் டெய்லரின் பதவி யேற்பு விழாவுக்கு அவன் தங்கியிருப்பான். பிறகு இல்லி னுய்ஸ்க்காரர் ஒருவரது வழக்கிற்காக அவன் ஸுப்ரீம் கோர்ட்டில் ஆஜராவான். ஜனுதிபதி அவனுக்கு ஒரு பதவியை அளித்தால், அவர்கள் வாஷிங்டனில் நீண்ட காலம் தங்க நேரும். அப்போது மேரி வீட்டை விற்றுவிட்டுக் குழந்தைகளுடன் வந்து சேரலாம். இருந்தாலும், அவன் எச்சரித்தான்: "முதல் தரமான ஒரு பதவியைப் பற்றி நினைக்க என்னிடம் தனித் தகுதி ஒன்றுமில்லை; இரண் டாந்தரப் பதவியைப் பெற்றலோ, அதை விரும்பும் மற்ற வர்களது ஆங்காரத் தூஷிப்பைத் தாங்குவதற்கு, அப்பதவி ஈடு செய்யாது."

அவனுடைய அவநம்பிக்கையை அவள் அசட்டை செய்துவிட்டாள்.

1849-ஆம் ஆண்டு மார்ச் ஐந்தாம் தேதியன்று ஜெனரல் சகாரி டெய்லர் பதவி ஏற்றார். அந்தச் சடங்கிற்கு ஆப்ர

ஹாம் ஒரு சாட்சியாக இருந்தான். பிறகு அவன் ஸுப்ரீம் கோர்ட்டில் தனது வழக்கை நடத்தினான். மார்ச் கடைசித் தேதியன்று குழம்பிய மனதுடன் அவன் வீடு வந்து சேர்ந்தான்.

''சிறிய பதவிக்கோ, பெரிய பதவிக்கோ என்னால் சிபாரிசு செய்யப்பட்டவர்களில் ஒருவர் கூட இன்னமும் எந்த வேலையிலும் நியமிக்கப் படவில்லை. லிமியன் ஃபிரான்லிஸ்ஸை ஒரேகான் பிரதேசத்துக்கு மந்திரியாகவும், அல்லன் ஃபிரான்னிஸ்ஸை கிளாஸ்கோவுக்குத் தூதராகவும், ஹார்ட் பெல்லோஸை இங்கே இல்லினாய்ஸில் ஒரு பெடரல் நீதிபதியாகவும், ஆன்ஸன் ஹென்ரியை மின்னஸோட்டாப் பிரதேச மந்திரியாகவும், ஆர்ச்சிபால்டு வில்லியம்ஸை இல்லினாய்ஸுக்கு ஐக்கிய நாட்டின் ஜில்லா 'அட்டார்னி' யாகவும் சிபாரிசு செய்திருந்தேன். 'விக்' கட்சிக்காரர்களுக்கு இல்லினாய்ஸ் கிடைக்காதது, நம்மை வெளி அறையில் அமர்த்தப்படும் தூரத்து உறவுக்காரர்களாப்போல் செய்து விட்டது. எனக்காவது நில ஆபீஸ் கிடைக்குமானால், அதை நான் ஏற்கவேண்டுமென்று ஜட்ஜ் டேவிட் டேவிஸ் சொல்லுகிறார். இந்தப் பதினேழு மாதங்களுக்குப் பிறகு, எனக்குக் கேஸுகளும் எளிதில் கிட்ட வழியில்லை. பில்லியோ முக்கால் வயிற்றுக்கு ஏதோ சம்பாதித்திருக்கிறான்.''

''நில ஆபீஸ் பதவியின் சம்பள மென்ன?''

''வருஷம் மூவாயிரம். அந்த வேலை எனக்குப் பிடிக்கும்; பொது நிலங்களை விநியோகிப்பதற்கான கொள்கைகளை வரையறுக்கவேண்டும்.''

இரு நிகழ்ச்சிகள் உற்சாகத்தைக் கொடுத்தன. ஸ்பிரிங்ஃபீல்டு போஸ்ட் மாஸ்டர் வேலை அவன் சிபாரிசு செய்த அப்பனர் எல்லிஸ்ஸுக்குக் கிடைத்தது. டாக்டர் வில்லியம் வாலெஸ் ஸ்பிரிங்ஃபீல்டில் பென்ஷன் ஏஜெண்டாக நியமிக்கப்பட்டார். பிறகு ஜஸ்டின் பட்டர்ஃபீல்டு நில ஆபீஸ் வேலையை அடையப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து வருகிறானென்று வாஷிங்டனிலிருந்து சேதி வந்தது. அக் கடிதத்தைப் படிக்கப் படிக்க ஆப்ரஹாமின் முகம் சிவந்தது.

''மகா மோசம்! வெட்கக்கேடு! போன மாரிக் காலத்திலும், வசந்த காலத்திலும் நான் ஜெனரல் டெய்லருக்கு நியமனம் பெறுவதற்காக உதிரம் சிந்த உழைத்த போது, பட்டர்ஃபீல்டு, கிளேக்கு ஆதரவாக அல்லவா எல்லாம் செய்து கொண்டிருந்தான்? இருந்தும் பிறர் முயற்சியால் தேர்தலில் டெய்லருக்கு வெற்றி கிடைத்ததும் அவன் நமது மாகாணம் மட்டுமே உரிமை கொண்டாடக்கூடிய பெரிய வேலைக்கு

அடிகோலுகிறேன். உடனேயே எனக்குத் தெரிந்த ஒவ்வொரு 'விக்' காங்கிரஸ்காரருக்கும், ஜனாதிபதி டெய்லரின் காதில் போடக்கூடிய மற்ற எல்லோருக்கும் கடிதங்கள் எழுதப்போகிறேன்'' என்றான் அவன்.

தளர்ந்திருந்த தங்கள் சக்திகளைக் காரியத்தில் உபயோகிக்கப்போவது பற்றி அவள் சந்தோஷப்பட்டாள்.

''நல்லது, நானும் என் அப்பாவுக்கு எழுதுகிறேன். அவர் கெண்டக்கி 'விக்' கட்சிக்காரர்களில் சிலரை நமக்குச் சாதகமாகத் தூண்ட முடியும்.''

மே மாத இறுதியில் நில ஆபீஸ் பதவிபற்றிய போட்டி பட்டர்ஃபீல்டு, லிங்கன் அவர்களுக்குள் மட்டும் குறுகிவிட்டது. ஆப்ரஹாமுக்குச் சாதகமாக அரசாங்க மேலிடம் இப்பிரச்னையை மூன்று வாரங்களுக்கு ஒத்திப்போட்டது.

''நீங்கள் வாஷிங்டனுக்குச் சென்று உங்கள் தகுதியை நேரில் எடுத்துச் சொல்ல வேண்டும், ஆப்ரஹாம்'' என்றாள் மேரி.

''நீ சொல்வது சரியே!'' அவன் அழுத்தமாகப் பதிலளித்தான். ''ஆனால் முதலில், மக்களை எனக்கு ஆதரவு காட்டும் கடிதங்களை எழுதச் சொல்லித் தூண்டி, வேண்டுகோள்கள் அனுப்ப வேண்டும். அப்போது தான் நான் வாஷிங்டன் செல்வதற்கும் இக்கடிதங்கள் என் கைகளுக்குக் கிடைப்பதற்கும் சரியாக இருக்கும். நீயே சில வேண்டுகோள் கடிதங்களை எழுது, அடியிற்கண்டவாறு: 'அன்பார்ந்த ஐயா, நானோ அல்லது மிஸ்டர் பட்டர்ஃபீல்டோதான் நில ஆபீஸ் கமிஷனராக இருக்கப்போகிறோம் என்பது இப்போது தீர்மானமாகி விட்டது. தாங்கள் அப்பதவியில் என்னை இருத்த விரும்பினால், அதைத் தெரிவித்து வாஷிங்டனுக்கு எனக்குத் தயவு செய்து எழுதுங்கள். சில நாட்களில் நான் அங்கே போய்விடுவேன். விஷயம் மெத்தவும் அவசரம். உங்கள் உண்மையுள்ள, ஏ. லிங்கன்.' பிறகு நீயே என் கையெழுத்தையும் போட்டு அனுப்பிவிடு.''

சில நாட்கள் சென்றதும் அவன் புறப்பட்டுவிட்டான். வாஷிங்டனை அடைய ஒரு வாரம் பிடித்தது.

அவளுக்கு ஒருவித சமாசாரமும் பிறகு கிடைக்கவில்லை. உண்மையில் அவள் ஒரு சேதியையும் எதிர்பார்க்கவுமில்லை. இருபத்து ஒன்று அல்லது இருபத்து இரண்டாம் தேதிகளில் இந்த வேலை விஷயம் முடிவுக்கு வர இருந்ததால், அதுவரை அவள் ஆவலுடன் காத்திருந்தாள். ஆப்ரஹாமுக்குப் பதவி கிடைத்திருந்தால், அவன் தந்தி அடிப்பான்; ஆனால் செய்தி ஒன்றையும் காணவில்லை.

கிணற்றில் கல்லைப் போட்டது போல் மேலும் ஒரு வாரம் கழியவே, அவள் தவித்துப் போனாள். பிறகு ஒரு நாள்

சதுக்கத்திலிருந்து எட்டாவது தெருவில் இரு கைகளிலும் பைகளைத் தூக்கிக்கொண்டு, துயர் படிந்த முகத்துடன் அவன் வருவதைக் கண்டாள். உடனே முன் வாசலுக்கு ஓடிக் கதவைத் திறந்து வைத்தாள். அவன் மேனி பழுப்பாக இருந்தது; கண்களைச் சுற்றிலும் கவலையால் உண்டான கருவளையங்கள்; முகவாய் தொங்கி, கன்னங்கள் உள்ளே சுருங்கி, கண்கள் சொருகி, வலி கண்டவன் போல் இருந்தான், ஆப்ரஹாம்.

உட்காரும் அறைக்கு அவனை நடத்திச்சென்று அவன் எப்போதும் விரும்பும் நாற்காலியில் அமர்த்தினாள் அவள். பிறகு 'ஸ்ட்ராங்கான' கறுப்புக் காபியை ஒரு கோப்பை நிறையக் கொணர்ந்து கொடுத்துவிட்டு, அதை அவன் பெரு மளவு குடிக்கும்வரைக் காத்திருந்தாள். அதற்குப் பிறகும் அவளால் ஆவலை அடக்க முடியவில்லை.

''ஏன் நீங்கள் அதற்குள் திரும்பிவிட்டீர்கள்?''

தன் நீண்ட கையை நீட்டிக் கோப்பையை அவன் மேஜை மீது வைத்தான். பிறகு அவளைப் பார்த்துக் கொண்டே வரண்ட குரலில் சொன்னான்: ''பல காரணங்கள்; ஸைரஸ் எட்வர்ட்ஸின் நியமனத்தை நான் கொஞ்சம் அதிகமாகவே வற்புறுத்திவிட்டேன். இருபத்து ஒன்றாந் தேதி நான் நில ஆபீஸுக்குச் சென்று, பட்டர்ஃபீல்டுக்கு அந்த வேலை அளிக்கப் பட்டிருப்பதாக அறிந்ததும், என் அறைக்கு விழுந்தடித்துக் கொண்டு திரும்பினேன். அங்கே என் படுக்கையில் ஒரு மணி நேரம் விழுந்து கிடந்தேன். தெரிந்துகொள், மோலி. நான் ஒருபொழுதும் இப்படி அடித்து வீழ்த்தப்பட்டதில்லை..... அல்லது இப்படியொரு பேரிடியையும் நான் தலையில் தாங்கியதில்லை.''

''உங்கள் முகத்தைப் பார்த்தால், அதற்குப் பிறகு நீங்கள் தூங்கவே இல்லைபோலிருக்கிறதே!''

''இல்லை, எனக்கு நினைவுள்ள வரை நான் சாப்பிடக் கூட இல்லை.....எனக்கு வீடு திரும்ப வேண்டுமென்ற துடிப்பு இருந்தது மட்டும் ஞாபகமிருக்கிறது. தோல்வியை நான் ஆகர்ஷிக்கிறேன் என்று நினைக்கிறேன்.''

அவனுக்கு எதிர்த்தாற்போல் கிடந்த நாற்காலியில் அவள் வாயைத் திறந்து கொண்டு அமர்ந்தாள். அடுத்துப் பேச ஒரு வார்த்தைகூட இருவருக்குமே கிடைக்கவில்லை.

தனித்ததொரு நரகத்தில் வீழ்ந்து விட்ட அவனை மேலே தூக்குவதிலேயே அடுத்துவந்த வாரங்களை அவள் கழித்தாள். அவிந்த கங்கணப்பைத் துருவிப் பார்த்துக் கொண்டு அவன் எண்ணற்ற மணி நேரங்கள் அமர்ந்திருந்தான். அவனது

மௌனம், துளைப்பதற்குக் கடினமாக இருந்தது. எப்படியோ அவனைச் சிறிது சாப்பிடும்படியும் சிறிது தூங்கும்படியும் செய்துவந்தாள் அவள்.

செப்டம்பர் இறுதியில் ஸிமியன் ஃபிரான்ஸிஸ் தெருவைத் தாண்டி ஓட்டமாக வந்தான். அவனது தடித்த முகம் வியர்வையால் நனைந்து, மேல் தலை நன்கு கலைந்திருந்தது. நன்றாக மூச்சு விட முடிந்ததும் அவன் கூவினான்:

''ஆப்ரஹாம், வாழ்த்துக்கள்! ஒரேகான் பிரதேசத்தின் உன்னைக் கவர்னராக நியமித்திருக்கிறார்கள்.....''

ஸிமியனின் கையிலிருந்த செய்தித் தாளை வாங்கி ஆப்ரஹாம் அதைத் துருவிப் படித்தான். 'ஒரேகான்!' என்று நினைத்தாள் மேரி. அமெரிக்காவின் அதி தூரத்துக் காட்டுப் பிரதேசம் அது! பெரிய பெரிய சமவெளிகளுக்கும், மலைத் தொடர்களுக்கும் அப்பால் இரண்டாயிரம் மைல்கள் தாண்டி பஸிபிக் மகா சமுத்திரத்தின் கரையிலுள்ள தனித்த மாகாணம்; கர்னல் பிரெமாண்ட் எழுதிய ரிப்போர்ட்டுக்களில் அங்கே உள்ள ஆதிகாலக் குடிகளின் கடிதங்கள், இவற்றிலுள்ள விவரங்களைத் தவிர, அப்பிரதேசம் பற்றி யாருக்கும் ஒன்றுமே தெரியாது. இந்தியர்கள் நிறைந்த இடம்; நகரங்களோ, சாலைகளோ, கடைகளோ, அரங்குகளோ மற்ற நாகரிக வசதிகளோ அங்கே கிடையா.

ஆப்ரஹாம் வார்த்த சிலையாக அமர்ந்திருந்தான். ஸிமியன் கேட்டான்: ''இந்த வேலையை ஒப்புக்கொள்ளப் போகிறாயா, ஆப்?''

''யோசிக்க வேண்டும், ஸிமியன்!''

அவனுக்குப் பின்னால் கதவு மூடப்பட்டதும், ஆப்ரஹாம் தன் கையை மெதுவாக மேரியின் தோளின் மீது வைத்தான்; இருவருமாக உட்காரும் அறைக்குச் சென்று அடுத்தடுத்து ஒரு சிறிய ஸோபாவின் மீது, ஒருவர் கையை மற்றவர் பற்றிய நிலையில் அமர்ந்தார்கள். வெகு நேரம் கழித்து அவன் பேச ஆரம்பித்தான்; ஆனால் பாதி வார்த்தையில், தனது சிந்தனை ஏதோ முடிவுக்கு வந்து விட்டதைப் போல் நிறுத்தினான். பிறகு உரக்க ஒன்றோடொன்று தொடர்பற்ற வார்த்தைகளை உதிர்த்தான்.

''.....முதன் முதலாக இல்லினாய் ஸிலிருந்து ஒரு கவர்னர்.....எங்கேயிருந்து நினியனின் சொத்துக்களெல்லாம் வருகின்றதோ.....அந்த மாகாணத்தின் கவர்னர் பதவி.....''

''நினியன் எட்வர்ட்ஸா?''

''இப்போது ஒரேகான் இருப்பது போல் அப்போது இல்லினாய்ஸும் தனிக் காடாகத்தானிருந்தது.''

''ஆனால், நிச்சயம் இரண்டாயிரம் மைல்கள் தாண்டி, பல மாதங்கள் அபாயம் நிறைந்த பாதை வழியே பிரயாணம் செய்யும்படியாக, நாட்டின் மற்ற பாகங்களிலிருந்து துண்டிக்கப்பட்டு இருந்திருக்காது இல்லினாய்ஸ்!''

''அப்படியானால் இப்பதவி உனக்குப் பிடிக்கவில்லையா, மோலி?''

''அவர்களுடைய மனச்சாட்சிக்குத் திரையிடுவதற்கான ஓர் ஏற்பாடு இது என்றே நான் கருதுகிறேன்.''

''நமக்கு அளிக்கப்படுவதை அதன் தகுதியைக்கொண்டே நாம் பரிசீலிக்க வேண்டும். என்னை அவர்கள் முற்றிலும் ஒதுக்கியிருக்க முடியும்; இங்கே இல்லினாய்ஸில் எனக்கு அதிகாரமோ, செல்வாக்கோ கிடையாது.''

''உங்கள் எதிர்காலத்தை நீங்கள் குறைத்து மதிப்பிடுகிறீர்கள்.''

''எந்த எதிர்காலம்?''

''ஆப்ரஹாம்! நாம் ஒரு பாதாளக் குழிக்குள் இருக்கிறோம் என்பதை நான் உணருகிறேன்; மேலே பார்த்தால் வானமே தெரியாதபடி அவ்வளவு ஆழமான குழி அது என்றும் புரிகிறது. ஆனாலும், உங்களை முதலில் அதிலே தள்ளியவர்களிடமிருந்து யாதொரு உதவியும் நமக்குத் தேவையென்று நான் எண்ணவில்லை.''

''என் உள்ளத்தில் இவ்வளவு கசப்பு இல்லை.''

''ஓ! இல்லையா? ஒருவேளை அதற்குக் காரணம், வீடு திரும்பும்போதிருந்த உங்கள் முகத்தோற்றத்தை நீங்கள் பார்க்காததாக இருக்கலாம். எவ்வளவு தூரம் இடிந்து போய், துயரம் கவிழ்ந்த முகத்துடன் வந்தீர்கள் தெரியுமா? உங்களை நல்ல நிலைக்குக் கொண்டுவரவும், உங்கள் உள்ளத்தில் தெம்பைக் கொணரவும் நான் எவ்வளவு சிரமப்பட்டேன் என்பது எனக்குத்தான் தெரியும்.''

''சம்பளம் வருஷத்திற்கு மூவாயிரம் டாலர்கள், மேரி! நில ஆபீஸ் சம்பளமேதான். என் சட்டத் தொழிலை மீண்டும் ஸ்தாபிக்க வேண்டுமென்ற நெருக்கடியிலிருந்தும், நமது தற்போதைய வருத்தும் நிலையிலிருந்தும் தப்பித்துக்கொள்ள இது ஒரு வாய்ப்பு. கலிபோர்னியாவில் தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக வரும் கடிதங்கள் உண்மையாக இருப்பின், பஸிபிக் கடற்கரைப் பிரதேசத்திற்கு குடியேறும் மக்கள் கூட்டம் பன்மடங்கு பெருகிவிடும்.....''

''ஆப்ரஹாம்! நீங்கள் உண்மையாகவே இந்த வேலையை ஏற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா?''

''இல்லை, இதை நான் ஒரு போதும் விரும்பியதில்லை. ஆனால் இம்மாதிரியான ஒரு நேரத்தில் .....''

''பலவீனத்திலிருந்து முன்னேற முயலாமல், பலத்திலிருந்து முன்னேறுவதற்கே என் தந்தை எனக்குக் கற்றுக் கொடுத்தார். இந்த வேலையை நாம் ஒப்புகொண்டால், மீண்டும் அடியிலிருந்து ஆரம்பிப்பதற்கு நாம் பயப்படுகிறோம் என்றே அர்த்தம். பலம் குன்றிய நிலையில் உங்களால் ஒரு முக்கியமான தீர்மானத்தைச் செய்யமுடியாது; அவ்வளவு நல்ல மனசு உங்களுடையது. இதுபற்றி முடிவுக்கு வர, நீங்கள் நல்ல பலத்தைப் பெறும் வரைக் காத்திருங்கள்.''

''ஒரேகான் ஒரு மாகாணமாகி விட்டால், அங்கிருந்து முதல் சட்டசபை அங்கத்தினனாக நான் வாஷிங்டன் செல்வதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது.''

அவள் தலையை அசைத்தாள்.

''பழையம்மாதிரி தூரதேச உத்தியோக யோசனையே இது. உங்கள் வார்த்தைகளிலேயே சொல்லவேண்டுமானால் விழுந்த குழியிலிருந்தே மீள வேண்டும். என்னதான் செய்ய உத்தேசம்?''

அவன் ஒருகணம் மௌனமாக இருந்தான். அவனுடைய கால் கட்டைவிரல் கீழே கோலம் போட்டுக் கொண்டிருந்தது. தலை கீழே தணிந்து இருந்தது.

''எனக்கு ஒன்றும் தெரியவில்லை, மோலி! என்ன நடக்கப் போகிறதோ?''

அவள் எழுந்து அவனை நேருக்கு நேர் பார்த்துக் கொண்டு நின்றாள், கைகளைப் பின்னால் கட்டியபடி.

''இல்லை, நாம் நம் எதிர்காலத்தை அறிய முடியும்; நாம் நம்மிடத்தை விட்டு ஓட முடியாதென்பதை இறந்த கால நிகழ்ச்சிகள் சொல்லுகின்றன. இது நமது ஊர்; இங்கேதான் நாம் நம்மை நிலைப்படுத்திக்கொள்ள வேண்டும்.''

அவன் அவளைப் பார்த்தான். அவனது வாயின் ஓரங்களில் ஒரு குறுநகை தவழ்ந்தது.

[முதல் பாகம் முற்றிற்று]

எமது
இதர வெளியீடுகள்

★ இரும்புப் பெட்டி
★ அரசியல் கட்டுரைகள்—தாமஸ் பெய்ன்
★ போரே, நீ போ
★ சமாதானத்தின் புதிய பரிணமங்கள்
★ சுதந்திரப் பாலம்
★ மகத்தான மாறுதல்
★ பிலிப்பைன்ஸ் தேசத்து நிலச் சீர்திருத்தங்கள்
★ என் சரிதை
★ சுதந்திரமும் பண்பாடும்
★ மணமகள் வருகிறாள்
★ கடல் முத்து
★ பிரபஞ்சமும் டாக்டர் ஐன்ஸ்டினும்
★ வீதியில் ஒரு விடுதி
★ சந்நியாசியும் சர்வாதிகாரியும்
★ இந்தியா என் வீடே

வெளியிடுவோர்கள் :
பெர்ல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிட்., பம்பாய்-1.

பூரண விநியோகஸ்தர்கள் :
இந்தியா புக் ஹௌஸ்
புருஷோத்தம் பில்டிங், 193, மவுண்ட் ரோட், மதராஸ்-2.